விகடன் பிரசுரம்

ராஜேந்திர சோழன்

கங்கை கொண்ட மாமன்னரின் வீர வரலாறு

ம.இராசசேகர தங்கமணி, எம்.ஏ., பி.டி.,

Online Mutur Library

Online Mutur Library
ஒன்லைன் மூதூர் வாசிகசாலை
ඔන්ලයින් මුත්තූර් පුස්තකාලය

ஒன்லைன் மூதூர் வாசிகசாலை

E-Library மூலம் நாடுப்பூராகவும் வாசகர்கள் பயன்பெறும் விதமாக இக்குழுமம் கடந்த **2019** ஜனவரி மாதம் உருவாக்கப்பட்டது.

இக்குழுமத்தினூடாக **Pdf Book, Magazine, Gazette, Newspaper, School Book, Exam Papers, Story books, Novels, Comics, Short Notes, Teachers Guide, Education related link** போன்றவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும்.

உங்களுக்கு தேவையான நூல்களை பெற்றுக்கொள்ளவும், உங்களிடம் உள்ள நூல்களை அறிமுகம் மற்றும் விற்பனை செய்வதற்கான விளம்பர வசதிகளையும் எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

www.facebook.com/Onlinemuturlibrary

Contact
0757575057
0771020030
0778975239

இராஜேந்திர சோழன்

கங்கை கொண்ட மாமன்னரின் வீர வரலாறு

ம.இராசசேகர தங்கமணி, எம்.ஏ., பி.டி.,

விகடன்
பிரசுரம்

Title :
RAJENDRA CHOZHAN
Author: M.RAJASEKARA THANGAMANI

ISBN: 978-81-8476-539-7

விகடன் பிரகரம்: 773

நூல் தலைப்பு:
இராஜேந்திர சோழன்

நூல் ஆசிரியர்:
ம.இராசசேகர தங்கமணி, எம்.ஏ., பி.டி.,

அட்டை வடிவமைப்பு:
பி.என்.எஸ்.பாண்டியன்

முதற்பதிப்பு : டிசம்பர், 2013

விலை : ₹ 160

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

வடிவமைப்பு:
ப.ஷங்கர்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் முழுத்தூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, சக்க மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

பதிப்புரை

வ ரலாறும், இலக்கியமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இரண்டும் மக்கள் வாழ்வைக் கருப்பொருளாகக் கொண்டவை.இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் இருந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, சமய வாழ்க்கையை அறிய இலக்கியங்கள் உதவும். ஆனால், இவை எந்தக் காலத்தில் நடந்தன என்பதற்குத் தக்க சான்றுகள் வேண்டும்.

சங்க இலக்கியங்கள் சோழர் வரலாறு பற்றிய பல அரிய செய்திகளைக் கூறுகின்றன. தமிழ் மொழியிலுள்ள கலம்பகம், உலா, பரணி, கோவை, தல புராணங்கள், காப்பியம் போன்ற நூல்கள் வரலாற்றுக்குப் பேருதவி புரிகின்றன.

தமிழகத்தில் இலக்கிய, இலக்கண நூல்கள் பெருகியது பிற்காலச் சோழர் காலத்தில்தான். சைவத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி வாழ்ந்ததும், பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரு நூல் தோன்றியதும், நாயன்மார்கள் ஒன்பதாம் திருமுறையைச் அருளிச்செய்ததும், திருவிசைப்பா முதலியவற்றை அருளிச் செய்தோர் வாழ்ந்ததும் சோழர் காலத்தில்தான்.

இலக்கியத்தில் சோழர் வரலாறு பெரிய அளவில் கூறப்பட்டாலும், அவை உண்மைதானா என்பது இலக்கியத்தைவிட கல்வெட்டுகளும் செப்பேடுகளும் அழியாப் புகழ்பெற்ற கோயில்களுமே ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன. சோழர்கள் கோலோச்சிய காலத்தை இவை விளக்குகின்றன.

தஞ்சைத் தரணியைத் தலைநகராகக் கொண்டு சிறப்பாக ஆட்சி செய்த மாமன்னர் இராஜராஜசோழனின் புகழுக்கும் புத்திகூர்மைக்கும் தஞ்சைப் பெரியகோயிலே சாட்சி.

இராஜராஜசோழனின் மைந்தன் இராஜேந்திர சோழனும், இராஜராஜனின் தீரத்துக்கு ஒப்பானவன். வட திசை நாடுகளை வென்று கங்கை நீரைக் கொணர்ந்து 'கங்கை கொண்டான்' என்ற சிறப்புப் பெயரை கொண்டவன்.

தமிழரின் வாழ்வியலில் வீரம் என்பது பிரிக்க முடியாத ஒன்று. சோழப் பேரரசின் சிறப்புகளையும் வீரத்தையும் தக்க ஆதாரங்களுடன் இந்த நூலில் ம.இராசசேகர தங்கமணி தந்திருக்கிறார். சோழர்களின் காலத்தை வரிசைப்படி சான்றுகளுடன் அளித்துள்ளார்.

வியத்தகு அரிய செய்திகளுடன் உருவாகியுள்ள இராஜேந்திர சோழனின் இந்த வரலாற்று நூல் அனைவரையும் கவரும்.

வரலாற்றில் வாழ்வோம், வாருங்கள்!



ம.இராசசேகர தங்கமணி, எம்.ஏ., பி.டி.,

பேராசிரியர் ம.இராசசேகர தங்கமணி அரியலூர் வட்டம், திருமழபாடிக்கு அருகிலுள்ள புதுக்கோட்டை சிற்றூரில் புலவர் க.மருதமுத்து - கலுவாய் அம்மாள் இணையருக்கு 31-10-1939-ல் மகனாகப் பிறந்தார். கரூர் அரசினர் கலைக் கல்லூரியிலும், புதுக்கோட்டை மன்னர் கல்லூரியிலும் வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். 'முதலாம் இராஜேந்திர சோழன்', 'பாண்டியர் வரலாறு', 'ரஷ்ய வரலாறு', 'தமிழக வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புகள்', 'சுற்றுலாவியல்', 'தொல்லியல்', 'மதிப்புக் கல்வி' ஆகியவை இவற்றுள் அடக்கம். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளிட்டுள்ள வாழ்வியல் களஞ்சியத்துக்கு 230 கட்டுரைகளை வழங்கியுள்ளார். அகில இந்திய அளவிலான கருத்தரங்குகளில் பங்கு கொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி உள்ளார்.

ஸ்ரீலங்கா, அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். அமெரிக்காவில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து புகழ்மிகு அருங்காட்சியகங்களையும் பல்கலைக்கழகங்களையும் பார்வையிட்டு உள்ளார். அங்குள்ள தமிழ்ச் சங்கங்களில் உரையாற்றியுள்ளார். தமிழ்ப் பண்பாட்டுப் பெருமை பற்றி

அறிஞர்களுடன் கலந்துரையாடி உள்ளார்.

'வரலாற்றுச் செம்மல்', 'வரலாற்றுப் பேரொளி', 'வரலாற்று வித்தகர்', 'வரலாற்றுச் சிற்பி', 'தமிழக வரலாற்று மேதை', 'நாணயவியல் அறிஞர்', 'களஞ்சியச் செம்மல்' ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். அகில இந்திய வானொலியிலும் தொலைக்காட்சிகளிலும் உரையாற்றியுள்ளார்.

உள்ளே...

1. தமிழகமும் சோழரும்
2. சோழர் வரலாற்றுக்கான ஆதாரங்கள்
3. மனுநீதிச்சோழன் பரம்பரை
4. இளமையும் முடி புனைதலும்
5. ராஜேந்திரன் அரியணையேறியபோது அரசியல் சூழல்
6. ராஜேந்திரனின் போர்கள்
7. ராஜேந்திர சோழனின் குடும்பம்
8. ராஜேந்திரனின் சிறப்புப் பெயர்கள்
9. இறுதிக் காலம்
10. குணங்கள்
11. அறிஞர்கள்
12. அரசியல் அலுவலர் - சிற்றரசர்
13. கலைப் பணிகள்
14. அரசியல்
15. சமுதாய நிலை
16. நாட்டுச் செய்திகளும் வழக்குகளும் பிறவும்
17. மதிப்பீடு

1

தமிழகமும் சோழரும்

உ லகின் தொன்மைமிகு நிலப் பகுதிகளுள் தமிழ் நிலமும் ஒன்று.முதல் மாந்தர் தோன்றி வாழ்ந்துவந்த நிலப் பகுதிகளில் தமிழகமும் ஒன்று என்பது ஆய்வாளர்களின் முடிவு. இங்கு பேசப்பட்ட தமிழ் மொழியும் தொன்மைமிக்கது. தமிழகம் என்பது ஒரு காலத்தே தெற்கில் கடல் கொண்ட குமரிக் (இலெமுரியா) கண்டத்தின் தென்கோடியிலிருந்து விந்திய மலை வரையில் பரவிக்கிடந்த பெரு நிலப்பரப்பு என்று ஆராய்ச்சியறிஞர்கள் குறித்துள்ளனர். ஒல்காப்பெரும் புலமைத்தொல்காப்பியர் காலத்தில் வடக்கில் வேங்கட மலையும், தெற்கில் குமரியாறும், கிழக்கிலும், மேற்கிலும் கடல்களும் இதன் எல்லைகளாக இருந்தன. இதனை

வடவேங்கடம் தென்குமரி

ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்

-என்ற பனம்பாரனார் பாடலாலும்,

வேங்கடம் குமரித் தீம்புனல் பௌவமென்று

இந்நான் கெல்லை தமிழது வழக்கே

-என்ற இசை நுணுக்கம் இயற்றிய சிகண்டியார் பாட்டினாலும் அறியலாம். தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் நேர்ந்த கடற்கோளால் பஃறுளியாறும், பலவாய மலைத்தொடர்களும், குமரிமலையும் கடலுள் அமிழ்ந்ததால்

தமிழகத்தின் எல்லை குமரி ஆறாயிற்று. இதனைப்

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்

குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

என்ற செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகளின் கூற்றால் அறியலாம்.

இவ்வெல்லைக்குள் வாழ்ந்த தமிழ் மக்கள் ஒரு காலத்தில் இந்தியப் பெருநிலப் பகுதி முழுவதும் பரவியிருந்தனர்; இந்தியாவிற்கு வெளியிலும் சென்று தங்கள் நாகரிகத்ததையும், பண்பாட்டையம் மற்றையோரிடத்து நிலைநிறுத்தினர் ; கடல் கடந்து வாணிகம் செய்து, வெளி நாட்டினருடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

'ஆரியர்கள் இந்தியாவின்மேல் படையெடுப்பதற்கு மூவாயிரம் அல்லது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் திராவிட இனம், இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் பரவியிருந்ததோடல்லாமல், ஆசியா, பாரசீகம் ஆகிய பகுதிகளிலும் பதவியிருந்தது', என்று டி.சி.குலாசட் பாதிரியார் (Rev.Fr.T.C.Closset.S.J) கூறுகின்றார். இக்கருத்தினை அறிஞர் எஃலினார்மென்ட் (F.Lenormant) அவர்களும், நம் நாட்டு வரலாற்றறிஞர்களான ஆர்.சி.மஜும்தார், எச்.சி.இராய் சவுத்திரி, கே.தத்தா போன்றவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இத்திராவிட இனத்தவரே தமிழர்கள் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கருத்தாகும். ஒரு காலத்தில் திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் முதலிய பகுதிகளடங்கிய இந்தியா முழுவதும் வாழ்ந்திருந்து, படிப்படியாக மெசப்படோமியாவிலும் குடியேறினர் என்று இயல்புகின்றனர். பலுசிஸ்தானத்தில் வாழும் பிராகுவி மக்களால் இன்றும் திராவிட மொழி பேசப்படுவதொன்றே இக்கூற்றினை வலிவுடையதாக்குகிறது, என்றும் மசும்தார், சவுத்திரி, தத்தா ஆகியோர் முற்போக்கு இந்திய வரலாறு (An Advanced History of India) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் நாகரிகம் என்று வணக்கத்திற்குரிய ஈராசுப் பாதிரியார், சர்ஜான் மார்சல் போன்ற அறிஞர்களால் சான்றுகளுடன் விளக்கப்பட்டிருத்தலால், தமிழர்கள் இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முன்பே இந்தியா முழுவதும் வாழ்ந்து வந்தமை இனிது விளங்கும். முன்னொரு காலத்தில் இமயம் முதல் குமரிவரை தமிழ் மொழியே பரவியிருந்ததென்பது அறிஞர்கள் கருத்தாகும். இக்கருத்தினையே,

சதுர்மறைஆ ரியம்வருமுன் சகமுழுதும் நினதானால்

முதுமொழிநீ அனாதியென மொழிகுவதும் வியப்பாமே

என்று மனோன்மணீய ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாடு நீண்ட, நெடிய, அழகிய கடற்கரையுடையது. சோழ நாட்டுக்கடற்கரை, சோழமண்டலக்கரை என்றும், பாண்டிநாட்டுக் கடற்கரை முத்துக்கரை என்றும், சேரநாட்டுக்கடற்கரை மேல்கரை என்றும் அழைக்கப்பெற்றன. தமிழகம் முக்கடலால் சூழப்பெற்றிருத்தலின், புலவர் பெருமக்கள், 'இமிழ்கடல் வேலித் தமிழகம்' எனவும் 'இமிழ் கடல் வரைப்பின் தமிழகம்' எனவும் போற்றினர்.

பண்டைத்தமிழர்கள் , 'அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி 'உரோம், சீனம், பாரசீகம், ஈழம், மலைநாடு, சிறியா, ஆசியா, எகிப்து ஆகிய கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் நடத்தினர் என்பது உலகறிந்த உண்மை. தமிழர் கப்பற்படையைச் செப்பம் செய்து சாவகம், புட்பகம், கடாரம், ஈழம் போன்ற நாடுகளை வென்று திக்கெட்டும் வெற்றிக்கொடி நாட்டிய மறக்குடி மக்கள் என்பதும், தமிழிலக்கியங்களால் அறியக்கிடக்கின்றன.

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய' இம்முது மக்கள் முதிர்ந்த நாகரிகமும், தனித்த கலாச்சாரமும், பண்பட்ட வாழ்க்கையும், கடல் கடந்த வாணிகச் சிறப்பும்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த கொள்கையும் விரிந்த மனப்பான்மையும் கொண்டு வீரப்பெருமக்களாக வாழ்ந்தனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என இனிது விளங்கும்.

இத்தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம்* என்று மூன்று பகுதிகளாகப்பகுத்துத் தொன்மைக்காலம் முதல் ஆட்சிபுரிந்து வந்தோர் சேர, சோழ, பாண்டியராவார். இம்மூன்று மண்டலங்களும் தலைகீழான ஆய்தவெழுத்தின் வடிவில் அமைந்திருந்தவை என்பது ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கதாகும். மேற்கில் இருப்பதால் சேரநா குடபுலம் என்றும், அதற்குக் கிழக்கே அமைந்திருப்பதால் சோழநாடு குணபுலம் என்றும், இவ்விரண்டிற்கும் தெற்கில் அமைந்துகிடப்பதால் பாண்டிய நாடு தென்புலம் என்றும் வழங்கப்பட்டன. இத்தகைய தமிழகத்தை ஆசிரியர் தொல்காப்பியனார், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று சிறப்பித்துள்ளார். சேர, சோழ, பாண்டியர்களாகிய இம்மூவரும் முடிபுனைந்து ஆட்சி செலுத்தியமையால் முடியுடைய மூவேந்தர் என அழைக்கப்பெற்றனர்.

(* சிறுபாணாற்றுப்படை - 47. 49.63.)

இம்மூன்று பிரிவுகளுள், சேர நாடு என்பது மேலைக்கடலுக்கும், மேலை மலைத்தொடருக்கும் இடையில் அமைந்த நிலப்பரப்பாகும். இது திருவாங்கூர் கொச்சி நாடுகளையும், மலையாள மாவட்டத்தையும் கொண்ட நிலப்பரப்பாகும். வஞ்சி மாநகர் சேர நாட்டின் தலைநகராகவும், முசிறியும், தொண்டியும் துறைமுகங்களாகவும் விளங்கின. இது மலை நாடென்றும் அழைக்கப்பெற்றது. வில் சேரர்களின் கொடியாகவும், அரசியல் இலச்சினையாகவும் விளங்கியது. பனம்பூ இவர்களது அடையாள மாலையாகும். 'வேழமுடைந்து மலை நாடு' எனச்சேரநாடு ஆன்றோரால் போற்றப்பெற்றது. இந்நிலப்பரப்பில் ஆட்சி செலுத்தியவர் சேர மன்னர் ஆவர்.

பாண்டிய நாடு வெள்ளாற்றிற்கும் தென் குமரிக்கும் இடையே விரிந்து கிடந்த நிலப்பரப்பாகும். இது தற்போதுள்ள மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங் களைக்கொண்டது. மதுரை பாண்டிய நாட்டின் தலைநகரமாகும். கொற்கையும், தொண்டியும் அதன் துறைமுகப்பட்டினங்கள். மீன் இவர்களின் இலச்சினையும், கொடியும் ஆகும். இவர்கள் வேப்பம் பூ மாலையை அடையாள மாலையாகக் கொண்டனர். 'பாண்டி நாடு முத்துடைத்து' எனச் சான்றோரால் போற்றப்பெற்றது. இப்பகுதியினைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். இவர்கள் சங்கம் வைத்துக்கண்ணும் கருத்துமாகத்தீந் தமிழைப் போற்றி வந்தனர்.

சோழர், முடியுடை மூவேந்தருள் நடுவண் வைத்துப் போற்றப்படுகின்றனர். சோழநாடு வடக்கே வேங்கடம் முதல் தெற்கே புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள வெள்ளாறு வரையிலும் அமைந்துள்ள செழுமையான நிலப்பகுதியாகும். சோணாட்டின் எல்லை காலத்துக்குக்காலம் மாறிக்கொண்டி ருந்ததால் இதனை அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலவில்லை. இருப்பினும் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வட வெள்ளாற்றுக்குத் தெற்கும், புதுக்கோட்டைச் சீமையில் பாயும் தென் வெள்ளாற்றுக்கு வடக்கும், மருவூரைச் சார்ந்த கோட்டைக்கரைக்குக்கிழக்கும் , வங்கக்கடலுக்கு மேற்கும் ஆகிய எல்லைகட்குட்பட்ட நிலப்பரப்பே சோழ மண்டலமாகும். இதைக்கீழ்க்காணும் வெண்பாவால் அறியலாம்.

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் வடதிசையில்
ஏணாட் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்

இக்காலத்திய தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வெள்ளாற்றுக்குத்

தென்பகுதியும், இச்சோழ மண்டலத்தில் அடங்கும்.

சோழ மன்னர்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், பழையாறை, தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய நகரங்களிலிருந்து ஆட்சி செய்தனர். காவிரிப்பூம்பட்டினமும், நாகப்பட்டினமும் சோணாட்டுத் துறைகங்களாகும். உறையூர் பண்டைக் காலத்தில 'உறந்தை' என்றும் கோழியூர் என்றும் அழைக்கப்பெற்றது. 'ஊரெனப்படுவது உறையூர்' என்று புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்றதால் அதன் சிறப்பினை நாம் நன்குணரலாம். காவிரிப்பூம்பட்டினம் அழகிற் சிறந்த கடற்கரை நகரமாக விளங்கியதாதலின் பூம்பட்டினம் எனவும், காவிரியாறு கடலுடன் புகுமிடத்தில் அமைந்த நகராதலின், 'காவிரி புகும் பட்டினம்' எனவும், பகைவர் எளிதிற் புகாராதலின் 'புகார்' எனவும், பூம்புகாரின் கண் வாழ்பவர் வேறு எங்கும் குடிபெயரப் புகார் என்பதால் 'புகார்' எனவும் வழங்குவதாயிற்று. இதனைப்

பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய

பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்

எனச்சிலப்பதிகார ஆசிரியர் கூறுகின்றார். அழகொடு விளங்கியமையின் பூம்புகார் எனவும் அழைக்கப்பெற்றது. புலிக்கொடி சோழர்களின் கொடி. இதுவே அவர்களது அரசியல் இலச்சினையும் ஆகும். ஆத்திப்பூ சோழ மன்னர்கள் அணியும் அடையாள மாலையாகும். 'சோழர்' என்னும் சொல்லின் பெயர்க்காரணம்பற்றிப் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. கர்னல் செரினி (Col.Gerini) அவர்கள் 'சோழ' என்னும் சொல்லை வடமொழியிலுள்ள காலா (கறுப்பு) என்ற சொல்லுடனும், ஆரியர்கள் இந்தியாவிற்கு வருமுன்னர் தென் இந்தியாவில் வாழந்துவந்த கருநிற மக்களைப் (Dasyus or Blakaskiimmed) பொதுவாகக் குறிப்பதற்குப் பயன்பட்ட 'கோலர்' என்னும் சொல்லுடனும் தொடர்புபடுத்துகின்றார். ஒரு சிலர் இச்சொல் 'சோளம்' என்னும் சொல்லின் அடிப்படை யினையுடையதென்றும், வேறு சிலர் வடமொழியிலுள்ள 'சோரா'

(திருடன்) என்னும் சொல்லினின்று பிறந்ததென்றும் கருதுகின்றனர். திராவிட மொழியாராய்ச்சி வல்லுநர் திரு.ஞா.தேவநேயப்பாவாணர் அவர்கள் 'சோழர்' எனும் சொல் 'சொல்' என்ற சொல்லினின்றும் பிறந்தாகக் குறிக்கின்றார். சொல் என்றால் நெல் என்பது பொருள். பாவாணர் அவர்களின் கருத்து அறிஞர் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்னன் அசோகன் கல்வெட்டுகளிலும், சாளுக்கிய மன்னர்களின் தெலுங்குக் கல்வெட்டுகளிலும் 'சோழ' என்பது 'சோட' எனவும், இன்றைய தெலுங்கு மொழியில் 'சோள' எனவும் குறிக்கப்பெறுகின்றது. சீனப் பயணியான யுவான் சுவாங் சோழரைச் 'சொலிய' எனவும், தாலமி 'சோரை' எனவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, 'சோழ' என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தை நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறுவியலவில்லை.

சோழர் குடியினர் 'ஞாயிறு' குலத்தினர் என்பது சங்கச் சான்றோர் கருத்து. தமிழணியாம் மணிமேகலையை இயற்றிய தண்டமிழ் ஆசான் சாத்தனாரும்

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்

கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட

என்று சோழ குலத்தைக் குறிப்பிடுவதனால் இதனை நாம் தெள்ளிதின் உணரலாம். கம்ப இராமாயணமும், கலிங்கத்துப் பரணியும், ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்களும் இக்கருத்தை வலியுறுத்தும். ஞாயிற்றுக்குலத்தில் சோழன் என்ற ஒரு மன்னன் தோன்றினான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், நாகப்பட்டினச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. எனவே, சோழன் என்பது முன்னோன் ஒருவனின் இயற்பெயராய் அமைந்து, பின்னர் அவனது மரபிற் பிறந்தோர்க்குக் குடிப்பெயராய் வழங்கி வந்திருக்க வேண்டும். இதைக்

குடிப்பெய ராவன கூறுங் காலைச்

சேரன் சோழன் பாண்டியன் என்றிப்

போல்வன பிறவும் பொருத்தங் கொளலே

என்னும் பன்னிரு பாட்டியற் சூத்திரத்தாலும் அறியலாம்.

இச்சோழர் குடியினர் வளவன், செம்பியன், சென்னி, கிள்ளி, நேரியன், நேரிவெற்பன், பொன்னித்துறைவன், ஆரின், மாலையன், அபயன், கோழி வேந்தன், புலியுயர்த்தோன், சூரியன், புனனாடன், மால் என வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டனர் என்பதைத் தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம். மண்ணைப் பொன்னாக்கும் பொன்னியாறு பாய்ந்து வளப்படுத்தும் சோழ வளநாட்டை ஆண்டதால் இவர்கள் 'வளவன்' என்றும், நிலத்தைக் கிள்ளிப் (தோண்டிப்) பண்படுத்திப் பயிர்த்தொழில் செய்து வந்தமையால் 'கிள்ளியென்றும்', அறமுறை பிறழாது முறை செய்து, அறத்தின் திருவுருவாய் விளங்கிய சிபி மன்னனின் மரபினராதலால் 'செம்பியன்' என்றும் அழைக்கப்பெற்றனர். 'சென்னி' என்பது யாவருக்கும் தலையாயவன் என்ற பொருளில் வழங்கப்பெற்றிருக்க வேண்டும். சென்னி என்பதற்குத் தலை என்பது பொருள்.

சோணாடு சமவெளிப்பகுதியாகும். இந்நாட்டில் ஆங்கொன்றும், ஈங்கொன்றுமாகச் சில குன்றுகள் காணப்படுகின்றன. பெருமலைத் தொடர்களையும், அடர்ந்த காடுகளையும் காண்பதரிது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியாறும், கொள்ளிடமும், வெள்ளாறும், வெட்டாறும், அரசிலாறும், முடிகொண்டான் ஆறும், வடவாறும், வீரசோழன் ஆறும் பாய நீர் வளமும், நில வளமும் பெற்று விளங்குவதால் இந்நாடு வளநாடு எனப்பட்டது. எனவே தான் மூதறிஞர் ஔவைப் பிராட்டியும் 'மேதக்க ண்ண சோழ வளநாடு சோறுடைத்து என்று கூறிச் சோணாட்டில் சோற்றுப் பஞ்சமில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். தமிழ் நாவலர்

சரிதையில் தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று கூறப்பட்டிருப்பதால் சோணாட்டின் வளப்பத்தையும், செல்வச்செழிப்பையும் நாம் நன்கறியலாம்.

'பொன்னி யன்ன கங்கை' எனப்போற்றப்பெற்ற காவிரி, குடகு நாட்டிற் பிறந்து, பல நாடுகள் வழியாகப் பாய்ந்து வந்தாலும், சோழ நாட்டிற்குள் வரும்போது எண்ணற்ற கிளையாறுகளை உண்டாக்கிச் சோழநாட்டை வள நாடாக்குவதால் புலவர்கள் இதனைச் சோழ நாட்டிற்கே உரிமையுடையதாய்ப் பாராட்டுகின்றனர். தண்டமிழ் சாத்தனாரும் மணிமேகலையில்,

பாடல்சால் சிறப்பிற் பரதத்து ஓங்கிய

கோடாச் செங்கோல் சோழர்தம் குலக்கொடி

என்றும், தீந்தமிழ்க் காவலர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் 'சோழர்தம் தெய்வக் காவிரி' என்றும் போற்றுகின்றனர்.

காவிரி பாய்ந்து வளப்படுத்துவதால் சோழநாடு 'காவிரி நாடு', 'காவிரி புரக்கும் நாடு' , 'காவிரி சூழ் நாடு', 'புனல் நாடு' என்றெல்லாம் ஆன்றோரால் அழைக்கப்பெறுவதாயிற்று.

இத்தகைய நீர் வளமும், நில வளமும் பெற்றிருந்தமையால் நாடெங்கணும் மாஞ்சோலைகளும், பூஞ்சோலைகளும், வாழைத் தோட்டங்களும், வெற்றிலைத் தோட்டங்களும், செந்நெல் வயல்களும், செழுங்கரும்புத் தோட்டங்களும், பச்சைப்படாம் விரிந்தாற் போன்றமைந்துள்ள வயற்பரப்பும், இயற்கைக் சூழலில் அமைந்த மருதநிலச் சிற்றூர்களும், கண்ணைக் கவர்ந்து, மனத்தைக் கவரச் செய்யும் காட்சிகளாகும். விண்முட்டும் தென்னஞ் சோலைகளையும் கழுது மரங்களையும் விஞ்சுகின்ற அளவிற்கு மேக மண்டலத்தை ஊடுருவி நிற்பன போலக் கோவில்களின் கோபுரங்கள் ஆங்காங்கே காட்சியளிக்கும் அழகும் சோழநாட்டின்

கண்கொள்ளாக் காட்சியாகும். கண்ணையும், கருத்தையும் கவரும் இக்கோயில்கள் கலைக்கருவூலங்களாகவும், ஆடற்பாடற் கலைக ளின் நிலைக்களனாகவும் சிற்ப ஓவியக் கலையின் இருப்பிடமாகவும் விளங்குவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடைய மூவேந்தர்களும் தொன்று தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடிகளாவர்.

வணங்குவதுள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி

பண்பில் தலைப்பிரிதல் இன்று.

-என்னும் குறளுரையில் 'பழங்குடி' என்பதற்குத் தமிழ்க்கடலும், வடசொற்கடலும் நிலைகண்டுணர்ந்த பரிமேலழகர் 'சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருங்குடி' என்று பொருளுரைக்கின்றனர். எனவே, சோழர் எக்காலத்து ஆட்சியுரிமை பெற்றனர் என்றோ, எவ்வேந்தரால் இதன் ஆட்சி முதன் முதலில் தொடங்கப்பெற்றது என்றோ, எவராலும் அறிந்து கொள்ள இயலாத அத்துணைப் பழமை வாய்ந்த குடியினர் என்பது பெறப்படுகின்றது. எனவே, தமிழக மூவேந்தர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்தே சிறந்து விளங்கினர் என்பது தெளிவு.

இந்தியாவின் ஆதி இதிகாசங்களாகக் கருதப்படும் வான்மீகி இராமாயணம், வியாச பாரதம் போன்ற வடமொழிக் காவியங்களில் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

கி..மு. ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் சோழர்களைப் பற்றிய செய்திகள் காணக் கிடைக்கின்றன. சத்தான கருத்துரைத்த புத்த பகவானின் முற்பிறவிகளைப் பற்றிக்கூறும் சாதகக் கதை ஒன்றில், சோழரின் 'தமிலா' ராஜ்யம் அதன் தலைநகரான காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை பற்றிய குறிப்புகள்

காணப்படுகின்றன.

இந்திய நாட்டின் பெரும் பகுதியினை வென்று தன்னாட்சிக் குட்படுத்தியவனும், கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட மாபெரும் மன்னனுமான அசோகன் காலத்திய கல்வெட்டுகளில் இத்தமிழகம் அவன் ஆட்சிக்குட்படாமல் மூவேந்தர்க்கே உரி தனி நாடாய் விளங்கியச் செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

கி.பி. முதல் நூற்றாண்டில் மேனாட்டிலிருந்து தமிழகம் வந்த யவன ஆசிரியனான 'தாலமி' என்பவனது வரலாற்றுக் குறிப்பிலும், 'பிளினியின்' குறிப்பிலும் சோழர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

மேனாட்டு அறிஞன் ஒருவனால் எழுதப்பட்ட பெரிப்ளூஸ் என்னும் கடற்செலவு நூலிலும் சோழர் பற்றிய செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன.

கிரேக்கர், உரோமர், சீனர், சிங்களர் போன்ற வெளிநாட்டினர் சோழருடன் வாணிபம் நடத்திய செய்தி நம் சங்க இலக்கியங்களிற் புலனாகின்றது. நம் நாட்டில் அதிக அளவில் கிடைக்கப்பெற்ற பழங்கால வேற்று நாட்டினர் நாணயங்களினின்றும் சோழரின் மேம்பட்ட கடல் வாணிகம் பற்றியும், சோழரின் தொன்மை பற்றியும் அறிகிறோம்.

மேற்கூறிய சான்றுகளால் சோழரின் தொன்மையும் , சிறப்பும் விளங்கும். பழமை மிக்க சோழர் வலிமை மிக்க பெரும்படையை நிருவகித்து, வாளாண்மையால் பகைவரை வென்று, வேளாண்மையால் வளம் பெருக்கி, வாணிகம் போற்றி அறமுறை பிறழாது ஆட்சி நடத்தி, மக்களைக் காத்துத் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துச் சமயத்திருப்பணிகள் செய்து, கலைகளைக் கண்ணெனப் போற்றி வளர்த்து,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்

என்ற வளமார்ந்த வள்ளுவனின் வாய்மொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தனர் என்பதை எண்ணுந்தொறும், எண்ணுந்தொறும் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

2

சோழர் வரலாற்றுக்கான ஆதாரங்கள்

மக்களினத்தின் கதையைக் கற்பனை கலவாது, ஒழுங்குபடுத்திக் காலவரையறையின் அடிப்படையில் கூறுவது வரலாறாகும். பழமையின் நாட்குறிப்பே வரலாற்று ஏடு. இப்பழமையினைக் கூறச் சான்றுகள் தேவைப்படுகின்றன; சான்றில்லையேல் வரலாற்று ஏடு கட்டுக்கதையாகிவிடும். எனவே, வரலாற்றாசிரியரின் உண்மை நிகழ்ச்சிகளை, வரலாற்று மூலங்களை விருப்பு, வெறுப்பின்றித் தொகுத்துக் காலவரையறையின் அடிப்படையில் முறைப்படுத்தி வரலாற்று ஏட்டினைப் படைக்கிறான்.

நம் நாட்டின் பண்டைய வரலாற்றினைத் தெளிவாக உருவாக்கப் போதிய ஆதாரங்கள் இல்லையென்பது யாவரும் அறிந்த உண்மை. உலகம் போற்றும் இலக்கியங்கள் பல படைத்த நம் முன்னோர் வரலாற்று நிகழ்ச்சிகளை முறையாகக் குறிக்க மறந்தனர். எனவே தான் 'இந்துக்கள் முறையான வரலாற்று நிகழ்ச்சிகளில் நாட்டம் செலுத்துவதில்லை; நிகழ்ச்சிகளைக் கால வரையறையுடன் தொடர்ச்சியாக எழுதுவதில் கவனம் செலுத்துவதில்லை' என்று முஸ்லீம் அறிஞர் அல்பிருனி நம் நாட்டு வரலாறு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், நம் முன்னோர்களுக்கு வரலாற்றுணர்வே இல்லை என்று நாம் கூற இயலாது. மேலை நாடுகளைப்போல், நம்

நாட்டில் பண்டைய வரலாற்றை உருவாக்கத் தேவையாக எழுதப் பெற்ற ஆதாரங்கள் மிகுந்த அளவில் கிடைக்கப் பெறவில்லை.

மேலை நாட்டு வரலாற்றினையும், நம் நாட்டு வரலாற்றினையும் ஆய்ந்தறிந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஒரு மன்னனுடைய மகள் யாரென்று சரித்திரப் புத்தகங்களைப் புரட்டினால் வரகுண பாண்டியன் மகன் இரண்டாம் வரகுண பாண்டியன் என்று போட்டு , 'இது இல்லை என்பாரும் உண்டு' என்று அடியிலே குறிப்புத் தரும் வகையில் குழப்பமான வரலாற்றை வைத்திருக்கிறோம். நம்முடைய தமிழ்ப் பண்புக்கு ஏற்றபடி நம்முடைய அருமை, பெருமைகளை நாம் குறித்து வைக்கின்ற பழக்கத்தை நெடுங்காலமாக இழந்துவிட்டோம். இன்றைய தினம் உரோம் நாட்டு வரலாற்றை நீங்கள் துருவிப் பார்க்க வேண்டுமென்றால் ஜூலியஸ் சீசர் அணிந்து கொண்டிருந்த கால் செருப்பின் அளவிலேயிருந்து கிளியோபாட்ரா அணிந்திருந்த காதணி வரை வரலாற்றுக் குறிப்பு உண்டு. ஆனால், தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் பார்க்க வேண்டுமானால், இந்த மண்டலத்திலே ஆண்டு கொண்டிருந்த மன்னன் இன்னாருடைய மகன் என்று கூறுவதற்கு இரண்டு, மூன்று வரலாற்றாசியர்களும், நான்கைந்து தமிழ்ப் புலவர்களும், பத்துப்பதினைந்து திங்கள் சேர்ந்து உட்கார்ந்தாலும் ஆளுக்கொரு செய்தியைத்தான் தரமுடியுமே தவிர, அத்துணைப்பேரும் ஒத்த கருத்தைத் தரமுடியாத நிலையிருக்கிறது. அதற்குக் காரணம் புலவர்களிடையே புலமைக்குறை என்ற அர்த்தமல்ல! நம்முடைய முன்னோர்களுடைய செயல்களைக் குறித்து வைப்பது இழுக்கு என்ற தவறான கருத்திலே குறித்து வைக்காமல் போய்விட்டார்கள்' என்று வருந்திக் குறிப்பிடுவதால் நம் முன்னோர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை முறையாகக் குறிப்பிடாமை நமக்கொரு பெருங்குறையே ஆகும்.

நம் முன்னோர் வரலாற்று ஆதாரங்களை முழுக்க முழுக்க

முறையாகக் குறித்து வைக்கவில்லை எனினும் தம் இலக்கியங்களில் ஒரு சில வரலாற்று நிகழ்ச்சிகளை அங்கொன்றும் , இங்கொன்றுமாகக் குறித்து வைக்கத் தவறவில்லை. இருப்பினும் முறையான தமிழ்நாட்டு, தென்னாட்டு வரலாற்று நூல்கள் அதிக அளவில் வெளிவரவில்லை.

நம் தமிழக வரலாறு பெரும்பாலான வரலாற்று அறிஞர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. மேலை நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் தமிழ் இனத்திற்குத் தக்க இடம் தரவில்லை. அவர்கள் கண்ணுக்குப் பட்டிருப்பவை எல்லாம் விந்திய சாத்பூரா மலைகளுக்கு வடபால் நிலவும் இந்திய நிலப் பரப்பும், அதில் வாழ்ந்த உயிரினங்களுமே ஆகும்.

இந்திய வரலாற்றில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டுள்ள அவல நிலையினை வரலாற்றறிஞரான திரு.வின்சன்ட் ஸ்மித் அவர்கள் கீழக்கண்டவாறு குறிப்பிடுகின்றார். 'இற்றை நாள் வரை பெரும்பாலான பண்டைய இந்திய வரலாற்றறிஞர்கள் தென்னகம் என்ற ஒன்று இல்லையென்றே கருதினர்'.

இந்நிலையைக் கண்ணுற்ற தமிழ்நாட்டு முன்னாள் ஆளுநர் மாண்புமிகு ஸ்ரீ.பிரகாசா அவர்களும், தென்னாட்டு வரலாற்று மேதை திரு.கே.கே.பிள்ளை அவர்களின் தென்னிந்திய வரலாற்று என்னும் நூலுக்குத் தந்துள்ள அணிந்துரையில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். 'உண்மையில் என்னைப்போன்ற வடஇந்தியாவைச் சார்ந்தவர்களுக்குத் தென்னாட்டைப்பற்றிப் போதிய அறிவு கிடையாது. மேலும், இதுகாறும் தோன்றிய இந்திய வரலாற்று நூல்கள் பெரும்பாலும் வடஇந்தியாவைப்பற்றி மட்டுமே கூறியுள்ளன. தென்னாட்டில் தொன்று தொட்டே நிலவி வந்த பண்பாட்டையும், பண்டைய மக்களின் வீரச்செயல்களையும், கலைத்திறனையும் அவர் அறவே மறந்தனர் போலும்'. எனவே, தமிழ்நாட்டு வரலாற்றினையும், சோழர் வரலாற்றினையும் முறையாகத் தொகுத்தல் தமிழரின் தலையாய கடனாகும்.

சோழர் வரலாற்றின் மூலங்கள் பல வகைப்படும். அவற்றுள் கல்வெட்டுகள், செப்பேடுகள், பழம் பொருள் சின்னங்கள், புதை பொருள்கள், இலக்கியங்கள், நாணயங்கள், அயல் நாட்டினர் குறிப்புகள் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். இருப்பினும் சோழர் வரலாறு பற்றி அறிய உதவும் ஆதாரங்களை 1. இலக்கியச்சான்றுகள், 2. வெட்டெழுத்துகள், 3. நினைவுச்சின்னங்கள், 4. நாணயங்கள், 5. வெளி நாட்டினர் குறிப்புகள் என்று ஐந்து பெரும்பிரிவுகளாகப் பகுத்து அறிதல் நலம் பயக்கும்.

இலக்கியம்

சோழர் வரலாற்று மூலங்களுள் இலக்கியம் முக்கியமானதும், முதன்மையானதும் ஆகும். இறவாப் புகழ் பெற்ற இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையை அடுத்தது காட்டும் பளிங்கு போல் படம்பிடித்துக் காட்டும் இயல்புடையவை. மக்கள் வாழ்வினை விளக்கும் இலக்கியத்திற்கும், அவ்வாழ்வினைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படும் வரலாற்றக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனவேதான் 'பாவியத்தின் செய்முதற் பொருள்கள் பெரும்பான்மையும் வரலாற்று நிகழ்ச்சிகளே. ஆனால், அவற்றினை வகுத்தமைக்கும் முறையும், மாற்றி அமைத்துக்கொள்ளும் தன்மையும் மாறுபட்டவை' என்று மேலை நாட்டு வரலாற்றறிஞர் பௌறா (Bowra) குறிப்பிடுகின்றார்.

வரலாறும், இலக்கியமும் ஒன்றுக்கொன்று இணைந்தும், இழைந்தும் காணப்படுகின்றன. ஏனெனில், இரண்டும் மக்கள் வாழ்வினைக் கருப்பொருளாகக் கொண்டவை. இக்கருத்தினை ஆங்கில அறிஞர் கார்லைல் என்பார், 'வரலாறு என்பது உண்மையில் இலக்கியமே ஆகும். உண்மை நிகழ்ச்சிகள் நன்முறையில் விளக்கப்படுமானால் கற்பனைக் காவியத்தைவிடச் சுவையும், சிறப்பும் மிக்கதாய் வரலாறு விளங்கும்' என்று மிக அழகாக வலியுறுத்துகிறார். எனவே,

இலக்கியமின்றி வரலாறு இல்லை; வரலாறு இன்றி இலக்கியமில்லை என்ற கருத்துப் புலனாகிறது.

தமிழ் இலக்கியங்கள் சோழர் வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுகின்றன. மேல்நாட்டு இலக்கியங்களைப்போல் நம் நாட்டு இலக்கியங்கள் முழுக்க, முழுக்க வரலாற்றிற்குப் பயன்படுவதில்லை. ஏனெனில், தமிழ் இலக்கியங்கள் பெரிதும் சமயச் சார்புடையவையாதலின் புறச்சமயத்தைச் சார்ந்த மன்னன் ஆட்சி பற்றியும், மக்கள் பற்றியும் உண்மையான நிகழ்ச்சிகள் உள்ளபடி கூறப்படுவதில்லை. தமது சமயத்தைச் சார்ந்தவர்களைப்பற்றி மிகைபடக் கூறுதலும் நிகழ்வுறும்.

இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்து மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, சமய வாழ்க்கையை அறிய உதவும். ஆனால், காலவரையறையைத் தெளிவுறுத்த வேண்டுமெனின், வேறு பல சான்றுகளின் துணைகொண்டுதான் ஆயவேண்டும். வேறு சான்றுகள் கிடைக்காதபோது இலக்கியச் சான்றுகள் பெரிதும் பயன்படுகின்றன. எனவே, தமிழிலக்கியச் சான்றுகளில் வரலாற்றைச் சார்ந்த அதற்கு ஏற்புடைய செய்திகளை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல் வரலாற்றறிஞரின் கடனாகும்.

தமிழகத்தின் தங்க காலமாம் சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், சோழர் வரலாறு பற்றிய பல அரிய செய்திகளைக் கூறுகின்றன. ஆனால், இவைகளின் கால வரையறை இன்னும் அறுதியிட்டுக் கூறப்படவில்லை.

தமிழ் மொழியிலுள்ள கலம்பகம், உலா, பரணி, கோவை, தலபுராணங்கள், காப்பியம் போன்ற நூல்கள் வரலாற்றுக்குப் பேருதவி புரிகின்றன.

தமிழகத்தில் இலக்கிய, இலக்கண நூல்கள் பெருகியது பிற்காலச் சோழர் காலத்திலாகும். சைவத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி வாழ்ந்ததும் இக்காலமே.

பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் என்னும் வரலாற்றுச் சார்புடைய பெருநூலும் இக்காலத்துத் தோன்றியதே. ஒன்பதாம் திருமுறையைச் செய்தருளிய நாயன்மார்களும், திருவிசைப்பா முதலியன அருளிச் செய்தோரும் வாழ்ந்ததும் இக்காலமேயாகும்.

'தென்னாட்டு வரலாறு சம்பந்தப்பட்ட வரை, சேக்கிழார் பெருமான் பெரும்பான்மையும் பிழைபடாது எழுதியுள்ளார்' என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை. ஏனெனில், சேக்கிழார் பெருமான் சோழப் பேரரசின் முதலமைச்சராக நற்பணியாற்றியவர்.

இவர் ஒரு சிறந்த புலவர்; சிவநேசச்செல்வர்; தொண்டை நாட்டினர்; தமிழகம் முழுவதையும் அறிந்தவர்; கல்வெட்டு ஆராய்ச்சியாளர்; அரசியலில் பங்கு பெற்றவ. இவர் பல்லவர் காலக்கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் நன்கு ஆய்ந்த காரணத்தால் தமது நூலில் நிகழ்ச்சிகளை விரிவாகவும், தெளிவாகவும், பிழைபடாமலும் எழுதியுள்ளார்.

இவர் மற்றப்புராண ஆசிரியர்களைப் போலன்றி மக்கள் வாழ்க்கையினையும், அரசியல் நிகழ்ச்சிகளையும், சமய வளர்ச்சியினையும் முறையாகக் கூறுகிறார். எனவே, 'சேக்கிழார் சிறந்த கல்வெட்டுப் புலவர் ; வரலாற்றுக்கு மாறாக நூல் செய்யாத மாபெரும் புலவர்; அவருக்கிணையாக இத்துறையில் தமிழ்ப்புலவர் எவரும் இலர். ஆதலின் , அவரது நூலைச் சான்றாகக் கொள்ளலாம்' என்ற டாக்டர் மா.இராசமாணிக்கர் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வது நலம்.

பெரியபுராணம் மட்டுமன்றிக் கம்பரால் எழுதப்பட்ட கம்பராமாயணமும் , ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களும் சோழர் வரலாற்று மூலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

கலிங்கத்துப்பரணியில் கலிங்கப்படை எடுப்பு, சோழர் பரம்பரை, குலேத்துங்க சோழனின் சிறப்பு, படைத்தலைவனாகிய கருணாகரத் தொண்டைமானின் சிறப்புப் போன்ற சோழர் வரலாற்றுக்குத் துணைபுரியும் இன்றியமையாத பல நிகழ்ச்சிகள் விரவாகக் கூறப்பட்டுள்ளன.

'திவ்ய சூரி சரிதம்' , 'குரு பரம்பரை' என்பன போன்ற வைணவ நூல்களும் அக்கால வைணவ சமய வளர்ச்சி பற்றியும் தமிழ் வளர்ச்சி பற்றியும் அறிய உதவுகின்றன. புத்தமித்தரால் இயற்றப்பட்ட 'வீர சோழியம்', அமிதசாகரரால் இயற்றப்பட்ட 'யாப்பருங்காலக் காரிகை' 'யாப்பருங்கல விருத்தி' ஆகிய இலக்கண நூல்களைக் கொண்டு சோழர் காலத்தமிழ் இலக்கண வளர்ச்சியையும் அறிந்து கொள்ளலாம்.

'மதுரைத் தல வரலாறு', 'திருவரங்கம் கோயில் உலகு' 'திருவையாறு தல புராணம்' போன்ற நூல்களின் மூலம் சோழர்களின் சமயப் பணியினை நாம் உணரலாம்.

தமில் இலக்கியங்களேயன்றி வடமொழி, தெலுங்கு, கன்னட இலக்கியங்களும் சோழர் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இவற்றுள் கன்னட மொழியில் உள்ள 'நவ சோழ சரிதம்' என்னும் நூலும், வடமொழியில் எழுதப்பெற்ற 'சோழவம்ச சரிதமும்' குறிப்பிடத்தக்கவை. 'கொங்குதேச ராஜாக்கள்' என்ற நூலும் சோழர் வரலாற்றுத் தொடர்புடையதாகும்.

தமிழகத்தின் மிகத்தொன்மையான இலக்கணநூலாகிய தொல்காப்பியமும் சோழர் பற்றிய ஒரு சில செய்திகளைக் கொண்டுள்ளது. எனவே, இலக்கியங்களைக் கொண்டு சோழர் காலத்திய இலக்கிய, இலக்கண வளர்ச்சியையும், மக்கள், சமூக, அரசியல், மத, பொருளாதார வாழ்க்கையினையும் அறிந்து கொள்கிறோம்.

கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

சோழ வரலாறு முழுக்க, முழுக்கக் கல்வெட்டுகளின் துணை

கொண்டு இயற்றப்பெற்றுள்ளது என்று கூறுதல் மிகையன்று. தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே கல்வெட்டு வழியாகப் பல அரிய குறிப்புகளை வெளியிட்டனர். கிறித்துப் பிறப்பிற்குப் பன்னாறாண்டுகள் முற்பட்ட தொல்காப்பியத்தில் நடுகல் அமைக்கும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் நிலவியது என்று குறிப்பதாலும் பெயர் பொறித்து நட்டனரே கல்லும் என்ற புறநானூற்று அடியாலும் கல்வெட்டு மூலம் பண்டைத் தமிழர் அரிய கருத்தினை வெளியிட்டனர் என்பது விளங்கும்.

கல்லின்மீதும், செப்புப் பட்டயத்தின் மீதும் எழுதிய எழுத்து அழியாதென்பதை உணர்ந்த நம் முன்னோர் கல்வெட்டுகளும், செப்புப் பட்டயங்களும் வெளியிட்டனர். எனவே, வெட்டெழுத்துகள் கல்வெட்டு, செப்பேடு என இரு வகைப்படும் என்பதை அறியலாம்.

தென்னகத்தில் ஆயிரக்கணக்கில் கல்வெட்டுகளும், சில செப்பேடுகளும் காணப்பெறுகின்றன. இவற்றுள் முதலாம் ராஜேந்திரன் கால முதல் தோன்றிய வெட்டெழுத்துகள் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தெள்ளத்தெளிய ஒழுங்காக எடுத்துக் கூறுகின்றன. மன்னனின் வெற்றிகள், குடும்பநிலை, நாட்டுப் பிரிவுகள், அறச்செயல்கள், சமயத்தொடர்பான செய்திகள், அரசியல் செய்திகள், ஆட்சிமுறை ஆகிய செய்திகளை வெட்டெழுத்தின் மூலம் தெளிவாக உணரலாம்.

மன்னன் கோயில் கட்டியமை, கோயில்களைப் புதுப்பித்தமை, கோயில்களுக்கு அளித்த நன்கொடைகள், பராமரிப்புச் செலவுகள் போன்ற செய்திகளையும் கல்வெட்டுகள் விரிவாகக் கூறுகின்றன. அறச்செயல்களைச் குறித்துப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளின் தொடக்கத்தில் மன்னனின் மெய்க்கீர்த்தியும், பின்னர், இன்னார், இன்ன அறத்தின் பொருட்டு இவ்வளவு பொருள் அளித்தார் என்பன போன்ற செய்திகளும் குறிக்கப்பெறும்.

விரிவான அளவிலான மெய்க்கீர்த்தி வெளியிடும் முறையை

முதன் முதலில் மேற்கொண்டு, வெட்டெழுத்து வரலாற்றில் அரியதொரு புரட்சியைச் செய்தவன் முதலாம் ராஜராஜனாவான்.

அவனுக்குப் பிறகு அவன் வழி வந்த சோழ மன்னர்களும், அச்சிறந்த செயலை மேற்கொண்டு ஒழுகுவாராயினர். அவருக்குப்பின் பாண்டி மண்டலத்தை ஆட்சி புரிந்த பாண்டியரும் இம்முறையைப் பின்பற்றினர்.

பெருமன்னர்களாக விளங்கிய தமிழ்வேந்தர்களின் கல்வெட்டுகளில்தான் மெய்க்கீர்த்தி இடம் பெற்றுள்ளது. குறுநில மன்னர் முதலானோர் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் ராஜேந்திரனுக்கு முன்பு ஆட்சி செய்த மன்னர்கள் தம் இயற்பெயர்களோடு வீரச் செயல்களையும் அமைத்துப் பட்டயங்களைக் கல்வெட்டுகளில் இணைத்து வெளியிட்டனர் என்பதைத் 'தஞ்சை கொண்ட கோப்பரகேசரி வருமன்' என்றும், 'மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பர கேசரி' என்றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் நத்தம் கல்வெட்டுகளில் குறித்துள்ளதால் அறியலாம்.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் பெரும்பாலும் தமிழ், வடமொழி (கிரந்தம்) ஆகிய இரண்டிலும் எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மன்னனின் மெய்க்கீர்த்தியும் வெவ்வேறு மங்கல மொழியால் தொடங்கப் பெற்றிருத்தலால், அம்மெய்க்கீர்த்தியின் தொடக்கத்திலுள்ள தொடர்மொழிகளைக் கண்ட அளவிலேயே, அக்கல்வெட்டு எவ்வேந்தனுடையது என்று தெளிவாக அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக முதல் ராஜராஜனின் மெய்க்கீர்தி, 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' என்றும் , முதல் ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி, 'திருமன்னி வளர விருநில மடந்தையும்' என்றும் தொடங்குவதை நாம் அறியலாம்.

மன்னனுடைய ஆட்சியாண்டுகள் மிகுந்து செல்லச் செல்ல,

அவ்வாண்டுகளில் செய்யப் பெற்ற மெய்ப்புகழ்களும், வீரச்செயல்களும் அம்மன்னனுடைய மெய்க்கீர்த்திகளில் முறையாக இடம் பெறும். சில மன்னர்கட்கு ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகளும் காணக்கிடைக்கின்றன. எனவே, இவை உண்மை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

சில கல்வெட்டுகளில் அரசயில் தொடர்பான அனைத்துச் செய்திகளும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும். அவை வரி விதித்தல், நிலவரி, தொழில்வரி, ஊரவைகளின் முடிவுகள், அரசியல் முறைகள், குற்றவாளிகட்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள், தொழில்முறைகள், அரசு அலுவலர்கள் நியமனம் போன்ற செய்திகளாகும்.

கோவில்களில் காணப்படும் சில கல்வெட்டுகள், ஊர் மக்களுடைய நிலம் விற்றல், வீடு விற்றல், மனை விற்றல், வாங்கல் போன்ற செய்திகளையும் குறிக்கின்றன.

கல்வெட்டுகளின் மூலம் அக்கால வடமொழி, தமிழ் மொழி இவற்றின் வளர்ச்சி, நடை மாறுபாடு, சொல்வளம் போன்றவற்றையும் அறியலாம். வட்டெழுத்து, பல்லவ கிரந்த எழுத்து, சோழர் காலத்தமிழ் எழுத்து ஆகிய இம்மூன்று தமிழ் எழுத்துகளையும் கல்வெட்டுகளால் அறிந்து கொள்ள முடியும்.

இவ்விதம், கல்வெட்டுகள் வரலாற்றுக்குப் பல துறைகளிலும் பேருதவி புரிகின்றன. சோழர் காலச் சமுதாய, கலை, மத, அரசியல், பொருளாதார வாழ்வு பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. முதல் பராந்தகன் காலத்தில் செதுக்கிய உத்திரமேரூர் கல்வெட்டிலிருந்து சோழர் காலத்திய ஆட்சிமுறையைப் பற்றித் தெளிவாக அறிகிறோம்.

மேலும், சோழர் காலம் பற்றி அறிந்துகொள்ளத் தஞ்சைப் பெருவுடையார் கோயிற் சுவர்களில் காணப்பெறும் கல்வெட்டுகளும் நார்த்தா மலை, திருமலை, கன்னியாகுமரி,

மகேந்திரமலை, உதயபுரம், எண்ணூர், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகளும் திருவாலங்காடு, கரந்தை, ஆனைமங்கலம், அன்பில், சாரால, திருக்களர் போன்ற இடங்களில் காணப்படும் செப்பேடுகளும் மிகவும் பயன்படுகின்றன. சோழர் காலச் செப்பேடுகள் சிலவற்றை ஈண்டு நாம் விவரமாக ஆய்வோம்.

சுந்தர சோழன் செப்பேடுகள்

இஃது ஆறு செப்பேட்டுத் தொகுதிகளுள் மிக்க பழமை வாய்ந்தது. இது கி.பி. 967 முதல் கி.பி.970 முடிய சோணாட்டின் மன்னனாக ஆட்சி புரிந்த சுந்தர சோழனெனும் இயற்பெயர் கொண்ட இரண்டாம் பராந்தக சோழனால் வெளியிடப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அன்பில் என்னும் ஊரினனான அநிருத்த பிரமாதிராஜன் என்பான் சுந்தர சோழனிடம் அமைச்சனாகப் பணி புரிந்து வந்தான். அவனுக்குத் திருவழுந்தூர் நாட்டிலுள்ள கருணாகர மங்கலம் என்னும் ஊரினை இறையிலியாக இம்மன்னன் வழங்கினான். இச்செப்பேடுகள், 'அன்பிற் செப்பேடுகள்' எனும் பெயரால் அழைக்கப்பெறுகின்றன. இச்செப்பேடுகள் சுந்தர சோழனின் நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி.960) வெளியிடப்பட்டன.

ஆனைமங்கலச் செப்பேடுகள் (The Large Leiden Plates)

முதலாம் ராஜராஜ சோழன், கடார வேந்தனாகிய மாரவிசயோத் துங்க வருமன் நாகப்பட்டினத்தில் 'சூடாமணி வரும விகாரம்' என்னும் புத்த விகாரைக் கட்டுவதற்குப் பேருதவி புரிந்ததுடன் ஆனைமங்கலம் என்னும் கிராமத்தினையும் பள்ளிச் சந்தமாக அளித்தான். அப்புத்த விகாரம் ராஜேந்திரனது காலத்தில் முடிவுற்றதால், இவன் தன் தந்தையின் அறக்கட்டளையைச் செப்பேடுகளில் தீட்டியளித்துள்ளான். இதுவே ஆனைமங்கலச் செப்பேடு எனவும் 'லீடன் பட்டயங்கள்' எனவும் அழைக்கப் பெறுகின்றது.

இக்காலை செப்பேடுகள் ஆலந்து (Holland) நாட்டின் பொருட் காட்சி சாலையில் உள்ளமையால் இவை லீடன் செப்பேடுகள் என அழைக்கப்பெறுகின்றன. இத்தொகுதியில் இருபத்தொன்று செப்பேடுகள் உள்ளன. முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பெற்ற ஆனைமங்கல நிவந்தச் செப்பேடுகளும் இக்காலை ஆலந்து நாட்டின் பொருட்காட்சி சாலையில்தான் உள்ளன. இவ்விரண்டுக்கும் வேறுபாடு தெரிதற் பொருட்டு அளவில் பெரியனவான ராஜராஜனின் ஆனைமங்கலச் செப்பேடுகளும் 'பெரிய லீடன் செப்பேடுகள்' என அழைக்கப் பெறுகின்றன. இச்செப்பேடுகள் சோழர் வரலாற்றின் சிறந்த ஆதாரங்களாகும்.

திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

இச்செப்பேடுகள் கி.பி.1905 இல் கண்டுபிடிக்கப்பட்டன. இச்செப் பேடுகள் முதலாம் ராஜேந்திர சோழனால் வெளியிடப் பெற்றனவாகும். திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்கும் அம்மை நாச்சியாருக்கும், திருவாலங்காடுடைய மகாதேவர்க்கும் இம்மன்னன் இருபத்தைந்தரை வேலி நிலத்தினைத் தேவதானமாக அளித்த செய்தியைக் கூறுகின்றன இச்செப்பேடுகள்.

இவற்றுள் முப்பத்தொன்று செப்பேடுகள் கோக்கப்பட்டுள்ளன. இவற்றில் வடமொழிப்பகுதி (பிரசஸ்தி) நூற்றுமுப்பத்தேழு பாடல்களிலும், தமிழ்ப்பகுதி ஐந்நூற்று இருபத்துநான்கு வரிகளிலும் எழுதப்பட்டுள்ளன. வடமொழிப் பாடல்களை இயற்றியவர் சங்கரர் மகனான புலவர் நாராயணனன் ஆவார். இவர் தலைசிறந்த வடமொழிப் புலவராகப் போற்றப்படுகிறார். காஞ்சியில் தோன்றிய ஆராவமுதரும், அவர் தம்பியராகிய அரங்கன், தாமோதரன் என்போரும், ஆராவமுதர் மகனான புருடோத்தமனும் இத்தானச் செய்திகளைச் செப்பேட்டில் செதுக்கினர்.

ராஜேந்திரனின் வெற்றிகளையும் சாதனைகளையும்

இச்செப்பேடுகள் விரிவாகக் கூறுகின்றன. இவை முதல் ராஜேந்திர சோழனின் ஆறாவது ஆட்சியாண்டில் (கி.பி.1018) வெளியிடப் பெற்றனவாகும். இச்செப்பேடுகளை சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செப்பேடுகள்

இச்செப்பேடுகள் முதலாம் ராஜேந்திர சோழனின் எட்டாமாட்சியாண்டில் (கி.பி.1020) வெளியிடப் பெற்ற செய்திக ளைக் கொண்டனவாகும். கி.பி. 1949 இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திற்கு இச்செப்பேடுகள் கிடைத்தன. இச்செப்பேடுகள் மூலமாக ராஜேந்திரன் ஆயிரத்தென்பது சதுர்வேதி பட்டர்களுக்கு ஐம்பத் தோரூர்களைப் பிரம தேயமாக அளித்த செய்தியினையறியலாம். சோழ மன்னரின் மரபு பற்றியும், ராஜேந்திரனின் வெற்றிகள், வாழ்க்கை, அரசியல் பற்றிய செய்திகளையும் இச்செப்பேடுகள் விரித்துக் கூறுகின்றன.

தமிழகத்தில் காணப்பெறும் செப்பேடுகளுள் இவை அதிக தகடுகள் கொண்டனவாகவும், அதிக வரிகள் கொண்டனவாகவும் உள்ளன இவை ஐம்பத்தேழு தகடுகளில் எழுதப்பெற்று இரண்டாயிரத்து ஐந்நூறு வரிகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று தகடுகள், பழைய கிரந்த எழுத்துகளில், எழுபத்தேழு வடமொழிச் செய்யுள்களாலான பிரசஸ்தியாகும். பிரசஸ் தியென்பது மன்னர் மரவும் புகழ்ச்சியுரையுமாகும்.

அடுத்த இருபத்திரண்டு ஏடுகளில் ராஜேந்திரன் அறக்கொடை யளித்த ஐம்பத்தோரு ஊர்களின் பெயர்களும், எல்லைகளும், நில அளவு, தரம், வருவாய்ப்பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இவை தமிழெழுத்துப்பகுதியாகும். மற்றைய முப்பது தகடுகள், தானம்பெற்ற பார்ப்பனாரின் கோத்திரம் சூத்திரம், நிலப்பங்கு பற்றியும் தொழிலாளர், சாசனம் எழுதியவர், வெட்டியவர் ஆகியவரைப் பற்றியும் கூறுகின்றன. எஞ்சியுள்ள இரண்டேடுகளும் இம்மூலச் சாசனத்திற்குப்

பிரதியாகச் செய்யப்பெற்றவற்றுள் எஞ்சியனவாகக் கிடைத்துள்ளன. இவ்வேடுகளனைத்தும் ஒரு தடிப்பான உலோக வளை யத்தில் கோர்க்கப்பட்டுள்ளன. இதன் முகப்பில் சோழரது இலச்சினை வட்டவடிவமாகச் செதுக்கப் பட்டுள்ளது. இவை இப்பொழுது தஞ்சை மாவட்டத்தின் கண்ணுள்ள கருந்திட்டைக்குடித் (கரந்தைத்) தமிழ்ச் சங்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சாராலாச் செப்பேடுகள்

ஆந்திரம், சித்தூர், புங்கனூருக்கு அருகில் சாராலா என்ற இடத்தில் இந்தச் செப்பேடுகள் கிடைத்ததால் சாராலாச் செப்பேடுகள் எனும் பெயர் பெறுகின்றன. இது ஏழு ஏடுகளைக்கொண்டது.

இவை ராஜகேசரி வீரராஜேந்திரனால் தமது எழாம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1070) வெளியிடப் பெற்றன. முதலாம் இராஜேந்திரனின் மூன்றாம் மகனும், சோழப் பேரரசை கி.பி. 1063 முதல் கி.பி. 1070 முடிய ஆட்சி செய்தவனும் ஆவான் வீரராஜேந்திரன்.

இந்த மன்னன் உத்தராயண சங்கராந்தி அன்று பிராமணர்களுக்கு சேராம் என்னும் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தை தானமாக வழங்கிய செய்தியைச் செப்புகின்றன.

சிறிய ஆனைமங்கலச் செப்பேடுகள் (The Smaller Leiden Plates)

இச்செப்பேடுகள் முதலாம் குலோத்துங்க சோழனின் இருபதாமாட்சியாண்டில் (கி.பி.1090) வெளியிடப்பட்டன. இவை இம்மன்னன், கடார வேந்தன் சோணாட்டில் கட்டிய 'ராஜராஜப் பெரும் பள்ளிக்கும், ராஜேந்திர சோழப் பெரும் பள்ளிக்கும் பள்ளிச் சந்த இறையிலியாக' ஆனைமங்கலத்தில் ஒரு பகுதியுடன் ஆமூர், நாணலூர், புத்தாக்குடி, மூஞ்சிக்குடி, சந்திரபாடி, உதயமார்த்தாண்ட நல்லூர் ஆகிய ஊர்களிலிருந்து விளையும் ஆயிரக்கணக்கான கலம் நெல்லை நிவந்தம்

செய்துள்ள செய்தியைக் கூறுகின்றன.

மூன்றே ஏடுகள் கொண்ட இச்செப்பேடு லீடனில் உள்ளது. இதுவே, 'சிறிய லீடன் பட்டயங்கள்' என அழைக்கப்பெறுகிறது.

திருச்செங்கோட்டுச் செப்பேடு-1

திருச்செங்கோட்டிலிருந்து இரண்டு பட்டயங்கள் கண்டெடுக்கப்பட்டன. முதலாவது பட்டயம் சுந்தரசோழனுடைய 10-ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. இது இரு பகுதிகளைக் கொண்டது.

முதல் பகுதி மழவரையன் சுந்தரசோழன் என்பான் தூசியூர் நகரத்தாரிடமிருந்து வரி வசூலிப்பது குறித்தும் வரி தராதவர் மீது நந்திபுரத்தில் வழக்கில் உள்ளவாறு தண்டம் வசூலிப்பது குறித்தும் கூறுகிறது.

இரண்டாம் பகுதி கொல்லிமழவன் பிரதிகண்டன் சுந்தரசோழன் என்பான் தன் தந்தை ஈழப் போரில் இறந்துவிடவே நீர் வேட்கையைத் தணிவிப்பதற்கு தூசியூர் திருக்கற்றளி பரமேஸ்வரருக்கு நில தானம் அளித்ததைக் கூறுகிறது.

செப்பேட்டில் ராஜகேசரி என்றிருப்பதால் இந்தச் செப்பேடு முதலாம் ராஜராஜன் வெளியிட்டது வரலாற்று அறிஞர் சிலர் கருதினர். செப்பேட்டில் வரும் பெயர் மற்றும் எழுத்து அமைவை வைத்து இதை சுந்தரசோழன் வெளியிட்டிருக்க வேண்டும் என்று திரு. நடன காசிநாதன் கருதுகிறார்.

திருச்செங்கோட்டுச் செப்பேடு-2

கொல்லிமழவனான ஒற்றியூர் பிரதிகண்டவர்மன் என்பான் தூசியூர் திருக்கோயிலுக்கு நில தானம் வழங்கியதை இந்தச் செப்பேடு பதிவு செய்துள்ளது. இது மூன்று ஏடுகளைக் கொண்டுள்ளது. இது பழைய செப்பேட்டை அழித்துப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

திருக்களர் செப்பேடு-1

திருக்களர் என்ற ஊரில் வெளிப்படுத்தப்பட்டதால் இந்தப் பெயர் பெற்றது. முதலாம் ராஜேந்திரசோழனின் பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது. இதில், திருக்களர் மாதேவர் திருக்கோயிலுக்கு அளித்த நன்கொடை குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் ஏட்டில் மட்டும் இரு பக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

பல ஏடுகளுடன் வெளியிடப்பட்ட சோழர் செப்பேடுகளில் இந்தச் செப்பேடு முதன்முதலில் வெளியிடப்பட்ட சிறிய செப்பேடு எனலாம். இதில் வடமொழிப் பகுதி கிடையாது. தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடுகள் வடமொழியுடன் தமிழையும் கொண்டவை.

திருக்களர் செப்பேடு-2

இதை முதலாம் ராஜாதிராஜன் வெளியிட்டுள்ளான். இதுவும் ஒரே ஏட்டால் ஆனது. கோயிலில் பூஜை செய்துவந்த பிராமணருக்கு நில தானம் வழங்கியதைக் குறிப்பிடுகிறது.

திருக்களர் செப்பேடு-3

முதலாம் குலோத்துங்கனின் 28-ம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டது இது. திருக்களர் மகாதேவர் அமாவாசைதோறும் அமுது செய்தருளவும் அரவாபரண தேவரின் திருவிழாவுக்கும் பிற வைபவங்களுக்கும் தானம் வழங்கப்பட்ட விவரத்தைப் பதிவு செய்கிறது.

திருக்களர் செப்பேடு-4

ஒரு பக்கம் முதலாம் குலோத்துங்கனின் ஆணையும் மறுபக்கம் இரண்டாம் ராஜராஜன் தானம் குறித்த ஆணையும் இடம்பெற்றுள்ளன. ஒரே செப்பேட்டில் இரு ஆணைகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மன்னர்கள் பிறப்பித்ததை இதனால் அறிகிறோம்.

திருக்களர் செப்பேடு-5

இந்தச் செப்பேட்டை மூன்றாம் குலோத்துங்கன் வெளியிட்டது. இரு ஏடுகளைக் கொண்டது. கோயிலில் இருந்த அணிகலன்களை இந்தச் செப்பேடு விரிவாகக் கூறுகிறது.

வேலஞ்சேரிச் செப்பேடு

திருத்தணி அருகே உள்ள வேலஞ்சேரியில் கண்டெடுக்கப்பட்டது. கண்டெடுக்கப்பட்டவை இரண்டு செப்பேடுகள். இதில் முதலாம் பராந்தகனுக்கு உரிய செப்பேடும் ஒன்று. இவை, தொல்லியல் துறை முன்னாள் இயக்குனர் நடன காசிநாதனால் கண்டுபிடிக்கப்பட்டது. சங்ககாலச் சோழனான கரிகாலன் இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த செய்தி இதில் கூறப்பட்டுள்ளது. சோழர்க்கு காஞ்சிபுரத்தில் அரண்மனை இருந்ததையும் இது குறிப்பிடுகிறது.

விஜயாலயசோழனின் தந்தையின் பெயர் ஒற்றியூரன் என்று குறிக்கப்பட்டுள்ளது. முதலாம் பராந்தகன் திருவரங்கம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய ஊர்களில் துலாபாரத்தில் தானம் செய்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருத்தணிச் செப்பேடு எனவும் அழைக்கப்படுகிறது.

எசாலம் செப்பேடு

ராஜேந்திரனின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்டது. எசாலம் சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானத்தைக் கூறுகிறது. 15 தகடுகளைக் கொண்டது. வடமொழி கிரந்தத்தில் 80 வரிகள் பொறிக்கப்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதி தொடர்கிறது. ஆனால், செப்பேட்டின் பெரும் பகுதி, 349 வரிகள் தமிழிலேயே உள்ளது.

இந்தச் செப்பேட்டின் வடமொழி சுலோகங்களை புகழ் மிகு வடமொழிப் பண்டிதரான நாராயண கவி இயற்றியுள்ளார். இவர் பார்சிவ கிராமத்தைச் சேர்ந்த சங்கரருடைய மகன். கி.பி. 11-ம் நூற்றாண்டின் தலைசிறந்த பண்டிதர். கரந்தைச் செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் உள்ள வடமொழி சுலோகங்களையும் எழுதியவர்.

சோழ வேந்தர்களின் பெருமைகளையும் சாதனைகளையும் ராஜேந்திரனின் வெற்றிகளையும் சிறப்புகளையும் விரிவாகப் பேசுகிறது. அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோழேச்சரத்தைக் கட்டினான் என்பது இதால் அறியப்படுகிறது.

ராஜேந்திரனுக்கு முன்னரே மாமன்னன் ராஜராஜன் கௌட தேசத்தை (வங்க நாடு) வென்ற செய்தி கூறப்பட்டுள்ளது. ராஜேந்திரன் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனை வென்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டின் முத்திரை விளிப்பில் 'பரகேசரிவர்மனாகிய ராஜேந்திர சோழனின் ஆணை இது' என்பதை அறிவிக்கும் வகையில் வடமொழி கிரந்த எழுத்தில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

ராஜத் ராஜஸ்ய மகுட ஸ்ரேணி ரத்னேஷு சாஸனம்

ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய பரகேசரி வரம் மனஹ

-என்பதே அந்த வடமொழி வாசகம்.

'ராஜேந்திர சோழனாகிய பரகேசரியின் இந்த சாசனம் அரசர்களின் முடி வரிசையிலுள்ள ரத்தினங்களின் மீது செலுத்தப்பட்டது' என்பதே இதன் பொருள்.

தஞ்சாவூர் என்னும் பெயர் 'தஞ்சாங்காரி' என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது.

'பாரிஜாத மலரில் ரீங்காரமிடும் தேனீ போன்று சிவனின் தாமரைப் பாதத்தை நேசிப்பவனாக மதுராந்தகன் விளங்கினான்' என்று செப்பேட்டின் வடமொழிப் பகுதி இவன் சிவபெருமான் மேல் கொண்ட ஆழ்ந்த பக்தியை பதிவு செய்கிறது. எனவேதான் இவன் 'சிவ சரண சேகரன்' என்று திருவலஞ்சுழிக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான்.

செவ்வக வடிவம் உள்ள இந்தச் செப்பேடு 14 அங்குல நீளமும் 6½ அங்குல அகலமும் உடையது. இந்தச் செப்பேட்டைப் பொறித்த ஆச்சாரியின் பெயர் 'உலகளந்த சோழ ஆச்சாரி' என்று

கூறப்பட்டுள்ளது. வடமொழிப் பகுதி நான்கு ஏடுகளைக் கொண்டுள்ளது.

வடமொழிப் பகுதியின் தொடக்கத்தில் சோழ மரபுப் புகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. பின்னர் கல்யாண சுந்தரரின் பெருமையும் கலைமகளின் சிறப்பும் இரு வடமொழி சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன.

சூரிய குலத்தவராகிய சோழரின் அருமை பெருகைகளை 50 எழுத்துக்களைக் கொண்டு (வடமொழி அட்சரங்கள் 50) பறை சாற்ற முடியுமா என்று சோழரின் பழம் பெருமையை நினைவூட்டுகிறார்.

இந்தச் செப்பேடு குறிப்பிடும் புராண அரசர்கள்

மனு, இட்ச்வாகு, மாந்தாதா, முசுகுந்தன், வல்லபா, சோழவர்மன், ராஜகேசரி, பரகேசரி முதலான புராண கால மன்னர்களின் சிறப்பு இதில் கூறப்பட்டுள்ளது. வல்லபா என்னும் வேந்தன் வல்லபபுரியை ஆண்டவன். வல்லபபுரி என்பது இன்று தஞ்சையை அடுத்துள்ள வல்லம் ஆகும். இது ஒரு காலத்தில் முத்தரையர்களின் கோ நகரமாகத் திகழ்ந்தது. பிற்காலத்தில் முத்தரைய மன்னர்களுள் முடி மன்னனாகத் திகழ்ந்த இரண்டாம் பெரும் பிடுகு முத்தரையன் என்ற சுவநன்மாறன் வல்லத்தி ஆண்டுள்ளதால் 'வல்லக்கோன்' என்று புகழப்பட்டுள்ளதை இங்கு நினைகூர்தல் நலம். வல்லபா, 'வல்லங்கிழான் நல்லடிக்கோன்' எனவும் அழைக்கப்பட்டுள்ளார்.

பின்னர் கரிகாலன், விஜயாலய சோழன், முதலாம் ஆதித்தன், பராந்தகன், அரிந்தமன், சுந்தர சோழன், ராஜராஜன், ஆதித்த கரிகாலன், முதலாம் ராஜேந்திரன் - முதலான சோழ வேந்தர்களின் சிறப்புகள் இந்தச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன.

ராஜாதித்தன், கண்டராதித்தன், உத்தம சோழன் - முதலான மன்னர்களின் பெயர்கள் இதில் இடம் பெறாதது விந்தையே! வீரராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டும், சாரலா

செப்பேடுகளும் கண்டராதித்தனையும் உத்தம சோழனையும் குறிப்பிடாததும் விந்தையே! சிறந்த தமிழ்ப் புலவனாகவும் திருமுறைகளில் இடம் பெற்றவனுமாகிய சிவஞான கண்டராதித்தனின் பெயர் விடப்பட்டது ஏன் என்று புரியவில்லை.

ஆதித்த கரிகாலனின் சிறப்பு இந்தச் செப்பேட்டில் இடம் பெறுகிறது. இவன் வீரபாண்டியனைத் தோற்கடித்துக் கொன்று, அவன் தலையை தஞ்சை மாநகரில் கம்பத்தில் தொங்கவிட்டான் எனும் புதிய செய்தி இந்தச் செப்பேட்டில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதனால் சோழர்கள் பாண்டியர்கள் மீது கொண்டிருந்த தீராப் பகை புலனாகிறது.

முதலாம் ராஜேந்திரனின் குல குருவான சர்வ சிவ பண்டிதர் 'நம் உடையார்' என மிக்க மரியாதையுடன் இந்த்ச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளார். எய்தார் (எசாலம்) எனும் ஊரில் ராமீச்வரம் கோயிலை எடுப்பித்துள்ள இவரே இந்தச் செப்பேட்டின் விக்ஞாபதியாகவும் பணியாற்றியுள்ளார். ராமீச்வரத் திருக்கோயிலுக்கு ராஜேந்திரன் அதிகமாக நில தானம் செய்திருப்பது இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாராக்கன் மாராயன் ஜனநாதனாகிய ராஜேந்திர சோழ பிரம்மாதிராயன் இந்தச் செப்பேட்டில் உள்ள தானத்தைச் செயல்படுத்திய ஆக்ஞாதிபதியாக அமர்த்தப்பட்டான். ராஜராஜப் பெருமன்னனின் படைத் தலைவனாகப் பணியாற்றியவன் ராமன் கிருஷ்ணன். தஞ்சைப் பெருங்கோயிலின் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவனும் இவனே. இந்தப் புகழ் மிகு படைத் தலைவனின் மகனே ஆக்ஞாதிபதி எனும் உயர் அதிகாரியான மாராக்கன் மாராயன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈசான சிவ பண்டிதரே ராஜராஜனின் குல குரு. ராஜராஜனுக்குப் பிறகு அரியணை ஏறிய ராஜேந்திரனுக்கும் இவரே குல குரு. இதைத் தஞ்சை கோயில் கல்வெட்டால் அறியலாம். மற்றொரு தஞ்சைக் கல்வெட்டில் சர்வ சிவ

பண்டிதர் ராஜேந்திரனின் குல குருவாகக் குறிக்கப்பட்டுள்ளார். எனவே, ராஜேந்திரன் பட்டத்துக்கு வந்த புதிதில் ஈசான சிவ பண்டிதரும், ஈசான சிவ பண்டிதர் சிவ பதவி அடைந்த பின்னர் சர்வ சிவ பன்டிதரும் ராஜேந்திரனுக்குக் குல குருவாக விளங்கியது புலனாகும்.

'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயில் கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து நம் வீட்டின் உள்ளால் நாம் குளிக்குமிடத்து தானம் செய்யாவிருந்து' என்று இந்தச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதி குறிப்பிடுகிறது. வட மொழிப் பகுதியில் இந்தச் சோழன் மகா சாலையில் இருந்தபோது பிராமணர்களுக்குத் தானம் செய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த வேந்தன் காலத்திலும் சோழரின் துணை நகரங்களுள் ஒன்றாக காஞ்சி விளங்கியதை அறியலாம். கி.பி. 1027-ல், அதாவது இவனுடைய 15-ம் ஆட்சி ஆண்டில் இந்தத் தானம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 9 ஆண்டுகள் கழித்து இந்த வேந்தனின் இருபத்துநான்காம் ஆண்டில் தான் செயல் வடிவம் பெற்றது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஐந்தளி மாதேஸ்வரர் கோயில், பிடாரியார் கோயில், ஐயனார் ஸ்ரீ கோயில், நந்தவனம், கம்மாளச் சேரி, பறைச் சேரி ஆகியவை இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ராஜராஜ சதுர்வேதிமங்கலத்தில் இருந்த பத்துச் சேரிகளும் சோழ அரசர்களின் குடும்பப் பெயர்களாகவே இருந்தது இன்றைய அரசியல் செயல்களுக்கு முன்னோடியாக இருப்பது சுட்டிக்காட்டத் தக்கது.

இந்தச் செப்பேட்டில் ராஜேந்திரனின் மெய்க் கீர்த்தி 198-வது வரி முதல் 231 வரை இடம்பெறுகிறது. 25-ம் ஆட்சி ஆண்டில் 55-ம் நாளில் திருமந்திர ஓலை எனும் அதிகாரி எழுதியபடி ஆணை நிறைவேறுகிறது. மாத்தூருடையான் சம்பன் படையடக்கி என்பான் திருமந்திர ஓலை நாயகன் ஆவான். இந்தச் செப்பேட்டில் பலதரப்பட்ட அதிகாரிகள், பெயர்கள், நாடுகள்,

சதுர்வேதி மங்கலங்கள் வள நாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒரு சுவையான செய்தி இந்தச் செப்பேட்டில் பதிவாகியுள்ளது. அதாவது, திருக்கோயிலை ஒட்டிய பகுதிகளில் கள் இறக்குவது தடை செய்யப்பட்டுள்ளது. 'தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகவும்' - என்பது செப்பேட்டு வரிகள்.

சோழர் கல்வெட்டுகள் சோணாட்டில் மட்டுமின்றிச் சேர, பாண்டிய நாடுகளிலும், பர்மா, மலாயா, சுமத்திரா, சயாம், இலங்கை ஆகிய கடல் கடந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. சோழர் வரலாறு பற்றிய செய்திகள் அண்டை வம்சங்களான கீழைச் சாளுக்கியர், மேலைச் சாளுக்கியர், கீழைக் கங்கர், யஹாய்ச் சாலர், இராட்டிர கூடர் போன்றோர் நாடுகளின் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

மேற்கூறிய அண்டை வம்சங்களின் வெட்டெழுத்துச் செய்திகளையும், சம காலத்து வம்சங்களின் செய்திகளையும், சோணாட்டு வெட்டெழுத்துச் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சோழர் பற்றிய உண்மைச் செய்தியை நாம் அறிய முடியும்.

இவ்வெட்டெழுத்துகளை அழியா நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்து வரலாற்றுக்குப் பயன்படுத்த விழைந்த நம் அரசு, இவைகளைப் படி எடுத்துத் தென்னிந்திய வெட்டெழுத்துகள் என்ற தலைப்பில் 20 பகுதிகள் வெளியிட்டுள்ளமை, மகிழ்ச்சிக் குரியதொன்றாகும். மேலும் ஒவ்வொரு ஆண்டும் தென்னிந்தியக் கல்வெட்டின் ஆண்டறிக்கை ஒன்றை வெளியிட்டு வருகிறது. இவைகளும் வரலாற்றாராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் படுகின்றன.

இக்கல்வெட்டுகள் இல்லையேல் சோழ மன்னர்களின் பெருமையுமு, அக்கால மக்களின் சமூக, பொருளாதார, மத வாழ்வு, கல்விநிலை, நாகரிகம், புலவர், புரவலர், அரசியல் தலைவர், தேர்தல் முறை, ஆட்சி முறை பற்றிய விவரங்களும்,

பல தூய தமிழ்ச் சொற்களும், இன்னும் எத்துணையோ அரிய செய்திகளும் வெளியாகாமல் மறைந்திருக்கும்.

கோவில்கள்

தமிழ்நாடு என்றும் தெய்வ மணங் கமழும் திருநாடு. பழந்தமிழர், 'கோயிலில்லா ஊரில் குடியிக்க வேண்டா' என்னும் முது மொழியைப் பொன்னெனப் போற்றினர். எனவே, ஆண்ட வனுக்குக் கோயில் அமைத்து வணங்கிப் போற்றினர். அதிலும் சிறப்பாகப் பிற்காலச் சோழ மன்னர்கள் காலத்தில் விண்ணை முட்டும் கோபுரங்கள் கொண்ட திருக்கோயில்கள் பல கட்டப் பட்டன.

கோயில்கள் பொதுமக்களுக்கு அறிவைப் புகட்டும் இடங்களா கவும் திகழ்ந்தன. சோழர் காலத்திய கோயில்களுள் பல கற்கோ யில்கள். அவைகளின் சுவர்களிலும், தூண்களிலும், தரையிலும் ஏராளமான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் சிதையா வண்ணம் எண்ணெய் தடவி நன்கு பாதுகாக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் சோழ மன்னர்கள் மேற்கொண்டனர்.

கல்வெட்டுள்ள கோயில்கள் புதுப்பிக்கப்படுங்கால் , அக்கல்வெட் டுகளைப் படி எடுத்துப் புதிதாக அமைக்கப்படும் கோயில்களில் பொறித்தல் தமிழகத்தில் மரபாக இருந்தது. கற்கோயில்களில் மட்டுமின்றிச் செங்கல், சுண்ணாம்பு முதலியவற்றால் ஆகிய கோயில்களிலும் கல்வெட்டுகள் வெட்டப்பட்டிருந்தன. இக்கோ யில் கல்வெட்டுகளைக் கொண்டு மன்னனின் போர்ச் செயல்கள், சாதனைகள், அறச்செயல்கள் போன் இன்னோரன்ன செய்திகளை அறிந்து கொள்ளலாம் என்பதை நாம் முன்னரே கண்டோம்.

திருக்கோயில்களில் காணப்படும் சிற்பங்களைக் கொண்டு சோழர் காலத்திய சிற்பக்கலை வளர்ச்சியை நாம் தெள்ளிதின் அறியலாம். கங்கை கொண்ட சோழேச்சரத்தில் முதல் ராஜேந்

திரன் காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், சிற்பக்கலையின் உயர்ச்சியையும், முதிர்ச்சியையும் குறிப்பதை நாம் எடுத்துக்காட்டாக இங்குக் குறிப்பிடலாம்.

தமிழகத்தில் கற்கோயில் அமைப்பதிலும், சிற்பங்கள் செதுக்குவதிலும், ஓவியங்கள் தீட்டுவதிலும், வழி காட்டியாக அமைந்தவர்கள் பல்லவர்களே என்றாலும்கூடப் பிற்காலச் சோழர் காலத்தில்தான் இக்கலைகள் முழுமை பெற்றுப் பெருமை பெற்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. சோழர் கால ஓவியங்களைக் கொண்டு அக்கால மக்களின் நடை, உடை, பாவனை, அணி கலன்கள் ஆகியவற்றைக் காணலாம். இவற்றிலிருந்து சோழர் கால ஓவிய வளர்ச்சியையும், வண்ணங்கள் தீட்டும் கலையையும் உணர லாம். தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறைச் சுவர்மீது காணப்படும் ஓவியங்களை நாம் இங்கே எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவ்வோவியங்கள் இன்றும் நம் கண்ணையும், கருத்தையும் கவர்வனவாக அமைந்துள்ளமை போற்றத்தகுந்ததாகும்.

கோயில் கட்டட அமைப்பை நன்கு ஆய்பவர்கள் சோழர் காலக் கட்டடக்கலை வளர்ச்சியை நன்கு உணர்வதோடு, இக்கலையைப் பல்லவர் காலக் கட்டடக் கலையுடன் ஒப்பிட்டு இதன் வளர்ச் சியைக் கணிப்பர். சோழர் காலத்திய நுண் கலைகளை முற்றும் ஆய்ந்து, அதன் அருமை, பெருமைகளை அறிந்தோர், சோழ மன்னர்களின் கலையுணர்ச்சியையும் கலையார்வத்தையும் நன்கு அறியலாம். சோழர் கால மக்கள் எல்லா நலனும், வளனும் பெற்று வாழ்ந்த காரணத்தால்தான் கண்ணையும், கருத்தையும் கவரும் கவின்கலைகளைப் போற்றிவளர்க்க அவகாசம் கிடைத்தது என்பதை நாம் அறியலாம்.

எனவே, சோழர் கால வரலாற்றினை அறிந்து கொள்ளப் பேருதவி செய்யும் மூலங்களுள் கோயில்களே முக்கிய இடம் பெறுகின்றன. கோயில்கள்தான் என்றும் நின்று நிலைபெற்று

அக்கால மன்னர்களின் செம்மையான ஆட்சியினை நமக்கு நினைவூட்டிக் கொண்டுள்ளன.

நாணயங்கள்

நாணயங்கள் ஒரு நாட்டின் வரலாற்றினை அறிந்துகொள்ளச் சிறந்த மூலங்களுள் ஒன்றாகும். சோழர், பல்லவர்களைப் போலவே பொன், வெள்ளி, செம்பு இவற்றால் ஆன நாணயங்களை வெளியிட்டனர். அவற்றுள் பல இப்பொழுது கிடைத்துள்ளன. சோழர் காலத்திய தங்கநாணயங்கள் சிலவற்றைதான் இன்று காண முடிகின்றது. வெள்ளி நாணயங்களும் அதிக அளவில் இன்று கிடைக்கவில்லை. செப்பு நாணயங்கள்தான் மிகுந்த அளவிலும் பல வடிவங்களிலும் காணப்படுகின்றன. எனவே, சோழர் காலத்தில் செப்பு நாணயங்களே அதிகமாகப் புழக்கத்திலிருந்ததை நாம் அறியலாம். எல்லா நாணயங்களிலும் சோழர்களின் முத்திரை யான புலியும், அதன் பக்கத்தில் சேர, பாண்டிய சின்னங்களான வில்லும், மீனும் போடப்பட்டுள்ளன. இவற்றைச் சுற்றிலும் இவற்றை வெளியிட்ட மன்னனின் பெயர் எழுதப்பட்டுள்ளது. சில நாணயங்களில் இவையே பின்புறத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

பொற்காசுகளில் ஈழக்காசு என்ற ஒரு வகையும் இருந்தது. இதுபோன்ற ஈழக் காசுகள், முதலாம் ராஜராஜன் காலத்தில்தான் முதலில் வெளிவந்தன. இக்காசுகள் முதலாம் குலோத்துங்கன் காலம் வரையில் வெளியிடப்பட்டுப் புழக்கத்தில் இருந்தமை கல்வெட்டுகளால் இனிது விளங்குகின்றன. சோழ மன்னர்கள், ஈழ நாட்டினை வென்று அடிமைப்படுத்திய பின்பே ஈழக்காசுகளை வெளியிட்டனர் என்பதை நாம் இதனால் உறுதியாக அறிய முடிகின்றது. இக்காசின் ஒரு பக்கத்தில் ஒரு முரட்டு மனிதன், நிற்பது போலவும், மற்றொரு பக்கத்தில் அமர்ந்து இருப்பது போலவும் காணப்படுகின்றான்.

சோழர் காலத்தில் ஈழப்பொற்காசு மட்டுமன்றித், துளைப்

பொன்னும் வெளியிடப்பட்டது. இதைக் காய்ச்சி, உருக்கி, வெட்டி நாணயமாக்கினும், மாற்றும் நிறையும், தூய்மையும் குன்றா என அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டதற்கு அறிகுறியாகவே இப்பொன் துளையிடப்பட்டது. முதலாம் ராஜராஜன் காலத்தில் 'ராஜராஜன் காசு' என்ற பெயரிலேயே காசுகள் வெளியிடப்பெற்றன. இவற்றால் சோழர் காலப் பொருளாதார முன்னேற்றத்தையும், செல்வச் செழிப்பையும் நாம் நன்கு அறியலாம்.

முதலாம் ராஜேந்திரன் ராஜேந்திரன் மாடை எனவும் ராஜேந்திர சோழக் காசு எனவும் பெயர் கொண்ட நாணயங்களை வெளயிட்டுள்ளான். எனவே, இக்காசுகளைக் கொண்டு இவைகளை வெளியிட்ட மன்னர்களையும், சோழர்காலக் கலைநுணுக்கங் களையும் நன்கு உணரலாம்.

சோழ நாட்டில் வெளியிடப்பட்ட நாணயங்களேயன்றி வெளி நாட்டு நாணயங்களும், நம் நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்திலும், மற்ற இடங்களிலும் காணப்படுவதால் சோழர்கள் வெளி நாட்டினருடன் கடல் வாணிகம் செய்ததை அறிந்து கொள்ளலாம்.

உரோம் நாட்டு நாணயங்கள் நம் நாட்டில் மிகுதியாகக் காணப்ப டுவதை இங்கு நாம் எத்துக்காட்டாகக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தில் சீன நாட்டு நாணயங்கள் எண்ணிறந்த அளவில் அகழ்ந்தெடுக்கப்பட்டிருத்தலின் தமிழக , சீன, வாணிக வளர்ச்சியை நாம் தெளிவாக அறியலாம். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கிணங்கச் சோழர் காலத்தில் கடல் கடந்த வாணிகம் செழித்தோங்கியது என்பதை நாம் உணரலாம்.

வெளிநாட்டினர் குறிப்புகள்

'ஒரு நாட்டைப் பற்றியும், அதன் மக்களைப் பற்றியும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் தரும் குறிப்புகள் அந்த நாட்டு

வரலாற்றாசி ரியர்கட்குச் சுவை பயப்பனவாக உள்ளன', என்று திரு.கே. ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுவதனால் அந்நிய நாட்டினர் குறிப்பின் முக்கியத்துவத்தினை நாம் அறியலாம்.

சீனர், அராபியர், முஸ்லீம் வரலாற்றறிஞர்கள், ஐரோப்பியர் குறிப்புகளும் சோழர்களைப் பற்றிய பல அரிய சுவையான செய்திகளைக் கூறுகின்றன. ஐரோப்பியருள் மார்க்கோபோலோ குறிப்பிடத்தக்கவராவார். இவற்றால் சோழர்களின் கடல் கடந்த வாணிகச் சிறப்புப் பற்றி நாம் அறியலாம். வெளிநாட்டு வரலாற்று நூல்களிலும் சோழர் வரலாறு பற்றிய அரிய பல கருத்துகள் காணக்கிடக்கின்றன. இலங்கை வரலாற்று நூலான 'மகாவமிசம்' சோழர்களைப் பற்றிய பல அரிய செய்திகளைக் கூறுகின்றது. இந்நூல் ஈழ மண், சோழஉறவு பற்றியும், ஈழமண் சோழப் போர்களைப் பற்றியும் கூறுவதோடு சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தைக் கணிப்பதிலும் உற்ற துணையாக, ஊன்று கோலாகப் பயன்படுகின்றது. முதல் ராஜேந்திர சோழன், முதல் ராஜராஜ சோழன் போன்ற சோழ மன்னர்களின் ஈழப்போர் பற்றிய புதுச் செய்திகளையும் மகாவமிசம் கூறுகின்றது.

யவன ஆசிரியரான தாலமியின் குறிப்புகளிலும், பெரிப்ளூஸ் என்னும் கடற்செலவு நூலிலும் சோழர்களைப் பற்றிய சில செய்திகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

உள்நாட்டுச் சான்றுகளைவிட வெளிநாட்டுச் சான்றுகளைக் கொள்வது என்றென்றும் நன்மை பயப்பதாகும். ஏனெனில், அன்னிய நாட்டினர், உள்நாட்டினரைவிடக் காய்தல் உவத்தலின்றித் தாங்கள் உணர்ந்தவற்றைக் கூறுமியல்பினராவர்.

மேற்கூறியவற்றால் வரலாறு என்னும் கட்டடம் இலக்கியம் என்ற மண்ணாலும், பழம்பொருட் சின்னம் என்ற செங்கல்லாலும், வெட்டெழுத்து என்னும் சாந்தாலும், வெளி நாட்டினர் குறிப்பு என்னும் மரத்தாலும் கட்டப்பெறுகிறது

என்பதை அறியலாம். இவ்வரலாற்றுக் கட்டடத்தின் மீது கால வரையறை என்ற சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. எனவே, இலக்கியமும், வெட்டெழுத்தும், பழம்பொருட் சின்னமும், வெளிநாட்டினர் குறிப்பும் ஒரு நாட்டின் வரலாற்றினை உருவாக்குவதில் உறுதுணை புரிகின்றன என்பதை அறியலாம்.

3

மனுநீதிச்சோழன் பரம்பரை

தமிழக வரலாற்றில் முதலாம் ராஜேந்திரன், அரும் பெருஞ்செயல் புரிந்த பெருஞ் சோழனெனினும், இவனைப் பற்றி ஆராயுமுன், இவனுடைய முன்னோர் அருஞ்செயல்களைப் பற்றிச் சிறிது காணாதொழியின், இவனுடைய சீரும், சிறப்பும், பேரும், புகழும் இனிது விளங்காவாகலின், அவர்களைப் பற்றியும் ஈண்டுச் சிறிது ஆய்வோம்.

சோழரைப் பற்றிய வரலாற்றை நாம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வரலாற்றுக்குக் காலத்திற்கு முற்பட்ட சோழ மன்னர்கள், வரலாற்றுக் காலச் சோழ மன்னர்கள் ஆகும். இருப்பினும் சோழ மன்னர் வரலாற்றினைச் சங்க காலத்திற்கு முற்பட்ட சோழர், சங்க காலச் சோழர், இடைக்காலச் சோழர், பிற்காலச் சோழர் என்று நான்கு பிரிவினராகப் பகுத்துக் காணுதல் நலம் பயப்பதாகும். பிற்காலச் சோழர் வரலாற்றினை விசயாலயன் காலம் முதல் ஆதிராஜேந்திரன் காலம் முடிய ஆண்ட மன்னர்கள் என்றும், முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கால முதல் ஆண்ட மன்னர்கள் என்றும் இரு சிறு பிரிவுகளாகப் பகுத்தல் உண்டு.

சங்க காலத்துக்கு முற்பட்ட சோழர்கள்

மனுநீதிச் சோழன்

சங்ககாலத்துக்கு முற்பட்ட சோழ மன்னர்களுள் பெரும் புகழ்

பெற்றவன் மனுநீதிச் சோழன் ஆவான். இவன் நீதிநெறி வழுவாது ஆட்சி செய்து, நீதியின் இருப்பிடமாகத் திகழ்ந்தவன். இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்.

தன் ஒரே மகன் பசுவின் கன்றைத் தேரேற்றிக் கொன்றான் என்பதனால், அவனை அக்கன்றிறந்த இடத்தில் கிடத்தித் தேரேற்றிக் கொன்று முறை செலுத்தி,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்

என்று வள்ளவர் வகுத்த அரச நீதிக்கு எடுத்துக் காட்டாய் விளங்கியவன் மனுநீதிச் சோழனாவான். முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரம்,

'வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுடத் தான்றன்

அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே!'

என்று இவனைப் பாராட்டுகின்றது. திருவாரூர் வீது விடங்கப் பெருமான் கோயில் கல்வெட்டிலும் இந்நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. சேக்கிழார் பெருமானும் தமது பெரிய புராணத்தில், மனுநீதிச் சோழன் வரலாற்றை விளக்கி வரைந்துள்ளார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் இவ்வரலாறு தமிழ் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவியிருந்தது.

சிபி

சிபியும் அக்காலத்தில் கீர்த்தி பெற்ற சோழ மன்னனாவான். தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவைக் காப்பாற்றத் தனது சதையை அரிந்து வைத்து, இறுதியில் தானே துலா ஏறி மனுவைப் போல நீதியை நிலைநாட்டப் பாடுபட்டான் சிபி என்பதை அறிகிறோம்.

'புறவு நிலைபுக்குப் பொன்னுலக மேத்தக்

குறைவி லுடம்பரிந்த கொற்றவன்'

என்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் புகழ்கின்றது.

காந்தன் என்னும் சோழன் காவிரியாற்றைச் சோழ நாட்டிற்குக் கொணர்ந்தான் என்பதை மணிமேகலை செப்பகின்றது.

இராமாயண காலத்தில் பறக்கும் கோட்டைகளை வைத்துக்கொண்டு மக்கட்கு ஊறு விளைவித்த அசுரர்களைக் கொன்ற சோழ மன்னனைப் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிலப்பதிகாரமும், புறநானூறும் இவனைத் 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்று புகழ்கின்றன.

புகார் நகரில் மிகச் சீரிய முறையில் இந்திர விழாவெடுத்த முகுந்தன் பற்றியும், பரசுராமன் காலத்தில் சோழ மன்னனாக ஆட்சி புரிந்த முசுகுந்தன் பற்றியும் இலக்கியங்களில் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. மற்றும் சில சோழ மன்னர்களின் வரலாறு நமக்கு விளக்கமாகக் கிடைத்தில.

இது காறும் கூறியவற்றால் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்தே சோழ மன்னர்கள் நல்லாட்சி செலுத்திய வரலாற்றினை அறிய முடிகிறது.

மனு, முகுந்தன், சிபி, காந்தன், தொடித்தோட் செம்பியன் போன்ற மன்னர்கள் வரலாற்றுக் கால வரையறைகட்கு உட்படாதோராவர். அவருள்ளும் முசுகுந்தன், வரலாற்றுக்கு முற்றிலும் புறம்பான வாழ்க்கை வரலாற்றை உடையவனாவான்.

சங்க காலச் சோழர்

கரிகாலன்

சங்க காலம் தமிழக வரலாற்றின் தங்க காலமாகும். சங்க காலச் சோழ மன்னர்களின் காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி முடிய இருந்தது என வரலாற்றறிஞர்கள்

கூறுகின்றனர்.

தமிழ் இலக்கியங்களில் கரிகாலன் என்னும் பெயரால் இரு மன்னர்கள் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த கரிகாலனே திருமாவளவன் என்றும், கரிகாற் பெருவளத்தான் என்றும் புகழப்படுகின்றான்.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மற்றொரு கரிகாலன் பற்றியும் இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

நாம் இங்குக் கி.பி.முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கரிகாற் பெருவளத்தான் பற்றிச் சிறிது ஆய்வோம். சோழர் வரலாறு கூறத்தொடங்குவோர் இவனையே மையமாகக் கொள்வர்.

கரிகாலன் உருவப் பஃறேர் (பல் +தேர்) இளஞ்சேட் சென்னிக்கும் அழுந்தூர் வேள் மகளுக்கும் பிறந்தவன். இவன் நாங்கூர்வேள் மகளை மணந்தவன். இவனது இயற்பெயர் தெரியவில்லை. கரிகாலன் என்பது காரணப் பெயராகும். அஃது ஆண் யானைகட்கு யமன், தீயினாற் கருகிய காலையுடையயோன் எனப் பல பொருள் படும்.

இவன் இளமைக் காலத்தில் அரசுரிமை குறித்து நாட்டில் குழப்பங்களேற்பட்டன. அதன் விளைவாகப் பகைவர்கள் இவனைச் சிறையிலிட்டு, அச்சிறைக்குத் தீ மூட்டினர். அதிலிருந்து இவன் தப்பியபோது கால் கரிந்து போனதால் கரிகாலன் என அழைக்கப்பட்டான். இதனை 'இளமைப் பருவத்துப் பிறராற் சுடப்பட்டு உயிர்உய்ந்து போகிய கரிகாலன்' என்னும் தொடரால் அறியலாம்.

பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, எட்டுத்தொகையுள் உள்ள சில பாடல்கள், பெரியபுராணம் முதலிய நூல்கள் இவனுடைய பேராண்மையையும், வெற்றிகளையும் பலபடப் பாராட்டிக்

'கருவிலே திருவுடையான்' எனச் சிறப்பிக்கின்றன. ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் வல்லவன் இவனென்று பாராட்டப் பெறுகின்றான்.

இவன் தன் மாமனாகிய இரும்பிடர்த் தலையார் என்பாரின் துணைகொண்டு பகைவரை அழித்து ஆட்சியுரிமையினை மேற்கொண்டான். இவனது கன்னிப்போர், வெண்ணிப்போராகும். இவன் பெருவீரனாதலின் தன்னை எதிர்த்த பாண்டியனையும், சேரனையும், பதினோரு வேளிரையும், வெண்ணிப் பரந்தலையில் நடந்த பெரும்போரில் வெற்றி கொண்டான்.

தனது படை வலிமையினால் வேங்கடம் வரையுள்ள நாடுகளை வென்று மாவீரனாய் விளங்கிய கரிகாலன், வடநாடு சென்று வெற்றி வாகை சூட விழைந்தான். எனவே, பெரும் படைகொண்டு சென்று வட வாரிய மன்னர்களை வென்று, இமயத்தில் புலி பொறித்தான். வச்சிர நாட்டு மன்னனின் முத்துப்பந்தரும், அவந்தி நாட்டு மன்னனின் வாயில் தோரணமும், மகதநாட்டு மன்னனின் பட்டி மண்டபமும் கொண்டு வட நாட்டினின்றும் பெருவெற்றி வீரனாகத் திரும்பியவன் கரிகாலன் என்று 'சிலப்பதிகாரம்' செப்புகின்றது.

வடநாடு சென்ற மாவீரன் கரிகாலன், கப்பற்படையை நன்முறையில் திருத்தியமைத்து, ஈழத்தின் மீது படையெடுத்து வென்று, பன்னீராயிரம் சிங்களவரைச் சோணாட்டுக்குக் கொணர்ந்து, காவிரிக்குக் கரை கட்டினான் என்பதால் இவனைப் 'பொன்னிக் கரைகண்ட பூபதி' என்று முத்தமிழ்ச் செல்வமாம் 'மூவருலா' சிறப்பிக்கின்றது.

கரிகாலன், மாவீரனாக விளங்கியதோடு நாட்டு மக்களைப் பாதுகாத்து, நல்லாட்சி நடத்தி, வாணிகத்தையும், வேளாண்மையையும் பெருக்கி நாட்டை வளப்படுத்தியதால் கரிகாற் பெருவளத்தான் என்றும், திருமாவளவன் என்றும் அழைக்கப்படுகிறான். இவன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கியதாக இலக்கியங்கள் சான்று

பகர்கின்றன.

இவன் அறமுறை பிறழாது ஆட்சி செய்து கலைகளைப் போற்றி வளர்த்துக் கற்றோர்களைப் போற்றிப் பெரும்புகழ் பெற்று விளங்கினான். 'பட்டினப்பாலை' என்னும் காவியத்தை இயற்றிய 'உருத்திரன் கண்ணனார்' என்னும் பெரும்புலவருக்கு இவன் பதினாறு லட்சம் பொன் பரிசளித்தான் என்பதை எண்ணுந்தோறும் தமிழ் நெஞ்சங்களெல்லாம் இன்ப ஊற்றுக்கேணியில் குதிக்கின்றன.

இவனது காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் எத்தகைய சீரும், சிறப்பும், பீடும், பெருமையும் பெற்று விளங்கியதென்பதைச் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் பரக்கக் காணலாம்.

இதுகாறும் கூறியவற்றால் கரிகாற் பெருவளத்தானாகிய திருமாவளவன் எங்ஙனம் சங்க காலத்தில் மாபெரும் மன்னனாகத் திகழ்ந்து, வெற்றிகள் பல பெற்று, நல்லாட்சி நடத்திச் சோழரின் பெருமையை உச்ச நிலைக்குக் கொணர்ந்தான் என்பதைக் கண்டோம். சோழர் குலக்கொழுந்தாகிய இவன் சோழப் பெருமன்னர்களுள் தலையாயவனாகப் போற்றப் பெறுவதனை ஈண்டு நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

கோப்பெருஞ் சோழன்

இச்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னனாவான். இவன் சிறந்த தமிழ்ப் புலவனாகத் திகழ்ந்ததால் பல புலவர் பெருமக்களை அன்புடன் ஆதரித்தான். இவனது காலத்தில் பொத்தியார் எனும் பெரும்புலவர், இவனது அவைக்களப் புலவராக விளங்கினார். இம்மன்னன் நல்லியம்பும் நற்பண்பும் வாய்க்கப் பெற்றவன். இவன் கண்ணகனார், கருவூர் பெருஞ்சதுக்கப் பூதனார், புல்லாற்றூர் எயிற்றியனார், பிசிராந் தையார் போன்ற பெரும்புலவர்களால் பாராட்டப் பெற்ற வனாவான்.

கோப்பெருஞ்சோழனும், பிசிராந்தையாரும், ஒருவருக்கொருவர் நேரில் கண்டு, பேசிப் பழகவில்லையாயினும் உள்ளன்பு கொண்ட, உண்மையான நட்புக்கொண்டிருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கோப்பெருஞ்சோழனுடைய மக்கள் தந்தையைப்போல் உயரிய பண்பு நலன்களைப் பெற்றிலர். இவர்கள் தந்தை உள்ள போதே நாட்டைக் கைப்பற்றி, ஆட்சி செய்யச் சூழ்ச்சி செய்து போர் செய்ய முற்பட்டனர்.

இதைக் கேள்வியுற்ற மன்னன், மக்கள் மீது சினங்கொண்டு, போர்க்கெழுந்த காலை, புல்லாற்றூர் எயிற்றியனாரின் அறிவுரை கேட்டுத் தன் சினந்தணிந்து, ஆட்சிப் பொறுப்பினை மக்கட்கீந்து அரசுரிமையினின்றும், நீங்கி, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான்; தன் நண்பர்களுடன் வடக்கிருந்தபோது, உள்ளன்பு பூண்ட பிசிராந்தையாரும் விரைவில் வருவார் என்று இவன் கூறினான். மன்னன் சொன்னவாறே எவ்வித முன்னறிவிப்புமின்றிப் பிசிராந்தையாரும் அங்கு வந்து சேர்ந்தார்.

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்புத் தமிழகத்தில் உயர்ந்த நட்பிற்கு இலக்கியமாகவும், இலக்கணமாகவும் இன்றும் நின்று நிலவுகின்றது.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாங் கிழமை தரும்

என்னுங் குறட்பாவிற்கு, இவர்களது நடபையோ உரையாசிரியர் பரிமேலழகர் காட்டுகின்றார் எனின், கோப்பெருஞ்சோழனின் பெருமையை என்னென்பது! கோப்பெருஞ்சோழனின் வரலாற்றைப் புறநானூற்றில் சிறக்கக் காணலாம்.

நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும்

நலங்கிள்ளி பெருவீரனாகத் திகழ்ந்தவன்; பாண்டியர்களை வென்றவன்; பெரிய கப்பற்படையும் கொண்டு

பெருமன்னனாகத் திகழ்ந்தவன். கரிகாற் பெருவளத்தான் ஆட்சிக்குப் பின் சோழ மன்னர்கள் உறையூரையும், காவிரிப்பூம்பட்டினத்தையும் தலைநகர்களாக் கொண்டு ஆட்சி புரிந்தனர். அவருள் நலங்கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்தையும், நெடுங்கிள்ளி உறையூரையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இவர்களிடையே பகைமை ஏற்பட்டது; போரும் மூண்டது.

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் ஆவூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். பின்பு நெடுங்கிள்ளி ஆவூர்க்கோட்டையிலிருந்து வெளியேறி உறையூர்க் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். நலங்கிள்ளியும் அவனை விடாது பின் தொடர்ந்து சென்று, உறையூரை முற்றுகையிட்டான். இதனைக் கண்டு மனம் வருந்திய கோவூர்க்கிழார் எனும் புலவர் இவர்களின் பகையை நீக்கி, நட்புச் செய்வித்தார். எனவே, மன்னர்கள் புலவர்களின் அறிவுரையை மதித்துப் பொன்னே போல் போற்றி நடந்தனர் என்பதும், புலவர்கள் மன்னர்களின் நலனில் அக்கறை கொண்டிருந்தனர் என்பதும் புலப்படும்.

நலங்கிள்ளியைப் பற்றிப் பத்துப் பாக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. உறையூர் மதுக்கண்ணன், சாத்தனார், கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார், ஆகிய புலவர் பெருமக்கள் நலங்கிள் ளியின் நலன்களைப் பாராட்டியுள்ளனர்.

கிள்ளி வளவன்

கிள்ளி வளவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழனாவான். இவனைப் புலவர் ஒன்பதின்மர் 18 பாக்களால் பாராட்டியுள்ளனர். இப்பாடல்களால் இவன் மாவீரன், பெரு மன்னன், சிறந்த புலவன், புலவரை போற்றிய புரவலன் என்பதை நாம் அறியலாம்.

இவன் சேர மன்னனுக்கெதிராக மேற்கொண்ட கருவூர்

முற்றுகையும், மலைநாட்டுத் தலைவனான மலையமானுடன் செய்த போரும், பாண்டியர்களுடன் செய்த போரும், குறிப்பிடத்தக்கனவாகும். இவன் குளமுற்றம் என்ற ஊரில் இறந்துபட்டதால், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்று அழைக்கப்படுகிறான்.

இவன் முத்தமிழைப் போற்றி வளரத்துச் சிறந்த ஆட்சி முறையினை மேற்கொண்டு, பெரும்புகழ் பெற்ற சோழ வேந்தனாவான். ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், கோவூர் கிழார், காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், நல்லிறை யனார், எருக்காட்டூர் தாயங் கண்ணனார், நக்கீரர் போன்ற புலவர் பெருமக்கள் இவனைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

கோச் செங்கணான்

சங்க காலத்தின் இறுதியில் சோழ நாட்டில் ஆட்சி புரிந்தவன் கோச் செங்கணான் ஆவன். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவனாக இவன் சிறப்பிக்கப்பட்டான். இவன் சிவ பக்தன். ஆதலால், சிவபெருமானுக்கு எழில் மாடம் எழுபது கட்டினான்.

திருநாவுக்கரசர் முதலியோரும் இவனைப் புகழந்துள்ளனர். திருமங்கையாழ்வார், இவன் திருமாலிடம் கொண்டிருந்த அன்பைப் பாராட்டிப் புகழ்கின்றார். பக்த சிரோன்மணியாக விளங்கிய இம்மன்னன் வீரம் செறிந்தவனாகவும் திகழ்ந்தான்.

கழுமலத்தில் இவனுக்கும் கணைக்கால் இரும்பொறை என்னும் சேரமன்னனுக்கும் நிகழ்ந்த பெரும்போரில் இவன் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. பொய்கையார் என்னும் புலவர் தமது 'களவழி நாற்பது' என்னும் நூலில் இவ்வெற்றியைப் பாராட்டியுள்ளார். இவனது ஆட்சிச் சிறப்பினை அகநானூற்றில் காணலாம். இவன் சங்க காலத்திற்குப் பிற்பட்டவன் என்றும் சிலர் கருதுகின்றனர்.

புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களில் பேரவைக் கோப்பெருநற்கிள்ளி, பெருவிறற்கிள்ளி, ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலிய மன்னர்களைப் பற்றிய சுருக்கமான வரலாறுகள் காணப்படுகின்றன.

இடைக்காலச் சோழர்கள்

வாழ்வும், தாழ்வும் மாறி மாறி வருவது உலக இயற்கை. சங்க காலத்தில் மங்காத புகழ் கொண்டு, ஆட்சி செய்து வந்த சோழ மன்னர்கள் இடைக்காலத்தில் வீழ்ச்சியுற்றனர். ஏறத்தாழக் கி.பி.300 முதல் கி.பி.850 வரை சோழர்களின் வரலாற்றை இருண்ட காலமென்று கூறலாம். இந்த ஆறு நூற்றாண்டு காலத்தில் சோழர்களைப் பற்றிய செய்திகள் நமக்கு முறையாகக் கிடைக்கவில்லை.

கி.பி நான்கு , ஐந்தாம் நூற்றாண்டுகளில், களப்பிரர் என்னும் வலிமைமிக்க கூட்டத்தினர் தமிழக மூவேந்தர்களை வென்று அடிமைப்படுத்தினர். எனவே, இக்காலம் வரலாற்றில் களப்பிரர் இடையீடு (Kalabhra Interregnum) என்று அழைக்கப்படுகிறது.

அச்சுத விக்கந்தன் என்பவன் களப்பிரர் தலைவனாவான். இக்காலத்தில் மங்காத தமிழும் சீர்மை குன்றியது. பல்லவர்கள் சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து மீட்டுத் தம் பேரரசை நிறுவினர். எனவே, இவர்களுடைய ஆட்சிக் காலத்தும் சோழர்கள் அருகிய நிலையில், திறை செலுத்தும் குறுநில மன்னவர்களாகவும், அரசியல் தலைவராகவும் சிறுமையுற்றனர் என்பது தேற்றம். கி.பி.250 முதல் 850 முடிய சோழ நாட்டின் நிலையைப் பற்றிய தெளிவான, முறையான வரலாற்றைக் கணிக்கப்போதுமான சான்றுகள் இல்லை.

சைவ, வைணவ, பௌத்தப் பெரியார்களால் பாடப்பட்ட பத்திப் பாக்களாலும், பல்லவர், சாளுக்கியர், பாண்டியர் முதலியோர்களின் பட்டயங்களிலிருந்தும் கிடைத்துள்ள சொற்பமான ஆதாரங்களைக் கொண்டுதான் , நாம்

சோழர்களின் வரலாற்றை ஒரு சிறிது அறிய முடிகிறது. சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணம் இக்காலத்திய சோழர்களைப் பற்றிய செய்திகளை விளக்கமாகத் தருகின்றது.

இக்காலப் பகுதியில் சோழ மன்னர்கள் உறையூர், பழையாறை, திருவாரூர், கொடும்பாளூர் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இவற்றுள், பழையாறை ஆயிரந்தளி அரண்மனையில் நீண்ட காலம் வாழ்ந்தனர். எனினும் இவர்கள் குடத்திலிட்ட விளக்குப்போல்தான் விளங்கினர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும், ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தவரென்று எண்ணப்படுபவருமான தண்டியடிகள் தம் காலத்துச் சோழ மன்னனை நடுவனாக வைத்துத் தாம் இழந்த கண்களைச் சிவனருளால் பெற்றார் என்ற செய்தி பெரிய புராணத்தில் கூறப்படுகின்றது.

நாயனார் அறுபத்து மூவருள் ஒருவரான புகழ்ச் சோழரைப் பற்றிய செய்திகளையும் சேக்கிழார் பெருமான் குறிக்கின்றார். புகழ்ச் சோழர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். இவர் சிறந்த சிவநெறிச் செல்வராக விளங்கினார். இவர் தமக்குத் திறை செலுத்த மறுத்த அதிகமானின் மீது போர் மேற்கொண்டார். இப்போரில் புகழ்ச் சோழர் வெற்றி பெற்றார். இருப்பினும் இப்போரில் சிவனடியார் ஒருவரைத் தாம் கொன்றுவிட்டதாக எண்ணித் தீயில் மூழ்கி இறந்தார் என்ற செய்தியைப் பெரியபுராணம் கூறுகின்றது.

அப்பரடிகள் என்று போற்றப்படும் திருநாவுக்கரசரும், தமிழ் ஞானசம்பந்தரும் , ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்த பெருமக்களாவர். அப்பரடிகள் தம் காலத்தில் பழையாறையில் மணிமுடிச் சோழன் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகின்றார். தமிழ் ஞானசம்பந்தர் தேவாரப் பதிகத்தில் மணிமுடிச் சோழனின் மகளாகிய மங்கையர்க்கரசி பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தர மூர்த்திகள் பாடிய

பாக்களிலும், கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலாண்ட மூன்றாம் நந்திவருமப் பல்லவன் காலத்தில் பாடப்பெற்ற நந்திக் கலம்பகத்திலும், சின்னமனூர்ச் செப்பேடுகளிலும், சோழ மன்னர்களைப் பற்றிய சில செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. எனவே, மேற்கூறிய சான்றுகளால் வலிமை மிக்க களப்பிரர் காலத்திலும், பல்லவர்கள் காலத்திலும் ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளாகச் சிற்றரசர்களாக விளங்கினரேயன்றி அழிந்துவிடவில்லை என்பதை உணரலாம்.

பிற்காலச் சோழர் (கி.பி. 846-1070)

தமிழக வராற்றில் பிற்காலச் சோழர் காலம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏறத்தாழக் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாகப் புகழ் மங்கித் தாழ்ந்து கிடந்த சோழர்கள் மறுமலர்ச்சி பெற்று விழித்தெழுந்ததற்குப் பிற்காலச் சோழராட்சியே காரணமாகும்.

பாண்டியரையும், சோழரையும் தம்மடிமைப்படுத்தி ஆண்டு வந்த பல்லவர்களின் பேரரசு இக்காலத்தில் சரியத்தொடங்கிற்று. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேலைச் சாளுக்கியர் பல்லவர்களை வடக்கிலிருந்து இடைவிடாது தாக்கினர். தெற்குப் பகுதியிலிருந்து பாண்டியர்கள் பல்லவர்களைத் தாக்கக் காத்திருந்தனர். இராட்டிரகூட மன்னர்களும் பல்லவர்களுடன் பகைமை பூண்டு, பல்லவர் பேரரசின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால், சோழ நாட்டில் பல்லவராட்சி தளர்ச்சியடைய ஆரம்பித்தது.

முத்தரையர் என்னும் மன்னர்கள் பல்லவர்களின் சிற்றரசர்களாகத் தஞ்சாவூர், திருச்சி, பழைய புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகிய நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் தஞ்சை, வல்லம் , செந்தலை (சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்) ஆகியவற்றைத் தலைநகர்களாகக் கொண்டு ஆண்டு வந்தனர் என்பதைச் செந்தலைக் கல்வெட்டால் அறியலாம்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பெரும்பிடுகு முத்தரையன் ஒரு புகழ் பெற்ற மன்னனாவான். இவன் 'தஞ்சைக்கோன்' , என்றும் 'தஞ்சை நற்புகழாளன்' என்றும் கல்வெட்டுகளால் புகழப்பட் டுள்ளான். மறக்குடியினரான முத்தரையர் வள்ளண்மை மிக்கவர் என்பதைப் 'பெருமுத்தரையர் பெரிது வந்தீயும் கருணைச் சோறு' என்ற நாலடியார் பாடலால் உணரலாம். இவர்கள் பாண்டியர்களை வென்றதாகவும் செந்தலைக் கல்வெட்டுக் கூறுகின்றது.

பல்லவர்கள் ஒன்பதாம் நூற்றாண்டில் வலிமை குன்றியதால் சோழர்கள் தஞ்சையைக் கைப்பற்றக் காலம் கருதியிருந்தனர். இப்பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தி, முத்தரையரை வென்று, தஞ்சையைக் கைப்பற்றிச் சோழர்களின் இழந்த பெருமையை மீட்ட பெருமை விசயாலயனைச் சாரும்.

இக்காலச் சோழர்கள் கால அடிப்படையில் பிற்காலச் சோழர்களென்றும், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டதனால் தஞ்சைக் சோழ வமிசமென்றும் , விசயாலயனால் தோற்றுவிக்கப் பட்டதால் விசயாலய சோழ வமிசமென்றும் அழைக்கப்படுகின்றனர்.

இப்பிற்காலச் சோழர்கள் (Later Cholas) வரலாற்றுச் சோழர்கள் எனவும் பெருஞ்சோழர்கள் (Great Cholas) எனவும் ஏகாதிபத்தியச் சோழர்கள் (Imperial Cholas) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

விஜயாலய சோழன் (கி.பி. 846-881)

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பழையாறைப் பகுதியைச் சோழர்களும், தஞ்சைப் பகுதியை முத்தரையர்களும் பல்லவப் பேரரசுக்குட்பட்ட குறுநில மன்னர்களாக ஆண்டு வந்தனர். சோழர் தலைவனான விசயாலாய சோழன் தனது ஆதிக்கத்தினைத் தஞ்சையின்மீது செலுத்தப் பேரவாக் கொண்டான். அது போழ்து தஞ்சைப் பகுதியை விடேல்விடுகு முத்தரையன் குவாவன் சாத்தன் மகன்

சாத்தன் பழியிலி (Sattan Paliyili-C.A.D 826-C.851) என்பான் ஆண்டு வந்தான்.

சாத்தன் பழியிலி தன் முன்னோர்களைப் போல் பெரும் பிடுகு, விடேல்விடுகு, மார்ப்பிடுகு போன்ற விருதுகளைச் சூட்டிக்கொள்ளவில்லை. ஆதலின், அவன் பல்லவரின் ஆதிக்கத்தி லிருந்து விடுதலை பெற்றுத் தனித்தாண்டிருக்க வேண்டுமென்பதனை உய்த்துணரலாம். இக்கருத்தினை நார்த்தாமலைக் கல்வெட்டினாலும் அறியலாம்.விசயாலயன் சாத்தன் பழியிலியை வென்று தஞ்சையைக் கைப்பற்றி, அதனைத் தனது தலைநகராக்கிச் சோழ அரசினை நிறுவினான்.

இவன் கடைச்சங்க காலத்தில் சோணாட்டினையாண்ட கிள்ளிவளவன், கரிகாலன், செங்கணான், நல்லடி ஆகிய சோழர் மரபில் தோன்றியவன் என்பதை அன்பில், ஆனைமங்கலம், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட் டகளும் கூறுகின்றன.

இவன் கடைச்சங்கச் சோழரின் வழித்தோன்றல் என்பதை 'மூவருலா' , 'கலிங்கத்துப் பரணி' ஆகிய நூல்களினாலும் அறியலாம்.

விசயாலயன் 'பரகேசரி' பட்டத்துடன் அரியணையேறியதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ராஜகேசரி, பரகேசரி என்ற பெயருடைய இரு பெருஞ்சோழ மன்னர்கள் முற்காலத்தில் ஆட்சி புரிந்ததாகப் பண்டைச் செப்பேடுகள் சான்று பகர்கின்றன. பண்டைக் கால மக்களிடையே இவ்விருவர் பெயர்களும் நல்ல செல்வாக்கினைப் பெற்றிருந்தன. பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் முன்னோர்களின் பெயரினைத் தங்கள் குழந்தைகட்குச் சூட்டி மகிழ்ந்தனர் ; அதில் பெருமையும் கொண்டனர். தம் முன்னோர்களின்மீது பெருமதிப்பு வைத்திருந்த வைத்திருந்த பிற்காலச் சோழர்கள் தங்கள் பெயர்களுக்கு முன்னர் ராஜகேசரி, பரகேசரி என்ற பட்டங்களை ஒருவர்பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்துகொள்வது

வழக்கமாயிற்று. தந்தை 'ராஜகேசரி' பட்டம் புனைந்துகொண்டால் மகன் 'பரகேசரி' பட்டத்தினைப் புனைந்துகொள்வான். இதனால், இம்மன்ன னுக்குப்பின் இன்னவன் ஆண்டான என்னும் முறைமையும், மரபு தொடர்ச்சியும் இனிது விளங்குகின்றன. இவை ஆராய்ச்சியாளர்கட்கும், வரலாறு கற்போருக்கும் பெருந்துணை புரிகின்றன.

இவன் நெடுந்தோற்றமும் , உடற்கட்டும், மேனியழகும், ஆற்றலும், கலைப்பயிற்சியும், நிர்வாகத் திறனும் ஒருங்கே பெற்றிருந்த மாவீரனாவன். வன்மை மிக்க முத்தரையர்களை வென்று, பல்லவர்க்கு அடங்கியிருந்த நிலையினின்றும் தன்னைப் பெருமளவில் உயர்த்திக்கொண்டு, தமிழக வரலாற்றின்கண் புகழ் மிக்கதொரு பேரரசர் பரம்பரையைத் தொடங்கி வைத்த விசயாலய சோழன் ஆற்றல் மறவனாகப் புகழ் பூத்து விளங்கியமை போற்றுதற்குரியதாகும்.

பரகேசரி விஜயாலயன் ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆண்டான். இவன் சோழப் பேரரசை உருவாக்கிய முதல்வனாகலின் தனது பேரரசை நிலைநாட்டப் பகைவர்களுடன், இடைவிடாது போர் பல செய்ய வேண்டுவதாயிற்று. 'விழுப்புண் படாத' நாள்களை வீண் நாளாகக் கருதிய மாவீரன் விசயாலயன். இவன் தனது மேனியில் தொண்ணூற்றாறு விழுப்புண்களைப் பெற்றிருந்தான். 'புண் கொண்ட வென்றிப் புரவலன்' என மூவருலாவும் இவனைச் சிறப்பித்துள்ளது.

இவன் முத்தரையரை வென்ற வெற்றிச் சின்னமாகத் தஞ்சையில் நிசும்ப சூதனி என்னும் பெயருடன் துர்க்கைக்கு ஒரு கோயில் அமைத்தான். வட புலத்திலிருந்த பல்லவர்கட்கும் , தென்புலத்திலிருந்த பாண்டியர்கட்கும் தமிழகத்தில் தம் தம் ஆதிக்கத்தை நிறுவும் நோக்கத்தோடு கி.பி.854 ண்ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமூக்குப் போரிலும் , கி.பி 862ஆம் ஆண்டில் நடை பெற்ற அரிசிலாற்றங்கரைப் போரிலும் விசயாலயன்

பல்லவர்க்குத் துணை புரிந்திருக்க வேண்டுமென்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

கி.பி. 871-ல் விசயாலயன் தன் மகன் முதலாம் ஆதித்தனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான். கி.பி.880 இல் திரும்புறம்பியத்தில் பல்லவர்கட்கும், வரகுண பாண்டியனுக்கும் நிகழ்ந்த போரில் விசயாலயன் மகன் முதலாம் ஆதித்தன் பல்லவர்க்குத் துணை புரிந்தான். இரு திறத்தாரும் கடும்போர் புரிந்தனர். குருதியாறு ஓடிற்று. இக்குறுதிப் பெருக்கைத் தாங்கிய இடம் இன்றும் 'உதிரப்பட்டி' என்னும் பெயரால் அழைக்கப்பெறுகிறது. ஆதித்தன் தன் பேராண்மையை நிலை நாட்டி, வெற்றி பெற்றுச் சோழர் புகழை நிறுவினான்.சோழர் வரலாற்றில் மட்டுமன்றித் தமிழக வரலாற்றிலும் திருப்புறம்பியப் போர் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இப்போர் தமிழக வரலாற்றில் ஒரு புதிய காலக் கட்டத்தை உருவாக்கி, வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. இப்போர் பாண்டியன் நெடுஞ்செழியன் வென்ற தலையாலங்கானப் போருடனும், கரிகாற் பெருவளத்தான் வென்ற வெண்ணிப் போருடனும் , முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் மேற்கொண்ட முதலாம் பானிப்பட்டுப் போருடனும், ஆங்கிப் பேரரசை இந்தியாவில் நிலை நாட்ட, இராபர்ட் கிளைவ் செய்த பிளாசிப் போருடனும், ஒப்புமை கூறத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இப்போரின் விளைவாகச் சோழர் முடி மன்னராகிச் சோழ மண்டலம் முழுமையும் தமது பேராண்மைக்கு உட்படுத் தியாளும் பெருவாய்ப்பைப் பெற்றனர். சோழ நாட்டில் பாண்டிய மன்னர்களின் ஆதிக்கத்திற்குச் சாவு மணி அடிக்கப்பட்டது. பல்லவர்களின் வலிமையும் குன்றியது. கடந்த ஆறு நூற்றாண்டுகளாக, மங்கியதோர் நிலவாகக் காட்சி தந்த சோழராட்சி மீண்டும் செங்கதிர் பரப்பும் வெங்கதிரோன் போல் எழுச்சி பெற்றது. இருண்டுவிட்ட வானத்தில் தோன்றிவிட்ட விண்மீன்கள் விடிந்துவிட்ட வானத்தில் மறைந்துவிட்டது போல்

பாண்டிய பல்லவராட்சி சோழ நாட்டில் மறைந்துவிட்டது.

இவ்விதம் விசயாலயன் சோழர்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டான். இவனைப் பரகேசரி வருமன் விசயாலய சோழதேவன் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது. சென்றவிடமெல்லாம் செருவென்று வெற்றி வீரனாகத் திகழ்ந்ததனால் இவன் 'விசயாலயன்' என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும்.

சாத்தம்புதீஸ்வரம் (விஜயாலய சோழீசுவரம்)

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நார்த்தா மலையில் இரு கற்றளிகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று விசயாலய சோழனால் கட்டப்பெற்று 'விசயாலய சோழீசுவரம்' எனப் பெயர் பெற்றது என்று வரலாற்றுப் பேரறிஞர்கள் பலர் கூறியுள்ளனர். ஆனால், அண்மைக்கால ஆராய்ச்சியின்படி இது முத்தரையர் எனும் சிற்றரசர்களால் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. முத்தரையர் பல்லவர்களின் கீழ்ச் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்ததை முன்பே கண்டோம்.

நார்த்தா மலையின்மீது இரண்டு குடைவரைக் கோயில்கள் காணப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்று பழியிலியீசுவரம் என அழைக்கப்படுகிறது. இது விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தன்பழியிலி என்பவனால் குடையப் பெற்றதென்று சாசனத்திற் குறிக்கப்பெற்றுள்ளது. இவன் முத்தரையன் என்பதை இவனது பெயரைக் கொண்டும், கல்வெட்டைக் கொண்டும் அறியலாம்.

பழியிலியீசுவரத்திற்கு எதிரே ஒரு கற்றளி உள்ளது. இது தான் விசயாலய சோழீசுவரம் என அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் எதிரிலுள்ள பாறை ஒன்றில், மாறவருமன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டொன்று காணப்படுகிறது. பதின் மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு இக்கோயிலை 'விசயாலய சோழீசுவரம்' எனக் குறிக்கின்றது. இப்பாண்டியனது

காலத்தில் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட பெயரினையே இக்கல்வெட்டுக் குறிப்பதாகக் கொள்வதுதான் பொருத்தமுடைத்து. இது பிற்காலத்தைச் சார்ந்த கல்வெட்டு என்பது யாவரும் அறிந்ததே.

இக்கோயில் வாயிலின் இடப் பக்கத்திலுள்ள வாயிற் காப்போன் (துவார பாலகர்) சிலையின் அடியிலுள்ள கல்வெட்டு, 'செம்பூதி என்னும் இளங்கோவதியரையனால் கட்டப்பட்ட இக்கற்றளி, பெரு மழையின்போது ஏற்பட்ட பேரிடியால் அழிக்கப்பட்டபின், மல்லன் விதுமன் என்னும் தென்னவன் தமிழதியரையன் என்பவனால் புதுப்பிக்கப்பட்டது' என்று குறிக்கின்றது.

இதன் கல்வெட்டு வாசகத்தைக் காண்போம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ செம்பூதியான இளங்கோவதியரையர் எடுப்பித்த கற்றளி மழை இடித்தழிய மல்லன் விதுமன் ஆயின தென்னவன் தமிழதியரையன் புதுக்கு...

இக்கோயில் கட்டப்பெற்ற காலத்தில், இக்கோயிலிலேயே எழுந்த கல்வெட்டில் இது 'விசயாலய சோழீசுவரம்' எனக் குறிக்கப்பெறவில்லை. இக்கோயிலைக் கட்டிய செம்பூதியான இளங்கோவதியரையன் என்னும் முத்தரையன் பல்லவ மன்னனான இரண்டாம் நந்திவருமனின் காலத்தவன் என்பது ஆராய்ச்சியாளர் கூற்றாகும். மேலும், மல்லன், தமிழதி, அரையன் ஆகிய சிறப்புப் பெயர்கள் முத்தரையர்களைக் குறிப்பதேயாகுமென்பது பழியிலியீசுவரக் குடைவரைக் கல்வெட்டால் அறியலாம்.

மேற்கூறியவற்றால் இக்கோயில் இளங்கோவதி அரையன் என்னும் முத்தரையனால் கட்டப்பெற்றுத் தென்னவன் தமிழதி அரையனால் புதுப்பிக்கப்பெற்றது என்றும், இதனை 'விசயாலய சோழீசுவரம்' என அழைப்பது அத்துணைப் பொருத்தமாகத் தெரியவில்லை என்றும் அறியலாம்.

முதலாம் ஆதித்த சோழன் (கி.பி. 871-890)

பரகேசரி விசயாலயன் மாண்டபின் ராஜகேசரி என்ற பட்டத் துடன் கி.பி.871 இல் முதலாம் ஆதித்த சோழன் அரியணையேறினான். இவனுக்குக் கோதண்டராமன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இவன் சேர மன்னனுடனும், கங்கை மன்னனுடனும் நட்புக்கொண்டு, துணை வலியையும், படை வலியையும் பெருக்கிப் பல்லவ மன்னனான அபராசித வருமனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினான்.

கொங்கு மண்டலத்தை வென்று, அங்கிருந்து கொணர்ந்த பசும்பொன்னைக் கொண்டு, தில்லைச் சிற்றம்பல முகட்டை அழகுபடுத்தினான் என்பதைச் 'சிற்றம்பல முகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்' என்று நம்பியாண்டார் நம்பி தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிட்டுள்ளதால் இனிது விளங்கும்.

பகைவர்களை வென்று, தனது பேரரசினை விரிவுபடுத்திய ஆதித்தன் சமயத்தொண்டிலும் நாட்டம் கொண்டான். காவிரியாற்றின் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளியாக மாற்றிப் புகழ் பெற்றான். இவன் பல்லவர்களுடன் திருமண உறவு வைத்துக்கொண்டான்.

கோஇளங்கோ முத்தரையனின் புரட்சி

இவனை பூதிகளரி என்ற அமரூன்றி முத்தரையனின் மகன் என்று முத்தரையர் வரலாற்று அறிஞர்களான புதுகை பு.சி.தமிழரசனும் பெ.ராமலிங்கமும் குறிப்பிடுகின்றனர். தஞ்சையை சோழர்களிடமிருந்து மீட்க பூதிகளரி பெருமுயற்சி செய்தும் முடியவில்லை. ஆனால், பூதிகளரியின் மகனான இளங்கோ முத்தரையன் (கி.பி. 891 - 909) ஆதித்த சோழனின் இறுதிக் காலத்தில் சோழருக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தி கும்பகோணம் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான்.

முத்தரையரின் சுதந்திர ஆட்சியைப் பிரகடனப்படுத்தினான். இந்தப் புரட்சித் தலைவனின் கல்வெட்டுகள் தஞ்சை வட்டம் திருச்சாத்துரையிலுள்ள ஆதவனேசுவரர் கோயிலிலும் திருச்சென்னம்பூண்டியிலும் கும்பகோணம் வட்டம் திருக்கோடிக்காவல் திருக்கோட்டீசுவரர் கோயிலிலும் செந்தலை சுந்தரேசுவரர் கோயிலிலும் புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் உத்தமதானீசுவரர் கோயிலிலும் காணப் படுகிறது. இருபது ஆண்டு காலம் இவன் சுதந்திர வேந்தனாகக் கொடிகட்டிப் பறந்தான்.

ஆதித்தசோழனின் 27-ம் ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் (898) ஏறத்தாழப் பத்தாண்டு காலம் இவன் கல்வெட்டுகள் தஞ்சைப் பகுதியில் காணப்படவில்லை. இந்தக் கால கட்டம் சோழர்களுக்கு இலையுதிர் காலம். ஆதித்தசோழனின் ஆட்சி மறைந்தது. இந்தப் பத்தாண்டு கால சோழர் கல்வெட்டுகள் எங்கேயும் காணப்பட வில்லை என்று கல்வெட்டு அறிஞர்களான திரு. கே.ஜி.கிருஷ்ணனும் எஸ்.சுவாமிநாதனும் குறிப்பிட்டு இருப்பது இங்கே நினைவுகூரத் தக்கது. முத்தரையரின் மறுமலர்ச்சியை ஆதித்தனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனவே, இவன் முத்தரையர்களுடன் சமாதானம் செய்துகொண்டு நட்புறவு கொண்டதாகத் தெரிகிறது.

இளங்கோ முத்தரையன் வாராகிக்கு தஞ்சையில் கோயில் எடுத்துச் சிறப்பித்தான். தன் விருதுப் பெயரான 'உத்தமதானி' நினைவாக கீரனூரிலும் (புதுக்கோட்டை மாவட்டம்) கீழத்தானியத்திலும் உத்தமதானீசுவரம் கோயிலைக் கட்டுவித்தான். கால வெள்ளத்தில் வாராகிக் கோயில் அழிந்ததால் அங்கே இருந்த சிலை தஞ்சைப் பெருங்கோயிலின் தென்புறம் உள்ள சிற்றாலயம் ஒன்றில் எழுந்தருளப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது

இவனுக்கு இரு மனைவியரும், இரு மக்களும் இருந்தனர். இவன் பராந்தகனுக்கு அரியணையை அளித்து கி.பி. 907-ல்

'தொண்டைமானாற்றூரில் இறந்துபட்டதால் தொண்டை மானாற்றூரில் துஞ்சிய தேவர்' என்றழைக்கப்படுகிறான்.

முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-953)

முதலாம் பராந்தகன் பரகேசரி பட்டத்துடன் கி.பி.907இல் அரசுகட்டில் ஏறினான். இவன் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் பகைவர்களுடன் போர் செய்து சோழநாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தினான். இவன் கி.பி.910இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து ராஜசிம்ம பாண்டியனை வென்று 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்னும் பட்டத்தினைப் பெற்றான். பாண்டிய மன்னன் இலங்கை வேந்தனாம் ஐந்தாம் காசிபனிடம் அடைக்கலம் புகுந்தான். ஈழப்படையின் துணையுடன் மறுமுறையும் முதலாம் பராந்தகனுடன் வெள்ளூரில் போரிட்டுத் தோல்வியடைந்து மறுபடியும் இலங்கைக்கு ஓடினான்.

ஈழ நாட்டில் பாண்டியன் அடைக்கலமாக வைத்துச் சென்ற, மன்னர் முடியினைக் கவரவேண்டி முதலாம் பராந்தகன் ஈழப்படையெடுப்பை மேற்கொண்டான். ஈழநாட்டின் வடபகுதி சோழ அரசுடன் இணைக்கப்பட்டபோதிலும் பராந்தகனால் முடியைக் கவர முடியவில்லை. இவ்வெற்றியின் அறிகுறியாக முதலாம் பராந்தகன் 'மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வருமன்' என்னும் விருதினையும் பெற்ற மதுரையில் முடிசூட்டிக்கொண்டான்.

சோழ மண்டலத்தையும், பாண்டிய மண்டலத்தையும் ஆண்டதால் இவன் 'இருமடிச்சோழன்' என்னும் பட்டத்தினையும் பெற்றான். இவன் பாண்டிய மன்னனை வென்று மதுரையைச் சுட்டு பாழாக்கினமையின் 'மதுராந்தகன்' என்றும், சிங்கள வேந்தனைக் கொன்றமையின் 'சிங்களாந்தகன்' என்றும் பெயர் பூண்டான்.

இராட்டிரகூட மன்னனாகிய இரண்டாம் கிருட்டிணதேவன் தன்

மகள் இளங்கோப்பிச்சியை முதல் ஆதித்த சோழனுக்கு மணம்செய்து கொடுத்தமையால் சோழரும், இராட்டிரகூடரும் நெருங்கிய உறவினாற் பிணிக்கப்பட்டிருந்தனர்.

பின், இராட்டிரகூட மன்னன் இரண்டாம் கிருட்டிண தேவனுடைய பேரனின் மகன் நான்காம் கோவிந்தனுக்குப் பராந்தகன் தன் மகள் வீரமா தேவியை மணம் செய்துகொடுத்தான். இராட்டிரகூட மன்னனாய் முடிசூடி அரசு செலுத்திய நான்காம் கோவிந்தன் அரசுமுறை பிறழ்ந்து அரசாளவே, அரசாங்க அலுவலர்களும் , குறுநில மன்னர்களும், பொதுமக்களும் வெறுக்கக்கூடிய நிலை ஒன்று ஏற்பட்டது.

அக்காலை உள்நாட்டில் குழப்பமும், கலகமும் உண்டாயின. இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி நான்காம் கோவிந்தனின் சிறிய தந்தை மகன் மூன்றாம் கிருட்டிண தேவன் இவனை அரசு கட்டிலினின்றும் ஓட்டிவிட்டான். அரசிழந்த நான்காம் கோவிந்தன், தன் தேவியோடு தன் மாமனார் வீட்டிற்கு (தஞ்சை) வந்து தங்கியிருந்தான். இதன் காரணமாக மூன்றாம் கிருட்டிண தேவனுக்கும், பராந்தகனுக்கும் பெரும்பகை மூண்டது. பராந்தக சோழன் தன் மருமகன் மீண்டும் அரசுரிமை பெரும் பொருட்டுக் கி.பி.939ஆம் ஆண்டிறுதியில் இராட்டிரகூட நாட்டில் பெரும்போர் நிகழ்த்தியும், தோல்வியுறவே மூன்றாம் கிருட்டிண தேவன் பராந்தகனுக்குப் பெரும்பகைவனானான். இப்போரில் கங்க நாட்டு மன்னனும், மூன்றாம் கிருட்டிண தேவனின் தமக்கை கணவனுமான பூதுகன் என்பான் பெரும்படையுடன் சென்று மூன்றாம் கிருட்டிண தேவனுக்குப் பேருதவி புரிந்தான்.

பின் சினந்தணியாத மூன்றாம் கிருட்டிண தேவன் பத்தாண்டு காலம் தன் படைகளைப்பெருக்கி வந்து 949இல் தக்கோலம் என்னுமிடத்தில் (அரக்கோணத்திற்குக் கிழக்கே ஆறு கல் தொலைவு) பராந்தகனது பெரும் படையுடன் பெரும் போர் செய்து, வெற்றிகொண்டு, தொண்டை நாட்டின் சில பகுதிகளைத் தன்னாட்சியின் கீழ்க் கொணர்ந்தான்.

இப்போரிலும் மூன்றாம் கிருட்டிண தேவனுக்குப் பெரும் படையுடன் சென்று கங்க மன்னன் பூதுகன் உதவி புரிந்தான். சோழர் படையை நடத்திச் சென்றவன் பராந்தகன் மகன் ராஜாதித்தனாவான். இவன் யானையின் மீதிருந்து போரிடும் காலை பூதுகனால் எய்யப்பட்ட அம்பு ஒன்று இவனைக் கொன்றதால் 'யானைமீது துஞ்சிய தேவன்' என அழைக்கப்பெற்றான்.

முதல் பராந்தகன் சிவநேயர் செல்வனாயிருந்து திருவிடை மருதூர், திருவாடுதுறை ஆகிய ஊர்களிலிருந்த சிவன் கோயில்களைக் கற்றளியாக மாற்றினான். தில்லைப் பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்து,

'கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்

காதலால் பொன்வேய்ந்த காவலன்'*

(*விக்கிரம சோழனுலா - வரிகள் 31.32.)

என்று ஒட்டக்கூத்தரால் பாராட்டப்பட்டான். இவன் தலை சிறந்த ஆட்சியாளன் என்பதை உத்திரமேரூர்க் கல்வெட்டால் அறியலாம்.

'சோழசிகாமணி' , 'சூரசிகாமணி' , 'சமர கேசரி' , 'விக்கிரம சிங்கன்' , 'சுங்கிராம ராகவன்' , 'சோழ குலப் பெருமானார்' , 'வீர நாராயணன்' , 'வீர சோழன்' , 'பண்டித வத்சலன்' , 'குஞ்சர மல்லன்' போன்ற விருது பெயர்களும் இவனுக்குண்டு என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இவன் கி.பி.953இல் இறந்தான். வடக்கே காளத்தியிலும், தெற்கே சுசீந்திரத்தும், மேற்கே கருவூருக்கு அருகில் சோமூரிலும் இவன் சாசனங்கள் காணக் கிடைத்தலால், இவன் காலத்தில் சோழப் பேரரசு பரந்து விரிந்ததாகத் திகழ்ந்தது என்பதை அறியலாம்.

கண்டராதித்தன் (கி.பி. 950-958)

இவர் பிற்காலச் சோழ மரபின் ஐந்தாவது மன்னர். 'யானைமேல் துஞ்சிய தேவன்' ராஜாதித்தனது இறப்பால் மன முடைந்த பராந்தகன் கி.பி. 950-ல் கண்டராதித்தனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். இவன் இராககேசரி வருமன் பராந்தகன் கண்டராதித்தன் என்னும் பெயருடன் அரியணையேறினான்.

இவன் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியினை உயிராகப் போற்றித் தமிழ்ப் புலமையில் தலை சிறந்து விளங்கினான். தில்லை கூத்தன் மீது செஞ்சொற் கவிமழை பொழிந்தான். இவை சைவத் திருமறைகளுள் ஒன்றான ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று,

'சீரான் மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத்து ஆடி தன்னைக்

காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர் கோன் கலந்த

ஆரா இன்சொல் கண்டரா தித்தன் அருந்தமிழ் மாலை வல்லார்

பேரா உலகில் பெருமை யோடும் பேரின்பம் எய்து வாரோ'*

(* திருவிசைப்பா - கோயிற் பதிகம் - பா. 10.)

சிவஞான கண்டராதித்தனாகப் போற்றப்படும் இவன் எம்மதமும் சம்மதம் என்னும் பரந்த கொள்கையைப் பின்பற்றினான். இவன் தனது பெயரால் அரியலூர் மாவட்டத்தில் திருமழபாடிக்கு அருகில் கொள்ளிடத்தின் வடகரையில் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை அமைத்து, ஆங்குத் திருமால் கோட்டம் ஒன்றையும் தோற்றுவித்தான்.

இவன் மழவரையன் மகள் செம்பியன் மாதேவியை மணந்து கொண்டான். செம்பியன் மாதேவியும் , சிவன்மீது மிகுந்த பற்றுடையவளாகத் திகழ்ந்தாள். இம்மாதேவியின் பெயரால் கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்திற்கு மேற்கே இண்டு கல்

தொலைவில் கொள்ளிடத்தின் வடகரையில் 'செம்பியன் மாதேவிக்குடி' என்ற ஓர் ஊரும் காணப்படுகிறது. இவனுக்கு 'வீர நாராயணி' என்னும் மற்றொரு மனைவியும் உண்டு.

அரசியல் துறையில் இவரது காலம் சிறப்புடையதன்று. இவன் காலத்தில் வீர பாண்டியன் என்னும் மன்னன், பாண்டிய நாட்டில் தன்னுரிமை எய்தித் தனியாட்சி செலுத்தினான். தொண்டை மண்டலமும் திருமுனைப்பாடி நாடும் மூன்றாம் கிருட்டிணனுக்கு உட்பட்டிருந்தன. கண்டராதித்தன் காலத்தில் சோழப் பேரரசு விரிவடையாது சுருங்கியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டராதித்தர் கி.பி. 958-க்குப் பின்னர் அரச பதவியைத் துறந்து, துறவியாகி சிவஞானச் செல்வராக வாழ்ந்து 974-ல் சிவன் சீரடி சேர்ந்தார். அரியலூர் மாவட்டம் கண்டராதித்தத்தின் மேல்புறமும் வைத்தியநாதபுரத்துக்குக் கீழ்ப்புறமும் இலந்தக் கூடத்துக்குத் தென்புறமும் செம்பியன் மாதேவி பேரேரி என்னும் மபெரும் பாசன ஏரி இருந்தது. இது இன்று தூர்ந்து இருக்கிறது. இந்த ஏரியின் கிழக்குக் கரையில் கி.பி. 984-ல் உத்தமசோழன் காலத்தில் சிவலோகநாதர் கோயில் கட்டப்பட்டது. அது இன்று சொக்கநாதர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. உத்தம சோழனிடம் அதிகாரியாகப் பணிபுரிந்த செம்பர் அருளன் உத்தம நிதியான உத்தமசோழ மூவேந்த வேளான் இதைக் கட்டுவித்துள்ளார். (இல.தியாகராஜன், 'கண்டராதித்தம்' பெயரில் சிறு கையேடு). உத்தமசோழன் காலத்திய கோயில் கி.பி. 1093-ல் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. உத்தமசோழன் காலத்திய கோயில்களுள் இதுவும் ஒன்று.

கண்டராதித்தனுக்குச் செம்பியன் மாதேவிபால் மதுராந்தகன் என்னும் அருமந்த மகன் ஒருவன் பிறந்தான். இவனே உத்தம சோழன் என்று அழைக்கப்பெறுகிறான். இவன் சிறுவனாதலின் கி.பி. 954-ல் கண்டராதித்தன் தன் தம்பியாகிய அரிஞ்சயனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான்.

அரிஞ்சய சோழன் (கி.பி. 956-957)

கண்டராதித்தனுக்குப்பின் அவன் தம்பி பரகேசரி அரிஞ்சயன் கி.பி.954இல் ஆட்சியை மேற்கொண்டான். இவன் வைதும்ப மன்னனின் மகளாகிய கலியாணியை மணந்துகொண்டான். இவனுக்குப் பராந்தகன் என்னும் மகனும், அரிஞ்சிகைப் பிராட்டி என்னும் மகளும் இருந்தனர்.

இவன் வைதும்பருடனும் , வாணர் குலத்துடன் திருமண உறவு வைத்துக் கொண்டு இராட்டிர கூடர்களின் வலிமையைக் குறைத்தான். இவன் தொண்டை நாட்டைக் கைப்பற்றவும் முயற்சிகள் செய்தான். இவன் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆற்றூரில் இறந்ததால் 'ஆற்றூர் துஞ்சிய தேவர்' என்று குறிப்பிடப்படுகின்றான்.

இரண்டாம் பராந்தகன் (கி.பி. 957-970)

அரிஞ்சயனுக்குப் பின்னர் அவன் மகன் இரண்டாம் பராந்தகன் ராஜகேசரி சுந்தர சோழன் என்னும் பெயருடன் கி.பி. 957இல் அரசு கட்டிலேறினான். இவன்மிக்க அழகுடன் திகழ்ந்ததால் சுந்தர சோழனென்று அழைக்கப்பட்டான். இவன் தன் ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே தன் மகன் கரிகாலன் என்றழைக்கப்படும் ஆதித்தனை ஆட்சியில் ஈடுபடுத்தினான். இவன் பழையாறை நகரிலிருந்து ஆட்சி புரிந்தான்.

இவன் வீர பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனைக் கி.பி. 962-ல் 'சேவூர்ப்' போரில் வென்று காட்டிற்கு விரட்டினான். எனவே, இவன் 'மதுரை கொண்டான்' என்றும் 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் அழைக்கப் பெறுகின்றான். இரண்டாம் முறையாகச் சோழப் பட்டத்திளவல் ஆதித்த கரிகாலன் தலைமையிலான படை, பாண்டியரை வென்று, வீரபாண்டியரைக் கொன்றதனால் 'வீரபாண்டியன் தலை கொண்டான்' என்று சிறப்பிக்கப்படுகிறான். சுந்தர சோழன் இராட்டிர கூடரை வென்று தொண்டை மண்டலத்தைக்

கைப்பற்றி ஆதித்த கரிகாலனை அப்பகுதிக்குப் பெயராளாக (பிரதிநிதி) நியமித்தான்.

இம்மன்னன் தமிழ்ப் புலவர்களைப் போற்றி ஆதரவளித்தான். வீரசோழிய உரையில் இவனைப் பற்றி இருபாக்கள் காணப்ப டுகின்றன. இவன் புறச் சமயங்களை வெறுக்கவில்லை. இவனது காலத்தில் நாட்டின் நலனைப் பெருக்க வட ஆர்க்காடு மாவட் டத்தில் சுந்தர சோழப் பேரேரி என்னும் ஏரியை வெட்டினான்.

இவனுக்கு ஆதித்த கரிகாலன், அருள் மொழித்தேவன் (முதலாம் ராஜராஜன்) என்ற இரு மக்களும், குந்தவை என்னும் மகளும் இருந்தனர். இவன் தன் மகள் குந்தவையைக் கீழைச் சாளுக்கிய இளவரசனான வல்லவரையர் வந்தியத் தேவனுக்கு மணமுடித்து வைத்தான்.

கி.பி. 969-ல் ஆதித்த கரிகாலன் பகைவர்களால் கொல்லப்படவே, சுந்தர சோழன் மனமுடைந்து காஞ்சி மாநகரில் கரிகாலனால் அமைக்கப்பட்ட பொன்மாளிகையில் துஞ்சினான். எனவே, தான் இவனைப் 'பொன் மாளிகை துஞ்சியத் தேவர்' என்ற கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவனுடைய அமைச்சனாகத் திகழ்ந்து புகழ் பெற்றவன் மழநாட்டில் அன்பில் என்னும் ஊரில் பிறந்த அநித்த பிரமாதி ராஜன் என்பவனாவான். இவனது தொண்டினைப் பாராட்டும் வகையில் மன்னன் இவனுக்குக் கருணாகர மங்கலம் என்னும் ஊரை இறையிலியாக வழங்கிய செய்தி அன்பிற் செப்பேடுகளால் அறியப்படுகிறது.

உத்தம சோழன் (கி.பி. 970-985)

உத்தம சோழன் கண்டராதித்த சோழனின் மகன் என்பதை நாம் முன்னர்க் கண்டோம். சுந்தர சோழனுக்குப் பின்னர் அவன் இரண்டாம் மகன் ராஜராஜன் பட்டம் பெறவேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

இருப்பினும் தன் சிற்றப்பனாகிய உத்தம சோழனது உரிமையை மதித்துச் சிற்றப்பன் நாடான விருப்பம் கொண்டுள்ளான் என்பதை அறிந்து, உத்தம சோழனுக்காக ஆட்சியினை விட்டுக்கொடுத்தான். எனவே, மதுராந்தகன் என்னும் உத்தம சோழன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து, கி.பி.970இல் ஆட்சியுரிமையேற்றிருத்தல் வேண்டும்.

இவனது காலத்தில் சோழநாட்டில் அமைதி நிலவியது. இவனாட்சிக்கு உட்பட்ட தொண்டை மண்டலமும், திருமுனைப் பாடி நாடும் எவ்வித இடையூறுமின்றிச் சீராக ஆளப்பட்டன.

இவன் தாய் செம்பியன் மாதேவி என்பதை இதற்கு முன்பே கண்டோம். தாயைப் போலவே உத்தம சோழனும் சிவநேயச் செல்வனாக விளங்கினான். இவன் தாயும், மனைவியரும் செய்த அறப்பணிகள் மிகப்பலவாகும்.

இவனது காலத்தில் உத்தம சோழன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பொற் காசுகள் புழக்கத்தில் இருந்தன. இந்தக் காசுகள் 'உத்தம சோழன்' எனும் விருதுப் பெயரைக் கொண்ட ராஜேந்திர சோழனுடையதே என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவன் 985-ல் இறந்தான். இவனுக்குப்பின்தான் வரலாற்றுப் புகழ்மிக்க முதல் ராஜராஜன் அரியணையேறினான்.

மாமன்னன் முதலாம் ராஜராஜன் (கி.பி. 985-1012)

சுந்தர சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற இரண்டாம் பராந்தகனுக்கும் , வானவன் மாதேவிக்கும் பிறந்தவனே முதலாம் ராஜராஜன். இவன் ஐப்பசித் திங்கள் சதய நாளிற் பிறந்தவனாவான். இவனது இயற்பெயர் அருண்மொழித் தேவன் என்பதை முன்பே கண்டோம். தன் தந்தைக்குப் பின்னர் ஆட்சியைப் பெறும் முறைமையும், தகுதியும், திறனும் இருந்தும் தன சிற்றப்பனுக்காக ஆட்சியை விட்டுக்கொடுத்த தியாகச் செம்மல் ராஜராஜன் ஆவான். பல்லாண்டுகாலம் இளவரசனாக இருந்து அரசியல் அனுபவம் சிறக்கப் பெற்றவன்

ராஜராஜனாவான்.

இப்பெரு மகன் கி.பி.985 சூன் திங்கள் 25 ஆம் நாள் ராஜகேசரி என்னும் பட்டம் புனைந்து அரியணையேறினான். அரசியலில் பண்பட்ட அறிவும், பேராற்றலும் உயரிய சமயப் பற்றும் கொண்டு நல்லாட்சி செய்த ராஜராஜனது காலம் சோழர் வரலாற்றின் பொற்காலம் எனலாம்.

ராஜராஜனுக்கு உலகமாதேவியார், சோழமாதேவியார், இலாட மாதேவியார் என மனைவியர் பலர் இருந்தனர். இவனுக்கு ராஜேந்திரன் என்னும் மகனும் , குந்தவை, மாதேவடிகள் என்னும் பெண்மக்களும் இருந்தனர்.

ராஜராஜனின் வெற்றி மேம்பாடுகளை இவனது மெய்க்கீர்த்தியால் தெளிவாக அறியலாம். இவன் தனது ஆட்சியா ண்டுகளில் முறையே நடைபெற்ற போர்களை முறையே வெளிவந்த கல்வெட்டுகளில் முறைப்படி விளக்கமாகக் குறித்திருக்கின்ற புதிய முறையிலான மெய்க்கீர்த்தியை வெளியிட்டான். இம்முறை, இவனுக்குப் பின்னாண்ட சோழ மன்னர்கட்கு வழிகாட்டியாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவனது பட்டயம் அல்லது கல்வெட்டுத் 'திருமகள் போலஞ்.' என்னும் அழகிய தொடக்கத்தை உடையது. இதைப்போன்று பிற்கால மன்னர்களும் தங்கள் கல்வெட்டுகளில் வேறொரு அழகிய தொடரைத் தொடக்கத்தில் வைத்துள்ளதால், இந்தக் கல்வெட்டு இன்னார் காலத்தது என்று எளிதாக அறியலாம்.

சோழநாட்டின் அரியணையிலமர்ந்த ராஜராஜன் உள்நாட்டில் அமைதி நிறைந்த ஆட்சியை நிறுவிய பின்பு, தன் பகைவர்களாகிய பாண்டியரையும், சேரரையும் வென்று தன்னடிப்படுத்திச் சோழப் பேரரசை விரிவுபடுத்தத் திட்டமிட்டான். அப்பொழுது சேர நாட்டினைப் பாஸ்கர ரவிவருமன் திருவடி (கி.பி.964-1021) என்னும் மன்னனும், பாண்டி

நாட்டினை அமரபுசங்கன் என்னும் மன்னனும் ஆண்டு வந்தனர்.

ராஜராஜன் தன் பெரும்படை கொண்டு, பாண்டியர்மீது பாய்ந்து, பெருவெற்றி பெற்றான். பின்பு தன் படைகளைச் சேரநாட்டிலுள்ள விழிஞம் என்ற இடத்தின்மீது செலுத்தி அதனைக் கைப்பற்றினான். வெற்றிப்படையாம் சோழப்படை பின்பு காந்தளூர்ச் சாலையில் சேரர்களை வென்று பெருவெற்றி பெற்றது. இவ்வெற்றியின் அறிகுறியாக ராஜராஜன் 'காந்தளுர்ச்சாலை கலமறுத்தருளிய கோ' எனும் விருதைப் பெற்றான்.

காந்தளூர் என்பது எங்குள்ளது என்பது பற்றி வரலாற்றா சிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. திரு.கோபினாதராவ் அவர்கள் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான 'வலிய சாலை' என்ற இடமே காந்தளூர் எனக் கூறியுள்ளார்.

காந்தளூர், பூவார் (நொய்யல் ஆற்றங்கரை) அருகில் இருந்த ஊராகும் என்னும் கருத்தும் திருவாங்கூர் தொல்பொருள் வெளியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.காந்தளூர் என்னும் ஊர் திருவனந்தபுரத்திற்குத் தெற்கில் பத்துக்கல் தொலைவில் அமைந்துள்ளது என்பது தற்கால ஆராய்ச்சியறிஞர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகும்.

காந்தளூர்ச்சாலை கலமறுத்த பெருமையினை மாமன்னன் ராஜராஜன் மட்டுமின்றி, முதலாம் ராஜேந்திரன், முதலாம் ராஜாதிராஜன், முதலாம் குலோத்துங்கன்* முதலான மன்னர்களும் பெறுகின்றனர். எனவே, இதனைப் பற்றி நாம் சிறிது விரிவாகக் காண்பது நலம் பயப்பதாகும்.

(*விக்கிரம சோழனுலா -பாடல் ண் 24. கலிங்கத்துப்பரணி -370.)

இதனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை ; மாறாக மாறுபட்ட

கருத்துகள் மலிந்து காணப்படுகின்றன. 'ஈண்டுக் கலமறுத்த' என்னும் சொல் காணப்படுதலின் சேரர்களின் மரக்கலங்களை ராஜராஜன் அழித்துப் பெருவெற்றி கண்டான் எனச் சிலர் கருதுகின்றனர். சிலர் காந்தளூர்ச்சாலைப் போர் கடற்போரன்று எனவும், இஃது ராஜராஜன் நடத்திய நிலப்படைப் போர்தான் எனவும் செப்புகின்றனர். ராஜராஜப் பெருமன்னன், சேரர்கள் படைக்கலங்களைக் குவித்துள்ள இடமும், படைக்கலப் பயிற்சியளிக்கின்ற இடமுமான காந்தளூரின்மீது படையெடுத்து அவர்களின் படைக்கலங்களையழித்துப் பெருமை கொண்டான் என இவர்கள் செப்புகின்றனர்.

மாமன்னன் ராஜராஜன் காந்தளூரில் மணிமண்டபம் ஒன்றனை அமைத்தான் என்னும் கருத்தும் முன்பு நிலவி வந்தது. இது தற்கால அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ராஜராஜன், சேர நாட்டின் காந்தளூரில் கலம் ஒன்றைத் துண்டாக்கினான் என்னும் கருத்தினையும் சில ஆராய்ச்சியாளர் கொண்டிருந்தனர். இதுவும் தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை.

கவிமணி தேசிகவிநாயகமபிள்ளை அவர்கள் 'மன்னன் காந்தளூர் உணவு சாலையில் உணவு வழங்க வேண்டிய முறையினை நிருணயித்துத் திட்டம் செய்தான்' எனப் புதிதான விளக்கம் ஒன்றனைத் தந்தார். இவ்விளக்கம பொருததமாகத் தோன்றவில்லை. ஏனெனில், உணவுத்திட்டம் செய்யப்பட்ட முறையை ராஜேந்திரனும், ராஜாதிராஜனும், முதலாம் குலோத்துங்கனும் மறுமுறையும் மாற்றவேண்டிய தேவையில்லை 'காந்தளூர் அறச் சாலையில் சோறு அடுவதை ராஜராஜன் நிறுத்திவிட்டான்' என்னும் கருத்தினையும் ஆய்வாளர் சிலர் கொண்டுள்ளனர். இக்கருத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. சோறிடுவதை நிறுத்தியதை 'அருளிய' எனக் குறிப்பிடுவது வழக்கமில்லை.

இதனைப் பற்றித் தெளிவாக நாம் ஆராயவேண்டுமெனின் 'சாலை' , 'கலமறுத்த' என்னும் சொற்களின் மெய்ப்பொருளை நாம் ஆய்ந்து பார்க்கவேண்டும். 'சாலை' என்பது போக்குவரத்துக்குப் பயன்படும் பெருஞ்சாலை (Road) , உணவு வழங்கப்படுகின்ற அறச்சாலை, கடற்கரையில் கப்பல் நிற்கும் துறைமுகம், மாணவர் தங்கி உணவுண்டு கல்வி பயிலும் நிறுவனம் எனப் பலபொருள் படும். 'கலம்' என்பதற் 'உண்கலம்' , கப்பல் (மரக்கலம்) எனப்பொருள் கொள்ளலாம்.

இவண் சாலை என்பது மாணவர்களின் உண்டுறை இல்லம் எனப்பொருள் கொண்டு, மாணவர்கள் கல்வி கற்று வந்த பல்கலைக்கழகம் போன்ற ஒரு நிறுவனத்தின் தலைவருடன் ராஜராஜன் கருத்து மாறுபாடு கொண்டு, அதனைத் தாக்கித் தன் படை வலியால் ஆங்குத் தன் மேலாதிக்கத்தினை நிலை நாட்டினான் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

பண்டைக் காலத்தில் குருகுலக் கல்விமுறை பின்பற்றப்பட்டு வந்தது. மாணவர்களும் , ஆசிரியர்களும் கல்விச் சாலையிலேயே தங்கியிருந்தனர். இதனை எண்ணாயிரம் வடமொழிக் கல்லூரியின் நடைமுறைக்கு ஒப்பிடலாம். பல்கலைக்கழகம் போன்று அமைந்திருந்த அக்கல்வி நிறுவனத்தின் அறங்காவலர் அரசின் கட்டுப்பாடின்றித் தனித்தியங்கும் உரிமையினைப் பெற்றிருத்தல் கூடும். அச்சாலையின் நடவடிக்கைகளில் தலையிட்டுச் சில மாற்றங்களைச் செய்ய முயன்ற ராஜராஜனுக்கும் அறங்காவல ருக்கும் விரோதம் ஏற்பட்டுப் பகை மூண்டிருக்கக்கூடும் எனவும் மன்னன் படை கொண்டு அச்சாலையில் வெற்றி கண்டான் எனவும் கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது. காந்தளூர்ச் சாலை ஒரு கல்வி நிறுவனமாக இருந்திருக்கலாம் என்று திரு.டி.என்.சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பதையும் ஈண்டு நாம் மனத்திற் கொள்ளுவது நலம்.

மேலும், காந்தளூர்ச்சாலை போன்ற மற்றொரு சாலை

பார்த்திவ சேகரபுரம் என்னுமிடத்தில் ஆய்குல வேந்தன் கருநந்தடக்கன் என்பானால் நிறுவப்பட்டிருந்ததென்றும், அச்சாலையில் கல்வி கற்பித்த சட்டர்கள் (ஆசிரியர்)அரசியலில் பங்குகொள்வதற்குத் தேவையான அறிவும், பயிற்சியும் பெற்றிருத்தலோடு, சில கட்டுப் பாடுகட்குட்பட்டுப் படைக்கலப் பயிற்சியும் பெற்று, மாணவர் கட்குச் சுவடியின் வாயிலாகவும், நடைமுறை வாயிலாகவும், அரசியல் துறையிலும், போரத் துறையிலும் பயிற்சிய ளிக்கும் திறனும் பெற்றிருத்தல் வேண்டுமென்றும் பார்த்திவசேகரபுரத்துச் சாசனம் செப்புகிறது. எனவே, கல்விச் சாலையில் படைக்கலங்களும் வைக்கப்பட்டுப் பயிற்சியளிக்கப் பட்டனவென்பது புலனாகும்.

'காந்தளூர்ச் சாலை' என்பது ஊரின் முழுப் பெயராயிருப்பின் நாம் சாலை என்தற்குப் பொருள் காண வேண்டுவதில்லை. காந்தளூர்ச் சாலையிலுள்ள படைக்கலங்களையழித்து வெற்றி கண்டான் ராஜராஜன் எனக்கொள்ளலாம்.

ராஜராஜன் காந்தளூரிலுள்ள சாலையருகில் (Roladstead) அமைந்துள்ள சேரர் படைக்கலக் கல்லூரியைத் தாக்கி அங்கிருந்த படைக்கலங்களை அழித்துச் சேரரின் வலிமையினையடக்கினான் என்றோ, காந்தளூர்க் கல்வி நிறுவனத்தின் அறங்காவலருக் கெதிராகப் போர்தொடுத்து அச்சாலையைத் தன் வழிப்படுத்தினான் என்றோ, கொள்வது பொருத்தமாகும்.

இவ்வெற்றியின் சின்னமாக இவன் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய கோ' என்று புகழப்படுகிறான். சேர நாட்டின்மீது மேற்கொண்ட படைக்குத் தலைமை பூண்டவன் பஞ்சவன் மாராயன் என்னும் பெயர்கொண்ட ராஜேந்திர சோழனே ஆவான்.*

(*சோழர் வரலாறு - பண்டாரகர் மா.இராசமாணிக்கர் பக்கம் - 55.)

பாண்டியரை வென்று 'விழிஞம்' என்னும் துறைமுகத்தைக் கைப்பற்றியதால் ராஜராஜன் 'தென்ன பராக்கிரமன்' என்னும் விருது பெயர் பெற்றான்.

பின்பு ராஜராஜன் குடகு என அழைக்கப்பெறும் குடமலை நாட்டின்மீது போர்தொடுத்து, உதகையை அழித்து, அந்நாட்டினையும் கைக்கொண்டான்., இப்படையெடுப்பில் தலைமை பூண்ட தானைத் தலைவன் ராஜேந்திரனாக இருக்க வேண்டுமென்று வரலாற்றறிஞர் சிலர் கருதுகின்றனர். மேற்குக் கடற்கரையிலுள்ள கொல்லம், கங்கபாடி, நூளம்பாடி, தடிகைபாடி ஆகிய நாடுகளையும் வென்று பெரும்புகழ் பெற்றவன் இவனாவான்.

கிருஷ்ணா, கோதாவரி, ஆறுகட்கு இடைப்பட்ட கீழைச்சாளுக்கிய நாடு வேங்கிநாடு எனப்படும். இவன் வேங்கி நாட்டைக் கைப்பற்றிச் சத்திவருமனை மன்னனாக்கினான். சத்தி வருமனின் இளவலான விமலாதித்தனுக்குத் தன் மகள் குந்தவையை மணம் செய்வித்தான். வட பெண்ணையாறு முதல் கிருஷ்ணையாறு வரையிலும் பரவியிருந்த சீட்புலி நாட்டையும் ராஜராஜன் கைப்பற்றிப் பெரும்புகழ் பெற்றான்.

இம்மன்னனின் தரைப் படையைப்போல் கடற்படையும், வலிமை மிக்கது என்பதை முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் கொண்டவன் என்பதால் அறிகிறோம். எனவே, இவன் மாலத்தீவுகளை வென்றது குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

மகேந்திர மலையில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டொன்றில் 'விமலாதித்தன் என்னும் குலூத நாட்டு மன்னனை ராஜேந்திரன் வென்று, மகேந்திரமலை உச்சியில் வெற்றித் தூண் ஒன்றை நாட்டினான்' என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. இது பற்றி ராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் சான்றுகள் காணப்படவில்லை. எனவே, இவ்வெற்றி ராஜராஜன் காலத்தில் அவன் மகனான ராஜேந்திரன் பெற்ற வெற்றியாக வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.குலூத நாடு என்பது கலிங்க நாட்டின் பகுதி.

எனவே, ராஜராஜன் கலிங்க நாட்டினை வென்றான் என்று கொள்ளலாம். இவன் தன் வலிமைமிக்க நிலப்படையின் துணை கொண்டும், கடற்படையின் துணை கொண்டும் கொண்ட பெரு வெற்றிகளை இவனது மெய்க்கீர்த்தி குறிக்கின்றது.

இம்மன்னன் தமிழக மூவேந்தர் நாடுகளையும் ஆண்டமையால் 'மும்முடிச் சோழன்' எனவும் சிவநேயச் செல்வனாக இருந்தமையால் 'சிவபாத சேகரன்' எனவும், சைவத்திரு முறைகளைத் தொகுத்தமையினால் 'திருமுறை கண்ட சோழன்' எனவும் சென்றவிடமெல்லாம் வெற்றி ஒன்றே கண்டவனாதலின் 'செயங்கொண்ட சோழனெனவும்' சிறப்பிக்கப்பெற்றான். இவையன்றிச் சத்திரிய சிகாமணி, சிங்களாந்தகன் , பெரிய பெருமாள், இரட்ட குல காலன், மும்மடிச் சோழன், கேரளாந்தகன், பாண்டிய குலாசனி, சோழேந்திர சிம்மன், சனநாதன், நிகரிலிச்சோழன், ராஜேந்திர சிம்மன், சோழ மார்த்தாண்டன் , இரவி குல மாணிக்கம், தெலுங்க குலகாலன், நித்திய விநோதன், உய்யக் கொண்டான், ராஜாசிரயன், ராஜ மார்த்தாண்டன் போன்ற பல விருதுபெயர்களை இவன் பெற்று விளங்கினான்.

ராஜராஜன் சிறந்த சிவ பக்தன். ஆயினும் இவன் சமயப்பொறைமிக்கு விளங்கினான். இவனது பரந்த சமய மனப் பான்மையை, நாகப்பட்டினத்தில் கடார வேந்தனாகிய சூளாமணி வருமனால் கட்டப்பட்ட புத்த விகாரைக்குப் பொருளுதவிய ளித்ததாலும், ஆனை மங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச சந்தமாக அளித்தமையாலும், மைசூரில் இவன் கட்டிய விஷ்ணு கோயில் களாலும், அவைகட்கு அளித்துள்ள அறப்பணிக்கொடைகளாலும் அறியலாம். இவன் இசை, நடனம், நாடகம், ஓவியம் போன்ற நுண் கலைகளில் பெரும் ஈடுபாடு கொண்டவனாக விளங்கினான்.

இவன் தன் வெற்றிகட்குரிய சின்னமாகத் தஞ்சையில் தனிக்குளமென்னும் பெயரால் விளங்கிய சிறு கோயிலைத் தன்

தமக்கை குந்தவைப்பிராட்டியின் எண்ணப்படி பெருங்கற்றளியாக மாற்றியமைத்த 'ராஜராஜேச்சுரம்' என்னும் பெருவுடையார் கோயில் தமிழகத்தின் கலைச் சிறப்பிற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. விண்ணை முட்டும் அளவிற்கு நீண்டுயர்ந்த இக்கோயில், தமிழ்நாட்டில் என்றும் நின்று ராஜராஜனின் புகழைப் பொன்றாது நிற்கச் செய்கிறது.

இக்கற்கோயில் 793 அடி நீளமும், 397 அடி அகலமும் கொண்டது. இதன்கண் வானளாவ அமைந்துள்ள நடுவிமானம் மட்டும் 216 அடி உயரம் கொண்டது. அதன் உச்சியில் அமைந்துள்ளதும் ஒற்றைக் கல்லால் ஆனதுமான விமானம் 80 டன் எடையுள்ளது. விமானத்தின் மீதமைந்துள்ள செப்புக்கலசம 3083 பலம் நிறை கொண்டது. அக்கலசம் 2926 1/2 கழஞ்சு பசும் பொன்னால் மூடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் காண்போர் கண்ணையும், கருத்தையும் கவர்வனமாக உள்ளன. எண்ண எண்ண வியப்பைத் தரும் இவ்வண்ண வண்ண ஓவியங்கள் வெளிநாட்டாரும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன.

இக்கோயிலில் காணப்படும் சிற்பங்களும், அற்புதமானவையாகும். இவன் வேறு பல கோயில்களையும் கட்டினான்.

ராஜராஜன் கன்னல்பொருள் தரும் தமிழைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி, நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு, சைவத்திருமுறைகளைத் தொகுத்தான். கருவூர்த்தேவர் திருவிசைப்பா என்னும் இலக்கியத்தைப் படைத்தார். ராஜராஜேசுவர நாடகம், ராஜராஜ விசயம் ஆகிய நாடகத்தமிழ் நூல்கள் இக்காலத்தில் தோன்றின. இவன தமிழ்த் தொண்டு என்றென்றும் பாராடடுதற்குரியது. இத்திருமுறைகளைக் கோயில்தோறும் ஓத , ஓதுவார்கள் நியமனம் செய்யப்பெற்றனர். தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழ் மணம் கமழ்ந்தது ; தமிழர்களின் நெஞ்சமெல்லாம் குளிர்ந்தது. செந்தமிழைச்

செழுந்தமிழாக்கிய சைவக் குரவர்களாகிய அப்பர், தமிழ் ஞானசம்பந்தர், சுந்தரர் முதலியவர்களின் உருவச் சிலைகள் கோயில்களில் எடுப்பிக்கப் பெற்றுப் பூசைகள் சிறப்புற நடந்தன.

ராஜராஜன் கடல் வாணிகத்தைப் பெருக்கினான்; சீன நாட்டிற்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பினான். இதனால் சீன-சோழ நட்பு உருவாயிற்று.

இவன் தனது காலத்தில் சோழ நாடு முழுவதையும் அளந்து, நிலங்களுக்கு ஏற்றபடி வரி விதித்தமை போற்றத்தகுந்ததாகும். இம்மன்னனது ஆட்சிமுறை பல மேம்பட்ட அம்சங்களைக் கொண்டு விளங்கியது.

இவன் கி.பி. 1012இல் தன் மகன் முதல் ராஜேந்திர சோழனுக்கு இளவரசு பட்டம் கட்டி அரசாட்சியில் ஈடுபடுத்தினான். பிற்காலச் சோழர்களுள், சோழர்தம் பெருமையினைப் பாரறியச் செய்து, உலகோர் பாராட்டும் வகையில் உயர்த்திய உரவோன் முதல் ராஜராஜனேயாவான். இவன் தனது பேரரசினை அமைதி நிலவும் நல்லரசாக ஆள்வதற்கேற்ற ஆற்றலும், ஆண்மையும் அரசியல் அறிவும் குறைவறப் பெற்று, இறையன்புக்கும், இறவாப் பெருங் குணங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்த உத்தமனாவான்.

பிற்காலச் சோழரின் புகழை உலகறிய உயர்த்திய பெருமைக் குரியவன் ராஜராஜனாவான். எனவே, கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் , 'தென்னிந்தியாவில் பேராசையேற்படுத்திய மன்னர்களுள் ராஜராஜன் தலைசிறந்தவனாகப் போற்றப் படுகின்றான்' என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமுடையது.

4

இளமையும் முடி புனைதலும்

சோழநாட்டு மக்கள் செய்த தவங்கள் பலகோடி ஒரு பெரிய உரு மேவியுற்றதென, இம்மண்ணில் முதலாம் ராஜராஜசோழனுக்கும் அவன் கோப்பெருந்தேவி வானவன் மாதேவிக்கும் (உடைய பிராட் டியார் தம்பிரான் அடிகள் வானவன் மாதேவியாரான திரிபுவனமா தேவியார்க்கு), மார்கழித் திங்களில் நிலவு திருவாதிரையுடன் கூடியிருந்த நன்னாளன்று மாதவ மகன் ஒருவன் தோன்றினான். ஆண் குழந்தையின்மையால் வாடிக்கொண்டிருந்த சோழப் பெருமன்னனின் வாட்டத்தைப் போக்கி, நாட்டு மக்களி டையே மகிழ்ச்சிப் பெருக்கினை ஏற்படுத்திய இச்சோழர் குலத் தோன்றலே, பிற்காலத்தில் ராஜேந்திர சோழன் எனும் பெயரில் அரசு கட்டிலேறிப் பகைவென்று, நாட்டின் நலம் பல விளைத்த நம்பியாவன்.

இந்நற்செய்தியறிந்த நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தனர். அன்று சோழப் பேரரசு எங்கணும் மக்கள் பெருவிழாக் கொண்டாடினர். குறிப்பாக அதிலும் சிறப்பாகப் பழையாறை நகரும், தஞ்சை மாநகரும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டன. கோயில்களில் இளவரசன் நலங்கருதிச் சிறப்பான பூசனைகள் நடைபெற்றன. அரச குடும்பத்தினரும் , அமைச்சர் பெருமக்களும், அரசியல் அலுவலர்களும் இளவரசனைக் கண்டு உளம் பூரித்தனர் ; நல்வாழ்த்துக்கூறினர். விண்ணகத்து வெங்கதிரோன் மண்ணில்

வந்து தோன்றியதோ! எனக் கண்டோர் வியக்கும் வண்ணம் அக்குழந்தை பேரரழகு வாய்ந்ததாய் விளங்கிற்று. கண்ணுதற் பெருங் கடவுள் தன் நெற்றிக் கண்ணால் காணாத மற்றொரு காமவேளோ என எண்ணும்படியாகப் பேரழகு வாய்ந்திருந்தது அக்குழந்தை.

சோழர்குலத் தோன்றலாய்த் தவ மணியாய் வந்துதித்த இச்சிவமணியின் நலங்கருதித் திருமுதுகுன்றமுடையார் கோயிலில், திங்கள் தோறும் திருவாதிரை நன்னாளில் சிறப்பான முறையில் வழிபாடு நடத்தவும், விழாக் கொண்டாடவும் நிலம் அளிக்கப் பட்டது. இச்செய்தியினை விருத்தாசலத்திலுள்ள (Vriddhachalam, South Arcot District) கல்வெட்டொன்று விளம்புகின்றது.

தன் சிறிய தந்தையான மதுராந்தக உத்தம சோழன்பால் தன் தந்தையினும் பேரன்பு பூண்டொழுகியவனாகலின், ராஜராஜப் பெருமன்னன் தனக்குப் பிறந்த குழந்தையின் பேரழகினைக் கண்டு மட்டிலா மகிழ்வு கொண்டான். அக்குழந்தை தன் பாட்டனாகிய சுந்தர சோழனைப் போல் பேரழகுமிக்கவனாகத் திகழ்ந்ததையும் ராஜராஜன் கண்டான். எனவே, தன் குல வழக்கப்படி முன்னோர் களின் பெயர்களுள் ஒன்றும், சிறிய தந்தையின் பெயருமான 'மதுராந்தகன்' என்னும் திருப்பெயரைத் தன் மகனுக்கு இட்டான். இவன் (மதுராந்தகன்) புன்சிரிப்பினாலும் , வடிவழகினாலும் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியையும், பகைவர்களுக்குப் பேரச்சத்தையும் நாளும் கொடுத்துக்கொண்டு வளர்ந்து வந்தான் என்று இவனை இவனது கரந்தைச் செப்பேடு பாராட்டுவதால் இவன் பேரழகு வாய்க்கப் பெற்றவன் என்பதனையும் தந்தையைப்போல் போர்க்கலையில் தேர்ச்சி பெற்றுப் பகைஞர்களை வென்று, பேரும் புகழும் பெறும் ஆற்றலினைப் பெற்றவன் என்பதனையும் நாம் உய்த்துணரலாம்.

மதுராந்தகன் பிறந்தகாலை சோழப் பேரரசு பல்கிப்

பெருகியிருந்தது. ராஜராஜனின் சீரிய தலைமையில் சோணாடு நன்முறையில் முன்னேறிக் கொண்டிருந்தது. அரசியல்துறை, சமூகத்துறை, சமயத்துறை, அறிவுத்துறை, போர்த்துறை ஆகியவற்றில் நல்ல வளர்ச்சியினைப் பெற்றிருந்தது. சோழப் பேரசு முழுவதிலும் சமய வளர்ச்சியும், சமயப் பொறையும் நாகரிகமும் பண்பாடும் மேலோங்கித் திகழ்ந்தன. உள்நாட்டில் அமைதி நிலவிற்று. வாணிகமும் விவசாயமும் சிறந்தோங்கின. அண்டை அரசுகளை ஆண்டுகொண்டிருந்த மன்னர்கள் சோழரின் வளர்ச்சி கண்டு அச்சமும் பொறாமையும் கொண்டனர். சேரரும், பாண்டியரும், மேலைச் சாளுக்கியரும், ஈழத்தினரும் மற்றுமுள்ள பகைவர்களும் சோழப்பேரரசின் வளர்ச்சியினைத் தடுத்து நிறுத்த முனைந்து நின்றனர். மாமன்னன் ராஜராஜனும் படைகொண்டு, பகைவரைப் புறம் கண்டு வந்தான். இருப்பினும் மதுராந்தகன் உரிய பருவமெய்திப் போரில் பங்கு கொண்ட பின்பே ராஜராஜன் பெறற்கரிய வெற்றிகளைப் பெற முடிந்தது என்பதனையும் நாம் ஈண்டு நினைவிற் கொள்ளவேண்டும்.

சிவஞானச் செல்வியாம் செம்பியன் மாதேவியாராலும், ராஜராஜனின் தமக்கையாம் குந்தவை தேவியாராலும், கோப் பெருந்தேவி வானவன் மாதேவியாராலும் , மற்றுமுள்ள அரச குலப் பெண்களாலும் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்க்கப் பெற்ற மதுராந்தகன் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தான். இவன் தந்தையாம் முதலாம் ராஜராஜனை இளமைப் பருவந்தொட்டு வளர்த்து வந்த செம்பியன் மாதேவியார், தந்தையினும் மேம்பட்ட வீரமும், வலிமையும், அறிவும், ஆற்றலும் பெற்றுத் திகழத்தக்க அறிகுறிகள் இவனிடம் காணப்பட்டதாக உணர்ந்தாள்.

இவனது ஒவ்வொரு செயலும், கனிவாயில் பிறந்து வரும் மழலை மொழியும் பெற்றோரையும் மற்றோரையும்

மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தின பெற்றோர் அகங்களித்தனர். 'குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழைலைச்சொல் கேளா தவர்' என்ற வள்ளுவரின் வாய்மொழி அவனது பெற்றோர்க்கு மெய்மொழியாயிற்று. தரணி போற்றும் தஞ்சைக்கோன் ராஜராஜன் தனது செல்வச்செருக்கை உலகிற்குணர்த்துவதுபோல், தனது செல்வனுக்கு விலை மதியா மணியையும், இரத்தினத்தையும் அணிகலன்களில் இழைத்து அணிந்து மகிழ்ந்தான். பெண்களோ, தங்கள் கண்ணினுக்கணியாகவுள்ள புதுமையான அணிகலன்களை மதுராந்தகனுக்கு அணிந்து களித்தனர்.

இவனுடைய தேன்மொழியிலும், அங்க அசைவுகளிலும் குறுகுறு நடையிலும், கூரிய விழிகளிலும், செந்தாமரை முகத்தினிலும் இன்பம் கண்டு உள்ளம் பூரித்த பெற்றோர் இவனது வளர்ச்சி கண்டும் வியப்புற்றனர். இவ்வாறாக மதுராந்தகன் வளர்ந்து மழலைப் பருவங்கடந்து பலகலையும் கற்கும் நற்பருவம் வந்துற்றான்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழி உண்மையாம் என்பதை உலகுக்கு உணர்த்துமாறு போலப் 'பிற்காலத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவான்' என்பதன் அறிகுறிகள் இளமையிலேயே இவனிடம் காணப்பட்டன. இவன் 'கருவிலே திருவுடையவனாகக்' காணப்பெற்றான்.

இவன் அரச குலத்திற்கேயுரிய யானையேற்றம், பரியேற்றம், தேர் செலுத்தல், வாள் பயிற்சி, வில் பயிற்சி முதலிய கலைகளைக் கற்று வல்லவனானான். உடற்பயிற்சியினாலும், படைக்கலப் பயிற்சியினாலும் திண்டோளும், உடற்கட்டும் பெற்று வீர இளைஞனாய்த் திகழ்ந்த மதுராந்தகன் இளஞ்சிங்கமெனத் தோற்றமளித்தான் ; வளைதடி எறிதலில் மிகுந்த தேர்ச்சியும் பெற்று விளங்கினான்.

இதனோடமையாது இவன் மிகச் சிறந்த சைவாசாரியராகவும்,

மாணவரின் மன நிலையறிந்து கற்பிக்கும் பண்புள்ளவராகவும் விளங்கிய சர்வசிவ பண்டிதரிடத்து இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள், அரசியல் தொடர்பான அற நூல்கள், போர்பற்றிய நூல்கள், சோழ மன்னர்களுடைய முறையான வரலாறுகள் முதலியவற்றைக் குறைவறக் கற்றதோடன்றிச் சைவ சமய நூல்களான தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறை நூல்களையும், வேதங்கள் , சாத்திரங்கள் ஆகியவற்றையும் முறையாகவே கசடறக் கற்றுத் தெளிந்தான்.

ஆன்றவிந்தடங்கிய சான்றோரான காஷ்மகாரி ஆராவமுது புருஷோத்தமனான இராஜேந்திரசிம்மப் பேராசிரியரிடம் இவன் அற நூல்களைக் கற்றுத் தேர்ந்தான். புருஷோத்தமன் எனும் இப்பேராசியர் ராஜேந்திரனுக்கு நண்பனாய், ஆசானாய், தத்துவ ஞானியாய் விளங்கினார். புருஷோத்தமன் அவர்கள் ராஜேந் திரனின் பேராசிரியராய் விளங்கினார் என்பதையும், கரந்தைச் செப்பேட்டைத் தீட்டும் பணியினையேற்றிருந்தார் என்பதையும் கரந்தைச் செப்பேட்டுப் பகுதியாலறியலாம்.

சைவ சமயத்தின்கண் பேரார்வம் கொண்ட இவன் சைவ சமய நுணுக்கங்களைக் கற்றுத் தெளிவதில் பேரார்வம் கொண்டான். எனவே, இவன் சிறநெறியின் அறுவகைப் பிரிவுகளுள் ஒன்றாகிய காளாமுகத்தைச் சார்ந்த இலகுலீச பண்டிதரிடத்தும் சைவ ஆகமங்களை ஐயந்திரிபறக் கற்று, இலக்கண நூலார் முதல் மாணாக்கனுக்கு உவமையாகச் சொல்லும் அன்னம்போல, ஆப்போல, நன்மாணாக்கனாய்த் திகழ்ந்து, சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவனாய் விளங்கினான். இவனது அறிவு வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஈசான பண்டிதரும் இவனுடைய மனங்கவர்ந்த குருவாக விளங்கினார். 'இளமையிற் கல்' என்னும் முதுமொழிக்கிணங்கக் கற்க வேண்டிய நூல்களைக் கற்றுப் போர்ப் பயிற்சியிலும் ஒப்பாருமின்றி மிக்காருமின்றிச் செம்மாந்து விளங்கினான் என்பதனைக் கீழ்க்கண்ட ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டுப்

பகுதியாலறியலாம். இவன் (மதுராந்தகன்) இளம் பருவத்திலேயே எல்லா வேதங்களையும், சாத்திரங்களையும் கற்றவனாகவும், குதிரையேற்றம் , யானையேற்றம், தேரேறுதல் ஆகியவற்றில் மிக்க பயிற்சியுள்ளவனாகவும், வாட்போரின் நுட்பங்களை அறிந்தவனாகவும், ஏறிபடைக்கலங்களில் தேர்ச்சி பெற்றவனாகவும் விளங்கினான்.

பெருமன்னனுக்குத் தேவையான அத்துணைப் பண்பு நலன்களையும், பயிற்சிகளையும், மதுராந்தகன் தனது இளமைக் காலத்திலேயே அடையப் பெற்றான். கல்வி கற்குங்கால் எதனையும் ஆய்ந்தறிந்து, சிந்தித்து, உண்மை கண்ட பின்பே ஏற்றுக்கொள்ளும் பண்பினைக் கொண்ட இவன் நுண்ணறிவும், கூர்த்த மதியும் வாய்க்கப் பெற்றான். மன்னன் மகனாய் விளங்கியபோதிலும் இவன் ஆசிரியர்பால் அளவற்ற அன்பு கொண்டவனாக விளங்கினான். இதனை இவன் தனது ஆட்சிக்காலத்தில் தன் ஆசிரியர்கட்களித்த 'ஆசாரிய போகத்'தால் அறியலாம்.

ஒருவன் தன் இளமைப் பருவத்தில் எய்திய சிறந்த பண்பும், பயிற்சியும் அவன் வாழ்நாள் முழுமையும் நிலைபெற்றுப் பயன்படும் என்பது உலகோர் அறிந்த பேருண்மையேயாகும்.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவின் பெரும் பகுதியினை மொகலாயர்கள் ஒரு குடைக்கீழ் அரசாண்ட காலத்தில், இந்துப் பேரரசை இந்தியாவில் ஏற்படுத்த முயன்ற மராட்டிய சிங்கம் மாவீரன் சிவாஜி வீரத்தின் உலைக்களனாய், வெற்றியின் நிலைக்களனாய், பக்தியின் இருப்பிடமாய் விளங்கியதை மறக்கவோ, மறைக்கவோ , மழுப்பவோ முடியாது. இவ்வாறு இவன் விளங்கக் காரணம் யாது? சிவாஜியின் தாயான ஜீஜீபாயும், ஆசானான தாதாஜி கண்ட தேவரும் இவனை இளமையிலேயே கல்வி கேள்விகளிற் சிறந்தவனாகவும், அஞ்சாமையும், ஆற்றலும் உடையவனாகவும் வளர்த்ததுதான் காரணம் என்பதை வரலாற்று அறிஞர்கள் மறக்க முடியாது.

உலகப் பொருந்துறவியருள் ஒருவரான விவேகானந்தர், தன்னிளமைக் காலத்தில் தன் தாயாரிடத்து இராமாயணத்திலுள்ள இராமனது பொறையையும், மகாபாரதத்திலுள்ள தருமனது பொறையையும் கேட்டறிந்தமையாலேதான் உலகில் மிகப் பெரும் 'பொறுமைசாலி'யாக எத்தகைய இடுக்கண் வந்துற்ற போதும் நடுக்கம் ஒன்றானுமின்றி விளங்கினார் என்பது நம் இந்தியப் பெருநாடு கண்ட உண்மை.

'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' எனவும் , 'தந்தையறிவு மகனறிவு' எனவும் கூறும் முதுமொழிக்கு ஏற்ப ராஜேந்திரன் தன் தந்தை ராஜராஜனைப் போல் சிலநெறியே தனக்குரிய சமயமாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுமையும் சிவபெருமானிடத்தில் ஒப்பற்ற பக்தியுடையவனாய்த் திகழ்ந்தான்.

இவ்வண்ணம் மதுராந்தகன் சிவபக்திச் செல்வமுடையவனாய் விளங்கியமைக்குக் காரணம், இவனை இளமையில் வளர்த்தவர் களான இவன் தந்தையின் பாட்டியார் சிவஞான கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன் மாதேவியாரும், அத்தையாகிய ராஜராஜ சோழன் தமக்கை குந்தவைப் பிராட்டியுமாவார். செம்பியன் மாதேவியார் கொண்டான் குறிப்பறித்தொழுகும் பண்புடையார் ஆதலின், தன் கணவனைப்போலவே சிவபக்தி, சமயப் பொறை முதலான உயர்குணங்கள் பலவும் அமையப் பெற்றவர். இவன் தந்தையும் இவர்களால் வளர்க்கப்பட்டவனே.

இத்தசைய நற்பண்புடையாரிடத்தே மதுராந்தகன் வளர்ந்து பிற்காலத்தில், 'மெய்யன்பு நெறிவழக்கினால் எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னாத பிறப்பறுக்கும் தத்துவத்தின் வழியுணர மன்னிய சீர்ச்சங்கரன்றாள் மறவாமையே விதி பொருள்' என்று நன்குணர்ந்து, தான் தனது கங்கை வெற்றிக்குப் பின்னர் 'கங்கை கொண்ட சோழபுரம்'

என்ற ஒரு தலைநகரையே உண்டாக்கி, ஆங்கு ஈடும் எடுப்பு மற்ற சிவாலயம் ஒன்றை எடுப்பித்தமையால் இவனது சிவபக்தி எத்தகையதாய் இருத்தல் வேண்டும் என்பதை நாம் ஈண்டு நன்கறிதல் வேண்டும்.

இவன் சைவ சமய வளர்ச்சியில் மட்டுமின்றிச செம்பியன் மாதேவியார், குந்தவைப் பிராட்டியார் ஆகியோரின் அன்புகலந்த அறிவுரைகளை நாள்தோறும் கேட்டறிந்து அதன்படி ஒழுகி வந்தமையால் சிற்பம், ஓவியம், இசை முதலான கலை வளர்ச்சி களிலும் பெரிதும் ஈடுபட்டதோடு சமயப்பொறை மிக்கவனாகவும் வாழ்ந்து வந்தான்.

இத்தகைய அருங்கலைகள் பலவும் கற்றுப் பல துறைகளிலும் வல்லவனாய் விளங்கிய மதுராந்தகன் தன்னிளமைக் காலத்தும் , முடிசூடிச் சோழப் பேரரசின் பெருமன்னனாய் வாழ்ந்த காலத்தும், தமிழ் வல்ல பெரும்புலவர்களுடன் இலக்கியம், இலக்கணம் பற்றி உரையாடி மகிழ்ந்தான் ; கற்று வல்ல பெரியோர் சூழலிலேயே இருப்பதை விரும்பினான். இவனது சிறந்த தமிழ்ப் புலமையையும் புலவரைப் போற்றும் பெருந்தன்மையையும் கண்டு களி பூத்த சோணாட்டு மக்கள், இவனுக்குப் 'பண்டித சோழர்' என்னும் சிறப்புப் பெயரையளித்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இவ்வண்ணம் குலமுதல் சீலம் என்றும் குறைவிலா சைவ நன்னெறியிடத்து மாறா அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப் பொருள் பெறு சைவ நீதிக் கலையுணர் பொலிவின்மிகுந்து, தக்கதோர் இளமைப் பருவமுற்றான்.

வீரமும், கடவுட் பற்றும் தன் இரு கண்களாகக் கொண்டு, 'சயங்கொண்டான்' , 'சிவபாத சேகரன்' என்றெல்லாம் புகழ்ப்பெற்ற ராஜராஜனின் மகனான மதுராந்தகன் தந்தைக்கேற்ற தனயனாக விளங்கினான். 'தம்மின் தம்மக்கள் அறிவுடமை' என்னும் வாக்கினுக்கேற்ப மதுராந்தகன் தந்தையினும் சிறந்த அறிவுடையவனாகத் திகழ்ந்தான்.

இத்தகைய பருவத்தில் தன் தந்தை ராஜராஜப் பெருமன்னன் நிகழ்த்திய கங்கப்போர், கலிங்கப்போர், குந்தளப்போர் ஆகியவற்றிற் கலந்துகொண்டு, அவற்றை வெற்றியுடன் நடத்திப் புகழ் எய்திய மதுராந்தகனைக் கண்ட ராஜராஜன் பெருமன்னன் பேருவகை கொண்டான். தன் மகன் பேராற்றலும் , பெருவீரமும் படைத்த வனாய் விளங்கியமையைக் கண்டு தக்கதோர் நன்னாளில் கி.பி.1012 ஆம் ஆண்டு இவனுக்கு இளவரசு பட்டங்கட்டி 'ராஜேந்திரன்' என்னும் அபிடேகக் சிறப்புப் பெயரை வழங்கி, அரசாங்க அலுவல்களில் கலந்துகொண்டு பல துறைகளிலும் சிறந்த பயிற்சி பெற்று வருமாறு செய்தான். எனவே, இவனது ஆட்சியின் தொடக்கம் 27-03-1012 லிருந்து 07-07-1012-க்குள் ஒரு நாளாக இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் இவன் கி.பி. 1012 ஆனித் திங்கள், மிருக சீரிட நட்சத்திரத்தில், அதாவது, 19-06-1012-ல் சோணாட்டு அரசுக் கட்டிலில் ஏறினான் என்பதைத் தெளிவாக்குகின்றன. அன்று முதல் மதுராந்தகன் என்ற பெயர் மாறி இவன் தன் கால முழுமையும் 'இராஜேந்திரன்' என்ற பெயருடன் விளங்கினான்.

இளவரசு பட்டம் கட்டப்பெற்ற நாளில் ராஜேந்திரன் நிறைந்த அனுபவமும் தேர்ந்த அரசியலறிவும் பெற்றிருந்தவனாதல் வேண்டும் என்பது உறுதி.

ராஜேந்திரனுக்கு இளவரசு பட்டம் கட்டப்பெற்று இராண்டாண்டுகள் கழிந்த பின்னர், கி.பி.1014இல் இவன் தந்தை ராஜராஜப் பெருமன்னன் இவனுக்கு முடி சூட்டிவைத்தனன்.

ராஜராஜன் தன் மகனான ராஜேந்திரனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் ஒரு தேவதானம் அளித்தான் என்ற செய்தி திருமுக்கூடல் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருத்தலானும், ராஜேந்திரனின் மூன்றாமாட்சியாண்டில் தந்தையும், தானும் இணைந்து ஆட்சி நடத்தியமைக்குத் தக்க சான்றுகள் கிடைத்துள்ளமையாலும், ராஜராஜன் தன் வாழ்நாளிலேயே தன்

ஒப்புயர்வற்ற மகனாகிய ராஜேந்திர சோழனுக்கு முடி சூட்டித் தமிழக வரலாற்றில் காணப்படாத புதுமையான தந்தையும் தனயனும் இணைந்த ஆட்சியினை ஏற்படுத்தினான் என்பதனை அறியலாம்.

சோழ மன்னர்கள் தம் ஆட்சியைக் கைக்கொள்ளும் போது ஒருவர்பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்டு வந்த ராஜகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களுள் இவன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து கொண்டான்.

மொகலாயப் பெருமன்னனான ஔரங்கசீப்பைப் போலவும், இங்கிலாந்து நாட்டின்கண் விக்டோரியா அம்மையார்க்குப் பின் முடிசூட்டப்பெற்ற எட்வர்டு மன்னரைப் போலவும், நம் ராஜேந்திரனும் தான் முதியவனாக ஆன போதுதான் ஆட்சியுரிமை பெற்றான் என்பது நினைவிற் கொள்ளத்தக்கதாகும். ஔரங்கசீப் தனது நாற்பத்தொன்றாவது வயதில் அரசு பட்டம் பெற்றான். ஆனால், ராஜேந்திரனோ ஔரங்கசீப்பைவிட முதிர்ந்த வயதில் ஆட்சிப்பட்டம் பெற்றான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

ராஜேந்திரன் சோழப் பெருநாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டபொழுது ஏறத்தாழ 50 வயது உடையவனாக இருந்தானாதல் வேண்டும் என்று பண்டாரகர் மா.இராசமாணிக்கர் அவர்கள் 'சோழ வரலாறு' எனும் தம் நூலில் குறிக்கின்றனர்.

ராஜேந்திர சோழன் பட்டமேற்றபோது அவனுக்கு ஏறத்தாழ நாற்பத்தைந்து வயதிருக்கலாம் என்று 'குலோத்துங்கன் மூவர்' என்னும் தமது நூலில் திரு.வ.பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். நாம் இதுபற்றி ஆய்வோம்.

ராஜராஜன் தன் தந்தையான இரண்டாம் பராந்தகசோழன், தமையனான ஆதித்த சோழன், சிற்றப்பனான் மதுராந்தக சோழக் ஆகிய மன்னர் பெருமக்கள் ஆட்சி புரிந்து இறந்த

பின்னர் பட்டம் பெற்றான் என்பதை முன்பே கண்டோம். எனவே, அவன் பட்டம் பெற்ற காலத்தில் முதியவனாயிருத்தல் வேண்டும் என்பது உறுதி.

இங்கிலாந்து நாட்டை ஆண்ட விக்டோரியா பேரரசியார் வயது முதிர்ந்தவர். அவரது ஆட்சிக் காலத்திலேயே அவருக்கு வயது முதிர்ந்த மகன் ஒருவர் இருந்தார். தாயாருக்குப் பிறகு பட்டம் பெற்ற அவர் முதுமையடைந்திருந்தார். அவரைப் போலவே நம் ராஜேந்திரனும் பட்டம் பெற்றபோது ஏறத்தாழ ஐம்பது வயதுடையவனாக இருந்தான். எனவேதான் ராஜராஜனது நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (கி.பி.988) இவன் 'ராஜேந்திர சோழ தேவன்' எனக் குறிக்கப் பெற்றுள்ளான்.

ராஜராஜனது ஆட்சிக் காலம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகாலம் நீடித்தது என்பதை வரலாறு உணர்த்துகின்றது. அக்காலத்தில் ராஜேந்திரன் தந்தைக்குதவியாக நிர்வாகத்தைக் கவனித்ததும், படைநடத்திச் சென்றும் அரும்பணியாற்றி வந்தான். எனவே, ராஜேந்திரன் அரியணையேறிய போழ்து அவன் வயது வந்த இளைஞனாயிருந்ததையும், தன் தந்தை பட்டம் பெற்ற சில ஆண்டுகளுள் சோழர் படைத்தலைவனாய் அமர்த்தப்பட்டதையும், அவன் தந்தை முப்பதாண்டு காலம் ஆட்சி புரிந்ததையும் ஆய்ந்து பார்க்குங்கால் நம் ராஜேந்திரன் அரியணையேறிய போழ்து ஏறத்தாழ ஐம்பதாண்டு நிறைந்தவனாதல் வேண்டும் எனக்கொள்ள இடமுண்டு.

கி.பி.1014ஆம் ஆண்டில் சோழப் பேரரசின் தனிப்பெரும் மன்னனாக முடிசூட்டப் பெற்ற ராஜேந்திரன், தன்னாட்டின் தலைநகரினைத் தஞ்சையினின்றும் மாற்றத் திட்டமிட்டான் ; எனவே, தில்லையம்பதிலிருந்து தென்மேற்கே இருபது கல் தொலைவிலுள்ள இடமும், அரச குடும்பம் வாழ்ந்து வந்த பழையாறை நகருக்கருகிலுள்ள இடமுமான கங்கை கொண்ட சோழபுரத்தைத் தேர்ந்தெடுத்தான் ; ஆங்குச் சிவனுக்கோர் கற்றளி எடுக்கவும் திட்டமிட்டான். இப்புதிய தலைநகர் கி.பி 1022

ஆம் ஆண்டில் உருவாயிற்று.

கி.பி.1041 ஆம் ஆண்டிலிருந்து கி.பி.1022 ஆம் ஆண்டு முடிய ராஜேந்திர சோழன் எங்கிருந்து ஆண்டு வந்தான் என்ற வினாவிற்குரிய விடையை நாம் ஆய்ந்து பார்த்தல் அவசியமாகும்.

ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டின் மரபுப் புகழ்ச்சியுரையுள் (பிரஸஸ்தி) காணப் பெறுகின்ற சில சொற்றொடர்களின் துணை கொண்டு இவன் இவ்விடைப்பட்ட காலத்தில் தில்லையம்பதி எனப் போற்றப்பெறும் சிதம்பரத்தில் மாளிகையமைத்துத் தங்கியிருந்தனன் என்பது புலப்படுகின்றது.

'நமக்கு யாண்டு எட்டாவது, நாள் நூற்றேழினால் நாம் பெரும்பற்றப் புலியூர் வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம் ராஜேந்திர சோழ பிரமாதி ராஜனில் நாமுண்ணா விருந்து'* என்று கரந்தைச் செப்பேட்டின் நான்காவது தகட்டின் உரைநடைப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 'அரசர்க்குச் சூடாமணி போன்றவனும், வியாக்கிர அக்கிரகாரத்தில் வாழ்ந்தவனுமான ராஜேந்திரன் எல்லா வேதங் களிலும் கரைகண்டவர்களான அந்தணச் சிரேஷ்டர்களுக்கு அக்கிரகாரம் முழுவதையும் நீர்வார்த்துக் கொடுத்தான்' என்று வடமொழிச் செய்யள் அறுபத்தைந்தாவது பாடலில் (கரந்தைச் செப்பேடு) குறிப்பிட்டுள்ளதாலும் ராஜேந்திரன் தங்கியிருந்த இடம் பெரும்பற்றப்புலியூரெனும் வியாக்கிர அக்கிரகாரமாகும் என்பது தெள்ளிதின் புலனாகும். பெரும்பற்றப்புலியூரென்பது சிதம்பரம் என்பது யாவருமறிந்ததே.

சிதம்பரம் சிறந்த சிவத்தலமானதாலும், புதிய தலைநகரத்தில் நடைபெறுகின்ற வேலைகளைக் கண்காணித்து வருவதற்குச் சிதம்பரம் ஏற்ற இடமாதலாலும் , அரச குடும்பம் வாழ்ந்து வருகின்ற பழையாறை நகருக்குச் சிதம்பரம் அருகிலுள்ளதாலும் , ராஜேந்திரன் கி.பி.1014 கி.பி.1022 ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட

காலத்தில் தங்கியிருந்தான் என்பது தெளிவாகிறது. மேலும், ராஜேந்திரனின் பெயரால் சிதம்பரத்தில் மாளிகை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்ததால் இக்கருத்து வலிவு பெறுகின்றது. ராஜேந்திரசோழன் இவ்விடைக்காலத்தில் பெரும்பற்றப்புலியூரில் தங்கியிருந்தனன் என்ற கருத்தினைக் கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு.சி.கோவிந்தராஜர் அவர்களும் தமது கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார் என்பது அறியத்தக்கதாகும்.

ராஜேந்திரன் தனது கங்கை வெற்றிக்குப் பின்னரே புதிய தலைநகரத்திற்குக் 'கங்கை கொண்ட சோழபுரம்' எனும் பெயரிட்டுக் கங்கை நீரால் தூய்மை செய்தான் என்பது கல்வெட்டால் அறியப்படுகின்றது.

போர்க்கலையில் தேர்ச்சியும், அரசியல் அறிவில் நல்ல முதிர்ச்சியும் , நற்பண்புகளில் உயர்ச்சியும் , அயர்ச்சியற்ற நன் முயற்சியும் போன்ற போற்றுதற்குரிய பல பண்பு நலன்களைப் பெற்றுத் திகழ்ந்த முதலாம் ராஜேந்திரன் புகழ்க்கொடி நாட்டியதுடன், தன்னை ஈன்றெடுத்த தந்தைக்கும் புகழினைத் தேடித்த தந்தான் ; தந்தைக் கேற்ற தனயனாய் ,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை

என்நோற்றான் கொல்எனும் சொல்

என்னும் வளமார்ந்த வள்ளுவனின் வாய்மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினான்.

இளமைக்காலம் முதலே பெற்றோரிடத்து அளவற்ற அன்பு கொண்டு அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனும் பொன் மொழியினை மனத்திற் கொண்டிருந்தான். இது தனது ஆட்சியின் பிற்காலத்தில் பெற்றோருக்குப் படிமம் எடுத்து நிவந்தம்விட்டமையான் இனிது பெறப்படும். இவன்,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்னும் வண்டமிழ் வள்ளுவனின் வாய்மொழிக்கிலக்கணமாய்த் திகழ்ந்தான். தன்னை இளமைக்கால முதல் போற்றி வளர்த்து, உயர்ந்தோனாகத் திகழத் தக்க முறையில் உருவாக்கிய தவமணியாம் செம்பியன் மாதேவிக்குத் தனது ஆட்சிக்காலத்தின் எட்டாம் ஆண்டாகிய கி.பி.1020 இல் படிமம் ஒன்று எடுத்து, அதனை நாகப்பட்டினம் வட்டம் செம்பியன் மாதேவி என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலில் எழுந்தருளுவித்து அதன் நாள் வழிபாட்டிற்குத் தேவையான நிவந்தமும் அளித்தான் என்பதனால் இவன் செய்ந்நன்றி மறவாச் செம்மல் என்பதனையறியலாம்.

5

ராஜேந்திரன் அரியணையேறியபோது அரசியல் சூழல்

கி .பி. 1012-ல் ராஜேந்திரன் இளவரசுப் பட்டம் சூட்டப்பெற்றான். இவன் இளவரசனாக இருந்தபோது தந்தைக்குப் பேருதவியாய்த் திகழ்ந்து, தந்தைக்கேற்ற தனயனாக விளங்கினான். ஆட்சியை மேற்கொண்டு திறமைமிக்க மன்னனாகத் திகழத் தேவையான ஆற்றலும், தகுதியும் இவன் பெற்றிருந்தான் என்பதை முன்னரே கண்டோம்.

சயங் கொண்ட சோழன் என்று வரலாற்றில் போற்றப் பட்ட ராஜராஜன் கி.பி.1014ஆம் ஆண்டில் இறந்தவுடன், ராஜேந்திரன் 'பரகேசரி' என்னும் பட்டம் புனைந்து சோழப் பேரரசின் மன்னனாக முடி சூட்டிக்கொண்டான்.

ராஜராஜ சோழன் மாவீரனாகத் திகழ்ந்தமையால், அவன் இறக்கும்போழ்து பரந்து பட்டதொரு பேரரசினைத் தன் மகனிடம் விட்டுச் சென்றான்.

ராஜேந்திரன் அரியணையேறியபோது சோழப் பேரரசு தற்காலத்தில் சென்னை மாநிலத்தையும், மைசூர் மாநிலத்தின் ஒரு பகுதியையும், ஈழ நாட்டின் வட பகுதியினையும் கொண்டதொரு பரந்துபட்ட பகுதியாகத் திகழ்ந்தது. ராஜேந்திரனின் போர் நடவடிக்கைகளையும், வெற்றிகளையும் அறிந்து கொள்வதற்குமுன் அவன் அரியணையேறிய போழ்து,

சோழப் பேரரசைச் சூழ்ந்துள்ள அரசுகளின் நிலைபற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

பாண்டியர்

பாண்டியர்கள் தமிழகத்தின் தென்கோடிப் பகுதியைப் பண்டுதொட்டு ஆண்டு வந்தனர். சங்க காலப் பாண்டியர் வரலாறு தெளிவாகக் கிடைக்கவில்லை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் வெற்றிகளைப்பற்றி நாம் சங்க நூல்களால் அறிகிறோம். அவன் பாண்டியர் புகழைப் பாரெங்கும் பரப்பினான்.

களப்பிரர், பல்லவர் எழுச்சியால் கி.பி. நான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சியுறத் தொடங்கிய பாண்டிய அரசு, கி.பி.ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மீண்டும் தலை தூக்கியது. பிந்திய பாண்டியர்களுள் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டிய முதல் மன்னன் கடுங்கோன் (கி.பி. 596-620) ஆவான். பாண்டியர் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலம் தமிழகத்தைச் சிறப்புடன் ஆண்டனர். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சோழருடன் இவர்கள் மணவினைத் தொடர்பும், நட்புரிமையும் பெற்றிருந்தனர். இந்நிலை விசயாலய சோழன் காலத்தில் மாறியது. இக்காலத்தில் பாண்டிய மன்னர்கள், சோழ மன்னரினும் மேம்பட்டு விளங்கினர். பாண்டியர்கள் சோழநாட்டைக் கைப்பற்றும் நோக்கத்துடன் குமமூக்கு, அரிசிலாற்றங்கரை, திருப்புறம்பியம் முதலிய போர்களில் ஈடுபட்டனர். திருப்புறம்பியப்போரில் பாண்டியர் தோற்றனர். இதற்கும் பின்னர் சோழ - பாண்டியர் பகைமை வளர்ந்தது.

தொடர்ந்து நடைபெற்ற பாண்டியர், சோழர் ஆதிக்கப்போர், தமிழக வரலாற்றின் சுவையானதொரு நிகழ்ச்சியாகும். இரண்டாம் வரகுண பாண்டியர் (கி.பி. 962-880) காலம் வரை பாண்டியர்களின் பெருமை உயர்ந்திருந்தது. இவர்களுடைய புகழும், வெற்றியும் திருப்புறம்பியப் போருக்குப் பின் வீழ்ச்சியடையத் தொடங்கியது. விசயாலயனுக்குப் பின்பு ஆண்ட

சோழ மன்னர், பாண்டியர்களைப் பலமுறை வென்று அடிமைப்படுத்தினர். பிற்காலச் சோழர் காலத்தில் சோழப் பேரரசு மீண்டும் தனது மேலாண்மையைத் தமிழகம் முழுவதும் நிறுவியது.

முதலாம் ராஜராஜன் பாண்டியர்களை இரு தடவை வென்று தன்னடிப்படுத்தினான். இவனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன் 'அமர புயங்கன்' என்பது திருவாலங்காட்டுச் செப் பேட்டால் அறியப்படுகிறது. ராஜராஜன் காலத்தில் பாண்டிய நாட்டில் சிற்றரசர் சிலர் இருந்தனர் என்பதும், அமரபுயங்கன் அவர்கட்குத் தலைவனாயிருத்தல் வேண்டும் என்பதும், அவர்களை ராஜராஜன் வென்றான் என்பதும், 'மலை நாட்டுச் சேரமானையும், பாண்டியர்களையும் எறிந்து கொன்ற பண்டாரம்' எனத் தஞ்சை ராஜராஜேச்சுரத்துச் சாசனங்களில் பன்முறையும் கூறப்பட்டி ருத்தலின் விளங்கும்.

ராஜராஜனால் வென்றடக்கப்பட்ட பாண்டியச் சிற்றரசர்கள், ராஜேந்திரன் அரியணையேறிய போது, சிறிது வலிமை பெற்றுச் சோழர்க்குத் திறை செலுத்தாமல் முரண்பட்டனர். இவர்கள் சோழ ஆட்சிக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தவும் காலம் நோக்கியிருந்தனர்; படை வலிமையைப் பெருக்கிக்கொண்டு இருந்தனர்.

முத்தரையர்

தொடக்கத்திலிருந்தே பல்லவரின் சிற்றரசர்களாக முத்தரையர் இருந்தனர். பாண்டியர் - பல்லவர் போராட்டத்தில் பல்லவருக்கு பக்க பலமாக முத்தரையர் இருந்து பாண்டியரை எதிர்த்துப் போர்புரிந்தனர். விஜயாலய சோழனுக்குப் பின்னர் பாண்டியரின் துணையுடன் சோழரை வீழ்த்தும் பணியில் முத்தரையர் முனைந்து செயல்பட்டனர். ஆதித்த சோழனின் ஆட்சிக் காலத்தில் சோழரின் சில பகுதிகளை முத்தரையர் கைப்பற்றிக்கொண்டு புரட்சி செய்தனர். ராஜராஜ சோழன் காலத்தில் சோழர்கள் முத்தரையரின் நட்பைப் பெற்றனர்.

இந்தச் சோழனின் இலங்கைப் படையெடுப்பில் அரங்கன்காரியான சோழ விச்சாதிர முத்தரையன் சோழர் சார்பாக இலங்கையில் போரிட்டான். ராஜேந்திரன் காலத்திலும் முத்தரையர் சோழருடன் நட்புப்பாராட்டினர்.

சேரர்

சோழ நாட்டிற்கு மேற்கே அமைந்துள்ளது சேர நாடு. இவர்களை மலைநாடென அழைக்கப்படும் சேரநாட்டினைப் பண்டைக்காலம் முதல் ஆண்டு வந்தனர்.

பிற்காலச் சோழர் காலங்களில், சேர மன்னர்கள், சோழ மன்னர்க்குத் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாய் விளங்கினர் என்பது கல்வெட்டுகளால் புலனாகிறது. அக்கல்வெட்டுகளின் துணைகொண்டு ஆராய்ந்து பார்க்குங்கால், முதலாம் ராஜராஜன் ஆட்சிக் காலத்திலேயே சேர நாடும், பாண்டிய நாடும் சோழரது ஆட்சிக்குள்ளாகிவிட்டது என்பது புலனாகிறது.

சேர மன்னனாகிய பாஸ்கர ரவிவருமன், முதலாம் ராஜராஜ சோழன் அனுப்பிய தூதுவனைப் பிடித்துச் சிறை வைத்தான். இதனால், ராஜராஜன் சேர நாட்டின்மீது படையெடுத்துச் சேர நாட்டின் கடற்கரைப் பட்டினமாகிய காந்தளூர்ச் சாலையில் சேரர் மரக்கலங்களையழித்துப் பெருவெற்றி பெற்றான். காந்தளூர்ச் சாலை என்பது தற்காலத்தில் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகும். இது 'வலியசாலை' எனவும் அழைக்கப்பெறுகிறது.

ராஜராஜன் காந்தளூர்ச் சாலையை வென்ற பின்பு, உதகையை வென்று தீக்கிரையாக்கினான். பின்பு விழிஞத்திலும் பெரும்போர் நிகழ்த்தி வெற்றி பெற்றான். இவ்வாறு கி.பி 978 முதல் கி.பி. 1036 வரை ஆட்சி செய்த பெருமைக்குரியவனான பாஸ்கர ரவிவருமன் ராஜராஜனிடம் தோல்வி கண்டான். இருப்பினும் ஈழ மன்னனின் உதவி பெற்றுச் சோழ வேந்தனை வெல்லுந்

தருணம் பார்த்திருந்தான்; சோழராட்சிக்கெதிராகக் கலகமும் செய்து வந்தான். எனவேதான் ராஜேந்திரன் சேர நாட்டின்மீது படையெடுக்க வேண்டிய தேவையேற்பட்டது. சேரநாடு முன்பு ராஜராஜனால் சோழ நாட்டுடன் இணைக்கப்பெற்று 'மலை மண்டலம்' எனப் பெயரிடப் பெற்றிருந்தது என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

ஈழம்

இது தமிழகத்தின் தெற்கே அமைந்த, கடலால் சூழப்பெற்ற நாடு. இப்பழந்தீவில் சிங்களர் வாழ்ந்து வந்ததால் சிங்களத் தீவு என்று அழைக்கப்பெற்றது. இது தற்காலத்தில் ஸ்ரீலங்கா என அழைக்கப் பெறுகிறது.

சங்ககாலச் சோழன் கரிகாலன், ஈழ நாட்டினை வென்றான் என்று நாம் முன்பே கண்டோம். பிற்காலச் சோழர் காலத்தில் ஈழ-சோழப் போர் கடுமையாக நடைபெற்றது.

முதல் பராந்தக சோழனிடம் தோல்வி கண்ட ராஜ சிம்ம பாண்டியன் ஈழத்தில் அடைக்கலம் புகுந்தான்; தன் முடியினையம், அரச சின்னங்களையும் ஈழ நாட்டு மன்னனிடம் அடைககலப் பொருளாக வைத்தான். இம்முடியினைக் கைப்பற்றும் நோக்க த்துடன் முதலாம் பராந்தகன் ஈழ நாட்டின் மீது படையெடுத்து, வட பகுதியை வென்றாயினும் முடியைக் கவர இயலவில்லை என்பதை முன் பகுதியில் கண்டோம்.

இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழன், ஈழத்தின்மீது படையெடுத்துத் தோல்வி கண்டு ஈழ மன்னனுடன் சமாதானம் செய்து கொண்டான். ஈழ மன்னர்கள் பாண்டிய மன்னர்க்குப் படையுதவி செய்து சோழரை வீழ்த்த முயன்று வந்தனர்.

முதலாம் ராஜராஜன் காலத்தில், ராஜேந்திரன் தலைமை யிலான சோழப்படை ஈழம் சென்று, வட பகுதியை வென்று, அதற்கு மும்முடிச் சோழ மண்டலமெனப் பெயரிட்டு, அனுராதபுரத்தை அழித்துப் பொலனருவாவைப் புதிய

தலைநகராக்கி மீண்டது. இப்போரில் தோல்வியுற்ற ஈழ வேந்தன் ஐந்தாம் மகிந்தன், காட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டான். ராஜேந்திரன் மன்னர் முடியைக் கைப்பற்ற இயலாமல் தன்னாடு திரும்பினான்.

காட்டில் ஒளிந்திருந்த மகிந்தன் சில ஆண்டுகள் கழித்துக் காட்டினின்றும் வெளியேறினான்; பெரும்படை திரட்டினான்; ஈழப் பகுதிகளைச் சோழர் ஆட்சியினின்றும் மீட்கத் தகுந்த காலத்தினை எதிர்நோக்கியிருந்தான். இச்சமயத்தில்தான், சோழநாட்டில் ராஜராஜன் ஆட்சி நீங்கி ராஜேந்திரன் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டான். ராஜேந்திரனும் ஈழநாடு முழுவதையும் வெற்றிகொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தான்.

சாளுக்கியர்

தென்னிந்திய வரலாற்றில் தமக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றவர் சாளுக்கியர் என்ற வீர மரபினர். தக்கணப் பகுதியில் மிக்க வலிமையுடன் ஆட்சி செலத்திய இவர்கள் இரட்டர், சாளுக்கியர், வல்லவர் என்று சோழர் காலக்கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர்.

இவர்கள் இரட்ட மண்டலத்தை ஆண்டு வந்தனர். துங்கபத்திரை யாற்றுக்கு வடக்கிலும், நருமதையாற்றுக்குத் தெற்கிலும், தக்கணத்தின் பெரும்பகுதியளவும் படர்ந்திருந்த நாடே இரட்ட மண்டலமாகும். இஃது ஏழரையிலக்கம் நில அளவுடையதால் இரட்டபாடி ஏழரையிலக்கம் என்று தமிழ் நூல்களிலும், கல்வெட்டுகளிலும் குறிக்கப்பெறுகின்றது.

இந்நாட்டினைத் தொடக்கக் காலங்களில் சாதவாகன வேந்தர்கள் ஆண்டு வந்தனர். பின்னர் இராட்டிரகூட மன்னர்கள் இந்நாட்டினைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தினர். இவர்களையும் வென்று இரட்டபாடியின் பெரும்பகுதியினைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தவரே சாளுக்கியர் ஆவர்.

சாளுக்கியர் யாவர்? அவர்களது பூர்வீகம் யாது? என்பன போன்ற வினாக்கட்கு வரலாற்றறிஞர்களிடையே ஒருமித்த கருத்துக் காணப்படவில்லை. இவர்கள் வட இந்திய அரச குலத்தினர் என்பது மட்டும் தெளிவு.

சாளுக்கியர் மூன்று பிரிவினராக ஆண்டனர் என்பதை வரலாறு உணர்த்துகிறது. இவர்களுள் முதல் பிரிவினர் வாதாபியைத் தலைநகராகக் கொண்ட மேலைச் சாளுக்கியர் ஆவர். இவர்கள் கி.பி.547 முதல் கி.பி.753 முடிய செங்கோல் செலுத்தினர். இவர்கள் பாதாமி (வாதாபி)யின் முந்திய சாளுக்கியர் எனவும் அழைக்கப் பெற்றனர். இரண்டாவது பிரிவினராகிய வேங்கியைத் தலைநகராகக் கொண்ட கீழைச் சாளுக்கியர் கி.பி.615 முதல் கி.பி.1076 இல் சோழ - சாளுக்கிய அரசிணைவு ஏற்படும்வரை நல்லாட்சி புரிந்தனர். மூன்றாவது பிரிவினராகிய கல்யாணி நகரைச் சார்ந்த பிந்திய சாளுக்கியராட்சி கி.பி.973 முதல் கி.பி.1200 முடிய நீடித்தது. இம்மூவரேயன்றிக் குஜராத்தைச் சார்ந்த சோலங்கிகள் (சாளுக்கியர்) பத்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்தனர்.

கல்யாணிச் சாளுக்கியர்

இரண்டாம் தைலபன் என்னும் மன்னன் இராட்டிர கூட மன்னனான இரண்டாம் கர்க்கரை (கருக்கரை) கி.பி. 973-ல் வென்று, அரியணையிலிருந்து வெளியேற்றி மேலைச் சாளுக்கியக் கிளையைத் தோற்றுவித்தான். இவர்கள் கி.பி 973 முதல் 997 முடிய ஆட்சி புரிந்தனர். இவர்கள் தொடக்கத்தில் மால்கெட அல்லது மான்ய கேதம் என்னும் நகரினைத் தலைநகராகக் கொண்டனர்.

பின்னர் கல்யாணி இவர்களால் தலைநகராகக் கொள்ளப்பட்டது. இது கலியாணபுரமெனவும் அழைக்கப்பெற்றது. இது நைசாம் மாநிலத்தில் பீடார் மாவட்டத்திலுள்ளதோர் அழகிய நகரமாகும். இது கி.பி.978 முதல்

கி.பி. 1127 வரை மேலைச சாளுக்கியரின் தலைநகரமாக விளங்கியது.

தைலபன் காலத்தில் மேலைச் சாளுக்கியரின் புகழ் உச்சநிலை யிருந்தது. இவர்கள் பாதாமிச் சாளுக்கியரின் வழியினர்தானா? என்பது குறித்து வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. இருப்பினும் மேலைச் சாளுக்கியர் கீழைச் சாளுக்கியர்களுடன் சம்பந்தப்பட்டவர்களாவர் என்பது மட்டும் உறுதி.

இந்நாட்டினைச் சத்தியசிரயன் கி.பி. 997 முதல் 1008 முடிய ஆட்சி செய்தான். இவர்கள் காலத்தில் சோழ - சாளுக்கியப் போர் தொடர்ந்தது. சோழரின் மேலாண்மை வேங்கி நாட்டில் நிறுவப்பட்டது குறித்துப் பொறாமை கொண்ட சத்தியசிரயன் வேங்கி நாட்டின்மீது போர் தொடுத்து, அந்நாட்டின் ஒரு பகுதியினைக் கைப்பற்றிக் கொண்டான்.

இதைக் கேள்வியுற்ற சோழ மன்னனான முதலாம் ராஜராஜன், சத்தியசிரயனுடன் போர் தொடுத்தான். ராஜராஜன் சத்தியசிரயனோடு நேருக்கு நேராகக் குதிரை மீதமர்ந்து போர் புரிந்து வெற்றி கண்ட நிகழ்ச்சியினைச் 'சத்தியசிரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீ பாத புட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற் பூ' என்னும் கரந்தைச் செப்பேட்டுத் தொடரால் அறியலாம். சோழர் வனவாசியையும், இராய்ச்சூரின் பெரும் பகுதியையும் கைப்பற்றினர்.

கிருஷ்ணா, துங்கபத்திரா ஆகிய பேராறுகட்கிடையில் அமைந்த இடைதுறை நாடு அல்லது 'எடத்தோர் இரண்டாயிரம்' எனக் குறிப்பிடப்படுகின்ற நாட்டையும், மைசூர் மாநிலத்தின் வடமேற்குப் பகுதியான 'வனவாசி' அல்லது 'வனவாசிப் பன்னீராயிரம்' எனக் கல்வெட்டுகளால் குறிக்கப்பெறும் பகுதியினையும் 'மண்ணைக் கடக்கம்' என அழைக்கப்பெற்ற மானியகேதம் பகுதியினையும் மேலைச் சாளுக்கியரே ஆண்டு வந்தனர்.

ராஜராஜ சோழன் தன் மகனாகி ராஜேந்திரன் தலைமையில் ஒரு பெரும்படையை அனுப்பிச் சாளுக்கியருடன் போரிட ஆணை பிறப்பித்தான். சாளுக்கிய மன்னனான சத்தியாசிரயனுக்கும், ராஜேந்திரனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முடிவில் ராஜேந் திரன் வெற்றி பெற்றான். இவ்வெற்றிகளை ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி விரித்துரைக்கின்றது. எனவே ராஜராஜ சோழன் காலத்தில் மேலைச் சாளுக்கியரின் வளர்ச்சி தடைப்பட்டது; சோழரின் உயர்ச்சி ஓங்கியது என அறியலாம்.

சத்தியசிரயனுக்குப் பின் ஐந்தாம் விக்கிரமாதித்தர் கி.பி.1009 முதல் கி.பி.1014 முடியவும் ஆட்சி புரிந்தார். இரண்டாம் அய்யனாருக்குப் பின்னர் அரியணையேறியவர் ஐந்தாம் விக்கிரமா தித்தரின் தம்பியான இரண்டாம் செயசிம்மர் அல்லது சகதேக மல்லர் ஆவார். இவர் கி.பி. 1015 முதல் கி.பி.1042 வரை ஆட்சி புரிந்தார். இவர் பெல்லாரி, மைசூர் ஆகிய பகுதிகளை வென்று தமது பேரரசினை விரிவுபடுத்தினார். இவர் சோழர்களை வீழ்த்துவதையே தம் நோக்கமாகக் கொண்டார். தொடர்ந்து நடைபெற்ற சோழ -சாளுக்கியப் போரை இவர் ஒரு முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டித் தம் படைகளைப் பெருக்கினார்; சோழப்பகுதியில் ஊடுருவல் செய்தார்; சோழர்களை வென்றதாகவும் கல்வெட்டுகளில் குறித்துக்கொண்டார். ராஜேந்திரன் அரியணையேறிய போழ்து சோழர்களின் வலிமைமிக்க பகைவராக விளங்கியவர் கல்யாணிச் சாளுக்கியரே என்பதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. கல்யாணிச் சாளுக்கியரின் வளர்ச்சி ராஜேந்திரனுக்குப் பேரிடியானதொன்றாகும்.

வேங்கியின் கீழைச் சாளுக்கியர்

இம் மரபினைத் தோற்றுவித்தவர் விஷ்ணு வருத்தனர். இவர் வாதாபிச் சாளுக்கிய மன்னான இரண்டாம் புலிகேசியின் உடன் பிறப்பாவார். இதனால், கீழைச் சாளுக்கியரும் மேலைச்

சாளுக்கியரும் தாயத்தினராவார். இவர்களது தலைநகர் வேங்கி. கிருஷ்ணா, கோதாவரி ஆறுகட்கு இடைப்பட்ட பகுதி வேங்கி நாடாகும். இது வேங்கை நாடு என்றும் பெயர் பெறும். இவர்கள் தாய்மொழி தெலுங்கு. இவர்கள் வடமொழியினைப் பெரிதும் போற்றினர்.

விசயாலயன் காலத்திலிருந்து பிற்காலச் சோழர்கட்கும், மேலைச் சாளுக்கியர்கட்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தது. சோழர், மேலைச் சாளுக்கியரை வெல்லக் கருதிக் கீழைச் சாளுக்கியரைத் தமக்கு நட்பினராகவும், உறவினராகவும் கொண்டனர். இதனால், வலிமை மிக்க மேலைச் சாளுக்கியரும், சோழர் ஆதரவு பெற்ற கீழைச் சாளுக்கியரும் ஒன்று சேரும் வாய்ப்புத் தடைப்பட்டது. இது சோழரின் அரசியல் சூழ்ச்சியாகும். மேலைச் சாளுக்கியரும், கீழைச் சாளுக்கியரும் இணைந்திருப்பின் தமிழக வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்பது திண்ணம்.

கி.பி. 965 இல் அரிஞ்சய சோழன், கீழைச் சாளுக்கிய மன்னன் வீமனின் மகளாகிய வீமன் குந்தவையை மணந்து கொண்டான். (இவன் அரையன் ஆதித்தன் வீமன் மகள் ஆவள் என்னும் கருத்தும் வரலாற்றறிஞர் சிலரால் கூறப்படுகிறது).

இரண்டாம் பராந்தக சோழன் தன் மகள் குந்தவையை வல்லவ ரையன் வந்தியத் தேவனுக்கு மணம் செய்வித்துக் கீழைச் சாளுக் கிய உறவை வலுப்படுத்தினான். (வல்ல வரையன் வந்தியத்தேவன் கீழைச் சாளுக்கிய வமிசத்தினன் அல்லன் என்ற கருத்தும் அறிஞர் சிலரிடையே நிலவுகிறது). இவர்கள் இராட்டிரகூடர்களுடன் இடைவிடாது போர் புரிந்து வந்தனர். இராட்டிரகூடர்களின் வலிமை குன்றியபின், சோழர் கீழைச் சாளுக்கியர்மீது தமது மேலாண்மையை நிறுவினர்.

முதலாம் ராஜராஜன் காலத்தில், கீழைச் சாளுக்கிய நாட்டில் பட்டத்தகராறு ஏற்பட்டு, உட்பூசல்கள் மலிந்தன. எனவே, ராஜராஜன் கி.பி.999 இல் வேங்கியைக் கைப்பற்றி மூத்த

கிளையினரை அதிகார பீடத்தில் அமர்த்தினான். சோழ, சாளுக்கிய உறவை வளர்க்க எண்ணிய ராஜராஜன் தன் மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணம் செய்வித்தான் என்பததை முன்னரே கண்டோம். இச்செயலால் கீழைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டின் சிறந்த உறுப்பாகவே விளங்கியது.

ராஜேந்திர சோழன் அரசு கட்டிலேறிய போழ்தும் கீழைச் சாளுக்கியர் சோழரின் நட்பினராக இருந்து உறுதுணையாக, ஊன்றுகோலாக விளங்கினர் என்பது நோக்குதற்குரியது. வேங்கி நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளினால், சோழர்கட்கும் மேலைச் சாளுக்கியரை நிலவிய பகைமை முற்றியது. கீழைச் சாளுக்கியரை மேலைச் சாளுக்கியர் தாக்குகின்ற காலை, சோழர் கீழைச் சாளுக்கியருக்குப் படையுதவியளித்தனர்.

கலிங்க நாடு

கோதாவரியாறு, மகாநதி ஆகிய இரண்டனுக்கும் இடையில் வங்கக் கடலைச் சார்ந்திருந்தது கலிங்க நாடு. இந்நாட்டினை ஆண்ட மன்னர்கள் கலிங்க மன்னர் எனப் பெயர் பெற்றனர். இது வடகலிங்கம், தென்கலிங்கம் என இரு பிரிவினைக் கொண்டது. இங்கு நெய்யப்பட்ட நேர்த்தியான ஆடைகள் நாட்டின் பெயராலேயே கலிங்கம் எனக் குறிக்கப்பெற்றன. கலிங்கர்கள் சோழர்கட்குக் கட்டுப்பட்டவர்களாகவும், நட்பினராகவும் வாழ்ந்தனர்; சில சமயங்களில் சோழருடன் பகைமை பூண்டனர். முதல் ராஜராஜன் கலிங்கரை வென்றான் என்பதை நாம் முன்பே கண்டோம்.

மேலைக் கங்கர்கள்

மேலைக் கங்கர் கி.பி.நான்காம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் மைசூர் சீமை முதலியன அடங்கிய கங்கபாடியை ஆண்ட அரச மரபினர்.

'பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்'

என அப்பக்கத்து மன்னர் கூட்டத்தில் ஒருவராக இவரை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தின்கண் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் தொடக்கக் காலத்தில், தங்கச் சுரங்கமுள்ள கோலாரைத் (குவலாளபுரம்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இது கொங்கு நாட்டின் அணித்தே உளது. இவ்வமி சத்தைக் கொங்கு மணிவருமன் எனப் புகழ்பெறும் முதலாம் மாதவர் (கி.பி.400-435) தோற்றுவித்தார்.

அரிவருமன் காலத்தில் 'தலைக்காடு' தலைநகராக்கப்பட்டது. பெரும்பான்மையான கங்க மன்னர்கள் சமண சமயத்தை ஆதரித்தனர். இவர்கள் கன்னட, வடமொழி, இலக்கிய வளர்ச்சிக்குப் பேராதரவு தந்தனர்.

பல்லவருக்கும், பாண்டியருக்கும் கி.பி.880 இல் திருப்புறம்பியத்தில் நடந்த போரில், கங்க மன்னனான பிருதிவிபதி, பல்லவர் பக்கம் நின்று, விசயாலய சோழனுக்கு ஆதரவாகப் போரிட்டு இறந்தான். இவர்கள் தமிழ் மொழியின்பால் பற்றுடையவர்கள். இவர்கள் பெரும்பாலும் சோழர்கட்குத் துணை புரிந்தனர்.

இராக்கச கங்கரின் காலத்தில் (கி.பி. 985 - 1024) சோழர் கி.பி.1004 இல் தலைக்காட்டுப் பகுதியினை வென்று கைப்பற்றினர். கங்கர்கள் சோழர்களின் தொடர்பால் 'உத்தம சோழ கங்கன்', 'கங்கன் அழகிய சோழன்' என்னும் பெயர்களைப் பெற்றனர் என்றும் அறிகிறோம்.

கீழைக் கங்கர்கள்

இவர்கள் எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் கலிங்கத்தைத் தலைநகராகக் கொண்டு கஞ்சம் பகுதியினை ஆண்டு வந்தனர். இவர்களின் முந்தைய வரலாற்றினைத் தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. இவர்கள் இந்து சமயத்தினைச் சார்ந்தவர்கள்.

கீழைக் கங்க மன்னர்களுள் ஐந்தாம் வச்சிரகஸ்தர் (வச்சிர

ஹஸ்தர் கி.பி. 1038-68) புகழ்பெற்றவர். இவர் காலத்தில் தான் கலிங்கர்கள், சோழ ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்றுத் தன்னாட்சி செலுத்தினர். இவர்கள் சோழருடன் திருமண உறவுகள் கொண்டனர். கீழைக் கங்கர்கள், கஜபதி என்ற விருதினைத் தங்கள் பெயருடன் இணைத்துக்கொண்டனர்.

கொங்கு நாடு

கொங்கு நாடு என்பது தற்காலத்தில் சேலம், கோயம்புத்தூர், திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரைச் சுற்றிலுமுள்ள பகுதிகள், நீலகிரி ஆகிய மாவட்டங்களடங்கிய பெருநிலப்பரப்பாகும். கரூர், கொங்கு நாட்டின் தலைநகரமாகும். இது மலைகள் நிறைந்த பகுதி. இது சோழ நாட்டின் மேற்புறத்தில் உள்ளது. இப்பகுதி விசயாலய சோழன் காலத்தில் கைப்பற்றப்பட்டது. அவன்பின் ஆண்ட ஆதித்த சோழனும் கொங்கு நாட்டில் சோழப் பேரரசை நிறுவிப் பல கோயில்களை அங்குக் கட்டினான்.

முதல் பராந்தகனும் கொங்கு நாட்டை வென்றான். அங்கிருந்து கொண்டுவந்த பொன்னைக்கொண்டு சிற்றம்பலம் பொன் வேய்ந்தான். தனது வெற்றியின் சின்னமாகக் கொங்கு நாட்டில் 'கொங்கு நாட்டுப் பராந்தகபுரம்' என்று ஓர் ஊருக்குப் பெயரிட்டான்.

மா மன்னன் முதலாம் ராஜராஜனும் கொங்கு நாட்டின் மீது படையயெடுத்துக் குடகு, நீலகிரி ஆகிய பகுதிகளை வென்றான்; அவற்றைத் தன் ஆட்சிக்குட்படுத்தினான். அந்நாட்டை ஆளுவதன் பொருட்டுச் சோழ அரசப் பிரதிநிதிகளை அனுப்பினான். இவர்கள் கொங்கு - சோழப் பிரதிநிதிகள் என்று அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் பிற்காலத்தில் சோழர்களினின்றும் பிரிந்து தன்னாட்சியை நிறுவிக் கொங்குச் சோழர்கள் என்ற புதிய மரபினைத் தோற்றுவித்தனர். சோழர் காலக் காசுகள் பல, கொங்கு நாட்டில் காணப்படுகின்றன.

ஹொய்சாலர்

இவர்கள் மைசூர் மலைப் பகுதிகளில் முதன் முதலில் ஆட்சி புரிந்தனர். பின்னர் சமவெளிப் பகுதிகளிலும் தமது ஆட்சியினை விரிவுபடுத்தினர். இவர்கள் பத்தாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கினர். சோழர்களின் சிற்றரசனான அப்பிரமேயன் என்பவன் அண்டையிலுள்ள மலைநாட்டுப் பகுதிகளை வென்று புகழ் பெற்றான். இவனை ஹொய்சாலர்கள் வென்று தமது புகழினை நிலைநாட்டினர். இவர்கள் கி.பி. 1006-குள் கொங்கவாலர்களையும் வென்றடக் கினார்கள்.

ஹொய்சாலர்கள் யாதவ இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் தொடக்க காலத்தில் கல்யாணியின் பிந்திய சாளுக்கியர்களின் கீழ்க் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக விளங்கினர். இவ்வமிசத்தைச் 'சாலர்' என்பவன் தோற்றுவித்தான். முதலாம் வினயாதித்தன் ஹொய்சாலர் வரலாற்றில் முதல் மன்னனாவான். இவன் ஹொய்சால அரசைக் கி.பி.1006 முதல் 1022 வரை ஆண்டான். இவன் மைசூர் மாநிலத்திலுள்ள 'சோசவீரைத்' தலைநகராகக் கொண்டு, அதைச் சுற்றியுள்ள சிற்றரசை ஆண்டு வந்தான். இவன் மேலைச் சாளுக்கியரின் நம்பிக்கைக்குகந்த சிற்றரசனாக ஆண்டு வந்தான்.

ஹொய்சாலர்கள் பிற்காலத்தில் புகழ்பெற்றுத் தனியாட்சி நிறுவினர். இவர்களது ஆட்சி கி.பி.1346 வரை நீடித்தது. ராஜேந்திரன் சோணாட்டில் அரியணையேறியபோது, ஹொய்சால மன்னன், முதலாம் வினயாதித்தன் வலிமை மிக்க மன்னனாகத் திகழவில்லை.

மாளவப் பரமாரர்கள்

பரமாரர்கள் ராஜபுத்திர மரபினைச் சார்ந்தவர்கள். கூர்ஜரப் பிரதிஹாரர்கள் வீழ்ச்சியினைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு இவர்கள் தங்கள் ஆதிக்கத்தினை ஏற்படுத்தினர். உருபந்திரர் என்னும் மன்னர், இம்மரபினைக் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் நிறுவினர்.

முன்யை பரமாரர்கள் இராட்டிரகூட மன்னர்கட்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக ஆண்டனர். இவர்களின் தலைநகரம் 'தார்'. இம்மரபின் அடுத்த முக்கிய நகரமாக உச்சயினி விளங்கியது. இரண்டாம் 'வரிசிம்மர்' என்ற மன்னர் பிரதிஹாரரிடமிருந்து மாளவத்தைக் கைப்பற்றினார்.

வரிசிம்மருக்குப்பின் இவர் மைந்தர் இரண்டாம் சீயாகா கி.பி.948 முதல் கி.பி.974 முடிய இம்மரபின் கீர்த்தி பெற்ற மன்னராக விளங்கினார். இவர் தமது ஆட்சியின் முற்பகுதியில் பிரதிஹாரர்களிடமிருந்து தமது மரபினை விடுவித்தார். ஆட்சியின் பிற்பகுதியில் இராட்டிரகூடத் தளையிலிருந்து தமது மரபினை விடுவித்துக் கொண்டார். எனவே, இவர் இம்மரபின் முதல் சுதந்திர மன்னராவார்.

இம்மரபின் தலைசிறந்த மன்னர் முதலாம் போஜர் ஆவார். இவர் கி.பி.1010 முதல் கி.பி. 1055 முடிய ஆட்சி புரிந்தார். இவர் மாபெரும் வீரர்; வெற்றிகள் பல பெற்ற புகழாளர்; கலைகளையும், கல்வியையும் ஆதரித்த புரவலர்; தாமே சிறந்த அறிஞராகவும் விளங்கியவர். இவர் தமது வலிமை மிகுந்த படையின் துணைகொண்டு இரண்டாம் செயசிம்மன் என்ற கல்யாணிச் சாளுக்கிய மன்னனையும், ஆதிநகர மன்னனையும், கொங்கண மன்னனையும் வென்றார். இவர் சாகம்பரிச் சாகமானர்களையும் வென்ற பெருமைக்குரியவர்; ராஜேந்திரரின் சம காலத்தவர்; ஆதரவாளர்; சோழர்களின் கங்கைப் படையெழுச்சியின்போது பேருதவி புரிந்தவர்.

பண்டில்கண்டின் சாந்தேலர்கள்

சாந்தேலர்களும் ராஜபுத்திர மரபினைச் சார்ந்தவர்கள். இவர்களும் பிரதிஹாரர்கள் வீழ்ச்சியுற்றபோது ஏற்றம் பெற்றனர். இவர்கள் இந்துக்களாக மாறியகோண்டு இனத்தவராவர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் நானுகா என்ற மன்னன் இம்மரபினைத்

தோற்றவித்தான்.

கி.பி. 954 முதல் 1002 வரை ஆட்சி செய்த டங்கா என்ற மன்னன் சாந்தேல மரபின் முதலாவது சுதந்திர மன்னன் ஆவான். இவன் முதலாம் 'யசோ வருமனின்' மகனாவான். இவன் பிரதிஹாரத் தளையிலிருந்து தனது மரபை விடுவித்துத் தனியாட்சி மேற்கொண்டான். இவன் பல போர்களில் வென்று 'மகா ராஜாதி ராஜர்' என்ற தோரணையான பட்டத்தை மேற்கொண்டான்.

இவனுக்குப்பின் இவன் மகனான கண்டா கி.பி.1002 முதல் 1019 முடிய ஆட்சி புரிந்தான். இவன் முதலாம் ராஜேந்திரனின் சம காலத்தவனாக இருந்தான். இவனுக்குப் பின் ஆட்சி செய்த வித்தியாதரன், பரமார மன்னன் போசன், கலசூரி (Kalachuri) மன்னன் காங்கேயன் ஆகியோருடன் நட்புப் பூண்டான் என்பதையும் அறிகிறோம்.

வங்க பீகாரின் பாலர்கள்

வங்கத்தில் கொண்ட மன்னனான சசாங்கனின் மறைவுக்குப் பின்னர் குழப்பமும், கொந்தளிப்பும், அமைதி யின்மையும் அரசோச்சின. இந்நிலையைப் பயன்படுத்தி முதலாம் கோபாலர் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்கத்தில் புதியதொரு ஆட்சியினை நிறுவினர். இது பால மரபினாட்சியென அழைக்கப்பெறுகின்றது.

பாலர் ஆட்சிக்கு வந்ததால் வங்கத்தில் முழு அமைதி நிலவியது. இவ்வமிசத்தின் தலைசிறந்த மன்னரான தேவபாலர் என்பவர் கி.பி. 815 முதல் 854 முடிய அரசோச்சினார். இவரது காலத்தில் பாலர்களின் புகழ் மேலோங்கியது; காம்போஜம், ஒரிசா, அஸ்ஸாம் ஆகியவற்றைத் தமது அரசுடன் இணைத்துக்கொண்டனர். ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாலர்களின் புகழ் மங்கியது. இவர்கள் மகதத்தையும், (தென் பீகார்) வங்கத்தையும் சிறிது காலம்

இழந்திருந்தனர்.

இம்மரபின் இழந்த பெருமையினை மீண்டும் மீட்க, அரும்பாடுபட்டவர் முதலாம் மகிபால ராவார். இவர் கி.பி. 992 முதல் 1040 முடிய இம்மரபினைச் சிறப்புடன் ஆண்டார். இவர் ஆட்சியைக் கைப்பற்றிய போழ்து மகதம் (தெ. பீகார்) மட்டும் இவரது ஆட்சியிலடங்கி யிருந்தது. மற்றப் பகுதிகளைக் காம்போஜர்களும், சந்திரர்களும் ஆண்டு வந்தனர். இவர் தமது வலிமையினால், இழந்த பகுதிகளை மீட்டார்; வடபீஹாரையும் அரதினி முயன்று மீட்டார். எனவே, இவர்பாலர்களின் பேரரசை இரண்டாம் முறையாகத் தோற்றுவித்தவர் என்று கூறுதல் பொருந்தும்.

இவரது நாடு உத்தரலாட மெனவும் அழைக்கப்பெறுகிறது. இது பீகார், வங்காள மாநிலங்களில் கங்கை யாற்றின் தென் கரையில் தக்கணலாடத்திற் கருகில் அமைந்திருந்தது. இது தண்டபுத்தி நாட்டிற்கு வடக்கிலும், கிழக்கிலும் பரவியிருந்தது. பாலர்களின் இழந்த பெருமையினை மீட்ட மகிபாலர், பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெருமன்னராகத் திகழ்ந்தார். இவரது பரந்த பேரரசு, பல உள்நாடுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. இவ்விதம் இவரது மேலாதிக்கத்தை ஏற்று ஆட்சி புரிந்த சிற்றரசர்களைப் பற்றி ஈண்டுச் சிறிது ஆய்வோம்.

தண்டபுத்தி

ஒட்டர் தேசத்திற்கும், வங்காளத்திற்கும் நடுவில் சுவர்ணரேகை ஆற்றின் இரு கரையிலும் பரவியிருந்த நாடு, தண்டபுத்தியென வழங்கப் பெற்றது. இது வங்க மாநிலத்தில் மிதுனபுரி மாவட்டத்தின் தென் பகுதியினையும், தென் மேற்குப் பகுதியினையும் தன்னகத்தே கொண்டு நிலவிய நிலப்பரப்பாகும். முற்காலத்தில் வங்க நாட்டிலடங்கிய பர்த்துவான் மாவட்டம் வர்த்தமான புத்தியென அழைக்கப்பட்டதாகவும், அதன் ஆளுமைக்குட்பட்ட ஒருசிறு

நாடே தண்டபுத்தி என வழங்கப்பெற்றதாகவும் அறிகிறோம். இப் பகுதியினைத் தன்மபாலன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். இவனது பெயருக்கும், மகிபாலன் பெயருக்கும் உள்ள ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு இவன் மகிபாலனின் நெருங்கிய உறவினனாகவோ, அல்லது தாயகத்தினனாகவோ இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இட முண்டு. ஏனெனில், அக் காலத்தில் மன்னரின் நெருங்கிய உறவினர்களே சிற்றரசர்களாகவும் அரசப் பெயராளராகவும் (பிரதிநிதி) நியமிக்கப்படுதல் வழக்கமா யிருந்தது.

தக்காண லாடம்

இது தண்டபுத்தி நாட்டிற்கு வடக்கில் அமைந்த நாடாகும். இது பீகார், வங்காள மாநிலங்களில், புனித கங்கையின் தென்கரையி லமைந்த, கங்கைக்கரை நாடாகும். இது செழிப்பான பகுதியாகும். இரணசூரன் என்ற மன்னன் தக்காண லாடத்தை ஆண்டு வந்தான். பண்டைக் காலத்தில் 'ராடா' என்ற ஒரு பகுதி வங்காளத்தில் இருந்தது; அதுவே கல்வெட்டுகளில் 'லாட தேசம்' எனும் பெயரால் குறிக்கப் பெற்றது. பின்னர் லாட என்பது 'லாடம்' என்று வழங்கப்பெற்றது.

வங்காள தேசம்

கிழக்கு வங்காளமே பண்டைக் காலத்தில் வங்காள தேசமென்று அழைக்கப் பெற்றது. வங்காள தேசம் கோவிந்த தச்சன் எனும் மன்னனால் ஆளப்பட்டு வந்தது. மேலே கூறப்பட்ட தக்காண லாட மன்னனும், வங்க தேச மன்னனும், தண்ட புத்தி மன்னனும், உத்திரலாடப் பெருமன்னனான மகிபாலனுக்குக் கீழ்ப்படிந்த குறுநில மன்னர்களாயிருத்தல் வேண்டுமென்பதை ராஜேந்திரன் மெய்க்கீர்த்தி உணர்த்துகிறது.

சக்கரக்கோட்டம்

இது மத்திய மாகாணத்தில் விசாகப்பட்டிணம் மாவட்டத்திற்கு வடமேற்கில் வத்ச நாட்டிலமைந்த நகரமாகும்.

இந்திராவதியாற்றின் தென் கரையில் அமைந்துள்ள சக்கரக்கோட்டம், வத்ச நாட்டின் தலைநகரான ராஜபுதனத்திலிருந்து, எட்டுக்கல் தொலைவில் அமைந்திருந்தது. இது தற்காலத்தில் 'சித்திரகூடா' எனவும் சித்திரகோடா எனவும் அழைக்கப்பெறுகின்றது. இது பஸ்தர் மாநிலத்தின் நாகவம்ச முதல்வனான மதுராந்தகனால் கி.பி. 1065இல் ராஜபுரச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'சித்திர கோட்டயமே' என வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.

கி.பி. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சக்கரக் கோட்டத்தை நாக மரபினர் எனத் தங்களைக் கூறிக்கொண்ட மன்னர்களாண்டு வந்தனர். இவர்கள் நாக மரபினராதலின் இவர்கள் ஆண்டநாடும் மாசுண தேசம் எனப் பெயர்பெற்றது. மாசுண தேசம் என்பது பாம்புகள் நிறைந்த நாடு எனப் பொருள்படும்.

மேலும், ராஜபுரச் செப்பேட்டில் சிந்தகவத்து மன்னர்கள் தங்களை 'நாக வம்சோத் பவா' அதாவது நாக வம்சத்தில் பிறந்தவர்களென்றும், 'போகவதி புரவரேஸ்வரா' அதாவது நகரங்களில் தலைசிறந்து விளங்குபவர் என்றும் குறிக்கின்றனர். போகவதி அதிபதிகள் என்றும் குறிப்பிடுகின்றனர். மாசுணி தேசம் வேங்கி நாட்டின் வடமேற்குப் பகுதியிலமைந்த அண்டை நாடாகும்.

மதுரை மண்டலம், நாமணைக் கோணம், பஞ்சப்பள்ளி ஆகிய சிறு பகுதிகளும் வத்ஸநாட்டில் அமைந்த பகுதிகளாகும். இவைகள் மாசுணி தேசத்தின் ஆளுமையின்கீழ் அமைந்திருந்த சிறுசிறு பகுதிகளாகும். ராஜபுரச் செப்பேடு மதுராந்தகன் என்பவனால் வெளியிடப் பெற்றிருத்தலின், அவன் ஆண்ட மதுரை மண்டலம் பெரிய மண்டலமாக விளங்கி யிருத்தல் வேண்டும். மேற் கூறிய பகுதிகளில் ராஜேந்திரனது படைவீரர்கள் தாக்குதல் நடத்தினர் என்பதை ராஜேந்திரன் மெய்க்கீர்த்தியால் அறியலாம்.

ஒட்டரதேசம்

ஒட்டர தேச மென்பது தற்காலத்திய ஒரிசா மாநிலமாகும். ராஜேந்திரன் படையெழுச்சியின்போது ஒட்டர தேசத்தையும், கோசல நாட்டையும் இந்திர ரதன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். கோசல நாடு என்பது மகா கோசலமென அழைக்கப்பெறும் தென் கோசல நாடாகும். இந்நாட்டு மன்னன் பரமார மன்னனான போச மன்னனுடன் பகைமை பூண்டிருந்தனன்.

சேதி கால-சூரிகள்

கால சூரிகள், கூர்ஜரப் பிரதிஹாரப் பேரரசின் வீழ்ச்சியின் போது எழுச்சி பெற்றுத் தனியாட்சி நிறுவினர். இவர்கள் ஹைகயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சேதி கால சூரிகள் திரிபுரி அல்லது தகாலாவைச் சார்ந்தவர்களெனக் கருதப்படுகின்றனர். இவர்கள் திரிபுரியைச் சுற்றியிருந்த சிறு பகுதியினை ஆண்டு வந்தனர்.

முதலாம் கோக்கல்லர் என்னும் மன்னர் இம்மரபினைத் தோற்றுவித்தார். இவர் கி.பி. 875 முதல் கி.பி. 925 முடிய இவ்வரசினைத் திரிபுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். கால சூரியன் ராஜேந்திரனிடம் பகைமை பாராட்டாது, நட்பு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கங்கேய விக்கிரமாதித்தன் கங்ரா பள்ளத்தாக்கிலுள்ள கீராவையும், கோசலை, உத்கலை போன்றவற்றையும், பிரதிகாரர்களையும், பாலர்களையும் வென்று புகழ் மிக்க வடநாட்டு மன்னனாகத் திகழ்ந்தான்.

முஸ்லிம் படையெடுப்பு

ராஜேந்திரன் சோணாட்டில் அரியணையேறிய காலை, தென்னாட்டில் அமைதி நிலவியது. வடநாட்டில் முகமது கஜினியின் படையெழுச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. முகமது என்ற துருக்கிய வீரன் கி.பி. 998இல் கஜினி

அரியணையில் ஏறினான். இவன் ஒவ்வொரு ஆண்டும் இந்துக்களின் மீது புனிதப்போர் நிகழ்த்துவதாக உறுதி பூண்டான். இவன் சமய வெறி கொண்டு, இந்தியாவின்மீது பதினேழு தடவைகள் படையெடுத்துப் பல இந்துக் கோயில்களைத் தரமட்டமாக்கிப் பொன்னையும், மணியையும் கொள்ளையிட்டுச் சென்றான். வட இந்தியா சிறுசிறு அரசுகளாகப் பிளவுபட்டிருந்தமையின், ஒற்றுமையுணர்வு ஏற்படவில்லை. சோணாட்டில் ராஜேந்திர சோழன் தனது புகழின் கொடுமுடியில் பாராண்டபோது, வடிந்தியாவிலோ அச்சமும், அமைதியின்மையும், ஒற்றுமையின்மையும், கொள்ளையும் மலிந்திருந்தன என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். முகமது கஜினியின் படையெழுச்சி கி.பி. 1027 வரை வடநாட்டில் நீடித்தது. இம் முஸ்லீம் படையெழுச்சின் அச்சுறுத்தலினால் வடநாடு நடுநடுங்கிக் கொண்டிருந்த வேளையில்தான் ராஜேந்திரனது படை கங்கைப் பகுதிகளில் திக் விஜயம் செய்தது. பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் மலிந்திருந்த வடநாடு,மாமூது கஜினியின் படையெடுப்பினால் மணியிழந்த நாகம்போல் பெருந்துன்ப முற்று. ராஜேந்திரன் வட இந்தியப் படையெழுச்சின் விளைவாக வடஇந்தியாவின் அரசியல் நிலை மேலும் குழப்பமுடையதாக, வலுவிழந்ததாகக் காணப்பட்டது.

6

ராஜேந்திரனின் போர்கள்

ரா ஜராஜனது ஆட்சிக் காலத்திலேயே ராஜேந்திரன் இளவர சனாக முடிசூடப் பெற்றுத் தந்தைக்கு உதவியாக இருந்து, பல போர்களில் படைத் தலைமையேற்று, வெற்றிகள் பல பெற்று வெற்றி வீரனாகத் திகழ்ந்தான். 'புலிக்குப் பிறந்தது பூனை யாகுமா?' ஆகாது; ஆகாது. ராஜேந்திரனும் தன் தந்தையைப்போல் பெருவீர னாகத் திகழ்ந்து, போர்க்களங்களில் புலியெனப் பாய்ந்தான்; தன் வாள் வலியும், தோள் வலியும் காட்டி ஊக்கத்துடன் போர் செய்து பகைவர்களை அஞ்சியோடச் செய்தான்.

இளமையிலேயே இவன் போர் பயிற்சியில் நாட்டம் கொண்டு, நல்ல தேர்ச்சி பெற்றான் என்று முன்பே கண்டோம். இவன் இளவரசனாக இருந்த காலத்தில் மேற்கொண்ட போர்களே அல்லாமல், பேரரசனாக விளங்கிய காலத்து நடத்திய போர்களும், இவன் மைந்தன் ராஜாதிராஜன் இவன் காலத்தில் இளவரசனாகப் பதவி யேற்ற பின்பு நடத்திய போர்களும் பலவாகும்.எனவே, ராஜேந்திரன் காலத்துப் போர்ச் செயல்களை மூவகையாகப் பகுக்கலாம். ஆவை. 1. ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் தலைமையேற்று நடத்திய போர்கள், 2. மன்னனாக இருந்து நடத்தியவை, 3. இவன் காலத்தில் இவன் மகனான இளவரசன் ராஜாதிராஜன் நடத்தியவை எனப்படும். எனவே, மேற்கூறிய மூன்று பகுதிகளில் அடங்கிய போர் பற்றிய

செய்தியினை இங்குக் காண்போம்.

1. ராஜேந்திரன், ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் நடத்திய போர்கள்

சேர, பாண்டியருடன் போர்

ராஜராஜன் சேர நாட்டின்மீது படையெடுக்கக் காரணம் யாது? என்பது தெளிவாகத் தெரியவில்லை. ராஜராஜனால் சேர நாட்டிற்கு அனுப்பப்பட்ட சோழ நாட்டுத் தூதுவன், சேர மன்னனாகிய பாஸ்கர ரவி வருமனால் அவமதிக்கப்பெற்று, இழிவாக நடத்தப்பெற்று, உதகையில் சிறை வைக்கப்பெற்றான். தூதர்களை அவமதிப்பதும், சிறையிலிடுவதும் அரசராயினார்க்கு அடாத செயல்களாம். அன்றியும், அச்செயல்கள் அரச நீதிக்கு மாறுபட்டனவும் ஆகும். அற நெறியிற் பிறழாத சோழர் குடியிற் பிறந்த ராஜராஜன், இதனைச் செவியுற்றுப் பெருஞ்சினங் கொண்டான்; சோழப் படையைச் சேர நாட்டின் மீது செலுத்த ஆணையிட்டான். பஞ்சவன் மாராயன் என்ற ராஜேந்திரன் படைத் தலைமையேற்றுப் பாஸ்கர ரவி வருமனை ஒறுத்து, அவனது செருக் கடக்கக் கடிது சென்றான். சோழப்பெரும்படை பாண்டிய நாட்டின் வழியாகச் சேர நாட்டிற்குப் புறப்பட்டது.

அங்ஙனஞ் செல்லுங்கால் சேரனின் நண்பனான பாண்டிய மன்னன் அமரபுயங்கன் என்பான், சோழப் படைகளைத் தடுத்து நிறுத்தினான். சினங்கொண்ட ராஜேந்திரன் தன் படையுடன் பாண்டியப் படையின்மீது வேங்கையெனப் பாய்ந்தான். பாண்டியப் படைகள் சோழப் படையின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை; அச்சங்கொண்ட பாண்டிய வீரர் சிதறி ஓடினர்; சோழ வீரர் வெற்றி மடந்தையை மணந்தனர்.

பாண்டியனை வென்றடக்கிய ராஜேந்திரன் காடும், மலையும் கடந்தான்; தன் படைகளுடன் சேர நாட்டினை யடைந்தான். மலை நாட்டின் கடற்கரைப் பட்டினமாகிய காந்தளூர்ச் சாலை யின்மீது தன் படைகளை ஏவினான். கி.பி. 988இல் சேரர்க்கும், சோழர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது; சேரர்கள் தோற்கடிக்

கப்பட்டனர்; காந்தளூர்ச் சாலையிலுள்ள மரக்கலங்கள் மூழ்கடிக் கப்பட்டு அழிக்கப்பட்டன.

சிறைப்பட்ட தூதுவனை மீட்க உதகை நகர் நோக்கிப் புறப்ப டுமாறு வெற்றிப் படைக்கு ராஜேந்திரன் ஆணைபிறப்பித்தான். தானைத் தலைவனின் கட்டளையேற்றுச் சோழவீரர்கள் சோர்வின்றிப் பதினெட்டுக் காடுகளையுங் கடந்து கடந்து சென்றனர்; காவல் மிகுந்த உதகையை அடைந்தனர்; மதில்களால் சூழப்பட்ட அந்நகரினை முற்றுகையிட்டனர். சோழ-சேரப் போர் கடுமையாக நடைபெற்றது; சேர நாட்டின் செருக்களம் செங்களமாயிற்று. வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கிய சோழ வீரர்கள், தன்னாட்டுத் தூதுவனைப் பழித்த சேரர்களைப் பழிவாங்கினர்; சீற்றம் தாழாது சேரநாட்டு வீரரது அழகு நகராம் உதகையின் மதில்களை இடித்தனர்; கோட்டைக் கொத்தளங்களைத் தகர்த்தனர்; மாளிகைகளைத் தரைமட்ட மாக்கினர்; கோபுரங்களை உடைத்தனர். சிறைச்சாலைகள் தகரக்கப்பட்டன; சோழத் தூதுவன் விடுவிக்கப்பட்டான்.

உதகை தீக்கிரையாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டது. நாடும், நகரமும் இடுகாடாகக் காட்சி தந்தன. இத்துணை அழிவு வேலை கட்குப் பின்னும் சினந் தணியாத தானைத்தலைவன் தன் படைகளைத் தென் கடற்கோடியிலுள்ள விழிஞம் எனும் துறைமுகத்தின்மீது ஏவினான். சேரர் செயலிழந்தனர்; தோல்வி பெற்றனர்; விழிஞம் சோழ வீரர்களால் கைப்பற்றப்பட்டது. வெற்றி வாகை சூடிய சோழ வீரர்கள் பொன்னும், மணியும், மின்னும் வைரமும் கொண்ட பெருநிதிக் குவியலுடனும், வேழங்களுடனும் சோழநாடு திரும்பினர்.

ராஜேந்திர சோழனது ஆட்சி, சேர நாட்டில் பரவியிருந்தது என்பதனை நாகர்கோயிலுக்கருகில் உள்ள 'சோழபுரம்' என்னும் நகர் உணர்த்துகின்றது. தற்காலத்தில் இந்நகரம் அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. இப்பகுதியில் காணப்பெறும் கல்வெட்டுகளால், சோழபுரமும் அதனையடுத்த பகுதிகளும்

ராஜேந்திர சோழனின் ஆட்சிக்குட்பட்டிருந்ததை அறியலாம். எனவே, நம் ராஜேந்திரன் தலைமையேற்றுச் சேர நாட்டையும், பாண்டிய நாட்டையும் வென்றதால் ராஜராஜன் 'மலைநாட்டுச் சேரமானையும், பாண்டியர்களையும் எறிந்துகொண்ட பண்டாரம்' என்று சிறப்பிக்கப் பெறுகிறான்.

கலிங்க நாட்டுப் போர்

கலிங்க நாடு வீர மறவர்கள் நிறைந்த நாடு. இது 'குலூத நாடு' எனவும் அழைக்கப்பெற்றது. இந்நாட்டினை விமலாதித்தன் என்பான் ஆண்டு வந்தான். இந்நாட்டின்மீது ராஜராஜன் படை யெடுக்கக் காரணம் யாது? என்பது விளங்கவில்லை. ஒருவேளை இவர்கள் கீழைச் சாளுக்கிய மன்னனான விமலாதித்தனுக்கு இடையூறு செய்து சோழரின் பகைமையைச் சம்பாதித் திருக்கக்கூடும் என்று எண்ண இடமுண்டு.

ராஜேந்திரன குலூத நாட்டின்மீது படையெடுத்து, விமலாதித் தனை வென்று, தன்னடிப்படுத்தினான். கலிங்க வீரர்களை வென்றது ராஜேந்திரனின் அரிய சாதனை யாகும். ராஜேந்திரன் குலூத நாட்டின்மீது படையெடுத்து, விமலாதித்தினை வென்று, தன்னடிப்படுத்தினான். கலிங்க வீரர்களை வென்றது ராஜேந்திரனின் அரிய சாதனையாகும்.

வெற்றி வாகை சூடிய ராஜேந்திரன் தனது வெற்றியின் அடையாளமாக மகேந்திரமலை உச்சியில் வெற்றித் தூண் ஒன்றை நாட்டினான். அம் மகேந்திர மலைக்கல்வெட்டில் 'விமலாதித்தன் என்னும் குலூத நாட்டு அரசனை ராஜேந்திரன் வென்றான்; வென்று மகேந்திரமலை உச்சியில் வெற்றித் தூண் ஒன்றை நாட்டினான்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இதனை அறியலாம். இக் கல்வெட்டுத் தமிழிலும், வடமொழியிலும் வரையப்பட்டுள்ளது. இதில் தேதி குறிக்கப் பெறாமையின், இப்போர் நடைபெற்ற காலம் விளங்கவில்லை. இது ராஜேந்திரன் இளவரசு பட்டம் பெற்ற பின்பு நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளரின் கருத்தாகும்.

ஈழப் போர்

ராஜேந்திரன் தன் தந்தையின் காலத்தில் தானைத் தலைவனாகப் படை நடத்திச் சென்று பெற்ற வற்றிகளும் ஈழவெற்றி மிகவும் சிறப்புடையதாகும். ராஜேந்திரன் தன் தந்தைக்குத் துணையாக உள்நாட்டில் மட்டும் மன்றிக் கடல் கடந்த நாட்டிலும் பகைவரை வென்று சோழ ஆதிக்கத்தை விரிவு படுத்தினான் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

ஈழ வேந்தன் ஐந்தாம் மகிந்தன் கி.பி. 981 முதல் ஈழ நாட்டினை ஆளும் உரிமை பெற்றான். அவனது தலைநகரம் அனுராதபுரம். அவன் சோழர்களின் பகைவரான சேர, பாண்டியர்களுக்குப் படையுதவியளித்தான். இதனால், ராஜராஜன் தன் மகன் ராஜேந்திரன் தலைமையில் ஒரு பெரும் படையை ஈழத்தின்மீது படையெடுக்கப் பணித்தான்.

முதலாம் ராஜேந்திரன் கப்பற் படையைச் செப்பம் செய்தான்; தேர்ந்த கப்பற் படையுடன் ஈழம் நோக்கிப் புறப்பட்டான். தமிழகத்தையும், ஈழத்தையும் மரக்கலப் பாலத்தால் இணைப்பதுபோல் கப்பற்படை வரிசை வரிசையாய்ச் சென்றது. தானைத் தலைவன் தன் வலிமை படைகளை ஈழத் தீவில் இறக்கினான்.

அப்போது கி.பி. 991 இல் ஈழ நாட்டில் பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்டு, ஈழ மன்னனான ஐந்தாம் மகிந்தன், ஈழமண்டலத்தின் தென்கிழக்கிலுள்ள உரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான்.

இருப்பினும் நாட்டுரிமையில் வேட்கை கொண்ட ஈழப் படை, சோழப் படையுடன் மோதியது. சோழர்க்கும், ஈழர்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. சோழப் படையின் முன் நிற்கமாட்டாது, ஈழப்படை கலைந்து ஓடிற்று. சோழ வீரர்கள் வெற்றித் திருவை மணந்தனர்.

முரட்டொழில் சிங்களவர் மனம் புழுங்கிற்று. ஏறத்தாழ

ஆயிரம் ஆண்டுகளாகப் புகழுடன் இயங்கிய இலங்கைத் தலைநகர் அநுராதபுரம் அழிவுற்றது; பொலனருவை புதிய தலைநகரானது; அந்நகர் 'சனநாத மங்கலம்' என்னும் பெயரும் பெற்றது.

ஈழ நாட்டின் வட பகுதி சோழ நாட்டுடன் இணைக்கப்பெற்று, 'மும்முடிச் சோழ மண்டல' மென்று பெயரிடப்பட்டது. ஈழ நாட்டில் சோழரின் புலிக் கொடி நாட்டப்பெற்றது; ஈழ வெற்றியின் சின்னமாக ஈழத்தில் சிவாலயம் ஒன்றும் அமைக்கப்பெற்றது. இது 'சிவ தேவாலயம்' எனும் பெயருடன் இன்றும் நின்று நிலவுகிறது.

இவ்விதமாக ராஜேந்திர சோழன் சிங்களரை வென்று, ஈழத்தில் சோழர் புகழினை நிலைநாட்டித் தன்னாடு திரும்பினான்.

மேலைச் சாளுக்கியருடன் போர்

இரண்டாம் தைலபனின் மகனான சத்யா சிரயன் இரட்டபாடி எழரை இலக்கத்தின் மன்னனானான். சோழருக்கும், மேலைச் சாளுக்கியருக்கும் நீண்ட நெடுங் காலமாகக் கடும்பகை மூண்டிருந்ததை நாம் முன்பே கண்டோம். ராஜராஜன் காலத்தில் இது போருக் கொண்டது. எனவே, ராஜராஜன் சத்யா சிரயன்மீது போர் மேற்கொண்டான்.

இப்போரில் ராஜேந்திரன் தலைமை தாங்கிச் சென்றான். ஒன்பது லட்சம் பெருவீரர்கள் கொண்ட சோழர் படை, சாளுக்கிய நாட்டின்மீது படையெடுத்தது. சோழப் படை பல வெற்றிகள் பெற்றுப் பீசப்பூர் மாவட்டத்திலுள்ள 'தோனூர்' வரை முன்னேறிச் சென்றது. சாளுக்கியப் படையினர் சளைக்காமல் போர் செய்த போதிலும் தோல்வியைத் தழுவினர். தொடர்ந்து வருகின்ற சாளுக்கியப் பகைமைக்கு, முற்றுப்புள்ளி வைக்க எண்ணிய ராஜேந்திரன் வெஞ்சினம் கொண்டு சாளுக்கிய நாட்டைச் சூறையாடித் தீக்கிரை யாக்கிப் பாழ்ப்படுத்தினான். பெருமதிப்புள்ள, அளவில்லா பொருள்களைக் கவர்ந்து கொண்டு

வெற்றிப் பெருமிதத்துடன் சோணாடு திரும்பினான். இப்போரில் சோழப் படையின் மாபெரும் வீரனான ராஜமல்ல முத்தரையனின் இறப்பு ஈடு செய இலாய பேரிழப்பாகும்.

இவ்விதமாகச் சோழர்களின் தீராப் பகைவர்களான பிந்தைய மேலைச் சாளுக்கியர்களை இவன் வென்றடக்கினான். இப்போர் கி.பி. 1007ஆம் ஆண்டிற்கு முன்பு நடைபெற்றிருத்தல் வேண்டும். இப்போர் நிகழ்ச்சி பற்றிய சுவையானதொரு குறிப்புத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 'ஊற்றத்தூர்' கல்வெட்டில் காணப்பெறுகின்றது. இக்கல்வெட்டு ராஜேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட தாகும். மேலைச் சாளுக்கிய நாட்டில் சோழப் படைக்கும், மேலைச் சாளுக்கியப் படைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. சத்யா சிரயனோ, யானை மீது அமர்ந்து அருஞ்சமர் புரிந்து வந்தான்; ராஜேந்திரனோ, ஊற்றுத்தூர் சுருதிமான் நக்கன் சந்திரனான ராஜமல்ல முத்தரையனுக்காகச் சத்யா சிரயன் அமர்ந்து போர் புரியும் யானையைக் குத்தி வீழ்த்த ஆணை பிறப்பித்தான்; அவ்வாணையைத் தலைமேற்கொண்டு யானையைக் குத்தி வீழ்த்தும் பணியில் ஈடுபட்ட ராஜமல்ல முத்தரையன் வீழ்ந்துபட்டான். முத்தரையர் குலத் துதித்த இம்மாணிக்கத்தின் நலனுக்காக ஊற்றத்தூரிலுள்ள மகாதேவர் கோயிலுக்கு நிவந்தங்களளித்தசெய்தி மேற்கூறிய கல்வெட்டில் காணப்படுகிறது.

மேற்கூறிய போர்பற்றிய செய்திகளைத் தார்வார் மாவட்டம் ஓ(ஹோ)ட்டூரில் கி.பி. 1007ஆம் ஆண்டில் சத்யா சிரயன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப் பெற்ற கல்வெட்டாலறியலாம். இக் கல்வெட்டு ராஜேந்திரனின் போர்த் திறனை விளக்குகின்றது. ஆனால், வெற்றிபெற்ற பகுதிகள் சோழ நாட்டுடன் இணைக்கப் பெறவில்லை என்பதும் நாம் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். சோழ மன்னரின் கல்வெட்டுகள் மேலைச் சாளுக்கிய நாட்டில் காணப்பெறாமையின் இக் கருத்து வலிவு பெறுகிறது.

ராஜராஜன் காலத்தில் ராஜேந்திரன் பல போர்களில் தலைமையேற்று வெற்றிகள் பல பெற்றுப் பெரும்புகழ் பெற்றான். இருப்பினும், அவை யனைத்தையும் ஈண்டுக் குறிப்பிடுதல் இயலாதாதலின் அவன் சேரர், பாண்டியர், ஈழவர், கலிங்கர், மேலைச் சாளுக்கியர் ஆகியோருடன் செய்த போர்களை மட்டும் மேலே கண்டோம். ராஜராஜன் காலத்தில் சோழப் பேரரசு விரிவடையக் காரணமாக விளங்கியவன் ராஜேந்திரனே யாவான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இனி, அவன் ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட போர்ச் செயல்களைக் காண்போம். அவன் 'ஹர்ஷ' மாவீரனைப்போல் இடை விடாதும், விட்டு விட்டும் போர் மேற்கொண்டான் (Incessant and intermittent warfare) என்பது நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட போர்கள்

ராஜேந்திரன் தன் தந்தையான ராஜராஜனது ஆட்சிக் காலத்திலேயே பல போர்களில் ஈடுபட்டுப் படைத் தலைமையேற்று, வெற்றிகள் பல பெற்றான் என்பதை முன்பே கண்டோம். எனவே, ராஜேந்திரன் போர்க் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றுத் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் மின்றி மாவீரனாய்த் திகழ்ந்தான் என்பது வெள்ளிடைமலை.

இவனது போர்ச் செயல் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள இவனது 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி பெரிதும் பயன்படுகிறது. ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி, இவனது மூன்றாம் ஆட்சியாண்டில்தான் முதன் முதலாகக் காணப்பெறுகின்றது. இருப்பினும் இவனது ஐந்தாவது ஆட்சி ஆண்டில் இருந்துதான் இவன் வெற்றிச் செய்திகள் மிகுதியாகக் குறிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் தான் பெற்ற புதிய வெற்றிகளைச் சேர்த்து மெய்க்கீர்த்தி வெளியிடுதல் மரபாதலின், ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியில் இவருடைய வீரச் செயல்களும்,

அருஞ்செயல்களும் இவனது பதின்மூன்றாம் ஆட்சி யாண்டுவரை விரிந்து கொண்டே செல்கிறது. இதற்குப் பின்னர் இவனது மெய்க்கீர்த்தி ஒரே நிலையில் அமைந்துள்ளது.

எனவே, இவன் தனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டிற்குப் பின் குறிப்பிடத் தக்க பெரிய வெற்றிகள் பெறவில்லை என்பதுறுதி. மேலும், இவனது பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டுக்கல்வெட்டிலும் பதின்மூன்றாவதாண்டு மெய்க்கீர்த்தியில் கூறப்பட்ட வெற்றிகளே திரும்பவும் கூறப்பட்டுள்ளன. புதிய வெற்றிகள் சேர்க்கப்பட வில்லை. எனவே, இவன் தன் ஆட்சின் முற்பகுதியில் மட்டுமே போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்பது புலனாகும்.

இவனது ஆறாவது ஆட்சி யாண்டில் வெளியிடப்பட்டு வடதிருவாலங்காட்டுக் கோயிலுக் களித்த நிவந்தங்களைக் கூறும் திருவாலங்காட்டுச் செப்பேடும், இவனுடைய வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இச்செப்பேடு, இவனது புறநாட்டுப் படையெழுச்சிகளனைத்தும் முடிவெய்தியபின் வரையப் பட்டதாகும்.

இச்செப்பேடும் இவனது மெய்க்கீர்த்தியும் சில இடங்களில் மாறுபடுகின்றன. இருப்பினும் திருவாலாங்காட்டுச் செப்பேட்டில் குறிக்கப்பெற்றுள்ள பல வெற்றிகள், மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டுள்ள வெற்றிகளை உறுதிப்படுத்தப் பயன்படுகின்றன. இவன் தன் முன்னோர் வரலாற்றினை நன்கு விளக்குவதால், இவனது திருவாலாங்காட்டுச் செப்பேடு சோழர் வரலாற்றில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவனுடைய வீரச்செயல்களையும், சாதனைகளையும் விளக்கிக் கூறும் கரந்தைச் செப்பேடும் பல வகையில் ராஜேந்திரன் வரலாற்றினை உருவாக்குதில் பெருந்துணை புரிகின்றன. ராஜேந்திரனின் கல்வெட்டுகள் இவனது மூன்றாவது ஆட்சி யாண்டிலிருந்துதான் காணப்பெறுகின்றன.

எனவே, இவன் தன் ஆட்சியின் முதல் மூன்றாண்டுகள்

வரையில், படை வீரர்களுக்குப் பயிற்சியளித்துப் படைவலிமையைப் பெருக்கினான் என்று கூறுதல் பொருந்தும். தன் தந்தையைப் போலவே தானும், புறநாடுகளை வெல்லுவதே குறிக்கோளாகக் கொண்ட ராஜேந்திரன் படைப் பெருக்கத்தில் நாட்டம் செலுத்தினான். இவனுடைய வெற்றிகளைத்,

'திருமன்னி வளர விருநில மடந்தையும்

போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியும்'

எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி தொகுத்துரைக்கின்றது. இதுவே, இவனுடைய வெற்றிகள்பற்றி அறியச் சிறந்த ஆதாரமாகப் பயன்படுகின்றது. இவனது மூன்றாமாண்டுக் கல்வெட்டுகளில் மூலம், இவன் இடைதுறைநாடு, வனவாசி, கொள்ளிப்பாகை, மண்ணைக்கடக்கம் ஆகிய நாடுகளை வெற்றி கொண்டதாக அறிகிறோம். கிருஷ்ணா, துங்கபத்திரை ஆகிய இரு பேராறுகளுக்கும் இடைப்பட்ட பகுதியே இடைதுறை நாடு எனப் பண்டைக் காலத்தில் அழைக்கப்பெற்றது. இஃது 'எடத்தோர் இரண்டாயிரம்' எனவும் அந்நாட்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளன. இது தற்காலத்திய மைசூர் மாநிலத்திலுள்ள ரெய்ச்சூர் மாவட்டமென ஆராய்ச்சியாளர் கணிக்கின்றனர். இப்பகுதி மேலைச் சாளுக்கியரால் ஆளப்பட்டு வந்தது. இந்நாடே, ராஜேந்திரன் வென்றடக்கிய முதல் நாடென அவன் மெய்க்கீர்த்தி குறிக்கின்றது.

மைசூர் தனியரசின் வடமேற்குப் பகுதியைத் தன்னகத்தே கொண்டு, கங்கபாடிக்கு வடக்கிலும் நுளம்பாடிக்கு மேற்கிலும், இருந்த வனவாசிப் பன்னீராயிரம் என்ற நிலப்பகுதியே, வனவாசி யெனவும் பண்டு அழைக்கப்பெற்றது. வனவாசியில் கடம்ப ராதிக்கம் முன்பம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

கொள்ளிப்பாக்கை என்பது ஐதராபாத்திலிருந்து வடகிழக்கில் 45 கல் தொலைவில் அமைந்துள்ள 'குல்பக்கு' ஆகும். இது பண்டைக் காலத்தில் ஒரு தலைநகரமாக அமைந்திருக்க

வேண்டும். இந்நகரம் கல்வெட்டுகளில் 'கொள்ளிப்பாக்கை ஏழாயிரம்' எனக் குறிக்கப்பெற்றுள்ளதால், இதன் சிறப்பினை நாம் நன்குணரலாம். இந்நகரம் பாதுகாப்பு மிக்க மதில்களால் சூழப் பெற்றிருந்தது என்பதைச் 'சுள்ளிச் சூழ்மதில் கொள்ளிப்பாக்கை' என்ற கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். மேலைச் சாளுக்கிய மன்னனாகப் புகழ்பெற்று விளங்கிய ஆறாம் விக்கிரமாதித்தனின் மைந்தனான, மூன்றாம் சோமேசுவரன், பிற்காலத்தில் இதனைத் தலைநகராகக் கொண்டு இதனைச் சூழ்ந்த பகுதிகளைத் தன் தந்தையின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்தான்' என்பதை வரலாற்று தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. 13ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த காகாதித்தியர்களும் இந்நகரினை மாநிலத் தலைநகராகக் கொண்டிருந்தனர்.

'மண்ணைக் கடக்கம்' என்பது மானியகேதமாகும். இஃது இராட்டிரகூடர்களின் தலைநகராகவிலிருந்து பெரும்புகழ் பெற்றது. தற்காலத்தில் 'மால்கெட்' என அழைக்கப்படுவதும் இந்நகரத்தான். பின்னர் மேலைச் சாளுக்கியர்களும் இதனைத் தலை நகராகக் கொண்டனர். மாளவப் பரமாரர்களும், சோழர் களும் இவர்களின் கொடும் பகைவர்களாதலின், இவர்களால் அடிக்கடி தாக்குண்டனர். 'மத்தளத்திற்கு இரண்டு பக்கங்களும் அடி' என்பதுபோல் வடக்கிலிருந்து பரமாரர்களும் தெற்கிலிருந்து சோழர்களும் இவர்களை நெருக்கினர். எனவே, இவர்களது தலைநகரம் மானிய கேதத்திலிருந்து கல்யாணிக்கு மாற்றப்பட்டதை முன்பே கண்டோம். மண்ணைக் கடக்கத்தின் மண்ணும் ராஜேந்திரனின் வெற்றிப் புகழ் பாடிற்று. மண்ணைக் கடக்கம் ராஜேந்திரனால் வெல்லப்பட்டது என்பதனைத் திருவொற்றி யூரிலுள்ள ஒரு மண்டபம் 'மண்ணை கொண்ட சோழன்' எனப் பெயர் பெற்றிருந்த்தலால் அறியலாம். மேலும், திருச்சி மாவட் டத்தில் காணப்படும் ராஜேந்திரனின் மூன்றாமாட்சியாண்டுக் கல்வெட்டில், மேலைச் சாளுக்கியப்

போர் பற்றி ஒரு குறிப்புக் காணப்படுவதாலும் உறுதியாகிறது.

மேலைச் சாளுக்கிய நாட்டில் நிகழ்ந்த போரில் சத்யாசிரயன் அமர்ந்து போர் செய்த யானையைக் குத்தி வீழ்த்தும்படி, ராஜேந்திரன் முத்தரையர்குலத் துதித்த சுருதிமான் நக்கன் சந்திரனான ராஜமல்ல முத்தரையனுக்கு ஆணையிட்டான். மாவீரன் சுருதிமான் நக்கன் சந்திரன் யானையை வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்ட போது கொல்லப்பட்டான் என்பதை முன்பகுதியில் கண்டோம். எனவே, ராஜேந்திரன் மேலைச் சாளுக்கிய மன்னான சத்யாசிரயனுடன் போரிட்டான் என்பது உறுதியாகிறது. சத்யா சிரயன் கி.பி. 1008இல் இறந்துப்பட்டதால், இப்போர் கி.பி. 1008க்கு முன் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

அடுத்து மேலைச் சாளுக்கிய நாட்டின் நடுவில் அமைந்துள்ள மண்ணைக் கடக்கத்தைத் தாக்க வேண்டுமெனில், துங்கபத்திரை நதியைத் தாண்டிச் செல்லுதல் வேண்டும். இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் ஆகிய நாடுகளை ராஜேந்திரன் ஒரே படையெழுச்சியில் வென்றதாகக் கூறப்பட்டிருப்பது பொருத்தமாக இல்லை. ஏனெனில், மண்ணைக் கடக்கமும், வனவாசியும் ஒன்றுக் கொன்று தொலை தூரத்தில் அமைந்துள்ளன. ராஜராஜன் ஆட்சிக்காலத்தில் ஏறத்தாழக் கி.பி. 1004இல் ராஜேந்திரன் சத்யா சிரயனுடன் போர் புரிந்ததாகக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளதையும், கி.பி. 1007ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓட்டூர்க் கல்வெட்டில் சத்யா சிரயனும் ராஜேந்திரனும் போர் புரிந்ததாகக் குறிக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சிகளையும், சத்யா சிரயன் கி.பி. 1008இல் காலமானான் என்ற செய்தியையும், நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் அவன் மைந்தன் ராஜேந்திரன் வடநாட்டில் பெற்ற வெற்றிகளே இவ்வாறு குறிக்கப்பெற்றுள்ளது என்பது புலனாகிறது. இவ்வெற்றியினை இவனது மெய்க்கீர்த்தி,

‘நெடிதிய ஊழியு ளிடைதுறை நாடும்

தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
என்று குறிக்கின்றது.

இவ்வெற்றியின் விளைவால் தீராப் பகைவர்களான மேலைச் சாளுக்கியர் தோற்கடிக்கப்பட்டனர். இருப்பினும் சாளுக்கியர்களை முழுவதும் அடக்கி ஒடுக்கி விட்டதாகக் கூற வியலாது. சில காலம் கழித்து, வலிமை பெற்ற சத்யா சிரயன், மீண்டும் சோழர்களுடன் போரிட்டான். எனவே, மேலைச் சாளுக்கியர் தற்காலிகமாக அடக்கப் பெற்றனர் எனக்கூறலாம்.

ஈழ நாட்டுடன் போர்

ராஜராஜன் காலத்தில், ராஜேந்திரன் தலைமையிலான கப்பற்படையை ஈழத்திற்கு அனுப்பி வடபகுதியினை வென்று சோணாட்டுடன் இணைத்துக்கொண்டான் என்றும், அதுபோழ்து ஈழ வேந்தனான ஐந்தாம் மகிந்தன் ஈழத்தின் தென்கிழக்கிலுள்ள ரோகண நாட்டில் ஒளிந்து கொண்டான் என்றும், நாம் முன்னர் கண்டோம். பின்னர் ஐந்தாம் மகிந்தன் தான் கரந்திருந்த இடத்தினின்றும் வெளிப்பட்டான்; பெரும்படை திரட்டினான்; சோழர்கள்மீது போர் தொடுத்து ஈழ நாட்டை விடுவிக்க முயன்றான்; விடுதலை வேட்கையும், நாட்டுப்பற்றும் கொண்ட சிங்கள வீரர்களும் சோழராட்சிக்கெதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தினர்.இதனைக் கேள்விப்பட்டான் ராஜேந்திரன்; பெருஞ்சினங்கொண்டான்; கப்பற் படையைச் செப்பம் செய்தான்; நாகைத் துறைமுகத்திலிருந்து புலிக்கொடி தாங்கிய போர்க் கப்பல்கள் அணியணியாக ஈழம் நோக்கிப் புறப்பட்டன. சோழப் படையின் ஈழத் தீவினில் இறக்கினான். ஈழத் தீவைச் சுற்றிலும் சோழரின் மரக் கலங்கள் நிறுத்தப்பட்டன. ஈழத்தீவு, கடலில் அமிழ்ந்துவிடு மென்றெண்ணும் அளவில் சோழப்படை பெரும்படையாயிருந்தது.

சோழர்களும், ஈழர்களும் கடும்போர் நிகழ்த்தினர்; காட்டரண் மிக்க ரோகணம் கைப்பற்றப் பெற்றது; மடை திறந்த வெள்ளம் போல் சோழர் படை ரோகணக் கோட்டைக்குள் நுழைந்தது; சிங்க ஏறுபோல்போர் செய்த சிங்களவர் சிதறி ஓடினர்; பல்லாயிரக் கணக்கான சிங்களவர் போரில் மாண்டனர்; எஞ்சியோர் காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

வெற்றி பெற்ற சோழர், ஈழ வேந்தர் வாழையடி வாழையாகப் புனைந்து கொள்ளும் பெருமைக்குரிய முடியினையும்,அன்னோர் தேவியரின் பேரெழில் வாய்ந்த, விலை மதிக்க வொண்ணா முடியினையும், அணிகலன்களையும், ஏறத்தாழ நூறாண்டுகட்கு முன்பு மூன்றாம் ராஜ சிம்ம பாண்டியர் ஈழ வேந்தனிடம் அடைக்கலமாக வைத்துச் சென்ற பாண்டியர் முடியினையும், இந்திரன் ஆரத்தினையும் கைப்பற்றிக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் சோழநாடு வந்தடைந்தனர்.

முதலாம் பராந்தக சோழன் காலத்தில், ராஜ சிம்ம பாண்டியன் சோழர்களிடம் தோல்வி பெற்றுப் பாண்டி நாட்டையிழந்து, ஈழ வேந்தனும் நான்காம் தப்புலன்பால் தஞ்சம் புகுந்து, மன்னனுக்குரிய மணிமுடியையும், இந்திரன் ஆரத்தையும் அடைக்கலமாக வைத்துவிட்டு வந்த செய்தியை முற்பகுதியில் கண்டோம். இம்மணி முடியினைக் கைப்பற்றும் நோக்கத்துடன் முதலாம் பராந்தகன் ஈழ நாட்டின் மீது படையெடுத்தும் முடியைக் கைபற்ற இயலாது வெறுங்கையுடன் திரும்பினான். ஆனால், ராஜேந்திரனோ, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வைக்கப்பெற்ற மணி முடியைக் கவர்ந்து,

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணிய ராகப் பெறின்.

என்ற பெய்யா மொழியின் பொன்னான வாக்கினுக்கு இலக்கிய மாகத் திகழ்ந்தான்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கரந்தையில் காணப்படுகின்ற

செப்பேடுகளில் ராஜேந்திரனின் ஈழப் படையெழுச்சி பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. 'ராஜேந்திரன் வலிமைமிக்க பெரும்படையுடன் ஈழம் சென்று, ஈழ மன்னனை வென்று, ஈழத்தினைக் கைப்பற்றி, மகிந்தனது மணி முடியினையும், அவன் தேவியையும், தேவியின் அழகிய முடியினையும், அவன் மகளையும், அவனது விலை மதிப்பிட முடியாத செல்வங்களனைத்தையும், வாகனங்களையும், அவனிடம் பாண்டிய மன்னன் அடைக்கலமாக வைத்துச் சென்ற பாண்டியர் மணி முடியினையும், இந்திரன் ஆரத்தையும் கவர்ந்தான்; போரில் தோல்வி கண்டு, அன்பான மனைவியையும், பாச மிக்க மகளையும், மகனையும், தன் உடமைகளையும் பறிகொடுத்த ஈழவேந்தன், அச்ச மிகுதியால் ராஜேந்திரனின் காலடியில் தஞ்சம் புகுந்தான்' எனக் கரந்தைச் செப்பேடு குறிக்கின்றது. இவ்வெற்றியினை ராஜேந்திரனின் மெய்க் கீர்த்தி,

'பொருகட லீழத் தரசர்த முடியும்
முன்னவர் பக்கம் தென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்'
என்று குறிப்பிடுகின்றது.

மேற்கூறிய அகச் சான்றுகளேயன்றி, ராஜேந்திரனின் இலங்கைப் படையெழுச்சி பற்றிய புறச் சான்றுகளும், காணக்கிடைக்கின்றன. இலங்கை வரலாற்று நூலான மகா வமிசம் கூறுகின்ற செய்திகளும் ராஜேந்திரனின் இலங்கைப் படையெழுச்சியை விரித்துரைக்கின்றது. 'ஐந்தாம் மகிந்தனின் 36ஆம் ஆட்சியாண்டில் சோழப் படையினர் ஈழ நாட்டில் கொள்ளையிட்டுப் பொன்னும், மணியும் அணிகலன்களும், அரச அணிகலன்களும் விலை மதிப்பிட வொண்ணா வைரங்களும், உடைக்க முடியாத கத்தியும், ஆண்டவனின் பரிசு பொருள்களும், பல பொற்படிமங்களும், கவர்ந்து கொண்டனர் எனவும் போரில்

அஞ்சி ஓடிக் காட்டில்மறைந்து கொண்ட அச்சிங்கள வேந்தனை உடன்பாடு செய்து கொள்வதற்கு அழைப்பதுபோல் அழைத்துப்பிடித்து வந்து, மன்னனையும் கைப்பற்றப் பட்ட பொருள்களையும் சோழ நாட்டிற்கு அனுப்பி வைத்தனர் எனவும், பல புத்த மடங்களைத் தரைமட்டமாக்கி விட்டு, இலங்கையின் செல்வங்களனைத்தையும் தம்முடன் கொண்டு சென்றனர் எனவும்.....மன்னர் மகிந்தர் சோழ நாட்டில் பன்னிரண்டாண்டு காலம் வாழ்ந்து தமது 48ஆவது அகவையில் காலமானார்' எனவும் மகாவமிசம் கூறுகின்றது. ஆனால், சோழர் கல்வெட்டுகளில் சோழப் படை மேற்கொண்ட கொள்ளை பற்றியும் இப்படையெழுச்சி பற்றிய விரிவான செய்திகளும், குறிக்கப்பெற வில்லை. தஞ்சை மாவட்டத்திலுள்ள கோனேரி ராஜபுரத்திலுள்ள கல்வெட்டொன்று மகிந்தன் சோணாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், சோழ வேந்தனுக்கு முற்றிலும் பணிந்தான் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. ராஜேந்திரனது 'திருமன்னி வளர' என்ற தொடக்கத்தைக் கொண்ட சில கல்வெட்டுகள் பொலந்நருவாப் பகுதியிலும், கொழும்பு தொல்பொருள் காட்சி சாலையிலும் காணப்படுகின்றன. ஆனால், இவைகள் நன்னிலையிலின்றிச் சிதைந்து காணப்படுவதால் தெளிவாக அறிந்து கொள்ள இயலவில்லை.

ஈழ நாடு முழுவதிலும், சோழர் கலைப்பாணியில் கட்டப்பெற்ற பல விஷ்ணு, சிவன் கோயில்கள் காணப்படுகின்றன. மேற் கூறிய சின்னங்களால் ராஜேந்திரன் ஈழத்தின் மீது படையெடுத்து, வெற்றி பெற்று, ஈழ நாடு முழுவதையும் தன்னாட்சிக் குட்படுத்திப் புலிக் கொடியைப் பறக்கச் செய்து ஆண்டான் என்பது தெளிவாக விளங்குகிறது. இப்போரின் விளைவாக ஈழநாடு முழுவதும் சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. சோழர் கலை ஈழத்தில் பரவியது. வெற்றிச் சின்னமாக ஈழக்காசுகள் வெளியிடப்பெற்றன.

ராஜேந்திரனின் ஈழப் படையெழுச்சி இவனது ஐந்தாம்

ஆட்சியாண்டுக் (கி.பி.1017-1018) கல்வெட்டில் தான் முதல் முதல் குறிக்கப்படுகின்றது. இதே ஆண்டில் வெளியிடப்பெற்ற சில கல்வெட்டுகளில் இது பற்றிய குறிப்புகள் காணப்பெறாமையின், இப்படை யெழுச்சி இவனது ஐந்தாம் ஆட்சி யாண்டின் இடைப் பகுதியில் நிகழ்ந் திருக்க வேண்டும் மென்று எண்ண இடமுண்டு. இலங்கை வரலாற்று நூலான மகா வம்சமும் இப்படையெழுச்சி, மகிந்தனின் 36வது ஆட்சி யாண்டாகிய கி.பி. 1017இல் முடிவுற்றது என்று குறிப்பிடுகின்றது. மேற்சான்றுகளால் ராஜேந்திரனது ஈழப் படையெழுச்சி கி.பி. கூறிய 1017ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகக் கொள்வது சாலப் பொருந்தும்.

ராஜேந்திரன் தன் ஈழப்படையெழுச்சின் முடிவில் மன்னர் மகிந்தர், அவர் தேவியார், மகன் ஆகியோரைச் சிறைப்படுத்திச் சோழநாட்டிற்குக் கொணர்ந்தான். ஐந்தாம் மகிந்தனின் மகன் காசிபன் என்பான், ஈழ நாட்டு மக்களால் மறைவாக வளர்த்து வரப் பெற்றான். இவ்வாறு கரந்துறைந்த காசிபன், தன் தந்தையார் சோழநாட்டில் இறந்த செய்தி கேட்டு மறைவிடத்தி னின்றும் வெளிப் போந்து, நாட்டுப்பற்றும், விடுதலை வேட்கையும் மிக்க சிங்கள வீரர்களை ஒன்று திரட்டிச் சோழராட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். முரட்டொழில் சிங்களவர் ஏறத்தாழ ஆறு திங்கள் சோழ மறவர்களுடன் கடும்போர் புரிந்தனர்; எண்ணிறிந்த சோழ வீரர்களைக் கொன்று குவிந்தனர்; சோழர் பிடியிலிருந்து உரோகணத்தை மீட்டனர்; உரோகணம் மீண்டும் கி.பி. 1029இல் தன்னாட்சி பெற்று விளங்கியது.

தன்னாட்சி பெற்ற தொன்னகரில் காசிபன் கி.பி. 1029இல் முதலாம் விக்கிரம்பாகு எனும் பெயரில் மூடி புனியைப் பெற்றான். இவன் ஏறத்தாழப் பன்னிரண்டாண்டுகள் நல்லாட்சி செலுத்தினான். இவனது ஆட்சி கி.பி. 1041இல் முடிவுற்றது. ஐந்தாம் மகிந்தன் ராஜேந்திரனின் ஆட்சிக் கால முற்பகுதியிலும்,

முதலாம் விக்கரமபாகு ராஜேந்திரனின் ஆட்சிக் காலப் பிற்பகுதியிலும், ஈழத்து வேந்தர்களாக ஆட்சி செலுத்தினர். எனவே, இருவரும் ராஜேந்திர சோழனின் சம காலத்தவர் என்பது புலனாகும். இவர்களைப் பற்றிய செய்திகள் மகாவமிசத்தில் கூறப்பட்டுள்ளன. சேர, பாண்டிய நாடுகளில் குழப்ப மேற்பட்டதனால் அங்கு அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டும் எண்ணத்துடன் ராஜேந்திரன் இப்படை யெழுச்சினை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

சேர நாட்டுடன் போர்

சேர, பாண்டிய நாடுகளில் குழப்ப மேற்பட்டதனால், அங்கு அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டும் எண்ணத்துடன் ராஜேந்திரன் இப்படை யெழுச்சியினை மேற்கொண்டிருத்தல் வேண்டும். ராஜேந்திரன் கி.பி. 1018இல் சேர நாட்டின் மீது தன் படையைச் செலுத்தி, வெற்றி கொண்டதாக இவனது ஆறு, ஏழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது.

சேர மன்னரை வென்று தன்னடிப் படுத்திய நம் ராஜேந்திரன், அந்நாட்டு மன்னர்கள் பண்டைக் காலத்தொட்டு ஒருவர்பின் ஒருவராகப் புனைந்து கொண்ட, அழகுமிக்க மணி முடியினையும், கண்ணைப் பறிக்கும், ஒளி மிக்க மாலையையும் தன் வீரச் செயலின் சின்னமாகக் கவர்ந்து கொண்டான்.

சேரர் மணிமுடி, விலை மதிப்பிட இயலாத அளவிற்குப் பேரெழில் மிக்கதாகச் செய்யப்பட்டுச் சேரர் குலச் செல்வமாகப் போற்றப்பட்டமையின், பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றதாகும். மேலும், இவன் கடலால் சூழப் பெற்றதும், சிறந்த அரண் கொண்டதுமான தொன்மை மிக்க தீவுக் கூட்டங்களையும் தன் கப்பற்படை வலிமையால் கைப்பற்றினான்.

பல்வகை அரண்களால் சூழப் பெற்ற சாந்திமத் தீவில் பரசுராமனால் வைக்கப் பெற்ற விலையுயர்ந்த செம்பொன்

முடியினையும் கி.பி. 1019இல் இவன் கவர்ந்து வந்ததால் மக்களால் பாராட்டப் பெற்றான். சாந்திமத் தீவென்பது மேலைக் கடலில் சேரர்களின் ஆளுமையிலிருந்த மாலத் தீவுகளாகும். சாந்திமத் தீவென்பது 'அண்டரோத்' எனும் தீவென்று திரு. கா.ம. வேங்கடராமையா தமது 'கல்வெட்டுத் துணைவன்' எனும் நூலில் கூறுகின்றார்.

இவ் வெற்றிகளை இவனது மெய்க்கீர்த்தி,
எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவீற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
என்று விரித் துரைக்கின்றது.

பாண்டியருடன் போர்

அடுத்து, ராஜேந்திரன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். சோழப் படையின் வருகையைக் கேட்ட அளவிலேயே, அவர்களைப் போர்க் களத்தில் சந்திக்க அஞ்சிப் புறங்காட்டி ஓடி மலைய மலையில் பாண்டியன் ஒளிந்துகொண்டான். எனவே, ராஜேந்திரன் பாண்டிய நாட்டின் சிறப்புக்குக் காரணமாகிய வெண்முத்துகளை மிகுதியான அளவில் கவர்ந்து கொண்டு குலப்பற்று மிக்க பாண்டிய மக்களின் மனத்தை நிறைவு செய்யக் கருதித் தன் மகனைச் சோழ பாண்டியன் எனும் பெயரில் பாண்டிய நாட்டுப் பெயராளாக (பிரதிநிதி) நியமனம் செய்தான்.

இவ்வாறு முதல் சோழ-பாண்டியன் பெயராளாக (பிரதிநிதி)

நியமிக்கப்பட்டவன்; ராஜேந்திர சோழனின் மகனாகிய, சடைய வருமன் சுந்தர சோழ பாண்டியனாவான்.

பின்னர் ராஜேந்திர சோழன் தன் படையுடன் மேற்கு நோக்கிச் சென்றான். பரசுராமன் சத்திரிய மன்னர்களுக்கு இன்னல்கள் இழைத்து வந்ததாகக் கேள்விப்பட்ட ராஜேந்திரன் அவனை இப்பூவுலகில் காண இயலவில்லை யாதலின், அவனால் அமைக்கப்பெற்ற நாட்டினைக் கைப்பற்ற உறுதி பூண்டான். எனவே, இவன் மலைய மலையைக் கடந்து சேர மன்னருடன் கடும்போர் நிகழ்த்தி, வெற்றி பெற்றுச் சோழநாடு திரும்பினான்.

மேற்கூறிய செய்திகள் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் மட்டும் காணப்பெறுகின்றன. இவனது பத்தாமாண்டில் வெளியிடப் பெற்ற ஒற்றைக் கல்வெட்டும் இவனது பாண்டியப் போர் பற்றிக் குறிக்கின்றது. இச்செய்திகள் இவனது மெய்க்கீர்த் தியிலும் காணப்பெற வில்லை.

ராஜேந்திரன் சேர, பாண்டிய நாடுகளை வென்றடிமைப் படுத்தினான் என்று திருவாலாங்காட்டுச் செப்பேடு கூறுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஏனெனில், ராஜராஜன் காலத்தே சேர நாடும், பாண்டிய நாடும் வெல்லப்பட்டுச் சோழ ராட்சியில் இணைக்கப்பட்டு, அவை முறையே மலை மண்டலம் எனவும், ராஜராஜப் பாண்டி மண்டலம் எனவும் பெயர் பெற்றதை, அந்நாடுகளில் காணப்பெறும் பல கல்வெட்டுகளாலறியலாம். இருப்பினும் புதுச்சேரிக்கருகிலுள்ள திருவாண்டார் கோயிலில் இவனால் பத்தாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டில், 'பாரது நிகழப் பாண்டி மண்டலத்து மதுரையில் மாளிகை எடுப்பித்துத் தன் மகன் சோழ பாண்டியன் என்று அபிடேகம் செய்து தண்டாற் சாலைக் கல மறுத்த கோப்பர கேசரி' என்று குறிப்பிட்டுள்ளதால் மதுரை யம்பதியில், அரண்மனை யமைத்துத் தன் மகனை அரசப்பெயராளாக நியமித்துப் பாண்டி நாட்டை ஆட்சி புரியச் செய்தமை விளங்கும். இச்செயல் ராஜேந்திரனின்

அரசியலறிவைப் பறை சாற்றுகின்றது.

இவ்வாறு பாண்டி நாட்டில் ஆட்சி செய்த சடைய வருமன் சுந்தர சோழ பாண்டியன், கி.பி. 1018ஆம் ஆண்டில் மதுரையம்பதியில் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதைத் திருநெல்வேலி மாவட்டத்தில் மன்னார் கோயிலில் காணப் பெறுகின்ற கல்வெட்டால் அறியலாம். கி.பி. 1018இல் அரசப் பெயராளாக நியமிக்கப்பெற்ற சடையவருமான் சுந்தர சோழ பாண்டியன் ஏறத்தாழ இருபத்து மூன்றாண்டுகள் ஆட்சி செலுத்தினானென்றும் கி.பி. 1040இல் அவனது ஆட்சி முடிந்திருக்க வேண்டுமென்றும் கல்வெட்டுகளால் அறியலாம் என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுகின்றார்.

பிற்காலச் சோழ மன்னர்கள் தங்கள் பெயர்களுக்கு முன்னால் ராஜகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்து கொண்டு ஆட்சி செலுத்தியது போன்று கடைச் சங்க காலத்திற்குப் பின்னர், பாண்டி நாட்டை ஆட்சி செய்த பாண்டி மன்னர்கள், மாறவருமன், சடையவருமன் என்ற இரு பட்டங்களை, ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்டனர் என்பதைப் பாண்டி நாட்டுக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அறிவிக்கின்றன. எனவேதான், சுந்தர சோழன், பாண்டிய குல மரபுப்படி சடைய வருமன் என்ற பட்டத்தினைத் தனது பெயரின் முன் இணைத்துக் கொண்டான்.

சேர நாட்டுடன் போர்

நம் ராஜேந்திரன், தந்தையைப்போல் தானும் காந்தளூர்ச் சாலையைத் தாக்கிச் சேரர் படைக் கலங்களை அழித்துச் சேரர்களை வெற்றி கொண்டான். இவ்வாறு வெல்லப்பட்ட சேரநாட்டையும் ராஜேந்திரன், சடையவருமன் சுந்தர சோழ பாண்டியனிடம் ஒப்படைத்து நிரந்தரமான ஆட்சி முறையினை ஏற்படுத்தினான். மேற்கூறியவற்றால் அரசப் பெயராளாகப் பட்டம் சூட்டி அவ்விரு நாடுகளின் ஆட்சியினையும் அவனிடம் ஒப்படைத்தான் என்பது விளங்கும்.

சேர வேந்தனாகிய ராஜ சிங்கன் என்பான், பாண்டி நாட்டில் மன்னார் கோவிலில் ஒரு விண்ணகாம் அமைத்து அதற்கு 'ராஜேந்திர சோழ விண்ணகரம்' எனப் பெயரிட்டிருத்தலானும், நாஞ்சில் நாட்டின்கண் உள்ள சுசீந்திரம் 'சுந்தர சோழ சதுர்வேதி மங்கலம்' என்று சேர நாட்டின் அரசப் பெயராளான சுந்தர சோழன் பெயரால் அமைந்துள்ளமையினாலும், விஷ்ணு வர்த்தனப் பேரரசனான சாளுக்கிய விசயாதித்திய விக்கியண்ணன் என்பான் சுந்தர சோழன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1029) நாகர் கோயிலுக்கருகில் உள்ள கோட்டாற்றில் ராஜேந்திர சோழேச்சுரமுடைய மகா தேவர்க்கு ஒரு நந்தா விளக்கிற்கு நிவந்தம் அளித்ததாக அக்கோயில் கல்வெட்டில் கூறப்பட்டிருத்தலினாலும், சேர நாடு சோழர் ஆட்சிக்குட்பட்ட தென்பதும் அதற்குச் சடைய வருமன் சுந்தர சோழன் பாண்டியன் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றான் என்பதும் உறுதி பெறுகின்றன.

மன்னார் கோயில் வெட்டெழுத்துச் சோழராட்சி பற்றிய பல நுணுக்கங்களை எடுத்தியம்புகின்றது. அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவன் தனது மாநிலத்தில் மன்னனுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றானென்றும், அதிகாரப்பூர்வமான ஆணைகளைத் தன்னாட்சி ஆண்டில் வெளியிட உரிமை பெற்றிருந்தா னென்றும், மைய ஆட்சிக்கும், மாநில ஆட்சிக்கும் நெருங்கிய தொடர்பிருந்த தென்றும், ராஜேந்திரன் காஞ்சியில் ஒரு அரண்மனை அமைந்திருந்ததானென்றும் அறியலாம்.

(நாகர் கோயிலுக் கண்மையிலுள்ள கோட்டாற்றுக் கல்வெட்டில் விஷ்ணு வர்த்தனன் நிவந்தம் அளித்ததாகக் கண்டோம். இவன் 'சர்வலோகாஸ்ரய ஸ்ரீ விஷ்ணுவர்த்தன மகாராஜா' என்று தன்னைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பது விந்தையாக உள்ளது. இக்கல்வெட்டுச் சுந்தர சோழ பாண்டியனின் பதினோராம் ஆட்சியாண்டில் வெளி வந்ததாகும்.

சோழக்கும், கீழைச் சாளுக்கியருக்கும் முன்பே மணவினைத் தொடர்பிருந்ததைக் கண்டோம். எனவே, இவன் கோட்டாற்றில் வைக்கப் பெற்றிருந்த சோழர் நிலைப் படைக்குத் தலைவனாயிருந்திருத்தல் வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர்.)

சாளுக்கியருடன் போர்

தமிழக வரலாற்றில் சோழ-சாளுக்கியப் போர் ஒரு சுவையான அதித்தியாம் என்பது யாவரும் அறிந்ததே. இவர்களுக்கிடையேயான போர் நிகழ்ச்சிகள், வரலாற்று மாணவர்கட்குப் படிக்கப் படிக்க மகிழ்ச்சியூட்டத்தக்க ஒன்றாகும்.

வலிமை மிக்கவனுக்கும் வலிமை குன்றியவனுக்கும் இடையில் நடைபெறும் போர் சுவையற்றது. ஒத்த வலிமையுடைய இரு படைத் திறத்தார்க்கும் நிகழும் போரே, கற்பவர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெறும்பான்மையுடையது. சாளுக்கியர் நீண்ட காலமாகச் சோழர்களுடன், நெடும்பகை கொண்டிருந்தனர் என்பது, முன்பே கூறப்பட்டது. இங்கு நாம் ஒத்த பெருமையும், ஒத்தவலிவும் கொண்ட சோழ-சாளுக்கியர்களின் போர் பற்றி ஒரு சிறிது ஆய்வோம்.

ராஜராஜன் ஆட்சிக் காலத்தில், ராஜேந்திரன் மேலைச் சாளுக்கிய மன்னான சத்தியாசிரயனுடன் போரிட்டு, வெற்றிபெற்ற செய்தியை முன் பகுதியில் கண்டோம். சத்தியா சிரயனுக்கு மகப்பேறின்மையால், அவன் உடன் பிறப்பாகிய தசவருமனின் மகனான ஐந்தாம் விக்கிரமாதித்தியன், சத்தியாசிரயனுக்குப்பின் மேலைச் சாளுக்கிய நாட்டைக் கி.பி. 1008 முதல் 1012 முடிய ஆண்டு வந்தான்.

ஐந்தாம் விக்கிரமாதித்தியனுக்குப் பின் செயசிங்கன் கி.பி. 1012இல் அரியணையேறினான். இவனுக்கு முதலாம் ஜகதேக மல்லன் என்ற பெயரும் உண்டு. இவன் ஆட்சிக்கு வந்தவுடன் படை வலிமையினைப் பெரிதும் பெருக்கினான்; செம்மையான

போர்ப் பயிற்சியளித்தான்; தன் தந்தையும், தமையனும் சோழர்களிடம் தோல்வியுற்றதனால், மாசு படிந்துவிட்ட வரலாற் றினைத் தூய்மை செய்ய, உறுதியெடுத்துக் கொண்டான். சோழர்களால் கைப்பற்றப்பெற்ற சாளுக்கியப் பகுதிகளை மீட்டாக வேண்டுமென்று வஞ்சினம் கொண்டான். மாளவப் பரமாரர்களைப் பழி வாங்கவும் கங்கணம் கட்டிக் கொண்டான்.

இவன் தன் பெரும்படையைச் சோழ நாட்டின் மீது செலுத்திச் சோழ நாட்டின் எல்லையிலுள்ள பல்லாரியையும், மைசூர் மாநிலத்தின் வட மேற்குப் பகுதியினையும் கைப்பற்றித் தன்னாட்டுடன் இணைத்துக் கொண்டான்; அப்பகுதிகளில் பல கல்வெட்டுகளையும் வெட்டுவித்தான்.

இவன் ராஜேந்திரன் என்ற யானைக்குச் சிங்கம் போன்றவ னென்றும், போசனாகிய தாமரைக்குத் தண்மதியம் போன்றவன் என்றும் தனது கி.பி. 1019 ஆம் ஆண்டு சாசனத்தில் குறித்துள்ளான். சேர, சோழ மன்னர்களைப் பன்முறைக் கடலில் மூழ்கடித்தவன் என்றும் பௌகாம்வே கல்வெட்டிலும், மிரேஜ் செப்பேட்டிலும் குறித்துள்ளான். பௌகாம்வே கல்வெட்டு கி.பி. 1017இல் வரையப் பெற்றதாதலின், இங்குச் சோழன் என்று குறிக்கப் பெற்றவன் ராஜேந்திரனேயாவான். மேற்கூறியவற்றால் செயசிங்கன், சோழப் பேரரசின் எல்லைப்புறத்திலிருந்த சில பகுதிகளை மீட்டான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.

ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடு 'மான்யகேடத்தை நான் பிடிக்காத வரையில் கிரிஹா விஹாரம் (பொழில் விளையாட்டு) செய்யதில்லை' என்னும் தன் தந்தையினுடைய சூளுரையை நிறைவேற்றி வைப்பதற்காக, ராஜேந்திரன் அப்பட்டணத்தைப் பிடிப்பதில் ஆர்வம் கொண்டான் எனக் கூறுவதால் இவன் மேலைச் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுக்கத் தருணம் நோக்கியிருந்தான் என்பது புலனாகும்.

மேலும், செயசிங்கனின் போர் நடவடிக்கைகள், எரியும் நெருப்பினில் எண்ணெய்யை ஊற்றின் அதனால், ராஜேந்திரன்

கடுஞ்சினம் கொண்டான்; காஞ்சியிலிருந்து படை திரட்டிச்சென்று, செயசிங்கனை முயங்கி என்னுமிடத்திலுள்ள போர்க்களத்தில் சந்தித்தான். கி.பி. 1020இல் இரு திறத்தாருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. மலையும், மலையும் மோதிக் கொள்வதுபோல் களிறும், களிறும் மோதிக் கொண்டன; போர் முரசங்கள் ஒலித்தன; எங்கணும் ஒரே ஆரவாரம்; போர் வீரர்களோ, விலங்கொடு விலங்காய் வெறி கொண்டு போரிட்டனர்; குறுதியாறு பெருகிற்று; பிணமலைகள் குவிந்தன; கழுகுகள் வானில் வட்டமிட்டன; குற்றுயிரும் குறை உயிருமாய்ப் பலர் ஓலமிட்டனர்; கையிழந்து, காலிழந்து தரையில் கிடந்த வீரர்களும் போர் செய்வதை நிறுத்தாது தன்னாலியன்ற அளவில் தாய்த்திரு நாட்டின் மானங் காக்கப் போரிட்டனர்.

இறுதியில் சோழ மறவர்கள் வெற்றி முரசு கொட்டினர். கைக்கோளப் படையினரும், குஞ்சர மல்லர்களும், வில்லிகளும், குதிரை வீரர்களும் வெற்றிக் கூத்தாடினர்; விழுப்புண் பெற்ற திண்தோள் வீரர்கள் ஆடினர்! பாடினர்!! சோழ மன்னர் வாழ்க! சோழ மன்னர் வாழ்க! என்ற வாழ்த்தொலி விண்ணும், மண்ணும் கலந்தன. மாவீரன் செயசிங்கன் தோல்வியைத் தழுவினான். அவன் அகந்தை அழிந்தது. சோழப் படையினர் மணித்திரளும் பொற் குவியலும் விலை மதிக்க வொண்ணாச் செல்வங்களும் கவர்ந்து கொண்டு சோழநாடு திரும்பினர்.

இவனது முயங்கி வெற்றி, இவனது எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளால் நன்கு விளங்குகின்றது. இவனது எட்டாவது ஆட்சியாண்டில் வெளியான சில கல்வெட்டுகளில் இவ்வெற்றி குறிக்கப்பெறவில்லையாதலின் எட்டாமாண்டின் இடைப்பகுதியில் அதாவது கி.பி. 1020இல் இப்போர் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

ஈண்டு முயங்கி எனக் குறிக்கப் பெற்ற இடம் பல்லாரி மாவட்டத்தில் 'ஹார்ப்பன் ஹள்ளி' வட்டத்திலுள்ள

சங்கிதுருக்கமாக இருத்தல் வேண்டுமெனக் கல்வெட்டறிஞர்கள் கருதுகின்றனர். நைசாம் மாநிலத்திலுள்ள 'மாஸ்கி' என்ற இடமே முயங்கியென்று முற்காலத்தில் அழைக்கப் பெற்றதாக, வேறு பல கல்வெட் டாராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். முயங்கி என்பது சில கல்வெட்டுகளில் 'முசங்கி' எனவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. 'முயங்கி' என்ற இடத்தை அடையாளங் கண்டு கொள்வதில் மாறுபட்ட கருத்துகள் நிலவிய போதிலும், முயங்கி மேலைச் சாளுக்கிய நாட்டில் அமைந்ததொரு நகரம் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடில்லை.

இப்போரில் வெற்றி பெற்ற ராஜேந்திரன் இரட்டபாடி எழரையிலக்கத்தைக் கைப்பற்றியதாகத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகிறது. இரட்டபாடியைக் கைப்பற்றிய சோழப் படையினர் துங்கபத்திரையாற்றங்கரையில் அமைந்துள்ளதும், பல்லாரி மாவட்டத்தில் 'ஒசபேட்' வட்டத்தில் உள்ளது மான 'கம்பிலித் தோட்டத்தை' அழித்தனர். திருவாலங்காட்டுச் செப்பேடுகள், இப்போர் நிகழ்ச்சிகளைக் காப்பிய நடையில் பத்துச் சுலோகங்களில் சித்திரிகின்றது. இருப்பினும் இக்குறிப்புகள் ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியைப் போல் போர் நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறவில்லை.

பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்

டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு

பீடிய லிரட்ட பாடி யேழரை

யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்

என்ற ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி, இவன் 'இரட்டபாடி எழரையிலக்கம்' முழுமையும் கைப்பற்றினான் என்று குறிப்பிடுகிறது. செயசிம்மனை வென்றதனால் ராஜேந்திரன் 'ஜயசிம்ஹசரபன்' என்ற விருதினைப் பெற்றதாகக் கரந்தைச் செப்பேடு குறிப்பிடுகின்றது.

ராஜேந்திரன் முயங்கியில் வெற்றி பெற்றான் என்பது முழுக்க முழுக்க உண்மை; ஆனால், இரட்டபாடி முழுமையும் கைப்பற்றினான் என்பது மிகைப்படக் கூறுவதாகும். இவனது மெய்க்கீர்த்தியினை வரைந்து புலவர் இவ்வெற்றியைச் சிறிது மிகைபடக் கூறியுள்ளார். என்று நாம் எண்ணுவது பொருத்தமே.

முயங்கியில் தோல்வி யுற்ற செயசிங்கன் தோல்வியால் துவண்டுவிடவில்லை; மாறாகத் தன் கடற் பெருஞ்சேனையினைத் தக்க முறையில் புதுப்பித்தான்; போர்ப் பயிற்சிக்கு முக்கியத்துவம் மிகத் தந்தான்; போர் வீரர்களின் எண்ணிக்கையை யுயர்த்திப் படைகளைப் பெருக்கினான்; சோழ நாட்டு எல்லையில் ஊடுருவல் செய்தான். சேர்ந்த வீரர்களைக் கொண்ட சாளுக்கியர் சோழப் படையினை வென்று இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். துங்கபத்திரைப் பேராறு வரையிலுள்ள தன் பகுதிகளை மீட்டுக் கொண்டு, செயசிங்கன், வலிமை மிக்க சோழ வீரர்களை விரட்டியடித்து எடத்துறை இரண்டாயிரம் நாட்டை மீண்டும் கைப்பற்றிக் கொண்டு தனது மேலாண்மையை நிறுவினான் என்று கி.பி. 1024இல் வெளியிடப்பட்ட சாளுக்கியரின் 'மிராஜ்' பட்டயம் கூறுவதாலும், கி.பி.1024இல் மேலைச் சாளுக்கிய மன்னனான செயசிங்கன் இடைதுறை நாட்டிலுள்ள 'மாடதூசுரு' என்ற ஊரை அந்தணன் ஒருவனுக்கு இறையிலியாகத் தந்தான் என மிராஜ் பட்டயங்கள் கூறுவதனாலும் அப்பகுதிகள் செயசிங்கனின் ஆளுமைக் குட்பட்ட தாயிருத்தல் வேண்டுமென்பது தெளிவு. எனவே, துங்கபத்திரைப் பேராற்றுக்கு வடக்கேயுள்ள பகுதிகள் மேலைச் சாளுக்கியர் வசமாயிற்றென்றும், துங்கபத்திரைக்குத் தெற்கேயுள்ள பகுதிகள் சோழர் ஆளுகைக் குட்பட்ட தென்றும் அறியலாம்.

சாளுக்கியக் கல்வெட்டுகளில் செயசிங்கன் சோழர்களை வென்றடக்கினானெனவும், சோழர் கல்வெட்டுகளில் ராஜேந்திர சோழன் மலைச் சாளுக்கியர்களை வென்று தன்னடிமைப்

படுத்தினா னெனவும் கூறப்பட்டுள்ளமை விந்தையாக உள்ளது. இவற்றுள் நாம் எவரது கல்வெட்டை ஏற்றுக்கொள்வது என்பது புதிராக உள்ளது. இருவரும் ஒத்த வலிமை கொண்டவர்கள் என்பது உண்மையே. எனவே, இவர்களுள் இருவரும் சிற்சில இடங்களில் தற்காலிக வெற்றி பெற்றனரேயன்றி, ஒருவரும் இறுதியான வெற்றி பெறவில்லை என்பதுறுதி. இதனால், இவர்கள் அடிக்கடி பல போர்க்களங்களில் சந்தித்துப் போரிட்டனர் என்றும், தமக்குச் சாதகமாக முடிவு பெற்ற வெற்றிகளை மட்டுமே தங்கள் தங்கள் கல்வெட்டுகளில் குறித்துக் கொண்டு பெருமை கொண்டனர் என்றும் கருதலாமே தவிர இரு சாராருள் எவரும் இறுதி வெற்றி பெற்று மாற்றாரின் நாட்டினைத் தன்னாட்சியுடன் இணைத்துக் கொண்டதாக நாம் கூறுதல் இயலாது. இருப்பினும் ராஜேந்திரன் காலத்தில் சோழர் கை ஓங்கிற்று. சாளுக்கியர் சோழரைக் கண்டஞ்சினர்.

அடுத்துச் சோழ-சாளுக்கியப் போர்கள் இருவேறிடங்களில் மையங் கொண்டிருந்தன என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சோழர்கள் மேலைச் சாளுக்கியரை ஒடுக்குவதற்கு மேற்குப் பகுதியில் மான்யகேதத்தையும், கல்யாணியையும், ஒரு இலக்காகவும், கிழக்குப் பகுதியில் வேங்கியை மற்றொரு இலக்காகவும் கொண்டு போரிட்டு வந்தனர்.

வேங்கியின் நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் ராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியில் இடம் பெறவில்லை. இவனது மெய்க்கீர்த்தியில் முயங்கிப் போருக்குப் பின் கங்கைப் படையெழுச்சின் குறிப்புகள் இடம் பெறுகின்றனவே யொழிய வேங்கிப் போர் நிகழ்ச்சிகள் குறிப்பிடப் பெறவில்லை.

வேங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியவர்கள் கீழைக் சாளுக்கிய ராவர். இவர்கள் சோழர்களிடம் நட்புரிமையும், திருமணத் தொடர்பும் கொண்டிருந்தனர். எனவே, மேலைச் சாளுக்கியரும், சோழரும் வேங்கியின் அரசியல் நிகழ்ச்சிகளில் தலையிட்டனர்.

கீழைச் சாளுக்கிய மன்னனான விமலாதித்தனுக்குப் பின்பு கி.பி. 1019இல் இவன் மகன் ராஜராஜ நரேந்திரன் அரியணையேற முயன்றான். செயசிம்மனோ, ராஜராஜ நரேந்திரன் அரியணை யேறுவதைத் தடுத்து நிறுத்தி, அவனுடைய தாயத்தாருள் ஒருவனான ஏழாம் விஷ்ணுவர்த்தன விசயாதித்தனை அரியணையில் ஏற்றத் தேவையான ஆதரவு தந்து உற்சாகப்படுத்தினான்.

அரியணையேறும் வாய்ப்பினை இழந்துவிட்ட ராஜராஜ நரேந்திரன் தன் மாமனான ராஜேந்திர சோழனின் உதவியை நாடினான். ராஜேந்திரனும் தனது பெரும் படையைத் தொண்டை மண்டலத்து மாதண்ட நாயகரான அரையன் ராஜராஜன் தலைமையில் ராஜராஜ நரேந்திரனுக்கு உதவி செய்ய அனுப்பி வைத்தான்.

அரையன் ராஜராஜன் சாளுக்கியர்களை வென்று தான் முன்பு பெற்றிருந்த விக்கிரம சோழன், சோழிய வரையன் போன்ற பட்டங்களுடன் நால்மடி பீமன், சோழ சக்கரன், சாமந்தா பாணன், வீர பூஷணம், எதிர்த்தவர் காலன், செயசிங்க குலகாலன் போன்ற பட்டங்களைப் புனைந்து கொண்டான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. வேங்கியில் நடைபெற்ற சோழ சாளுக்கியப் போர்கள்பற்றி அனந்தப்பூர் மாவட்டத்தில் 'மதகசிரா' வட்டத்திலுள்ள 'கோட்டசீவரம்' என்னுமிடத்தில் தமிழிலும், கன்னடத்திலும் வரையப்பட்டுள்ள கல்வெட்டுகள் சில சுவையான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன. இப்போரில் வேங்கி நாட்டு மன்னன் வெல்லப்பட்டுச் செயசிங்கனின் குலம் அழிக்கப்பட்ட தென்று கூறப்பட்டுள்ளது.

போயினான் போர்ச்சளுக்கிய பொற்சே ழியவரசை

ஏவினான் கோச்சென்னி என்னவே-வாயினாற்

கொல்வேங்கை பின்தொடரக் கோள்வேங்கை சூழ்புறவில்

தொல்வேங்கை மண்டலமும் தோற்று

எனும் பாடலால் சாளுக்கிய மன்னன் தோற்றோடினான் என்பது புலனாகும்.

இவைகளுள் ராஜேந்திரனின் பத்தாம் ஆட்சியாண்டின் பொது வெளியிடப் பெற்ற கல்வெட்டு முக்கியத்துவம் உடையதாகும். வீரத் திலகமான மாவீரன் அரையன் ராஜராஜன் தனது தலைநகர் நோக்கிப் படையுடன் வருகிறான் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் வேங்கி மன்னன் நாட்டை விட்டே ஓடி விட்டான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வாறு ஓட்டம் பிடித்த வேங்கி மன்னன் விசயாதித்தனாக இருக்கக்கூடுமென்றும், இந்நிகழ்ச்சியும், முயங்கிப் போர் நிகழ்ச்சியும் ஏறத்தாழ ஒரே காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும், திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தமது 'சோழர்கள்' என்ற புத்தகத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அரையன் ராஜராஜனான சோழப் படைத் தலைவன் கலிங்க நாடு, ஒட்ட நாடு, தெலுங்க நாடு ஆகிய நாடுகளையும் வென்றதாகக் கல்வெட்டுச் செய்யுங்கள் சான்று தருகின்றன. கலிங்க நாட்டு மன்னனும், ஒட்டநாட்டு மன்னனும், செயசிங்கனுடனும், விசயாதித்தனுடனும் சோழர்களுக்கெதிராக இணைந்து கொண்டனர். எனவே, வியத்தகு வீரனான அரையன் ராஜராஜன் இக்கூட்டிணைவுப் படையையும் சமாளிக்க வேண்டிய இக்கட்டானதொரு சூழ்நிலையிலிருந்தான். இவர்களை வென்று, துரத்தியடிக்க மேற்கொண்ட முயற்சியே சோழரின் கங்கைப்படையெழுச்சிக்கு வழி வகுத்துக் கங்கையின் புனித நீரைக் கொணர்ந்து ராஜேந்திர சோழன் புதிதாக அமைத்த புதிய தலைநகரைத் தூய்மைப் படுத்துவதில் முடிவடைந்ததென்று வீர ராஜேந்திரனது 'சாராளச் செப்பேடுகள்' குறிப்பிடுவதால் உணரலாம்.

மேற்கூறிய கல்வெட்டுகளால் சோழர் படைத்தலைவனான அரையன் ராஜராஜன் மேலைச் சாளுக்கிய மன்னனான செயசிம்மனை வென்றான் என்பதைத் திட்டவட்டமாக

அறியலாம். ஆனால், செயசிம்மனின் 'குலேனூர்' கல்வெட்டோ சோழப் படையினை வென்று துரத்தி யடித்ததாகக் கூறுகின்றது. கி.பி. 1028இல் வெளியான இக்கல்வெட்டில் சோழர், பரமார மன்னான போசன், சேதி நாட்டுத் திரிபுரீ நகரத்திலிருந்து அரசு செலுத்திவந்த 'ஹைஹயர்' எனப் பெயர் பெற்ற கலசூரி வம்சத்தைச் சார்ந்த காங்கேய விக்கிரமாதித்தன் ஆகிய மூவரின் யானைப் படையினை அழித்துப் பெருவெற்றி பெற்றான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளை யெல்லாம் ஆய்ந்து பார்க்குங் காலை சோழ-சாளுக்கியப் போர் சங்கிலித் தொடர்போல் தொடர்ந்த தென்றும், இருவரும் பல போர்களில் ஈடுபட்ட போதிலும் ஒருவர் மற்றவரை அழிக்க முடிய வில்லையென்றும் எண்ண இட முண்டு. இவர்கள் தம் வலியுடன் துணைவலியும் கொண்டு ஒருவர் ஒருவர் அழிக்க நினைத்தும், இயலாது போயிற்று என்றும் மேலைச் சாளுக்கியர் உயர்ச்சி பெறுவதைச் சோழர் தடைசெய்து நிறுத்தி வைத்தனர் என்றும் அறிய இடமுண்டு. சாளுக்கியர் உயர்ச்சி பெற்று, வளர்ச்சி பெறுதலைச் சோழர் தடுத்து நிறுத்திய போதிலும், சாளுக்கியப் பேரரசினைத் தம்முள் இணைத்துக் கொள்ள இயலவில்லை என்பதும் புலனாகின்றது.

'ராஜேந்திர சோழன் செய சிம்மனைத் தோற்கடித்த பொழுதிலும், செயசிம்மன் தன் இராச்சியத்தின் ஒரு பகுதியையும் இழக்க வில்லை' என்று பேராசிரியர் த.கி. வெங்கடராமன் அவர்கள் 'சாளுக்கிய வம்சம்' எனும் கட்டுரையின் கண் குறிப்பிட்டுள்ளதை ஈண்டு நாம் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சோழர் சாளுக்கியரின் எல்லைப் பகுதியுள் ஊடுருவிச் சாளுக்கியப் பகுதியைக் கைப்பற்றுவதும், சாளுக்கிய பின்பு அதனை மீட்டுக் கொள்ளுவதும் அடிக்கடி நிகழ்வுற்றன.

மேலைச் சாளுக்கியர் வலிமை பொருந்தியவர்களாக விளங்கிய போதிலும், முதலாம் ராஜராஜன், முதலாம்

ராஜேந்திரன், முதலாம் ராஜாதிராஜன் ஆகிய சோழப் பெருமன்னர்கள் காலத்தில் தோல்வியே கண்டனர். இவர்கள் காலத்தில் சாளுக்கியர் தலை தூக்க முடியாது அமிழ்ந்தனர். குறிப்பாக அதிலும் சிறப்பாக ராஜேந்திரன் மேலைச் சாளுக்கியரை அடக்கி யொடுக்கினான் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

கங்கைப் படையெழுச்சி

ராஜேந்திரனின் கங்கைப் படையெழுச்சி, தமிழல வரலாற்றில் மட்டு மன்றி, இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெறவேண்டிய மாபெரும் நிகழ்ச்சியாகும். தென்னிந்தியப் பெருமன்னர்களை வென்றடக்கிய மாவீரன் ராஜேந்திரன், வட நாட்டின்மீதும் படையெடுத்து, ஆங்குத் தன் படை வன்மையைக் காட்டிப் பெருவெற்றி யீட்டிப் புலிக்கொடி நாட்டிச் சோழரின் வீரத்தினை நிலை நிறுத்தித் தமிழர் களின் வழிகாட்டியாகத் திகழ்கிறான். வடநாட்டிறகுத் தென்னாடு இளைத்த தன்று; சளைத்த தன்று என்ற மாபெரும் உண்மையினைச் செயல்படுத்திக் காட்டிய செயல் வீரன் ராஜேந்திரன், தமிழர்களிம் பாராட்டுதல்களுக் குரியவனாவான். இவ்வியத்தகு வெற்றிகள் பெற்ற ராஜேந்திர சோழன் கங்கைப் படை யெழுச்சியினை மேற்கொண்ட செய்தி, இவனது பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளது. எனவே, இவன் படையினர் வடநாட்டில் புரிந்த போர் நிகழ்ச்சிகள் கி.பி. 1023 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும். இவனது வடநாட்டுப் படையெழுச்சி முடிவு பெறுவதற்கு ஏறத்தாழ இரண்டாண்டுகள் சென்றிருத்தல் வேண்டு மெனக்கூறுதல் பொருத்தமான தாகும்.

இவனது வடநாட்டுப் படையெழுச்சினை ராஜேந்திரனது மெய்க்கீர்த்தி, திருவலங்காட்டுச் செப்பேடு, கன்னியாகுமரிக் கல்வெட்டுப் போன்றவை விரித்துரைக்கின்றன. ஒட்டக்கூத்தர் இயற்றிய 'மூவருலா' என்னும் நூலிலும், சேக்கிழார் இயற்றிய

‘பெரிய புராணம்’ என்னும் நூலிலும், செயங்கொண்டார் இயற்றிய ‘கலிங்கத்துப் பரணி’ என்னும் நூலிலும் ராஜேந்திரனது கங்கைப் படையெழுச்சி குறிக்கப்பட்டுள்ளது. ராஜேந்தரனின் படைத் தலைவன் வடநாட்டில் வெற்றி கொண்ட மன்னர்களை ஒழுங்குப்படுத்திக் கூறுவதில், திருவாலங்காட்டுச் செப்பேடும், ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியும் முரண்படுகின்றன. வடநாட்டுப் போர் நிகழ்ச்சிகள் முடிவு பெற்றவுடன் எழுதப் பெற்றது மெய்க்கீர்த்தி; இப்படையெழுச்சி முடிவுபெற்றுச் சில ஆண்டுகள் கழித்து எழுதப்பெற்றது திருவாலங்காட்டுச் செப்பேடு, எனவே; நாம் ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியில் கூறப்படுகின்ற முறையினை ஏற்றுக்கொள்வது நலம். இவ்வெற்றிகளை ஒழுங்குபடக் கூறுவதில் திருவாலாங்காட்டுச் செப்பேடு ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியி னின்றும் மாறுபட்ட போதிலும், மற்ற நிகழ்ச்சிகளைத் தெளிவாகவும் நம்பத்தகுந்த வகையிலும் கூறுகின்றது.

‘சோழகுல விளக்கான இம்மன்னன் ராஜேந்திரன் தன் தவ வலியால் கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்த பகீரதனைப் பரிகசிப்பதைப் போலத் தன் தோள் வலியால் அந்நதியின் நீரை இவ்விடம் கொணர்ந்து நாட்டைப் புனித மாக்க முற்பட்டான்’ என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுவதாலும்,

‘உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் உத்தராபதத்தில் பூபதி யாரை ஐயித்தருளி யுத்தோத்சவ விபவத்தால் சுங்கப் பரிகிரகம் பண்ணிய யருளின் கங்கை கொண்ட சோழனென்னும் திருநாமத்தால் இத்திருமுற்றத்தில் வைத்து அருளின உத்தமாக்கிரம் கங்கை கொண்ட சோழனில்’ என்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டுக் குறிப்பிடுவதனாலும்,

நித்தல நெடுங்கட லுத்தர லாடமும்

வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்

என்று ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி குறிப்பிடுவதனாலும்,

'ராஜேந்திர சோழ தேவர் கங்கை கொண்டு எழுந்தருளுகின்ற இடத்துத் திருவடி தொழுது, என்று திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள இவன் கோயிற் கல்வெட்டுக்* குறிப்பிடுவதனாலும்

(* Annual Report on South Indian Epigraphy for the year ending 31st, March-1932, Para-13)

கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு

சிங்கா தனத்திருந்த செம்பியனும்*

(* குலோத்துங்க சோழனுலா-வரிகள்-49, 50)

என்று பாவேந்தன் ஒட்டக்கூத்தன் 'மூவருலா'வில் குறிப்பிடுவதாலும்,

களிறு கங்கைநீ ருண்ட மண்ணையில்

காய்சினத் தொடே குலவு செம்பியன்

குளிறு தெண்டிரைக் குரைக டாரமுங்

கொண்டு மண்டிலங் குடையுள் வைத்ததும்

என்று செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில்* குறிப்பிடுவதாலும்,

(* கலிங்கத்துப் பரணி-பா. 189)

கங்கை நதியிடை வேயொடு பாகடர்

கம்ப நிகளம தாசல நீருன

வங்க மறிகடல் சூழெழு பார்வலம்

வந்த மனுகுல சோழனை மாகத

னங்க னையரிள மாமுலை தோய்புய

மந்தி வெயினிகர் சோரியின் மூழ்குற

வெங்க ணழலுதி ராவதி ராவெதிர்

மின்கொ லெனவிணை வாளிக ளேவவே*

(* வில்லிபாரதம்-கன்ன பருவம்-66)

என்று வில்லி பாரதத்தில் குறிக்கப்பட்டுள்ளதாலும் 'பூர்வதே சமும், கங்கையும், கடாரமும் கொண்ட கோப்பர கேசரிவருமன்' என்ற கல்வெட்டுச் சான்றாலும் இவனது கங்கைப் படை எடுப்பைப்பற்றி அறியலாம்.

இவனுடைய படை வீரர்கள் கங்கைப் பகுதி வேந்தர்களை வென்று திரும்பி வருங்கால் வடநாட்டிலிருந்து ஒரு வினாயகர் படிமத்தைக்கொண்டு வந்தனர் என்பதாலும், அக்கற்படிமம் கும்பகோணத்திலுள்ள திருநாகேச்சுரரது கோயிலில் கங்கை வினாயர் எனும் பெயரால் ராஜேந்திரனால் பிரதிகட்டை செய்யப்பட்டது என்பதாலும், இவனது கங்கைப் படையெழுச்சியும் கங்கை நீரைக் கொணர்ந்த செய்தியும் இனிது விளங்குகின்றன.

பண்டைக் காலத்துக் கங்கை, வைகை, காவிரி, கோதாவரி, நருமதை போன்ற பேராறுகள் புனிதமானவையாகப் போற்றப் பெற்று வந்தன. இவற்றுள் கங்கையாறு புனித ஆறுகளுள் தலையாயதாகும். இப்புனித நீரினைக் கொணர முற்படுங்கால் வட திசையிலுள்ள வேந்தர்களையும் போரில் வென்று தன்வீரத்தினை நிலைநாட்டி அதனைக் கொணர எண்ணுதல், வீரம் செறிந்த பழங்குடியில் தோன்றிய பெருமன்னரின் இயல்பாகும்.

எனவே, நம் ராஜேந்திரனும் தான் புதிதாகக் கட்டுவித்த தலைநகரத்தைக் கங்கை நீரால் தூய்மைப் படுத்த விழைத்தது இயல் பாகும் என்று அறியலாம். எனவேதான், இவன் வடநாட்டுப் படையெழுச்சியின் மேற்கொண்டான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் செப்புகின்றது.

இவன் அரியணை யேறிய பின்பு முதல் மூன்று ஆண்டு காலம் எவ்விதப் போர் நடவடிக்கைகளிலும் ஈடுபட வில்லை

என்பது இவனது மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படுதலின், இவன் மூன்றாண்டு காலம் தலைநகர் நிறுவும் பணியில் ஈடுபட்டு அது முற்றுப் பெற்றபோது, நகரினைத் தூய்மை யாக்கும் பொருட்டுக் கங்கைப் படையெழுச்சியினை மேற்கொண்டான் என்று உறுதியாகக் கூறலாம்.

கங்கை நீரைக்கொண்டு வருவதோடு மறத்தமிழனின் பெருவீரத்தினை வட வேந்தர்களுக்கு உணர்த்தல் வேண்டும் என்பதே இவனது கங்கைப் படையெழுச்சியின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

கங்கை நீரைக் கொணர்தலே இப்படையெழுச்சின் தொடக்க கால நோக்கமாக இருந்த போதிலும் சோழப்பேரரசின் படைவலிமையினை வெளிப்படுத்துவதும், தனது ஆற்றிலினை வடஇந்தியப் பெருமன்னர்களிடம் உணர்த்துவதுமே இவன் உள்நோக்கமாக இருந்தன என்பதனை ஐயம் திரிபின்றி அறியலாம். என்று தென்னிந்திய வரலாற்று மேதை திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் தமது 'சோழர் வரலாறு' என்னும் நூலின்கண் குறிப்பிடுவதனாலும் இதனை நாம் நன்கு அறியலாம்.

கங்கை நீரைக் கொணரச் செல்லுங்கால் வட வேந்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்துத் தடை செய்யக்கூடும் என்பதனை முன்கூட்டியே அறிந்திருந்த ராஜேந்திரன் அஞ்சா நெஞ்சமும், பெருவீரமும் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களைக் கொண்ட பெரும்படையினை அணி வகுக்கச் செய்தான்; அப்பெரும் படையின் தலைவனாகப் புகழ் பூத்த ஒரு மாவீரன் படை நடத்திச் செல்லத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்தான். இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு வட வேந்தர்களை வென்று, கங்கை நீரைக் கொணர்ந்து செயற்கருஞ் செயல்கள் செய்த சோழ மாதண்ட நாயகன் யார்? என்பது பற்றிய ஆதாரங்கள் இதுகாறும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும், இப்பெரும்படையினைத்

தலைமையேற்று நடத்திச் சென்றவன் மாபெரும் வீரனான அரையன் ராஜராஜனே என்று நாம் கருத இடமுண்டு. ஏனெனில், சோழர் படைத் தலைவருள் வீரத்தின் திருவுருவாய், வெற்றியின் பேருருவாய்த் திகழ்ந்து போர்க் களங்களில் வேங்கையெனப் பகைவர்மீது பாய்ந்து, அவர்களைச் சிதறி ஓடச் செய்த மாவீரன் அரையன் ராஜராஜனாவான். இவன் நால்மடி பீமன், எதிர்த்தவர் காலன், சயசிங்க குலகாலன், வீர பீமன், வீர பூஷணம் போன்ற பல தோரணையான பட்டங்களைப் பெற்ற சோழ மாண்ட நாயகன் ஆவன் என்பதனையும் நாம் முன்பே கண்டோம்.

மேலும், மேலைச் சாளுக்கியப் போரின் தொடர்ச்சியே கங்கைப் படையெழுச்சி யாதலின் சாளுக்கிய நாட்டின்மீது படைத் தலைமை யேற்றுச் சென்று அரையன் ராஜராஜனே இப்படையெழுச்சிக்கும் தலைமை தாங்கிச் சென்றிருத்தல் வேண்டுமெனக் கொள்ளுதல் இயல்பே. கலிங்க நாட்டு மன்னனும் ஒட்டர நாட்டு மன்னனும் செயசிம்மனுக்கு உதவி புரிந்ததால் இவர்களை வென்று அடக்க மெற்கொண்ட முயற்சியே கங்கைப் படையெழுச்சிக்கு வழி வகுத்தது என்பதை முன்பே கண்டோம். எனவே, அரையன் ராஜராஜன் மேலைச் சாளுக்கியப் படையெழுச்சியைத் தொடர்ந்து கங்கை நோக்கிச் சென்றிருத்தல் வேண்டுமென்று கூறலாம்.



முதலாம் ராஜேந்திர சோழன் வடநாட்டுப் படையெழுச்சியில் வென்ற இடங்கள்

ராஜேந்திரனது கங்கைப் படையெழுச்சி வேங்கி நாட்டிலிருந்து தொடங்கியிருத்தல் வேண்டும். வேங்கி நாடு சோழர்களின் நெருங்கிய நட்பு நாடு என்பதை நாம் முன்பே கண்டோம். ராஜேந்திரன் தன் படைத் தலைவனையும், படை வீரர்களையும் 'வென்று வா! கங்கை நீரைக் கொண்டு வா!!' என நல்லாசி கூறி

மகிழ்வுபடுத்தி வழியனுப்பினான். வேங்கை நாட்டு மக்களும் மிகுந்த ஆர்வாரம் செய்து சோழ வீரர்களை மகிழ்வுபடுத்தி வட நாட்டிற்கு வழியனுப்பினர். வேங்கி நாட்டினின்றும் கங்கை நோக்கிச் சென்றது சோழப்படை, புலிக்கொடி தாங்கிய போர்க் களிற்றின்மீது தானைத் தலைவன் செம்மாந்து தலைநிமிர்ந்து சென்றான். அவனுக்குப் பின்னே நடமாடும் குன்றுகளென யானைப்படை தொடர்ந்தது. குஞ்சர மல்லர்கள் அஞ்சாது அணி வகுத்தனர். குதிரைப்படை காற்றினும் கடிது சென்றது. வில்லிகளும் கைக்கோளப் படையினரும் வாள் வீரர்களும் வீராவேசத்துடன் தொடர்ந்தனர்.

வேங்கி நாட்டிலிருந்து வேங்கையெனப் புறப்பட்ட சோழர் படைத் தலைவன் பெரும்படையுடன்சக்கரக் கோட்டத்தினுள் புகுந்து சென்று, போது சக்கரக் கோட்டத்தை ஆண்டு வந்த மன்னன் அப்படையினைத் தடுத்து நிறுத்த முயன்றான். எனவே, இரு திறத்தார்க்கும் பெரும்போர் மூண்டது; போரின் இறுதியில் சோழ வீரர்கள் வெற்றிவாகை சூடினர்.

சக்கரக் கோட்டம் பண்டைக் காலத்தில் சக்கரக் கோட்ட மண்டலமென அழைக்கப்பட்டது. இக்காலத்தில் இது சித்திரக்கோட்ட மெனவும் அழைக்கப்பெறுகிறது. சக்கரக் கோட்ட மென்பது விசாகப் பட்டின மாவட்டத்திற்கு வடமேற்கே வத்ச அரசின்கீழ் இருந்த ஒரு நகரமாகும். இது பஸ்தரில் உள்ள தென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் நாக மரபினர் இதனை ஆண்டனர்.

மதுரை மண்டலம்

அடுத்துச் சோழர் படை மதுரை மண்டலத்தை நோக்கிப் பீடுநடை போட்டது. பெரும்போருக்குப்பின் மதுரை மண்டலம் அடி பணிந்தது; சோழ வீரர் பெருமை கொண்டனர்.

மதுரை மண்டலமென்பது வத்ச இராச்சியத்தில்

இருந்திருத்தல் வேண்டும். இது பஸ்தாரின் ஒரு பகுதியாகும். இத் வேங்கி நாட்டின் வடக்கே இருந்தது என்பது ஒருதலை.

ஈண்டு மதுரை மண்டல மென்பது யமுனைக் கரையின்கண் அமைந்துள்ள மதுரையும் அதனைச் சுற்றிய பகுதிகளுமாக இருத்தல் வேண்டும் என்று திரு.டி.என். சுப்பிரமணியன் அவர்கள் 'தென்னிந்திய கோயில் சாசனங்கள்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

கி.பி பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடமதுரை சிறப்பு மிக்க நகரமாக விளங்கிற்று. ஆயர் குலத்துதித்த கார்மேக வண்ணனாம் கண்ணன் பிறந்து, வளர்ந்து இன்பமாக விளையாடிய இடம் இதுதான் என்பதனைப் புராணங்கள் கூறுகின்றன. இம் மதுரா நகரின்மீது கஜினி முகம்மதும் தாக்குதல் நிகழ்த்தினான் என்பதனை வரலாறு உணர்த்துகின்றது.

ஹேமச் சந்திரர் 'துவயாச்சிரயம்' என்னும் நூலின் கண் அன்ஹில் பாடக நகர மன்னான துர்லபராஜன் (கி.பி. 1010-1022) நதூல நாட்டு மன்னனான மகேந்திர ராஜனுடைய தங்கையான துர்லப தேவியை மணந்த போது, ஏனைய மன்னர்களுடன் மதுரா மன்னனும் சுயம்வர மண்டபத்திற்கு வந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடமது ரையிலொரு புடையிடை வனிதையர்

மெய்க்கவின் மைக்காவின்

வயிற்ற மணியுக வரிவளை யுடனணி

பொற்றொடி சிற்றாடை

கொடிமறு கடையவு மொளிபெற வருமுகில்

கொட்டுக சப்பாணி (குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்)

எனவும்

'மருக்கமழும் வடமதுரை வளநகர்க்கும் பழையோரம்' எனவும்

(குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்) குறிக்கப் பெற்றிருத்தலின் சோழராட்சி மதுரையில் நடைபெற்ற தெனவும், மதுரை நகரம் சோழ மன்னர் குட்பட்டிருந்த தெனவும் அறிய இடமுண்டு.

எனவே, நம் ராஜேந்திரன் வென்ற மதுரை மண்டலம் வத்ச அரசின் பகுதியாக இருந்தது என்று பலர் குறிப்பிட்டபோதிலும், இது யமுனைநதிக் கரையின்கண் அமைந்துள்ள மதுரையும் அதனைச் சூழந்த பகுதியுமாகுமெனக் கூறுதல் தவறாகாது.

சக்கரக் கோட்டத்தையும், மதுரை மண்டலத்தையும் வெற்றி கொண்ட சோழப் பெரும்படை வத்ச அரசின் பகுதிகளான நாமணைக் கோணம், பஞ்சப் பள்ளி ஆகியவற்றின்மீது பாய்ந்தது. சோழர்தம் கடுந்தாக்குதலுக்கு உள்ளான இவ்விரு பகுதிகளும் அடிபணிந்தன. சோழப் பெருவீரர்கள் வெற்றி முரசு கொட்டினர். இவ்வெற்றிகளை நம் ராஜேந்திரனது மெய்க்கீர்த்தி,

விக்கிரம் வீரர் சக்கர கோட்டமு

முதிர்பட வில்லை மதுரைமண் டலமும்

காமிடை வளைஇய நாமணைக் கோணமும்

வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்

பாசடைப் பழன மாசுணி தேசமும்

என நிரல்படக் கூறுகின்றது.

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட இடங்களைப் பற்றி கே.ஜி.கிருஷ்ணன் மறு ஆய்வு செய்துள்ளார். (கே.ஜி.கிருஷ்ணன், 'ராஜேந்திர சோழன் மெய்க் கீர்த்தி ஓர் ஆய்வு', ஆவணம், ஜூலை 1997). சக்கரகோட்டம், மதுரை மண்டலம், நாமணைக் கோணம், பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் ஆகிய இடங்களே பூர்வ தேசம் ஆகும். சரபபுர மன்னர்கள் ஆண்ட பகுதி பூர்வ ராஷ்டிரத்தில் இருந்தது என்பது செப்பேடு ஒன்றால் அறியப்படுகிறது. இந்தப் பகுதி முன்பே பூர்வ தேசம் என அழைக்கப்பட்டதை மணிமேகலையில் (காதை 10-13)

கூறப்பட்டுள்ள ஒரு பழங்கதை வரலாற்றால் அறியலாம்.

மதுரை மண்டலம், பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் என்ற மூன்றும் கோதாவரிக் கரையிலிருந்து, தென் மேற்கிலிருந்து வடகிழக்காக செல்லும் வழியில் இருந்தது என்பது தெளிவு. மெய்க் கீர்த்தியில் அடுத்துக் குறிக்கப்பட்டுள்ள ஆதி நகர் என்னும் ஊர் பழைய மயூர் பஞ்ச் அரசின் தலைநகரமான கிச்சிங் என்ற ஊருக்கு வடமேற்கே இன்று ஆதியூர் என வழங்கும் ஊராக இருக்க வேண்டும்.

ராஜேந்திடன் ஒட்டகம் ஒன்றை வென்றதற்கான சான்றாகக் கல்வெட்டு ஒன்று உள்ளது. கஞ்சம் மாவட்டத்தில் மகேந்திர மலை உச்சியில் யுதிஷ்டிரர் கோயில் நுழைவாயிலில் ராஜேந்திரனின் வடமொழிக் கல்வெட்டு தனிக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இதையே இவனுடைய வெற்றியின் நினைவுச் சின்னமாகக் கொள்ளலாம்.

மேற்கூறியவற்றால் பூர்வ தேசம் என்பது தற்கால ஒடிசா மாநிலத்தின் மேற்குப் பகுதியில் தென்மேற்கிலிருந்து வடகிழக்காகச் செல்லும் மலை அல்லது மலையைச் சார்ந்த இடமே என்பது புலனாகும். அடுத்து கர்நாடகத்தில் குருபூரு என்னுமிடத்தில் உள்ள ராஜேந்திரனின் 11-ம் ஆண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடும் பூர்வ தேசம் இந்தப் பகுதியே ஆகும்.

சிந்து வெற்றி

சக்கரக் கோட்டம் என்பது விசாகப் பட்டின மாவட்டத்துக்கு வடமேற்கே மத்திய மாகாணத்தில் வத்ச அரசின் ஆட்சியின் கீழிருந்த ஒரு நகராகும். கி.பி. பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் இது நாக மரபினரால் ஆளப்பட்டது. 'அன்னோர் நாகர் மரபினராதல் பற்றி அவர்கள் அரசாண்ட நாடும் மாசுண தேசம் என்று வழங்கப்பெற்று வந்தது. அதற்குச் சக்கரக் கோட்ட மண்டல மென்னும் வேறொரு பெயரும் உண்டு'* என்று திரு.டிவி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

(* பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-155, வரி-27; பக்கம்-156)

இருப்பினும், மாசுணி தேசமும் சக்கரக் கோட்ட மண்டலமும் ஒரே இடத்தைத் தான் குறிப்பனவா? என்பதில் நமக்கு ஐயம் ஏற்படலாம். ஏனெனில், இது போல் ஒரே இடத்தைக் குறிக்கும் இரு பெயர்களை மெய்க்கீர்த்தியில் குறிப்பது வழக்க மில்லை. எனவே, சக்கரக் கோட்ட மண்டலமும், மாசுணி தேசமும் இருவேறு நாடுகளாயிருத்தல் வேண்டும்.

இக்கருத்தினையே, 'மெய்க்கீர்த்தியில் காணும் ஊர்ப்பெயர்களை அதே பொருளைத் தரக்கூடிய வேறு இரண்டு, மூன்றுசொற்களால் மொழி பெயர்த்துக் கொடுப்பதில்லை. இதே போல நடந்திருப்பதாக வேறு எடுத்துக்காட்டு எதுவும் காட்டமுடியாது. அதனால், மாசுணி தேசம் நாக நாடாக இருந்திருக்க முடியாது. அதே பெயரைக் கொண்ட வேறு ஒரு பிரதேசமாகவே இருத்தல் வேண்டும்'* என்று திரு.டி.என்.சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

(* தென்னிந்திய கோயிற் சாசனங்கள்-பாகம்-2)

இனி, நாம் மாசுணி தேசம் என்று குறிக்கப்பெறுவது எங்குள்ளது? என்பது பற்றி ஆய்வோம்.

இந்திய நாட்டின்கண் மாசுணி தேசம் என்னும் பெயரால் ஒரே ஓர் இடமே சிந்து நதிக் கரைப் பகுதியில் உண்டு. அறிஞர் சிலரும் இம்முடிவுக்கே வந்துள்ளனர்.

அலெக்சாந்தரின் இந்தியப் படையெழுச்சியினை விரித்துக்கூறும் கிரேக்க வரலாற்றாசிரியரான 'டய டோரஸ்' என்பவர் அலெக்சாந்தர் சிந்து நதியில் படகில் பயணம் செய்த போது சிந்துக் கரையிலுள்ள ஸோத்ரே (சோத்திரி), மாசுணி (மாசணே) ஆகிய இரு வகுப்பினரின் சரணாகதியை ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். எனவே, மாசுணி வகுப்பினர் ஆண்ட சிந்துநதிக் கரைப் பகுதியே மாசுணி தேசமாகும். இம்மாசுணி தேசம் தற்காலத்தில் பாக்கிஸ்தானில் அடங்கிய

சிந்து மாகாணத்தில் உள்ளதோர் ஊராகும்.

ராஜேந்திரனின் நண்பனான போஜராஜனும் சிந்து நாட்டில் முஸ்லீம்களை வென்றான் என்ற செய்தியினைக் 'கூர்ச்சர சாம்ராச்சியம்' (கே.எம். முன்ஷி) என்னும் நூலிலிருந்தும் அறிகிறோம்.

ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற 'மூவருலா' வரலாற்றுத் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல் என்பது யாவரு மறிந்த உண்மையாகும். அவர்தம் 'ராஜராஜ சோழனுலா' என்னும் நூலில்,

கங்கையு நன்மதையுங் கௌ தமியுங் காவிரியும்

மங்கையுட னாடு மரபினோன்(இருபத்திரண்டாம் கண்ணி)

என்ற பகுதிக்குப் பாட பேதமாகக் 'கங்கையும் சிந்துவு' மெனக் குறிக்கப் பெற்றிருத்தலின் இவன் சிந்துப் பகுதியினை வென்றிருத்தல் வேண்டு மென்று கருதலாம்.

ராஜேந்திரன் சிந்துப் பகுதியை வென்றதால்தான் கங்கை, சிந்து, காவிரி, நருமதை ஆகிய புனித நதிகளில் நீராடினான் என ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகின்றார்.

போஜராஜனும், காங்கேயனும் ராஜேந்திரனது சோழப்படையுடன் இணைந்து போரிட்டதாகக் கி.பி. 1028ஆம் ஆண்டு செயசிங்கனது குலேனூர்க் கல்வெட்டு உணர்த்துகின்றது.*

(* சோழமன்னன், காங்கேயன், போஜராஜன் ஆகியவர்களுடய யானைப் படையைச் சாளுக்கியப் படைத் தலைவனாகிய குந்திகன் வென்றான்.)

சாந்தல மன்னனான வித்தியாதரனுக்கு ஆதரவாக ராஜேந்திர சோழன் படை, போஜராஜன் படை, காங்கேயன் படை முதலியன வடநாட்டில் கஜினி முகம்மதுவிற்கு எதிராகப் போரிட்டன என்ற செய்தியும் கல்வெட்டாலறியப்படுகின்றது.

தென்னிந்திய வரலாற்று மேதை திரு. கெ. கெ. பிள்ளையவர்களும் 'அவனுக்கு (ராஜேந்திரனுக்கு)ப் போஜராஜன் நட்பும்; சேதிநாட்டு காளசூரி மன்னன் காங்கேய விக்கிரமாதித்தன் நட்பும் கிடைத்தன. அவர்களுடன் கூட்டுறவு பூண்டு ராஜேந்திர சோழனும் வித்தியாதரனுக்கு உதவ விரைந்தான்'* எனத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

(* தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும்-பக்கம்-270, வரிகள்-3-7)

முதலாம் ராஜேந்திரனின் மகனான முதலாம் ராஜாதிராஜனுடைய 'திங்களேர்தரு' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியில்,

வில்லவர் மீனவர் வேள்குலச் சாளுக்கியர்

வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்

சிந்துர ரையணர் சிங்களர் பங்களர்

அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்

என்று குறிக்கப் பெற்றுள்ளது.

இம்மெய்க் கீர்த்தியினைக் கொண்டு இவன் மேற்கூறிய வேந்தர்களிடமிருந்து திரையினைப் பெற்றுக்கொண்டான் என்பதைத் தான் அறிய முடிகின்றது. அம்மன்னர்களை இவன்வென்றதாகச் சான்று யாண்டு மில்லை.

இவன் தனியாட்சி செலுத்திய நாளிலிருந்தே இச்செய்தி இவனது மெய்க்கீர்த்தியில் குறிக்கப் பெற்றிருதலின், மேற்கூறிய வேந்தர்களனைவரும் இவன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே சோழர் மேலாதிக்கத்தினை ஏற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

ராஜாதிராஜனுக்குத் திறை செலுத்திய நாடுகளுள் சிந்துவும் குறிக்கப் பெற்றிருத்தலினாலும், சிந்துப் பகுதியினை இவன் வென்றதாகச் சான்றுகள் இன்மையினாலும், ராஜேந்திரன் தன்

ஆட்சிக் காலத்தில் வென்ற மாசுணி தேசத்தினையே இவன் மெய்க்கீர்த்தி 'சிந்துரரையாணர்' எனக் குறிக்கின்றது என்பதனை அறியலாம்.

திரு. டி. என். சுப்பிரமணியன் அவர்களும் 'ராஜேந்திரன் வென்றதாகக் குறிப்பிட்டுள்ள மாசுணி தேசம் சிந்துப் பிரதேசமே எனக் கொள்ள இடமுண்டு'* என்று குறிப்பிட்டுள்ளார்.

(* தென்னிந்திய கோயிற் சாசனங்கள்-பகுதி-III. பாகம்-2)

மேற்கூறிய சான்றுகளை நன்கு ஆய்ந்து பார்க்குங்கால் முதல் ராஜேந்திரன் சிந்துநதிப் பகுதியினை வென்றிருத்தல் வேண்டுமெனத் துணிந்து கூறுதல் தவறாகாது.

ராஜேந்திரனும் முகமது கஜினியின் படையெடுப்பும்

ராஜேந்திர சோழன் தனது புதிய தலைநகரைக் கங்கை நீரினைக் கொண்டு தூய்மை செய்தல் வேண்டி, வடநாட்டின் மீது படையெடுத்தான் என்று இவனது படையெழுச்சியின் நோக்கத்தினைத் தெளிவாகத் திருவாலங்காட்டுச் செப்பேடு செப்புகிற தென்பதனை முன்பே கண்டோம்.

'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது' எனும் பழமொழி யினைப் போன்று ராஜேந்திரனது படை வட நாடு சென்ற போழ்து ஆங்கு, முகமது கஜினியின் படையெழுச்சியும் நிகழ்வுற்றது. அப்பொழுது வட வேந்தர்கள் பல இன்னல்கட் குட்பட்டனர். வடநாடு கஜினியின் படையெடுப்பின் கொடுமையை அனுபவித்தது.

இக்காலை பரமார மன்னனான போஜராஜனும், சேதி நாட்டுக் காளச்சூரி மன்னனான காங்கேய விக்கிரமாதித்தனும், சாந்தல மன்னனான வித்தியாதரனும் ராஜேந்திரனது படையுடன் கூட்டுச்சேர்ந்து முகமது கஜினியை எதிர்த்துப் போரிடும் பணியில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சி பற்றிய செய்திகளைத் திரு.டி.என். சுப்பிரமணியன் அவர்கள் 'தென்னாட்டுக் கோயில் சாசனங்கள்' எனும் நூலின்கண் விரிவாகக் கூறியுள்ளார்.

திரு. கெ. கெ. பிள்ளையவர்களும் 'ராஜேந்திரனின் வடநாட்டுத் திக்குவிசயத்தின்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கோவைப்பட இணைந்து நோக்கும்போது, போஜராஜன், காங்கேயன், மற்றும் பல மன்னர்களுடன் கூடிக் கஜினி முகமதுவுடன் போரிட்டு, அவன் தொல்லையை ஒழித்துக் கட்டுவதற்காகவே அவனுடைய வடநாட்டு நண்பர்களின் வேண்டுகோளின்படி அவன் வடநாட்டுக்குப் படை திரட்டிச் சென்றான் என்று கருதத் தோன்றுகிறது. என்று குறிப்பிடுவதனாலும் ராஜேந்திரனது படை முஸ்லிம் மன்னனான கஜினி முகமதுவைத் தோற்கடிப்பதில் பெரும்பங்கு வகித்திருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியினால் ராஜேந்திரனது வடநாட்டுப் படையெழுச்சி பல வகையில் முக்கியத்துவமும் சிறப்பும் கொண்ட நிகழ்ச்சியாகக் கருதப்படுவதில் வியப்பொன்றுமில்லை.

ஈண்டு நாம் ராஜேந்திரனது படை எங்ஙனம் வடநாட்டு வேந்தர்களுடன் கூட்டுச் சேர்ந்து, கஜினி முகமதுவிற்கெதிராகப் போரிட்டதென்பதனை விரிவாகக் காணலாம். முகமது கஜினி தாக்கிக் கொள்ளையிட்ட வடமதுரையை, ராஜேந்திரனும் வெற்றி கொண்டுள்ளதால் இவ்விரு மன்னர்களின் போர்களுக்கிடையே ஒரு தொடர்பு காண விழைவதில் வழுவேதுமில்லை.

சோழர் படை, வடநாட்டுப் படையெழுச்சியை மேற்கொண்ட போது, அங்கு முகமது கஜினியின் படையெழுச்சி நிகழ்ந்து கொண்டிருந்தது. பொன்னாசை மிக்க கஜினி முகமது வடநாட்டின் பல பகுதிகளில் படையெடுத்தான்; நகரங்களையும், கோயில்களையும் கொள்ளையிட்டுச் சூறையாடினான்.

கி.பி. 1018-1019இல் கஜினி மதுராவைத் தாக்கிக் கோயிற் சிலைகளை எல்லாம் உடைத்துக் கையில் அகப்பட்ட ஏராளமான பொன்னையும், பொருளையும் அள்ளிக்கொண்டு சென்றான்.

பின்பு கஜினி கன்னோசியின்மீது படையெடுத்தான். கூர்ச்சரப்

பிராதிகார மன்னனான ராஜ்யபாலன் கஜினியின் வருகையைக் கேள்விப்பட்டவுடன் தன் தலைநகரைவிட்டு ஓட்டம் பிடித்தான். கஜினி, தலைநகரில் நுழைந்தபோது வேந்தனைக் காணவில்லை.

கஜினியின் படை வீரர்கள் தலைநகரைத் தரைமட்டமாக்கினர். அளவிறந்த பொருள்களைக் கஜினி கொள்ளையடித்துக் கொண்டு சென்றான்.

கோழைத்தனமாக நடந்துகொண்ட ராஜ்யபாலனைப் பழிவாங்க அண்டை அரசுகள் தீர்மானித்தன. காஞ்சார நகரைத் தலைநகராகக் கொண்ட சாந்தல மன்னன், வித்தியாதரன் ஒரு கூட்டுப் படைக்குத் தலைமை வகித்தான்.

ராஜ்யபாலன் கொல்லப்பட்டு, அவன் மகன் திரிலோசனபால் மன்னனாக்கப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட கஜினி கடுஞ்சினங் கொண்டு, வித்தியாதரன் மீது போர்தொடுத்து, கி.பி. 1021 - 1022-ல் காஞ்சார நகரத்தை முற்றுகையிட்டான்.

பரமார மன்னனான போஜராஜனும், சேதி நாட்டுக் கலஞ்சூரி மன்னனான காங்கேய விக்கிரமாதித்தனும், வித்தியாதரனுக்குத் துணை நின்று முகம்மது கஜினியை எதிர்த்துப்போரிட்டனர். ராஜேந்திரனுடைய பெரும் படையும் இந்தக் கூட்டுப் படைக்கு உதவி புரிந்திருத்தல் கூடும். இந்தப் பெரும் படைத் தாக்குதலைக் கண்ட முகம்மது கஜினி வியப்பில் ஆழ்ந்தான். முகம்மது கஜினியால் வித்தியாதரனைத் தண்டிக்க இயலவில்லை. இந்தப் போரில் இரு தரப்பில் எவரும் வெற்றி பெறவில்லை. கடும் எதிர்ப்பால் முகம்மது கஜினி கங்கைக் கரை நோக்கித் தன் படையைச் செலுத்தாமல் கூர்ச்சர நாட்டின்மீது படையெடுத்துச் சோமநாதபுரக் கோயிலைக் கொள்ளையடித்தான். முகம்மது கஜினி திரும்பிச் சென்ற அதே சமயத்தில்தான் ராஜேந்திரனின் படைகளும் கங்கை நோக்கிச் சென்றன.

உதயப்பூர் பிரசஸ்தியின்மூலம் போஜராஜனும், காங்கேயனும், முஸ்லீம்களுக்கெதிராகப் போர் நிகழ்த்தினர் என்று அறியமுடிகின்றது.

'முகமதியர்களை இந்தியாவிலிருந்து துரத்துவதைத் தருமமாகப் புனித கைங்கரியமாக இந்துஸ்தான் மன்னர்கள் அப்போது கருதினார்கள். அவ்வாறே உச்சயினி, குவாலியர், காலஞ்சார், கன்னோசி, தில்லி, அஜ்மீர் மன்னர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் படையைத் திரட்டிப் பஞ்சாபை நோக்கி முன்னேறினார்கள்' என்று திரு. பெரிஷ்தா குறிப்பிட்டுள்ளார்.

அக்காலை உச்சயினி மாளவ நாட்டின் தலைநகராய் விளங்கிற்று. எனவே, மாளவ நாட்டின் மன்னனான போசனும், கஜினி முகமதுவுக்கு எதிராகப் போர் செய்தான். இவனுடன் ராஜேந்திரனது படையும் முஸ்லீம் படையெடுப்பாளனுக் கெதிராகப் போரிட்டிருத்தல் வேண்டும்.

ராஜேந்திர சோழனது படைவென்ற நாடுகளைப் போஜராஜனும், காங்கேய விக்கிரமாதித்தனும் வென்றதாகக் கூறிக்கொள்கின்றனர். போஜராஜனின் மேலாண்மை 'கௌட' நாட்டிலும் 'தட்சிண பாதத்திலும்' நிலை நாட்டப்பெற்றதென்று திரு. மேருதுங்கா குறிப்பிடுவதனாலும், இந்திரரதன் ராஜேந்திரனுக்கும், போசரா சனுக்கும் மாற்றான் என்று குறிப்பிடப்பெற்றிருத்தலானும், காங்கேய விக்கிரமாதித்தன் அங்க நாட்டினை வென்றதாகக் குறிப்பிட்டுள்ளதாலும், ராஜேந்திரனுடைய படைகள் முயங்கிப் போரில் வெற்றி பெற்று இரட்டபாடியைக் கைப்பற்றியபோது, போஜராஜன் கொங்கணப் பகுதியை வென்று, வெற்றி விழாக் கொண்டாடினான் என்பதைப் போசனின் பனீஸ்வார, பெத்மா செப்பேடுகள் குறிப்பிடுவதனாலும், முதலாம் ராஜேந்திரனின் கங்கைப் படையெழுச்சியின்போது காங்கேயன், போசன் போன்ற வடஇந்தியா இந்து மன்னர்கள் படையுதவியளித்திருத்தல் வேண்டுமென்றும், இவர்களின் கூட்டிணைவுப் படை

வடஇந்தியாவில் நிகழ்ந்த முஸ்லீம் படையெழுச்சிக்கு எதிராக வித்தியாதரனுடன் போரிட்டிருக்க வேண்டும் என்பதையும் குறிப்பால் உணர்த்துவதாகக் கொள்ளுதல் தவறில்லை.

மேற்கூறியவற்றால் போசனும், காங்கேயனும் ராஜேந்திரனின் படையுடன் நட்புக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது விளங்கும். போஜராஜன் சிந்துப் பகுதியை வென்றதாகக் குறிப்பிட்டுள்ளத்தால் ராஜேந்திரன் வென்ற மாசுணி தேசமென்பது சிந்துப் பகுதியாயிருத்தல் வேண்டுமென்ற டி.என். சுப்பிரமணியன் அவர்களது கருத்து வலியுடையதாகிறது. வேறு சான்றுகள் கிடைக்கின்ற வரையில் இக்கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

அடுத்துச் சோழப்படை ஒட்டர நாட்டையும் தென் கோசலநாட்டையும் கடந்து செல்லவேண்டியதாயிற்று. ஒட்டர நாடுகாடுகள் செறிந்த பகுதியாகும்.

அப்பொழுது ஒட்டர நாட்டையும், தென் கோசலநாட்டையும் இந்திரரதன் என்னும் மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் சோழ வம்சமன்னருள் ஒருவனாகக் கருதப்படுகிறான். ஒட்டர நாடு, ஒட்ட விஷயம் எனவும் அழைக்கப்பெற்றது. ஒட்ட விஷயம் தற்காலத்தில் ஓரிஸ்ஸா மாநிலமென அழைக்கப்பெறுகின்றது.

உதயபுரக் கல்வெட்டில் தாரா நகரத்திலிருந்த போஜராஜனின் பகைவனெனக் குறிக்கப்பெற்றுள்ள இந்திரரதன் என்னும் மன்னன் இவனாகத்தான் இருத்தல்வேண்டுமென (Dr. Kielborn) டாக்டர் கெல்பர்ன் குறிப்பிடுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

கோசல நாடென்பது மகாநதியின் கரையோரத்தில் அமைந் திருந்தது.

சோழப் படையும் இந்திரரதனின் படையும் ஆதி நகர் என்னும் மிடத்திலுள்ள போர்க்களத்தில் சந்தித்துப் போர் நிகழ்த்தின. இப்போரில் சோழப் படைவியத்தகு வெற்றியினைப் பெற்று ஒட்டர நாட்டையும், தென்கோசல நாட்டையும்*

பிடித்துக்கொண்டது. சோழப்படை ஒட்டர தேசத்து மன்னைக் கொன்று, அவன் தம்பியிடம் பன்மணிக் குவியலைத்திறை கொண்டது என்பதனைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் செப்புகின்றன.

(* ராஜேந்திரன் பூர்வதேசத்தை வென்றதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அப்பூர்வதேசம் தென் கோசலநாட்டைச் சேர்ந்ததாக ஆராய்ச்சியறிஞர் கருதுகின்றனர்.)

பின்பு, சோழப்படை சொர்ணரேகையாற்றின் கரையிலுள்ள தண்டபுத்தியின்மீதுதன் கவனத்தைச் செலுத்தியது. இது வங்காள மாநிலத்தில் மிதுனபுரி மாவட்டத்தின் தென்பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் அமைந்துள்ள நாடாகும். இப்பகுதியினைத் தன்மபாலன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். சோழப் படை வீரர்கள் தன்மபாலனின் பெரும்படையைப் புறமுதுகிட்டோடச் செய்தனர். சோழவீரர்கள் நீண்ட இடைவிடாத போர்களின் விளைவாகக் களைப்புற்ற போதிலும் கங்கைக்கரையை நெருங்கிவிட்டோம் என்ற பேரார்வத்தால் புத்துணர்ச்சியும், உற்சாகமும் பெற்றுத் தங்கள் புனிதப் பயணத்தைத் தொடங்கினர்.

தண்டபுத்தியை வென்ற களிப்பில், சோழ மறவர்கள் கங்கைப் பேராற்றின் தென்கரையிலமைந்துள்ள தக்கணலாடம் என்னும் பகுதியின்மீது படையைச் செலுத்தினர். தக்கணலாடத்தின் மன்னனான இரணசூரன் சோழப் படையினை எதிர்த்துப் போர்புரிந்து தோல்வியைத் தழுவினான்.

சோழ வீரர்கள் வெற்றிச்செருக்கினாலும், எல்லையற்ற மகிழ்ச்சியினாலும், பேராரவாரம் செய்துகொண்டு வங்கத்தின் மீது படையெடுத்தனர். வங்க வேந்தனாகிய கோவிந்த சந்தனும் தன் படையுடன் சோழப்படையை எதிர்த்து அயராது போரிட்ட போதிலும்தோல்வியால் துவண்டான்.

இவ்விதம் தனக்குக்கீழ் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்கள்

பலரும் தோல்வியைத் தழுவிய செய்தி உத்தரலாட வேந்தனாகிய மகிபாலனின் காதுகளுக்கெட்டியது. மகிபாலனோ, சீற்றம் மிகக் கொண்டான்; சிதறிக் கிடந்த வீரப் படையைத் திரட்டினான்; சோழப் படையை வெல்ல வேண்டும் அல்லது போரில் மடிய வேண்டுமென்று உறுதியெடுத்துக்கொண்டான்.

இரு திறத்தாருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. வங்கச் சிங்கமான மகிபாலன் போர்க்களத்தில் முன்னணியில் நின்று வீரப்போர் புரிந்தான்; வங்க வீரர்களும், வெஞ்சினம் கொண்டு வீரப் பொங்கப் போரிட்டனர்; சோழ மறவர்களும் சோர்வடையாது போரிட்டனர்; போர் மும்முரமாக நடைபெற்றது; வீரர் பலர் கையிழந்து, காலிழந்து குருதியாற்றில் மிதந்தனர்; சோழர் படை சிறிது சோர்வுற்றது; தானைத் தலைவனோ, வீரமொழி கூறி மறப்படையை ஊக்கினான்; சோழ மறவர் ஊக்கம் கொண்டனர்; மீண்டும் புத்துயிர் பெற்றனர்; சோழ மறவர்கள் வெற்றி அல்லது வீரமரணம் என்ற இறுதி முடிவுடன் போரிட்டனர்; பகைவர்களைக் கொன்று குவித்தனர்; தம் வாள் வலியும், தோள்வலியும் விளங்கப் போரிட்டனர். வங்கப்படை பின்வாங்கத் தொடங்கிற்று; சோழப் படை வாங்க வீரர்களைக் கடுமையாகத் தாக்கியவாறு முன்னேறிற்று; சோழர் சேனை ஆரவாரித்தது; உள்ளம் கிளர்ந்து தெழுந்து ஊக்கத்துடன் தாக்கிற்று; செருக்களம் செங்களமாயிற்று; கங்கை நீரைக் காண விழைந்த வங்க வீரர்கள் நிலை குலைந்தனர்; குன்று முட்டிய குருவிபோல் வீறு குன்றி ஓடினர். மகிபாலனும் போர்க் களத்தைவிட்டு ஓடிவிட்டான். சோழப் படைவெற்றிப் படையாயிற்று. சோழர் தானைத் தலைவன், மகிபாலனின் யானை களையும், பெண்டிர் பண்டாரங்களையும் பற்றிக்கொண்டான். எங்கணும், ஆரவாரம்; எங்கணும் வீரமுழக்கம். சோழ மறவர்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர்.

பல குடங்களில் கங்கை நீரினை நிரப்பினர்; தோல்வியுற்ற வேந்தர்களின் தலைகளில் குடங்களை வைத்தனர்; தோல்வி

பெற்ற வேந்தர்கள் கங்கை நீர் நிரம்பிய குடங்களுடன் நடந்தனர்; பின்னால் கரிப்படையும், பரிப்படையும் வீரப்படையினரும் தொடர்ந்தனர்; எங்கணும் புலிக்கொடிகள் பட்டொளி வீசிப்பறந்தன. கங்கை நாட்டிலிருந்து காவிரிநாட்டிற்குப் பயணம்தொடங்கிற்று.இப்படையெழுச்சியில் சோழர் படைத்தலைவன் வென்றடக்கிய வேந்தர்களின் பட்டியலை நிரல்படக் கூறுவதில் ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியும் திருவாலங்காட்டுச் செப்பேடும் மாறுபடுகின்றன. திருவாலங்காட்டுச் செப்பேடு, சோழப்படை கங்கை சென்று திரும்பி வருகையில் உத்தரலாட வேந்தனாகிய மகிபாலனை வென்றதாகக் குறிக்கின்றது.

இச்செப்பேடு கங்கைப் படையெழுச்சி முடிவுற்றுப் பல ஆண்டுகள் கழித்து வரையப் பெற்றதால் இக்கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுவதில்லை. இப்படையெழுச்சி நிகழ்ந்தபோது கங்கைப் பேராற்றில் நூற்றுக்கணக்கான போர் யானைகளை வரிசையாக நிறுத்திப் பாலமமைத்து, அதன்மீது தன் படைகளைச் செலுத்தி கங்கையைக் கடந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. இதனால், சோழர்களின் யானைப் படையின் எண்ணிக்கையினையும், வலிமையினையும் தெள்ளிதின் உணரலாம்.

கங்கையாற்றின்கண் களிறுகள் நீருண்டன என்பதைக் 'களிறு கங்கை நீருண்ண' என்று செயங்கொண்டான் குறிப்பிடுவதனாலும், 'கங்கை நதியிடை.....மாகத' என்று வில்லிபுத்தூர் ஆழ்வார் குறிப்பிடுவதாலும் அறியலாம்.

தாரா நகரினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பரமார மன்னனான போஜராஜனும், சேதி நாட்டுத் திரிபுரீ நகரத்திலிருந்து அரசு செலுத்திய காலசூரி வம்சத்தைச் சார்ந்த காங்கய விக்கிரமாதித்தனும், சாந்தல மன்னனான வித்தியாதரனும் சோழர்களிடம் நட்புக்கொண்டிருந்தனர். எனவே தான், சோழப்படை மேற்கூறிய நாட்டினர் மீது

படையெடுக்காமல் கங்கை நோக்கிச்சென்றது.

வடநாடு சென்று, வடவேந்தர்களைப் போரில் வென்று, சோழர் வீரத்தினை அங்கு நிலைநாட்டிக் கங்கை நீரும், வினாயகர் படிமமும் பெரும்பொருளும் கைக்கொண்டு வெற்றியுடன் திரும்பிய சோழர் படைத்தலைவனை, ராஜேந்திரசோழன், கோதவரியாற்றங்கரையில் கண்டு பெருமகிழ்ச்சியுற்றான்; அன்புடன் வரவேற்றான்.ராஜேந்திரன் தன் படைத்தலை வனிடமிருந்து, அருமந்த கங்கைநீரையும், பெரும்பொருளையும் பெற்றுக்கொண்டு படையுடன் சோழபுரம் நோக்கிப் புறப்பட்டான்.

அவ்வாறு அவன் புறப்பட காலை, வழியில் உள்ள கோயில்களை வணங்கி நிவந்தங்கள் அளித்தான் என்பதனைக் கல்வெட்டுகளினால்* அறிகிறோம்.

(* Annual Report on South Indian Epigraphy for the year ending 31st March 1932, Para-13)

சோழப்படை கங்கையிலிருந்து தங்களது வெற்றியின் சின்னமாகக் கொணர்ந்த வினாயர் படிமம் கும்பகோணத்தில் திருநாகேச்சுரரது கோயிலில் இறைவன் திருமுன்னர் வைக்கப்பெற்று ராஜேந்திரசோழனால் பிரிதிட்டை செய்யப்பெற்றது. இது கங்கை வெற்றியின் சின்னமாக நிலைநாட்டப்பட்டதால் கங்கை வினாயகர் என்று அழைக்கப்பெற்றது.

கங்கை வினாயகர் படிமம் அமைக்கப்பட்ட கல்லும் சிற்பத்திறனும் தமிழ்நாட்டினின்றும் வேறுபட்டிருத்தலின் இது வடநாட்டினின்றும் வெற்றிச்சின்னமாகக் கொண்டுவரப்பட்டது. என்பது புலனாகும். பெருவெற்றி பெற்ற பெருமன்னர் தமது வெற்றியின் சின்னமாகக் கடவுட் படிமங்களையும், வினோதமான பொருள்களையும் கவர்ந்து வருதல் பண்டைய மரபாகும்.

கங்கை நீரைக் கொணர்ந்து, தனது புதிய தலைநகரைத் தூய்மைசெய்து, மக்களை ஆங்குக்குடியேற்ற

வேண்டுமென்பதற்காக ராஜேந்திரன் கங்கைப்படையெழுச்சியினை மேற்கொண்டான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுவதாக முன்பே கண்டோம்.

இப்படையெழுச்சி வெறும் தீர்த்தயாத்திரை மட்டு மன்று; இஃது ஒரு திக்குவிசயமுமாகும். சோழ அரசின் பெருமையினையும், தமிழ் அரசின் வலிமையினையும், தென்னாட்டின் வெற்றியினையும் வடவாரிய மன்னர்கட்கு உணர்த்திய இம்மாபெரும் படையெழுச்சி தமிழக வரலாற்றில் மட்டு மன்றி, இந்திய வரலாற்றிலும் ஒரு குறிப்பிடத்தக்க வீர அத்தியாயமாகும்.

ராஜேந்திரன் வடநாட்டுப் படையெழுச்சி, சமுத்திர குப்தனின் தென்னிந்தியப் படையெழுச்சியுடனும், அலாவுதீன் கில்ஜியின் (Alaudin Khilji) தென்னிந்தியப் படையெழுச்சியுடனும் கரிகாற் பெருவளத்தானின் இமயப் படையெழுச்சியுடனும், சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெழுச்சியுடனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வடநாட்டுப் படையெழுச்சியுடனும் ஒப்புமை நோக்கத்தக்க வரலாற்றுச் சிறப்புக்கொண்ட படையெழுச்சியாகும்.

சமுத்திர குப்தன், கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதன் போன்ற பெருமன்னர்களைப் போல் ராஜேந்திரனும் பிற நாடுகளை வென்று தன்னடிப்படுத்தித் தன்னாட்டுடன் இணைத்து ஆள வேண்டுமென எண்ணாது, தன் வீரத்தினையும், வெற்றியினையும் எட்டுத்திக்கிலும் நிலைநாட்ட வேண்டி வடநாட்டுப் படையெழுச்சியின் மேற்கொண்டான் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இராட்டிரகூடப் பெருமன்னர்களான துருவா, மூன்றாம்கோவிந்தன், மூன்றாம் இந்திரா போன்றோரும் வடநாட்டுப் படையெழுச்சியினை மேற்கொண்டு வெற்றிபெற்றனர். இருப்பினும் இவற்றைவிட ராஜேந்திரனின்

வடநாட்டுப் படையெழுச்சியே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும்.

விளைவுகள்

ராஜேந்திரனின் கங்கைப் படையெழுச்சியின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்கமாநிலத்தில் பரவியது. (இங்ஙனம் 'திராவிடர் மொழியில் ஆரியப்படுத்தப்பட்டபோது, ஆரியர் நாகரிகப் பண்பாட்டில் திராவிடப்படுத்தப் பெற்றனர்' என்று கில்பெட்டுச் சிலேட்டர் குறிப்பிட்டுள்ளது. இஃது ராஜேந்திரனது காலத்திற்கும் பொருந்தும் என்பதனை நாம் ஈண்டு உணரலாம்.)

இப்படையெழுச்சியில் ஈடுபட்ட படைத்தலைவருள் ஒருவன் (கருநாடகன்) மேற்கு வங்கத்தில் தங்கிவிட்டான். அவன் வழியில் வந்த சாமந்த சேனன் என்பவனே கி.பி. 1050இல் வங்கச்சேன மரபினைத் தோற்றுவித்தான் என்று அறிஞர் ஆர்.டி. பானர்ஜி குறிப்பிடுகின்றார்.* பாலர்களின் வீழ்ச்சிக்குப்பின் சேனமரபினை ஏற்படுத்திய சாமந்தசேனன் கி.பி. 1050 முதல் கி.பி. 1075 முடிய அரசாண்டு வந்தான்.

(* Palas of Bengal. pp. 73 and 79)

மிதிலையை யாண்ட கருனாடகரும் இங்ஙனம் சென்ற தென்னாட்டவரே யென்பது அறிஞர்கள் கருத்தாகும்.

கங்கைக்கரை நாடுகளில் வாழ்ந்து வந்த சிவபிராமணர் பலரை ராஜேந்திரன் அழைத்து வந்து சோழ நாட்டிலும் காஞ்சி மாநகரிலும் குடியேற்றினான் என்று திரிலோசன சிவாசாரியாரது சித்தாந்த சாராவளியின் உரையில் குறிக்கப்பெற்றிருத்தலால் அறியலாம்.*

(* The Cholas. Vol. I.P. 254; S.I.I. III. Introduction, p. 22)

இப்படையெழுச்சியால் தமிழகத்தில் நிலவிய சைவம், இந்தியாவின் வேறு பகுதிகளில் நிலவிய சைவத்துடன் தொடர்புகொண்டது.

தென்னிந்தியாவின் மாபெரும் வெற்றி வீரனான முதலாம் ராஜேந்திர சோழனின் படையெழுச்சி வங்கத்தில் நிரந்தரமான அடையாளங்களை விட்டுச்சென்றதாக, 'வங்கப்பாலர்கள்' என்ற நூலில் திரு. ஆர்.டி. பானர்ஜி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இப்படையெழுச்சியின் விளைவால் சோழ மன்னரின் வீரம் வடநாட்டில் பரவியது. இந்தியா முழுவதும் தன் புகழ் பரப்பிய ராஜேந்திரன் இந்திய வெற்றி வீரர்களுள் ஒருவனாகப் போற்றத்தகும் நிலையினை எய்தினான்.

இவ்வியத்தகு வெற்றியின் விளைவாக முதலாம் ராஜேந்திரன் கங்கைகொண்ட சோழனென்னும் விருதினைப்பெற்றான். அவன் அமைத்த புதிய நகரமும் கங்கைகொண்ட சோழபுரமெனப் பெற்றது. அவன் அமைத்த புதிய கோயிலும் கங்கைகொண்ட சோழேச்சுரம் எனப்பெயர் பெற்றது. இவ்வெற்றியின் சின்னமாகத்தான் சோழகங்கமென்னும் பேரெரிவெட்டப்பெற்ற தென்பதை 'நீர்மயமான வெற்றித்தூண்' ('ஜலமயமான சயத் தம்பம்) எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுவதால் அறியலாம்.

வரலாற்றறிஞர் திரு. வெங்கையா அவர்கள் இப்படை யெழுச்சியினை மிகவும் குறைத்து மதிப்பிடுகின்றார். இருப்பினும் இப்படையெழுச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது; நிரந்தரமான விளைவுகளைக் கொண்டது. இதனைப் பற்றிச் சிறிது ஆய்வோம்.

ராஜேந்திரன் தனது ஆட்சிக்காலத்தில் தன் மகனான மும்முடிச் சோழனைச் சேர, பாண்டிய நாடுகளின் அரசப் பிரதி நிதியாக நியமித்து மதுரை மாநகரின்கண் வீற்றிருந்து ஆட்சிபுரியத் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தான் என்பதனை நாம் முன்பே கண்டோம்.

இதனைப் போன்றே தன் ஆண் மக்கள் பிறரையும் கங்கைக்கரைப் பகுதிகளில் அரசப் பிரதிநிதிகளாக நியமித்து

நல்லாட்சி புரியவகை செய்தான் என்பதனை முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன் ஆகியோரின் மெய்க்கீர்த்திப் பகுதியாலறியலாம்.

முதலாம் ராஜேந்திரனின் ஆட்சிக் காலத்தின் ஏழாம் ஆண்டில் (கி.பி. 1018) முடி சூட்டப்பெற்ற அவன் மகனான முதலாம் ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில்,

திங்களஏர் தருதன் றொங்கல்வெண் குடைக்கீழ்

நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து

செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து

தன்சி றியதா தையுந்திருத் தமையனுங்

குறிகொ டன்னிளங் கோக்கிளையு நெறியுணர்

தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்

வானவன் வில்லவன் மீனவன் கங்க

னிலங்கையர்க் கிறைவன் பொலங்கழற் பல்லவன்

கன்னகுச் சியர்கா வலனெனப் பொன்னணி

சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக

ழாங்கவர்க் கவர்நா டருளிப் பாங்குற

என்று குறிக்கப்பெற்றுள்ளது. இதனால், இவனது ஆட்சியின் தொடக்க காலத்திலேயே கன்யா குப்சம், இலங்கை, கங்கநாடு, சேரநாடு, பாண்டியநாடு ஆகிய நாடுகளுக்கு அரசப் பிரதிநிதிகளை அனுப்பி ஆட்சி புரியச் செய்தனன் என்பது விளங்குகின்றது. மேற்கூறிய மெய்கீர்த்தி இவனது இருபத்தேழாம் ஆட்சி யாண்டிலிருந்துதான் காணப்பெறுகின்றது.

முதலாம் ராஜாதிராஜனின் தம்பியான இரண்டாம் ராஜேந்திரனது மணிமங்கலத்தில் கிடைக்கப்பெறும் நான்காமாண்டுக் கல்வெட்டில் உள்ள மெய்க்கீர்த்தியிலும் இவன்

அரச குமாரர்களை நாட்டின் பல பகுதிகளில் அரசப் பிரதிநிதிகளாக அமர்த்தியமை தெளிவாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

இரண்டாம் ராஜேந்திர சோழன்

இரண்டாம் ராஜேந்திரனுக்குப் பின்னர் அரியணையேறிய அவனுடைய தம்பி வீரராஜேந்திரனின், 'திருவளர் திரள்புரத்து' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியில் தானும் அரச குமாரர்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசப் பிரதிநிதிகளாக நியமித்தான் என்பதனைக் குறித்துள்ளான்.

இவனது 'வீரமே துணையாகவும்' எனத்தொடங்கும் மெய்க்கீர்த்தியில் 'கம்பிலிசுட்டுக் கரடிக் கல்லில் செயத்தம்பம் நாட்டித் தேவநாதன் முதல்சாமந்தரைச் சக்கரக் கோட்டத்துத் துரத்தியவர்கள் உரியதாரம் பிடித்துக்கொண்டு கன்னக்குச்சி மீட்டு எல்லைகெடாது நிலையிட்டு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் இவன் மீண்டும் கன்யாகுப்சத்தினைத் தனது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜேந்திரனைத் தவிர மேற்கூறப்பட்ட மூவரும் வடநாடும் சென்று வெற்றிபெற்றதாகச் சான்றுகள் யாதும் கிடைத்திலி. இருப்பினும் அவர்கள் தங்களுடைய அரச குமாரர்களை வடநாட்டின் பகுதிகளுக்கு அரசப் பிரதிநிதிகளாக அனுப் பியிருந்தனர் என்பது மட்டும் அவர்களின் மெய்கீர்த்திப் பகுதிகளால் தெளிவாகிறது. மேலும், ராஜேந்திரனுக்குப் பின்னர் அரசுபட்டமெய்திய முதலாம் ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில் கங்கைக்கரை நாட்டு வேந்தர்களிடம் திறை பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளான். ராஜேந்திரன் தனது ஆட்சிக்காலத்தில் வடநாட்டுப் படையெடுப்பினை மேற்கொண்டதாகக் கல்வெட்டுச்சான்றுகள் கிடைக்கப்பெறாமையின் இவனுக்குத் திரைசெலுத்திய வட வேந்தர்களின் ஆட்சிப்பகுதிகள் அனைத்தும் நம் ராஜேந்திரனது

ஆட்சிக் காலத்திலேயே சோழரின் மேலாண்மையினை ஏற்றுக்கொண்டு திறைசெலுத்தின எனக்கொள்வதே பொறுத்த முடையது. ராஜாதிராஜன் தனியரசு செலுத்தத்தொடங்கிய காலமுதலே இச்செய்தி இவனது மெய்க்கீர்த்திப் பகுதியில் காணப்படுதலின், மேலும் இக்கருத்து வலிவுபெறுகின்றது.

மேற்கூறியவற்றை நாம் ஆய்ந்து பார்க்குங்கால் ராஜேந்திரனது வடநாட்டுப் படையெழுச்சி நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்தியதென்பதை அறுதியிட்டுக் கூறலாம். (முகமதுபின் காசிம் உடைய சிந்துப்படையெழுச்சி போன்று (Arab Conquest of Sind) இது விளைவுகளற்ற வெற்றி என்றோ, கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரின் இந்தியப் படையெழுச்சி போன்று பனித்துளி போன்ற நிலையற்ற வெற்றி என்றோ கூறுதல் இயலாது. திரு. வெங்கையா அவர்கள் நம் ராஜேந்திரனின் கங்கைப் படையெழுச்சியினை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக ஏற்றுக்கொள்ள மறுப்பது பொருத்தமுடைத் தன்று. எனவேதான், தென்னிந்திய வரலாற்றிஞர் திரு.கே.ஏ. நீலகண்டசாஸ்திரியவர்கள், 'வெங்கையா அவர்கள் ராஜேந்தி ரனின் வெட்டெழுத்துச் செய்தியின் வாய்மையினை மிகவும் குறைத்து மதிப்பிட்டு ராஜேந்திரனின் கங்கைப் படையெடுப்பை வெறும் தீர்த்தயாத்திரையே தவிர வேறொன்றுமில்லை எனக் கருதுகின்றார்' என்று 'சோழர்கள்' என்ற தமது புத்தகத்தில் குறிக்கின்றார்.

திரு. ஆர்.டி. பானர்ஜி, திரு. கே. ஏ. நீலகண்டசாஸ்திரி போன்ற வரலாற்றுப் பேரறிஞர்கள், பலரும் ராஜேந்திரனது கங்கைப் படையெழுச்சியின் வரலாற்றுச் சிறப்பினை வலியுறுத்துகின்றனர். வடநாடு நோக்கிச்சென்ற சோழர்படைத் தலைவர்களுள் ஒருவன் மேல்வங்காளத்தில் தங்கிவிட்டான் என்பதாலும், அவனது வழி வந்தோனே சேனமரபினைத் தோற்றுவித்தான் என்பதாலும், ராஜேந்திரனுக்குப் பின்னர்

சோழப் பெரு நாட்டினை ஆண்டு வந்த முதலாம் ராஜாதிராஜனும், இரண்டாம் ராஜேந்திரனும் தொடர்ந்து தங்கள் அரசப் பிரதிநிதிகளைக் கங்கைக்கரை நாடுகளுக்கு அனுப்பி ஆட்சி புரியச் செய்தனர் என்று கல்வெட்டுச் செய்தி உணர்த்துவதாலும், வீரராஜேந்திரன் கன்யா குப்சத்தை மீட்டான் எனக் கல்வெட்டுச் சான்றுபகர்வதாலும் ராஜேந்திரனது கங்கைப்படையெழுச்சி இந்திய வரலாற்றின்கண் நிலையான விளைவுகளைக் கொண்டது என்பதனை நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

தமிழ் வேந்தனான ராஜேந்திரன் வடநாட்டின்கண் தன்பேராண்மையையும், வாளாண்மையையும் வெளிப்படுத்திப் புகழ்க்கொடியினைப் பட்டொள்ளி வீசிப்பறக்க விட்டானேயன்றி அமிழ்தினும் இனிய தமிழ் மொழியினை ஆங்குப் பரப்ப மறந்துவிட்டான். அன்று, இவன் ஆங்கு நம் செந்தமிழ் மொழியினைப் பரப்பியிருப்பானேயாகில் இன்றும் வட நாட்டின்கண் நம் தமிழ்மொழி பொன்றாது நின்று நிலவி, இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரே நாட்டு மொழியாக (Only National Language) சிறந்து விளங்கி இருக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை. 'குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்கு' எனச் செஞ்சொற் காவியமாம் சிலப்பதிகாரத்தில் செந்தமிழ் வித்தகர் இளங்கோ அடிகள் கூறியுள்ளவாறு குமரி முதல் இமயம்வரை நம் தமிழன்னையே அரசு கட்டிலில் வீற்றிருப்பாள். ஆனால், நம் வேந்தனோ, 'கங்கை கொண்டான்' என்ற விருதினை ஏற்றுக்கொண்டதோடு அமைதிபெற்றான். நம் ராஜேந்திரனைப் போலவே ஆங்கிலே யர்களும் பிறநாட்டை வென்றதோடு அமைதிகொண்டிருப்பின் ஆங்கிலம் இன்று உலகமொழியாக வளர்ந்திருக்குமா? என்பதனையும் நாம் சிறிது எண்ணிப்பார்க்க வேண்டும்.

கங்கை சென்று வெற்றியுடன் திரும்பிய சோழர் படைத் தலைவனைக் கோதாவரி ஆற்றங்கரையில் வரவேற்ற ராஜேந்திர

சோழன், தானே படைநடத்திச் சென்று, ஒட்டர நாட்டையும் கலிங்க நாட்டையும் வென்று, அவ்வேந்தர்களைக் கடுமையாகத் தண்டித்தான்.

பின்பு வேங்கி நிகழ்ச்சிகளில் தலையிட்டு ராஜராஜ நரேந்திரனை வேங்கி நாட்டு மன்னனாக முடி சூட்டுவித்தான். இதனால், ராஜராஜ நரேந்திரனின் நெடுநாளைய எண்ணம் நிறைவேறியது.

முதலாம் ராஜேந்திரன் தன் மகளாகிய அம்மங்காதேவியை ராஜராஜ நரேந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்துக் கீழைச் சாளுக்கியரின் உறவினை வலுப்படுத்தினான். ராஜராஜ நரேந்திரன் வேங்கி நாட்டை ஏறத்தாழ நாற்பத்தோராண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் இவன் பல இன்னல்களுக்கு உள்ளானான். ராஜராஜ நரேந்திரனின் தாயத் தானும் வேங்கி அரியணைக்குப் போட்டியிட்ட பகைவனுமான விசயாதித்தன், போரில் தோல்வியைத் தழுவிய போதிலும், வேங்கி நாட்டின் அரியணையிலமரும் வாய்ப்பினை நழுவ விடவில்லை.

மேலைச் சாளுக்கியரின் துணை வலிமையைப் பயன்படுத்தி எவ்விதத்திலும் ராஜராஜ நரேந்திரனைக் கவிழ்க்கத் திட்ட மிட்டான்; தனது எண்ணம் நிறைவேற விடாமுயற்சியுடன் செயல்பட்டான்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

குத்தொக்க சீர்த்த விடத்து.

என்னும் தெள்ளுதமிழ் பாவலனும் வள்ளுவரின் வாய்மொழிக் கிணங்கத் தனக்கு ஏற்பட்ட அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி மேலைச் சாளுக்கியரின் துணைவலி பெற்றான்; ராஜராஜ நரேந்திரனை அரியணையினின்றும் கீழே இறக்கினான்; அவனை நாட்டை விட்டுத் துரத்திவிட்டுத் தானே மன்னனாக முடிபுனைந்து கொண்டான். இவன் கி.பி. 1031 ஆம் ஆண்டு சூன்

திங்கள் இருபத்தேழாம் நாள் விஷ்ணுவர்த்தன விசயாதித்தன் என்ற சிறப்புப் பெயருடன் வேங்கி அரியணையேறினான். பதவியிழந்த பரிதாபத்துக்குரிய நரேந்திரன் மறுபடியும் தன்மாமனான ராஜேந்திரனிடம் தனக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான். ராஜேந்திரனும் தன் மருமகன் ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டுப் பெரும்படையுதவினான். சோழப் பெரும்படை ராஜராஜ பிரம்ம மகாராஜா என்ற பார்ப்பனப் படைத் தலை வரின்கீழ் சோழநாட்டினின்றும் புறப்பட்டது. இப்படைத் தலைவனுக்கு உதவிபுரிய உத்தமசோழ மிலாடுடையான், உத்தம சோழகோன் என்ற இரு படையதிகாரிகளும் வேங்கி நோக்கிப் புறப்பட்டனர். வேங்கிக்கருகில் உள்ள களிதிந்தி என்னுமிடத்தில் சோழப்படைக்கும் விசயாதித்தன் படைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. காற்றின் வேகமும், கனலின் வெம்மையும் தோற்றோடும் வகையில் இருதிறத்தாரும் அம்புமாரி பொழிந்தனர்; எங்கணும் ஒரே ஆரவாரம். முன்னணியில் நின்று முழுமூச்சுடன் போரிட்ட சோழப்படைத் தலைவனான ராஜராஜ பிரம்ம மகாராஜர் மாற்றானின் வேலால் குத்தப்பட்டிறந்தான். பின்னர், உத்தம சோழ மிலாடுடையானும், உத்தம சோழகோணும் வீரப்போர் நிகழ்த்தி மாண்டனர். இருப்பினும் சோழர்படை சோரவில்லை. இறுதியில் வெற்றிமாலையைக் கழுத்தில் அணிந்தனர். போர்க் குறிக்காயம் பெற்றுப் போர்க்களத்தில் வீர இறப்பினைத் தழுவிய வீரர்கட்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தனக்காக இறுதிவரை போரிட்டுப் போர்க்களத்தில் தமது உயிரை அர்ப்பணித்த ராஜராஜ பிரம்ம மகாராஜர், உத்தமசோழ மிலாடுடையான், உத்தமசோழகோன் ஆகிய வீரர்கட்கு நினைவுச் சின்னமாக மூன்று கோயில்கள் அமைக்கப்பெற்றன. ராஜராஜ நரேந்திரன் கி.பி. 1035இல் மீண்டும் வேங்கி நாட்டு மன்னனாக முடி புனைந்து கொண்டான். இவ்விதமாகச் சோழப்படையின் உதவியினால் ராஜேந்திரன் விசயாதித்தனை வென்று பதவியைக் கைப்பற்றினான்.

நம் ராஜேந்திரன் கங்கைக்கரை நாடுகளை வென்று கங்கைநீரைக் கொணர்ந்ததன் நினைவாகக் கங்கைகொண்டான் எனப்பெயர் பூண்டான் என்பதனை நாம் முன்பே கண்டோம். தனது கங்கை வெற்றியின் அடையாளமாகவும், தான் கங்கைகொண்டான் எனப்பெயர் பூண்டதன் சின்னமாகவும் ராஜேந்திரன் தனது குலதெய்வமாம் நடராஜப்பெருமானின் சடாமுடியிலும் கங்கையைச் சூட்டிமகிழ்ந்தான் என்ற ஒரு கருத்துச் சில ஆராய்ச்சியாளரிடையே நிலவுகின்றது.

'இது ராஜேந்திர சோழன் தனது கங்கைப் படையெழுச்சியின் அடையாளமாகப் புதுமையாகப் புகுத்தப்பட்டதொன்று என்று கருதப்படுகிறது. தனது கங்கைவெற்றியின் அறிகுறியாகத் தனது குலதெய்வமாம் தில்லை நடராஜப் பெருமானுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் இவ்வெற்றிக்குப் பின் உருவாக்கப்பட்ட நடராஜர் படிமங்களில் கங்கையைப் பூணுமாறு சிற்பிகளுக்குத் தகுந்த ஆணைகளை ராஜேந்திரன் பிறப்பித்ததாகக் கூறப்படுகிறது. எனவே, நடராஜர் கங்கைபூண்டார் ஆனார்' என்பதே அக்கருத்து.

அக்கருத்தினைப் பற்றிச் சிறிது விரிவாக ஆய்ந்துபார்த்தல் வேண்டுமென்று விரும்பிய நான் சென்னை, புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய இடங்களிலுள்ள அருங்காட்சியகங்களுக்குச் சென்று அங்குள்ள நடராஜர் படிமங்களைப் பார்த்து, அங்குள்ள அதிகாரிகளையும் சந்தித்து அதைப்பற்றிய செய்திகளைக் கேட்டறிந்தேன்.

ஏறத்தாழ கி.பி. பதினோறாம் நூற்றாண்டிற்குப் பின்பு உருவாக் கப்பட்ட அத்துணை நடராஜர் படிமங்களிலும் கங்கை காட்சியளிக்கிறது. ராஜேந்திரன் ஆட்சிக் காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றன பெரும்பாலான படிமங்களில் கங்கை காணப்பெறவில்லை.

எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமெனின் பதின்மூன்றாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும், தஞ்சை மாவட்டம்,

புங்கனூரில் வெட்டியெடுக்கப்பட்டுச் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள நடராஜர் படிமத்தில் கங்கைகாட்சி தருகிறது. தஞ்சை மாவட்டம், வேளாங்கண்ணியில் கிடைத்துள்ள பத்தாம் நூற்றாண்டினதாகக் கருதப்படுகின்ற நடராஜர் படிமத்தில் கங்கை காணப்படவில்லை. இதுவும் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தின்கண் உள்ள பொருப்பு மேட்டுப்பட்டியில் தோண்டியெடுக்கப்பட்ட, பத்தாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் மாறுகால் நடராஜர் படிமத்திலும் கங்கை காணப்படவில்லை. இஃது ராஜசேகரப் பாண்டியன் காலத்திய மாறுகால் நடனமாடும் ஆடவல்ல படிமமாகும். இப்படிமமும் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலைகளிலும் பதினொன்றாம் நூற்றாண்டுக்குப்பின் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் படிமங்களில் மட்டுமே கங்கை காட்சியளிக்கின்றது.

தஞ்சைப்பெரிய கோயிலில் தற்போது வழிபாட்டிலிருக்கும் நடராஜர் சிலையில் கங்கை காணப்படுகிறது. ஆனால், இதிலுள்ள கங்கையைக் கூர்ந்து நோக்குங்கால் இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், இது படிமத்துடன் சேர்ந்து உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ராஜராஜ சோழனின் ஆட்சிக் காலத்தினின்றும் இருபத்தொன்ப தாண்டுகளுக்கு முற்பட்டதான கல்வெட்டொன்று மத்திய மண்டபத்தில் ஆடவல்லார் படிமம் பிரதிட்டை செய்யப்பட்டதாகக் கூறுகிறது. இப்படிமம் ராஜராஜனின் அரசி சோழமாதேவியால் அளிக்கப்பட்டதாகும். இதில் ஒன்பது சடாமுடி இருந்ததாகவும் அதில் கங்கை இருந்ததாகவும் கல்வெட்டுக்குறிப்பிடுகின்றது. கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள இப்படிமம் இப்பொழுது தஞ்சைக் கோயிலில் காணப்பெறவில்லை. இஃது என்ன வாயிற்று? என்பது

தெரியவில்லை. இப்பொழுது கோயிலில் காணப்பெறும் நடராஜர் படிமத்தில் பத்துச் சடாமுடிகள் உள்ளன.

ராஜராஜன் காலத்திய திருவாலங்காட்டு நடராஜர் படிமத்தில் சடாமுடியே காணப்பெறவில்லை யாதலின், கங்கை இருந்ததா? இல்லையா? என்பதில் ஒரு முடிவுக்கு நம்மால் வரமுடியவில்லை.

பதினோராம் நூற்றாண்டிற்குப்பின் உருவாக்கப்பட்ட எல்லா நடராஜர் படிமங்களிலும் கங்கை காணப்படுகிறது. ராஜேந்திரனது ஆட்சிக்காலத்திற்கு முற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள நடராஜர் படிமங்கள் ஒரு சிலவற்றுள் கங்கை காணப்படுகிறது. எனவே, திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டில் (No. 42. S.I.I. Volume-II. page-170) கூறியுள்ளது போல் ராஜேந்திரனது காலத்திற்கு முன்பே நடராஜர் படிமத்தில் கங்கை சேர்க்கப்பட்டுள்ளது என்பது உண்மையாகும். எனவே, ராஜேந்திரனின் வெற்றியைக் குறிக்கத்தான் நடராஜர் படிமங்களில் கங்கைசூட்டப் பெற்றுள்ளது என்பது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

எப்படி இருப்பினும் ராஜேந்திரன் கங்கைப் படையெழுச்சிக்கு முன்பு கங்கை பூண்ட நடராஜர் படிமங்கள் அரிதாகக் காணப்படுகின்றன. என்றும், இவனது கங்கை வெற்றிக்குப் பின் ஏற்த்தாழ எல்லா நடராஜர் படிமங்களிலும் கங்கை சூடப்பட்டுள்ள தென்றும், இது காலப்போக்கினால் கலையில் ஏற்பட்ட மாறுதலேயாகும் என்றும் எண்ணுதல் பொருத்தமுடையதாகும். ராஜேந்திரனது ஆட்சியில் இவ்வழக்கம் காட்டுத்தீப்போல் பரவியதெனலாம். எனவே, ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திற்குப்பின் உருவாக்கப்பட்ட ஏறத்தாழ அத்துணை ஆடவல்லான் படிமங்களிலும் கங்கை சூடப்பெற்றுள்ளதால் இது பெருவழக்காய் இருந்ததை நன்குணரலாம்.

இக்கருத்தினைத் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம்

அவர்களும் ஆதார மற்றதென மறுக்கின்றார்.

ராஜேந்திரனது கங்கைப் படையெழுச்சி ஒரு மாபெரும் தீர்த்தயாத்திரையாகவும், வெற்றித் திருவுலாகவும் (திக்குவிசயம்) வரலாற்றறிஞர்களால் இந்நாள்வரை கருதப்பட்டுவந்தது.

இந்நாளில் இக்கொள்கை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். ஏனெனில், முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன் முதலான மன்னர்களின் மெய்க்கீர்த்திகளை ஆய்ந்து பார்க்குங்கால், முதலாம் ராஜேந்திரன்தான் வென்ற வடநாட்டுப் பகுதிகளிலும் தன் அரசப்பிரதிநிதிகளை நியமித்து ஆட்சி புரியச்செய்தான் என்பது புலனாகும். வடநாட்டினை வென்று, அதனைத் தன் ஆளுகையின் கீழக்கொணர வேண்டுமென்பதே ராஜேந்திரனின் வடநாட்டுப் படையெழுச்சியின் உள்நோக்கமாக இருத்தல் வேண்டுமென்பது புலனாகும்.

கடாரப் படையெழுச்சி

பெருவெற்றி வீரனாய்த் திகழ்ந்த ராஜேந்திர சோழன், தனது தரைப்படையின் வன்மையினால் பகைவென்று, தன் வாள்வலியையும், தோள்வலியையும் காட்டித் தனக்கு ஒப்பாருமின்றி, மிக்காருமின்றி, நானிலம் போற்ற வாழ்ந்தான். நிலப்படையின் ஆற்றலினால் 'கங்கை கொண்டான்' என்ற விருதுப் பெயர்பெற்றான் என்பதை முன்னரே கண்டோம். ராஜேந்திரன் தன்முன்னோர்களின் வீரம்செறிந்த வரலாற்றை நன்குணர்த் தவனாவான். சோழரின் முன்னோனான கரிகாற் பெருவளத்தான் கடல் கடந்துசென்று, ஈழநாட்டினை வென்று சிங்களவர்களைச் சிறைசெய்து, தமிழகம் கொண்டுவந்து, காவிரிக்கரை கட்டிப் 'பொன்னிக்கரை கண்ட பூபதி' எனப் போற்றப் பெற்றான். அவன் கால்வழி வந்த ராஜராஜனும், மரக்கல வலியால் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் வென்றான். இத்துணைப் பெருமை மிக்க பெருமன்னர்களைத் தன் முன்னோராகக் கொண்ட ராஜேந்திரனும், கடல் கடந்த

நாடுகளை வென்று, புகழ்பெற விழைந்தான். எனவேதான், கப்பற் படையைச் செப்பம் செய்தான்; கடல் கடந்த பேரரசுகளை வென்றான். இவன் கடல் கடந்த வெற்றிகளைப் பற்றி ஈண்டு ஆய்வோம். திருமலைப் பாறைக்கல்வெட்டு இவனது கடாரப்படையெழுச்சி பற்றி விவரித்துக் கூறுகிறது.

இவனது கடல் கடந்த வெற்றிகளுள் கடாரவெற்றி முதன்மையாகக் கருதப் பெறுகின்றது. இவனது கடார வெற்றிபற்றிய செய்திகளை இவனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் தெளிவாகக் காணலாம். திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவ்வெற்றி பற்றிய நிகழ்ச்சிகளை மிகவும் சுருக்கமாகக் குறித்துள்ளன. இவனது கடாரப் படையெழுச்சி கி.பி. 1025ஆம் ஆண்டிற்கு முன்னரே நடைபெற்றிருத்தல் வேண்டுமென்பது அறிஞர் கருத்தாகும்.

ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியில் குறிக்கப்பெற்றுள்ள 'கடாரம்' என்னும் நாடு யாங்குள்ளது? என்ற வினா வரலாற்று அறிஞர்கட்கும், புவியியல் வல்லுநர்கட்கும் பெரும்புதிராக அமைந்துள்ளது. ஏனெனில், ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியில் 'பப்பாளம்' என்னுமிடத்தை வெற்றி கொண்டதாகக் குறிப்பிட்டுள்ள பகுதி பர்மாவிலுள்ள 'தலைங்' பகுதியிலுள்ளதொரு துறைமுகப்பட்டினமென்று 'மகாவம்சம்' குறித்துள்ளது. எனவே, ராஜேந்திரன் வென்ற கடாரம் பருமாநாட்டிலுள்ள 'பெகு' என்னும் பகுதியாகும் என்று வரலாற்றறிஞர் திரு. வெங்கையா குறிப்பிடுகின்றார்.

சில ஆண்டுகள் கழித்துப் பர்மா நாட்டின் பழம்பொருள் பாதுகாப்புத் துறையினர், பெகு நாட்டை ராஜேந்திரசோழன் கி.பி. 1025-1027இல் வென்றதாகக் குறிக்கப்பட்டிருக்கும் இரு வெற்றித்தூண்கள் பெகுநாட்டில் காத்து கிடப்பதாக அறிவித்திருந்தனர். ஆராய்ச்சி அறிஞர் பலர் ராஜேந்திரன் மெய்க்கீர்த்தியில் குறித்துள்ள கடாரவெற்றி, பர்மாவெற்றி தான்

என்று உறுதிகொண்டனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டக் கருப்பொருட் களஞ்சியத்திலும் (Trichirapoly District Gazetteer) கடாரம் என்பது கீழ்ப்பருமா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திரு. கனகசபைப் பிள்ளையவர்களும் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றார்.

திரு. எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள் 'தமிழ் இந்தியா' என்னும் நூலில், கடாரம் என்பது பர்மாவிலுள்ள பகுதி என்று குறித்துள்ளார்.

திரு. அ. சிதம்பரனார் அவர்கள் 'முதலாம் ராஜேந்திரன் பர்மாவை வென்று, 'பெகு' என்னும் இடத்தில் ஒரு கற்றூணில் சாசனம் வெட்டுவித்துப் பெரிய கோர்ட்டுக்கு முன்னால் நாட்டியுள்ளான். அக்கற்றூண் இன்றும் நின்று நிலவுகிறது. அதற்கு அடுத்த ஆண்டில், அதாவது கி.பி. 1027இல் திருவாரூருக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள 'கடாரங்கொண்டான்' என்னும் கிராமத்தை நிர்மாணம் செய்து பர்மா வெற்றியைக் கொண்டாடியுள்ளான்.' என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழாராய்ச்சி மலரில் குறித்துள்ளார்.

இலக்கண விளக்கப் பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகர் அவர்கள் 'பர்மா தேசத்திலுள்ள பெகு நாட்டிற்குக் கடார தேசமென்று பெயருண்டு' எனச் 'செந்தமிழ்' எனும் இதழில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞரும், கரந்தைத் தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் 'பர்மாவிலுள்ள பெகு என்னும் பகுதியில் முதல் ராஜேந்திரன் நாட்டிய வெற்றித் தூண்கள், தமிழ்க் கல்லெழுத்துக்களுடன் இருப்பதை அந்நாட்டுக் கல்வெட்டுத்துறை அதிகாரி 'டோசையின் கோ' குறிப்பிட்டுள்ளதை அறிகிறோம். மற்றும் அங்கிருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பியுள்ள அறிஞர் சிலரிடம் பெற்ற செய்திகளும், பருமாவை முதல் ராஜேந்திரன் வென்ற

வரலாற்றினை உறுதிப்படுத்துகின்றன.

இவற்றால் கடாரம் என்பது பர்மாவிலுள்ள கடற்கரைப் பட்டினமும் அதைச் சார்ந்த பகுதிகளும் ஆகும் என்று குறிப்பிடும் கருத்து வலியுறுகின்றது. ஆனால், இது வரையில் வெளிவந்துள்ள சோழர் வரலாறுகளில் ராஜேந்திரனுடைய கல்வெட்டு, செப்பேடுகளைக் கொண்டு ஆய்ந்த முடிவாகக் கடாரம் என்பது மலேயாத் தீபகற்பத்திலுள்ள 'கெடா' என்னும் பகுதியேயென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

பர்மாவிலுள்ள முதல் ராஜேந்திரன் அமைத்த வெற்றித் தூண்களில் உள்ள கல்வெட்டுச் செய்தியினை முழுமையாகப் பெறுவோமானால், எது கடாரம் என்பதில் உள்ள ஐயம் நீங்குவதற்கு ஏதுவாகும். என்று 'கல்வெட்டுக் கருத்தரங்கு' என்னும் வெளியீட்டில் 'தமிழ்க் கல்வெட்டாராய்ச்சியும் தமிழக வரலாறும்' என்னும் கட்டுரையில் எழுதியுள்ளனர்.கடாரத்து மன்னனை வென்று ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், போன்றபகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டதாக ராஜேந்திரன் மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டிருத்தலானும், இவையனைத்தும் ஒரே படையெழுச்சியின் விளைவாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளாகும் எனக்கூறப் பட்டிருத்தலானும், இவையனைத்தும் மலேயாத்தீவின் பகுதிகளாதலாலும், கடாரம் என்பது மலேயாவிலுள்ள 'கெடா' எனத் தற்காலத்தில் வழங்கப்பெறும் பகுதிதான், என்பதை நாம் அறுதியிட்டுக் கூறலாம். வரலாற்றறிஞர் திரு. கே.ஏ.நீலகண்ட சாத்திரியவர்களும், இக்கருத்தினையே வலியுறுத்துகின்றார். சுமத்திராவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள 'கெர்த்தி' என்ற இடமே கடாரமென்று டாக்டர் எஸ். கிருட்டிணசாமி அய்யங்கார் குறிப்பிடுகின்றார்.

'கீ...ட்டா' என்ற இடத்தில் இருமுறை தங்கியதாகச் சீனப்பயணி ஈத்சிங்கால் குறிக்கப்பெற்றதும், 'கீ..டோ' எனப் பிற்காலத்திய

சீன நூல்களில் குறிக்கப்பெற்றதும், 'கடாஹா' எனகுறிக்கப்பெறுவதும், வேறுபட்டவையல்ல. மலேயாத் தீபகற்பத்தில் உள்ளதும், தற்காலத்தில் 'கெடா' என அழைக்கப்பெற்றதும் இக்கடாரமேயாகும்'* என்று திரு. கோடே' அவர்கள் கூறுவதாலும் இக்கருத்து வலிவுறும்.

(* பிற்காலச் சோழர் சரித்திரம்-சதாசிவப் பண்டாரத்தார்-பக்கம்-161. வரிகள்-20-21, 'சோழர் வரலாறு'-பண்டாரகர் மா. இராசமாணிக்கர் பக்கம்-107-வரிகள்-8-9.)

'கடாரம்' என்னும் நாடு பெனாங்கையடுத்துள்ள 'கேடா' என்னுமிடமே என்பது பெரும்பாலான அறிஞர்கள் கருத்தாகும்.* கடாரமும் தமிழ்நாடும் நீண்ட நெடுங்காலமாய் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கடாரம் வடமொழிச் செப்பேடுகளில் 'கடாஹம்' எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. பெரிய லெய்டன் செப்பேடுகளும் அதனைக் 'கடாகம்' எனக் குறிக்கின்றது.

(* திரு.கெ.கே.பிள்ளை 'தமிழக வரலாற்று-மக்களும் பண்பாடும்'-பக்கம்-259, 14-19)

கடாரம் என்ற சொல்லைச் செயங்கொண்டான் அவர்கள் தாம் பாடிய 'கலிங்கத்துப்பரணி'யில் பலமுறை குறித்துள்ளார். அவற்றுள், 'பரக்கு மோதக் கடாரம்', 'குளிறு தெண்டிரைக்குரைகடாரம்' ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும் பட்டினப்பாலையில் 'காழகம்' எனக்குறிக்கப் பெறுவது கடாரமே என்பதை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூற்றால் அறியலாம். இதனால், தமிழர்கள் சங்ககாலத்திலிருந்தே நீண்ட நெடுங்காலமாகக் கடாரத்துடன் வாணிகம் செய்தனர் என்பது வெள்ளிடைமலை. சீன நூல்களில் கடாரம் 'கீ...டோ' என்னும் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளது. சீன நாட்டினரும் கடார நாட்டுடன் கடல் வாணிகம் செய்ததாகச் சீன நூல்கள் குறிப்பிடுகின்றன. மேற்கூறிய கருத்துகளால், கடார நாட்டுடன் தமிழர்களும் சீனர்களும் பண்டு தொட்டுக் கடல் வாணிகம் செய்துவந்தனர் என்பது புலனாகும். கடாரமென்பது கடற்கரைப்

பட்டினமென்பதும், அதன் வழியாகத்தான் இந்தியா, கீழ்த்திசை நாடுகளுடன் கடல் வாணிகம் புரிந்ததென்பதையும் அறியலாம். பன்னெடுங்காலமாகத் தமிழகம் சீன நாட்டுடன் வணிகத் தொடர்பினைக் கொண்டிருந்ததும் ஈண்டு அறியற்பாலது.

செயங்கொண்ட சோழனான ராஜராஜன் காலத்துச் சோழ நாடும் கடாரமும் நட்புரிமை பெற்றுத் திகழ்ந்ததைச் 'சூடாமணி விகாரைக்' கட்ட ராஜராஜன் அனுமதி வழங்கியிருத்தலினாலும், ஆனைமங்கலம் என்னும் ஊரைப் 'பள்ளிச்சந்தமாக' வழங்கியிருத்தலாலும் இனிது விளங்கும். ஏன்? ராஜேந்திரனின் ஆட்சிக்காலத் தொடக்கத்திலும்கூட, இருநாடுகளுக்கிடையே நட்பு நீடித்ததை அறியலாம். இவ்வாறிக்க ராஜேந்திரன் கடார நாட்டின்மீதும் படையெடுப்பானேன்? என்ற வினா எழுவது இயற்கையே. ஆயினும், இதுபற்றிய காரணம் எங்கும் குறிப்பிடப் பெறவில்லையாயினும் இதற்கான காரணத்தை நாமே உய்த்துணரலாம்.கடல் வாணிகம் பொருட்டுக் கடாரம் சென்று தங்கிய, எண்ணிலாத தமிழர்கட்குக் கடார வேந்தன், இன்னல்கள் ஈந்து தொல்லைகள் பலதந்ததினால், அவர்கள் நல்வாழ்வில் நாட்டம் கொண்டு, அவர்களின் வாட்டத்தினைப் போக்க ராஜேந்திரன், திட்டமிட்டு இப்போரினை மேற்கொண்டு இருத்தல் வேண்டும்.

சோழப் பேரரசுடன் கடாரம் கொண்டிருந்த நட்புறவு நிலைகுலைந்ததாலோ, வங்கக்கடல் முழுவதும் சோழப் பேரரசின் ஒருபகுதியாக ஆக்கப்பட வேண்டுமென்ற பேராவலினாலோ, சோழநாட்டிற்கும் சீன நாட்டிற்கும் இடையே வளர்ந்து வந்த வாணிகத்தொடர்பினைத் துண்டிக்கக் கடாரம் முயன்றதாலோ, ராஜேந்திரன் கடாரத்தின் மீது படையெடுத்திருக்க வேண்டும் என்பது அறிஞர் கருத்து. பெரும்பாலும் வணிகநோக்கத்தின் அடிப்படையில்தான் இப்போர் நிகழ்ச்சி, நடைபெற்றிருத்தல் வேண்டுமென்பது பலரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

ஈழத்தினை வென்று, கடல் கடந்த பேரரசினை நிறுவிச் சோழர்களது ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்திய ராஜேந்திர சோழன் தனது கடல் கடந்த பேரரசினை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கடாரத்தின்மீது படையெடுத்திருக்கவேண்டுமென எண்ணுதல் பொருத்தமே. எனவேதான், ராஜேந்திரனுக்குப் பின்பு ஆண்ட வீரராஜேந்திரனும் கடாரப் படையெழுச்சியில் ஈடுபட்டான். இக்கருத்தினைப் பேராசிரியர் பண்டாரகர் திரு. என். சுப்பிரமணியன் அவர்கள் கீழ்க்கண்டவாறு வலியுறுத்திக் கூறுகிறார்.

'தூரக் கிழக்கு நாடுகளில் தென்னிந்தியாப் பல்லாண்டு காலமாகக் கடல் கடந்த வாணிகம் செய்து வந்தமைக்குத் தடையாக இருந்து வந்த ஸ்ரீவிசய நாட்டின் தொல்லையை அடக்கவும், கடல் வழியினைச் சிக்கலின்றிச் செய்யவுமே, இப்படையெடுப்பானது ஓரளவு நிகழ்த்தப்பட்டது. இதனைத் துருக்கியர்களின் தலையீட்டை முறியடித்து, இந்தியாவிற்குள் நுழைந்த, ஐரோப்பிய வாணிக நாடுகளின் செயலோடு ஒப்பிடலாம். ஆயினும் ராஜேந்திரன் கடல் கடந்து தன் பேரரசை நிலைநாட்ட எண்ணினான் என்று கூறுவதே சாலப்பொருந்தும். இதுவரையாராலும் செய்ய வொண்ணாக் கங்கைப்படையெடுப்பை இவன் செய்தான் என்று கூறுவோமானால், கடல் கடந்து தன் பேரரசைப் பரப்பவும் அவனால் முடிந்தது என்றும் கூறலாம். கடலுக்கப்பாலுள்ள ஈழத்தை வென்று தன் ஆட்சியைக் கடல் கடந்த பேரரசாக்கிய சோழர்கள், ஸ்ரீவிசய நாட்டினுடைய எல்லைகளையும் எளிதாகத் தங்களது ஆட்சியுடன் சேர்த்துக்கொள்ள முடியும். ராஜேந்திரன் இதன் நிமித்தம் தூண்டப்பட்டிருக்க முடியாது. பரந்த பேரரசினை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவலே இதற்குக் காரணமாகும். இப்படையெழுச்சி முடிந்தவுடன் கடல் கடந்த நாடுகளில் சோழ அரச குடும்பத்தினர் சிலர் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டனர். வீரராஜேந்திரனும் கடாரத்தினை இரண்டாம்

தடவை வெற்றிகொண்டது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

'சோழர்கள் இந்நிலைப் பகுதிகளைத் தங்கள் பேரரசுடன் இணைந்த மாநிலங்களாக ஆளுவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை' என்று திரு. நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகின்றார். ஆனால், இதற்கு மாறாகக் கூறுவதற்கும் எவ்வித சான்றுகளும் இல்லை' என்பதுறுதி.*

(* History of Tamil Nadu - Dr. N. Subramanian)

ராஜேந்திரன் காவல்மிக்க கடாரத்தின்மீது போர் மேற்கொள்ள முடிவெடுத்தான்; கப்பற்படைத் தலைவனாகத் தானே பொறுப்பேற்றான்; காலமும் நிலையும் கருதித்தானே அக்கலங்களைக் கீழ்த்திசை நோக்கிச் செலுத்தினான். நாள்கள் உருண்டன; மரக்கலங்களும், நீரினைக் கிழித்துக்கொண்டு நெடிதுசென்றன; ஸ்ரீவிசய நாடும் நெருங்கிவிட்டது; வீரர்களின் கண்களுக்கும் அது தென்பட்டது; வீரர்கள் வீறுகொண்டனர். இக்காலை சுமத்திரா என அழைக்கப்பெறுவதும் மேற்குக்கரையில் அமைந்த அந்நாட்டின் தலைநகரும் துறைமுகமுமான ஸ்ரீவிசய நகரில் கரையேறினர்.

ஸ்ரீவிசய நாட்டுக்கரையில் சோழ வீரர் இறங்கினர் என்ற செய்திகேட்டான், அந்நாட்டு மன்னனான விசயோத்துங்கவருமன் சீறி எழுந்தான் சிங்காதனத்திலிருந்து; தன் ஆற்றல் மிகு படைத்தலைவர்களை அழைத்துப் பெரும்படைதிரட்ட ஆணைபிறப்பித்தான்; தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் அணிவகுத்து நின்றனர்; வெஞ்சினம் கொண்ட வீரர்கள் வீராவேசம் கொண்டு சோழப்படையினைத் தாக்க முன்னேறினர்.

இருதிறத்தாரும் அணிவகுத்து நின்றனர்; வீரர்கள் இடைவிடாது போர் செய்தனர். நீண்ட நாள்களாகப் போர்செய்துகளைத்திருந்த சோழப் பெருவீரர்களும் புத்துணர்ச்சியுடன் போரிட்டனர். சோழப்படையின் பெருவீரம் கண்டு பகைவர்கள் நாற்றிசையிலும் சிதறி ஓடினர். சோழ

மறவர்கள் ஸ்ரீவிசய நாட்டில் வெற்றிக்கொடி நாட்டினர். கடார நாட்டின் காவலனாம் விசயோத்துங்க வருமன்* தோல்வியால் துவண்டுவிட்டான்.

(* இவன் சூளாமணி வருமனின் பேரனும், மார விசயோத்துங்க வருமனின் மகனுமாவான்.)

ராஜேந்திரன் விசயோத்துங்க வருமனை அடிமைப்படுத்தினான்; பட்டத்து யானையைக் கவர்ந்தான்; பெரும்பொருட்குவியலையும் கவர்ந்து கொண்டான்; வியத்தகு அழகு மிக்க வித்தியாதரத் தோரணத்தையும் கைப்பற்றிக் கொண்டான். விசயோத்துங்க வருமன் வெட்கித் தலைகுனிந்தான். கடற்படை வலிமை மிக்கிருந்தும் தோல்வி கண்டதை எண்ணியெண்ணி அவன் உளம் நைந்தான்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கடார நாட்டிற்கு வாணிகத்தின் பொருட்டுச் சென்ற சுலைமான் என்னும் அராபியன் கடார நாட்டில் கப்பல் கட்டும் தொழில் சிறப்புடன் நடைபெற்றதென்பதைக் குறித்துள்ளான். கடாரநாடு கப்பற்படை வலிமைமிக்கிருந்தது என்பது இதனால் புலனாகின்றது. வலிமை மிக்க இந்நாட்டினை வென்ற ராஜேந்திர சோழனது கப்பற்படையின் மேம்பட்ட வலிமையின் இவ்வெற்றியினால் நாம் இனிது அறியலாம்.

'ஸ்ரீவிசயம்' என்பது 'ஸ்ரீவிஷயம்' எனவும் பண்டு அழைக்கப் பட்டது. இதனைச் சீனர் 'ஸ்ரீவிஜயம்' என்று குறிப்பிட்டுள் ளனர். ஸ்ரீவிஷயம் என்பது 'திருநாடு' எனப் பொருள்படும். இது இக்காலை 'பாலம் பாங்' என்னும் மாநிலமாகும். ஸ்ரீவிசய நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டுமுடிய வாணிகத் தொடர்பு வலிவடைந்திருந்ததைச் சீன நூல்கள் குறிப்பிடுகின்றன. கடார வேந்தனிடமிருந்து சோழர் கைப்பற்றிய முதல்நாடு ஸ்ரீவிசயமாகும் (ஸ்ரீவிஜயம்) என்பது ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

விளைவுகள்

இவ்வெற்றியின் பயனாகத் தமிழ்நாட்டு வணிகர்கள் எவ்வித இடையூறுமின்றிக் கடாரத்தில் வாணிகம் புரிந்துவந்தனர். மேலும், கி.பி. 1088 ஆம் தேதியிட்ட சிதைந்த கல்வெட்டொன்று கடாரத்தில் காணக்கிடைத்தலின் தமிழ்நாட்டு வணிகர் காடாரத்தில் தங்கி, வாணிகம் செய்தமை உறுதி பெறுகின்றது. தமிழர் வாணிகமும் ஆங்குப் பெருகிற்று.

ஸ்ரீவிசய நாட்டு மன்னன் ராஜேந்திரனின் மேலாண்மையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொண்ட போதிலும், இப்படை யெழுச்சியினால் நிலையான, நிரந்தரமான விளைவுகள் யாதும் எற்பட்டதாகத் தெரியவில்லை. ஸ்ரீவிசயநாடு சோழ வேந்தனுக்கு முறையாகக் கப்பம் செலுத்தியிருக்கக் கூடுமெனினும், இந்நாட்டினைச் சோழப் பெருநாட்டுடன் இணைத்துக்கொண்டு, ஆட்சி புரிய வேண்டுமென்ற எண்ணத்துடன் சோழர்கள் எவ்வித முயற்சியினையும் மேற்கொண்டதாகச் சான்றுகள் இல்லை என்பதும் புலனாகின்றது.

ராஜேந்திரனுக்குப் பின்னர் சோழநாட்டினை ஆண்ட மன்னர்களுள் ஒருவனான முதலாம் வீரராஜேந்திரன் என்னும் மன்னன், கடார நாட்டினை வென்று* மீண்டும் கடார மன்னனிடம் ஒப்படைத்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் சான்று கூறுவதனால், ராஜேந்திரனின் கடார வெற்றி ஒரு தற்காலிக வெற்றியே என்பது உறுதி. இக்கடல் கடந்த வெற்றியினால் ராஜேந்திரனுடைய வெற்றியும், புகழும் கடல் கடந்த நாடுகளில் பரவின.

(* தனகழலடைந்த மன்னர்க்குக் கடாரம் எறிந்து கொடுத்தருளி வீரராஜேந்திரனின் ஏழாமாட்சியாண்டுக் கல்வெட்டு)

இவ்வெற்றியின் காரணமாக ராஜேந்திரன் இந்திய வரலாற்றில் தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறான்.

இந்திய வரலாற்றில் கடல் கடந்து சென்று, வியத்தகு வெற்றிகள் பல பெற்ற வேந்தர்களுள் ராஜேந்திரனே, தலையாயவனாவான்.

'முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டு' சிறப்பினைப் பெற்ற இவனுடைய தந்தையாம் ராஜராஜனை விடமேம்பட்ட புகழினை இவன் கடார வெற்றியால் பெற்றான் எனக்கூறலாம்.

ராஜேந்திரனின் கடார வெற்றியின் விளைவுகள் பற்றித் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் 'சோழர்கள்' எனும் நூலில் 'அவனுடைய (ராஜேந்திரனுடைய) வெட்டெழுத்துகளில் கூறப்பட்ட செய்திகளை, அப்படியே வரலாற்றுச் சான்றுகளாக எடுத்துக் கொண்டாலும்கூட, அவனது ஸ்ரீவிசயப்படையெழுச்சி ஸ்ரீவிசய நாட்டு மன்னைத் தற்காலிகமாகச் சோழனின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள வைத்ததேயன்றி, நிலையான விளைவுகளை ஏற்படுத்தவில்லை' என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வெற்றிகளினால் தமிழர்களின் கட்டடக்கலை, வழிபாட்டு உருவங்கள், மதக்கோட்பாடுகள், சிற்பக்கலை போன்றவை கிழக்கிந்தியத் தீவுகளிலும் பருமா, மலாயா, சயாம், இந்தோசீனம் முதலிய நாடுகளிலும் பரவின. ஆங்குக் காணப்பெறும் கோயில்களைக்கொண்டும், விக்கிரகங்களைக்கொண்டும் இவற்றை நாம் தெளிவாக அறியலாம்.

பின்னர், ராஜேந்திரனின் கப்பற்படை 'பண்ணை' என்னும் நகரில் தாக்குதல் நிகழ்த்திற்று. பண்ணைப் போரும் ராஜேந்திரனுக்கு வெற்றியினை அளித்தது. பண்ணை என்பது சுமத்திராத்தீவின் கீழக்கரையிலுள்ள ஊராகும். அஃது இக்காலத்தில் 'பனி' எனவும் 'பனை' எனவும் (Pani or Panei) இரண்டு பெயர்களால் அழைக்கப்பெறுகின்றது.

அடுத்துச் சோழப்படை மலையூரைத் தாக்கியது. மலையூரும் ராஜேந்திரனுக்கு வெற்றிமாலை சூட்டியது. மலையூரில்

'மலையூ' என்னும் பெயரில் ஒரு நதி ஓடியதாக ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.

மலையூர் சுமத்திராவின் கீழ்க்கரையில் அமைந்திருந்ததா? மேல் கரையில் அமைந்திருந்ததா? தென்பகுதியில் அமைந்திருந்ததா? என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவி வருதலின் உண்மையைக் கண்டு கொள்ளமுடியவில்லை. இன்னும் சிலர் இது பாலம் பாங் மாநிலத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்று கூறுகின்றனர். இது மலேயாவின் ஒரு பகுதி என்று கே. ஏ. என். சாஸ்திரி குறிக்கிறார். கே.கே. பிள்ளையவர்கள், இது ஸ்ரீவிஜயம் அல்லது பண்ணையாதல் வேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.

மலையூர் என்பது மலாயாத் தீபகற்பத்தின் தென்கோடியிலும், பழைய சிங்கப்பூர் நீர்ச்சந்தியின் (Strait) வடக்குக் கரையிலும் அமைந்திருந்ததாகக் கூறுதல் பொருத்தமானதாகும். ஆலந்து நாட்டினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் இது 'ஜம்பி' (Jambi) என்னும் நாடு என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இவற்றின் பயனாக ஜாவாவிலும், சுமத்திராவிலும் தமிழ்நாட்டுப் பாணியில் சிவன் கோயில்கள் கட்டப்பெற்றன. சேர, சோழ, பாண்டியரின் பெயர்களை அங்குள்ள இனத்தினர் சூட்டிக் கொண்டனர். இதனைத் திரு. எஸ்.ஜே. குணசேகரன் அவர்கள் தமது 'தென்கிழக்கு ஆசியாவில் முந்தைய தமிழ் நாகரிகம்' என்னும் நூலின்கண் 'சுமத்திராவில் உள்ள சில இனப்பிரிவினர் பெயர்கள், தென்னிந்தியாவின் அதிலும் சிறப்பாகச் சோழ, பாண்டிய, மலையாளம் என்னும் தமிழருடைய பெயர்கள் ஐயத்ததிற்கிடமின்றிக் காணப்படுகின்றன' என்று குறிப்பிடுகின்றார். (In sumatra are found certain names of tribal subdivisions which are unmistakably south Indian and specially Tamilian names such as Chola, Pondia and Malayala. Early Tamil Cultural Influences in South East Asia. S. J. Gunasekaran) இக்கருத்தினையே தென்னிந்திய

வரலாற்றறிஞர் பேராசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்களும் 'சுமத்திராக்காடுகளில் உள்ள வேட்டையாடுகின்ற தியாக்ஸ் இனத்தினருள் சிலர் இன்றும் தம்மை, பாண்டியர், சோழர், தேளாவி, மலையாளி எனச் சொல்லிக் கொள்கின்றனர்' எனக் குறிப்பிடுகின்றார். (Some tribes among the head-hunting Dyabs in the wilds of sumatra still call themselves Pandya. Chola, Delavi, and Malayala Indian influence in the Far East. Professor K.A. Nilakanda Sastri)

பின்னர், ராஜேந்திரன் தன் கடற்படை வலிமையால் ஸ்ரீவிசய நாட்டின் ஆட்சிக்குட்பட்ட மாயிருடிங்கம், இலங்காசோகம் என்னும் இடங்களை வென்று ஆங்குத் தன் புலிக்கொடி ஒன்றையே ஓங்கிப் பறக்கவிட்டான். மாயிருடிங்கம் என்பது ஆழ மிகுந்த கடலினைப் பாதுகாப்பாகக் கொண்ட மலேயாவின் மத்தியில் அமைந்தநகரமாகும். சௌ-ஜீ-குவா இதனை ஜி-லோ-டிங் என்று குறிப்பிட்டுள்ளார். இது மலேயாவில் லீகாருக்கருகிலிருந்தது.

இலங்காசோகம் என்பது சீன நாட்டினரால் 'லிங்-யா-சென்-கியா' (Ling-Ya-Sen-kia) என அழைக்கப்பெற்றது. இது மலாயா நாட்டிலுள்ள 'கெடா'விற்குத் தெற்கில் அமைந்திருந்தது. வியத்தகு வெற்றிகள் பல பெற்ற ராஜேந்திரனது கப்பறைபடை, அடுத்த அதே 'கெடா' நாட்டிலுள்ள பப்பாளத்தைத் தாக்கித் தன்னடிப்படுத்தியது. இது 'பாப்பலமா' என்னும் பெயரால் குறிப்பிடப்பட்ட நாடு என்று மகாவம்சத்தில் குறிக்கப்பட்டுள்ளதாகத் திரு. வெங்கையா அவர்கள் எழுதுகிறார்.

ஈழ வேந்தனாம் முதலாம் பராக்கிரமபாகு என்பான், தமிழ் நாட்டுத் தானைத் தலைவனாம் ஆதிச்சன் என்பானை அருமண தேசத்திற்கு எதிராகப் படையுடன் அனுப்பியபோது, அவன் பாப்பாலமா என்ற இடத்தில் இறங்கினான் என்பதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. எனவே, இது கீழ்ப் பருமாவிலுள்ள 'தலைங்' நாட்டினைச் சேர்ந்தது என்று வரலாற்றறிஞர் திரு.

வெங்கையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பாவேந்தன் ஒட்டக்கூத்தனும் 'மாளுவம் சோணகம் பப்பளம்' என்று குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழில் குறிப்பிட்டிருப்பதால் 'பப்பளம்' என்ற நாடு ஒன்று பண்டு இருந்ததை அறியலாம். 'பப்பளம்', 'பப்பாளம்' இரண்டும் ஒன்றே என்பதும் தெளிவு. எனவே, 'பப்பளம்' என்பது கிரா பூசந்திக்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டுமென்பது அறிஞர்தம் முடிவு. இருப்பினும் இது பற்றி இறுதியாகத் தற்போது எதுவும் கூற இயலாது.

இலிம்பங்கம், வளைப்பந்தூர் ஆகிய இவ்விரு இடங்களும் எங்கிருந்தன? என்பது பற்றி எவருக்கும் தெளிவாகப் புலப்படவில்லை யாதலின் இது பற்றி அறுதியிட்டுக் கூறுதல் இயலாது.

அடுத்து ராஜேந்திரனது வலிமை மிக்கபடை, தலைத்தக் கோலத்தைத் தாக்கிப் பகைப்படையினை உலையச்செய்தது. அந்நகரம் பிடிபட்டதால் மலாயா நாட்டின் மேலைக்கரை முழுவதும் சோழர் ஆதிக்கம் பரவியது.தக்கோலம் என்பது ஒரு காலத்தில் வாணிகப் புகழ்பெற்ற நகரமாக விளங்கிதென்பதைக் கிரேக்க அறிஞரான தாலமி 'தகோலா' எனக் குறித்துள்ளதால் உறுதியாகிறது. 'தலைத்தக்கோலம்' என்பதும் 'தக்கோலா' என்பதும் ஒரே இடத்தைத் தான் குறிக்கின்றன என்பது திண்ணம். 'கிரா' பூசந்திக்குத்தெற்கே அமைந்துள்ளதும், மலாயாவின் மேல் கரையிலமைந்துள்ளதுமான 'தகோபா' மாவடத்தின் தலைநகராகிய தகோபா நகரமே பண்டு தக்கோலமென அழைக்கப்பட்டதென அறிஞர்கள் கருதுகின்றனர்.

இளங்கோவடிகளின் காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார், 'கிடாரவன்', 'தக்கோலி', 'அருமணன்' போன்ற அகில் வகைகளைத் தமது உரையில் குறிப்பிட்டுள்ளதால் பண்டைநாளில் தக்கோல நாட்டில் இருந்து அகில் தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதென்பதும்,

தமிழ்நாட்டிற்கும், தக்கோல நாட்டிற்கும் பண்டுதொட்டுக் கடல் வாணிகம் வளர்ந்திருந்தது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

சீன நாட்டு நூல்களில் தன்-மாலிங் எனக் குறிக்கப்பெற்றுள்ள நாடும் ராஜேந்திரன் மெய்க்கீர்த்தியில் 'மாதமாலிங்கம்' எனக்குறிக்கப் பெற்றுள்ளதும் ஒன்றே என்று கொள்ளுதல் நன்றேயாகும். இலங்கா தேசத்திற்கும், தமாலிங்கத்திற்கும் தரைவழியும், கடல்வழியும் இருந்தன என்றும், கடல்வழியே சென்றால் ஆறு நாள் பயணம் மேற்கொள்ளவேண்டுமென்றும் சீனநூல் குறிக்கின்றது.

தன்மாலிங் என்பது மலாயாவின் கீழ்க்கரையில் உள்ள 'குவாண்டன்' என்னும் ஆறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்த தெமிலிங் அல்லது தெம்பலிங் என்றநாடு என்பதனை அறிஞர் செரினி குறிப்பிட்டுள்ளார். மாதமாலிங்கம், மலேயாத் தீபகற்பத்தில் 'பண்டன் விரிகுடாவிற்கு' அண்மையிலிருந்ததாகத் திரு.கெ.கெ. பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

தக்கோல வெற்றிக்குப்பின் ராஜேந்திரனின் கலங்கள் தமாலிங்கக் கரையில் இறங்கின. தமாலிங்கப் படையும், சோழரது படையும்போர் நிகழ்ந்தின. இருபடைகளும் மலையொடு மலை மோதுவதுபோல் கடும்போர் புரிந்தன. இருப்பினும் சோழரதுபடையின் வலிமை மிக்க தாக்குதலைத் தாங்க வியலாது தமாலிங்கப் படை பின்வாங்கத் தொடங்கிற்று. இறுதியில் சோழப்படை போற்றுதற்குரிய வெற்றியினைப் பெற்றது. தமாலிங்க நாடும் தமிழனது வெற்றிப் புகழ்பாடிற்று.

தமாலிங்க நாட்டினைத் தமதாகக் கொண்ட ராஜேந்திரன் இலாமுரிதேசத்தை நோக்கித் தன் கப்பற்படையினைச் செலுத்தினான். சோழர்படை இலாமுரி தேசத்தின் கடற்கரையில் இறங்கிற்று. இதைக்கேள்வியுற்ற இலாமுரி தேசப்படை சோழப் படையினை எதிர்த்து நின்றுபோரிட்டது. சோழப்படையினர்

வீராவேசம் கொண்டனர். எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடும்படி வன்மையாகத் தாக்கினர். இலாமுரி தேசமும் ராஜேந்திரனுக்கு வெற்றிமாலை சூட்டியது.

இலாமுரிதேசம், சுமத்திராத்தீவின் வடபகுதியில் இருந்த நாடென்பதை அறுதியிட்டுக்கூறுவர். இதனையே இத்தாலி நாட்டுப்பயணியான மார்க்கோபோலோ, லம்பிரி எனவும், அராபிய நாட்டுக்குப் புவியியல் வல்லுநர்கள், லாமுரி எனவும், சீன நாட்டினர், லான்வூலி எனவும் குறிப்பிடுகின்றனர். இவ்விதம் பன்னாட்டினரால் குறிப்பிடப்பட்டுள்ள இலாமுரி தேசம் வணிகச் சிறப்பும், வளப்பமும் கொண்டதாக நன்கு விளங்கியதென்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். இலாமுரிதேசம் இப்போது 'லம்ரி'* என அழைக்கப்பெறுகிறது.

(* தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் -பக்கம்-259)

மேற்கூறப்பட்ட நாடுகளில் பெற்ற வெற்றிகள் பலவும் 'ராஜேந்திரன் அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தும் திறனுடையான்' என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வெற்றிகள் அனைத்தும் ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியில் முறையாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

மேற்கூறப்பட்ட நாடுகள் அனைத்தும் மலாயாநாட்டையும், சுமத்திரா நாட்டையும் சார்ந்தும், சூழ்ந்து மிகுந்த பகுதிகளாகுமென்பதையும், இவைகள் மாபெரும் நாடாகிய ஸ்ரீவிசய நாட்டின் ஆளுமைக்குட்பட்டுச் சங்கிராம விசயோத்துங்கவருமானால், ஆளப்பட்டு வந்ததென்பதையும், தெளிவாக அறியலாம். ஸ்ரீவிசயநாடு சுமத்திராவில் அமைந்து, சீரும் சிறப்பு மிக்கதாகப் பண்டு விளங்கியதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. முதலாம் ராஜராஜன் காலத்திலும், சங்கிராம விசயோத்துங்க வருமனே கடார நாட்டின் மன்னனாகத் திகழ்ந்தான் என்பது ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும். ஸ்ரீவிசய நாட்டின் மேலாதிக்கத்திற்குட்ப்ட்ட நாடுகளாகச் 'செள-ஜு-குவா' குறிப்பிட்டுள்ள பதினைந்து நாடுகளும், ராஜேந்திரன் வெற்றிபெற்றுள்ளதாக

மெய்க்கீர்த்தியில் குறிப்பிட்டுள்ள நாடுகளும் ஏறத்தாழ ஒன்றாக இருத்தலின், ராஜராஜனுடைய வெற்றிகள் வரலாற்று அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கலம் பல செலுத்திய கடல்கடந்து கடார நாட்டின் பலபகுதிகளை வென்று, ஆங்கு வெற்றிக்கொடி நாட்டிய ராஜேந்திரன், கடலலைகளை புகழ்பாடக் கரைகாணா இன்பக்கடலில் மிதந்தவாறே தன் தாய்நாடு திரும்பினான்.

சிங்கத் தமிழனாம் இவன் தன் கடற்படையை வங்கக் கடலின்கண் செலுத்தினான். அப்பொழுது வழியில் அமைந்துள்ள மாநக்கவாரத் தீவகம், பேரெழில் மிக்க சோலைகளைக் கொண்டு 'பூ மணமும், புகழ் மணமும் பரப்பியமை இவன் கண்ணையும், கருத்தையும் கவர்ந்தது.

குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநல்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுகள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு,
பூக்கள் மணங்கமழும்; பூக்கள் தோறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்'

என்னும் பாவேந்தன் பாரதிதாசனின் சஞ்சீவி பருவதத்தின் சாரலைப் போன்று எழில் குலுங்கு தீவகமாகத் திகழ்ந்தது தான் மாநக்கவாரம். ஆங்குச் சோழப்படைகள் இறக்கப்பட்டன. அத்தீவகத்தில் தாக்குதல் தொடங்கப்பெற்றது. நக்கவாரமும் கங்கை கொண்டானுக்கு வெற்றிமாலையைச் சூட்டிப்பெருமை கொண்டது. இக்கால நிக்கோபர் தீவுகளே அக்கால மாநக்கவா ரமாகும். தென்னைமரங்கள் ஓங்கி உயர்ந்த சிறப்பினைப் பெற்ற இத்தீவகங்களினின்றும், நக்கவாரம் (தென்னம்) பிள்ளைகள் வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துணைச் சிறப்பும், பேரெழிலும் வாய்ந்த நக்கவாரம் ராஜேந்திரன்

வசமாயிற்று.

தன்னைப்போற்றி வளர்ந்த திருநாடு, தன்தாயை ஈன்ற திருநாடு, அலை கடலுக்கப்பாலும் பெரும்புகழ் பரப்பிப் பொன்றாது நின்று நிலவக் கடலிடைத் தீவுகட்குச் சென்று, பகைவென்று தன் ஆண்மையையும், ஆற்றலையும் ஆங்குப்பறை சாற்றினான் நம் ராஜேந்திரன், கடலலையையும் கடந்து, கடிது சென்றது இவனது மாங்காப்புகழ். இவனது கடல் கடந்த வெற்றியினை 'மாவீரன் நெப்போலியனின்' கடல்கடந்த வெற்றியுடன் ஒப்பிடுவது சாலப்பொருந்தும்.

பார் புகழும் ராஜேந்திரன் எண்ணிலா வெற்றிகள் பெற்றபோதிலும், அவன் கங்கை வெற்றியும், கடாரவெற்றியுமே இலக்கியங்களால் பலபடப்பாராட்டப் பெறுகின்றன. அவன் தனது நிலப்படை வலிமையால் வடவேந்தர்களை வென்று அதன் நினைவுச் சின்னமாகக் 'கங்கைகொண்டான்' என்னும் சிறப்புப் பெயரினையும், தன்கடற்படையின் ஆற்றலினால் அலைகடல் நடவுள் பலகலம் செலுத்திக் கடாரம் வென்றதன் அறிகுறியாகக் 'கடாரம் கொண்டான்' என்னும் வெற்றிப்பெயரினையும் பெற்றுப் பெருமை கொண்டான். தமிழர் தம் வீரத்தின் விளைகளனாய், வெற்றியின் நிலைக்களனாய், போற்றப்பெறும் இவ்விரு வெற்றிகளும் இலக்கியங்களால் மிகவும் பாராட்டப்படுகின்றன.

கங்கா நதியுங் கடாரமும் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியர்கோன்
கங்கா நதியுங் கடாரமும் கைக்கொண்டு
கங்கா புரிபுரந்த கற்பகம்
களிறு கங்கைநீ ருண்ண மண்ணையில்
காய்சினத் தொடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமுங்

கொண்டு மண்டலங் குடையுள் வைத்தும்

என்று பரணிக்கோர் செயங்கொண்டானால் 'கலிங்கத்துப் பரணி'யிலும் , பாவேந்தன் ஒட்டக்கூத்தனால் 'மூவரூலா' விலும் நம் ராஜேந்திரன் பாராட்டப்பெறுகிறான். எனவே, இவைபெறற்கரிய வெற்றிகள் என்பது புலனாகும்.

ராஜேந்திரன் வாளாண்மையம், தோளாண்மையும் கொண்டு, மாவீரனாகத் திகழ்ந்து, வெற்றிகள் பெற்றமையின், இவன் கிரேக்க மாவீன் அலெக்சாந்தருடனும், கடல் கடந்த நாடுகளில் வியத்தகு வெற்றிகள் பெற்றமையின், பிரெஞ்சு நாட்டு மாவீரன் நெப்போலியனுடனும் ஒப்புமை நோக்கத்தக்கவனாவான்.

ராஜேந்திரனுடைய கங்கை வெற்றியையும், கடாரவெற்றியையும், தமிழ் மக்கள் என்றென்றும் மறவாது, நினைந்து-நினைந்து மிகழ்தற்பொருட்டுத் தமிழகத்தில் அமைந்த ஊரின் பெயர்கள் பலவாகும். இவை என்றென்றும் பொன்றாது நின்று நிலவித் தமிழனின் வழிவழி வந்த வீரத்தினை உலகினுக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றுள் தென்னார்க்காடு மாவட்டத்தில், விருத்தாசலம் வட்டத்தில் உள்ள 'கங்கை கொண்டான்' என்னும் ஊரும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 'கங்கை கொண்டான்' என்னும் ஊரும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள 'கங்கை கொண்டான்' என்னும் ஊரும், ராஜேந்திரனது கங்கைகொண்ட நிகழ்ச்சியினை மங்காது, மறையாது, வருங்கால மக்களுக்கு நினைவூட்டிக்கொண்டேயிருக்கும் என்பதுறுதி.

தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் வட்டத்தில் அமைந்துள்ள, 'கடாரம் கொண்டான்' என்னும் இடமும், தஞ்சை மாவட்டத்தின்கண் பண்டுதொட்டுத் தலைசிறந்த நகராய் விளங்கி வரும் திருவாரூருக்கருகில் அமைந்துள்ள 'கடாரம் கொண்டான்' என்ற ஊரும் தொண்டை நாட்டு மணவிற்கோட்டத்தில் 'கடாரங்கொண்டா சோழபுரம்' என்னும்

ஊரும் கடலாண்ட காவலனும் ராஜேந்திர சோழனின் கடாரவெற்றியின் சின்னங்களாகச் சிறப்புடன் விளங்குகின்றன.

'ராஜேந்திரனென்னும் மறத்தமிழன் ஒருவன் பிறந்தான்; ஆண்டான்; வியத்தகு வெற்றிகள் பல பெற்றான்; மாண்டான்; மண்ணோடு மண்ணாக ஆயினான்' என்பது பழங்கதையாய் ஆனபோதிலும் அவனது பெயர் தாங்கி நிற்கும் ஊர்களும், இலக்கியங்களும் என்றும் அவனது பெரும் புகழினைப் பாடிக்கொண்டேயிருக்கும் என்பதில் நமக்கெல்லாம் அசைக்க முடியாத, உறுதியான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

ராஜேந்திரனது மெய்க்கீர்த்தியினை நாம் ஆய்ந்து பார்க் குங்கால், கடாரப்படையெழுச்சிக்குப்பின், இவனது போர்ச்செயல்கள் ஓரளவு முடிவுபெற்றதாக அறிந்துகொள்ளலாம். கடாரப் படையெழுச்சி முடிவுற்ற பிறகு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் ராஜேந்திரன் சோழ நாட்டரியணையில், செங்கோலோச்சினான். இவ்விருபதாண்டு காலமும் சோணாட்டில் குழப்பங்களின்றி, அமைதிக்காலமாக இருந்ததென்று பண்டாரகர் எஸ். கிருட்டினசாமி அய்யங்கார் போன்ற தற்கால அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியினை நாம் ஆய்ந்து பார்க்குங்கால் அக்காலத்திலும் இடைவிடாது போர் நிகழ்ந்த வண்ணமாயிருந்ததையறியலாம்.

கடாரப் படையெழுச்சிக்குப்பின் இவன் எந்த விதமான போர்களிலும் ஈடுபடவில்லை என்று நாம் கூறவியலாது. ராஜேந்திரனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் காலத்தில் அதாவது கி.பி. 1025-ல் இவனது கடாரப்படையெழுச்சி முற்றுப்பெற்றதாக அறியலாம்.

அந்தமான் தீவிலுள்ள மலை உச்சியில் காணப்படும் ராஜேந்திரனின் கல்வெட்டு படி எடுக்கப்பட்டால் இவனுடைய போர்கள் பற்றிய புதிய செய்திகள் அறியப்படலாம்.

இப்படையெழுச்சிக்குப்பின் இவனது ஆட்சியில் ஓரளவு அமைதி நிலவியது. இருப்பினும் இவனால் வென்றடக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட சில அரசுகள், விடுதலை வேட்கையுற்றுத் தன்னுரிமையை நிலைநாட்டும் முயற்சியீலீடுபட்டு, ஒரு சில கலகங்கள் விளைவித்தன என்பது உண்மையே, அவற்றுள் பாண்டிய நாட்டிலும், மலை நாட்டிலும், ஈழத்திலும், மேலைச் சாளுக்கிய நாட்டிலும் எழுந்த கலகங்களை ஈண்டு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

தமிழரசர் மூவருள், பழமைமிக்கவர், தமிழ் வளர்த்தவர் என்றெல்லாம் போற்றப்பெறும் பெருமைக்குரிய பாண்டியர் தன்னாட்சி மேற்கொள்வதில் தணியா ஆர்வம்கொண்டு பன்முறை சோழருடன் போர்தொடுத்தனர்.

தமிழர்தம் பிடியில் சிக்கித் தம் உரிமையினை இழந்த ஈழத்தினரும் விடுதலை வேட்கையுடன் சோழருடன் தளராது போர்செய்தனர். சோழர்களின் தீராப்பகைவர்களும், நாட்டுப்பற்று மிக்கோருமான மேலைச்சாளுக்கியரும் தமது விடுதலை உணர்ச்சியினை நிலைநாட்டும் பொருட்டுச் சோழருடன் அடிக்கடிபோர் நிகழ்த்தி வந்தனர். மலைநாட்டு மக்களும் இவர்கட்குச் சளைத்தவர்கள் அல்லர். இவர்களது தனியுரிமைப்போர் சோழர் வரலாற்றில் முக்கியமான அத்தியாயமாகும்.

பன்னெடுங் காலமாகச் சோழர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட இவர்கள் ராஜேந்திரனின் இறுதிக்காலத்தில் புதுப்பொலிவும், புத்துணர்ச்சியும் கொண்டு கிளர்ந்தெழுந்தனர். எனவே, நாட்டின் பல்வேறு பகுதிகளில் குழப்பமும், கொந்தளிப்பும் விளைந்தன.

இக்கலகங்களையும், புரட்சிகளையும் அடக்கி ஒடுக்கும் பணியினை மேற்கொண்டவன் ராஜேந்திரனின் மகனான முதலாம் ராஜாதிராஜனாவான். இவன் இப்புரட்சிகளை அடக்கிய நிகழ்ச்சிகளை இவனது மெய்க்கீர்த்தி விரிவாக, முறையாக எடுத்துக்கூறுகிறது. இவன் இவ்விதம் படைநடத்திச் சென்று

கலகங்களை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டியதால், ராஜேந்திரன் தனது இறுதிக் காலத்தில் போர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. தன் மகனின் ஆண்மையும், ஆற்றலும் கண்டு ராஜேந்திரன் எல்லையற்ற மகிழ்ச்சிகொண்டான்.

இப்போர்ச் செயல்கள், ராஜராஜன் ஆட்சிக்காலத்தில் ராஜேந்திரன் மேற்கொண்ட போர்ச்செயல்களுடன் ஒப்பிடத்தக்கதாகும். இது போன்ற போர்ச்செயல்களினால் தன் தந்தையின் காலத்தே ராஜாதிராஜன் போர் மேற்கொண்டு, திறமான போர்ப்பயிற்சி பெற்றான் என்பதும் விளக்கும்.

தனக்குத் தன் தந்தையான ராஜராஜன் போர்ச்செயல்களிலும், அரசியல் துறைகளிலும் நற்பயிற்சியளித்துத் தன்னை உருவாக்கியதுபோல், மாமன்னனான ராஜேந்திரனும் தன் மகனான ராஜாதிராஜனைப் போர்க்கலையிலும், அரசியல் ஆட்சித்துறையிலும் ஈடுபடுத்தி, நற்பயிற்சியளித்துச் சிறந்ததொரு எதிர்காலத்தினை, அவனுக்கு உருவாக்கித் தந்தான் எனக்கூறலாம். தன் வாழ்நாளிலேயே தன்மகன் போர் மேற்கொண்டு திக்கெட்டும் வெற்றிமுரசு கொட்டி வருவதைக் கண்டு பூரிக்கும் மன்னர்கள் நற்பேறு பெற்றவராவர். அவ்விதம் நற்பேறு பெற்றவர்களுள் ராஜேந்திர சோழனும் ஒருவனாவான்.

அரசியல் திறனும் கூர்த்த மதியும் கொண்ட, ராஜேந்திர சோழன் பாண்டியரையும், சேரரையும் வென்றதோடமையாது அவர்கள் நாடுகளைச் சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டான்; தன்மகனாகிய சடையவருமன் சுந்தர சோழ பாண்டியனை மதுரை மாநகரின்கண் புதியதாக அமைக்கப்பட்ட அரண்மனையிலிருந்து கொண்டு அப்பகுதிகளை ஆட்சி செய்யத் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தான். இவ்வேற்பாடு ராஜேந்திரனின் போற்றத் தகுந்த அரசியல் அறிவிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

ராஜராஜன் பாண்டிய நாட்டினையும், சேரநாட்டினையும்

வென்று தன்னடிப்படுத்தினான். இவன் அவைகளைச் சோணாட்டுடன் இணைந்துக்கொண்டானே தவிர, ஆங்குத் தன் அரசப்பிரதிநிதிகளை நியமித்து ஆட்சிபுரியத் தவறிவிட்டான். எனவே தான், பாண்டிய நாட்டின்கண் மறுபடியும் கிளர்ச்சி ஏற்பட்டது.

இதனைக் கண்ணுற்ற நம் ராஜேந்திரன் தன் மகனை ஆங்குச் சோழப் பிரதிநிதியாக அனுப்பி நல்லாட்சி நிலவ வழிவகுத்தான். எனவே, இவன் தன் தந்தையினும் மேம்பட்ட அரசியல்திறன் கொண்டவன் என்பதுதெற்றேன விளங்கும்.

ராஜாதிராஜன் நடத்திய போர்கள்

பாண்டியருடன் போர்

சடையவருமன் சுந்தர சோழபாண்டியன் பாண்டியப் பகுதியனைத்தையும் நன்முறையில் ஆட்சிசெய்து வந்த காலை, மானாபரணன், வீரகேரளன் சுந்தரபாண்டியன் போன்ற மன்னர் களும் பாண்டிய நாட்டினைச் சோழர்க்கடங்கிய சிற்றரசர்களாக ஆண்டு வந்தனர். நாட்டுப்பற்றும், வீரமும் மிக்க பாண்டியர்கள் தம் நாடுகளை அன்னிய ஆதிக்கத்தினின்றும் விடுவித்துத் தனியாட்சி செய்யத்தணியா ஆர்வம்கொண்டனர்; உள்நாட்டில் குழப்பம் விளைவித்து நாட்டின் அமைதியையும் ஒழுங்கையும் கெடுத்தனர்.

பாண்டியர்கள் புரட்சிக் கொடியுயர்த்தியதைக் கண்ட சோணாட்டின் இளவரசனாகிய ராஜாதிராஜன் பெருஞ்சினம் கொண்டான்; வீரமிக்க சோழப்படையினைப் பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்ட ஆணை பிறப்பித்தான். புலிக்கொடியேந்திய சோழப்படை பாண்டி நாட்டை அடைந்தது; பாண்டியப்படையை எதிர்த்துநின்று கடும்போர் புரிந்தது. சோழப்படையின் தாக்குதலின்முன் எதிர்நிற்கமாட்டாது பாண்டியப்படை நிலைகுலைந்து ஓடிற்று.

பாண்டியர்க்கே உரிய பெருவீரத்துடன், தம் உடலில் கடைசிச்

சொட்டுக் குருதியுள்ளவரை, கடும்போர் புரிந்த, பாண்டியவேந்தர்களாம் வீரகேரளனும், மானாபரணனும் போர்க்களத்திலேயே உயிரை விட்டு வீரமரணம் அடைந்தனர். போர்க்களத்தில் பெருவீரம் விளைவித்த பாண்டியவேந்தனாம் சுந்தர பாண்டியனோ, தன்முடியையும், குடையையும், வாளையும், வீரத்தையும் போர்க்களத்தே போட்டுவிட்டு உயிர்பிழைத்தால் போதுமென்ற எண்ணத்துடனும், தலைவிரிகோலத்துடனும் ஓடிஒளிந்தான். இவ்விதம் போர்க்களத்தினின்றும் ஓடி ஒளிந்த சுந்தரபாண்டியன் முல்லையூர் எனும் ஊரின்கண் தஞ்சம் புகுந்தான்.

ராஜாதிராஜன் பாண்டிய நாட்டின் குழப்பத்தினையும் புரட்சியினையும் எவ்வாண்டு அடக்கி வெற்றிபெற்றான். என்பதை நாம் அறுதியிட்டு உறுதியுடன் கூறுதல் இயலாது. இந்நிகழ்ச்சியினைக் குறிக்கும் கல்வெட்டுகள் சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் யாண்டும் காணப்படவில்லை; இப்போர் நிகழ்ச்சிகளை நாம் ராஜராஜனின் மெய்க்கீர்த்தியைக் கொண்டுதான் அறியமுடிகிறது.

எனவே, பாண்டிய நாட்டின்கண் கலகம் விளைவித்த மூன்று பாண்டி வேந்தர்களையும் போரில் வென்று, அமைதியை ஏற்படுத்தும் பணியில் ராஜாதிராஜன் வெற்றிபெற்றான் என்பதையும், பாண்டியநாட்டு மக்களின் விடுதலை வேட்கை அடக்கியொடுக்கப்பட்டதென்பதையும் அறியலாம். மேற்கூறிய நிகழ்ச்சியினை ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது.

மலை நாட்டுப் போர்

தன்மானமும், தன்னாட்சி வேட்கையும் கொண்ட பாண்டியர் களைப் போலவே சோரநாட்டு மக்களும் விடுதலை வேட்கை கொண்டு சோழர்பிடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள எத்தனித்தனர். தங்களால் இயன்ற படைகளை ஒருங்கிணைத்துச் சோழராட்சிக் கெதிராகப் புரட்சிக்கொடி உயர்த்தினர்.

அக்காலை சேரநாடு சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் பல குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களுள் மிக்கப்புகழும், தக்கபடையுங் கொண்டு, அக்காலை ஆட்சி புரிந்தவன் மூவர் திருவடியாகிய கண்டன் காரிவருமன் என்னும் மன்னனாவான். இவன் எலி நாட்டுக்கு அண்மையில் உள்ள இராமகுட நாட்டினை ஆண்டு வந்தான். இராமகுட நாட்டு மன்னர்கள் மூஷிக மரபினைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டனர். சத்திரிய மன்னர் குலத்தினர் அனைவரையும் கொன்று அழித்த பரசுராமரால் இவர்கள் முடி சூட்டப்பெற்றதால் பெருமை சான்றவர்களாய்ப் போற்றப்படுகின்றனர்.

சேர நாட்டில் சோழராட்சிக்கு எதிராகச்சேரர்கள் திரண்டெழுந்த செய்தியினைக் கேள்வியுற்ற ராஜேந்திர சோழதேவன், தன் மகனும் இளவரசனுமான ராஜாதிராஜனைச் சேரநாட்டின்மீது ஏவினான். ராஜாதிராஜனும், பெரும்படையைத் திரட்டிக்கொண்டு சேரநாடு நோக்கிச்சென்றான். சோழர்படையினர் ஆறுகளையும், குன்றுகளையும், காடுகளையும் கடந்துசென்ற போதிலும் களைப்புறாது மன உறுதியும் உற்சாகமும் கொண்டு கடிதுசென்றனர்.

சேரநாடு நோக்கிச்சென்ற சோழர்படை முதன் முதலில் வேணாட்டின்மீது தாக்குதல் நிகழ்த்தியது. வேணாட்டு மன்னன், கூபக நாட்டு மன்னனின் பேருதவியைப் பெற்றுச் சோழப் படையினை எதிர்த்து நின்றான். சோழர்படையினை வெல்லும் பொருட்டு, வேணாட்டு மன்னன் மேற்கொண்ட முயற்சிகள் வீணாயின. இறுதியில் வேணாட்டு மன்னன் செருக்களத்தே மாண்டான்.

அடுத்து வேணாட்டு மன்னனுக்குப் படையுதவியளித்த கூபகநாட்டு மன்னைப் பழிவாங்க ராஜாதிராஜன் உறுதிபூண்டான். கூபகநாடு என்பது தென்திருவாங்கூர் பகுதியினைக் கொண்டநாடாகும். ராஜாதிராஜன் கூபக

நாட்டின்மீது தாக்குதல் நடத்தினான். சோழப்படையுடன் எதிர்த்துப்போர் செய்த கூபக நாட்டுப்படை பின்வாங்கி ஓடிற்று. கூபக நாட்டு மன்னனும் அச்சத்தினால் வீரங்குலைந்து புறமுதுகு காட்டி ஓடிவிட்டான்.

வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கிக்

கூவகத் தரசை சேவகந் தொலைத்து

என்று ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டுள்ள பகுதிக்கு 'வேணாட்டரசனைக் கொன்று அவனுக்கு உட்பட்டிருந்த கூவகத்தரசனை விடுவித்து' என்று சிலர் பொருள் கொள்கின்றனர். பண்டாரகர் மா. இராசமாணிக்கரும் 'சோழர் வரலாறு' என்னும் தம் நூலில், 'வழியில் வேள்நாட்டு அரசனைத் தாக்கிக் கொன்று, கூபகநாட்டு அரசனை விடுவித்தான்' என்று கூறியுள்ளார். இவ்விதம் பொருள் கொள்வது ஏற்புடைத்தாகாது. 'வேணாட்டு மன்னனைக் கொன்று கூபகமன்னனின் வீரங்கெடுத்து' எனப்பொருள் கொள்வதே சிறப்புடையதாகும்.

இராமகுட நாட்டின் மன்னனான மூவர் திருவடியான கண்டன் காரி வருமனின் ஐம்பத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, எலிமலைக்கருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் ராஜேந்திர சோழ சமயசேனாபதி என்பவனைப்பற்றிக் குறிக்கப்பெற்றிருத்தலின் ராஜாதிராஜனுடன் போரிட்ட இராமகுட நாட்டு மன்னன் காரிவருமனே எனக்கொள்ள இடமுண்டு. ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில் இராமகுட நாட்டு மன்னனின் பெயர் குறிக்கப்பெறவில்லை.

வேணாட்டு மன்னனையும் கூபகநாட்டு மன்னனையும் தோல்வியுறச் செய்த ராஜேந்திரன் இறுதியாகச் சேரநாட்டின் கடல்துறைப் பட்டினமான காந்தளூர்ச் சாலையின்மீது தாக்குதல் நடத்தினான்; காந்தளூர்ச் சாலையில் கல மறுத்தான்; தன்வீர

மிக்க பாட்டனையும் தந்தையையும் போல் இவனும் காந்தளூர்ச் சாலை கல மறுத்தருளிச் சோழர் வரலாற்றில் மங்காப் புகழ்பெற்றான். இப்போர் நிகழ்ச்சியினை,

வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கி

மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து

மிடல்கெழு வில்லவன் குடர்முடிக் கொண்டுதன்

நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப

வஞ்சியம் புதுமலர் மலைந்தாங் கெஞ்சலில்

வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத்து

என்ற ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியலாம்.

இதுகாறும் கூறியவற்றால் உடையார் ராஜேந்திர சோழதேவனின் பிந்திய ஆட்சிக்காலத்தில் பாண்டிய, சேரநாட்டின் பகுதியினை, ஆட்சிபுரிந்து வந்தவன் சடையவருமன் சுந்தர சோழபாண்டியன் என்றும், அவனது காலத்தில் ஏற்பட்ட கலகங்களை அடக்கி, ஒடுக்கி அமைதியினை நிலைநாட்டித் தன்தம்பிக்குப் பேருதவி புரிந்தவன் ராஜாதிராஜன் என்றும் அறியலாம். வெற்றிபெற்றுத் திரும்பிய செய்தியை நாம் முன்பே கண்டோம். ராஜேந்திரன் ஆட்சியின் தொடக்கக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஈழப்படையெழுச்சியின் விளைவாக ஏறத்தாழப் பத்துஆண்டுகள் ஈழநாடு முழுமையும் சோழராட்சிக்குட்பட்டிருந்தது. ஈழவேந்தனாம் ஐந்தாம் மகிந்தனின் மகனாகிய காசிபன் என்பான் கி.பி. 1029இல் உரோகண நாட்டைக்கைப்பற்றி விக்கிரமபாகு எனும் பெயருடன் ஆண்டு வந்தான். இவனது ஆட்சி கி.பி. 1014வரையில் நீடித்தது.

இவன் இழநாடு முழுமையினையும் சோழர்களிடமிருந்து கைப்பற்ற வேண்டுமெனத் திட்டம் தீட்டியிருந்தான்; சோழப்படையுடன் போர் மேற்கொண்டான். கி.பி. 1041இல் இவன் போரில் இறந்துபட்டான். இவன் இறந்துபட்டதால் ராஜாதிராஜன்

இவனது அரசச்சின்னங்களைக் கவர்ந்துகொண்டான். சோழர்கல்வெட்டுகள் மேற்கூறிய செய்திகளைக் கூறுகின்றன.

ஆனால், இலங்கை வரலாற்று நூலான மகாவம்சமோ, சோழராட்சியிலிருந்து ஈழம்முழுவதையும் மீட்கத் திட்டமிட்டிருந்த காசிபன் நோய்வாய்ப்பட்டு இறந்தான் எனக் குறித்துள்ளது.

அஃது எங்ஙனமாயினும் கி.பி. 1014இல் விக்கிரம்பாகு இறந்துபட்டான் என்பது மட்டும் உறுதி.

விக்கிரமபாகுவிற்குப்பின் கித்தி என்ற வேந்தன் உரோகண நாட்டினை எட்டே நாள்கள் ஆண்டான்.

கித்திக்குப்பின் மகாலான கித்தி எனும் வேந்தன் மூன்றாண்டு காலம் உரோகண நாட்டினை ஆண்டு வந்தான். ஈழப் படையினை ஒன்று திரட்டிச் சோழப் படையினை எதிர்த்தான். ஆனால், போரில் படுதோல்வி எய்தினான்; தன்மான மிக்கவனாதலின் அவமானத்தைத் தாங்கிக்கொள்ளவியலாது, தனது கையினாலேயே தன் கழுத்தினையறுத்துக்கொண்டு கி.பி. 1044இல் இறந்துபட்டான்.

(* E.P. Zelanic. Vol. III. No. 1. A. Chronological table of Ceylon kings)

வெற்றிபெற்ற சோழர்படை அவனது அரசமுடிவினையும், விலையுயர்ந்த அணிகலன்களையும், அரும்பொருள்களையும் கைப்பற்றிச் சோணாட்டிற்கு அனுப்பிவிட்டன. மேற்கூறிய செய்திகளைப் பற்றிச் சோழமன்னர்களின் கல்வெட்டுகளில் எவ்விதகுறிப்புகளும் காணப்படவில்லையாயினும், மகாவம்சம் விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.

தந்தை ஈழத்தில் இறந்து பட்டசெய்தி கேட்டவிக்கமபண்டு துளுவநாட்டினின்றும் புறப்பட்டு ஈழநாடு வந்தடைந்தான். இவன் கி.பி. 1044இல் உரோகண நாட்டின் வேந்தனாக முடி சூட்டிக் கொண்டான். இவன் தாய்வழியில் பாண்டியனையும் தந்தை

வழியில் ஈழத்தவனையும் முன்னோனாகக் கொண்டவனாவான். இவன் ஈழநாட்டில் வசிப்பதற்கு அஞ்சி துளுவநாட்டில் வாழ்ந்து வந்தான்.

விக்கமபண்டு அயோத்தியை ஆண்டு வந்த சகதீபாலன் என்பவனுடன் செய்த போரில் இறந்துபட்டான். இலங்கை வேந்தனை வென்ற அவனையும் சோழர் கொன்றனர்.

ராஜேந்திர சோழனின் பிற்காலத்தில் ஏற்பட்ட இரண்டாவது ஈழப்படையெழுச்சி, ராஜாதிராஜனால் மேற்கொள்ளப்பெற்று இவ்வாறு முடிவெய்திற்று. ஈழ நாட்டினர் நாட்டுப்பற்றில் சிறந்தவர்களாயினும் ஒற்றுமையின்மையின் காரணமாகச் சோழர்படையினை வென்று தன்னாட்சியினை நிறுவமுடியவில்லை. இருப்பினும், ஈழத்தினர் சோழர்களுடன் தம் நாட்டினை விடுவிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர் என்பது போற்றுத்தகுந்த ஒன்றாகும்.

மேலைச் சாளுக்கியப் போர்

நீண்ட நெடுங்காலமாக நிகழ்ந்து வந்த சோழ மேலைச்சாளுக்கியப் போர் ராஜேந்திரனது இறுதிக்காலத்திலும் தொடர்ந்து நடைபெற்றது. சோழசாளுக்கியப் போர் தென்னிந்திய வரலாற்றில் சுவைமிக்கதொரு அத்தியாயமாகும்.

ராஜேந்திரனது தொடக்கக் காலத்தில், சோழர்களை எதிர்த்துப்போர் செய்த சாளுக்கிய மன்னனான இரண்டாம் செயசிம்மன் கி.பி. 1042இல் இறந்துபட்டான்.

இரண்டாம் செயசிங்கனுக்குப்பின் அவன் மகனான முதலாம் சோமேசுவரன் மேலைச் சாளுக்கிய மன்னனாக முடி சூட்டப் பெற்றான். இவன் ஆகவ மல்லன், திரைலோக்கிய மல்லன் என்னும் பெயர்களாலும் அழைக்கப்பெறுகிறான்; குறிப்பாகச் சோழர்கல்வெட்டுகளில் இவன் 'ஆகவமல்லன்' என்றே குறிக்கப்பெறுகிறான். 'ஆகவ மல்லன்' என்பதன் பொருள் 'பெருவீரன்' என்பதாகும். தனது சிறப்புப்பெயருக்கேற்ப ஆகவ

மல்லன் வீரத்தினுக்கோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறான். திரைலோக்கிய மல்லன் சோழனான மதயானைக்குச் சிங்கம், கலிங்க அரசனான கருமேகத்திற்குப் புயல், பாஞ்சால அரசனாகிய இருளுக்குச் சூரியன், மகத அரசனான ஆரண்யத்திற்கோர் தீ, மாளவ அரசனான மலைக்கோர் வச்சிராயுதம், கேரள அரசனாகிய பாம்புக்குக் கருடன், நேபாள அரசனான கடலுக்கு ஊழிக்கால நெருப்பு' எனக்கல்வெட்டுப் புகழ்ந்து கூறுகிறது.

மாவீரனான ஆகவமல்லன் பட்டமெய்தியவுடன் போச மன்னனின் தலைநகரான தாரா நகரத்தை முற்றுகையிட்டுவென்று, அம்மன்னனை நாட்டைவிட்டு விரட்டினான். சேதிநாட்டையழித்து அதன் மன்னனான கருணனை (கர்ணனை)த் தோற்கடித்தான். இவன் துங்கபத்திரைக்குத் தெற்கே சோழநாட்டின் உட்பகுதிகளில் ஊடுறுவல் செய்ததோடு, சோழர்களின் அரசிருக்கைத் தானமான காஞ்சிபுரத்தையும் தாக்கினான். இவன் கீழைச்சாளுக்கியரின் தலைநகரான வெங்கியைத் தாக்கிப் பிடித்துக்கொண்டான்.

ஆகவமல்லனின் போர்ச் செயலைக் கேள்வியுற்ற ராஜேந்திரன் அரிமாவென வெகுண்டெழுந்தான்; தன்மகனாகிய ராஜாதி ராஜனிடம் பெரும்படையின் ஒப்படைத்து ஆகவமல்லனின் கொட்டத்தினையடக்கப் பணித்தான். சோழர்படை அணிவகுத்து நின்றது. சோழநாட்டின் மாவீரர்கள் மேலைச்சாளுக்கிய நாடுநோக்கி விரைந்தனர்.

ராஜாதிராஜன் வீராவேசங் கொண்டான்; போருடைதரித்தான்; தவசமணிந்தான்; படைக்கலனேந்திப் பட்டத்து யானைமீது அமர்ந்தான்; விரைந்து போர்க்களம் நோக்கிப்புறப்பட்டான்; ஆகவமல்லனை வெல்லாது திரும்பேனெனச் சூளுரைசெய்தான்; பரந்து நின்ற பெரும்படைகளின் முன்னணியில் வந்து நின்றான்; எதிரிகளின் இடையில் இடியென முழங்கினான்; மின்னலெனத் தாக்கினான்.

இலக்கு(இலட்சுமீச்)சுரம் என்னும் பட்டினம் தீக்கிரையாக்கப்பட்டது.

இலக்கு(இலட்சுமீச்)சுரம் எனும் பட்டினம் கொப்பத்துக்கருகில் அமைந்ததும், ஆகவ மல்லனுக்குச் சொந்தமானதும், 'புலிக்கரை'யைச் சார்ந்ததுமான நகரமாகும். இந்நகரம் ராஜாதிராஜனின் தாக்குதலால் உருக்குலைந்து தரைமட்டமாயிற்று.

அடுத்துச் சோழப்படை நைசாம் மாநிலத்தின் சிக்கந்தரா பாத்திலிருந்து, நாற்பத்திரண்டு கல்தொலைவிலுள்ளதான 'கொள்ளிப்பாக்கையை' எரியூட்டியும், கம்பிலித் தோட்டத்தையும் அதிலுள்ள அரண்மனையையும் தரைமட்டமாக்கினர். இவ்வெற்றிகளின் நினைவாக வெற்றித்தூண் ஒன்றையும் நிலைநாட்டினர்.

சாளுக்கியப் படைத்தலைவர்களான கண்டப்பையன், கங்காதரன் ஆகியோர் போர்க்களத்தில் கொல்லப்பட்டனர். ஆகவ மல்லனின் மக்களான விக்கிரமாதித்தனும், விசயாதித்தனும் படைத்தலைவனான சங்கமையனும் செருக்களத்தினின்றும் ஓடி மறைந்தனர். ராஜாதிராஜன் போர்க்களத்தில் தனக்குக் கிடைத்த கரிகளையும் பரிகளையும் விலையுயர்ந்த பொருள்களையும் கைக்கொண்டான்; சிறுதுறை, பெருந்துறை, தைவபீமகசி என்னும் முத்துறைகளிலும் (துங்கபத்திரை, கிருஷ்ணா, பீமாஆறுகள்) போர் யானைகளை நீராட்டிச்சாளுக்கியரின் இலச்சினையாம் பன்றி குறிக்கப்பட்ட குன்றுகளின் மீது சோழரின் இலச்சினையாம் புலிபொறித்து மீண்டான்.சோழர்களை வெல்வது அரிது என்று எண்ணிய ஆகவமல்லன் ராஜாதிராஜன்பால் தூதுவர் சிலரை அனுப்பிவைத்தான். சோழன் அத்தூதுவருள் ஒருவற்கு ஐங்குடுமி வைத்தும், மற்றவற்குப்பெண் உடை அணிவித்தும், அவர்கட்கு முறையே 'ஆகவமல்லன்', 'ஆகவமல்லி' எனப்பெயிரட்டுச் சாளுக்கிய மன்னன்பால் அனுப்பிவைத்தனன்.

இக்காட்சியினைக் கண்ணுற்ற ஆகவமல்லன் கடுஞ்சினம் கொண்டான். பெரும்படை திரட்டிச்சோழர்களைப் 'பூண்டி'ப் போர்க்களத்தே சந்தித்தான்; ஆயினும், தோல்வியால் துண்டுபோனான். ராஜேந்திரன் சாளுக்கியத் தலைநகரான கலியாணபுரத்தைக்கைப்பற்றி, அங்கு வீராபிடேகம் செய்து கொண்டான். இதன் நினைவாக 'விசயராஜேந்திரன்' என்னும் விருதினைப்பூண்டான். கலியாணபுரம் சூறையாடப்பட்டுப் பல அரியபொருள்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றுள் 'வாயிற்காவலர்' சிலை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாயிற் காவலர் சிலை முன்பு தாராசுரம் ஐராவதேச்சரர் கோயிலில் வைக்கப்பட்டிருந்தது. இக்காலை இது தஞ்சை ராஜராஜேச்சுரத்தில் உள்ளது. இச்சிலையின் பீடத்தின்கண் 'ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீவிசய ராஜேந்திர தேவர் கலியாணபுரம் எறிந்துகொண்டு வந்த துவாரபாலகர்' எனப்பொறிக்கப்பட்டுள்ளதால் இதனை நாம் அறியலாம்.

ராஜாதிராஜனின் இருபத்து ஆறாவது ஆட்சியாண்டு வெளியிடப் பெற்ற கி.பி. 1044தேதியிட்ட கல்வெட்டிலிருந்து இவன் ஆகவமல்லனுடன் மேற்கொண்ட போர் நிகழ்ச்சிகளை அறிய முடிகின்றது. ஆகவமல்லன் கி.பி. 1042இல் அரியணையேறினான் என்பதை நாம் முன்னரே கண்டோம். எனவே, ராஜாதிராஜனின் மேலைச் சாளுக்கியப் போர் கி.பி. 1042-1043ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென நாம் கருதஇடமுண்டு.

(இவ்விதம் ராஜேந்திரனின் ஆட்சிக்கால இறுதியில் நடைபெற்ற சோழ-சாளுக்கியப் போராட்டம் ராஜாதிராஜனால் மேற்கொள்ளப் பட்டதென்பதையும் ராஜாதிராஜன் பெருவேற்றிபெற்றான் என்பதையும் அறியலாம். ராஜாதிராஜன் இளவரசனாயிருந்த காலத்துப் படைத்தலைமை ஏற்றுப்பெற்ற வெற்றி ராஜேந்திரனுக்குக் கிடைத்தவெற்றி எனக்கொள்ளுதல் முறையானதாகும்.)

ஆகவ மல்லனு மஞ்சற் கேவுதன்
தாங்கரும் படையா லாங்கவன் சேனையுட்
கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல்
விருதர் விக்கியும் விசயா தித்தனுங்
கருமுரட் சாங்க மய்யனு முதலினர்
சமர பீருவொத் துடைய விரிசுடர்ப்
பொன்னோ டைக்கரி புரவியொடும் பிடித்துத்
தன்னா டையிற் சயங்கொண் டொன்னார்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்து

என்னும் ராஜாதிராஜனது மெய்க்கீர்த்திப் பகுதி இவளது மேலைச் சாளுக்கியப் போரை விளக்குகின்றது.

ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டுள்ள செய்திகளை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டோமானால். ஆகவ மல்லனிடமிருந்து வெங்கி மீட்கப்பட்டுக் கீழைச் சாளுக்கிய ராஜாதிராஜனிடம் ஒப்படைக்கப் பட்டதாகவும், ராஜராஜன் தொடர்ந்து வேங்கிநாட்டினை அமைதியாக ஆண்டுவந்தான் என்றும் நாம் கருத இடமுண்டு.

ராஜாதிராஜன் ஆகவ மல்லனுடன் செய்த போரில் இறுதிவெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. கொள்ளிப்பாக்கையில் ராஜாதிராஜனைக் கடுமையாக எதிர்த்துப் போர் செய்த ஆகவமல்லன் தனது பகுதியினை இழந்துவிடவில்லை எனத்தெரிகிறது. அதே காலத்தில் ஆகவமல்லன், வெங்கி நாட்டின்மீது தன் ஆதிக்கத்தினை நிலைநாட்டியிருந்தான் என்பதைப் பல ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.

ஆகவ மல்லனின் ஆணைக்குட்பட்ட சிற்றரசனாகிய சோபனராஜா என்பான் கி.பி. 1044இல் தன்னை 'வேங்கிப்

புரவரேஸ்வரா' எனக்கூறிக்கொண்டான். இவனுக்குப்பின் ஆண்ட மன்னர்களும் இப்பட்டத்தினைச் சூட்டிக்கொண்டனர். இதனால், வேங்கிப் பகுதியினை ஆகவ மல்லனே தன்னாட்சிக் குட்படுத்திய செய்தி புலனாகும்.

கி.பி. 1047ஆம் தேதியிட்ட கல்வெட்டொன்று ஐதாரபாத்து அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் மூலம் ஆகவமல்லன் வேங்கி நாட்டு மன்னனையும் கலிங்கநாட்டு மன்னனையும் அடித்து நொறுக்கினான் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

ஆனால், கி.பி. 1047ஆம் தேதியிட்ட திராக்சாராமா ()வில் கிடைத்த ராஜாதிராஜனின் கல்வெட்டொன்று இவன் பீஸ்மேஸ்வரா கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்ததுபற்றிக் குறிக்கின்றது. எனவே, வேங்கிநாடு முழுமையும் ஆகவ மல்லனின் ஆட்சிக்குடபட்டிருக்குமா? என்பது கேள்விக்குரிய தாகின்றது.

இதுகுறித்துச் 'சாளுக்கிய ராஜராஜன் சோழர்களின் ஆதரவினை விட்டு மேலைச் சாளுக்கியருடனான பழைய விரோதத்தினை மறந்து, ஆகவ மல்லனுடன் உடன்பாடு செய்து கொண்டிருக்க வேண்டு'மென்று தென்னிந்திய வரலாற்று மேதை திரு. கே.ஏ. நீலகண்டசாஸ்திரி அவர்கள் குறிப்பிட்டிருப்பது நாம் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்தாகிறது.

மேற்கூறிய கருத்து ஆகவமல்லனின் பிரதானியான நாராயண பட்டர் என்பான், சாளுக்கிய ராஜராஜனின் அரசவையில் இடம்பெற்றிருந்ததாலும், அவனுக்கு நந்தம் பூண்டி என்ற சிற்றூர் தாடைகை அளிக்கப்பட்டிருத்தலாலும் வலிவு பெறுகின்றது. நாராயணனின் மகளான குப்பம்மா கி.பி. 1055-1056 இல் திராக்கிரமா கோயிலுக்கு அறக்கொடையளித்தலாலும் இஃது உறுதிப்படுகின்றது.

ராஜேந்திரனுக்குப் பின்பு அரசோச்சிய சோழப்பெருமன்னர்

களின் கல்வெட்டுகளை நாம் ஆய்ந்து பார்க்குங்கால், இவர்கள் வேங்கி நாட்டின்மீது அக்கரை கொண்டு ஆர்வத்துடன் உதவிபுரிந்ததாக எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. எனவே, ராஜேந்திரனின் பின்னோர்கள் தம் முன்னோர்களைப்போல், வேங்கி நாட்டின் நடவடிக்கைகளில் நாட்டம்கொள்ளாதிருந்தனர் என்பது புலனாகும்.

மாவீரனான ராஜேந்திரன் தன் வாளாண்மையாலும், தோளாண்மையாலும் பகைவர்களை வென்று சோழப்பெரு நாட்டின் புலிக்கொடியினைப் பன்னெடுந் தூரும் பறக்கச்செய்தான். ஆற்றல் படைத்த படையின் துணைகொண்டு சேரநாடு, பாண்டியநாடு, மேலைச்சாளுக்கிய நாடு, கங்கைக்கரை நாடுகள் ஆகிய நாடுகளை வென்று சோழப் பெருநாட்டின் எல்லையினை விரிவுபடுத்தினான் என்றும், அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி ஈழம், கடாரம், சுமத்திரா, மாரக்கவாரம் போன்ற கடல் கடந்த நாடுகளிலும் தனது வெற்றிக் கொடியினை நாட்டிப் பெரும்புகழ் ஈட்டினான் என்றும் முன்பே கண்டோம்.

திக்கெட்டும் வெற்றி முரசு கொட்டிய வெற்றி வீரனும் நம் ராஜேந்திரன் அண்டை நாடுகளுடன் சண்டையிட்டு அவற்றை வென்றதோடமையாது, பிறநாடுகளுடன் நட்புறவும் பூண்டிருந்தான் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும். நம் ராஜேந்திரனது அருமை பெருமையினைக் கேள்வியுற்ற காம்போச மன்னன் இவனுடன் நல்லுறவு கொள்ள விழைந்தான். தனக்குச் செய்த பேருதவியினை எண்ணிச் செய்ந்நன்றி மறவாத காம்போச மன்னன் தனது நட்பின் அடையாளமாக ராஜேந்திரனுக்குத் தேரளித்து மகிழ்ந்தான். இவன் தேரளித்து நட்புறவு கொண்ட செய்தியினை ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடும் தெளிவாகக் குறிக்கின்றது. ராஜேந்திர சோழனின் துணைகொண்டே தான் நல்லாட்சி நடத்த முடிவுமென்று எண்ணிய காம்போச மன்னன் ராஜேந்திரனிடம் நட்புப்பூண்டதில்

வியப்பொன்றுமில்லை.

இக்காலை தாய்லாந்து என அழைக்கப்பெறும் சயாம் நாட்டிற்குக் கிழக்குள்ளதும், கம்போடியா என அழைக்கப்பெறுவதும் ஆகியநாடே பண்டு கம்போசம் என வழங்கப்பெற்றது.

ராஜேந்திரனது வெற்றியின் அவனுடைய கீர்த்தியை உயர்த்தி, அயல் நாட்டு மன்னர்களுடைய மதிப்பையும், மரியாதையையும் தேடித்தந்தன. எனவேதான், வெளிநாட்டு மன்னர்கள் இவனுக்கு மரியாதை செலுத்தினர்.

நீண்ட நெடுங்காலமாகவே தமிழ்நாடும், சீனநாடும் நட்புறவு கொண்டிருந்தன என்பதனை வரலாறு தெள்ளத் தெளிய எடுத்துரைக்கின்றது. நம் சோழர்களும் பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சீனநாட்டுடன் நட்புப் பூண்டு, தூதுவிடுத்தனர். என்பதனைச் சீனநூல்கள் எடுத்துரைக்கின்றன. நம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்திலும் கடல்வாணிகத்தின் பொருட்டுச் சீன மன்னனுக்குத் தூதுக்குழுக்கள் அனுப்பப்பட்டன. கி.பி. 1020, 1033ஆம் ஆண்டுகளில் நம் மன்னன், தூதர்கள் மூலம் விலையுயர்ந்த பரிசு பொருள்களைச் சீன அரசவைக்கு அனுப்பினான். அவ்வாறே சீனத் தூதுர்கள் சோணாட்டிற்கு வந்தனர். இதனால், சோழ நாட்டிற்கும், சீன நாட்டிற்குமிடையே வாணிக உறவு சிறந்து விளங்கியதென்பது புலனாகும்.

மேலும், தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டைவட்டம் விக்கிரமகிராமத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள இருபது சீனநாணயங்களாலும், தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் ஓலயக் குன்னம் கிராத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள முந்நூற்று இருபத்து மூன்று சீன நாணயங்களாலும், தஞ்சை மாவட்டம் மன்னார்குடி வட்டம் தல்லிக்கோட்டைக் கிராமத்தில் கிடைத்துள்ள ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டு சீன நாணயங்களாலும் ராஜேந்திரன் காலத்தில் சோணாட்டிற்கும், சீன நாட்டிற்கும்,

நடைபெற்ற வாணிபத்தை நாம் நன்குணரலாம்.

மேற்கூறப்பட்ட நாணயங்கள் அனைத்தும் ராஜேந்திரனது சமகாலத்தில், சீனாவில் ஆண்டுவந்த மன்னர்களால் வெளியிடப்பெற்றவையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாணயங்கள் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளன.

இதுகாறும் கூறியவற்றால் ராஜேந்திரன் சீன நாட்டுடன் வாணிக உறவு கொண்டிருந்ததுடன் நட்புறவும் கொண்டு சோணாட்டின் புகழ் பரப்பினான் என்பது புலனாகும்.

ராஜேந்திரன் கிழக்கிந்தியத் தீவுகளையாண்ட மன்னர் களுடனும் நல்லுறவு கொண்டிருந்தான். எனவேதான், ராஜராஜனும், ராஜேந்திரனும், அம்மன்னர்களது வேண்டு கோளுக்கிணங்க நாகப்பட்டினத்தில் புத்தவிகாரைக் கட்டுவித்துத் தேவையான உதவிகளைப் புரிந்தனர்.

இவன் மாளவப் பரமார மன்னனான போசமன்னனுடனும், சேதி காலசூரி மன்னனுடனும் நட்புறவு கொண்டிருந்தான் என்பதனைக் குலேனூர்க் கல்வெட்டு உணர்த்துகின்றது.

எனவே, ஒரு நாட்டின்மீது பகைமை கொண்டு, போர்மேற் கொண்டு, அதனை அழித்து, அடிமை கொள்வதால் ஆகும் ஆக்கத்தினும், அந்நாட்டின்பால் அன்புகாட்டி, அணைத்துக் கொள்வதால் ஆகும் ஆக்கமேபெரிது எனும் பேருண்மையை அறிந்த நம் ராஜேந்திரன் கடல்கடந்த நாடுகளாகிய சீனத்துடனும், காம்போசத்துடனும் நட்புறவு கொண்டதோடு வடநாட்டு மன்னர்களுடனும் நட்புறவு பூண்டான். இச்செயல்களால் இவன் ஆண்மை, ஆற்றல் கொண்டு விளங்கியதோடு, அன்பும், பரிவும் கொண்டு விளங்கினான் என்பதும் பெறப்படும்.

7

ராஜேந்திர சோழனின் குடும்பம்

சோழப் பெருநாட்டின் பெருமன்னாகத் திகழ்ந்த முதலாம் ராஜேந்திர சோழன், சோழப் பெருமன்னனாக முதலாம் ராஜராஜனுக்கும், வானவன் மாதேவி என வழங்கும் திரிபுவன தேவிக்கும் அருமந்த மகனாகத் தோன்றினான் என்பதை நாம் முன்பே கண்டோம். ராஜேந்திரசோழன் மாதேவடிகள், குந்தவை என்ற இரு தமக்கைகளைப் பெற்றிருந்தான். இவள் மாதேவடிகள் மூத்த பெண்ணாகவும், குந்தவை இளைய பெண்ணாகவும் இருந்தனர். குந்தவை, கீழைச் சாளுக்கிய மன்னனான விமலாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுக்கப்பட்டாள். எனவே, ராஜேந்திரன் தன் மைத்துனனின் கீழைச் சாளுக்கிய நாட்டின் நிகழ்ச்சிகளில் அக்கறை கொண்டிருந்தான்.

முதலாம் ராஜேந்திரசோழன் தன் தந்தையைப் போன்று மனைவியர் பலரைப் பெற்றிருந்தான். 'ஒருவன் ஒருத்தி' என்ற கோட்பாடு பொதுவாக அக்கால மன்னர்களால் பின்பற்றப்படவில்லை. இருப்பினும், சோழப் பெருமன்னர்கள் மொகலாயப் பெருமன்னர்களைப் போல் பெண்ணாசை கொண்டோர் எனக் கூறுதல் இயலாது.

முதலாம் ராஜேந்திரனின் மனைவியருள் முக்கோடிக் கிழானடிகள் அரிந்தவன் மாதேவி, திரிபுவனமாதேவி என அழைக்கப்பெறும் வானவன் மாதேவி வீரமாதேவி, பஞ்சவன் மாதேவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவருள் இவனுடைய

பட்டத்தரசியாக விளங்கியவள் யார்? என்பதனை அறிந்து கொள்ளத்தக்க சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. இவளது பிறந்தநாள் ரேவதியாகும்.

இவருள் வீரமாதேவி என்பவள் ராஜேந்திரன்பால் பேரன்பு கொண்டவளாவள். அவன் இறந்துபட்ட காலை அவன் பிரிவற்றாமையால் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள் என்று பிரம்மதேசக் கல்வெட்டுக் கூறுகிறது. சோழர் காலத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் அருகிய நிலையில் காணப்பட்ட போதிலும் வீரமாதேவி உடன்கட்டை ஏறிய நிகழ்ச்சி, அவள் கணவன் மேல்கொண்டிருந்த பெருங்காதலினை உலகிற்கு எடுத்துரைக்கின்றது.

ராஜேந்திரன் மக்கள் செல்வத்தினை நிரம்பப் பெற்றிருந்தான். இவனுடைய மக்கள் அறிவும், ஆற்றலும் நிரம்பப் பெற்றிருந்தனர். இவனுக்கு மூன்று ஆண் மக்களும், இரண்டு பெண்மக்களும் இருந்தனர் என்பதனைக் கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலாது.

ஆண் மக்கள்

கன்னியாகுமரிக் கல்வெட்டு, 'வேள்வியில் தோன்றும் முத்தியைப்போல் ராஜேந்திர சோழனின் மூன்று புதல்வர்களும் சிறந்து விளங்கினர்' என்று குறிப்பிடுவதனால் இவன் மூன்று ஆண்மக்களைப் பெற்றிருந்த செய்தி புலனாகின்றது.

ராஜேந்திரனுக்கு வேறு ஆண் மக்கள் சிலரும் இருந்ததாகச் சில சான்றுகளின் துணைகொண்டு அறியமுடிகின்றது. முதலாம் ராஜேந்திரனின் இறப்பிற்குப் பின்பு சோழப் பெருநாட்டினை ஆண்டு வந்த அவனுடைய மூன்று ஆண்மக்களைப் பற்றி யாவரும் அறிவர். அவருள் இவனுடைய மூத்த மகனான முதலாம் ராஜாதிராஜன் கி.பி.1018 முதல் கி.பி 1054 முடிய சோழப் பெருநாட்டினை ஆட்சிபுரிந்தான்.

முதலாம் ராஜாதிராஜனுக்குப்பின் ராஜேந்திரனின் மற்றொரு

மகனான இரண்டாம் ராஜேந்திர சோழன் கி.பி. 1051 முதல் கி.பி 1063 முடிய சோழநாட்டினை ஆண்டு வந்தான். வீரராஜேந்திரன் என்பான் இரண்டாம் ராஜேந்திரனுக்குப் பின்பு கி.பி. 1063 முதல் கி.பி. 1070 முடிய சோழநாட்டினை ஆண்டு வந்தான்.

மதுரையில் ராஜேந்திரனால் புதியதாக அமைக்கப்பெற்ற அரண்மனையின்கண் வீற்றிருந்து சேர, பாண்டிய நாடுகளின் அரசப் பிரதிநிதியாக ஆட்சிபுரிந்து, சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியன் எனும் பெயர் பூண்டவனும் ராஜேந்திரனின் மற்றொரு மகனாவான் என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் முடிவாகும்.

ராஜேந்திரனுக்குச் சுந்தர சோழன் என்றொரு மகன் இருந்தான். அவன் பாண்டிய நாட்டினை ஆண்டு வந்தான். அவன் சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என்று பெயர் பெற்றான். அவன் பிறகு, சேர நாட்டையும் சேர்த்து ஆளும் உரிமை பெற்றான்; ஆனால், 'சோழ கேரளன்' என்று பெயர் பெற்றான் என்று 'கங்கை கொண்ட சோழன்' எனும் நூலின்கண் குறிக்கப்பெற்றிருப்பதலினாலும் இருக்கருத்து வலிமை பெறுகின்றது. இவன் 23 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

அரச குமாரர் சிலர் வேறு சில மண்டலங்களின் ஆட்சித் தலைவர்களாக மன்னனால் நியமிக்கப் பெற்றனர் என்பது கல்வெட்டுச் சான்றுகளால் உறுதிப்படுகின்றது. ராஜேந்திரனின் மூத்த மகனான ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியில் இருந்தும், இரண்டாம் ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியில் இருந்தும் ராஜேந்திரனின் புதல்வருள் சிலர் வடநாட்டின் பகுதிகளில் அரசப் பிரதிநிதியாக்கப்பட்டதாக அறியலாம்.

தன் புதல்வர்களைத் தான் வென்ற நாடுகளின் அரசப் பிரதிநிதிகளாக அமர்த்தும் புதிய முறையினைச் சோழ மன்னர்களுள் முதன் முதலில் புகுத்தியவன் நம் ராஜேந்திரனேயாவான் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். இச்செயலால் ராஜேந்திரனின் நுண்ணிய அரசியல் திறனை

நாம் அறியமுடிகின்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்டுள்ள சிறப்பு மலரில் ராஜேந்திரனுக்கு ஆறு ஆண்மக்கள் இருந்ததாகக் குறிக்கப்பெற்றுள்ளது. அவர்களின் பெயர்களை இங்கு காண்போம்.

1. ராஜாதிராஜன் (கி.பி.1042-1053)

2. ராஜமகேந்திரன் (கி.பி.1053-1056). இவன் விசய ராஜேந்திரன் எனவும், இரண்டாம் ராஜேந்திரன் எனவும் அழைக்கப்பெறுகிறான்.

3. விக்கிரமசோழபாண்டியன்.

4. பராக்கிரம சோழபாண்டியன்.

5. மும்முடிச்சோழன்-இவன் சோழ பாண்டியன், சுந்தரசோழ பாண்டியன் போன்ற பெயர்களாலும் குறிக்கப்பெறுகின்றான்.

6. வீரராஜேந்திரன் (கி.பி.1062-1070). இவன் வீரசோழ தேவன், ராஜகேசரி வருமன், மூன்றாம் கரிகாலன் எனப் பலபெயர்களால் அழைக்கப் பெற்றுள்ளான்.

அண்மைக்கால ஆய்வுகளின் அடிபடையில் ராஜேந்திரனுக்கு ஐந்து ஆண் மக்கள் இருந்தது புலனாகிறது. இதோ பட்டியல்.

1. ராஜாதிராஜன். பட்டத்து இளவல். கி.பி. 1018 - 1054.

2. சோழ கேரளன். 1018 - 1021. மனுகுல கேசரி ஜெயமல்லன்.

3. சோழ பாண்டியன். 1021 - 1051. சுந்தர சோழன்.

4. சோழ கங்கன். 1037 - 1054. மும்முடிச் சோழன்.

5. சோழ லங்கேஸ்வரன். 1017 - 1063. வீரசோழன்.

சோழ கேரளன் என்னும் மன்னன் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளான்.

ராஜேந்திரனுக்கு நான்கு மக்கள் இருந்ததாகச் சில குறிப்புகள் கூறுகின்றன. இந்த நிலையில் வசிஷ்டபுரம், பிரம்மதேசம்

கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து சோழ கேரளன் என்பான் சேர நாட்டின் அரசப் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருந்தான் என்றும் இவன் 1018 முதல் 1021 முடிய ஆட்சி புரிந்துள்ளான் என்றும் பேராசிரியர் இல.தியாகராஜன் நிறுவியுள்ளார். அறிஞர் சேதுராமன் அவர்கள் இரண்டாம் ராஜேந்திரனின் மகனாகவும் முதல் ராஜேந்திரனின் பேரனாகவும் குறிப்பிட்டுள்ள சோழ கேரளன் என்பான் முதலாம் ராஜேந்திரனின் மகனே என சான்று காட்டி இவர் நிறுவியுள்ளது பாராட்டுக்கு உரியது. இல.தியாகராஜன், 'சோழ கேரளன்' என்னும் நூலில் சோழ கேரளன் நினைவாக எழுப்பப்பட்ட திருக்கோயில், ஊர், மண்டபம், ஏரி ஆகியவற்றை அடையாளம் காட்டியுள்ளார். இவன் பல போர்களில் ராஜேந்திரனுக்கு உதவி புரிந்துள்ளான். தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில், கி.பி. 1021-ல் சாளுக்கியருடன் நடந்த போரில் இவன் வீர மரணம் அடைந்தான்.

ராஜேந்திரனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாம் ராஜாதிராஜன் இறந்த தன் தம்பியின் நினைவாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள தீயனூர் என்னும் ஊரின் பெயரை மனுகுலகேசரி நல்லூர் என மாற்றினான். இதைப்போல் சோழ கேரள நாதர் கோயில், சோழ கேரள விண்ணகரம், சோழ கேரள சதுர்வேதி மங்கலம், சோழ கேரளன் மாளிகை, சோழ கேரளன் வாய்க்கால், சோழ கேரளன் சாலை, மனுகுலகேசரி ஈசுவரம் முதலானவை சோழ கேரளன் நினைவால் உருவாக்கப்பட்டவை என்பதைக் கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளன.

'சோழர் வரலாற்றில் முதன்முதலாக அரசப் பிரதிநிதிகளை (வைசிராய்) நியமித்துத் தன்னால் வெல்லப்பட்ட நாடுகளை ஆட்சி புரியும் மரபை ஆரம்பித்த பெருமை முதலாம் ராஜேந்திரனையே சேரும்.' (ம.ராஜசேகர தங்கமணி, 'பாண்டியர் வரலாறு-பாகம் 1', பக்கம் 396, 397, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1978).

முதலாம் ராஜேந்திரனின் மகனான இரண்டாம் ராஜேந்திரன்,

'திருமாது புலியெனும் என்ற தொடக்கத்தினை உடைய மெய்க்கீர்த்தியில் அவனது ஆட்சிக் காலத்தின்கண் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த அவன் தம்பிகளைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அவற்றுள் அவனுடைய தம்பிகள் நால்வரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

'தன் திருத்த தம்பியர் தம்முள் வென்றிக்கொள்
மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறல்
சோழ பாண்டிய னென்றுங் கோழிமன்
தொடுகழல் வீர சோழனைப் படிபுகழ்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்வலியத் தடக்கை மதுராந் தகனைச்
சோழ கங்க னென்றுந் தோள்வலி
மேவிகல் பராந்தக தேவனைச் சோழ
வயோத்திய ராஜ னென்றும்'

மேற்கூறப்பட்டுள்ள மெய்க்கீர்த்தியினைக் கொண்டு மும்முடிச்சோழன், வீரசோழன், மதுராந்தகன், பராந்தக தேவன் ஆகிய நால்வரும் இரண்டாம் ராஜேந்திரனின் தம்பிகள் ஆவர் என்பதனைத் தெள்ளிதின் உணரலாம்.

திருவல்லம், திருமழபாடி என்னும் ஊர்களிலுள்ள கல்வெட்டுகளை ஆய்ந்து பார்க்குங்கால், மும்முடிச் சோழன் என்பான் இரண்டாம் ராஜேந்திரனுக்குத் தம்பியும் வீரராஜேந்திரனுக்குத் தமையனும் ஆவான் என்பது திட்டவட்டமாகப் புலப்படுகிறது. எனவே, மதுரை மாநாகரின்கண் வீற்றிருந்து பாண்டிய நாட்டையும், சேர நாட்டையும் ஆண்டு வந்த மும்முடிச் சோழனே சோழ நாட்டில் இளவரசு பட்டம் பெற்றபொழுது ராஜமகேந்திரன் எனப்பெயர் பெற்றான் என அறிஞர்கள் கருதுகின்றனர்*.

(*T.V. சதாசிவ பண்டாரத்தார். 'பிற்காலச் சோழர் சரித்திரம்-

பக்கம் 214.)

பெண் மக்கள்

ராஜேந்திரனுக்கு இரண்டு பெண் மக்கள் இருந்தனர். பிராணர் என்றழைக்கப்படும் அருள்மொழி நங்கை ஒரு பெண்; அம்மங்கைதேவி ஒரு பெண்.

அருள்மொழிநங்கை

இன்றைய அரியலூர் மாவட்டத்தில் திருச்சியிலிருந்து கிழக்கே முப்பத்தெரு கல் தொலைவில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்ததும் அப்பரின் பாடல் பெற்ற புண்ணியத் தலமுமான திருமழபாடிக் கோயிலுக்கு அருண்மொழி நங்கை, ராஜாதிராஜன் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் விலை உயர்ந்த முத்துக் குடையினை அளித்து நிவந்தமும் அளித்துள்ளாள் என்பது கல்வெட்டினால் புலனாகிறது. எனவே, தந்தையைப் போலவே மகளும் சிறந்த சிவபக்தி உடையவளாய் இருந்தாள் என்பது போற்றுதற்குரியதாகும். இவ்வம்மையாரும் தன் தந்தையைப் போன்றே திருக்கோயில்களுக்கு அறக்கொடையளிக்கும அறவுள்ளம் கொண்டவராகவே காணப்பட்டார்.

அம்மங்கைதேவி

ராஜேந்திரனின் மற்றொரு மகளான அம்மங்கை தேவி என்பவள் முதலாம் ராஜராஜனின் மகளான குந்தவைக்கும், கீழைச் சாளுக்கிய மன்னனான விமலாதித்தனுக்கும் மகனாகப் பிறந்த ராஜராஜ நரேந்திரன் என்னும் இளவரசனை மணந்து கொண்டாள். இவள் வேங்கை நாட்டில் தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாள். இவர்களுக்குத் தோன்றிய மகனே சோழரின் மகள்வழி உரிமையினைக் கொண்டு, சோழப் பெருநாட்டினைக் கி.பி.1070 முடிய ஆண்ட பெருமன்னனானன முதலாம் குலேத்துங்க சோழனாவான்.

அம்மங்கைதேவி முதலாம் குலோத்துங்கன் காலம் முதல்

மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரையில் ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் வரை வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் அம்மங்கை ஆழ்வார் என்று கல்வெட்டுகளால் குறிக்கப்ப பெறுகின்றார். சிவபக்தியிலும், தெய்வத் தொண்டிலும் இவ்வம்மையார் மிகவும் ஈடுபாடு கொண்டவரென்பதால் அம்மங்கையாழ்வார் என அழைக்கப் பெற்றனர் எனலாம். முதலாம் ராஜராஜனின் தமக்கை, ராஜேந்திரனைச் சீராட்டிப், பாராட்டி வளர்த்தவள் என்பதனை முன்பே கண்டோம். இவர் 'ஆழ்வார் பராந்தகன் குந்தவை' எனும் பெயரால் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். இவர் சிவநேயச் செல்வியராக விளங்கியமையின் இப்பெயர் பெற்றனர்.

எனவே, ராஜேந்திரனின் அருமந்த செல்வியாம் அம்மங்கைதேவி, வாழையடி வாழையாகச் சீரிய சிவபப்பணியாற்றிய செம்பி யன்மதேவி, குந்தகை போன்ற அரசியரைப் போன்று சிவன் கழலேத்தும் செல்வியாகத் திகழ்ந்து, சிவனருள் பெற்று விளக்கினாள் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும். சிவப்பணி புரிந்து சிறப்புடன் ஆண்ட ராஜேந்திரனின் மகளாகப் பிறந்த இவளும் தந்தைக்கேற்ப மகளாய்த் தோன்றித் தனது சிவபக்தியால் தந்தைக்குப் பெருமையினைத் தேடித் தந்தாள் எனக் கூறுதல் பெருந்தும்.

அரசு குடும்பம் சிறந்திருந்தால்தான் அரசனும், ஆட்சிப் பொறுப்பினை நன்கு ஏற்று நடத்த முடியும். அன்பும், பண்பும் ஒருங்கே அமையப் பெற்ற மனைவியரையும், அன்பு, அறிவு, ஆற்றல், கீழ்ப்படிதல் போன்ற இன்னோரன்ன அரும்பெருங் குணங்களைக் கொண்ட நன் மக்களையும் பெற்ற நம் வேந்தன் நற்பேறு பெற்றவனாவன் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அரச குடும்பம் பெரும்பாலும் பழையாறை ஆயிரந்தளி அரண்மனையில் இருந்தது போலும்! பழையாறை அக்காலை

'முடிகொண்ட சோழபுரம்' என அழைக்கப் பெற்றது. இந்நகர் இப்பொழுது அழிந்த நிலையில் காணப்படுகின்றது. ராஜேந்திரன் பழையாறை நகரில் இருந்துகொண்டு அறக்கொடைகள் அளித்துள்ளான் என்பதனைக் கூழம்பந்தல் கங்கை கொண்ட சோழீச்சுரர் கோயில் கல்வெட்டொன்று உணர்த்துவதால் இவன் பழையாறை அரண்மனையில் அடிக்கடி தங்கியிருந்தல் வேண்டுமென்று எண்ண இடமுண்டு.

காஞ்சியிலுள்ள அரண்மனையிலும் சில சமயங்களில் ராஜேந்திரன் தங்கியிருத்தல் வேண்டுமென்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

ராஜேந்திரன் சில காலம் தில்லையம்பதியின் கண்ணுள்ள தனது மாளிகையில் தங்கியிருந்தனன் என்பதனைச் செப்பேட்டுச் சான்றுகளால் அறியலாம். இதனைப் 'பெரும்பற்றப் புலியூர் விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம் பிரமாதிராஜனில்' என்றும்* 'வியாக்கிரா அக்கிராகாரத்தில் வாழ்ந்தவனான ராஜேந்திரன்' என்றும்** கரந்தை செப்பேட்டுப் பகுதிகளில் குறிக்கப்பெற்றுள்ளதால் அறியலாம்.

(*கரந்தைச் செப்பேடு, உரைநடைப் பகுதி-ஏடு-4)

(**கரந்தைச் செப்பேடு, வடமொழிச் செய்யுள்-65)

ராஜேந்திரனின் தந்தையான முதலாம் ராஜராஜசோழன் கி.பி.1014-ஆம் ஆண்டு சிவனடி சேர்ந்தான். ராஜேந்திரனின் தாயான திருபுவன மாதேவியார் கி.பி. 1020-ஆம் ஆண்டு இறைவனடி எய்திருக்க வேண்டும் என்ற கருத்தினைத் திரு.சி.கோவிந்தராஜர் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதனை 'அவ்வெட்டாவது யாண்டிலேயே தன் தாயின் பெயரால் பிரம்மதேய நிலதானம் செய்திருப்பதால் இவன் தாய் திருபுவன மாதேவி அவ்வாண்டில் இறந்ததனால் உண்டான துன்பத்தையே குறிக்கின்றது எனலாம்' என்று தனது கட்டுரையில்* குறிப்பிடுவதால் அறியலாம்.

(*கட்டுரைப் பொழில், மணிவிழா மலர், கரந்தைத் தமிழ்ச்சங்கம் பக்கம்-357)

8

ராஜேந்திரனின் சிறப்புப் பெயர்கள்

சோழப் பெருநாட்டினை முப்பது மூன்றாண்டு காலம் செம்மையாக ஆட்சிசெய்து, மக்களைக் காத்தோம்பி, நற்புகழ்பெற்ற நம் ராஜேந்திரன் தமிழக வரலாற்றில் தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளான். அக்காலத்தில் பெருமன்னர்கள் தோரணையான பல பட்டங்களையும். சிறப்புப் பெயர்களையும் ஏற்றுக்கொள்ளுதல் வழக்கமாகும். பொதுவாகச் சோழப் பெருமன்னர்கள் தங்களது வெற்றியின் அடையாளமாகப் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தனர் என்பதை நாம் முன்பே கண்டோம். குறிப்பாக அதிலும் சிறப்பாக ராஜேந்திரனின் தந்தையான முதலாம் ராஜராஜன் இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட சிறப்புப் பெயர்களைக் கொண்டு விளங்கினான் என்பதனை முன்பகுதியில் கண்டோம்.

நம் ராஜேந்திரனும் தனது போர்த்திறமையின் காரணமாகவும் செயற்கரிய செய்ததன் விளைவாகவும் தன் முன்னோர்களைப் போன்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தான். ஈண்டு இவனுடைய சிறப்புப் பெயர்களுள் சிலவற்றை ஆராய்வோம்.

ராஜேந்திரன் பூண்டிருந்த சிறப்புப் பெயர்களுள் 1. கங்கைகொண்ட சோழன், 2. கடாரங்கொண்டான், 3. பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன், 4. உத்தமசோழன், 5. விக்கிரமசோழன், 6. அதிசயசோழன், 7.

பண்டிதசோழன், 8. சயசிம் மசிம்ம சரபன், 9. மலைநாடு கொண்டான், 10. சோழேந்திரசிம்மன், 11. மூடிகொண்ட சோழன், 12. வீரராஜேந்திரன் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். இச்சிறப்புப் பெயர்களை இவன் எங்ஙனம் பெற்றான்? என்பதனைச் சிறிது ஆராய்வோம்.

கங்கைகொண்ட சோழன்

கங்கைகொண்ட சோழன் என்ற இச்சிறப்புப் பெயரினை நம் வேந்தன் ஏறத்தாழக் கி.பி. 1023-ஆம் ஆண்டில் பெற்றிருத்தல் வேண்டுமென்று எண்ண இடமுண்டு. கங்கைக்கரையிலுள்ள நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, அங்குள்ள வேந்தர்களை வென்று, கங்கைநீரைக் கொணர்ந்து, தன் புதிய தலைநகரத்தைத் தூய்மை செய்தான் என்பதனை நாம் முன்பே கண்டோம். இவ்வெற்றியின் விளைவாகவே இவன் 'கங்கைகொண்ட சோழன்' எனும் விருதினைப் பெற்று, அதன் நினைவாகக் 'கங்கைகொண்ட சோழபுரம்' எனும் நகரினையும் 'கங்கைகொண்ட சோளேச்சரம்' எனும் கோயிலினையும் அமைத்தான். இப்பெருமகன் பல ஊர்களில் 'கங்கைகொண்டான்' என்னும் பெயரில் மண்டபங்களை அமைத்துள்ளான். திருநெல்வேலி மாவட்டத்தில் 'கங்கை கொண்டான்' என்ற ஊரொன்று இன்றும் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் கங்கைகொண்டான் எனும் பெயரில் மேலும் பல ஊர்கள் காணப்படுகின்றன.

கடாரம் கொண்டான்

தனது கப்பற்படையினைச் செப்பம் செய்து, நீலக்கடலினைக் கடந்து சென்று, கடாரவேந்தனை வென்று, புலிக்கொடியினை ஆங்கு ஓங்கிப்பறக்கச் செய்ததன் நினைவாக இவன் கடாரங் கொண்டான் எனச் சிறப்பிக்கப் பெறுகின்றான். இவ்வெற்றியின் நினைவுச் சின்னமாகத் திருவாரூருக்குக் கிழக்கே இரண்டு கல்தொலைவில் 'கடாரங்கொண்டான்' எனும் பெயரால் ஒரு சிற்றூரை அமைத்தான். தொண்டை நாட்டு

மணவிரக்கோட்டத்தில் கடாரங்கொண்ட சோழபுரம் ஒன்று இருந்ததென்று சாசனம் கூறுகின்றது. நம் வேந்தன் இச்சிறப்புப்பெயரினை ஏறத்தாழக் கி.பி. 1025-ஆம் ஆண்டில் பெற்றிருக்கவேண்டுமென்பது அறிஞர்கள் கருத்தாகும்.

பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ஐயன்

இவன் மைக்கோல் குன்றுக்குக் கிழக்கிலமைந்த 'பூர்வராட்டிரா' எனும் நாட்டினை வென்றான். இது ஏறத்தாழத் தென்கோசல நாட்டிற்குச் சரியாக உள்ள பகுதியாகும். இவ்வெற்றியினை நினைவாகவும், கங்கை, கடார வெற்றியின் நினைவாகவும் இவன் இச்சிறப்புப் பெயரினைப் பெற்றான். கூழம்பந்தல் கங்கைகொண்ட சோளேச்சரம் கோயில் கல்வெட்டிலும் இவன் இவ்விதம் குறிக்கப் பெறுகிறான் என்பதனை ஈண்டு எடுத்துக்காட்டாகக் கூறலாம். கல்வெட்டுகள் பலவற்றுள் இவன் 'பூர்வதேசமுங் கங்கையுங் கடாரமும் கொண்ட அய்யன்' என்று குறிக்கப் பெற்றுள்ளான்.

உத்தம சோழன்

நம் ராஜேந்திரன் உத்தமசோழன் எனும் சிறப்புப்பெயரினைப் பெற்றிருந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கின்றது. மாராயன் அருண் மொழியான உத்தமசோழ பிரமமாராயன், உத்த மசோழப் பல்லவரையன், உத்தமசோழமிலாடுடையான் போன்ற அரசியல் அலுவலர்கள் இவனது ஆட்சிக்காலத்தில் பெரும் பணியாற்றியமையாலும் இவன் உத்தமசோழன் எனப்பெயர் பெற்றான் என்பது உறுதி பெறுகிறது.

விக்கிரம சோழன்

இவன் விக்கிரமசோழன் எனும் சிறப்புப் பெயரினைப் பெற்றிருந்த செய்தி, திருவாலங்காட்டுச் செப்பேட்டால் அறியப்படுகிறது. சயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டிலமைந்திருந்த கங்கைகொண்ட

சோழபுரம் எனும் ஊர், இவனது இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும், ராஜாதிராஜனின் இருபத்திரண்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டிலும் 'விக்கிரமசோழபுரம்' எனக் குறிக்கப்பெற்றிருத்தலின் இவனுக்கு விக்கிரமசோழன் எனும் பெயர் விளங்கியதென்பது உறுதியாகின்றது. இவன் இச்சிறப்புப் பெயரினைக் கி.பி. 1024 கி.பி. 1034-ஆம் ஆண்டுகளுக்குள் பெற்றிருக்க வேண்டுமென்பதனை அறியலாம். தற்காலத்தில் கூழம்பந்தலென வழங்கப்பட்ட ஊர் இவனது பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் கங்கைகொண்ட சோழபுரமெனவும், இவனது இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் விக்கிரமசோழபுரம் எனவும் குறிக்கப் பெற்றுள்ளமையால் இதனை அறியலாம்.

அடுத்து எசாலம் செப்பேடும் இவன் விக்கிரம சோழன் என்னும் விருதுப் பெயரைப் பெற்றிருந்தான் எனக் கூறுகிறது. இந்தப் பெயரால் விக்கிரம சோழபுரம் என்னும் வணிக நகரம் உருவாயிற்று. இந்த ஊர் ராஜேந்திரனால் உருவாக்கப்பட்டது. இந்த ஊரில் சோழ வேந்தர்களின் தங்க அரண்மனைகள் இருந்தன. (198 of 1923; S.I.I. vol V, No. 458)

அதிசய சோழன்

ராஜேந்திரனது இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு, உக்கல் சிவன் கோயிலில் காணப்படுகின்றன. அவைகளில் குமாரகாலன் வாசுதேவன் என்ற அதிசய சோழ மூவேந்தவேளார் என்ற அதிகாரி கோயில் ஒன்று கட்டியதாகக் குறிக்கப்பெற்றிருத்தலின், இவ்வதிகாரியின் பட்டத்தைக் கொண்டு இவன் அதிசயசோழன் எனும் விருதினைப் பெற்றிருத்தல் கூடுமென்று கருத இடமுண்டு.

பண்டித சோழன்

தமிழ் மொழியிலும், வடமொழியிலும் நல்லதேர்ச்சி பெற்றும்,

கற்றோரைப் பேணிப் பாதுகாத்தும், விளங்கியமைபற்றி ராஜேந்திரன் பண்டிதசோழன் என அறிஞர்களால் போற்றப் பட்டான். இவன் பண்டிதசோழனென அழைக்கப்பெற்றமையின் இவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன் என்பதனை அறியலாம். கல்வெட்டுகளில் இவன் பண்டிதசோழனென்றும் குறிக்கப் பட்டுள்ளான்.

ஜயசிம்ம சிம்ம சரபன்

நம் ராஜேந்திரன் மேலைச் சாளுக்கிய மன்னனான ஜயசிம்மனை வென்றதனால் 'ஜயசிம்ஹ சிம்ஹ சரபன்' எனும் விருதுப்பெயரினைப் பெற்றான் என்பதனை இவனது கரந்தைச் செப்பேட்டினால் அறியலாம்.

மலை நாடு கொண்டான்

இவன் மலை நாடாகிய சேரநாட்டினை வென்றமையால் 'மலைநாடு கொண்டான்' என்ற விருதினைப் பெற்றான் எனக்கொள்ளுதல் தவறாகாது.

சோழேந்திர சிம்மன்

போர்க்களத்தில் ஆண் சிங்கமெனப் பகைவர் மீது பாய்ந்து பெருவெற்றி பெற்ற சோழனாதலின் இவன் சோழேந்திர சிம்மனெனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

'சோழேந்திரசிம்மன்' எனும் விருதினை இவன் பெற்றிருத்த செய்தி, திருவாலங்காட்டுச் செப்பேட்டாலறியலாம்.

முடிகொண்ட சோழன்

இவன் ஈழநாட்டின் மீது படைகொண்டு சென்று, ஈழவேந்தனை வென்று, அவனது முடியினையும், அவன் அரசியாரது அழகிய முடியினையும், பாண்டிய மன்னர் ஈழத்தில் அடக்கப்படுத்தியிருந்த பாண்டியர் முடியினையும் கைப்பற்றியதனால் முடிகொண்ட சோழன் எனப்பெயர் பெற்றான். முதலாம் பாரந்தகனும், முதலாம் ராஜராஜனும் ஈழம்

நோக்கிச் சென்றும் கைப்பற்ற இயலாத பாண்டியர் முடியினைக் கைப்பற்றியமையின் இவன் முடிகொண்டான் எனச்சிறப்பிக்கப் பெறுதல் போற்றுதற்குரியதே.

சோழவேந்தர்கள் முடிசூட்டிக் கொண்ட பழயபெரும் நகரங்க ளுள் ஒன்றானதும், அரச குடும்பத்தினர் பலர் அக்காலை வாழ்ந்து வந்ததும், சோழர் சிற்றரசர்களாய் அடங்கிக் கிடந்ததுமான பழை யாறை நகர் இவனது ஆட்சிக் காலத்தில் இவன் முடிகொண்டதன் நினைவாக 'முடிகொண்ட சோழபுரம்' என அழைக்கப்பெற்றது. மேலும், இந்நகரின் தென்பகுதியில் ஓடும் ஆறும் இவனால் வெட்டப்பெற்று 'முடிகொண்ட சோழப்பேராறு' எனப்பட்டது. நெல்லை நாட்டின் வழியாகப்பாயும் பொருநையாறும் முடிகொண்ட சோழப்பேராறு எனப்பட்டது. நெல்லை நாட்டின் வழியாகப் பாயும் பொருநையாறும் முடிகொண்ட சோழப்பேராறு என்று அக்காலத்துச் சாசனங்களில் குறிக்கப்பெற்றுள்ளது. தமிழகத்தின்கண் இச்சிறப்புப் பெயரினைக் கொண்ட பல ஊர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிதம்பர வட்டத்திலுள்ள முடிகொண்டநல்லூர், மாயவர வட்டத்திலுள்ள முடிகொண்ட நல்லூர், சிவகங்கை வட்டத்திலுள்ள முடிகுண்டம், கோவை மாவட்டத்தில் கொள்ளக்கால் வட்டத்திலுள்ள முடிகுண்டம், இவ்வூரிலுள்ள முடிகொண்ட சோளேச்சரம் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

வீர ராஜேந்திரன் அல்லது வீரசோழன்

போர்க்களத்தில் பெருவீரத்துடன் போர்செய்து, வீரத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்தமையின் வீரசோழன் என்னும் சிறப்புப்பெயரினை இவன் பெற்றிருத்தல் வேண்டும். வீரசோழன் அனுக்கன் ஆய்ப்பாடி மலபாடி என்ற அதிகாரி திருநாமநல்லூர் சிவன் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளதால் இவனது பட்டப்பெயரினைக் கொண்டு நம் ராஜேந்திரனும் வீரசோழன் எனும் சிறப்புப் பெயரினைப் பெற்றான் எனக்கொள்ளலாம்.

இவனுடைய தாய், தந்தையர் இவனுக்கு 'மதுராந்தகன் எனும்

பெயரினைச் சூட்டியதும், இவன் பட்டம் பெற்றகாலை ராஜேந்திரன் எனும் சிறப்புப் பெயர் இவனுக்கு இடப்பட்டதும் முன்பே கூறப்பட்டுள்ளது.

சோழவேந்தர்கள் ஒருவர் பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்துக் கொண்ட ராஜகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களுள் இவன் பரகேசரி என்னும் பட்டத்தினைப் புனைந்துக் கொண்டதோடு 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்றும் 'கோனேரின்மை கொண்டான்' என்றும் தனது கல்வெட்டின் தொடக்கத்தில் மிகத்தோரணையாகக் கூறிக்கொண்டான்.

மகிபால குல காலன்

நம் ராஜேந்திரன் மகிபால குல காலன் எனும் விருதுப் பெயரினையும் பெற்றிருத்தல் வேண்டுமென்பதனைக் கல்வெட்டுச் செய்தியால் அறியலாம். வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டத்தில் கூழம்பந்தல் என்ற சிற்றூரின் கண்ணுள்ள கங்கை கொண்ட சோழீச்சுரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டினால் 'மகிபால குல காலன்' எனும் பெயர் கொண்ட அதிகாரி ஒருவர் ஓலை எழுதுவோனாகப் பணியாற்றினார், என்ற செய்தியினை அறிகிறோம். இக்கல்வெட்டு நம் ராஜேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அரசியல் துறையில் போற்றத்தகுந்த முறையில் நற்பணியாற்றும் அதிகாரிகளுக்கு மன்னன் தனது சிறப்புப்பெயரினை இட்டுப்பாராட்டி, ஊக்கு வித்தல் அக்கால வழக்காயிருந்தது. எனவே, நம் ராஜேந்திரனும் ஓலை எழுதுவோனுக்குத் தனது சிறப்புப்பெயராகிய 'மகிபால குல காலன்' என்பதனை இட்டிருந்தான். நம் ராஜேந்திரன் வங்கநாட்டு வேந்தனான மகிபாலனை வென்றடக்கியதன் நினைவாக 'மகிபால குல காலன்' என்ற விருதுப் பெயரினைப் பெற்றிருத்தல் வேண்டும். இதைப்போன்று தன்னிடம் தோல்வி கண்ட மன்னனின் பெயரினை இணைத்து விருதுப் பெயர் கொள்வது வழக்கமென்பதை நம் ராஜேந்திரன்,

சயசிம்மனைவென்று 'சயசிம்ம சிம்மசரபன்' என்று விருதுப் பெயர் பூண்டதாலறியலாம்.

மண்ணை கொண்ட சோழன்

நம் ராஜேந்திரன் மண்ணைக் கடக்கத்தினை வென்று, தன்னடிப்படுத்தினான் என்பதனை 'போர்ச்செயல்கள்' என்னும் பகுதியில் கண்டோம். மண்ணைக்கடக்கம் என்பது 'மான்யகேதம்' என்றும் 'மால்கெட்' என்றும் அழைக்கப்பெறுகின்றது. இப்படை யெழுச்சியின் போது ராஜேந்திரனே படைத்தலைமையேற்றுப் படை நடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். இப்போரில் மான்யகேதம் தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டது. ராஜேந்திரன் ஒரே சமயத்தில் வனவாசியின் (ஒரு காலத்தில் கடம்பர்களின் தலைநகராய் விளங்கியது) மீதும், மான்யகேதத்தின் மீதும் தாக்குதல் நிகழ்த்திய செய்தி இவனது படைவலிமையினை உலகிற்கு எடுத்தியம்புகின்றது. இப்படையெழுச்சியின் நினைவாக இவன் 'மண்ணை கொண்ட சோழன்' எனும் விருதுப் பெயரினைப் பெற்றான். மண்ணைக் கொண்டான் எனும் விருதுப் பெயர் பொன்றாது நின்று நிலவும் பொருட்டு இவன் திருவொற்றியூரின் கண்ணுள்ள மண்டபத்திற்கு 'மண்ணைக் கொண்ட சோழன்' என்று பெயரிட்டான்.

அண்மைக் கால ஆய்வின்படி இந்த வேந்தனுக்கு சிவ சரண சேகரன், கலிகந்தகா, ராஜேந்திர சோழகன், நிருப திவாகரன், மனு குல சோழன், உதார விடங்கன், தான வினோதன், சோழ கேரளன், பார்த்திவேந்திரன் முதலான விருதுப் பெயர்கள் வழங்கிவந்தன என்பதை அறியலாம். ராஜராஜப் பெருமன்னன் 'சிவபாத சேகரன்' எனவும் ராஜசிம்மப் பல்லவன் 'சிவச் சூடாமணி' எனவும் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

மேற்கூறியவற்றால் வியத்தகு வெற்றிகள் பலபெற்ற நம்வேந்தன் தனது பெரும்படையின் வலிமையும், தனது

வெற்றியும் இவ்வுலகின்கண் என்றென்றும் மங்காது, மறையாது இருத்தற் பொருட்டு எண்ணிறந்த விருதுப் பெயர்களைப் பெற்றான். ஏறத்தாழ எல்லா வழிகளிலும் தன் தந்தையைப் பின்பற்றிய நம்வேந்தன், சிறப்புப்பெயர் சூட்டிக்கொள்வதிலும், தன் தந்தை யினைப் பின்பற்றி, ஏராளமான தோரணையான பட்டங்களைச் சூட்டிக்கொண்டான். இவற்றுள் இவன் கங்கைக்கரை வேந்தர்களை வென்று 'கங்கைகொண்டான்' எனக்கொண்ட விருதுப்பெயரைத் தனது வாழ்நாளில் தனக்குக்கிடைத்த கிடைத்தற்கரிய மாபெரும் பேறு என எண்ணினான். இவன் படைத்த இவ்வெற்றி தமிழனுக்கும், தமிழ்நாட்டிற்கும் கிடைத்தவெற்றி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஈண்டு நாம் இவ்வெற்றி வேந்தன் கங்கைகொண்ட சோழன் என்னும் விருதுப்பெயரினைப் பெற்றதற்குக் காரணம் யாது என்பதனைச் சிறிது ஆய்வோம்.

ராஜேந்திரன் கங்கைப் பகுதியினை வென்று கங்கைகொண்டான் என்ற விருதுப் பெயரினைச் சூட்டிக்கொண்டது அவனது வெற்றிச்சிறப்பினை உணர்த்துவதோடு அவனது இறையன்பையும் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. இதில் ஒரு பெருந்தத்துவமே அடங்கியுள்ளதனை இதைப்பற்றி ஆழ்ந்து ஆராய்வோர் அறியலாம்.

பொதுவாகப் பெருமன்னர்கள் தங்களது வியத்தகு வெற்றியின் நினைவாகத் தாங்கள் வென்ற நாட்டின் பெயரைக்கொண்டு பெயர் சூட்டிக்கொள்ளுதல் மரபு, 'மதுரையும் ஈழமும் கொண்டான்', 'கடாரங் கொண்டான்' போன்ற பட்டங்களை ஈண்டு நாம் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ராஜேந்திரன் வங்க நாட்டினை வென்றதால் 'வங்கம் கொண்டான்' என்றோ, 'கங்கைநாடு கொண்டான்' என்றோ, பெயர் பெறுதலே முறையானது, ஆனால், இவனோ, 'கங்கை கொண்டான்' எனும் பெயர் கொண்டான். பொதுவாகக் 'கங்கை

கொண்டான்' என்றோ, 'காவிரிகொண்டான்' என்றோ, 'வைகை கொண்டான்' என்றோ, 'அரபிக்கடல் கொண்டான்' என்றோ, 'இமயம் கொண்டான்' என்றோ, நதி, கடல், மலை இவைகளைக் கொண்டான் என்றோ, மன்னர்கள் கூறிக் கொண்டதாக வரலாற்றில் சான்றுகள் உள்ளதாகத் தெரியவில்லை.

ஆனால் நம் ராஜேந்திரன் மட்டும் புதுமையான முறையில் 'கங்கை கொண்டான்' என்ற விருதுப் பெயரினைப் பெறக்காரணம் யாது?

பொதுவாகச் சோழமன்னர்கள் சிவநேயச் செல்வர்களாக விளங்கினர் என்பது வரலாற்று கண்ட உண்மையாகும். அதிலும் சிறப்பாகச் 'சிவபாத சேகரன்' எனப் போற்றப்பட்ட முதலாம் ராஜராஜன் சைவ சமயத்திற்கு அளப்பரிய தொண்டு செய்தான்; திருமுறைகளைத் திருக்கோயில்களில் ஓதச் செய்தான்; மக்கள் மத்தியிலே திருமுறைகளைப் பரவச் செய்தான்; திருமுறைகண்ட சோழ'னெனவும் அழைக்கப்பட்டான்.

திருமுறைகண்ட சோழனின் மகனான ராஜேந்திரனும் இளமைக் காலத் தொட்டே சைவ நெறியில் வளர்க்கப்பட்டுத் தில்லைக்கூத்தன்பால் எல்லையில்லாக் காதல் கொண்டான். திருமுறைகளையும், சாத்திரங்களையும் கற்றுத்தேர்ந்தான். பக்திப்பாக்கள் மீது பக்திகொண்டு கங்கைவார் சடையானைப் பரவினான். இவன் திருமுறைகளைக் கற்குந்தோறும் தென்னா டுடைய சிவனைப்பற்றியும், அவன் சடாமுடியில் கொண்டுள்ள கங்கையைப் பற்றியும் விவரிக்கும் பாடல்களைப் படித்து இன்புற்றிருக்கவேண்டும். சிவபெருமான் கங்கை பூண்டானென்றும், கங்கை கொண்டானென்றும் புலவர் பெருமக்களால் சிறப்பித்துப் பாடியுள்ளமை ராஜேந்திரனது மனத்திலே நீங்கா இடம் பெற்றிருத்தல் வேண்டும். ஈண்டு நாம் ராஜேந்திரனது காலத்திற்கு முன்பு எழுந்த இலக்கியங்களில் எவ்விதம் சிவபெருமானுடைய கங்கையைப் பற்றிப் பல்வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளது என்பதைக் காணுதல் நல்லது.

எடுத்துக்காட்டாகச் சம்பந்தர் தேவாரத்தினுள் பல இடங்களிலும், நாவுக்கரசர் தேவாரத்துள் பல இடங்களிலும், சுந்தரர் தேவாரத்துள் பல இடங்களிலும், மணிவாசகப் பெருமான் தேவாரத்துள் பல இடங்களிலும் மற்றும் தமிழிலக்கியத்தில் பல இடங்களிலும் சிவனது சடாமுடியிலுள்ள கங்கையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேற்கூறியவற்றை ராஜேந்திரன் படித்திருந்தானாதலால் சிவபெருமானைப் போன்று தானும் 'கங்கை கொண்டான்' எனும் பெயரினைப் பெறவிழைத்திருத்தல் வேண்டும்.

தன் தந்தை தஞ்சையின்கண் அமைத்த பெருவுடையார் கோயிலின் தீர்த்தம் சிவகங்கைக் குளமாகும். இதனைக் காணும்போதெல்லாம், எண்ணும்போதெல்லாம் தானும் ஒரு கோயிலமைத்து, உண்மையான கங்கை நீரையே கொணர்ந்து கங்கைக்குளம் அமைக்கவேண்டுமென்ற ஆர்வம் அவன் உள்ளத்தில் கிளர்ந்தெழுத்திருத்தல் வேண்டும்.

அடுத்துப் பகீரதன் தனது தவத்தின் வலிமையால் ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்த செய்தியினை அறிந்திருந்தல் வேண்டும். எனவே தான், தன் ஆண்மையும், ஆற்றலும் துணைகொண்டு, கங்கை நீரினைக்கொணர்ந்து, தன் குலதெய்வமாம் அம்பலவாணனைப் போல் தானும் 'கங்கைகொண்டான்' ஆகவேண்டுமென்று உறுதிகொண்டிருத்தல் வேண்டும்.

தவ வலியால் கங்கையினைக் கொணர்தலைக் காட்டிலும் தன்படை வலிமையால் கங்கையைக் கொணர்தலே பெருமன்னனான தனக்குச் சிறப்புடையது என எண்ணிப்படை மேற்கொண்டான் கங்கை நோக்கி, எனவேதான், திருவாலாங்காட்டுச் செப்பேடும் இவனது கங்கை வெற்றியினைப் 'பகீரதன் தவம் பெரிதா? என் கைவலி பெரிதா? என்று மாமன்னன் ராஜேந்திரன் ஏளனமாகச் சிரித்தான்' எனச் செப்புகின்றது. இவனது கரந்தைச் செப்பேடும் 'கங்கை நீரைத்

தன் நாட்டுக்கு அழைத்து வந்துவிட்டான்' எனக்கூறுகின்றது.

எனவே, கங்கை கொண்டானான' சிவபெருமானைப் போல் தானும் 'கங்கைகொண்டானாக' வேண்டுமென்பதே ராஜேந்திரனது நெடு நாளைய விருப்பம், அதுவே, அவனது வாழ்வின் குறுக்கோளாக இருந்தது எனக் கூறுதல் பொருந்தும். திரு. ஆர். நாகசாமி அவர்களும் ராஜேந்திரன் கங்கைப்படையெழுச்சியினைத் தனது வாழ்நாளிலேயே பெரிய நிகழ்ச்சியாகப் போற்றினான் எனக் கூறுகின்றார்.

தன் குல தெய்வமாம் தில்லைக் கூத்தனைப்போல் தானும் 'கங்கை கொண்டானாக' ஆனதுடன் தனது வெற்றிக்குப் பெருந்துணை புரிந்தருளிய சிவபெருமானுக்குத் தனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டுக் 'கங்கை கொண்ட சோளீச்சரம்' என்னும் சிவாலயத்தை எழுப்பினான்; அதனால், தனது நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றினான்.

9

இறுதிக் காலம்

சோழர் குலப்பெருமையினையும், பேராண்மையினையும் பாரறியச் செய்தவன் விசயாலய சோழர் குலத்துதித்த முதலாம் ராஜராஜ சோழனென்னும் உரவோனாவான். இத்தகு பெருமைமிக்கவனின் அருமந்த மகனாகத் தோன்றிய ராஜேந்திர சோழனோ, தந்தையினும் மேம்பட்ட தனயனாக விளங்கிக் களம் பல கொண்டு, வெற்றி பல கண்டு, சோழர்தம் புகழினையும், பெருமையினையும் உச்சக் கட்டத்தில் கொண்டு வந்து நிறுத்திய ஆற்றல் மறவனாக விளங்கினான்; நல்லாட்சி நடத்துவதிலும் வல்லவனாகவே காணப்பட்டான்.

ராஜராஜனும், ராஜேந்திரனும் சோழர்குல வரலாற்றின் இரு கண்களாகும். தந்தையும், மகனும் சேர்ந்து சோழர்குலத்திற்குப் பெருமையினைச் சேர்த்தமை வரலாற்றின் அரிய நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும். இவ்விருவரது ஆட்சிச் சிறப்பினைப் பல்லவ வரலாற்றில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆட்சியுடனும் குப்தர் வரலாற்றில் முதலாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர் ஆட்சியுடனும், கிரேக்க நாட்டு வரலாற்றில் பிலிப், அலெக்சாந்தர் ஆட்சியுடனும் ஒப்புமை கூறலாம்.ராஜராஜன் இவ்வுலகினை விட்டுப்பிரிந்த காலை, சோழப்பெருநாடு, பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம், கங்க மண்டலம், கொங்கு மண்டலம், கலிங்கம், இலங்கையின் வடபகுதி, நுளம்பபாடி ஆகிய பகுதிகள் அடங்கியதாக இருந்தது.

இத்துணைப் பெரிய பேரரசினை ராஜராஜன் ஆண்டு கொண் டிருந்ததற்குப் பெருந்துணை புரிந்தவன் ராஜேந்திரனேயாவன் என்பதையும் நாம் முன்பே கண்டோம். இப்பரந்த பேரரசின் எல்லைகளை மேலும் மேலும் விரிவுப்படுத்துவதில் நாட்டங் கொண்ட ராஜேந்திரன் இடைவிடாது போர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுப் பகைவரை வென்றான்; சோழர்தம் புலிக்கொடியை ஆங்கு நாட்டினான் என்பதையும் நாம் முற்பகுதிகளில் கண்டோம்.

எனவே, ராஜராஜசோழனின் இறுதிக் காலத்திய சோழப் பேரரசினைக் காட்டிலும் ராஜேந்திர சோழனது இறுதிக்காலத்திய சோழப்பேரரசு பரந்து விரிந்த ஒன்றாகக் காட்சியளித்தது என்பதனை ஈண்டு நாம் நினைவில் கொள்ளவேண்டும். ராஜேந்திரனது காலம் சோழர் வரலாற்றின் சீர்மிகு காலமாகும் என்பதனை எவரும் மறுக்க இயலாது.

எனவேதான், தென்னிந்திய வரலாற்று மேதையான திரு. கே. ஏ. நீலகண்டசாத்திரியார் அவர்களும் தமது 'சோழர்கள்' எனும் நூலின்கண் 'முதலாம் ராஜேந்திரனது ஆட்சியின் இறுதிக்காலம் விசயாலய சோழர் குல வரலாற்றின் ஒளிர்மிகு காலமாகும். சோழப்பேரரசின் பரப்பளவு இவன் காலத்தில் பரந்துவிரிந்து கிடந்தது; நிலப்படையின் வன்மையும், கடற்படையின் வன்மையும் புகழின் உச்சநிலையில் ஓங்கி விளங்கியன,' என்று குறிப்பிட்டு ராஜேந்திரனது காலத்திய சோழப்பேரரசின் பெருமையை அருமையாக உணர்த்துகின்றார்.

இம்மன்னனது காலத்தில் சோழப் பெருநாடு சென்னை மாநிலம், மைசூர் மாநிலம், ஒரிசா மாநிலத்தின் தென்பகுதி, நைசாம் அரசின் பெரும்பகுதி, இலங்கை ஆகிய நாடுகளடங்கிய பெருநிலப் பரப்பாக மிளிர்ந்தது.

இம்மன்னனது காலத்தில் சோழரது மேலாதிக்கம் இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமின்றி ஈழம், கடாரம், நக்கவாரம், கிழக் கிந்தியத் தீவுகள் போன்ற கடல் கடந்த நாடுகளிலும்

பட்டொளி வீசிப்பறந்தது என்பது தமிழக வரலாறு சாற்றும் பறையாகும். பேராசிரியர் பண்டாரகர் என். சுப்ரமணியன் அவர்கள் தமது 'தமிழ்நாட்டு வரலாறு' எனும் நூலின் கண் 'இம் மாமன்னனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் சோழப்பேரரசு பரப்பளவிலும், பெருமையிலும் உச்சநிலையினை அடைந்தது; ஸ்இதனுடன் ஒப்புமை கூறத்தக்கதொரு பேரரசு தமிழ்நாட்டின்கண் இதற்கு முன்பும் இல்லை; பின்பும் இல்லை என்று வியந்து பாராட்டுமளவிற்கு ராஜேந்திரனது பேரரசு பரந்துவிரிந்து கிடந்ததென்றால், அப்பேரரசின் பெருமையினை நாம் எவ்விதம் அளந்துரைக்க முடியும்?

வீரத்திலும், வெற்றியிலும் தனக்கு ஒப்பாரும், மிக்காருமின்றித் தமிழக வரலாற்றில் தனிச்சிறப்பினைப் பெற்றுள்ள ராஜேந்திரன் வடநாடு சென்று பகைவென்ற வீரமறவர்கள் வரிசையின் (கரிகால் சோழன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், இராட்டிரகூட மன்னர்களான துருவா, மூன்றாம் கோவிந்தன், மூன்றாம் இந்திரா போன்ற மன்னர்களும் வடநாட்டுப் படையெழுச்சியின் மேற்கொண்டனர்) முன்னணியில் நின்று அணிசெய்தான்.

எழில் மிகுந்த சோழநாட்டின் ஈடு, இணையற்ற பெருமன்னனாகத் திகழ்ந்த ராஜேந்திரனுக்குத் திரையும், நரையும் தோன்றத்தொடங்கின. இருப்பினும், அரசியல் பெருங்காரியங்களில் இவனும் பங்கேற்றுக் கருத்துரைகள் கூறவும், நாட்டு நிலைகளை உடனிருந்து கவனிக்கவும் தயங்கியதேயில்லை.

அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க அரசியல் அலுவலர்களையும், சிற்றரசர்களையும், அமைச்சர்களையும், ஆற்றல்மிக்க ஆண் மக்களையும் பெற்றிருந்த ராஜேந்திரன் தனது இறுதிக்காலத்தில் மன அமைதியுடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான். இந்தப் பெருஞ்சிங்கம் கிழடு பட்டுவிட்டாலும் இதன் கருச்சனையும், கம்பீரமும் ஓய்ந்ததாகத்

தெரியவில்லை. அப்பொழுது அரசியல் வானில் அவன் ஒருபொற்காலத்தினை வரைந்துக் கொண்டிருந்தான் என்றால் மிகையாகாது.

இவனது இறுதிக்காலத்தில் அன்புமிக்க மனைவிமார்களும் அவனிடம் பேரன்புகொண்டு பேணிக்காத்தனர். அவர்களுள் வீரமாதேவி என்பாள் இவனைக்கண்ணுங் கருத்துமாகப்போற்றி வளர்த்தாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏறத்தாழ ஐம்பதாவது அகவையில் ஆட்சிப்பொறுப்பேற்ற இம்மன்னன், தனது தள்ளாத பருவத்திலும் திறமையான ஆட்சியினை மேற்கொள்ளத் தவறவில்லை. எண்பது வயதைத் தாண்டியநிலையிலும், உடல்நிலை தளர்ந்திருந்தபோதிலும், அரசியல் நடவடிக்கையிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பாமல் திறமையாக ஆட்சியினைக் கவனித்தான்.

கடாரம் சென்று, வெற்றி கண்டு, தமிழ் மக்கள் வீரத்தையும், விவேகத்தையும் அங்கே நிலைநாட்டி, அலைகள் பாய்ந்து ஒலி எழுப்பும் கருங்கடலில் வெற்றி முழக்கம் இட்டுக்கொண்டே சோணாட்டிற்குத் திரும்பிய பின்னர், ராஜேந்திரன் அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள எண்ணியிருந்தான்; தன்னுடைய நெஞ்சில் படிந்துகிடந்த போர் வெறியையெல்லாம் பக்தி உணர்வால் அவித்து அமைதியாகவே இருக்கத் தலைப்பட்டான்.

கோயில் பணிகளிலும், கோயிலில் பூஜை செய்யும் அந்தணர்களுக்கு உதவுவதிலும், சைவ சமயத்தைப் பரப்ப முற்பட்ட சான்றோர்களுக்குத் தக்க உதவி புரிவதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

கடாரப் படையெழுச்சிக்குப்பின் இவனது ஆட்சிக்காலத்தில் இருபதாண்டுகள் அமைதிக்காலமாக இருந்தது என்று எஸ். கிருட்டி ணசாமி ஐயங்கார் போன்ற வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியைப் பொருத்தமட்டில் இவனுடைய போர் நிகழ்ச்சிகள்

கடாரப்படையெழுச்சிக்குப் பின்னர் முடிவுபெற்றதாக அறியலாம். ஆனால், ராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியைப் பார்க்குங்கால் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தினை அமைதிக்காலமாக நாம் கூறவியலாது.

இக்காலத்தில் ராஜேந்திரன், தானே போர் நிகழ்ச்சிகளில் படைத்தலைமையேற்றுப் படை நடத்திச்செல்லாவிட்டாலும் அவனுடைய மகனும் இளவரசனுமாகிய ராஜாதிராஜனிடம் படைப்பொறுப்பினை ஏற்கப் பணித்துக் கலகங்களை அடக்கினான் என்பது அறியப்படுகின்றது.

சேரர், பாண்டியர், ஈழவர், மேலைச்சாளுக்கியர் ஆகியோர் அச்சம் தவிர்ந்தாரில்லை; அவர்கள் சோழர்களைத் துச்சமெனமதித்துப் படைப்பெருக்கத்தில் ஈடுபட்டனர்; சோழருக் கெதிராகப் புரட்சிக்கொடி உயர்த்தினர். மேலைச்சாளுக்கிய மன்னர்களில் பெரும்புலியாகத் திகழ்ந்த ஆகவமல்லன் எனும் சோமேசுவரன் என்பான் இப்புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திவந்தான். வீறுகொண்ட ராஜாதிராஜன் இப்புரட்சியினையும் அடக்கி மேலைச்சாளுக்கியரையும் ஒடுக்கினான்.

தனது இறுதிக்காலத்தில், அண்டை நாடுகளில் தோன்றிய கலகங்கள் அடக்கப்பட்ட போதிலும், ராஜேந்திரன் மகிழ்ச்சி மிக்கவனாகக் காணப்படவில்லை. உடல் தளர்ந்திருந்த நேரத்தில் மனமும் தளர்ந்திருந்ததால் இவனது உடல்நிலை பெருமளவில் பலவீனப்பட்டது. எவ்வளவுதான் உடல் பலவீனப்பட்டாலும் தன் நாட்டுக்குள் சுற்றுப்பயணம் செய்து, மக்கள் நிலையைப் பார்வை இடுவதிலும், திருத்தலங்களுக்குச் சென்று இறைவழிபாடு புரிவதிலும், அரசியல் சூழல்களைப் பார்வை இடுவதிலும் நாட்டங்கொண்டவனாகவே இருந்தான்.

இவனுடைய எண்பத்து மூன்றாவது வயதில் ஒரு நாள் சான்றோர்கள் நிறைந்த தொண்டைநாட்டுப் பகுதிக்குச் சென்றுவரத் திட்டமிட்டிருந்தான். சோழப்பெரும்படையின் அணியெனத் திகழ்ந்த, அரிய பல தியாகங்களைப் புரிந்த,

நாட்டுப்பற்று மிக்க இளஞ்சிங்கங்களைக்கொண்டு விளக்கிய தொண்டை நாட்டைப் பார்வையிடுவதில் ராஜேந்திரசோழன் பேர் அவாக் கொண்டதில் வியப்பில்லை.

தொண்டை நாட்டின்கண் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த மாமன்னன் பிரமதேயத்தையும் பார்வையிட்டான். ஆங்கு அவன் தங்கியிருந்த காலை அவனது உடல்நிலை பலவீனமடைந்தது. முப்பத்து மூன்றாண்டுகள் சோழப் பெருநாட்டினை வளமுடன் ஆண்டுவந்த மாமன்னன் ஏறத்தாழத் தனது எண்பத்து மூன்றாவது அகவையில் (கி.பி. 1040) இறைவன் திருவடிசேர்ந்தான்.

ராஜேந்திரனது உடல் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பிரமதேசம் என்னும் ஊரிலேயே அடக்கம் செய்யப்பட்டது. சோணாட்டின் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது!

அன்று கங்கைநதி பாயும் கவின்மிகு நாட்டைவென்று அடிமைப்படுத்திய ராஜேந்திரன், இன்று சுற்றத்தார்களும், மக்களும் கங்கை நீர்போல் கண்ணீர் விட்டழச் சிவலோகம் சென்றுவிட்டான்!

அலைகடல் நடுவில் பல கலம் செலுத்தி, ஈழ மண்டலத்தையும், கடாரத்தினையும், கிழக்கிந்தியத் தீவுகளையும் வெற்றிகொண்ட ராஜேந்திரனைக் காலன் (கூற்றுவன்) வெற்றிகொண்டான்!

இறுதிவரை சிவநேயச் செல்வனாகவும், சமயப்பொறை மிக்கவனாகவும் வாழ்ந்து வந்தவன் சிவனடி சேர்ந்துவிட்டான்!

தமிழக வரலாற்றில் பொன்யுகங் கண்ட கன்னித் தமிழனும், கடலாண்ட காவலன் பொன்னுலகம் நோக்கிச் சென்றுவிட்டான்! தன்னால் வென்றடக்கப்பெற்ற நாட்டிற்கெல்லாம் தன்பிரதி நிதிகளை முதன் முதலாக நியமித்து ஆளச்செயத ஆட்சியாளன், இன்று மேலுலகையும் ஆளச்செல்பவன்போல் சென்றுவிட்டான்!

ராஜேந்திரனின் இறப்பின்போது அவன் தேவியான

வீரமாதேவியும் தனித்திருக்கப் பொறாதவளாய்க் கணவன் சென்ற உலகிற்குச் சென்று, அவனுடன் வாழ்வதை விரும்பித்தானும் உடன்கட்டையேறி உயிர்துறந்தாள்!

ராஜேந்திரன், அவனுடன் உயிர் துறந்த வீரமாதேவி ஆகிய இருவர் உயிர்களுக்கும் நீர்வேட்கை தணித்தற் பொருட்டுச் சேனாதிபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளாண் தண்ணீர்ப் பந்தல் ஒன்று நிறுவினான். இவன் வீரமாதேவியின் உடன் பிறந்தான் என்பதனைப் பிரமதேயக் கல்வெட்டாலறியலாம்.

தமிழ் மண்ணிலே பிறந்து, கன்னித் தமிழையும், வடமொழியையும் ஆதரித்து, வடநாடு சென்று, வடவரின் கொட்டத்தினையடக்கிக் கடல் கடந்துசென்று, கன்னித் தமிழனின் வீரத்தினை நிலைநாட்டிய ஆற்றல் மறவனும், பண்டித சோழனுமாகிய இம்மாமன்னனின் சாதனைகள் இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

இந்த வேந்தன் கி.பி. 1012-ம் ஆண்டு ஆனித் திங்கள் மிருகசீரிட நட்சத்திரத்தில் (19.06.1023) அரியணை ஏறி 32 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்து 14.03.1044-க்கு முன்பு சிவனடியை அடைந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், இந்த மன்னனின் திருவாமாத்தூர் கல்வெட்டு 32-ம் ஆண்டின் 70-ம் நாளைக் குறிப்பதால் (09.08.1044) இந்த வேந்தன் 1044 ஆகஸ்ட் 9 வரை உயிருடன் இருந்தான் என்பது புலனாகும். இந்தத் தேதிக்குப் பின்னரே இவன் பிரம்மதேசத்தில் இறந்தான் எனலாம். (ARE 28 of 1922).

காலவெள்ளத்தால் அழிக்க வொண்ணாப்புகழினைத் தமிழக வரலாற்றுச் சுவடியில் பதித்துவிட்டுத் தமிழர்களின் இதயங்களில் மங்காத மாமணியாய், மாசற்ற பொன்னாய் ஒளி வீசிக்கொண்டிருக்கும் மாமன்னன் பரகேசரி முதலாம் ராஜேந்திர சோழனின் வீர வாழ்வு இவ்விதம் முடிவுற்றது. இவனது பொன்னுடல் மறைந்தாலும், புகழுடல் மறையாது என்பதனைக்

கங்கை கொண்ட சோழீச்சுரம் இன்றும் உணர்த்திக் கொண்டுள்ளது. சோழர் குல ஒளிவிளக்கு அணைந்துவிட்ட போதிலும் அதனுடைய பெயரும், புகழும் என்றென்றும் ஒளி வீசிக்கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

10

குணங்கள்

இ துகாறும் கூறியவற்றால் ராஜேந்திரனுடைய வாழ்க்கை வரலாறு, போர்ச் செயல்கள், அரசியல் திறன், கீர்த்தி, சாதனைகள் ஆகியவை பற்றி நாம் ஒருவாறு அறிந்துக்கொள்ள இயலும், நம் ராஜேந்திரன் விசயாலய சோழன் வம்சத்தில் தோன்றிச் சோழர்களின் புகழினையும், மேலாண்மையினையும் உலகறியச் செய்த செயல் வீரனும், மாமன்னனுமான முதலாம் ராஜராஜ சோழனுக்குப் பின்னர் சோழப் பெருநாட்டினை ஆட்சிபுரியும் நற்பேறு பெற்றவனாவான். இவன் தன் தந்தையின் காலத்தில் சோழப்பேரரசு ஈட்டிய வெற்றியினையும், புகழினையும், மங்காது, மறையாடு, குன்றாது, குறையாது காத்தோம்பியதுடன் நில்லாமல், மேலும் மேலும் பல உன்னதமான வெற்றிகளைச் சோழப் பேரரசிற்கு ஈட்டித்தந்து, புகழின் கொடுமுடியில் அதை ஏற்றி வைத்தான். இவனது ஆட்சிக்காலத்தில் சோழப்பெருநாட்டின் எல்லையினை விரிவுப்படுத்தியதுடன், மேம்பட்ட ஆட்சி முறையினையும் ஏற்படுத்தினான்.

சோழவேந்தர்களுள் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படும் நம் ராஜேந்திரன் ஒரு செம்மைசால் வேந்தனுக்குரிய எல்லா நற்பண்பியல்களும் ஒருங்கே அமையப்பெற்றுத் திகழ்ந்தான் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும். பரந்தநோக்கமும், விரிந்த மனப்பான்மையும்

கொண்ட ராஜேந்திரன் தன் வீரமிக்க முன்னோர்களைப் போன்று அஞ்சாநெஞ்சமும், வீரமும், கருணையுள்ளமும், இறையன்பும், கொடைத்திறனும், அறிவும், புலமையும், கலையுணர்வும், பெருந்தன்மையும், நீதிநெறி வழுவா நேர்மையும், மக்களிடத்து அன்பும், பரிவும், சமயப் பொதுநோக்கும் வாய்க்கப் பெற்றவனாய்ச் செங்கோல் செலுத்தினான். ஈண்டு இவனுடைய நற்பண்புகளைப் பற்றிச் சிறிது காண்போம்.

வீரம்

குணமெனும் குன்றேறி நின்ற இவன்பாற் காணப்படும் உயர்குணம் பலவற்றுள்ளும் முதலாவதாக வைத்துப் பாராட்டத் தக்கது இவனது வீரத் தன்மையேயாகும். இவன் வீரனுக்கேற்ற, சிங்கத்தினையொத்த உடல்கட்டும், வீரமும், தீரமும், துணிச்சலும், போர்க்கலையறிவும் கொண்டவன்; சிறந்த குதிரை வீரனும், குறி தவறாத வில் வீரனும், வாள் வீரனுமாவான். வாளேந்தும் வாய்ப்பு இவனுக்குத் தந்தை வழி ஏற்பட்டதாகும். வீரத்தோடு கூடிய விவேகமும், தெளிந்த அறிவும் இவன் சிறந்த வீரனாகத் திகழத் துணைபுரிந்தன. சோழகுலத்துப் பேரரசர்களின் வழித் தோன்ற லாகிய இவனுடைய நரம்புகளிலும் தன் முன்னோரின் வீர ரத்தம் நிறைந்து ஓடிற்றாதலின் இயற்கையிலேயே இவன் வீரமறவனாகத் திகழ்ந்தான். வீரனின் அணியாகக் கருதப்படும் அஞ்சாமையை நிறைந்த அளவில் தம் அஞ்சாநெஞ்சன் கொண்டிருந்தான். வாழையடி வாழையாக வீரம் செறிந்த பழங்குடியில் தோன்றிய இவ்வேந்தன், தன் தந்தையின் ஆட்சிக் காலத்தே பார் புகழும் வீரனாகத் திகழ்ந்து, பல போர்க்களங்களுக்குப் படை நடத்திச் சென்று, தனது வீரத்தினை வெளிக்காட்டி, வெற்றி வீரனாகத் திகழ்ந்தான். சேர பாண்டியரையும், சாளுக்கியரையும், ஈழத்தின ரையும், கலிங்கரையும் இவன் தன் தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே வென்று அடக்கினான் என்பதனால் இவனது வீரத்தின் பெருமையினை நாம் நன்கறியலாம்.

நம் ராஜேந்திரன் வடபுலத்தில் வெற்றித் திருவுலாவந்து, வடவாரிய வேந்தர்களைப் போர்க்களத்தில் புறமுதுகிட்டோடச் செய்து, கங்கை நீரைக் கொணர்ந்த செய்தி, இவனது தலைசிறந்த வீரத்திற்கோர் எடுத்துக்காட்டாகும். வங்க நாட்டின் சிங்கமான மகிபாலனை இக்கோமான் வென்றடக்கிப் போர்க்களத்தினின்றும் துரத்தியடித்த செய்தி இந்தியா முழுவதிலும் இணையற்ற புகழினை ராஜேந்திரனுக்குத் தேடித்தந்ததை வரலாறு என்றென்றும் மறவாது. 'கங்கை கொண்ட சோழபுரம்' இன்றும் இவன் வீரப் புகழ்பாடுவதை நாம் காண்போம்.

சோழர்களுக்கு இடைவிடாது தொல்லை ஈந்து வந்த, தீராப்ப கைவர்களான மேலைச் சாளுக்கியரின் மீது வேங்கையென பாய்ந்து அவர்களை வென்று தனது மேலாண்மையினை ஆங்கு நிறுவியவன் நம் ராஜேந்திரனேயாவான். மேலைச்சாளுக்கிய மாவீரர்களும் வேந்தர்களுமான சத்தியாசிரயனையும், சயசிம்மனையும், ஆகவமல்லனையும் தோற்கடித்து வெற்றி வீரனாகத் திகழ்ந்த ராஜேந்திரன் மாபெரும் வீரன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சயசிம்மனை வென்றடக்கிய தன் நினைவாகச் 'சயசிம்ம சிம்மசரபன்' என்னும் விருதுப் பெயரினைப் பெற்றதால் இவனது வீரம் நன்கு வெளிப்படுகின்றது. காவிரி நாடனாகிய ராஜேந்திரன், கங்கை நாடனும், வங்கச் சிங்கமுமான மகிபாலனைவென்று 'மகிபால குல காலன்' எனும் விருதுப்பெயரையும் பெற்றவன்; போர்க்கலையில் இவன் உரோம நாட்டு வீரனும் ஜூலியஸ் சீசரோடும், கிரேக்க நாட்டு மாவீரனாம் அலெக்சாந்தரோடும் ஒப்புநோக்கத்தக்கவனாவான்.

தரைப்படையினைக் கொண்டு வியத்தகு வெற்றிகள் பலபெற்ற மாவீரனாம் ராஜேந்திரன் கப்பற்படை கொண்டு, கடல் கடந்த நாடுகள் பலவற்றை வென்றான்; வியத்தகு புகழ்பெற்றான். பெருவீரனாகிய இவ்வேந்தன் அலைகடல்

நடுவுள் பல கலம் செலுத்திச் சுமத்ரா, ஜாவா, இந்து சீனம், கடாரம், ஈழம், நிக்கோபார் முதலான கடல் கடந்த நாடுகளை வென்று கடலாண்ட காவலனாகவும் சிறந்து விளங்கினான், இவன் கடல் கடந்து சென்று வியத்தகு வெற்றிகள் பல பெற்று விளங்கினான் என்பதனைக் 'கடாரங் கொண்டான்' என்ற விருதுப்பெயரால் அறியலாம்.

'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்டான்' என்று இவன் கல்வெட்டுகளில் போற்றப்படுவதனால் இவன் வீரத்தின் திருவுருவாய், வெற்றியின் பேருருவாய் விளங்கினான் என்பதனை நாம் அறியலாம்.

பண்டை உலகில் மாபெரும் வேந்தனாகவும், ஒப்புயர்வற்ற மாபெரும் வீரனாகவும் விளங்கியவன் மாவீரன் அலக்சாந்தராவான். அவன் தந்தையான பிலிப் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த கிரேக்க நாடுகள் அனைத்தையும் தனது ஆட்சியின் கீழ்க் கொணர்ந்து ஒன்றுபட்ட கிரேக்க நாட்டினை உருவாக்கினான். இவ்விதம் தன் தந்தை அமைத்த அடித்தளத்தின் மீது அலெக்சாந்தர் ஒரு மாபெரும் பேரரசினை நிறுவினான். அலெக்சாந்தர் பேரரசினை நிறுவத் துணைபுரிந்தது அவனது பெருவீரமேயாகும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. பிலிப் மன்னனைப்போல் முதலாம் ராஜராஜன் தென்னாட்டினை ஒன்றுபடுத்தி ஓராட்சிக்குக் கீழ்க் கொணர்ந்தான். அவன் மகனும், பெருவீரனுமாகிய ராஜேந்திரனும் அலெக்சாந்தரைப்போல் தனது வீரத்தின் துணைகொண்டு நாடுகள் பலவற்றைவென்று, 'கங்கைகொண்டான்' 'கடாரங் கொண்டான்' என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்று வீரத்தின் நிலைக்கலனாய்த் திகழ்ந்தான். இவ்விதம் அலெக்சாந்தரைப் போல், வீரமே துணையெனக்கொண்டு மாபெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்த நம் ராஜேந்திரனை 'இந்தியாவின் அலெக்சாந்தர்' எனக்கூறுதல் சாலப்பொருந்தும்.

வீரத்தின் திருவுருவாய்த் திகழ்ந்தமையால்தான் நம்வேந்தன் 'சோழேந்திர சிம்மன்', 'முடிகொண்ட சோழன்', 'வீர ராஜேந்திரன்', 'கங்கைகொண்டான்', 'கடாரம் கொண்டான்', 'மகிபால குலகாலன்' என்னும் வெற்றிப் பெயர்களால் அழைக்கப் பெறுகின்றான் என்பதனை நாம் ஈண்டு நினைவில் கொள்ளவேண்டும்.

'இலங்கை வேந்தன் பெண்டுபிள்ளைகளைப் பறிகொடுத்து அச்சத்தினால் ராஜேந்திரனின் இரு திருவடிகளையும் தொழுதான்' எனவும்,

தடைபடாத நிறைந்த பராக்கிரமத்தையும் ....

உடையவனுமான ராஜேந்திரன்' எனவும்,

'பகைவர்களை முறியடித்தவனும்...' எனவும்,

'ராஜேந்திரன்... குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேரேறுதல் முதலியவற்றில் மிக்க பயிற்சியுள்ளவனும், வாள்போரின் நுட்பங்களை அறிந்தவனும், எறிபடைக் கலங்களில் தேர்ச்சி பெற்றவனுமாகி' எனவும்

ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேடு இவனைப் போற்று வதாலும், இவனது வீரத்தின் மேம்பாட்டினை நாம் அறியலாம். தனது வாழ்நாளில் தோல்வியே காணாது வெற்றி ஒன்றையே கண்டவீர மறவன் ராஜேந்திரன் ஆவான். போர்க்கலையில் தேர்ச்சியும், முதிர்ச்சியும் கொண்டு தன் வாளாண்மையாலும், தோளாண்மையாலும், திக்கெட்டும் வெற்றிக்கொடி நாட்டிப் பெரும்புகழீட்டிய நம் ராஜேந்திரன் ஒப்புயர்வற்ற மாவீரன் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

'புகழ், வீரச்செயல்களின் நறுமணம்' என்க் கிரேக்க நாட்டு மாபெரும் அறிஞன் சாக்கரடீஸ் செப்பியது போல் ராஜேந்திரனும் தன் வீரச்செயல்களினால் பெரும் புகழீட்டினான்; வரலாற்றுப் புகழ்பெற்றான். தன் வாழ்நாளில் தோல்வியேகாணாது, வெற்றி ஒன்றனையே கண்ட ராஜேந்திரன்

மாபெரும் வீரன் எனக்கூறுதல் சாலப்பொருந்தும்.

இறையன்பு

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் என்ற வளமார்ந்த வள்ளுவரின் குறட்பாவிற்கிணங்க ராஜேந்திரனும், ஆதியந்தம் இல்லா அரும்பெருஞ் சோதியாம் இறைவனிடம் பேரன்பு கொண்டவனாய் இருந்தான். கடவுள் பக்தியில் ஒப்பாருமின்றி, மிக்காருமின்றிச் சிறந்து விளங்கியவன் ராஜேந்திரன் என்பது இவன் செய்த அறக்கொடைகளால் இனிது விளங்கும். தென்னாடுடைய சிவபெருமானிடத்து இவன் ஒப்புயர்வற்ற பக்தியுடையவனாய் ஒழுகிவந்தான் என்பதனை நாம் முன்பே கண்டோம்.

தனது கங்கை வெற்றியின் நினைவுச் சின்னமாகக் கங்கைகொண்ட சோழபுரம் எனும் நகரினை நிறுவித் தனது வெற்றிக்குப் பெருந்துணை புரிந்த எல்லாம் வல்ல சிவபெருமானுக்குத் தனது இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவிக்கும் பொருட்டுக் 'கங்கை கொண்ட சோளேச்சரம்' எனும் பெயரில் சிவன் கோயிலைக் கட்டியதால், இவன் சிவபெருமான் மீது கொண்டிருந்த அளவு கடந்த பக்தியும், ஈடுபாடும் புலனாகின்றன. ராஜேந்திரன் மாண்டு விட்டான்; அவன் பெற்ற வெற்றிகளும் மறைந்து விட்டன; அவன் நிறுவிய சோழப்பேரரசும் அழிந்து விட்டது; ஆனால், அவன் நிறுவிய கங்கைகொண்ட சோளேச்சரமோ, இன்றும் இம்மண் ணுலகில் நின்று நிலவிச் சிவநேயச் செல்வனாகிய அவனது பெரும்பக்தியினைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

தில்லையம்பதியின் கண்ணுள்ள பொன்னம்பலத்திலே ஆனந்த நடனம் புரியும் ஆடவல்லானே சோழர்களின் குலதெய்வமாகும். எனவேதான், ராஜேந்திரனும் தில்லைநடராஜப் பெருமான் மீது எல்லையற்ற அன்பு கொண்டவனாய்க் காதலாகிக் கசிந்து உருகிக், கண்ணீர் மல்கிப்

பக்திப் பரவசமடைந்தான்.

சிவநேயச் செல்வனாகிய ராஜேந்திரன் தனது தலைநகரத் தினைத் தஞ்சையினின்றும் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றியதன் காரணமே தன் குலதெய்வமாம் தில்லைக்கூத்த பிரானைத்தான் வணங்கச் செல்லுங்கால் ஆறுகள் தடையாக அமைந்துள்ளன என்பதே யாகுமென்று கல்வெட்டறிஞர் திரு. சுந்தரேச வாண்டையார் அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும், வரலாற்றறிஞர் பண்டாரகர் திரு. என். சுப்ரமணியன் அவர்கள் 'ராஜேந்திரன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றியதன் காரணம், அஃது அவனது சமயத்தலைநகரான சிதம்பரத்திற்கு அருகில் அமைந்திருத்தலினால் இருக்கக்கூடும்' என்று குறிப்பிடுகின்றார். எனவே, தில்லைக் கூத்தன்பால் கொண்ட எல்லையற்ற அன்பே இவனைத் தலைநகர் மாற்றும் பணியில் ஈடுபடுத்திற்று என்பதில் ஐயமில்லை. இதிலிருந்து இவ்வேந்தனின் பக்திச் சிறப்பு நன்கு வெளிப்படுகின்றது.

நம் ராஜேந்திரன் இளமைக்காலத்தே சைவத் திருமுறைகளைக் கற்றுத் தேர்ந்தவனாதலின் பக்தி நெறியினில் தன் வாழ்நாள் முழுவதும் ஒழுகிவந்தான்.

வடநாடு சென்று, பகைவரை வென்று திரும்பிய சோழநாட்டுப் படைத் தலைவனை (மாதண்டநாயகனை) இவன் கோதாவரிக் கரையில் வரவேற்று அவனோடு தன் நாட்டிற்குத் திரும்புகையில் இடையிலுள்ள திருத்தலங்களில் இறைவனைத் தொழுது, நிவந்தங்கள் அளித்த செய்தி கல்வெட்டுச் சான்றால் அறியப்படுதலின் ராஜேந்திரனது பக்தி மேம்பாட்டினை நாம் தெளிவாக அறியலாம். 'ராஜேந்திர சோழதேவர் கங்கை கொண்டு எழுந்தருளுகின்ற இடத்துத் திருவடி தொழுது' என்ற திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துக் கல்வெட்டுச் செய்தியாலும் இதனை நாம் நன்கறியலாம்.

ராஜேந்திரன், முதலாம் கண்டராதித்த சோழனாலும், அவன்

மனைவி செம்பியன் மாதேவி என்னும் சிவமணியாலும், ராஜராஜனின் தமக்கையார் குந்தவைப் பிராட்டியாராலும் இளமைக்காலத்தில் வளர்க்கப்பட்டமையின் இறையன்பு பெற்று விளங்கினான் என்பதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், ஒருவன் தனது இளமைக்காலத்து அடையப்பெறற பயிற்சியும், பழக்கவழக்கமும், பண்பும் அவனது வாழ்நாள் முழுவதும் நீங்காது நிலைபெற்றுப் பயன்தரும் என்பது உலகறிந்த உண்மையாகும். எனவே, இவன் மரபு வழியாலும், சுற்றுப்புறச்சூழலாலும், (Heridity and Environment) பக்தி மார்க்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான் என்பது புலனாகும்.

கங்கைவார் சடையானைக்கண்டு சிரந்தாழ்த்திக் கைகூப்பி, நினைந்து நினைந்து, நெஞ்சம் நெக்குருகி, அகவிருள் போக்கி, உள்ளொளி பெற்றுத்தூய வாழ்வு வாழ்ந்த நம்வேந்தன் சிறந்த சிவபக்தன் என்பதனைத் தமிழக வரலாறு என்றென்றும் மறவாது.

கொடைத் திறன்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு.

வையகமும், வானகமும் வாயாரப் புகழும் புலமைவேந்தன் பொய்யாமொழியின் பொன்னான குறளோவியம் இது. இதன் இலக்கியமாகத் திகழ்ந்தவன் நம் ராஜேந்திரன் எனக்கூறுதல் தவறாகாது. இதுகாறும் நாம் வரையாது வழங்கும் பாரியையும், கருணனையும் தலைசிறந்த கொடையாளர்களெனக் கருதி வந்தோம். நம் ராஜேந்திரனது வரலாற்றைக் கற்போர் இவனும் சிறந்த கொடையாளன் எனக்கருதுவர்.

அற்றார் அழிபசி தீர்த்து, ஈத்துவக்கும் இன்பத்தினை அனுபவித்து அனுபவித்து மகிழ்ந்தவன் நம் ராஜேந்திரன் ஆவான். இவனது கொடைத்திறனுக்கோர்

எல்லையில்லையென்று கூறுமளவிற்கு இவன் வறியார்க்கு வரையாது வாரி வாரி வழங்கி, இம்மன்னா உலகத்து மன்னுதல் குறித்தான்.

இல்லையென்று இரப்பவர்க்கு, இல்லையென்று கூறாது, வாரி வாரிக் கொடுக்கும் இதயத்தினையும், இரக்க சிந்தனையினையும் நம் ராஜேந்திரன் பெற்றிருந்த காரணத்தால்தான் இவனது கரந்தைச் செப்பேடு இவனை, 'அறமாகிய உதயபருவதத்தில், நாளும் உதயத்தை அடைந்து உலகத்திலுள்ள வராலும் வணங்கப்படுபவனும்...தீவிரமான பிரதாபத்தை உடையவனும் தன் கரங்களால் எல்லா உலகுக்கும் உபகாரம் செய்பவனும்...' என்று புகழ்ந்து கூறுகின்றது.

சோழப் பெருமன்னர்களுள் தலைசிறந்த கொடை வள்ளலாகத் திகழ்ந்த நம் ராஜேந்திரன், திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் ஐம்பத்தொன்றனைத் தக்கார்க்குத் தானமாக அளித்துள்ளான்.

தஞ்சை மாவட்டத்தின் கண்ணுள்ள கரந்தைச் செப்பேட்டின் மூலம் கொடைவள்ளல் ராஜேந்திரன், ஆயிரத்து எழுபத்து மூன்று (1073) பேருக்குக் கொடையளித்தான் என்ற செய்தியினை அறிகிறோம். இதனை எண்ணுந்தோறும் நம் நெஞ்சமெல்லாம் இன்பக் கடலில் குதிக்கின்றது; நம்வேந்தனே சிறந்த கொடைவள்ளல் என்ற எண்ணம் நம் நெஞ்சத்தில் உதிக்கின்றது.

எனவேதான் இவ்வேந்தனின் கருணையுள்ளத்தினையும், கொடைத்திறனையும் கண்டபுலவர் பெருமக்கள், 'அரசன் (ராஜேந்திரன்) கொடை வழங்கியதைச் செப்பேட்டில் எழுதி யெழுதி நாட்டில் செம்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது' எனமிகப் பொருத்தமாகக் கூறியுள்ளனர். இதனைச் சிலர் உயர்வு நவிற்சியே என எண்ணுகின்ற போதிலும் இதில் உண்மையில் லாமலில்லை.

பொதுவாக ராஜேந்திரன் திருக்கோயில்களுக்கும், பார்ப்பனர் களுக்கும் ஒல்லும் வகையெல்லாம் அறக்கொடையளித்து வந்தான் என்பதனைக்கல்வெட்டுகள் இனிது விளக்குகின்றன.

ஆயிரத்தெண்பது சதுர்வேதி பட்ட சிரேஷ்டர்களுக்கு இரண்டா யிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்தே முக்காலே மூன்றுமா மாகாணிக்கீழ் முக்காலேயொரு மாவரைக் கீழரையே இரண்டு மா நிலப்பரப்புக் கொண்ட ஐம்பத்தோரு ஊர்களை நிலத்தானம் செய்த ராஜேந்திரன் சிறந்த கொடை வள்ளலென்பதில் ஐயமில்லை. இந்நிலங்களின் ஆண்டு வருவாய் ஐம்பத்தோராயிரத்து ஐம்பதின் கலம் நெல்லும், முப்பத்திரண்டரை மீன் பாட்டங்காசும், அறுபத்தைந்து அக்கமும் பிரமதேய இறையிலியாக விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சதர்வேதி பட்டர்களைப் போன்று குளப்பாட்டு உவச்சன் அமலன் தேவன், உகச்சன் கரிகாலன் மண்டகவன் போன்ற உகச்சர்களும், திரிபுவனை மாதேவி நல்லூர் பிரமன் திருவடிகள், சருப்பேதி மங்கலத்து மண்டகனாபகன் போன்ற நாவிதர்களும் மற்றும் தொழிலாளர் பலரும் தானம் பெற்றுள்ளனர்.

மக்களுக்கு வாரி வாரி வழங்கிய இவன் திருக்கோயில்களுக்கும் நிறைய நிலத்தானம் செய்துள்ளான் என்பதனைக் கீழ்க்கண்ட கரந்தைச் செப்பேட்டுப் பகுதியால் அறியலாம்.

'இவ்வூர் ஸ்ரீ கைலாசமான ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வர முடையாருக்கு நிலம் எண்வேலி 11, இவ்வூர் நடுவில் ஸ்ரீகோயிலான் முடிகொண்ட சோழ விண்ணகர தேவருக்கு நிலம் எண் வேலி 11, இவ்வூர்த் திருமேற்றளியான திரிபுவன மாதேவி விண்ணகரதேவருக்கு நிலன் நால்வேலி 11, இவ்வூர் ஐந்தாம் விண்ணகர தேவருக்கு நிலன் எண்வேலி 11, இவ்வூர் கேரளாந்தக விண்ணகர்தேவருக்கு நிலன் மூவேலி 11, இவ்வூர் சுப்பிரமண்ய தேவருக்கு நிலம் வேலி 11, இவ்வூர்ச் சபையாருக்கு நிலம் வேலி 11, இவ்வூர் மஹாசாஸ்தாவுக்கு நிலம் வேலி 11, இவ்வூர்

பிடாரியாருக்கு நிலம்வேலி 11, இவ்வூர் திரிபுவன மாதேவிப் பேரேரிக்கரை கணபதியாருக்கு நிலம் மூவேலி 11, இவ்வூர் பிடாகை குளப்பாட்டு மகாதேவருக்கு நிலம் ஒரு வேலி 11, கூத்தனூர் மாதேவருக்கு நிலம் அரை 11, உறத்தூர் மாதேவருக்கு நிலம் வேலி 11'

'சோற்றுத்துறை மாதேவருக்கு நிலம் 'று' மா 11, முஞ்ஞாவல் மாதேவருக்கு நிலம் அரை 11, மயின் மாலய நல்லூர் மாதேவருக்கு நிலம் அரை 11 மேட்டு மேற்குடி மாதேவருக்கு நிலம் கால் 11, சிக்கல் மாதேவருக்கு நிலம் அரை 11, நியாயநடை நல்லூர் மாதேவருக்கு நிலம் கால் 11, பரகேசரி நல்லூர் மாதேவருக்கு நிலம் அரை 11, கூத்தனூர் விஷ்ணுக்களுக்கு நிலம் அரை 11, முஞ்ஞாயில் விஷ்ணுக்களுக்கு நிலம் அரை 11, புலியக்குடி விஷ்ணுக்களுக்கு நிலம் அரை 11, சிறையூர் பிடாரியாருக்கு நிலம் ஒருமா 11, சோற்றுத்துறைப் பிடாரியாருக்கு நிலம் ஒருமா 11, மயின் மாலைய நல்லூர் பிடாரியாருக்கு நிலம் ஒருமா 11, பெண்ணாகத்துப் பிடாரியாருக்கு நிலம் ஒருமா 11, கோவிந்த நல்லூர்ப் பிடாரிக்கு ஒருமா 11, மேட்டு மேற்குடி' பிடாரிக்கு நாலுமா 11 எனப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இவன் வேத, சாத்திர ஆகம புராண வளர்ச்சிக்கும், பாரதம் வாசிப்பானுக்கும் நூற்றுக்கணக்கான வேலி நிலங்களை இறையிலியாக அளித்துள்ளான் என்ற செய்தியினையும் கரந்தைச் செப்பேட்டாலறியலாகும்.

ஈழ நாட்டின்கண் மாந்தோட்டம், மாத்தோட்டம் என்னு மிடங்களில் இவன் சிவன் கோயில்களைக் கட்டுவித்து, அதன் நாள் வழிபாட்டிற்கு நிவந்தங்களும் விட்டுள்ளான்.

கூழம்பந்தல் கங்கைகொண்ட சோழீச்சுரர் கோயிலுக்கு இரண்டாயிரத்து இருநூற்றைம்பது கலம் நெல்லும், அறுபத்தைந்து கழஞ்சு பொன்னும் வரியிலிட்டுக் கொடுத்துள்ளான்.

திருவொற்றியூர்க் கோயிலின் உட்கோயிலைக் கட்டிமுடித்து நிவந்தங்கள் விட்டுள்ளான்.

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தின் கண்ணுள்ள திருச்சின்னாபுரம் கல்வெட்டின் வாயிலாக, இவன் அக்கோயிலில் மாலை முதல் நடு இரவு முடிய விளக்கெரியப் பணம் அளித்துள்ளான் என்ற செய்தியினை அறியமுடிகின்றது.

கும்பகோணத்திற்குக் கிழக்கே நான்கு கல் தொலைவிலுள்ள திருவியலூர்ச் சோழ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் என்ற வேம்பற்றூர்க் கோயிலுக்கு நம் ராஜேந்திரன் நிவந்தங்கள் அளித்துள்ளான். இவனது மூன்றாம் ஆட்சியாண்டில் இக்கோயிலில் திருச்சுற்றாலயமும், கோபுரமும் இவனால் கட்டப்பட்டன என்பதனை இவனது கல்வெட்டு உணர்த்துகின்றது.

இவன் மைசூர் மாநிலத்திலுள்ள கோலார் என்னுமிடத்தில் துர்க்கைக்குக் கோயில் எழுப்பித்து, அதன் நாள் வழிபாட்டிற்கான நிவந்தங்களும் அளித்துள்ளான்.

இவன், திருச்சி மாவட்டத்தின்கண் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ள திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயிலினைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டான். இத்திருப்பணி, கி.பி. 1026-ஆம் ஆண்டில் நிறைவுபெற்றது.

கங்கைகொண்ட சோழபுரத்தின்கண் கங்கைகொண்ட சோளேச்சுரர் என்னும் சிவாயத்தை மிகுந்த பொருட்செலவில் கட்டிமுடித்தான் என்பதனை நாம் முன்பே கண்டோம்.

திருச்சி மாவட்டம் காமரசவல்லிக் கோயிலுக்கு (கார் கோடீஸ்வரம்) இவன் நிலம் தானம் செய்துள்ளதாக இவனது எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1020) வெளியிடப்பெற்ற காமரச வல்லிக்கோயில் கல்வெட்டுக் குறிக்கின்றது.

செங்கல்பட்டு மாவட்டம், திருவாலங்காட்டிலுள்ள சிவன் கோயிலுக்குப் பழையனூர் என்னும் சிற்றூரை நம் வேந்தன்

தேவதானமாக அளித்ததாகத் திருவாலாங்காட்டுச் செப்பேடு குறிக்கின்றது. இக்கோயிலில் ஊழியஞ் செய்கின்ற குடும்பங்களும், தேவதான நிலத்தில் வீடுகட்டிக் கொள்ளவும், நிலத்தைப் பயிரிட்டுப் பயனடையவும் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்கூறப்பட்டவற்றால் நம் ராஜேந்திரன் ஆண்டவன்பால் கொண்ட அளவற்ற அன்பின் காரணமாக எல்லையற்ற பொருளினைத் திருக்கோயில்களுக்காகத் தானஞ் செய்துள்ளான் என்பதனையறியலாம். நம் ராஜேந்திரன் பார்ப்பனர்களுக்கு வேதவிருத்தி, பட்டவிருத்தி, அத்தியாயன விருத்தி போன்றவற்றிற்கு எண்ணிறந்த பொருளினை தானஞ் செய்துள்ளான். பார்ப்பனர்களை உண்பிக்கும் அக்கிரசாலைப் புரங்களை நிறுவுவதற்கும் நிறையத்தானங்கள் செய்துள்ளான் நம் வேந்தன்.

கல்வி வளர்ச்சியின் பொருட்டு நம் வேந்தன் எண்ணிறந்த பொருள் மதிப்புள்ள நிலங்களைத் தானஞ் செய்துள்ளான். தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் அமைக்கப் பட்டிருந்த மறைநூல் விடுதிக் கல்லூரிக்கு மட்டும் இவன் முந்நூறு ஏக்கர் நிலம் மானியமாக அளித்துள்ளான். வேப்பத்தூர், திருமுக்கூடல், திரிபுவனி போன்ற கல்லூரிகளுக்கு இவ்வேந்தன் நிறைய நிலத்தானங்கள் செய்துள்ளான்.

இதனால், இவன் கல்வி வளர்ச்சிக்கு அளவிறந்த கொடைய ளித்துள்ளான் என்பதும் புலனாகும். இவன் தனக்குச் சைவாச்சாரியராக விளங்கிய சர்வ சிவ பண்டிதருக்கு ஆச்சாரிய போகமாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலம் நெல் அளிக்க ஏற்பாடு செய்துள்ளதாலும், தன்மற்ற ஆசிரியர்களுக்கும் தானம் செய்துள்ளதாலும் இவனது கொடைத்திறனை நாம் அறியலாம். இவனது கல்வித்தொண்டினைச் செட்டி நாட்டு அரசர், பச்சையப்பர், அழகப்பச் செட்டியார் போன்றாருடன் ஒப்பிடலாம்.

எனவே, நம் ராஜேந்திரன் கொடையாளனாக விளங்கியதும், அதனால் அவன் பெரும்புகழ் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் திறன்

சோழப் பெருவேந்தனான நம் ராஜேந்திரன் போற்றத்தகுந்த அரசியல் திறன் பெற்றவனாவன் என்பதனை வரலாற்று மாணவர்கள் என்றென்றும் மறத்தலியலாது. வாழையடி வாழையாக அரசியல் அறிவு நிரம்பப்பெற்ற சோழப்பெருங்குடியில் தோன்றிய ராஜேந்திரன் சிறந்த அரசியல் அறிஞனாகத் திகழ்ந்தான் என்பதில் வியப்பதற்கொன்றுமில்லை. இருப்பினும் இவன் வியப்பிற்குரிய பல அருஞ்செயல்களை, அரசியல் துறையில் நடைமுறைப்படுத்திய அரசியல் அறிஞனாவான் என்பதனை ஈண்டு நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

'தந்தையறிவு மகனறிவு' என்பது போல் அரசியல் அறிஞராக விளங்கிய முதலாம் ராஜராஜனின் மகனான நம் ராஜேந்திரனும் அரசியல் துறையில் உன்னத நிலையினை எய்தினான். தன் தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே இவன் சோழப்பெருநாடு முழுவதையும் சுற்றிப்பார்த்து ஆட்சிமுறையில் பண்பட்ட பயிற்சி பெற்றான். இவன் கி.பி. 1012 இல் இளவரசனாக நியமிக்கப்பட்டுத் தந்தையுடன் இணைந்த ஆட்சியினை மேற்கொண்டான் என்பதனை நாம் முன்பே கண்டோம்.

தன் தந்தை, தன்னை இளவரசனாகவும், மாதண்ட நாயகனாகவும் நியமித்ததைப்போன்று, தானும் தன் மூத்த மகனாகிய முதலாம் ராஜாதிராஜனைக் கி.பி. 1018-ஆம் ஆண்டு இளவரசனாகவும், மாதண்ட நாயகனாகவும் நியமித்தான். இம்முறை, ராஜராஜன் காலத்தே பின்பற்றப்பட்ட போதிலும் நம் ராஜேந்திரன் செய்த செயலே போற்றற்குரியதாகும். ஏனெனில், நம் ராஜேந்திரன் தன் தந்தையின் இறுதிக்காலத்தில் இளவரசனாக்கப்பட்டான். (கி.பி. 1012) ஆனால், நம் ராஜேந்திரன் தனது ஏழாம் ஆட்சியாண்டிலேயே (கி.பி. 1018) தன் மகனுக்கு இளவரசு பட்டம் கட்டினான். தான் சிறந்த அரசியல் அறிஞனாதலின் தன் மகனுக்குத் தொடக்கக் காலத்திலிருந்தே

அரசியல் கருமங்களில் பயிற்சியளித்தான் எனக்கொள்ளுதல் பொருத்தமானதே. ஏறத்தாழ இருபத்தேழு ஆண்டு காலம் தந்தையும், மகனும் இணைந்து ஆட்சி நடத்தியதை வேறெங்கும் காணமுடியாது.

தன் மூத்த மகனை இளவரசனாக நியமித்தது போன்றே, ராஜேந்திரன் தன் இரண்டாம் மகனான ராஜேந்திர சோழதேவனையும், மூன்றாம் மகனான வீர ராஜேந்திரனையும் சோழப்பெருநாட்டினைச் சுற்றி வருவதிலும், அமைதியை நிலைநாட்டுவதிலும் பயிற்சியளித்தான். பின்பு பாண்டிய நாட்டை வென்றுதன் மகனிடம் பாண்டிய நாட்டின் ஆட்சிப்பொறுப்பினை ஒப்படைத்தான். இது நம் தமிழக வரலாற்றில் ராஜேந்திரன் செய்த புதுமையாகும். மேலும், நாட்டுப்பற்று மிக்க பாண்டிய நாட்டு மக்களைத் திருப்திப்படுத்தவே சோழ-பாண்டியன் எனும் பெயர் சூட்டியதோடு, பாண்டி நாட்டின் ஒழுகலாற்றின்படி சடையவர்மன் என்னும் பட்டத்தினையும் ராஜேந்திரன் தன் மகனுக்குச் சூட்டினான் என்பதும் இவ்வேந்தனது தேர்ந்த, தெளிந்த, மேம்பட்ட அரசியல் திறனை வெளிப்படுத்துகின்றது. ராஜேந்திரன் பாண்டிய நாட்டில் அரசப் பிரதிநிதியை நியமித்தமையின், இவன் தன் தந்தையினும் சிறந்த அரசியல் அறிஞன் என்பது புலனாகும்.

பாண்டிய நாடு நன்முறையில் தன் மகனால் ஆளப்படுவது கண்ட ராஜேந்திரன் சேர நாட்டின் ஆட்சிப்பொறுப்பினையும் அவனிடம் ஒப்படைத்தது போற்றத்தகுந்த ஒன்றாகும். தன்மற்ற மக்களையும் சில மண்டலங்களுக்குத் தலைவர்களாய் அமர்த்தி ஆட்சி புரியச் செய்தான்

இவ்விதம் இவன் தனது ஆட்சிப் பொறுப்பினைத் தனது மக்களிடம் ஒப்படைத்த காரணத்தால்தான் இவன் புறநாட்டுப் படையெழுச்சிகளில் முழுமையாக ஈடுபடவும், முதுமைக் காலத்தில் மனநிறைவுடனும், அமைதியுடனும் வாழவும், சிவ

பூசையிலும், சமயப் பணிகளிலும் நாட்டங்கொள்ளவும் முடிந்தது. இக்கடமைகளைச் செய்து முடித்து வெற்றி கண்ட நம் வேந்தனது அரசியல் அறிவை எங்ஙனம் போற்றுவது?

தன் மகளாகிய அம்மங்கை தேவியைச் சாளுக்கிய மன்னனான ராஜராஜ நரேந்திரனுக்கு மணம் புரிவித்துச் சோழ சாளுக்கிய உறவினை வலுப்படுத்தியமை நம் ராஜேந்திரனது அரசியல் திறத்தை எடுத்தியம்புகின்றது. மேலைச்சாளுக்கியரும், கீழைச் சாளுக்கியரும் இணைந்துவிட்டால் சாளுக்கியர்களின் கை ஓங்கிவிடுமென்றும், சோழர்களின் நிலைமை தாழ்ந்து விடுமென்றும் கருதிய நம் வேந்தர்கள் கீழைச் சாளுக்கிய-உறவினைத் துண்டித்து விடாது விரிவுப்படுத்தினான்.

தக்க தருணத்தில் கீழைச் சாளுக்கியர்களுக்குப் படையுதவியளித்து, மேலைச் சாளுக்கியர்களை வென்று, ராஜராஜ நரேந்திரனை வேங்கியரியணையில் அமரச்செய்தது ராஜேந்திரனின் அரசியல் திறத்தினைப் பாரறியப்பறை சாற்றுகின்றது.

ஈழநாடு முழுமையும் வென்று மும்முடிச் சோழ மண்டலத்துடன் இணைந்துச் சோழர் மேலாண்மையை ஆங்கு நிறுவியதும், நம் வேந்தனது அரசியல் திறத்தினை நன்கு அறிவிக்கின்றது.

காம்போசம், சீனம், கீழக்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றுடன் நம்வேந்தன் கொண்டிருந்த நட்பும், நல்லுறவும் இவன் சிறந்த அரசியலறிஞன் என்பதனை உணர்த்துகின்றன. ராஜேந்திரன் கி.பி. 1020, கி.பி. 1033-ஆம் ஆண்டுகளில் சீன மன்னனிடம் தூதுக்குழுக்களை அனுப்பி நட்புறவும், வணிக உறவும் கொண்டான்.

சோழப் பெருநாட்டின் தென்கோடியில் அமைந்திருந்த தலைநகராகிய தஞ்சையை, நாட்டின் மத்தியப்பகுதியான கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றியமை

ராஜேந்திரசோழனின் அரசியல் அறிவினை நன்கு வெளிப்படுத்துகின்றது.

தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் அரசியல் துறைகளிலும், படைத் துறைகளிலும் பணியாற்றிய சிறந்த தகுதி படைத்தோரைத் தனது ஆட்சிக் காலத்திலும் பயன்படுத்திக் கொண்டது போற்றுதற்குரியது ஒன்றாகும். எடுத்துக்காட்டாகக் கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரம மாராயன், ஈராயிரவன் பல்லவராயனான உத்தமசோழப் பல்லவரையன் ஆகியோரைக் கூறலாம்.

நாட்டினை வெல்லுதலும், அவற்றினை ஆட்சிக்குட்படுத்தலும் (Conquest and Consolidation) நாடு முழுமையும் அமைதி நிலவச் செய்தலும், மக்களைப் பாதுகாத்தலும், நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தலும், படையைப்பெருக்கி வலுப்படுத்தலும் போன்ற இன்னோரன்ன அருஞ்செயல்களைச் செய்தமையும் ராஜேந்திரன் தலைசிறந்த அரசியல் அறிஞன் என்பதனை மெய்ப்பிக்கின்றது.

சைவ சமயத்தினைப் போற்றியதுடன் அமையாது, மற்ற மதத்தினருக்கும் மத உரிமை வழங்கி, எல்லா மக்களின் நன்மதிப்பையும், ஒத்துழைப்பையும் பெற்று, மாமன்னன் அசோகனைப் போல் சமயத்துறையில் 'எம்மதமும் சம்மதம்' என்ற பரந்த மனப்பான்மையைச் சமயத்துறையில் பின்பற்றிய ராஜேந்திரன் சிறந்த அரசியல் திறன் வாய்க்கப்பெற்றவன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தான் போற்றத்தகுந்த அரசியல் அறிஞனாகத் திகழ்ந்த காரணத்தால்தான் இவன் தன் தந்தை விட்டுச்சென்ற சோழப் பெருநாட்டினைக் கட்டிக்காத்து, விரிவுப்படுத்தி, நல்லாட்சி நடாத்தி மக்களுக்கு நல்வாழ் அளித்துப்பேரும், புகழும் பெற்றான்.

தனது இறப்பிற்குப் பின், தான் விட்டுச்சென்ற சோழப்பெருநாடு நீண்ட நெடுங்காலம் நிலைத்திருந்தமையின்,

இவன் தன் மக்களையும் அரசியல் துறையில் நன்கு பக்குவப்படுத்திய அரசியல் அறிஞன் என்பது புலனாகும். தன் மக்களுக்குள் பட்டத் தகராறு ஏற்படாதவாறு தடுக்க வேண்டுமென நினைத்த இவன், தன் மூத்த மகனை இளவரசனாக்கினான் என்பதாலும் இவனது அரசியல் திறனை அறியலாம்.

காலம் அறிந்து கருமம் செய்தல்

ராஜேந்திரன் தனது ஆட்சியின் பிற்பகுதியில் சேர, பாண்டியர் விடுதலை வேட்கையுடன் தன்னாட்சிக்கெதிராகக் கலகம் செய்தபோது, தன் மகனாகிய ராஜாதிராஜனை அனுப்பி அக்கலத்தினை அடக்கினான்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

என்ற குறள் மொழிக்கிணங்கத் தன்னாட்சியின் பிற்பகுதியில் மேலைச்சாளுக்கிய நாட்டிலும், ஈழநாட்டிலும் ஏற்பட்ட கலகங்களை அடக்கும் பொருட்டுத்தானே படைத்தலைமையேற்றுச் செல்லாமல் இளவரசன் ராஜாதிராஜனையே அப்பொறுப்பினை ஏற்கச்செய்தான்.

மக்கள் நல்வாழ்வில் நாட்டம்

மக்கள் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே மன்னனது நோக்கமாக இருத்தல் வேண்டும். ராஜேந்திரசோழனும் மக்களுடைய நல்வாழ்வில்தான், தன் வாழ்வு அடங்கியிருப்பதாக எண்ணினான். தன் குடிமக்கள் நல்வாழ்வினில் நாட்டம் உடையவனாக இருந்ததால்தான் இவ்வேந்தன் நாட்டின் வேளாண்மையினையும், தொழிலையும், வாணிகத்தையும் பெருக்கினான். 'குடி உயரக் கோல் உயரும்' என்பதனை நன்குணர்ந்த இவன் தன் குடிமக்கள் அனைவரும் வளமும், நலமும் பெறுதற்கேற்ற செயல்களைச்செய்து அவர்களது பேரன்புக்குரியவனாயினான்.

குன்றோ, மலையோ இல்லாத சமவெளியில் பதினாறு கல்தொலைவு வலிமைமிக்க கரையினையமைத்து நிரைத்தேக்கி, நீண்ட நெடுங்கடலோ? என்று பலரும் வியக்கும் வண்ணம் சோழ கங்கத்தை அமைத்து நீர்ப்பாசனத்திற்கு வழிவகுத்தான்; விளைச்சலை மிகுதிப்படுத்தினான்; இதனுடன் மன நிறைவு கொள்ளாது காவிரிப்பூம்பட்டினத்தருகில் கங்கை கொண்டான் கால்வாய் வெட்டுவித்தான்; சோழபுரத்தில் கன்னி நங்கை ஏரியை வெட்டுவித்தான்; 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்' என்னும் பொன் மொழிக்கிணங்க மக்களின் பசிப்பிணி போக்கும் மருத்துவனாகத் திகழ்ந்தான்; 'நீரின்றி அமையாது உலகு' என்பது போல் மக்கள் வாழ்வின் அடிப்படைத்தேவையான நீரைத்தேக்கி, உணவு உற்பத்தியைப் பெருக்கினான்.

குடபுலவியனார் என்னும் புலவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறப்புகுந்த காலை, 'வேந்தே! மறுமையுலகத்து நுகரும் இன்பத்தைப் பெறவிரும்பினாலும், இவ்வுலகின் கண் பலவேந்தர்களை வென்றுதானே தலைவனாகப் பேரும், புகழும் பெற்று வாழ விரும்பினாலும், நீர்நிலைகள் உண்டு பண்ணும் முயற்சியில் ஈடுபடுக. நீர்நிலைகளைக் குறைவின்றி அமைத்தவனே நிலைபெற்ற புகழுடையவன்' என்று நீரின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். நம் ராஜேந்திரனும் இதனைச் செய்து மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவனாக நடந்து கொண்டான்.

மக்களுக்கு உணவளித்ததோடு மட்டுமல்லாமல் ஆன்மீக வளர்ச்சிக்கும், திருக்கோயில்களை அமைத்து, வேதங்களையும், ஞான நூல்களையும் பொதுமக்கள் கேட்டின் புறத்தக்க ஏற்பாடுகளை இவன் செய்தான்.

மக்கள் நலங்கருதி நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாத்து, அச்சமின்றி மக்கள் வாழ வழிவகுத்தான்; அன்னிய

நாட்டுப் படையெழுச்சிகளில் இருந்தும் தன் நாட்டைக்காக்கப் பெரும்படையினை நிறுவினான்; மக்களைக் காத்தோம்பினான்; நாடெங்கும் கல்விக்கூடங்களையும், கல்லூரிகளையும் நிறுவி அறிவுப்பசியைப் போக்கினான்; தான் நல்லொழுக்க நெறியில் நின்று பிறருக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியதோடு மக்களையும் நன்னெறிப்படுத்தினான். நாட்டில் எங்குப் பார்த்தாலும் அமைதியும், இன்பமும், செல்வமும் நிலவ அரும்பாடுபட்டான்.

இவற்றினையே நம் ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடும் 'அரசன் பூமியை ஆளும்போது மக்கள் அறவழியில் கருத்துள்ளவர்களாகவும், தம் கடமைகளில் ஊன்றியவர்களாகவும், துன்பங்கள் அற்றவர்களாகவும், நிலைத்த செல்வம், விழா இவை நிறைந்தவர்களாகவும், மிக்க மகிழ்ச்சி உடையவர்களாகவும், உண்மையைப் பற்றுபவர்களாகவும், நல்வாழ்க்கையுடையவராகவும் இருந்தனர். காலத்தில் மழைபொழிந்தது. ஆறுகள் நன்னீரோடு பெருகின. எல்லாப் பக்கங்களிலும் நாடு (பூமி) பல்வேறு பயிர் வகைகளால் அழகுசெய்யப்பெற்றிருந்தது' என்று நம் வேந்தனது ஆட்சிக்காலத்தில் மக்களது நல்வாழ்வினைச் சுருங்கக் கூறுகின்றது. மனித சமூகத்தின் நன்மையை நாடி உழைப்பதன் மூலமே உண்மையான, நிலையான புகழை நிறுவமுடியும்' என்று மேனாட்டறிஞன் சார்லசுசம்மரின் கருத்துப்படி ராஜேந்திரன் பொதுமக்களின் நலன் நாடி உழைத்து நற்புகழ் பெற்றான்.

பண்டித சோழன்

சங்ககாலத்தில் நம் நாட்டினையாண்டு வந்த சேர, சோழ, பாண்டியவேந்தர்கள் கல்வி கேள்விகளில் மேம்பட்டிருந்தனர்; செஞ்சொற் கவிபாடும் வன்மைபெற்று விளங்கினர்; கற்றோரைப் போற்றினர்; சங்ககால வேந்தர்களைப் போலவே பிற்காலச் சோழமன்னர்களும் புலமைமிக்கவராக விளங்கினர். அவர்களுள்

நம் வேந்தனும் ஒருவனாவன். தாய்மொழியினையும், தாய் நாட்டினையும் தன்னிரு கண்களாகப் போற்றுதல் பெருமன்னனின் கடமையாகும். நம் ராஜேந்திரனும் தாய்மொழியாம் தித்திக்கும் தமிழ்மீது அளவற்ற காதல்கொண்டான்; போற்றினான்; தமிழ்ப்புலவர் பெருமக்களுக்கு நல்லாதரவு நல்கினான். சிறந்த சிவனடியாராகப் போற்றப்பெறுபவரும், கங்கைகொண்ட சோளேச்சரத்தான்மீது திருவிசைப்பாப் பாடியவருமான கருவூர்த் தேவர் என்பவர் அக்காலப் புலவர் பெருமக்களுள் ஒருவராவர். நம்பியாண்டார் நம்பியும் இவனால் ஆதரிக்கப்பட்டவரே.

நம் தமிழ் மொழியின் கண் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட நம் ராஜேந்திரன், வடமொழியின்பால் ஆர்வம் கொண்டிருந்தான்; புலமையும் பெற்றிருந்தான். இவனது வடமொழிப் பட்டங்களையும், கல்வெட்டுகளையும் சிறந்த காவிய நடையில் வரைந்தவரான நாராயண கவி என்பார் நம் வேந்தனால் பெரிதும் ஆதரிக்கப்பட்டார். இவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நம் வேந்தன் செய்து கொடுத்தான். 'யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை' என்பன செய்த அமிதசாகரரும், இவற்றுக்கு உரை வகுத்த குணசாகரரும் இக்காலத்தவர் எனக்கூறலாம்' என்று பண்டாரகர் மா. இராசமாணிக்கர் தமது சோழர் வரலாற்று எனும் நூலின்கண் குறிப்பிடுகின்றார்.

தமிழிலும் வடமொழியிலும் தேர்ச்சிபெற்றுக் கற்றோரைப் போற்றிப் பாதுகாத்த நம் வேந்தன் சிறந்த அறிஞன் என்பதனை ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடு 'நுட்பமான மதி...புலவருடைய குழாங்களில் பண்டிதர்களை அளந்து காட்டும் உரைகல்வாய் இருப்பவனும்' என்று குறிப்பிடுதலால் அறியலாம்.

'அவன் இளம்பருவத்திலேயே எல்லா வேதங்களையும் சாத்திரங்களையும் அறிந்தவனாய்' என்றும் கரந்தைச்செப்பேடு குறிப்பிடுவதனால் நம்வேந்தன் வேதங்களையும்

ஞானநூல்களையும் கற்றுத்தேர்ந்து, புலவர் பெருமக்களுடன் இலக்கியங்களை ஆய்ந்தறிவும் ஆற்றல் பெற்றவன் என்பதும் புலனாகும். மேற்கூறிய திறமைகளை நம்வேந்தன் பெற்றிருந்த காரணத்தினாலேயே பண்டிதசோழன் என்று புகழப்படுகின்றான்.

மேலும், நம் ராஜேந்திரன் அறிஞனான காரணத்தால்தான் எண்ணாயிரம், திரிபுவனை, வேப்பத்தூர், திருமுக்கூடல் ஆகியவடமொழிக் கல்லூரிகளுக்கு நிறைய நலதானங்கள் அளித்துள்ளான். தன் ஆசிரியர்களுக்கு ஆச்சாரிய போகம் அளித்துள்ளான்.

'மூவுலகங்களுக்குரிய கோளங்களையும் கடந்து சென்று தன் உயர்ந்தகுணங்களின் கூட்டங்களை உடையவனும், எல்லாச் சாத்திரங்களையும் கடந்த அறிவுடையவனும்...பிரகாசிக்கிற பெரியமகிமையைத் துதிப்பதற்கு இடம்கொள்ளாத காவியங்களை உடையவனும்' என்று ராஜேந்திரனது கரந்தைச்செப்பேடு இவனைப் புகழ்ந்துரைப்பதனாலும் இவன் சாத்திரங்களையும் கடந்த அறிவுடையவன் என்பதனை அறியலாம். 'நாடாட்சி, மக்கள் நன்மைக்காக இயங்கவேண்டுமெனின் புலவர்களே நாட்டை ஆள வேண்டும்; அல்லது மன்னர்கள் புலவர்களாதல் வேண்டும்' என்றார் மேனாட்டறிஞர் ஒருவர். நம் ராஜேந்திரனைப் பொறுத்த வரையிலும்கூட இக்கூற்று உண்மையாகிறது. நம் ராஜேந்திரனும் சிறந்த புலமை பெற்றவன் என்பதனால் நாட்டினை நன்கு ஆண்டான்.

மேற்கூறியவற்றால் கல்வியறிவும், பட்டறிவும் பெற்ற நம் ராஜேந்திரன் புலமையிற் சிறந்து விளங்கியதோடு கற்றோரைப் போற்றிக் கற்றோரிடம் கலந்துரையாடுவதில் பெருமகிழ்வு கொண்டவனாதலின், பண்டிதசோழன் என அழைக்கப்பெற்றான் என்பதனை நாமறியலாம்.

பெற்றோரிடத்துப் பேரன்பு

இவ்வுலகின்கண் பெற்றோர் மக்கள்மீதும், மக்கள் பெற்றோர் மீதும் அன்பு கொண்டிருத்தல் இயற்கையே ஆகும். ஆனால், நம் ராஜேந்திரனோ, தன் தந்தையைப் போலவே தன் பெற்றோரிடத்து எல்லையற்ற அன்பும், பக்தியும் கொண்டிருந்தான். தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றுச் சீராட்டிப் பாராட்டிப் பேரன்பினைச் சொரிந்து வளர்ந்த தாயின்மீதும், தன்னைச் சான்றோனாகவும், ஆற்றல் மிக்கவனாகவும் வளர்க்கத்தகுந்த ஏற்பாடுகளைச் செய்த தந்தையின்மீதும் அளவற்ற அன்புகொண்ட நம்வேந்தன் அவர்கட்குப் படிமம் எடுத்து நாள் வழிபாட்டிற்கு நிவந்தம் அளித்துச் சிறப்பித்தான். இச்செய்கையால் நம்ராஜேந்திரன் தன்பெற்றோர் மீதுகொண்டிருந்த பாசத்தினையும் பக்தியினையும் இனிது அறியலாம். எனவேதான், வள்ளுவனும், 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்' எனப்பேசினார் போலும்! நம் வேந்தனும்,

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல் என்ற வளமார்ந்த வள்ளுவர்தம் வண்டமிழ் மொழிக்கிணங்கத் தன் பெற்றோருக்குப் பெருமை தேடித்தந்தான்; பெற்றோருக்குச் சிறந்த புதல்வனாக விளங்கினான் என்பதனை அறியலாம்.

செய்ந்நன்றி மறவாமை

செய்ந்நன்றி அறிதலை வலியுறுத்த எண்ணிய வள்ளுவப்பெருந்தகை, எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்று கூறினார். நம் ராஜேந்திரனோ, இக்குறள் வழி நின்றான்; தோன்றாப் புகழினைப் பெற்றான்.

இளமைக்காலத்தில் தன்னை அன்புடன் வளர்த்துக்கல்வி, கேள்வி, ஒழுக்கம், இறையன்பு ஆகிய நற்பண்புகள் தோன்றி வளர வகைசெய்து, நன்னெறிப் படுத்தியவரும், சைவ

சமயத்துக்குத்தாய் போன்றவரும், சிவஞான கண்டராதித்தரின் மனைவியுமான செம்பியன் மாதேவிக்குத் தஞ்சைமாவட்டம், நாகப்பட்டினம் வட்டம் செம்பியன் மாதேவி என்னும் ஊரிலுள்ள கோவிலில் படிமம் ஒன்றினை நிறுவி, அதன் நாள் வழிபாட்டிற்குத் தேவையான நிவந்தமும் அளித்துள்ளமையால் இவனுடைய செய்ந்நன்றி அறிதல் என்னும் பண்பினை அறியலாம்.

தனக்குச் சைவாச்சாரியராக விளங்கிய சர்வசிவ பண்டிதரின் தொண்டினை என்றென்றும் மறவாத நம் ராஜேந்திரன் அவருக்கும் அவர் சீடர்களுக்கும், ஆச்சாரிய போகமாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலநெல் அளித்து மகிழ்ந்ததும் அவன் செய்ந்நன்றி மறவாச்செம்மல் என்பதனை உணர்த்துகின்றது. தனக்குக் கல்வி கற்பித்த மற்ற ஆசிரியர்கட்கும் இது போன்றே இவன் தானங்கள் பல செய்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான்.

கங்கைப் படையெழுச்சியின் போது, அருள்கூர்ந்து தனக்கு வெற்றிதேடித் தந்த குலதெய்வமாம் தில்லைக்கூத்தரசனுக்குத் தனது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்தற்பொருட்டே இவன் கங்கை கொண்ட சோளேச்சுரத்தைக் கட்டுவித்தான். ராஜேந்திர சோழன் மடிந்து, மண்ணோடு மண்ணாக ஆகிவிட்டபோதிலும் அவனது விழுமிய பேரரசு அழிந்து பட்டபோதிலும், அவனது நன்றிக்கடன் இன்றும் நின்று நிலவுகிறது. அவன் நிறுவிய கங்கைகொண்ட சோளேச்சுரம் இன்றும் அவனது நன்றி மறவா நற்பண்பினை உலகிற் கெடுத்தோதிக்கொண்டிருக்கிறது.

மேற்கூறியவற்றால் நம் ராஜேந்திரன் செய்ந்நன்றி மறுவாத சிறந்த பண்பினைப் பெற்றுத் திகழ்ந்தவனாகப் போற்றப்பெறுகிறான்.

சமயப் பொதுநோக்கு

தான் வழிபடும் மதத்தினைப் போற்றுவதுடன் புறமதங்களையும் இகழாது அவற்றையும் போற்றுவதே சமயப்பொறை எனப்படும். மாமன்னன் அசோகன் தனது பாறைக்கல்வெட்டு இரண்டாவது அரச ஆணையில், 'ஒருவன் தன் மதத்தைப் புகழ்ந்து, பிறர் மதத்தைப் பழித்தல் கூடாது; பிற மதங்களும் யாதேனும் ஒரு வகையில் பாராட்டத்தக்க பண்புடையனவே. இதையறிந்து நடந்தால் ஒருவன் தன் மதத்தையும் உயர்த்தியவனாவான்; பிற மதவளர்ச்சிக்கும் துணை புரிந்தவனாவான். இதற்கு மாறாக நடந்துகொள்பவன் தன் மதத்திற்கும் மாசூட்டிப் பிற மதங்களையும் பாழ் செய்தவனாவான்; தன் மதத்தை உயர்த்தவேண்டி பிறமதங்களைப் பழித்துப்பேசுபவன் உண்மையில் அவ்வாறு பழிப்பதால், தன் மதத்திற்குத் தானே கேடு விளைவிக்கின்றான். ஆகவே, பிற மதத்தவர்க்குப் பொன்னும் பொருளும் போல்வன அளிக்கும் புறச்செயல்களால் சமரசநிலை ஏற்பட்டுவிடாது; பிற சமயங்களையும் தம் சமயம்போல் மதிக்கும்பண்பாடு வளர்தல் வேண்டும்; அதுவே, உண்மைச் சமரசநிலைக்கு வழித்துணையாம் என்று மாண்புமிகு மன்னன் மதிக்கிறான்' எனக்கூறுகின்றான். இக்கருத்தினை அசோகர் கைக்கொண்டார்; ராஜேந்திர சோழனும் கைக்கொண்டான். மேற்கூறிய நன்மொழியின் இலக்கணமாகத் திகழ்ந்தவருள் ராஜேந்திரனும் ஒருவன் ஆவன். சிவபாத சேகரனும் ராஜனின் தவப்புதல்வனாம் நம் ராஜேந்திரனும் சிவனடி போற்றும் சிந்தையோனாகத் திகழ்ந்தான். சைவ மதம் தழைத்தோங்க அயராது உழைத்த நம்வேந்தன், கங்கைக் கரையிலிருந்த சைவ சமயாச்சாரியர்களை அழைத்து வந்து, சோழநாட்டின்கண் குடியமர்த்திச் சைவசமயத்திற்கு அளப்பரிய திருத்தொண்டு புரிந்தான். சைவ சமயத்தினைக்கொடு முடியில் ஏற்றிவைத்த நம் ராஜேந்திரனும் 'ஒரு மதாச்சாரியார்' எனக்கூறுமளவிற்கு நற்பணி புரிந்தான்.

சைவ சமயத்தினை வாழ வைத்ததோடு நம் வேந்தன் அமைதி பெற்றிருப்பின் இவனது பெரும்புகழ் பாரெங்கும் பரவி இராது; மாறாக இவன் 'எம்மதமும் சம்மதம்' என்ற செம்மையான, தரணி போற்றும் தங்கம் நிகர் கருத்தினைக்கண்டோர் உளம் கொள்ளும் கோட்பாட்டினை, நெஞ்சத்தின் அடித்தளத்தின்கண் நிறுத்திப் புறச்சமயத்தாரும் போற்றும் வகையில் வழிபாட்டுரிமை அளித்து அவர்கட்கும், அவர்களது சமயத்திற்கும் ஒல்லும் வகையெல்லாம் நல்லறம் செய்தான்; நிவந்தங்கள் அளித்தான்; நல்லாதரவு நல்கினான்.

இவன் தன்னளவில் சிறந்த சில பக்தனாக விளங்கிய போதிலும் பல சமயத்தவருக்கும் மன்னன் என்ற முறையில் சமயப்பொது நோக்கம் உடையவனாகத் திகழ்ந்தான். 'திருமந்திர ஓலை நாயகம் கங்கைகொண்ட சோழபுரத்து ராஜவித்தியாதரப் பெருந்தெருவில் சோனகன் சாவூர் பரஞ்சோதி என்று ராஜேந்திரனது கல்வெட்டுக்கூறுதலின், இவன் சமயம், மொழி, நாடு எனும் பாகுபாடின்றி அராபியனுக்கும் உயர்பதவி வழங்கி யிருந்த செய்தியறியப்படுதலின் இவனது சமரசநோக்கத்தினை எப்படிப்போற்றுவது?' நம் ராஜேந்திரன் சமயப்பொது நோக்குப் பெற்றுத் திகழக்காரணம் யாது? என்பதனை நாம் ஆய்ந்து பார்க்குங்கால் இவனை இளமைக்காலத்து வளர்த்து, நல்வழி காட்டிய செம்பியன் மாதேவியும், குந்தவையாரும் இவனிடம் சமயப்பொறையினை ஊட்டினர் என்பது புலப்படும். குந்தவையார் சிவ, வைணவ, சமண, புத்த ஆலயங்கட்கு எவ்வித வேறுபாடுமின்றி வரையாது வழங்கிய அம்மையாராவர். இவர் வைகைத் 'திருமலையில் குந்தவை ஜினாலயம்' என்னும் சமணப்பள்ளியின் நிறுவிய பெருமைக்குரியவராவர். எனவே, நம் ராஜேந்திரனும் சமயப்பொறையின் இளமைக்காலத்திலேயே இவரிடம் பெற்றான் எனக்கொள்க.

சமயப்பொறையினை நம் மன்னன் செம்மையான முறையில் மேற்கொண்டான் என்பதனைத் தன் தந்தையின் ஆட்சிக்காலத்து

நாகப்பட்டினத்தின் கண்ணுள்ள சூடாமணி விகாரை என்னும் புத்த ஆலயத்திற்கும் பள்ளிச்சந்தமாக அளிக்கப்பட்ட ஆனைமங்கலம் என்னும் ஊரினை இவன் தனது ஆட்சிக்காலத்தின் சாசன மூலமாக வழங்கினான் என்ற செய்தியால் உணரலாம். இவன் ஈழத்தினை வென்ற பின்பு ஈழநாட்டின் பலபகுதிகளில் சைவ, வைணவ ஆலயங்களை எழுப்பினான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.நம் வேந்தனது ஆட்சிக்காலத்தில் 'கல்வியிற் கரையிலாக் காஞ்சி மாநகரின்கண்' எண்ணற்ற புத்தமதத்தினரும் சமண சமயத்தினரும் சம உரிமையுடன் வாழ்ந்தனரென்பதாலும் சமயப்பொறையினை மன்னன் மேற்கொண்டிருந்தான் என்பது புலனாகும். சோணாட்டின்கண் சைவ சமயத்துடன் வைணவமும் தழைத்தோங்கியதாலும் இவனது மதக்காழ்ப்பின்மையை, சமரச நோக்கத்தினை நன்கறியலாம்.

நம் ராஜேந்திரன் சைவ ஆலயங்களைக் கட்டுவித்ததோடமையாது கங்கபாடி நாட்டின்கண் குவலாளபுரத்தில் (கோலார்) ஒரு பிடாரிக் கோயிலையும் எழுப்பித்தருளினான்; வைணவக்கோயில்களுக்கும், சமணப் பள்ளிகளுக்கும், புத்தவிகாரைகளுக்கும் முறையே திருவிடையாட்டமும், பள்ளிச்சந்தமும் அளித்துள்ளான்; வைணவக் கோயில்களில் பிரபந்தங்கள் ஓதவகை செய்துள்ளான். இதனால், சைவ நலச்செல்வனாகத் திகழ்ந்த நம் ராஜேந்திரன் பிற சமயங்களைப் போற்றும் மேம்பாடுடையவனாகவும் விளங் கினான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலக வரலாற்றின்கண் மங்காத மாமணியாய் மாசற்ற பொன்னாய் ஒளிவீசிக் கொண்டிருப்பது மாமன்னன் அசோகனின் புகழும், மாமன்னன் அக்பரின் புகழுமாகும். இதன் காரணம் என்ன? அசோகனும், அக்பரும் முறையே தங்கள் புத்த மதத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் பெருமபணியாற்றிய

போதிலும் பிற மதங்க ளையும் பேணிப்போற்றினர்; சமவாய்ப்பளித்தனர்; எல்லாப் பிரிவினரின் நன்மதிப்பையும் பெற்றனர். இவர்களின் பரந்த மனப்பான்மையும், சமயப்பொறையும் இவர்கட்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்தன. இவர்களைப் போன்றே நம்வேந்தனும் மதக் காழ்ப்பின்மையால் எல்லாச் சமயத்தாரின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுப் பெருமன்னனாகப் பெரும்புகழ் ஈட்டினான். சுருங்கக்கூறின் இவன் எச்சமயத்தவரும் பாராட்டும் சமயப்பொது நோக்கம் உடையவனாக விளங்கினான்.

இதுகாறும் கூறியவற்றால் நம் ராஜேந்திரன், சிவஞானச் செல்வனாக இருந்ததோடு பொதுநோக்கினையும் கொண்டு சிறப்புற்றான் என்பது புலனாகும். ராஜேந்திரனைப் போல் நாமும் சமயப்பொது நோக்கினைப்பின்பற்றினால் தான்,சத்தெல் லாம் ஒன்றென்றுணர்ந்த சன்மார்க்க சங்கம் என்றோங்கு மோ! என்ற தமிழகத்தின் தலைசிறந்த தத்துவஞானியாம் வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் கனவு நனவாகும்; சன்மார்க்கம் தழைக்கும்; வீடும் நாடும் நலம்பெறும்.

கலையார்வம்

பண்டைக் கால மன்னர்களுள் பெரும்பாலோர் கலையார்வம் மிக்கவர்களாக இருந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். இதனால், நம் ராஜேந்திரனும் கலையார்வம் மிக்கோன் என்பதும் பெறப்படுகின்றது. பொதுவாகச் சோழ மன்னர்கள் அதிலும் சிறப்பாகப் பிற்காலச் சோழமன்னர்கள் கலையார்வம் கொண்ட கலைஞர்களாகக் காணப்படுகின்றனர்.

நமது ராஜேந்திரனும் கலைப்பித்தனாதலின் கலைவளர்ச்சிக்குத் தக்க ஆதரவளித்துக் கலைப்புரட்சியையே தன்னாட்டில் ஏற்படுத்திவிட்டான் எனக்கூறுதல் பொருந்தும். இவனது ஆட்சிக் காலத்தில் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் உச்சநிலையில் காணப்பெற்றன. இவற்றுக்கெல்லாம் முழுமுதற்காரணம், கலையார்வம் மிக்கநம் மன்னனின்

நல்லாதரவேயாகும்.

கங்கைகொண்ட சோழபுரமும், கங்கைகொண்ட சோளேச்சாமும் நமது வேந்தனின் கலையார்வத்திற்கோர் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கங்கைகொண்ட சோழபுரம் பாழடைந்த நிலையில் காணப்பெற்ற போதிலும், கங்கைகொண்ட சோளேச்சரமோ, தன் நிலைகுன்றிய போதிலும் என்றும் செம்பாந்து நின்று நிலவி, ராஜேந்திரனின் கலையார்வத்தினை எடுத்துரைத் துக்கொண்டுள்ளது. இவ்வாலயம் பொலிவிழந்து காணப்பட்ட போதிலும், கலைச்சிறப்புக்கெடாமல், உருவத்தில் மாவீரன் ராஜேந்திரனின் புகழுக்கேற்ப நீண்டுயர்ந்து நிற்கின்றது.

கங்கைகொண்ட சோளேச்சரம் ஓர் எழில் மிகுந்த சிற்பக்கூட மாகவே இன்றும் காட்சிதருகிறது. கலைமகள், திருமகள், சண்டிகேசுவரர், கணேசர், நடராஜர், சுப்பிரமணியர், பிரம்மன், பிக்சாதனா, கசலக்குமி போன்ற சிற்பங்கள் கண்ணைக்கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. நம்வேந்தன் கலையார்வம் மிக்கவனாதலால்தான், எண்ணிறந்த சிற்பங்களைப்போற்றிப்புரந்து, நம் கண்ணுக்கு விருந்தளிக்கும் எண்ணிலாச்சிற்பங்களை அன்று உருவாக்க உறுதுணை புரிந்தான்.

நம் வேந்தனது காலத்தில் ஆடல், பாடல், ஓவியம், நாடகம் போன்ற கலைகளும் வளர்ச்சிபெற்றிருத்தலின் ராஜேந்திரன் இவைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கினான் என்பது புலனாகும்.

நம் ராஜேந்திரன் முகலாயப் பெருமன்னனான ஔரங்கசீப்பைப் போல் கலையார்வமில்லாது இருந்திருப்பின் 'இங்கு விமானத்திலும், கோயிலின் வெளிப்புறத்திலும் காணும் சிற்பங்களைக் காட்டிலும் உயர்ந்த சிற்பங்கள் தென்னிந்தியாவில் மட்டுமன்றித் தென்னிந்தியக் கலையைப் பின்பற்றிய சாவகக் கலையிலும் இல்லை' என்று

மேனாட்டறிஞனால் புகழப்படும் சிறப்பினைக்கொண்ட சிற்பங்களை நாம் கண்டு கண்டு மகிழ்வு கொண்டு பெருமைப்பட முடியுமா?

எனவே, ராஜேந்திரன் கலையார்வம் கொண்டு கலைஞர்களைப் போற்றிய காரணத்தால்தான் நம் நாடு கலைச்செல்வத்தில் மேம்பட்ட நிலையினை எய்தி அந்நியநாட்டினராலும் பாரட்டப் பெறுகின்றதென்பதனை நாம் நன்குணரவேண்டும். ராஜேந்திரனின் கலையார்வம் போற்றுதற்குரியதாக இருந்தது. எனவேதான், கரந்தைச்செப்பேடும் இவனை எல்லாச் சாத்திரங்களையும் கடந்த அறிவுடையவனும், கலைகளில் தேர்ச்சி பெற்றவனும் எனப் புகழ்கின்றது. மேற்கூறியவற்றால் நம் ராஜேந்திரன் கலையார்வமிக்கோன் என்பது அறியற்பாலது.

வடமொழி ஆர்வம்

தாய்மொழியாம் தமிழ்மீது தணியாத பேரன்பும் பற்றும் கொண்டொழுகிய நம் ராஜேந்திரன் வடமொழியின்மீதும் பேரார்வம் கொண்டவன் என்பது, கல்வெட்டுச் செய்திகளால் உணர்த்தப்படுகின்றது. ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் தமிழகமெங்கும் வடமொழியார்வம் நிறைந்திருந்தது. வடமொழி கற்பதே பெருமையென எண்ணப்பட்டது. பல்லவரது ஆட்சிக்காலத்திலிருந்தே தமிழகத்தில் வடமொழியார்வம் ஏற்பட்டு விட்டது. எனவேதான், ராஜேந்திரனும் வடமொழியார்வம் கொண்டு வடமொழியினை ஊக்குவிக்கப் பேராதரவு நல்கினான்.

இவன்தன் கல்வெட்டுகளில் வடமொழியினைப் பயன் படுத்தியுள்ளதாலும், இவனது கரந்தைச் செப்பேட்டின் ஒரு பகுதியும் திருவாலாங்காட்டுச் செப்பேடும் வடமொழியில் காணப்படுவதனாலும், கரந்தைச் செப்பேட்டில் காணப்படும் இலச்சினையில் வடமொழிச் சுலோகம் பொறிக்கப்பட்டுள்ளதாலும் இவன் வடமொழியார்வம் கொண்டவன் என்பது புலனாகின்றது. இதனை, 'அரசியற்

செய்திகளும் பிறவும்' எனும் தலைப்பின் கண்காண்க.

மேலும், இவன் தன்னாட்டில் வடமொழிக் கல்வி வளர்ச்சிக்காகப் பல வடமொழிக் கல்லூரிகளை நிறுவி வேதம், இலக்கணம், வேதாந்தம், மீமாம்சை ஆகியன கற்பிக்கப் பேருதவி புரிந்துள்ளான். தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் (ராஜராஜ சதுர்வேதி மங்கலம்) என்னும் ஊரில் மறைநூல் விடுதிக்கல்லூரி ஒன்றும் வேப்பத்தூரில் வடமொழிக் கல்லூரி ஒன்றும் பாண்டிச்சேரிக்கருகில் திரிபுவனை என்னும் ஊரில் வடமொழிக் கல்லூரி ஒன்றும் நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் புகழ்பெற்றிருந்தன. இவைகளின் பராமரிப்புச் செலவுக்காகவும், பேராசிரியர்கட்கு ஊதியம் வழங்குவதற்காகவும், மாணாக்கர்கட்கு இலவசக் கல்வி அளிப்பதற்காகவும் இவன் நிறைந்த அளவில் மானியங்கள் விட்டுள்ளான். ஒவ்வொரு கல்லூரியிலும் ஏறத்தாழ முந்நூற்றைம்பது மாணாக்கர் கல்விபயின்றனர்.

வடமொழியில் உயர் கல்வி கற்க இத்துணை அரிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து ராஜேந்திரன் எண்ணிறந்த வடமொழிப் புலவர்களையும் ஆதரித்துள்ளான். அவர்களுள் நாராயண கவி என்போன் குறிப்பிடத்தக்கவனாவான். இவனே, திரிபுவன மாதேவிக்கும், ராஜேந்திரனுக்கும் பேராசிரியராகத் திகழ்ந்தான் என்பதனைக் கரந்தைச்செப்பேட்டாலறியலாகும்.

மேற்கூறியவற்றான் ராஜேந்திரன் வடமொழியார்வம் கொண்டு வடமொழி வளர்ச்சிக்கு அளப்பரியதொண்டு செய்துள்ளான் என்பதும் வடமொழிக் கல்லூரிகளை நிறுவி, வட மொழிப் புலவர்களை ஆதரித்து வந்தான் என்பதும் உணரப் படுகின்றன. எனவே, இவனைத் 'தென்னாட்டுப் போசமன்னன்' எனல் பொருந்தும்.

புதியன புனைதல்

சோழர் வரலாற்றில் மட்டுமன்றித் தமிழக வரலாற்றிலும்

போற்றுதற்குரிய புதுமையான பல திட்டங்களையும் செயல்களையும் நிகழ்த்திக்காட்டித் தன் பின்னோருக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவன் ராஜேந்திர சோழனாவான். பழமையைப் பொன்னேபோல் போற்றி, தன் சோழர் குல முன்னோர்களின் அடியொற்றிச் செல்லும் திறனும் கொண்ட ராஜேந்திரன் புதுமைபுனையும் ஆற்றலும் கொண்டு புதுமையான செயல்கள் பலபுரிந்து கலங்கரை விளக்கமாகவும் ஒளி மிகுந்து காணப்படுகிறான். இவனது அரசியல் திறனென்னும் உலைக்களத்திலே உருவாக்கப்பெற்ற புதுமையான அம்சங்களெனும் கருவிகளை இங்கு நாம் ஆய்வோம்.

தென்னாட்டில் வென்றெடுக்கப்பட்ட நாடுகளைத் தனது அரசுடன் இணைத்துக் கொள்வதோடு அதனைச் செம்மையான முறையில் ஆளும் பொருட்டுத் தன் மகனை அரசப்பிரதிநிதியாக அனுப்பி வைத்தல் அரசியல் திறஞ்சார்ந்த மன்னனின் கடனாகும். ராஜேந்திரனுக்கு முன்பு ஆட்சிசெய்த முன்னோர்கள் இச்சத்தான முறையைப் பின்பற்றவில்லை. இதனை முதன்முறையாகப் புகுத்திச்சோழ வரலாற்றில் புதுமையைப் புனைந்தவன் ராஜேந்திரனேயாவான். தனது ஆட்சிக்காலத்தில் தனியாட்சி மேற்கொள்வதில் தணியாவேட்கை கொண்டு புரட்சிக் கொடியுயர்த்திய பாண்டியரை வென்று, தன்மகனைப் பாண்டிய நாட்டின் அரசப் பிரதிநிதியாக நியமித்துச் சடையவருமன் சுந்தரசோழ பாண்டியன் எனும் பட்டத்தினையும் சூட்டினான். சோழ இளங்கோவிற்குப் பாண்டியப்பட்டத்தினையும் இணைத்து, அதனுடன் நில்லாது பாண்டிய நாட்டின் ஒழுகலாற்றின்படி சடையவருமன் என்னும் பட்டத்தினையும் சூட்டியது தமிழக வரலாற்றிலேயே காணப்பெறாத புதுமையானதும், வியப்புக் குரியதுமான செய்தியாகும். இதில் சிறப்புக்குரியது யாதெனில், ராஜேந்திரனின் முன்னோர் பலர் பாண்டியநாட்டினை வென்றிருந்த போதிலும் இவனைப்போன்று

அரசப் பிரதிநிதியை அவர்கள் நியமிக்கவில்லை. ஏன்? அரசியல் அறிஞனெனப் போற்றப்பெறும் சோழப்பெருமன்னனான ராஜராஜனும் இதனைச் செய்யத்தவறிவிட்டான். எனவேதான், ராஜேந்திரனும் பாண்டிநாட்டின்மீது மறுபடியும் படையெடுக்க நேர்ந்தது.

அம்மன் கோவில்

சோழப்பெருமன்னர்கள் ஆண்டவனுக்கு ஆலயங்கள் பல எழுப்புவதில் தன்னிகரற்று விளங்கினர். குறிப்பாக அதிலும் சிறப்பாக விசயாலய சோழ குலத்தோன்றல்கள் தோற்றுவித்த சிவாலயங்கள் ஏராளம் ஏராளம்!! ராஜராஜேச்சுரத்தினைக் கட்டிப் புகழ்க்கொடி நாட்டிய ராஜராஜனின் தனயனான ராஜேந்திரனும் திருக்கோயில் கட்டுவதில் புதுமையைக்கூட்டித் தன் திறனைக் காட்டித் தந்தைக்கேற்ற தனயன், தான் என்பதனை உலகிற்கு எடுத்துக்காட்டினான்.

பிரதான கோயிலுக்கருகே அம்மனுக்கும் தனிக்கோயிலமைக்கும் புதியமுறையினை, புதிய பாணியை அமைத்தவன் ராஜேந்திர சோழனே ஆவான். இது பிற்காலத்தில் திருக்காமக்கோட்டம் என அழைக்கப்பெற்றது. இதனால், திருக்கோயிலமைப்பு முறையில் ராஜேந்திரன் புதுமையைப் புகுத்தினான் என்பது போற்றற் குரியதாகும்.

தலைநகர் மாற்றம்

புதியன புனைவதில் ஆர்வம் கொண்ட ராஜேந்திரன் தனது தலைநகரின் மாற்றவும் முடிவுசெய்தான். விசயாலய சோழன் காலம் முதற்கொண்டு மாமன்னன் ராஜராஜனது காலம்முடிய தஞ்சை மாநகரம் சோழர்களின் புகழ்மிக்க தலைநகராய் விளங்கிற்று. அப்போது எல்லா வசதிகளும் அமையப்பெற்று இருந்தது தஞ்சை மாநகர். இருப்பினும் ராஜேந்திரன் தனது தலைநகரினைத் தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான்; புதிய நகரினை அமைத்தான்;

புதுமை சேர்த்தான்; வரலாற்றின்கண் புகழ்பெற்றான். இப்புகழ்பூத்த புதுநகர், ராஜேந்திரனின் புதுமைபுனையும் ஆற்றலினைப் பறைசாற்றுகின்றது. தானும் ஒரு புதிய நகரினை அமைத்துத் தந்தையைப் போன்றதொரு சிவாலயம் கட்டவேண்டுமென்பதே இவனது விருப்பமாக இருந்திருத்தல் வேண்டும்.

புனித தீர்த்தம்

தமிழகத்திலுள்ள திருக்கோவில்களில் புனித தீர்த்தம் என்ற புண்ணிய தீர்த்தம் காணப்படுகிறது. புண்ணிய தீர்த்தக்கிணறு கோவிலுக்குள் காணப்பெறும். முதலாம் ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் புண்ணிய தீர்த்தம், சிவகங்கைக்குளமாகும். இதன் பெயர்தான் சிவகங்கைக் குளமே தவிர, இங்குள்ள நீர் கங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டதன்று. ஆனால், ராஜேந்திரனோ, கங்கை நதியிலிருந்து கங்கை நீரைக் கொணர்ந்து அதன் ஒரு பகுதியினைப் புண்ணிய தீர்த்தக் கிணற்றில் ஊற்றினான். மேலும், கங்கை கொண்ட சோழ புரத்திலுள்ள சிங்க தீர்த்தமும் (சிங்கமுகக் கிணறு) புதுமையான அமைப்பினைக்கொண்டது

நாட்டின் நீர்ப்பாசன வசதியைவிரிவாக்க, உணவு உற்பத்தியைப் பெருக்க, விரிவான திட்டத்தினைத்தீட்டி, நீல நெடுங்கடலோ? எனக் காண்பார் வியக்கும் வண்ணம் சோழ கங்கம் என்னும் மாபெரும் ஏரியை உருவாக்கியவன் ராஜேந்திரன். இங்கு ஏரியை அமைத்தது புதுமையன்று.

குன்றும் மலையும் இல்லாத இடத்தில் ஏறத்தாழப் பதினாறு கல்தொலைவு நீளமும் மூன்று கல் தொலைவு அகலமும் கொண்ட பரந்த ஏரியினை அமைத்து, அதன் கரைகளை உயர்த்தி, நீரைத்தேக்கியதே புதுமையாகும். எனவேதான், திரு. ஆர். நாகசாமி அவர்கள் இதனை, நம் நாட்டில் காணப்படுகின்ற மனிதனால் சமைக்கப்பெற்ற ஏரிகளுள் இதுவே பெரியது. எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் கங்கைநீரின் ஒரு பகுதியை ஊற்றி இதற்குச் 'சோழ சங்கம்' எனப்பெயரிட்டதும் புதுமை என்க. தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் இத்துணைப் பெரிய ஏரி எங்கேயும் காணப்பட்டதில்லை.

ராஜேந்திரன் கால முதல் கல்வெட்டுகள் புதிய அமைதியைப் பெற்றன. இஃது ராஜேந்திரன் செய்த புதுமையாகும். 'திரிபுவன சக்கரவர்த்தி' எனவும் 'கோனேரின்மை கொண்டான்' எனவும் இவனுடைய கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளமையை இங்கு நாம் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இப்புதுமையினைக் கல்வெட்டறிஞர்கள் நன்கு உணர்வர்.

இளங்கோ பட்டம் (இளவரசுப் பட்டம்)

தனது ஆட்சிக் காலத்திலேயே தன் மகனை இளங்கோவாக ஆக்கி இணைந்த ஆட்சியின் மேற்கொண்டது ராஜராஜன் செய்த புதுமையாகும். இதில் புதுமையாதெனில் ராஜராஜன் தனது இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் தன்மகனுக்கு இளங்கோப் பட்டம் கட்டினான். ராஜேந்திரனோ, தனது ஏழாம் ஆட்சியாண்டிலேயே தன் மகனுக்கு இளங்கோப்பட்டம் கட்டி, ஆட்சித்துறையில் ஈடுபடுத்தி, இருபத்தேழு ஆண்டுகாலம் தந்தையும் மகனும் இணைந்த ஆட்சியினைத் தோற்றுவித்தான். வரலாற்றில் இது யாங்கணும் காணப்பெறாத புதுமையாகும்.

மேற்கூறியவற்றால் ராஜேந்திரன் புத்தம் புதிய திட்டங்கள் பல்வற்றினைத் தன் ஆட்சிக் காலத்தில் செயல் முறைக்குக் கொண்டுவந்தான் என்பது புலப்படும். இவன் புதுமைபுனையும் பித்தனாகையால் இது போன்ற புதுமையினைச் செய்தான் எனக்கொள்ளுதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றாள் ராஜேந்திரன் பெருவீரமும், கருதுவார் கருதும் உருவமாய் இருக்கும் இறைவன்மீது அன்பும், பாரி போன்று வாரி வழங்கும் வள்ளன்மையும், அரிய அரசியல் திறமும், மக்கள் நல்வாழ்வில் நாட்டமும், கல்விகேள்விகளில்

முதிர்ச்சியும், பெற்று வளர்த்துச் சான்றோனாக்கிய பெற்றோரிடத்துப் பேரன்பும், செய்ந்நன்றி மறவாத செம்மையும், சமயப்பொறையும், கலையார்வமும், வடமொழியார்வமும், புதியன புனையும் ஆற்றலும் பெற்றுச்சோழ மன்னர்களுள் தனக்கு ஒப்பாருமின்றி மிக்காருமின்றிச் சிறந்து விளங்கினான் என்பது பெறப்படும்.

மேற்கூறிய நற்பண்புகளேயன்றி, மன்னனுக்கேயுரிய செங்கோன்மையும், சான்றாண்மையும், நேர்மையும் குறித்த காலத்தில் குறித்தவற்றைச் செய்தும், பழியஞ்சுதலும், கடல் கடந்த காவலர்களுடன் நட்பும், சுற்றும் போற்றலும், அஞ்சாமையும் போன்ற போற்றுதற்குரிய அருங்குணங்களும் அமையப்பெற்றுச் செங்கோல் செலுத்திச் செம்மையுற ஆட்சிசெய்தான் நம் ராஜேந்திரன் என்பதைத் தெள்ளிதின் அறியலாம்.

இறுதியாக இக்காவலனின் குண நலன்களைப்பற்றி இவனுடைய கரத்தைச் செப்பேடு யாது கூறுகின்றது என்பதனையும் ஈண்டுக் குறிப்பிடுதல் நலம் பயப்பதாகும்.

'அறமாகிய உதய பருவத்தை, நாளும் உதய பருவதத்தை அடைத்து உலகத்திலுள்ள யாவராலும் வணங்கப்படுவதும்...தீவிரமான பிரதாபத்தை உடையவனும், தன் கரங்களால் எல்லா உலகுக்கும் உபகாரம் செய்பவனும், சன்மார்க்கத்திலேயே இருப்பவனுமான அப்படிப்பட்ட இவ்வரசன், சூரியன்போல் தன் சேர்க்கையினாலும் மரபினாலும் உலகத்தை ஒளியோடு விளங்கச் செய்தான்'

'விந்தையாகிய அன்னப்பேட்டுக்கு விளையாடும் ஏரி போன்றவனும், வாத இலக்குமிக்குப் பரந்த விளையாட்டிட மானவனும், தைரியம், நுட்பமான மதி, அன்பு, செல்வம், இரக்கம் இவைகட்குப் பிறப்பிடமானவனும் புலவர்களுடைய குழாங்களில் பண்டிதர்களை அளந்து காட்டும் உரைகல்லாய் இருப்பவனும், இம்மைக்கும் மறுமைக்குமான வேத

மார்க்கமாகிறகுகையின் தத்துவத்தைக் காட்டும் வேதவிளக்கமாய் இருப்பவனும் வணங்கிய அரசர்களுடைய கிரீடங்களால் பளபளவெனமின்னுகிற பரத பீடத்தை உடையவனுமாக இந்த ராஜேந்திரன்'

மூவுலகங்கட்குரிய கோளங்களையும் கடந்து சென்று தன் உயர்ந்த குணங்களின் கூட்டங்களை உடையவனும், எல்லாச் சாத்திரங்களையும் கடந்த அறிவுடையவனும், கலைகளில் தேர்ச்சிபெற்றவனும், அரசர்களின் முடிவரிசைகளால் தேய்க்கப்பட்ட பாத பீடத்தை உடையவனும், பிரகாசிக்கும் பெரிய மகிமையைத் துதிப்பதற்கு இடங்கொள்ளாத காவியங் களையுடையவனும் பகைவர்களை முறியடித்தவனும், செல்வம் நிறைந்தவனுமான ராஜேந்திர சோழன்'

'தடைபடாத நிறைந்த பராக்கிரமத்தையும் புலனடக்கத்தையும் உடையவனுமான ராஜேந்திரன்' இச்செப்பேட்டில் சில செய்திகள் மிகைபடக்கூறப்பட்டிருப்பினும் அடிப்படையில் உண்மையில்லாமலில்லை.

இதனால், ஆண்மை, அறிவு, ஆற்றல்களில், சோணாட் டரியணையின்கண் அமர்ந்து அரசாண்ட அரசர்கள் அனைவரினும் நம் ராஜேந்திரன் குணக் குன்றாக விளங்கிச்சீரும் சிறப்பும்பெற்று, வரலாற்றில் பேரும், புகழும் கொண்டு சிறந்தோங்கினான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தென்னிந்திய வரலாற்று வானத்தில் முழுமதியென ஒளிவீசிய கலங்க மற்ற நிலவு ராஜேந்திரனே யாவன்.சோணாட்டில் அரியணையேறித் தமிழகத்தில் வெற்றிக்கொடி நாட்டித்தென்னாட்டில் புகழக்கொடியுயர்த்தி, வடநாட்டிலும் தனது புலிக்கொடியினை ஓங்கிப் பறக்கவிட்டுக் கடல் கடந்த நாடுகளிலும் சோழர்தம் ஏகாதிபத்தியத்தை நிறுவிய ராஜேந்திரன் இந்தியாவின் தலைசிறந்த கடற்போர் வீரனாவான்.

இவனது ஆட்சிக்காலத்தில் சோழப்பெருநாடு பரந்துவிரிந்துசென்றது. தமிழகத்தில் இவனைப்போன்று

பரந்துபட்ட பேரரசினை ஆண்ட வேந்தர் எவருமில்லை யெனத் துணிந்து கூறலாம். எனவேதான், பேராசிரியர் என். சுப்பிரமணியன் அவர்கள் 'இப்பெரு மன்னனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் சோழப்பெருநாடு பரப்பிலும் புகழிலும் உச்சநிலையினை அடைந்தது. இவனுக்கு முன்பும், பின்பும் ஆண்ட எந்தத் தமிழக ஆட்சியையும் இதற்கிணையாகக் கூறவியலாது' என்று மனமாரப்பாராட்டுகின்றார்.

எனவே , பெருவீரத்துடன் ஆட்சித்திறன், சமயப்பொறை, நாட்டின் நலனில் அக்கறை போன்ற இன்னோரன்ன நற்குணங்களின் மொத்த உருவாய்த் திகழ்ந்த ராஜேந்திரன் போற்றத்தகுந்த மன்னனாக விளங்கினான் என்பதில் வியப்பில்லை.

இத்துணைப் பெருவீரமும், வெற்றியும், கீர்த்தியும் பெற்று விளங்கிய ராஜேந்திரன் மாமன்னன் அசோகனைப்போன்று சமயவாழ்வினை மேற்கொண்டிருந்தான் என்பதனைக் கீழ்க்கண்ட கரந்தைச் செப்பேட்டுப் பகுதிகளாலறியலாம்.

'சன்மார்க்கத்தில் இருப்பவன்'

'இம்மைக்கும் மறுமைக்குமான வேத மார்க்கமாகிற குகையின் தத்துவத்தைக்காட்டும் ஞானவிளக்கமாக இருப்பவன்'

'எல்லாச் சாத்திரங்களையும் கடந்த அறிவை உடையவன் ராஜேந்திரன்' அவன் (ராஜேந்திரன்) இளம்பருவத்திலேயே எல்லா வேதங்களையும், சாத்திரங்களையும் கற்றவனாக இருந்தான்'

எனவே, இவன் பல நற்குணங்களின் மொத்த உருவாக விளங்கியதுடன் அன்பு நெறியான பக்தி நெறியைப் பின்பற்றி நடந்தான் என்பது புலனாகும்.

11

அறிஞர்கள்

ரா ஜேந்திர சோழன் கல்வி, கேள்விகளிற் சிறந்த மன்னனாவன். இவன் கற்றறிந்த அறிஞர் பெருமக்களைப் போற்றுபவன். இவன் தமிழ் மொழியிலும், வடமொழியிலும் நல்லதேர்ச்சி பெற்றிருந்தான். இவனது புலமையினைக்கண்ட சான்றோர் இவனை 'பண்டித சோழ'னென்று சிறப்பித்தனர். கற்றோருடன் கலந்துரையாடுவதில் இவன் பெருவிருப்பம் கொண்டவனென்றும், 'புலவர்களுடைய குழாங்களில் பண்டிதர்களை அளந்து காட்டும் உரைகல்லாய் இருந்தவனென்றும்' கரந்தைச் செப்பேடு இவனைப்போற்றுகின்றது. ஈண்டு அறிவிற் சிறந்தவனாகிய நம் வேந்தனால் ஆதரிக்கப்பெற்ற அறிஞர் பெருமக்களைப் பற்றிச் சிறிது ஆய்வோம்.

சர்வசிவ பண்டிதர்

ராஜராஜன் காலத்தில் பெரிய கோவிலில் இருந்த சர்வசிவபண்டிதர் என்பார் கல்வியிற் சிறந்த அறிஞராவார். இவர் ராஜேந்திரனின் பெருமதிப்பிற்குரியவராக இருந்தார். இவருக்கும் இவருடைய சீடர்களாய் ஆர்யதேசம், மத்தியதேசம், கௌடதேசம் ஆகிய விடங்களில் இருந்தவர்களுக்கும் ஆச்சார்ய போகமாக ஆண்டுதோறும் நிறைந்த அளவாக ஆடவல்லான் மரக்காலால் இரண்டாயிரங் கலம் நெல் அளப்பதற்கு ராஜேந்திரன் ஆணை பிறப்பித்தான். இதனால், ராஜேந்திரனுக்குச் சைவாச்சாரியராக

விளங்கியவர் சர்வ சிவ பண்டிதராவார் என்பது உறுதி பெறுகிறது. 'சர்வ சிவ பண்டிதர்' என்று இவர் பெயர்பெற்றிருத்தலின் இவர் மூன்று வகையான ஆசாரியர்களுள் தலைமையான 'சர்வ சாதகர்' என்னும் ஆச்சாரியராவர் என்பது புலப்படுகின்றது. ஆச்சாரியருள் 'சர்வ சாதகர்', 'போதகர்', 'ஆச்சார்யர்' என்று மூன்று பிரிவுகள் உண்டென்பதனை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, இவர் ராஜராஜேச்சுரத்தின் கண் வழிபாடு நிகழ்த்தும் ஆச்சாரியர்களுள் முதன்மையான தலைமையிடத்தைப் பெற்றவர் என்பதும் இவருக்குக் கீழ்ப்பல ஆச்சாரியர் கோவிலில் பணிபுரிந்தனர் என்பதும் பெறப்படுகின்றன. ராஜேந்திர சோழன் சைவமதத்தைச் சார்ந்திருந்தமையின் குரு ஒருவரிடம் தீட்சை பெறவேண்டுமென்ற சைவ சமயத்தின் தலைசிறந்த கோட்பாட்டில் கிணங்கத்தனது அரசவையிலும் குருக்களுக்குச் (ராஜ குரு) சிறப்பிடம் அளித்திருந் தான். இவர்களுள் தலையாயவரே சர்வசிவ பண்டிதராவார்.

ராஜராஜனின் கல்வெட்டுகளிலும், ராஜேந்திரனின் கல்வெட் டுகளிலும் ஈசானபண்டிதர், சர்வசிவ பண்டிதர், பவனபிடாரன் ஆகிய குருமார்களின் பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன. முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் போன்ற மன்னர்களும் தன் 'சுவாமி தேவர்' (குரு) அறிவுரைப்படி நடந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காஷ்மகிராரி ஆராவமுது புருஷோத்தமனான ராஜேந்திரசிம் மப்பேராசிரியர் இப்பேராசிரியர் ராஜேந்திரனின் பேராசிரியராக இருந்து மன்னனுக்கு நற்கல்வி பயிற்றுவித்தார். இப்பேராசிரியருக்குத் தக்க ஊதியமளித்துப் பெருமைப்படுத்தினான் ராஜேந்திரன். இவர்தான், ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டுப் பகுதியை இயற்றிய பெருமைக்குரியவராவர்.காஷ்மகாரி கிருஷ்ணரங்கனான திரிபுவன மகாதேவிப் பேராசிரியன் இப்பேராசிரியரையும்

ராஜேந்திரன் நன்கு ஆதரித்து ஆதரவு காட்டினான். இவரும் கரந்தைச் செப்பேட்டுப் பகுதிகளை இயற்றிப்பெருமை பெற்றார்.

இவ்விரு பேராசிரியர்களும் ராஜேந்திரனால் மானியமளிக் கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றனர். இதனை 'இவ்வூர்சாசனம் வெட்டி பூஜ்ஜையாகப்பெற்ற காஷ்மகாரி கிருஷ்ண ரங்கனான திரிபுவன மகாதேவிப் பேராசாரியனுக்குத் துணிநிலம் வேலி இவ்வூர் சாசனம் வெட்டிப்பூஜ்ஜையாகப் பெற்ற காஷ்மகாரி ஆராவமுது புருஷோத்தமனான ராஜேந்திர சிம்மப் பேராசிரியனுக்குத் துணி நிலம் வேலி' என்ற கரந்தைச் செப்பேட்டின் முப்பதாவது ஏட்டாலறியலாம்.

இலகுளீச பண்டிதர்

ராஜேந்திர சோழன் அறிவுத்துறையிலும், ஆன்மீகத் துறையிலும் தேர்ச்சிபெற அரும்பாடு பட்டவர்களுள் இவரும் ஒருவராவர். அப்பரடிகளது காலத்தில் அறுவகைச் சமயங்கள் தமிழகத்தின்கண் நிலவியதாக அப்பரடிகள் குறிக்கின்றார். சைவநெறியின் அறுவகைப் பிரிவுகளுள் காளாமுகச் சைவம் சிறப்பானதாகும். மற்றும் சாக்தர்கள், சன்மார்க்கர் போன்ற சைவசமயப் பிரிவினரும் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். ராஜேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் காளாமுகச் சைவம் மக்கள் மத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தது. இச்சமயத்தவர் பலர் பண்பட்ட அறிஞராகவும், பண்டிதராகவும் அக்காலை விளங்கி வந்ததனர். அவர்களுள் இலகுளீச பண்டிதர் மிகவும் குறிப்பிடத்தக்கவராவார். இவர்கோயில் அலுவல்களைக் கவனித்து வந்தார். இவர் ராஜேந்திரனால் பெரிதும் ஆதரிக்கப்பட்டார் என்று தெரிகிறது. அக்காலத்தில் காளாமுகச் சமயத்தினரே சிவ அறநிலைகளைப் பாதுகாத்து வந்தனர். ராஜேந்திரனும் காளாமுகச் சைவக் கோட்பாட்டுகளை நன்குணர்ந்து போற்றினான் என்பதனை முன்பே கண்டோம்.

ஈசான சிவ பண்டிதர்

முதலாம் ராஜேந்திர சோழனின் குருவாக விளங்கியவர் ஈசான பண்டிதர் என்பவராவர். இவர் ராஜேந்திர சோழனுக்கு நண்பராய், தத்துவ ஞானியாய், வழிகாட்டியாய் விளங்கினார். 'ஈசான பண்டிதர்' ராஜேந்திரனின் குருவாகத் திகழ்ந்தார் என்ப தனை வடவார்க்காடு மாவட்டத்தில் காஞ்சியிலிருந்து வந்த வாசிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பதின்மூன்று கல்தொலை விலுள்ள கூழம்பந்தல் என்னும் ஊரின்கண்ணுள்ள கங்கைகொண்ட சோளேச்சுரர் கோயில் கல்வெட்டினால் அறியமுடிகின்றது. இங்குள்ள சிவன்கோயில் நம் ராஜேந்திரனின் கங்கைப் படை யெழுச்சியின் வெற்றிச்சின்னமாகக் கட்டப்பட்டது. இதனைக் கட்டியவர் ஈசான பண்டிதர் என்பதனைக் கல்வெட்டுச் செய்தியால் அறியலாம். இவர் நம் வேந்தனால் பெரிதும் ஆதரிக்கப்பட்டார்.

நம்பியாண்டார் நம்பி

ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் தமிழ்த்தொண்டு புரிந்துவந்த நம்பியாண்டார் நம்பி, ராஜேந்திரன் ஆட்சிக்காலத்திலும் தமிழ்தொண்டு புரிந்தார் என்பதனைக் கல்வெட்டுச் சான்றால் அறியலாம். ராஜராஜனைப் போலவே, நம் ராஜேந்திரனும் நம்பியாண்டார் நம்பியினை ஆதரித்து நல்லாதரவு நல்கினான்.

கருவூர்த்தேவர்

இவரது பெயரினைக்கொண்டு இவர் கருவூரின்கண் பிறந்தவர் என்பது தெரிகின்றது. இவரைச் சித்தர் என்று சிலர் கருதுகின்றனர். இவர் திருத்தலங்கள் தோறும்சென்று இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடும் இயல்பினராதலின் இவரைச் சித்தராகக் கருதுதல் அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

சென்ற திருத்தலந்தோறும், திருமுன்நின்று திருவிசைப்பாப்பாடிய ஒன்பதின்மருள் இவரும் ஒருவராவர். இவர் சிதம்பரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர்

மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சுரம், திருப்பூவனம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை ராஜராஜேச்சுரம் திருவிடை மருதூர் என்ற பத்துத்திருத் தலங் களையும் தரிசித்துப் பாடியருளியவராவர்.

இவர், ராஜராஜனது ஆட்சிக்காலத்திலும், ராஜேந்திரனது ஆட்சிக்காலத்திலும் வாழ்ந்தவராவர். இவர் தஞ்சை ராஜராஜேச் சுரத்தின் கண்ணுள்ள சிவலிங்கத்தை எழுந்தருளுவிக்கச் செய்தார். நம்வேந்தன் இவர்பால் அன்பு கொண்டொழுகினான். இவர் ராஜராஜன், ராஜேந்திரன் ஆகிய இருவருக்கும் குருவாக விளங்கியதாகத் திரு. ஜி.எம். முத்துசாமி குறிப்பிடுகிறார்.

நம்பி காட நம்பி

நம்பி காட நம்பி திருவாரூர் இறைவன்மீதும், சிதம்பரம் இறைவன்மீதும் இரு பாக்கள் பாடியபுகழ் பெற்றவராவர். இவர் கி.பி. 1050 ஆம் ஆண்டினதாகக் குறிக்கப்பெற்றுத் திருவையாற்றில் காணப்படும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளவரான ஆத்நேய நம்பி காட நம்பி என்னும் அருச்சகரே என்று அறிஞர் சிலர் கருது கின்றனர். எனவே, இவரும் நம் வேந்தனின் ஆதரவைப்பெற்றிருந்தார் எனக்கொள்வது தவறாகாது.

சைவ ஆசாரியர்கள்

நம் வேந்தன் கங்கைப்பகுதியலிருந்து சைவ சமயாச்சாரியர்களையும், சிவபிராமணர்களையும் அழைத்து வந்து, காஞ்சிமாநகரிலும், சோணாட்டிலும் குடியேற்றி அவர்களுக்கு நல்லாதரவளித்து வந்தான்.

அமிதசாகரர், குணசாகரர்

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பன செய்த அமித சாகரரும் இவற்றிற்கு உரைசெய்த குணசாகரரும் ராஜேந்திரன் காலத்தவர் என்று பண்டாரகர் மா. இராசமாணிக்கர் கருதுகிறார்.

நாராயண கவி

வடமொழியின்கண் சிறந்த ஆர்வம் கொண்ட இவர் போற்றுதற்குரிய கவிஞராய்த் திகழ்ந்தார். ராஜேந்திரனது வடமொழிப் பட்டயங்களையும், கல்வெட்டுகளையும் அழகிய காவிய நடையில் எழுதிய புகழ் பெற்றவரும் இவரே யாவார். நம் வேந்தனது திருவாலாங்காட்டுச் செப்பேடுகளை வரைந்தவரும் இவரே யாவார். இவர் சங்கரரின் மகனாவார்.

நம் ராஜேந்திரன் இந்த வடமொழிக் கவிஞருக்கு நல்லாதரவு நல்கித் தேவையான வசதிகளைச் செய்து தந்தான். இவர் இரண்டாம் புலிகேசியின் ஐகோல் வெட்டெழுத்தினை (Aihole Inscription) வரைந்த இரவி கீர்த்தியுடன் ஒப்புமை நோக்கத் தக்கவராவர். ஏனெனின், இவர்கள் வரைந்த வெட்டெழுத்துகள் இலக்கிய நயம் கொண்டவையாகப் போற்றப்படுகின்றன.

மேற்கூறியவற்றால் ராஜேந்திரன், மன்னன் என்ற முறையில் கவிஞர்களையும், கலைஞர்களையும், அறிஞர்களையும் நன்கு ஆதரித்து அவர்கள் குறைவற்று வாழநிறைந்த அளவில் உதவிசெய்தான் என்பதும் இவ்விதம் இவன் அறிஞர்பெருமக்களைப் பேணிப்போற்றிய காரணத்தால் நாட்டில் அறிவொளி பிறந்தது என்பதும் பெறப்படுகின்றன. வடநாட்டின்கண்ணுள்ள மாளவநாட்டினை ஆண்டு வந்த பரமார போசமன்னன் புலவர்களையும் அறிஞர்களையும் போற்றிப் புரந்ததுபோல் நம்வேந்தனுக்கு அறிஞர் பெருமக்களைப் பேணிப்பாதுகாத் ததனாலும், போசமன்னனைப் போல் ராஜேந்திரனும் கல்வியிற் சிறந்தவனாதலாலும் பொருந்தும். போசமன்னைப் போன்று இவனும் வடமொழிக் கல்லூரியை நிறுவினான். போசன் 'தாரா' என்னும் புதிய தலைநகரத்தினை நிறுவியது போன்று, இவனும் கங்கைகொண்ட சோழபுரமென்னும் புதிய தலைநகரை நிறுவினான். போசமன்னன் போசபுரத்தில் மாபெரும் ஏரியை அமைத்தது போல் இவனும் 'சோழகங்கம்' என்னும் பேரேரியைக் கட்டினான்.

சமகாலத்தில் ஆட்சிபுரிந்த இவர்கள் இருவரும் பலவிதங்களில் ஒப்புமையான குணங்களைப் பெற்றிருந்தனர் என்பது நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

இலகுலீச பண்டிதர், சர்வ சிவபண்டிதர், ஈசான சிவ பண்டிதர், சதுரானன பண்டிதர்* போன்ற நல்லறிஞர்களைப் போற்றி வளர்த்த இப்பெருவேந்தன் குப்தபெருமன்னனான இரண்டாம் சந்திரகுப்தன், வர்த்தன வம்சத்து ஹர்சன், விசய நகர மன்னன் கிருட்டிணதேவராயன் போன்ற ஈடுமெடுப்புமில்லாப் பெருவேந்தர்களுக்கு ஒப்புமை கூறத்தக்க சீரும் சிறப்புமுடையவன்.

(* S.I.I. IV. 553 and 126 of 1912 சதுரானன பண்டிதரின் வேண்டு கோளுக்கிணங்க ராஜேந்திரன் திருவொற்றியூரில் கோயில் எடுப்பித்துள்ளான்)

12

அரசியல் அலுவலர் - சிற்றரசர்

சோழப் பெருநாட்டினையாண்ட மாமன்னர்களுள் தலையாயவன் நம் ராஜேந்திரனேயாவான் எனக்கொள்ளுதல் தவறாகாது. ஏனெனில், இவனது ஆட்சிக்காலத்தில், சோழப்பெரு நாடு பல்கிப்பெருகிப் பரந்து விரிந்து கிடந்தது. பொதுமக்கள் எல்லா வளனும், நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தனர். நாட்டில் நலம் சார்ந்த ஆட்சிமுறை நிலவியதால், அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டன. கைத்தொழிலும், வாணிகமும் பெருவளர்ச்சி பெற்றன. சமயமும் கலையும் உன்னத நிலையினை எய்தின. இவ்விதம் நம் ராஜேந்திரனது காலம் பல்வகைத் துறைகளிலும் சிறந்துவிளங்கியமைக்குக்காரணம் மன்னனின் தனித்திறமையே யாகுமென நாம் கூற இயலாது. ஏனெனில், அரசியல் துறையிலும், போர்த் துறையிலும் மன்னனுக்குப் பெருந்துணை புரிந்த அரசியல் அலுவலரும், போர்ப்படைத் தலைவர்களும், சிற்றரசர்களும் மக்கள் நலம் கருதித் தன்னலம் கருதாது உழைத்தனர் என்பதனை ஈண்டு நாம் மறுத்தவியலாது.

சோழப்பெருநாடு அகல அகலப்படை வலியும் பெருகிற்று. ராஜராஜன். ராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில், சோழ அரசு ஏகாதிபத்தியமாக மாறியதால், தொடர்ந்து போர் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. புதிய புதிய ஒப்புயர்வற்ற படைத்தலைவர்களும் நிர்வாகிகளும் சந்தர்ப்பத் தேவைகளினாலும்,

சூழ்நிலைகளாலும் பல்கிப்பெருகினர்.

மாவீரன் அலெக்சாந்தரின் தொடர் போர்களின் விளைவாகப் பெரும்புகழீட்டிய படைத்தலைவர் ஏராளம்; மாமன்னன் நெப்போலியனது காலத்தில் பிரெஞ்சு நாடு உருவாக்கிய படைத்தலைவர் ஏராளம்! ஏராளம்!. அதனைப் போன்றே நம் ராஜேந்திரனது காலத்தில் தோன்றினோர் பலராவர். ராஜேந்திரனது காலத்தில் பெருந்தொண்டு புரிந்து புகழ் பூத்த அலுவலர், சிற்றரசர், படைத்தலைவர் குறித்து ஈண்டு ஒரு சிறிது காண்போம்.

மன்னனது ஆணையின்படியொழுகி நாட்டு நலன் கருதிப்பல்லாற்றானுந் தொண்டு புரிந்தோர் பலர் இருப்பினும் அவர்களது வரலாறு பற்றித் தெளிவான குறிப்புகள் நமக்குக் கிடைத்தில். கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிக்கப் பெற்றுள்ள ஒரு சில அலுவலர்களைப் பற்றி, இங்கு நாம் காணலாம். இவர்களது முழு வரலாற்றினையும் நாம் அறிந்து கொள்ளத்தகுந்த ஆதாரங்கள் இல்லாமையின் அவர்களைப்பற்றிய சில செய்திகளை மட்டும் ஈண்டு நாம் ஆய்வோம்.

வல்லவரையன் வந்தியத்தேவன்

வல்லவரையன் வந்தியத் தேவன் முதலாம் ராஜராஜ சோழனின் தமக்கையான, குந்தவைப் பிராட்டியின் கணவன் ஆவன். இதனால், இவன் ராஜேந்திரனின் அத்தையின் கணவன் என்பது புலனாகும். இவன் சோழர்க்குச் சிறந்த படைத்தலைவனாயிருந்து அரும்பணியாற்றினான். இவன் நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் தலைமைப் படைத்தலைவனாகப் (மாதண்டநாயகன்) பெரும்பணி புரிந்தான், பொதுவாக அக்காலத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே மாதண்டநாயகராக நியமிக்கப்படுதல் வழக்கமாயிருந்தது.

இவன் கீழைச்சாளுக்கிய குலத்தைச் சார்ந்தவனாயினும், தன் மனைவியுடன் சோழநாட்டிலேயே தங்கிச்சோழர்களின்

முன்னேற்றத்தில் அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்தான். இவன் வடஆர்க்காடு மாவட்டத்தின்கண் உள்ள, பிரம்மதேசம் என்னும் ஊரைச்சூழ்ந்த பகுதியினைச் சிற்றரசனாக இருந்து ஆண்டு வந்தான். சோழப் பெருமன்னனின் சாமந்தர்களுள் இவனே முதன்மையானவன். ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் மன்னனுக்கு உறுதுணையாக, ஊன்றுகோலாக விளங்கியவர்களுள் வல்லவரையன் வந்தியத்தேவனும் ஒருவனாவான். இவனது ஆட்சிப்பகுதி சேலம் மாவட்டம்வரை பரவியிருந்ததாகக் கல்வெட்டுச்சான்று பகர்கின்றது. சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி அக்காலத்தில் வல்லவரையர் நாடு என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது. நம் ராஜேந்திரன் இவன்பால் பேரன்பு கொண்டவனாக விளங்கினான்.

அரையன் ராஜராஜன்

விக்கிரம சோழ சோழியவரையனாகிய அரையன் ராஜராஜன் எனப்படுபவன். நம் ராஜேந்திரனின் படைத்தலைவர்களுள் பெருவீரமும், அஞ்சாநெஞ்சமும், வெற்றிச் சிறப்பும் வாய்க்கப் பெற்றவருள் முதன்மையாக வைத்து மதிக்கத்தக்கவன் இவனேயாவன். சோழப்பெரும்படையினை நடத்திச்சென்று மேலைச்சாளுக் கியரையும், கீழைச்சாளுக்கியரையும் வென்றடக்கி அவர்களுடைய நாடுகளில் சோழர்தம் புலிக்கொடியை ஓங்கிப்பறக்கவிட்டவன் இவனேயாவன். இவனது வருகையினைக்கேட்டவுடனேயே வேங்கி நாட்டு மன்னனும் போர் வீரர்களும் பரிதியைக் கண்டபனி போல் ஓடி ஒளிந்தனர் என்பதனால் இவருடைய போர்த்திறனையும், ஆற்றலினையும் அறியலாம். இச்செய்தி கல்வெட்டுச் சான்றுகளால் இனிது விளங்குகின்றது.

சோழப்பெருமன்னர்களின் தீராப் பகைவர்களான, மேலைச் சாளுக்கியர்களை அடக்கி ஒடுக்கும் பொருட்டு, நம் ராஜேந்தி ரனால் அனுப்பப்பட்ட படைத்தலைவன் இவனே யாவன் என்பதால் இவன்மீது நம் மன்னன் கொண்டிருந்த பெருமதிப்

பினையும், நம்பிக்கையினையும் இனிதறியலாம். ராஜேந்திரனது கங்கைப்படை யெழுச்சியின்போது படைத்தலைமையேற்றுப் படைநடத்திச் சென்றவன் இவனேயாதல் வேண்டுமென்பதனை நாம் முன்பே கண்டோம். பெருவெற்றி வீரனாகத் திகழ்ந்து பெரும்புகழ் ஈட்டிய இவன் தனது பெறற்கரிய வெற்றியின் அடையாளமாக எதிர்த்தவர். காலன், நால்மடி பீமன், சோழசக்கரன், சாமந்தாபாணன், உபாரி நாராயணன், வீரபூஷணம், வீரவீமன் எண்ணும் தோரணையான பட்டங்களுடையவனாகப் பெயரும் புகழும் பெற்று விளங்குகின்றன.ராஜேந்திரனது பத்தாம் ஆட்சி யாண்டினதாகிய அனந்தபுரம் மாவட்டம் கொத்தசிவரம் ஊர் ஆஞ்சநேயர் கோயில்தூணில் வரையப்பெற்றுள்ள கன்னடசா சனத்தில் இவனுடைய வெற்றிகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

கொத்தசிவரத்துக்கும் பாதசிவரம் என்ற ஊருக்குமிடையேயுள்ள சிவன் கோவிலில் உள்ள கீழ்க்கண்ட சாசனப்பகுதி இவனது புகழ்பாடுவதைக் காணலாம்.

'கலிங்கரையு மொட்டரையுங் கட்டழித்துக் கைவேற்
றெலிங்கரையுஞ் சேண்விசும்பிற் சேர்த்திக் கொலிங்கரையும்
போரழித்து வாய்த்தனவே போர்ச்சோ ழியவரையன்
கார்முகத்து வாய்த்த கணை'
'வேயோடு கானதரில் வீழ்செருநர் தோல்பிடித்துப்
பேயோடு பேயுறங்கும் பெற்றித்தே - போயோடி
நான்மடிவீ மற்குடைந்த நாமப் படைத்தெலுங்கர்
கான்மடிவீ மட்டுலருங் காடு'

ராஜேந்திர சோழனின் படைத்தலைவர்களுள் ஆற்றலும், ஆண்மையும் மிக்கவன் இவனேயாவான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

இவன் சோழமண்டலத்தின்கண் உள்ள திரைமூர் நாட்டிலுள்ள

சாத்தமங்கலத்தில் பிறந்தவனாவன். இவனது பெயரில் 'அரையன்' என்ற சொல்லிருத்தலின் இவன் முத்தரையர் குலத்துதித்தோன் எனச்சிலர் கருதுகின்றனர். ராஜேந்திரனது பத்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் இவனைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவன் முதலாம் ராஜராஜன் ஆட்சிக் காலம்முதல், சோழர் படைத்தலைவனாகப் பணிபுரிந்து நம் ராஜேந்திரனது ஆட்சித் தொடக்கக் காலத்திலும் படைத் தலைவனாகப் பணிபுரிந்தான். மேலைச்சாளுக்கிய மன்னன் செய்சிங்கினைப் போரில் வென்று, புகழ்பூத்த படைத்தலைவன் இவனேயாவன். வீரத்தின் பிறப்பிடமாய், வெற்றியின் இருப்பிடமாய்த் திகழ்ந்த இவன், நம் ராஜேந்திரனின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவன் என்பது வியப்பிற்குரியதன்று.

கிருஷ்ணன் ராமன்

ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் படைத்தலைவனாகப் போற்றத்தகுந்த முறையில் பணியாற்றிய இவனும் முதலாம் ராஜராஜன் காலத்தவன் ஆவன். இவன் ராஜராஜ சோழனது ஆணைப்படி தஞ்சைப்பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகை எடுப்பித்தவன் என்பதனை 'ஸ்ரீ ராஜ ராஜதேவர் திருவாய் மொழிந்தருள், இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தவன் சேனாதிபதி கிருட்டிணன் ராமனான மும்முடிச்சோழ பிரம்ம மாராயன்' எனத் தஞ்சைக் கோயிலின் தென்புறத்தில் இரண்டிடத்தும் மேற்புறத்தும் ஓரிடத்திலும் திருச்சுற்றாலையிலும் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுச் செய்தியாலறியலாம்.

ராஜராஜனது ஆட்சிக்காலத்தில் இவன் மும்முடிச்சோழ பிரம்மாராயன் எனும் பட்டத்தினைப்பெற்றான். நம் ராஜேந் திரனது ஆட்சிக்காலத்தில் ராஜேந்திர சோழ பிரம்மாராயன் என்ற பட்டத்தினைப் பெற்றான். இதனால், மன்னன் தனது விருதுப்பெயரினைச் செயற்கரிய செயல் புரியும் அதிகாரிகளுக்கு இடுதல் வழக்கமென்பதனை இனிது

அறியலாம். இவன் நம்வேந்தனது ஆட்சிக்கால முழுவதும் படைத்தலைவனாகப் பணியாற்றியிருத்தல் வேண்டுமென்பதைக் கி.பி. 1044இல் விடுத்த ராஜேந்திரனது கல்வெட்டில் இவனது பெயர்குறிக்கப் பெற்றிருத்தல் அறியலாகும். எனவே, கிருட்டிண இராமனான மும்முடிச் சோழப் பிரம்மாராயன் நம் ராஜேந்திரனின் போர் நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு பெற்றான் என்பது விளங்கும்.

மாராயன் அருண்மொழி

இவன் நம் ராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் அரசியல் தலைவ னாகப் பெரும்பணியாற்றியவனாவன். இவனது அருந்தொண் டினைப் பாராட்டும் வகையில் ராஜேந்திரன் இவனுக்கு உத்தம சோழ பிரம்மாராயன் எனும் விருதினை வழங்கினான். எனவே, இவன் மாராயன் அருண்மொழியான் உத்தமசோழ பிரம்மாராயன் என அழைக்கப்பெற்றான்.

இவன், மேலை குறிப்பிடப்பெற்ற கிருட்டிணன் இராமன் எனும் படைத்தலைவனின் அருமந்தமகனாவான். இவன் தன் தந்தையைப்போன்று ராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியவனாவன். இவன் பிரம்மாராயன் எனப்படுவதால் அந்தணர் குலத்தில் தோன்றியவன் எனக்கருதலாம். இவன் ராஜேந்திர சோழனின் கட்டளைக்கிணங்கக் கங்கபாடி நாட்டின்கண் உள்ள குவலாள புரத்தில் (கோலார்) கி.பி. 1033ஆம் ஆண்டில் பிடாரி கோயில் ஒன்றை எடுப்பித்தான்.

ஈராயிரவன் பல்லவனான உத்தம சோழப் பல்லவரையன்

இவன் முதலாம் ராஜராஜ சோழனது ஆட்சிக்கால முதற்கொண்டே அரசியற் பணிகளில் பங்குகொண்டு, நல்லதேர்ச்சி பெற்றவனாவன். நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்திலும் பேரதிகாரிகளுள் ஒருவனாகப் பணியாற்றியபெருமைக்குரியவன் இவனாகும்.

இவன் சோழநாட்டின் கண் உள்ள பாம்புணிக்கூற்றத்துள் அடங்கிய அரசூரில் பிறந்தவனாவன். ஆனை மங்கலச்செப் பேடுகளில் குறிப்பிட்டுள்ள சோழ அரசியல் தலைவர்களுள் இவன் குறிப்பிடத்தக்கவனாவன். ராஜராஜன் காலத்திலேயே இவன் உயர் அதிகாரிகள் வரிசையில் இருந்தவன் என்பது போற்றுதற்குரியதாகும்.

ராஜராஜ பிரம்ம மகாராஜா என்ற பார்ப்பனப் படைத் தலைவனும் ராஜேந்திர சோழனது காலத்தில் படைத் தலைமை ஏற்றுப் புகழ்பெற்றான். கீழைச்சாளுக்கிய நாட்டின் மன்னனாகப் பதவியேற்ற விசயாதித்தனை, அரியணையிலிருந்து கீழேயிறக்கி ராஜராஜ நரேந்திரனைக் கீழைச்சாளுக்கிய மன்னனாக முடிசூடச் செய்ய உறுதிகொண்ட நம் ராஜேந்திரன், ராஜராஜ பிரம்ம மகாராஜாவின் தலைமையின்கீழ்ச் சோழப்படையினைக் கீழைச்சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

வேங்கிக்கருகில் களிநந்தி என்னுமிடத்தில் நிகழ்ந்த கடும்போரில் இவன் வியக்கத்தக்க முறையில் போர்புரிந்து, பகைவர்களை வெட்டி வீழ்த்தினான். இருப்பினும் இறுதியில் மாற்றானின் வேலால் குத்துண்டு வீரமரணம் செய்தினான். சோணாட்டிற்காக இறுதிவரை போரிட்டுத் தன் உயிரைத்தியாகம் செய்த இம்மா வீரனின் நினைவாக ஒரு கோயில் அமைக்கப்பட்டது.

உத்தமசோழன் கோன்

நம் ராஜேந்திரனுக்கு உறுதுணையாயிருந்த படைத்தலைவர்களுள் இவனும் ஒருவனாவன். ராஜராஜ பிரம்ம மகாராஜாவிற்குத் துணையாக இவனும் உத்தம சோழமிலாடுடையானும் கீழைச்சாளுக்கிய நாட்டிற்கு நம் மன்னனால் அனுப்பப்பட்டனர். இவர்கள் இருவரும் கடும்போர் புரிந்து போர்க்களத்தே வீரமரணம் எய்தினர். தமது உயிரினைத் துச்சமென மதித்துப்போர்க்களத்தே தமது உயிரைத் தியாகம் செய்த இவர்களது நினைவாகவும் கோயில்கள் எழுப்பப்பட்டன.

ராஜராஜ மாராயன், ராஜேந்திர சோழப்பல்லவராயன் ஆகிய இருபடைத் தலைவர்களும் நம் ராஜேந்திரன் ஆட்சிக்காலத்துப் படைநடத்திச்சென்று, அருஞ்சமர் புரிந்தனர் என்பது மகேந்திர மலையிலுள்ள கோகர்ணேசுவரர் திருக்கோயில் கல்வெட்டால் அறியப்படுகின்றது.

பாண்டியன் சீவல்லபன்

முதலாம் ராஜராஜனது ஆட்சிக்காலத்தே பாண்டியநாடு முழுமையும் சோழரது மேலாண்மையினை ஏற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தும், சுந்தர சோழ பாண்டியன் எனப்பெயர் பெற்ற தன் மகனால் பாண் டியநாடு ஆளப்பட்டு வந்தது என்பதனை நாம் முன்பே கண்டோம். இவனுடைய தேவி சோழ நாட்டின்கண் உள்ள திருவிசலூர்க் கோயிலுக்குப் பலவகையான விலையுயர்ந்த அணிகலன்கள் அளித்துள்ளமையாலும், இவன் நம் ராஜேந்திரன் ஆளுமைக்கு உட்ப்பட்டவனாதலாலும், இவன் சோழனுக்குத் திறை செலுத்திக்கொண்டிருந்த சிற்றரசனாவனெனக் கருதஇடமுண்டு.

உத்தமசோழ மிலாடுடையான்

இவன் ராஜேந்திரனின் ஆட்சிக்குட்பட்டு ஆட்சிசெலுத்தி வந்த குறுநில மன்னன். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்ட மலை நாட்டை ஆண்டு வந்தான். இவனது அரும்பணியினைப் பாராட்டி ராஜேந்திரன் தன் விருதுப்பெயரை இவனுக்களித்துச் சிறப்பித்தான்.

இவனது இயற்பெயர் பராந்தகன் யாதவவீமன். கீழைச்சாளுக்கிய நாட்டுக்கெதிராக அனுப்பப்பட்டு வீரமரணம் எய்திய உத்தமசோழ மிலாடுடையான் எனக்குறிக்கப்பெற்றவன் இவனாதல் வேண்டும். இவனைப்பற்றிய பிற செய்திகள் யாதும் கிடைத்தில.

கங்கை கொண்ட சோழ மிலாடுடையான்

இவனும் மேலே கூறப்பட்ட மலையமானாட்டை ஆட்சிபுரிந்த குறுநில மன்னனாவான். இவன் உத்தம சோழ மிலாடுடையானுக்குப் பின்னர் மலையமானாட்டை ஆண்டுவந்தான். இவன் திருக்காளத்திக் கோயிலில் கார்த்திகை விளக்கீட்டிற்கு நிவந்தமாகப் பொன் வழங்கினான் என்பதனைக் கி.பி. 1024ஆம் ஆண்டு வெளியிட்ட திருக்காளத்திக் கல்வெட்டால் அறியலாகும். உத்தமசோழ மிலாடுடையானைப் போலவே இவனும் நம் ராஜேந்திரனின் மேலாண்மைக்குக் கீழ்ப்படிந்து அரசாண்டு, ராஜேந்திரனுக்குப் பெருந்துணை புரிந்தான்.

சத்திரிய சிகாமணி கொங்காள்வான்

இவன் நம் ராஜேந்திரனது ஆட்சிக்கடங்கிய நிலையில் குடகு நாட்டை ஆண்டு வந்த சிற்றரசனாவான். நம் வேந்தன் பகைவர் நாட்டின்மீது நிகழ்த்திய போர்களில் இவனும் படையுதவியளித்துக் கடும்போர் புரிந்தான். இவனது ஒப்பற்ற படைத்தலைமையினையும், பெருவீரத்தினையும் கண்ணுற்ற ராஜேந்திரன் இவனுக்குச் 'சத்திரிய சிகாமணி கொங்காள்வான்' என்னும் பட்டத்தினை யளித்துப் பாராட்டி நாட்டுரிமையும் வழங்கி மகிழ்ந்தான்.

இவனது இயற்பெயர் மணிஜா என்பதாகும். இவன் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்தான். இவன் முதலாம் ராஜராஜனது ஆட்சிக்காலத்திலும் சோழர்க்குப் பெருந்துணை புரிந்துவந்தான். ராஜேந்திரனது வெற்றிமேம் பாட்டிற்கு இச்சிற்றரசனும் உறுதுணையாய் இருந்தான் எனக்கொள்ளுதல் சாலப்பொருந்தும்.

சங்காள்வார்

மைசூர் மாவட்டத்தின்கண் உள்ள சங்கநாட்டில்ஆண்டு வந்த சங்காள்வார் மரபினரும் நம் ராஜேந்திரனது ஆட்சிக்குட்பட்டுத் திறை செலுத்துகின்ற சிற்றரசர்களாக இருந்தனர்.

சோழரது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு, சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்து வந்த கொங்காள்வார் சில காலம் கழித்தவுடன் தம்மைச் சோழர்தம் கால்வழியினர் எனக்கூறிக் கொண்டமை யோடமையாது, தம்மைக்கரிகாற் சோழன் மரபினர் எனவும், சிறப்பித்துக்கொண்டு தெலுங்குச் சோழர்களைப்போன்று பெருமைகொண்டனர். மேற்கூறியவற்றால் கொங்காள்வார் சோழமரபின்மீது கொண்டிருந்த பற்றினையும் ஈடுபாட்டினையும் நன்கு அறியலாம். மேற்கூறபட்ட அரசியல் அதிகாரிகள் படைத் தலைவர்களேயன்றி, நம் ராஜேந்திரனின் மைந்தர்களும் ஆட்சிப்பொறுப்பிலும், போர்ச்செயல்களிலும் பெருந்துணை புரிந்தனர் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும். இவர்களுள் முதலாம் ராஜாதிராஜன் குறிப்பிடத்தக்கவனாவான். இவன் கி.பி. 1018ஆம் ஆண்டில் இளவரசு பட்டம் பெற்றது முதல் அரசியல் துறையிலும், போர்த்துறையிலும் தன் தந்தைக்குப் பேருதவிபுரிந்து வந்தான்.

நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில், தலைமைப் படைத்தலைவனாக இவன் பதவியேற்றுப் பலபோர்க்களங்களில் பகைவர்களைப் பந்தாடிச் சோழர்களுக்கு வெற்றி தந்தவனாவன் என்பதனை நாம் மறக்க இயலாது. இவற்றுள் ராஜாதிராஜன் புரட்சிக்கொடி உயர்த்திக்கலகம் விளைவித்த பாண்டி வேந்தர் களான மூவரையும் வென்று, தன்னடிமைப்படுத்தியமையும், தனிஆட்சி பெறும் நோக்கத்துடன் சேரநாட்டின்கண் எழுந்த கலகத்தை அடக்கி ஒடுக்கியமையும், இரண்டாம் ஈழநாட்டுப்போரில் தன் வீரத்தினை நிலைநாட்டிப் புகழ்க்கொடி நாட்டியமையும், மேலைச்சாளுக்கிய நாட்டின்மீதும் படையெடுத்துச்சென்று அந்நாட்டின் வேந்தரான ஆகவ மல்லன் சோமேசுவானை வென்று கண்டப்பயன், கங்காதரன் ஆகிய படைத்தலைவர்களைப் போர்க்களத்திலே கொன்றமையும் இவனது பெருவீரத்தைப் பறைசாற்றுவதோடு தன் தந்தைக்கு எத்துணைப் பேருதவியாக விளங்கி, அரசியலையும் போர்

நிகழ்ச்சிகளையும் கவனித்து வந்தான் என்பதனையும் நன்கு விளங்கும். ராஜாதிராஜனது மெய்க்கீர்த்திப் பகுதியிலிருந்து, இவன் எவ்விதம் தன்னை உருவாக்கிய தந்தைக்குப் பேருதவி புரிந்தான் என்பதனைத் தெளிவாக அறியமுடிகிறது.

நம் ராஜேந்திரன் தன்தந்தையின் காலத்து இளவரசனாகவும், மாதண்ட நாயகனாகவும் இருந்து அரும்பணியாற்றியதைப் போல முதலாம் ராஜாதிராஜனும் நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் இளவரசனாகவும் மாதண்ட நாயகனாகவும் பெரும்பணி புரிந்து தந்தையின் நன்மதிப்பினையும், நம்பிக்கையினையும் பெற்றான்.

இவ்விதமாக ஆற்றலும், அறிவுக்கூர்மையும், நம்பிக்கையும், நாணயமும், கீழ்ப்படிதலும், கடமைஉணர்ச்சியும் கொண்ட சிற்றரசர்களின் பெருந்துணை கொண்டும், அரசியல் அலுவலர் களின் அயரா உழைப்பின் துணைகொண்டும், ராஜேந்திர சோழன் செம்மையாகச் செங்கோல் செலுத்தி நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு வழி கோலினான். மன்னன் மட்டும் தனித்து நின்று ஆட்சி புரிதல் என்பது இயலாத காரியம். அலுவலர்களும் சிற்றரசர்களும் ராஜேந்திர சோழனது ஆட்சியின் தூண்களாக விளங்கினர் என்பதனை ஈண்டு நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

13

கலைப் பணிகள்

ப ன்னூறு ஆண்டுகட்கு முன்பே, நம் தமிகழத்தில் கலையார்வம் சிறந்து விளங்கியதனை எண்ணிறந்த சான்றுகளாலறியலாம். கலை, கலைக்காக என்று கருதும் மேனாட்டாரைப் போலன்றித் தமிழக மக்கள் கலையினை வாழ்வினின்றும் பிரிக்க வொண்ணாத ஒன்றா கவே கருதினர்; அதை வாழ்வுக்குப் பயன்தரக் கூடியதாகவே எண்ணிக் கலையார்வம் கொண்டனர்; கலைகளில் தேர்ச்சி பெற்றனர்; சிலர் பல்கலை வல்லுநராகவும் திகழ்ந்தனர். ஒரு நாட்டின்கண் வாழும் மக்களனைவரும் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத்தேவைகளைக் குறைவறப் பெற்றால்தான் கலையில் ஆர்வம் செலுத்த இயலும் என்பது நினைவிற் கொள்ளத்தக்கதாகும். எனவே, சோழர் காலத்து மக்கள் எல்லா வளமும், நலமும் பெற்று இன்புற்று வாழ்ந்தனர் என்பது உறுதிபெறுகின்றது.

கலைமகளைத் தெய்வமாகக் கொண்டு விளங்குபவை 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்பது மரபு. இவை மன்னர்க்குரிய கலைகள், அந்தணர்க்குரிய கலைகள், வணிகர்க்குரிய கலைகள், வேளாளர்க்குரிய கலைகள், மகளிர்க்குரிய கலைகள், நுண்கலைகள், பொதுவான கலைகள் எனப்பல விதமாய்ப் பகுக்கப்பட்டிருந்தன.

கலைகள் வளர்ப்பதில் மன்னன் பேராதரவு நல்கினான். பல

மன்னர்களும் தாமே சிறந்த கலைஞர்களாகவும் விளங்கி மக்களுக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்ந்தனர். நம் சோழ வேந்தர்களுள் சிலர் கவிஞர்களாகவும், அறிஞர்களாகவும், இசைஞர்களாகவும் சிறந்து விளங்கினர். ராஜேந்திர சோழனும் தன்குல முன்னோர்களைப் போன்று கட்டடக் கலையிலும், சிற்பக்கலையிலும், ஓவியக் கலையிலும், இலக்கியக்கலையிலும் பேரார்வம் கொண்டு தலைக்காவலனாகவே மாறினான். ராஜேந்திரனது காலத்திய கட்டடக்கலை வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இன்றும் பேருருவுடன் நின்று நிலவி வரும் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கங்கை கொண்ட சோளேச்சரமே சான்றுபகரும். இவன் காலத்திய சிற்பக்கலையின் அற்புதத்திற்கும், இக்கங்கை கொண்ட சோளேச் சரமே சான்றுபகர்கிறது. ராஜேந்திரனது வெற்றி மேம்பாடுகளும், பரந்துவிரிந்த பேரரசும், என்றோ அழிந்துவிட்டபோதிலும், இவனது கலைப்பணியோ, இன்றும் இவனது புகழ்ப்பரணி பாடிக்கொண்டுள்ளது. கங்கை கொண்ட சோளேச்சரம் ஒரு சிற்பக்கூடமாகவே காட்சியளிப்பதனைக் காண்போர் உணர்வர்.

ராஜேந்திர சோழனது காலத்திய கலைச்சிறப்பினை ஆராயப் புகுமுன் அவனது காலத்தின் கலைக் கருவூலமாய்க் காணப்படும் கங்கை கொண்ட சோழபுரமென்னும் தலைநகரத்தைப் பற்றியும், அவனது இறையன்பின் இலக்கியமாகத் திகழும் கங்கைகொண்ட சோளேச்சரத்தைப்பற்றியும் தனித்தனியே காண்போம்.

கங்கைகொண்ட சோழபுரம்

இது முதலாம் ராஜேந்திரனால், தனது கங்கைப் படையெழுச்சிக்குப் பின் அமைக்கப்பட்ட புதிய தலைநகரமாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் இப்பொழுது இஃது ஒரு சிற்றூராகத் திகழ்கிறது. கொள்ளிடத்திலுள்ள கீழணைக்கட்டிலிருந்து ஐந்து கல்

தொலைவில் அமைந்துள்ள இந்நகர், பிற்காலச் சோழ மன்னர்களின் தலைநகரமாக ஏறத்தாழ 240 ஆண்டுகள் சிறப்புடன் விளங்கிய பெருமையுடையதாகும்.

பெறற்கரிய பெருவெற்றி பெற்ற பெருமன்னர்கள், தங்களது வெற்றி என்றும் நின்று நிலவுமாறு, புதியதாக நகர் ஒன்றினை அமைத்து, அதற்குத் தன் பெயரிடுதல் வழக்கமாகும். உலகம் போற்றும் மாவீரனான அலெக்சாண்டர் தன் வியத்தகு எகிப்து வெற்றியின் சின்னமாக 'அலெக்சாண்ட்ரியா' என்னும் புதியதொரு நகரினைத் தன் பெயரால் நிறுவினான். நம் ராஜேந்திரனும், வடநாடுசென்று, பகைவர்களை வென்று, பெருமை கொண்டதன் அறிகுறியாகவும் கங்கை நீரைக் கொண்டுவந்ததன் அடையாள மாகவும்தான் அமைத்த புதிய நகரத்துக்குக் கங்கைகொண்ட சோழன் என்ற தனது வெற்றிப் பெயர் என்றென்றும் பொன்றாது நின்று நிலைக்கும் பொருட்டுக் 'கங்கைகொண்ட சோழபுரம்' எனப்பெயரிட்டான்.

உத்தர கைலாசம் (அம்மன் கோயில்)

கோபுரம்

கங்காதரர்

இவ்வெற்றித் திருநகர் 'கங்காபுரி' என்றும் 'கங்கா புரம்' என்றும் புலவர் பெருமக்களால் போற்றப்பெற்றுள்ளது.

'கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு

கங்கா புரிபுரந்த கற்பம்

என்று ஒட்டக்கூத்தர் குறிப்பிடுவதாலும்,

கங்கா புரியின் மதிற்புறத்துக் கருதார் சிரம்போய் மிகவீழ

இங்கே தலையின் வேல்பாய்ந்த இவைமூ ழைகளாக் கொள்ளீரே

என்று செயங்கொண்டார் குறிப்பிடுவதாலும்,

பெரும்புனற்றனாது கங்கை மாநகர் தைத்தபின்

என்று வீர ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி குறிப்பிடுவதனாலும்,

வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து

மண்குளிரச் சாயல் வளர்க்குமாம்-தண்கவிகைக்

கொங்கா ரலங்கல் அனபாயன குளிர்பொழில்சூழ்

கங்காபுரமாளிகை.

என்று தண்டியலங்கார மேற்கோள் செய்யுளில் குறிப்பிட்டுள் ளதாலும், உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்துத் தேவாரத்துச் சுற்றுக்கல்லூரியில் தானஞ் செய்து அருளாயிருந்து.

'உடையார் ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்குயாண்டு அஞ்சாவது கங்கை கொண்ட சோழபுரத்துச் சோழ கேரளன் திருமாளிகையில் ராஜேந்திர சோழ மாவலி வான ராஜனில் எழுந்தருளியிருந்து'

'கங்கை கொண்ட சோழபுரத்து முடி கொண்ட சோழன் திருமாளிகையிலாதி பூமியின் கீழைச்சோபனத்துப் பள்ளிக்கட்டிலில் எழுந்தருளியிருந்து.

'கங்கைகொண்ட சோழபுரத்துக்கங்கை கொண்ட சோழன் திருக்கொற்ற வாசலில் புறவாயில் சேநாதிபதி, இளங்காரிக் குடையான் சங்கரன் அம்பலங் கோயில் கொண்டாநாந அநந்தபாலர் பெருந்திருவாட்டி என்று செய்த அறச்சாலைக்கு' 'கங்கை கொண்ட சோழபுரத்து வீட்டிலுள்ளால் குளிக்கமாடத்துத் தானஞ் செய்தருளாயிருந்து' 'ராஜேந்திர தேவன் கங்கை கொண்ட சோழபுரத்துக் கேரளன் மாளிகையில்சோபானகாடு வெட்டியில் எழுந்தருளி' 'வைதும்ப அரசனை இருந்தலை அரிந்து பெரும் புனற்றன்னாடு கங்கை மாநகர்த் தெய்தபின் திங்களில்'

'ஜயத் திருவுடன் கங்காபுரி புகுந்தருளி' என்னும் மேற்கூறிய கல்வெட்டுப் பகுதிகளாலும் கங்கைகொண்ட சோழபுரம் மாபெரும் நகரமாய்த் திகழ்ந்தது என்பது விளங்கும்.

பிற்காலச் சோழ மன்னர்களின் தலைநகராகத் தொடர்ந்து நீடித்த இப்பெருநகர் முடிகொண்ட சோழன் திருமாளிகை, சோழ கேரளன் திருமாளிகை, கேரளன் திருமாளிகை, வீரசோழன் திருமாளிகை போன்ற பல அழகிய மாளிகைகளைத்

தன்னகத்தே கொண்ட பரந்தபட்ட நகராகக் காட்சியளித்தது என்பதையும் மேற்கூறிய சாசனப்பகுதிகளால் அறியலாம்.

இந்நகரின் நடுவில் தன் தந்தை ராஜராஜன் அமைத்த தஞ்சைப்பெருவுடையார் கோயிலைப்போலவே தானும் 'கங்கைகொண்ட சோளேச்சுரம்' என்னும் பேரழகு மிக்க கோவிலைக் கட்டினான்; 'சோழ கங்கம்' என்னும் மிகப்பெரிய ஏரியையும் வெட்டினான். இக்கோவிலும், ஏரியும் கங்கை கொண்ட சோழபுரத்தின் அணியெனத்திகழ்ந்தன. இவன் இவ்வழகிய நகரின் நான்கு புறங்களிலும் நான்கு காளிகளை எல்லைத்தெய்வங்களாக நிறுத்தினான்.

இக்காளி கோவில்கள் இன்றும் இந்நகரின் எல்லைப்புறங்களில் உள்ளன. மேற்குவாயில் காளிகோவில் மூன்று கல் தொலைவிலும், கிழக்கு வாயில் காளி கோவில் இரண்டு கல் தொலைவிலும், வடக்கு வாயில் காளிகோயில் இரண்டு கல் தொலைவிலும், தெற்கு வாயில் காளிகோவில் இரண்டு கல் தொலைவிலும் அமைந்திருந்தன. வடக்கு வாயில் கோயில் சலுப்பை என்னும் சிற்றூரிலும், தெற்கு வாயில் கோயில் வீரரெட்டி தெரு என்னும் சிற்றூரின் அருகிலும் இருந்தன. இச்சிற்றூரில் தான் தீர்த்தக் குளமும் இருந்தது. இக்குறிப்புகளால், ராஜேந்திரனால் அமைக்கப்பட்ட பண்டை நகரம், ஏறத்தாழ நான்கு கல் சதுர அமைப்புடையதாக இருந்திருக்க வேண்டுமென்று கருத இடமுண்டு.

கங்கை கொண்ட சோளேச்சுரத்தைச் சுற்றிலும் இரண்டுகல் தொலைவிற்குள் அமைந்துள்ள சிற்றூர்களையும், அவைகளின் பெயர்க் காரணங்களையும் நாம் ஆய்ந்து பார்த்தால் அந்நகரின் சிறப்பினையும் பெருமையினையும் தெளிவாக அறியமுடியும், உட்கோட்டை, சுண்ணாம்புக்குழி, மாளிகைமேடு, ஆயிரக்கலம், செங்கல்மேடு, மெய்க்காவல் புத்தூர், கணக்குவிநாயகர் கோயில், குருகை பாலப்பன் கோயில், வீரசோழ புரம், வாண தரையன் குப்பம், குயவன் பேட்டை, தொட்டிக் குளம்,

பொன்னேரி, பள்ளி ஓடை, சலுப்பை, செம்மேடு, சப்போடை, முத்துச்சிலம்பாபுரம், மண்மலை, பாகல் மேடு, தேர்மேடு, கழனிகுளம், கொல்லாபுரம் போன்ற இடங்கள் இக்கோவிலைச் சுற்றிக் காணப்படுகின்றன.

இவையனைத்தும் பண்டைக்காலத்தில் ஒரே நகரின் பகுதிகளாக அமைந்திருந்ததால் அந்நகர் பெருநகராக விளங்கியது. இக்கோவிலிலிருந்து ஏழு கல் தொலைவில் பரணைமேடு என்னும் சிற்றூர் உளது. அவ்வூரிலிருந்து கோவில்வரை பருத்தி மூட்டைகளையடுக்கி, நீண்ட பரணைக் கட்டிக்கோயிலின் உச்சிக்கு விமானக்கல் கொண்டு செல்லப்பட்டது என்று அவ்வூர் முதியவர்கள் கூறுகின்றனர்.

இது தஞ்சையருகிலுள்ள சாரப்பள்ளம் என்னும் சிற்றூரிலிருந்து நீண்ட சாரம் கட்டித் தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்கு விமானக்கல் கொண்டு சென்றதை நமக்கு நினைவூட்டுகிறது.

உட் கோட்டை

இது தற்போது, ஏறத்தாழ இருநூற்றைம்பது வீடுகளைக் கொண்ட சிற்றூராய்க் காணப்படுகிறது. இதுவே கோட்டை இருந்த இடமாகக் கூறப்படுகிறது. இவ்வூர் மக்கள் இதை உக்கோடை என அழைக்கின்றனர். இங்குத் தற்போது ஓர் உயர்நிலைப்பள்ளியும் உள்ளது.

மாளிகைமேடு

மாளிகைமேடு என்பது சோழ மன்னர்களின் மாளிகை இருந்த இடமாகும். இன்று இவ்விடம் வயலாகக் காணப்படுகிறது. இது உட்கோட்டைக்கு மேற்கில் அமைந்துள்ளது. இப்பகுதியில் உடைந்த மட்பாண்ட ஓடுகளும், காறைக் கலப்புள்ள செங்கற் சிதைவுகளும் காணப்படுவதால் இவ்விடத்தில் முன்பு அரண்மனை இருந்தது என்பது உறுதி பெறுகின்றது. இம்மாளிகை மேட்டில், தோண்டியெடுக்கப்பட்ட கற்றூண்கள்

புதுச்சாவடிக் குளத்தின் படிக்கட்டுகளாகப் பயன்படுத்தப்பட்டனவாம். மாளிகைமேடு கிழக்கு மேற்கில் ஒரு கல்நீளமும், தெற்கு வடக்கில் ஒன்றரைக் கல் நீளமும் கொண்டதாகும். இப்பெருமாளிகை பல பகுதிகளாகத் தடுக்கப்பட்டிருந்தது. இம்மேட்டின் கிழக்கில் ஒரு நீளமான செங்கற் சுவர் இன்றும் காணப்படுகிறது. இங்குக் காணப்படும் செங்கல் 15 அங்குல நீளமும் 8 அங்குல அகலமும், 4 அங்குல கனமும் கொண்டதாகும். இங்குக் கல்லாலான மதகின் சிதைவுகள் காணப்பெறுதலின், அரண்மனையிலிருந்து கழிவுநீர் செல்லவும், மழைநீர் செல்லவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று அறியலாம்.

கோயிலுக்குப் பின்புறம் காணப்படும் ஓடை தற்காலத்தில் கட்டப்பட்டதாகும். அதன் இருபுறமும் காணப்படும் இடிந்த செங்கற் சுவர்களின் சிதைவுகள் பண்டைக்காலத்தனவாகும். எனவே, இப்பரந்த மேட்டில்தான் முன்பு அரண்மனை கட்டப்பட்டிருந்தது என்பதனை உய்த்துணரலாம்.

சுண்ணாம்புக் குழி

இதுதான்அரண்மனை, கோயில், உள்கோட்டை, நந்தி மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான சுண்ணாம்பு தயாரித்த இடமாகும். எனவே, சுண்ணாம்பு தயாரிக்கப்பயன்பட்ட குழி சுண்ணாம்புக் குழி எனப்பட்டது பொருத்தமே.

மெய்க்காவல் புத்தூர்

கங்கைகொண்ட சோளேச்சுரத்திற்கு மெய்க்காவல் செய்த வீரர்கள் வாழ்ந்த இடம் மெய்க்காவல் புத்தூர் ஆகும். மன்னனுக்கு மெய்க்காவல் புரிந்தோரும் இங்குதான் வசித்திருக்கக்கூடும்.

ஆயிரக் கலம்

இஃது உட்கோட்டைக்கு அருகில் போர்ப்படை ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடமாதலின் ஆயுதக் கலம் என

அழைக்கப்பட்டது. இது தற்காலத்தில் ஆயிரக் கலம் என்னும் பெயருடன் ஒரு சிற்றூராக விளங்குகிறது. ஆயுதக் கலமென்பது ஆயிரக் கலமென்று மருவி வழங்குவதாயிற்று.

வாணதரையன் குப்பம்

இது கோவிலுக்குத் தெற்கேயுள்ள ஒரு சிற்றூராகும். இது முதலாம் குலோத்துங்க சோழன் படைத்தலைவனாகிய வாண கோவரையன் தங்கியிருந்த இடமாகும். இது வானவேடிக்கை நிகழ்த்துதற்குத் தேவையான வானவெடிகள் உற்பத்தி செய்யும் வானர்கள் வாழ்ந்த இடமென்றும் சிலர் கூறுகின்றனர். இஃது இன்று 'வானடுப்பு' எனப்படுகிறது.

வீரரெட்டி தெரு

இது கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள சிற்றூராகும். இங்குச் சோழ வீரர்கள் தங்கியிருந்ததால் இது வீரரெட்டி தெரு என அழைக்கப்பட்டது.

செங்கல்மேடு

கங்கைகொண்ட சோழேச்சுரம், அரண்மனை, உள்கோட்டை ஆகிய கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான செங்கற்கள் அறுக்கப்பட்ட இடம் செங்கல்மேடு என்னும் பெயரால் அழைக்கப்பெறுகின்றது.

கணக்கு விநாயகர் கோயில்

இதுபற்றி ஒரு கதை இப்பகுதி மக்களால் பல்லாண்டு காலமாகப் பேசப்பட்டு வருகிறது. கங்கைகொண்ட சோழேச்சுரம் கட்டுவதற்கான செலவுக்கணக்கினைக் குறித்து வைப்பதற்காக நியமிக்கப்பட்ட கணக்கன், கங்கைகொண்ட சோழேச்சுரத்தான்மீது பெரும்பக்தி கொண்டு கணக்கெழுதுவதனை மறந்தான். மன்னன் ஒரு நாள் கணக்கனை அழைத்துக் கோவில்கட்டுவதற்காகிய செலவுக் கணக்கினைப் படிக்கச் சொன்னான். கணக்கன் விழித்தான்; ஆண்டவனிடம் தனக்கு உதவும்படி வேண்டினான்; ஆண்டவன்

அருள் புரிந்தான்; வினாயகரே நேரில் வந்து மன்னவன் ஏற்றுக்கொள்கின்ற முறையில் செலவுக்கணக்கினைப் படித்தார்.

இவ்வாறு செலவுக் கணக்கினைப் படித்த வினாயகருக்குக் கோயில் கட்டப்பெற்ற இடம் கணக்கு வினாயகர்கோவில் என்று அழைக்கப்பெற்றது.

குருகை பாலப்பன் கோயில்

இது குருகை காவலப்பன் கோயில் எனவும் அழைக்கப்பெறுகிறது. இச்சிற்றூர் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து அரைக்கல் தொலைவில் அமைந்துள்ளது. இங்குதான் ஸ்ரீநாதமுனிகள் அவதாரம் செய்தார் எனவும் கூறப்படுகின்றது.

தொட்டிகுளம்

இஃது ஒருபெரிய ஏரியாக இருந்தது.

தீர்த்தகுளம்

இங்குதான் புனித தெப்பக்குளம் இருந்தது. தெப்பத்திருவிழா இங்குச் சிறப்பாக நடைபெற்றது.

தேர்மேடு

கோயில் தேர் நிறுத்தப்பட்டிருந்த இடம் தேர்மேடு என்று அழைக்கப்பெற்றது.

குயவன்பேட்டை

மண்பாண்டம் செய்யும் குயவர்கள் வாழ்ந்த பகுதி குயவன் பேட்டையென வழங்கப்பெற்றது.

மீன்சுருட்டி

கங்கைகொண்ட சோழபுரத்தருகில் மீன்சுருட்டி என்ற ஊர் ஒன்று உள்ளது. இவ்வூர்ப் பெயர்க்காரணம் பற்றியும் ஒரு செவிவழிச் செய்தி கூறப்படுகிறது. ராஜேந்திரன் தன் படைகளைக் கங்கைக்கரைக்கு அனுப்பிய பின்பு பாண்டியர்கள் சோழநாட்டின்மீது படையெடுத்துச் சோழபுரம் நோக்கிப்

புறப்பட்டனரென்றும், சோழப்படைகள் தயார் நிலையில் விழித்திருக்கவே பாண்டிய வீரர்கள் தங்கள் மீன்கொடிகளைச் சுருட்டிக் கொண்டோடியதால் மீன்சுருட்டி எனும் பெயர் பெற்றது என்றும் கூறுகின்றர்.

கோயிலுக்கும் மாளிகைமேட்டிற்கும் இடையில் உள்ள ஓடையில் செங்கற் சுவர்களுடைய நிலவறைப்பகுதி இன்றும் காணப்படுவதால், பண்டைக்காலத்தில் கோயிலையும் மாளிகைமேட்டையும் இணைக்கும் சுரங்கம் ஒன்றிருந்தது என்பதையறியலாம்.

இந்நகர அமைப்பினைத் தெளிவாக அறிந்துகொள்ளப்போதிய சான்றுகள் இல்லை. இது நான்கு கல் சதுரங்கொண்ட பெருநகரம் என்பதை முன்பே கண்டோம். சோழமாளிகை என்ற பெரிய அரண்மனை நகரின் நடுவன் அமைந்திருந்தது. இதில்சோழ கேரளன் திருமாளிகை, கேரளன் திருமாளிகை, முடிகொண்ட சோழன் திருமாளிகை, வீரசோழன் திருமாளிகை போன்ற பல மாளிகைகள் அடங்கியிருந்தன. அரண்மனை ஏவலாளர் தங்கியிருந்த பகுதி 'திருமஞ்சனத்தார் வேளம்' எனப்பட்டது. அரண்மனையைச்சுற்றி அமைச்சர், படைத்தலைவர் போன்ற அலுவலர் வாழத்தடுக்க வீடுகளைக்கொண்ட அகன்ற தெருக்கள் அமைந்திருந்தன. மக்கள் தேவையான பொருட்களை வாங்குவதற்கமைந்த பெரிய கடைத்தெருவும் அமைந்திருந்தன. அரச விருந்தினரும், வெளிநாட்டினரும் தங்குவதற்கெனத் தனிமாளிகைகளும், அங்கே அமைக்கப்பட்டிருந்தன. சுருங்கக்கூறின் ஒரு சிறந்த தலை நகருக்குத் தேவையான எல்லா அமைப்புகளையும் கங்கைகொண்ட சோழபுரம் பெற்றிருந்தது என்று கூறலாம்.

அங்கே காணப்பெறும் பாழடைந்த கட்டடச் சிதைவுகளின் துணைகொண்டு மேற்கூறிய நகர அமைப்பினை நாம் அறியலாம். கங்கைகொண்ட சோழபுரத்தில் அகழ்வாராய்ச்சி நடத்தப் பெற்றால்தான் பல அரிய உண்மைகள் நமக்குப்

புலனாகும். அதுவரையில் நகர அமைப்புப் பற்றித்தெளிவாக, விரிவாக நம்மால் அறிந்துகொள்ள இயலாது. இங்கே காணப்படும் அழிவுச் சின்னங்களைக்கொண்ட மேடுகளையும் அதைச்சுற்றிய காடுகளையும் நோக்கும்போது, பழைய பாபிலோன் நகர அடையாளங்களாக இருந்த மேடுகளே வரலாற்றாசிரியர்களின் மனக்கண்முன் காட்சிதருகின்றன.

கங்கைகொண்ட சோழபுரம் பூம்புகார், பழையாறை, தஞ்சைபோன்ற சோழர்களின் பழைய தலைநகரங்களுக்கு ஒப்பான அழகும், விரிவும், வசதியும் கொண்டிருந்தது என்பது உறுதி. கங்கைகொண்ட சோழன், தான் இளைஞனாயிருந்த காலை வாழ்ந்து வந்த, சோழ மன்னர்கள் முடி புனைந்துகொள்ளும் சிறப்பினைப் பெற்ற பெருநகராகிய பழையாறையைப் போல் ஓர் அழகிய நகரை அமைக்கவிழைந்ததால் கங்கைகொண்ட சோழபுரத்தை அமைத்திருக்கக்கூடும். ஏனெனில், பழையாறை நகரும் முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம், சோழமாளிகை, திருமேற்றளி, கோபிநாதபெருமாள் கோயில், ஆரியப்படையூர், புதுப்படையூர், பம்பைப்படையூர், மணப்படையூர், அரிச்சந்திரபுரம், தாராசுரம், நாதன்கோயில் ஆகிய ஊர்கள் சூழப்பெற்ற அழகிய பெருநகராகப் பழங்காலத்தில் விளங்கியது. கங்கைகொண்ட சோழபுரம் பழையாறை ஆகிய நகரங்களை நோக்குமிடத்து, நம் முன்னோர்கள் எத்துணைச்சிறப்பு மிக்க பெருநகரங்களை அமைத்திருந்தனர் என்ற உண்மை நமக்குப் புலனாகும். இதை எண்ணுந்தொறும், நாம் பெருமையும், பெருவியப்பும், பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் கொள்கிறோம். இன்று இசற்றூர்களாகக் காணப்பெறும் இந்நகரங்கள் பண்டைக் காலத்தில், ஒல்காச் சிறப்புப்பெற்ற பேரழகு வாய்ந்த மாநகரங்களாக விளங்கியிருந்தன.

பிற்காலச் சோழர்களுள் தலைசிறந்து விளங்கிய மாமன்னன் ராஜேந்திரன் காலத்தில் உருவாக்கப்பட்ட கங்கைகொண்ட

சோழபுரத்தின் பெருமையினையும், சிறப்பினையும் கண்ட நாம், அதன் தொன்மையினையும், காணுதல் இன்றியமையாததாகும். பெருமைசான்ற கங்கைகொண்ட சோழபுரம், இற்றைக்கு 948ஆண்டுகட்குமுன் கட்டப்பெற்றிருக்க வேண்டுமென்பது கல்வெட்டுகளால் உணர்த்தப்படுகிறது. முதலாம் ராஜேந்திரனின் பதினோராவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கல்வெட்டில் இவனது கங்கைப்படையெழுச்சி பற்றிக்குறிப்புகள் முதன் முதலாகக் காணப்பெறுகின்றன. இருப்பினும் இவனது பன்னி ரண்டாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட 'திருமன்னிவளர' என்ற அழகிய தொடக்கத்தைக்கொண்ட மெய்க்கீர்த்திப் பகுதியில் 'வெளிமலர்த் தீர்த்தத்து எறிபுனல் கங்கையின்' என்று கங்கை நீரினைக்கொண்டுவந்த செய்திகுறிக்கப் பெற்றுள்ளமையால் கி.பி. 1024இல் இந்நகரம் கங்கை கொண்ட சோழபுரம் எனப்பெயரிடப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கணியாகும். இவன் ஆட்சி எய்திய முதல் மூன்றாண்டுகள் முடிய, எவ்விதப்போர் நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளவில்லை என்பது இவன் காலத்திய கல்வெட்டுகளால் உறுதியாகிறது. எனவே, இம்மூன்றாண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில்தான் இவன் புதிய நகரத்தையும், புதிய கோயிலையும் கட்டியிருக்கவேண்டும். பின்னர் வடவேந்தர்களை வென்று, கங்கைநீரினைக் கொணர்ந்து, வெற்றிவிழாக் கொண்டாடிக் கங்கைகொண்ட சோழன் என்ற விருதினைப்பெற்ற நாளில் அதாவது கி.பி. 1024இல் இவனது தலைநகரத்திற்குக் கங்கைகொண்ட சோழபுரமென்றும், கோயிலுக்குக் கங்கைகொண்ட சோளேச்சுரம் என்றும்பெயரிடப்பட்டிருக்கவேண்டும்.

இந்நகர் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தில் தலைநகராக்கப் பெற்று இவனுக்குப் பின்னர் ஆண்ட முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், வீர ராஜேந்திரன், அதி ராஜேந்திரன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன்,

இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜராஜன், மூன்றாம் ராஜேந்திரன் போன்ற மன்னர்கள் காலங்களிலும் தொடர்ந்து தலைநகராய்ச் சிறப்புற்று விளங்கியது. எனவே, கங்கைகொண்ட சோழபுரம், இவனது கங்கைப் படையெழுச்சிக்குப்பின் அமைக்கப்பட்டு ஏறத்தாழ 240 ஆண்டுகள் தலைநகராய் விளங்கிய பெருஞ்சிறப்பிற்குரியதாகும். கங்கைகொண்ட சோழபுரம், சோழர் வரலாற்றில் தனிப்பெரும் பெருமை கொண்டது. சோழர் வரலாற்றில் விரிந்த, பரந்த பேரர சினையேற்படுத்திக் 'கடாரம் கொண்டான்' எனப்பெயர் பெறும் முதலாம் ராஜேந்திரன் சோழர்களின் பொற்காலத்தை உருவாக்கியதும் இந்நகரில்தான்; இரண்டாம் ராஜேந்திரன், முதற் குலோத்துங்கன் போன்ற பெருமன்னர்கள் புறநாட்டு மன்னர்களை வென்று, வெற்றிவிழாக் கொண்டாடிய பெருமைக்குரியதும் இந்நகரே; கலிங்கம்வென்ற காவலனாம் முதலாம் குலோத்துங்கன் செயங்கொண்டானாகத் தலைநகர் திரும்பிய காலை, அவைக்களப்புலவராகிய செயங்கொண்டாரைக் கண்டு தானும் சயங்கொண்டான் ஆயினேன் என்று கூறப்பாவலன் செயங்கொண்டானும் காவலன் செயங்கொண்டானைப் போற்றிக் 'கலிங்கத்துப்பரணி' பாடியதும் இந்நகரில்தான்; பாவேந்தன் ஒட்டக்கூத்தன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் ஆகிய சோழ மன்னர்களின் அருமை பெருமைகளைப் பாடிப்புகழ்ந்து 'மூவருலா' இயற்றியதும் இத்தண்டமிழ் நகரில்தான்; மூன்றாம் குலோத்துங்கன் சேக்கிழார் பெருமானைத்தில்லைக்கு அனுப்பித் திருத்தொண்டர் புராணத்தைப் பாடுமாறு செய்ததோடு நாடோறும் எவ்வளவு பாடல்கள் பாடப்பெற்றுள்ளன என்பதை ஆளனுப்பி அறிந்து வருமாறு செய்த புண்ணிய நகரும் இதுதான்; சோழ-சாளுக்கிய குலத்தோன்றலாக விளங்கிய முதலாம் குலோத்துங்கன் பிறந்து, வளர்ந்து, அரசாண்டு புதியவரலாறு சமைத்ததும் இவ்வணி

நகரில்தான்; சிற்பக் கலைக்கோர் முடிமணியாய்த் திகழ்ந்து, பேரெழில் வாய்ந்த சிற்பங்களைத் தன்னகத்தே கொண்ட கங்கைகொண்ட சோளேச்சுரம் நிலைபெற்றிருப்பதும் இக்கலை நகரிலேதான்; இந்தியாவிலேயே தலைசிறந்து விளங்கிய பேரேரியாகிய 'சோழகங்கம்' வளம் பல விளைத்ததும் இந்நகரில்தான்; கருவுக்குள் உருவாகும் சிசுவும்கூடக் கசிந்துருகும் அளவிற்குக் கருவூர்த்தேவர் கங்கைகொண்ட சோளேச்சரத்தான் மீது திரு விசைப்பா இசைத்ததும் இந்நகரில்தான்; பொங்குதமிழின் பெரும்புகழ் குன்றாது, குறையாடு, காத்தோம்பி வளர்க்கப்பட்டதும் இம்முத்தமிழ் நகரிலேதான்; தமிழையே பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டு, தன்னலம் கருதாது தரணிகாக்கப் பாராண்ட மன்னர்களும், செந்தமிழைச் சிந்தையிலே தேக்கிச்செஞ்சொற் கவிமழை பொழிவித்த கவிஞர் பெருமக்கள் வாழ்ந்ததும், வீழ்ந்ததும் இத்தீந்தமிழ் நகரிலேதான்.

செயங்கொண்ட சோழனான ராஜராஜன் தரணி போற்றும் தஞ்சையைத் தலைநகராய்க்கொண்டான் என்றும் தஞ்சையிலே 'ராஜராஜேச்சுரம்' என்ற பெருவுடையார் கோயிலைக்கட்டி அழியாப்புகழ் பெற்றான் என்றும் முன்பே கண்டோம். ஆனால், முதலாம் ராஜேந்திரனோ, தஞ்சையை விடுத்துத் தனது தலைநகரைக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான். இவன் தனது தலைநகரை மாற்றியதற்குரிய காரணங்கள் யாவை? என்பதையறியத் தகுந்த ஆதாரங்கள் காணப்பெறவில்லை. ராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தனது தலைநகரை மாற்றியமைக்குரிய காரணங்களாக 'கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்' திரு.வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகின்றார்.

'பிற்காலச் சோழ மன்னர்களுக்கு (விசயாயலயன் காலம் முதல், முதலாம் ராஜராஜன் காலம் முடிய) தலைநகராய்

விளங்கியிருந்த தஞ்சாவூர், பாண்டிய மன்னர்களுடைய எல்லைக்கு அருகில் இருந்தமையால், அம்மன்னர்கள் படையெடுத்து வந்து எளிதில் வென்றுவிடலாம் என்னும் கருத்துப்பற்றியும், தங்கள் குலதெய்வமாகிய தில்லைச் சிற்றம்பலத்து இறைவனை அடிக்கடி வந்து வழிபடுவதற்குக் கொள்ளிடப்பேராறு வெள்ளப்பெருக்குக் காலங்களில் பெருந்தடையாய் இருந்தமையாலும், இக்காலத்தில் கொள்ளிடப்பேராற்றுக்கு இருக்கும் கீழ் அணைக்கட்டு (Lower Anicut) அக்காலத்தில் இல்லாமையாலும், முதலாம் ராஜேந்திர சோழன் சோழ வளநாட்டின் உட்பகுதியாகிய கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக்கொண்டிருக்க வேண்டும்'

மேற்கூறிய காரணங்களேயன்றிக் கீழ்க்காணும் காரணங்களினாலும் ராஜேந்திரன் தனது தலைநகரினைக் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றியிருக்கலாம்.

1. தலைநகர், நாட்டின் நடுவிடத்தில் அமைந்திருப்பது நிர்வாகத்திற்கு நலம் பயக்குமாதலின், சோழநாட்டின் தென்பகுதியிலமைந்த தஞ்சையை விடுத்து நடுவண் அமைந்த கங்கைகொண்ட சோழபுரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும்.

2. தன் தந்தையைப் போலவே நானும் ஒரு பெருங்கோயிலைக் கட்டிப் புகழ்பெற வேண்டுமென்று விழைந்ததால், தலைநகரை மாற்றிக்கோயிலைக் கட்டியிருக்கலாம்.

3. பிற நாடுகளை வென்று தனது பேரரசினை விரிவுபடுத்த எண்ணிய ராஜேந்திரன் தன்படைகள் போர்க்காலங்களில் பல நதிகளைக்கடந்து செல்வது கடினமென உணர்ந்ததால், அவ்விடையூறுகளைக்களைய வேண்டித் தனது தலைநகரத்தினை மாற்றினான். இதனால், படைகள் காலதாமதமின்றி விரைவில் அண்டை நாடுகளின்மீது படையெடுக்க முடிந்தது.

4. விசயாலயன் ஆட்சிக்காலத்திலிருந்து, முதலாம் ராஜராஜன் காலம்வரை சோழநாட்டின் தலைநகராக விளங்கியது தஞ்சை. எனவே, புதுமையை விரும்பிய நம் ராஜேந்திரன், புதிய தலைநகர் ஒன்றனை அமைக்கவிரும்பியிருத்தல் வேண்டும்.

5. அரச குடும்பம் பழையாறையில் இருந்ததாலும் தான் இளமைக்காலத்தில் பழையாறை நகரில் வாழ்ந்ததாலும், அதற்கருகில் தலைநகர் இருக்க எண்ணிக் கங்கைகொண்ட சோழபுரத்தை ராஜேந்திரன் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். இவனது பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின்படி இவன் பழையாறை நகரிலிருந்து கொண்டு சில ஆணைகளைப் பிறப்பித்தான் என்பதும் ஈண்டு கவனிக்கத் தக்கதாகும். இதனைக் கூழம்பந்தல் கோயில் கல்வெட்டாலறியலாம்.

சோழ கங்கம்

ராஜேந்திரன் தனது கங்கைப்படையெழுச்சின் நினைவாகப் புதிய நகருக்குக் கங்கைகொண்ட சோழபுரமெனவும், கற்றளிக்கும் கங்கைகொண்ட சோளேச்சுரமெனவும் பெயரிட்டான் என்பதை முன்பே கண்டோம். இவ்வாறே தான் கட்டிய புதிய நகருக்குக் கங்கைகொண்ட சோழபுரமெனப் பெயரிட்டதோடு மட்டுமன்றித் தான்வெட்டிய புதிய ஏரிக்கும் சோழ-கங்கம் எனப்பெயரிட்டான். ராஜேந்திரனது படை, கங்கை சென்று கங்கைநீரைக் கொணர்ந்த செய்தியைத் திருவாலங்காட்டுச் செப்பேட்டிலுள்ள 109 முதல் 124 முடிய உள்ள வடமொழிப்பாடல்கள் விளக்குகின்றன. ராஜேந்திரன் தனது படையினை வடநாட்டிற்கு அனுப்பியதன் நோக்கமே கங்கை நீரைக்கொணர்ந்து தனது தலைநகரையும், கோயிலையும் தூய்மைப்படுத்தவேயாகும். தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் உள்ள திரைலோக்கி என்னும் ஊர்ச் சிவன்கோயில் கல்வெட்டில் 'ராஜேந்திர சோழன் கங்கைகொண்டு எழுந்தருளி நின்ற இடத்துத் திருவடி தொழுது' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் ராஜேந்திரன் கங்கை நீரைக்கொண்டு

வந்தசெய்தி உறுதிப்படுகிறது.

இவ்விதம் கொணர்ந்த புனித நீரைக்கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய ஏரி ஒன்றை வெட்டி அதில் அத்தூயநீரை ஊற்றி அதற்குச் சோழ கங்கம் எனப்பெயரிட்டான். இவ்வேரியைச் 'சலமயமான சயத்தம்பம்' அதாவது நீர் மயமான வெற்றித்தூண் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு புகழ்கின்றது.

இது கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மேற்கே சயங்கொண்ட சோழபுரம் செல்லும் பெருவழியில் இரண்டுகல் தொலைவில் உள்ளது. இது தற்காலத்தில் பொன்னேரி எனவும் அழைக்கப்படுகிறது. இஃது இப்பொழுது தூர்ந்து மேடாக இருக்கிறது. இது தெற்கு வடக்காக 16 கல் நீளமுடையது. உயர்ந்த கரைகளையுடையது. இந்த ஏரிக்கு நீர்கொண்டு வருவதற்குத் தென்புறத்தில் கொள்ளிடத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருந்தது; வடபுறத்திலும் வெள்ளாற்றிலிருந்து மற்றொரு கால்வாய் வழியாக ஏரிக்கு நீர்கொண்டு வரப்பட்டது. இக்கால்வாய்கள் இருந்தமைக்கு அறிகுறியாக இவற்றின் சுவர்கள் இன்றைக்கும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவ்வேரி முற்காலத்தில் கடல் போன்ற காட்சியை நல்கியிருக்கவேண்டும். இதன் தண்ணீரால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டு ஏராளமான தானியங்கள் விளைவிக்கப்பட்டன. இன்று தென்னார்க்காடு மாவட்டத்தில் பேரேரியாகக் காட்சி தருவதும், எழுபத்து நான்கு மதகுகளைக் கொண்டதுமான, வீராணம் ஏரி முற்காலத்தில் இப்பொன்னேரியின் வடிகாலாகவே அமைந்திருந்தது. திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு கோட்டங்களுக்கு இந்த ஏரியின் நீரே பயன்பட்டது.

இற்றை நாள் வரை, ஆராய்ச்சியாளர்கள் வடநாட்டில் மாளவதேசத்தில், போச மன்னனால் வெட்டப்பட்ட போசபுரத்து ஏரியே மிகவும் பெரியதும், சிறப்புமிக்கது மெனக்கருதி வந்தனர்.

போசபுரத்து ஏரியில் இரண்டு குன்றுகட்கு இடையில் அமைந்துள்ள பெரிய பள்ளத்தாக்கை அடைத்து அணைகட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்துள்ளனர். இது மிகவும் பெரிய ஏரியாக இருந்த போதிலும், இரண்டு குன்றுகட்கிடையில் அமைக்கப்பட்டுள்ளதால் இதனைக்கட்டுவது கடினமன்று. ஆனால், கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சோழகங்க ஏரியின் சிதைவுகளைக் காண்போர் பெருவியப்படைவர் என்பது உறுதி. ஏனெனில், மலைகளும், குன்றுகளும் இல்லாத சமவெளியில் பதினாறு கல்தொலைவுரை வலிமையான, உயரமான கரைகளைக் கட்டி, நீண்ட கால்வாய் வெட்டித்தண்ணீரைப் பள்ளத்தாக்கிலிருந்து மேட்டிற்குக் கொண்டு வந்து ஏரியில் தேக்கிவைத்தலென்பது எளிமையான செயலன்று.

பண்டைக் காலத்தில் இவ்வியத்தகு ஏரியினைக்கட்டும் பணியில் எத்துணைத் தோழர்கள் பச்சைக்குருதி பரிமாறி, ஓய்வு ஒழிச்சலின்றிச் சலியாது உழைத்து உழைத்து உருக்குலைந்தனர் என்பதை எண்ணும்போது, நம் நெஞ்சமெல்லாம் துணுக்குறுகின்றன. எனவே, போசபுரத்து ஏரியைவிட, இப்பொன்னேரியே மிகவும் சிறந்தது; போற்றத்தக்கது என்று அதைக்கண்டோர், இனிக்காண இருப்போர் கருதுவர் என்பது திண்ணம்.

போசபுரத்து ஏரியைக் கட்ட இயற்கை துணைபுரிந்தது; பொன்னேரியைக்கட்ட, கட்டுடல் வாய்த்த தொழிலாளர்களின் தோள்வலியும், மனவலியும் துணைபுரிந்தனவென்பதை வரலாறு உறுதிசெய்கிறது. இங்ஙனம் வளம்பல பெருக்கிய மக்கள் நல்வாழ்விற்குத் துணையாயமைந்த இந்த ஏரி, இன்று காட்டர்ந்த இடமாகக் கிடக்கிறது. இப்பாழடைந்த ஏரிதன் பெருமையிழந்து, பொலிவிழந்து, தன்பழமையை மட்டுமே உணர்த்திக்கிடப்பது வருந்துதற்குரியதே. பிற்காலத்தில் சோணாட்டின்மீது படையெடுத்த பகைஞர்கள்

இதனைப்பாழாக்கினர் என்ற ஒரு செய்திமரபாகக் கூறப்பட்டு வருகிறது.

ஏறத்தாழ இருபத்தாறு ஆண்டுகட்கு முன் அரசியலார் தெற்கு வடக்கில் மூன்று கல் நீளத்திற்கும், கிழக்கு மேற்கில் ஒரு கல் அகலத்திற்கும் இதனை அகழ்ந்து, ஆழப்படுத்திப் பெரியகரைகளைக்கட்டி நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் ஏரியாக அமைத்துள்ளனர். மழைபெய்யும்பொழுது, கருவாட்டு ஓடை என்னும் காட்டாறு வழியாகத் தண்ணீர் இவ்வேரியினுள் நிரம்புகிறது. இதைக்கொண்டு ஆயிரம் ஏக்கர் நிலம் வளம்பெறுகிறது. அரசினரின் இம்முயற்சி பாராடத்தக்கது. இருப்பினும், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல் செயற்கைக் கடலெனக் காட்சியளித்துப் பாலைநிலமெல்லாம் சோலைவனமாக மாற்றிய இப்பழமைமிக்க சோழகங்கம் இன்று சிறிய ஏரியாகக் காணப்பெறுகிறது.

இப்பழைய ஏரி முன்பிருந்த நிலைக்குப் புதுப்பிக்கப்பட்டுத் தன் பண்டை நிலையையெய்துமாயின், தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்பது உறுதி. நீலநெடுங் கடலென காட்சியளிக்கும் இப்பேரேரியால் ராஜேந்திர சோழனின் பெயரும் புகழும் மீண்டும் நிலைநாட்டப்பெறும். அவன் நாட்டிய நீர் மயமான வெற்றித்தூண் (சலமயமான சயத்தம்பம்) மறுபடியும் தமிழகத்தில் நிலைநாட்டப்பெறும். இதுவே, நாம் ராஜேந்திர சோழனுக்குச்செய்யும் கைம்மாறாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கங்கைகொண்ட சோளேச்சுரம்

கங்கைகொண்ட சோழனான ராஜேந்திரன் அமைத்த புதியநகரம் கங்கைகொண்ட சோழபுரம் எனப்பெயர் பெற்றாற்போல, அவன் கட்டிய புதிய கோயில் 'கங்கைகொண்ட சோளேச்சரம்' என்னும் பெயர் பெற்றது. இக்கற்றளி தஞ்சைப் பெருவுடையார்கோயில் அமைப்பிலேயே அமைக்கப்பெற்ற மாடக்கோயிலாகும். மாடக்கோயிலென்பது மாடிபோல்

அமைந்தகோயில். தஞ்சைப்பெருவுடையார் கோயிலைவிட இக்கோயில் தோற்றத்தில் சிறிதேயாயினும், சிற்பவேலைப்பாடுகளில் அதைவிட மேம்பட்டு விளங்குகின்றது. ஆறு கோபுரங்களைக் கொண்டு விளங்கிய இக்கோயில், நகரின் அழகுக்கு அழகு செய்வதாக அமைந்திருந்தது.

பெரும்பாலான கோயில்களின் அடிமட்டம் தரைமட்டத்தோடு ஆரம்பிக்கும். ஆனால், கங்கைகொண்ட சோளேச்சரத்தின் அடிமட்டமோ, தரையிலிருந்து இருபதடி உயரத்தில் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. கோயிலின் உபபீடமும் தரையிலிருந்து ஆறடி உயரத்தில் ஆரம்பமாகிறது. இவ்வுபபீடத்தில் பதுமவரி, குமுதவரி, யாளிவரி, பட்டியல்வரி, மற்றவரி போன்ற ஐந்துவரிகள் பெரியஅளவில் செய்யப்பட்டிருக்கின்றன. இதன்மீது கருப்பக் கிருகத்தின் சுற்றுச்சுவர் உயரமாக எழுப்பப்பட்டுள்ளது. இக்கருப்பக் கிரகத்தின்மீது ஒன்பது மாடங்கள் கொண்டபெரிய கூருருளைக் கோபுரம் வைக்கப்பெற்றுள்ளது.

விமானம்

கருப்பக் கிரகம் ஏறத்தாழ 240 அடி உயரம் இருக்கிறது. மேலேயுள்ள விமானமோ, 174அடி உயரம்கொண்டது. இது 100 அடிச் சதுரமாக அமைந்துள்ளது. இவ்விமானம் ஒன்பது அடுக்குகளைக் கொண்டது. இவற்றுள் முதல் இரண்டு அடுக்குகள் ஒன்றன்மீது ஒன்றாகவும், எஞ்சியவை மேலே செல்லச்செல்லச் சிறத்துச்சரிவாகவும் அமைந்துள்ளன. விமானத்தின் நாற் புறங்களிலும் வாயில்களும், மாடங்களும் பெரியனவாக அமைக்கப் பட்டுள்ளன.

விமானம் முழுவதிலும் அழகும் கவர்ச்சியும் மிக்க பதுமைகள் காட்சியளிக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள கோயில்களில் காணப்படும் விமானங்கள், செங்கல்லும் சுண்ணாம்பும் சேர்த்துக் கட்டப்பெற்றவையாகும். ஆனால், தஞ்சைப்பெருவுடையார் கோயிலும், கங்கைகொண்ட சோளேச்சுரமும் கருவறையிலிருந்து சிகரம் வரை கல்லால்

அமைக்கப்பட்டவையாகும். மேலும், இக்கோபுரங்களின் அடிப்பீடம் நாற்புறமும் ஒத்த சம சதுரமாக அமைக்கப்பெற்று, மேலே செல்லச்செல்ல எல்லாப் பக்கமும் குறுகி வந்து, உச்சியில் நான்கு பக்கங்களும் கூடிப்பொருந்துகின்ற இடத்தில், ஒரே கல்லாலான வட்டமான சிகரத்தைக்கொண்டுள்ளது. இச்சிகரத்தின் மீதுதான் ஒற்றைக்கலசம் வைக்கப்பெற்று அழகிய தோற்றுத்துடன் காணப்பெற்றது. அக்கலசம் இப்பொழுது காணப்பெறவில்லை.இப்பிரமாண்டமான அடிப்பீடத்தின் அகலத்திற்கேற்ற கோபுரம், எழுப்பப்பட்ட வேண்டுமெனில் அத்துணையுயர்ந்த கோபுரத்திற்குக் கற்களை மேலெடுத்துச்செல்வதென்பது கடினமான செயலாகும். எனவே, இக்கோயில் கோபுரம், தஞ்சைப்பெருவுடையார் கோயில் போன்று அதிகமான உயரத்தில் அமைக்கப்பெறவில்லை.

மேலும், இக்கோயிலின் அடிப்பீடம் அமைத்த மாபெரும் சிற்பி இறந்துவிட்டதால் அவன் மகன் இதைத்தொடர்ந்து கட்டிமுடித்தான் என்று கூறப்படுகிறது. கற்களை மேலே கொண்டு செல்லக் கோயிலைச் சுற்றி மண்மேடிட்டு, அதன்மீது சாரக்கட்டைகளைப் பரப்பிச் சாரம் அமைத்ததாகக் கூறப்படுகிறது. கோயிலிலிருந்து ஏழுகல் தொலைவில் உள்ள பரணைமேடு என்னும் ஊரிலிருந்து பருத்தி மூட்டைகளையடுக்கிப் பரணைகட்டி விமானக்கல் மேலெடுத்துச் செல்லப்பட்டுப் பொருத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்விமானத்தின் சரிவு தஞ்சைப்பெருவுடையார் கோயிலைப்போல் ஒரே நேர்க்கோட்டில் அமையவில்லை. விமானத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ள மிகப்பெரிய வட்டவடிவக்கல் 34அடி குறுக்களவு கொண்டதாயுள்ளது. இஃது ஒரே கல்லால் அமைக்கப்பெற்ற விமானமாகும். உச்சியில் குறுகிவரும் விமானத்தின் நாற்புறங்களும் இதனோடு இணைக்கப்படுகின்றன. இதைத்தாமரை இதழ் போன்று அழகாகச் செதுக்கியுள்ளனர்.

சிவலிங்கம்

இக்கோயிலில் உள்ள பெரிய லிங்கத்தைப்போல் தமிழகத்தில் மட்டுமன்றித் தென்னாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் காண இயலாது. இதன் உயரம் பதின்மூன்றடியாகும். இதன் குறுக்களவு மூன்றடி. இக்கோயிலில் உள்ள இலிங்கமும், தஞ்சைப்பெருவுடையார் கோயிலில் உள்ள இலிங்கத்தினைப்போன்று காட்சிதருகின்றது.

இச்சிவலிங்கம் ஒரே கல்லால் எனது என்பது குறிப்பிடத்தக் கதொன்றாகும். இது பதின்மூன்று முழச்சுற்றளவுடையது; இதன் பீடம் நாற்பது முழச்சுற்றளவுடையது; பீடத்தைத் தாங்க எட்டுக் கற்றூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சிவலிங்கப்பீடத்திற்கு நாற்பது முழு ஆடை அணியப்படுகின்றது; சிவலிங்கத்தின் அங்கவத்திரம் ஒன்பதுமுழம் கொண்டது.

சிவலிங்கமும் கோயிலும்

கங்கைகொண்ட சோளேச்சரர் கோயில், லிங்கத்தைப்போன்று அடியில் சதுரஅமைப்புக் கொண்டதாயும் இடையில் எண் பட்டைவடிவாயும் முடிவில் உருண்டையாயும் அமைந்துள்ளது. இவ்விமானத்தை உற்று நோக்குபவர் இலிங்க உருவம் உள்ளதைக் காண்பர். லிங்கம் மிக உயரத்திலிருப்பதால் சாரம்கட்டி அதன்மீது ஏறி நின்று அபிஷேகம் செய்வது வழக்கம். இ்ஃது இப்பொழுது இடிவிழுந்து இரண்டாகப் பிளந்துள்ளது என்று கூறப்படுகிறது. இச்சிவலிங்கப் பெருமான்மீது கருவூர்த்தில் எழுந்தருளியுள்ள இறைவன் மீதும் பாடியுள்ளார். இவர் கங்கைகொண்ட சோழீச்சரத்தான் மீது பாடிய பாக்கள் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை கல்லையும் கசிந்துருகச் செய்யுமாறு பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட இயற்றப்பட்ட பாடல்களாகும். இவர் இயற்றியுள்ள பதினொரு பாக்களையும் படித்துச் சுவைக்கும் போது தான், கருவூர்த் தேவர் கங்கைகொண்ட சோளேச்சரத்தான்மீது கொண்ட கரைகாணாத காதலை உணரமுடியும்.

பொதுவாகக் கோயில்கள் கிழக்கு அல்லது மேற்கு நோக்கியி ருக்கும். சில கோயில்கள் தெற்கு அல்லது வடக்கு நோக்கியும் அரிதாகக் காணப்படுவதுண்டு. பொதுவாகத் தமிழகத்தில் கிழக்கு அல்லது மேற்கு நோக்கியே கோயில்களை அமைக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. கங்கைகொண்ட சோளேச்சுரம் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. இங்கே கோயில் கொண்டுள்ள இறைவன் பெருவுடையார் பிரகதீசுவரர் என்று பெயர் பெறுகிறார். தஞ்சைப்பெரிய கோயிலில் உள்ள இறைவன் பெயரும் பெருவுடையார் என்பது ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கதாகும். கருப்ப கிரகமும் அதற்கு முன்னால் அர்த்த மண்டபமும் உள்ளன. கருப்ப கிரகத்துக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையில் அணுக்கன் வாயில்கள் தெற்கிலும், வடக்கிலும் உள்ளன. சிற்பநூல் வல்லார் கருப்பக்கிரகத்தை அகநாழிகையென்றும், அர்த்தமண்டபத்தை இடைநாழிகையென்றும் குறிப்பிடுகின்றனர். இதன் தெற்கு வாயிலில் கசலக்குமி சிற்பம் மேற்கு நோக்கித் தாமரை மலரில் (பதும பீடத்தில்) அழகாக அமைக்கப்பட்டுள்ளது. கசலக்குமி இரண்டு கைகளுடன் கமலம் ஏந்திய வண்ணம் அமர்ந்துள்ளாள். தலையின் இருபுறமும் யானைகள் குடங்களைக் கொண்டு அபிஷேகம் செய்வதுபோல் அமைக்கப்பட்டுள்ளன.

இன்றுள்ள நிலை

கங்கைகொண்ட சோளேச்சுரத்தின் இன்றைய நிலையைக் காண்பவர் இதன் பண்டைச்சிறப்பை உய்த்துணர்வர்.

திருமதில்

திருமதில், உயர்ந்தும் அகன்றும் பகைவரைத் தாக்கும் நிலையிலும் தஞ்சைக்கோயிலைப் போலவேயமைந்துள்ளது. அறுநூறடி நீளமும், நானூற்றைம்பது அடி அகலமும், நான்கடி கனமும் கொண்ட இம்மதில் முழுவதும் கற்களாலேயே அமைக்கப்பட்டுள்ளது. இத்திருமதிலையடுத்து இரண்டு

அடுக்குத்திருச்சுற்று மாளிகை இருந்தது. ஆனால், அதன் ஒரு பகுதியை மட்டுமே இன்று நாம் காணமுடிகிறது.

திருச்சுற்று

திருச்சுற்று மாளிகை சிறந்த முறையில் இரண்டடுக்கு மாடவரிசைகளுடன் அமைக்கப்பட்டிருந்தது; பின்னர், காலத்தால் சிதைந்தும் இடிக்கப்பட்டும் நிலைகுலைந்து விட்டது. இப்பொழுதுள்ள பிரகாரமும் சுற்றுச்சுவரும் 584அடி நீளமும் முந்நூற்று எழுபத்திரண்டு அடி அகலமும் கொண்டுள்ளது. திருச்சுற்றில் அழிந்தநிலையில் காணப்பெறும் சந்திரசேகரர் கோயிலும், மற்றும் பல கோயில்களும் காணப்பெறுகின்றன. சண்டீசர் சிறுகோயில் தவிர, மற்றவை பிற்காலத்தில் அமைக்கப்பட்டவை என்றும், அம்மன் கோயிலும் பிற்காலத்தில் உள்ளே கொண்டு வந்தமைக்கப்பெற்றது என்றும் கூறுகின்றனர்.

கோயிலின் வடபிரகாரத்தில் ஒரு கிணறு உள்ளது. வாணாசூரனின் பத்தியைக்கண்டு பெரிதும் மகிழ்ந்த சிவபெருமான் கங்கையை அங்கே கொண்டு வந்ததாக ஐதீகம். மதிலின் முன்புற மூலைகள் இரண்டிலும் பின்புற மதிலின் நடுப்பகுதியிலும் அரைவட்ட வடிவமான கூடம் ஒன்று காணப்படுகிறது. இதுகாவற் கூடமாக இருந்திருக்கவேண்டுமென்று அறிஞர் கருதுகின்றனர்.

நந்தி

உட்கோயிலுக்கெதிரே பெரிய நந்திஒன்று படுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இது தஞ்சைப் பெரிய கோயிலில் அமைந்துள்ளதுபோல் கல்லால் அமைக்கப் படாமல், முற்றும் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள நந்தியின் உயரம் பன்னிரண்டு அடி; நீளம் ஒன்பதரையடி; அகலம் எட்டரையடி என்பதையும் ஈண்டு நாம் நினைவிற் கொண்டால், ஏறத்தாழ இரண்டு நந்திகளும் தோற்றத்தில்

ஒன்றாகவே காட்சியளிப்பதை அறியலாம்.

சிங்கமுகக் கிணறு

சில ஆலயங்களில் தீர்த்தக் கிணறுகளுக்குமேல் சிங்கத்தைப் போன்ற உருவம் அமைத்திருப்பதுண்டு. (அந்தத் தீர்த்தங்களுக்குச் சிங்க தீர்த்தம் என்று பெயர். அந்த உருவத்திற்குக் கீழ்ச்சுரங்கம் போன்ற படிகள் இருக்கும். அவைகளின் வழியாக இறங்கித்தீர்த்தம் எடுப்பதுண்டு) இவ்விதமான சுரங்கவழிக் கிணறுகள் பழைய காலத்து அரண்மனைகளில் இருந்தன. ஹம்பி என்ற விசய நகரத்தலைநகரில் இப்படிப்பட்ட கிணறுகள் பல காணப்பட்டன. கங்கை நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட தூயநீரின் ஒரு பகுதியினை இக்கிணற்றில் ஊற்றி இதை ராஜேந்திரன் தூய்மைசெய்தான் என்பது ஐதீகம்.

இந்நந்திக்கு வலப்புறம் நேரெதிரே இருபத்தேழு அடி குறுக்களவுள்ள சிங்கமுகக் கிணறு ஒன்று வியக்கத்தக்க அளவில் அமைந்துள்ளது; படிக்கட்டி வரிசைக்குமேல் செங்கற்களாலான சிங்கம் காட்சியளிக்கிறது. இப்படிக்கட்டுகள் டகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. உட்கார்ந்திருக்கின்ற நிலையிலுள்ள சிங்கத்தின் வயிற்றில் உள்ள வாயில் வழியே படிக்கட்டுகள் செல்கின்றன. இவற்றின் வழியே இறங்கிச்சென்றால் இருபது படிக்கட்டுகள் தாண்டிய பின் நீரைக்காணலாம். ஏறத்தாழ முப்பதுபடிக்கட்டுகள் நீருள் உள்ளனவாம். எனவே, இக்கிணற்றில் கருங்கற்களாலான ஐம்பது படிக்கட்டுகளைக் காணலாம். இவ்வியக்கத்தகு கிணற்றை நேரில் காணும் பொழுதுதான், தமிழர்களின் கலையுணர்ச்சியை, அழகுணர்ச்சியை, நுண்ணிய வேலைப்பாட்டினை உளமாரப்பாரட்டதுதல் கூடும். இதனால், தமிழர்கள் எங்கும் எதிலும் அழகைக்கண்டனர் எனலாம். இது பிற்காலத்தில் உடையார்பாளையம் சமீன்தார் ஒருவரால் செய்யப்பட்ட கைங்கரியம் எனக்கூறுவர்.

தமிழகத்தில் கிணறுகளையும் அழகுறப் பல பாணிகளில் அமைக்கும் வழக்கம் நிலவி வந்தது. பல்லவர் காலத்துத்திருவெள்ளரை கோயிலில் அமைக்கப்பட்டுள்ள 'சுவஸ்திகா' அமைப்பிலுள்ள கிணறும், கங்கைகொண்ட சோழபுரத்துச் சிங்கமுகக் கிணறும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

கங்கைகொண்ட சோழபுரத்தின் கண்ணுள்ள சிங்கமுகக் கிணறும் மாமல்லபுரத்தின்கண் கடற்கரைக் கோயிலுக்கருகிலுள்ள சிங்கமும் பார்வைக்கு ஒரே மாதிரியாகத் தோற்றமளிக்கின்றன. கங்கைகொண்ட சோழபுரத்தில் சிங்கத்திற்குள் கிணறு உள்ளது. மாமல்லபுரத்திலோ, சிங்கத்தினுள் கடவுள் படிமம் வைக்கப் பட்டுள்ளது. ஆனால், இவை காட்சிக்கு ஒன்றே போல் தோன்று கின்றன.

உட் கோயில்

உட் கோயிலின் நீளம் முந்நூற்று நாற்பதடி; அகலம் நூறடி; இதனுள், அமைந்துள்ள மகாமண்டபம் நூற்றெழுபத்தைந்து அடி நீளமும் தொண்ணூற்றைந்து அடி அகலமும் கொண்டது. அர்த்த மண்டபம் இறை அறைக்கும் மகா மண்டபத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் படிகளுடனாகிய அழகிய திருவாயில்கள் காணப்படுகின்றன. கோயிலை அணுகும் திருவாயில் கிழக்கே உள்ளது. மகாமண்டபத்தில் எட்டுப்பகுதிகளாக நூற்று நாற்பது கற்றூண்கள் அணிஅணியாக நிறுத்தப்பட்டுள்ளன. நடுப்பகுதி பதினெட்டு அடி உயரம் கொண்டதாக இரு பக்கமும் பதினாறு அடி உயரம் கொண்டதாக மேலே கல்கொண்டு மூடியமண்டபமாகும். கோயிலின் அடிப்பாகம் நூறு அடி சதுர அளவுடையதாகும். இதன்மீதுள்ள விமானம் நூற்று எண்பத்தாறு அடி உயரமுள்ளது.

அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபம், இடை நாழிகையெனச் சிற்ப நூல்

வல்லுநர்களால் அழைக்கப்பெறுகிறது. இஃது இரு வரிசைகளாலான பெரிய சதுரக் கற்றூண்களாலானது. இது சிற்பக்கலையின் இருப்பிடமாகக் காணப்படுவதால், இதை ஒரு சிற்பக்கூடம் என்று கூறுதல் மிகையாகாது. இம்மண்டபத்தூண்களுக்கு மேல் நடனச் சிலைகள் பல செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பலவகையான நடன நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பலவகையான நடன நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. இலிங்கத்தை நோக்கியுள்ள எதிர்சுவர்மீது ஆறு வரிசைகளில் மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சண்டீசப்பதம், தடாதகை திருமணம், பார்த்தனும் பரமனும் போர்புரிதல், மார்க்கண்டன் ஆகியோரின் வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயிற்சுவரி அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களும் இவைகளுடன் ஒப்புநோக்குதற்குரியனவாகும். பல்லவர் காலத்தில் தொடங்கப்பெற்ற சிற்பக்கலை ராஜேந்திரன் காலத்து மலர்ந்து, மணம்பெற்றுச் சிற்பக்கலையின் முடி மணியாய்த்திகழ்ந்ததெனக் கூறலாம். அர்த்த மண்டபத்தின் இருபுறமும் படிகள் இருபதடி உயரத்திற்குப் பக்கவாட்டில் மேலேறிச் செல்கின்றன. படியைக்கடந்து ஏறியதும் வாயிற்காவலர் சிலைகள் இரண்டு காணப்படுகின்றன.

மகா மண்டபம்

பெயருக்கேற்ப, இம்மண்டபம் பெரிதாக அமைந்திருந்தது. பிற்காலத்தில் ஆயிரக்கால் மண்டபங்கள் எழுப்பப் பெறுவதற்கு இதுவே அடிப்படையாக அமைந்தது எனலாம். இங்குத் தமிழ் ஞானசம்பந்தரின் கற்சிலை மிக்க எழிலுடன் செதுக்கப்பட்டுள்ளது. துர்க்கையம்மன் சிலையும் வியக்கத்தகு வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது. துர்க்கை, கொற்றவைத் தெய்வம் என்று அழைக்கப்பெறுகிறது. கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பங்களுள் நாலடி

சதுரங்கொண்ட ஒரேகல்லில் அமைக்கப்பட்ட நவக்கிரகங்கள் மிகச்சிறந்தவை. இவ்வமைப்பு வேறெங்கும் காணப்படாத புதுமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சூரியபீடம் தாமரை இதழ்களோடு கூடிய சக்கரவடிவில் அமைந்துள்ளது. சூரியனைச்சுற்றி மற்ற எட்டுக்கிரகங்களும் எட்டுத் திக்கினை நோக்கிய வண்ணம் இருக்கின்றன. நடுவண் பரிதிக்கு (சூரியன்) முன்னால் ஏழு புரவிகள் பூட்டப்பெற்ற இரதம், இழுத்துச் செல்லப்படும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. அருணன் தேரோட்டியாக உள்ளான். இவையனைத்தும் கண்கொள்ளாக்காட்சியாகும். இச்சதுரச்சிற்பம் இப்பொழுது அர்த்தமண்டபத்தில் இருக்கிறது. மகாமண்டபத்திலுள்ள இருஅறைகளிலும் விமானத்தின் கலசமும் பலசிலைப் படிமங்களும் திருமேனிகளும் இருக்கின்றன.

வாயிற் காவலர்

கங்கைகொண்ட சோளேச்சரத்தில் கம்பீரத்தோற்றமுள்ள பன்னிரண்டு வாயிற்காவலர் சிலைகள் காணப்பெறுகின்றன. இவை ஏறத்தாழப் பன்னிரண்டு அடி உயரங்கொண்டவையாக உள்ளன. வாயிற்காவலரின் முகம் பயங்கரத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. இவற்றுள் முதல் இரு சிலைகள் கோபுரச்சிதைவில் காணப்பெறுகின்றன. வாயிற்காவலர் சிலைகள் ஒவ்வொரு வாயிலிலும் இருமருங்கிலும் நிறுத்தப்பட்டிருக்கும். எனவே, கோயில் வாயில், அரத்த மண்டபவாயில், உள்ளறை வாயில், வடக்கு வாயில், தெற்கு வாயில் ஆகிய ஐந்து வாயில்களிலும், வாயிலுக்கு இரு சிலைகளாக நிறுத்தப்பட்டுள்ளன. இவைகள் காண்போரின் மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன; குறிப்பாகச் சிறுவர்களின் நகைச்சுவைக்கு இடமாக அமைந்துள்ளன.

சிற்பங்கள்

விமானத்திலும், கோயிலின் தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் பேரழகு வாய்ந்தவையாக அமைந்துள்ளன.

தென்மேற்கில் சபாபதி சிறபமும், தெற்கில் வினாயகர் சிற்பமும், வடக்கில் திருவாயிலருகே சண்டேசுவரருக்குச் சண்டேசப்பதம் வழங்கும் காட்சியை விளக்கும் சிற்பமும், வியத்தகு வேலைப்பாடு உடையன. இவற்றுக் கணித்தாக அமைந்துள்ள இலக்குமி, கலைவாணி போன்ற பேரழகு மிக்க சிற்பங்களும் நம் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பனவாகும். இவையனைத்தும் உயிர் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. இவைகளைக் காணும்பொழுது 'தென்னிந்தியாவில் உள்ள சிற்பங்களினும், சாவகத்தில் உள்ள சிற்பங்களினும், இச்சிற்பங்கள் சிறந்துள்ளன, எழில் மிகுந்துள்ளன' என்று அறிஞர்கள் குறிப்பிடுவது நினைவில் வருகிறது.

சுற்றுப்பிரகாரத்தில் விமானத்துக்குப் பரபாகமாகத் (எதிரிடையாக) தெற்கிலும் வடக்கிலும் இரு சிறிய கைலாச விமானங்கள் உள்ளன. இவ்விரண்டனுள் ஒன்றில் பிருகந்த நாயகியின் சந்நிதி உள்ளது. அம்பிகை பேரழகுடன் விளங்குகின்ற காட்சி, பக்தர்களின் நெஞ்சில் பத்திக்கனலை எழுப்பக் கூடியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். தேவியின் உருவம் ஏறத்தாழ எட்டடி உயரத்தில் மென்குழைவுடன் அமைக்கப் பெற்றுள்ளது. தேவியின் இரு கரங்கள் பாசாங்குசங்கள்* ஏந்தி, இருகைகள்அடைக்கலம் அடைந்தவர்க்கு அருள் வழங்குகின்றன. சாந்தி தவழும் அந்த முகத்தில் எல்லையற்ற கருணையும் கம்பீரமும் களிநடம் புரிகின்றன. இவ்வருள் வடிவத்தைப் போன்றே கோயிலில் மகிடாசுரமர்த்தினியின் (உக்கிரரூபம்) கொடுமையான காட்சியும் நம்மைக்கவர்கிறது. காளியின் சிற்பம் நம்மை வியப்பில் ஆழ்த்தி நடுங்க வைக்கிறது. அசுரனைக்காலடியில் வைத்து மிதித்த வண்ணம் காட்சிதரும் காளி, இருபது திருக்கரங்களுடன் உக்கிரகோலத்தில் சீறும் அழகுடன் விளங்குகிறாள். அருகில் உள்ள சிங்கம் அசுரனின் செங்குருதியை உறிஞ்சிக்குடிப்பது போல் செதுக்கப்பட்டுள்ளது. காளிகொடுமையே உருவானவன்.

ஆதலினால், இச்சிற்பமும் கொடியகாட்சியினை நல்குகின்றது மேற்கூறிய சிறந்த சிற்பங்களைப் போன்றே கணங்களும் (அப்சர) தேவமகளிரும், ராட்சதக் கூட்டங்களுமாக எவ்விடத்தும் அமைந்துள்ளதை நோக்குமிடத்து, இக்கோயிலின் கம்பீரமான தோற்றத்திற்குப் பெருந்துணை புரிவது இனிது விளங்கும்.

(* பாசம்-கயிறு, அங்குசமென்பது யானைப்பாகனது கருவி, யானைப்பாகனது கருவியைப்போன்ற கருவி.)

இந்தியச் சிற்ப வரலாற்றில் கங்கைகொண்ட சோழபுரச் சிற்பங்கள் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளன. கலையழகும், புதுப்பொலிவும், மென்குழைவும், கவர்ச்சியும் கொண்ட சிற்பக்கூடமாகவே கங்கைகொண்ட சோளேச்சுரம் காணப்படுகிறது. பல்லாண்டுகட்குமுன் வடிக்கப்பெற்ற இச்சிற்பங்கள், இன்றுதான் செதுக்கப்பட்டவை என்று எண்ணுமாறு பேரழகுடனும், மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாட்டுடனும் விளங்குகின்றன. மாமல்லன் மல்லைக் கடற்கரையில் தொடங்கி வைத்த சீர்மிகு சிற்பக்கலையின் மலர்ச்சியை, உயர்ச்சியை, முழுமையைக் கங்கைகொண்ட சோளேச்சுரத்தில், சிறப்புற்று மிளிர்வதைப் பரக்கக் காணலாம். இற்றை நாள்வரை இவற்றைப் போன்று பேரெழில் வாய்ந்த சிற்பங்கள் இப்பூவுலகின் எப்பகுதியிலும் உருவாக்கப்படவில்லை என்பது ஆராய்ச்சியாளரின் துணிபு. இத்துணைச் சிறப்பு மிக்கசிற்பங்களை உருவாக்கிய சிற்பிகள் எத்துணைக் கலை நுணுக்கத் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது வியப்பிற்குரியது.இத்துணைக்கலை நுணுக்கம் வாய்ந்த சிற்பங்களுள் ஒன்றைப்பற்றி நாம் இங்கு விரிவாகக் காண்போம். சண்டேசுவரர்க்கு அருள் புரியும் மூரத்தியின் கற்சிலை சிற்பக் கலைக்குச் சிகரம் போலமைந்துள்ளது. இதுகருவறை முகமண் டபத்தின் வடக்குத்திருவாயிலில் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. இச்சிற்பம் சண்டீசப் பதம் தரும் காட்சியைத் தத்ரூபமாக விளக்குகிறது. ஒரு சிற்பத்தில், பசு

இலிங்கத்தின்மீது பால்பொழிந்து அபிடேகம் செய்கிறது; மரத்தின் மீதமர்ந்து கொண்டு எச்ச தத்தன் இதனைப்பார்க்கின்றான். சண்டேசுவரர் தம் தந்தையின் காலைவெட்டுவது போன்ற நிலையில் மற்றொரு சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளது. அடுத்து ஒரு பெரிய சிற்பம் நடுவண் செதுக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தில் தென்னாடுடைய சிவபெருமான் உமாதேவியா ருடன் அமர்ந்துள்ளார். சிவபெருமான் தமது கொன்றைமாலையைச் சண்டீசர் முடிமீது சூட்டி அவருக்குத் தம் கோயில்மேலாளர் பதவியை வழங்குகிறார். அருகில் அமர்ந்துள்ள உமாதேவி ஆசீர்வாதம் செய்கிறாள். மேலே சூரிய சந்திரரும் தேவர்களும் காட்சி தருகின்றனர். இவை கோயில் நடுமண்டபச் சுவரில் நான்கு வரிசையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை கலை நுணுக்கச் சிற்ப வேலைப்பாடுகளில் சிறந்து விளங்குகின்றன. இச்சிற்பங்களைக் கண்டுகளிப்பவர்கள், சண்டீசப்பத வரலாறு பற்றி அறிந்துகொள்ள விழைவது இயல்பே. ஏனெனில், இக்கதையினை அறிந்து கொண்டால்தான் இச்சிற்பத்தினை முழுவதும் சுவைக்கமுடியும்.

சேய்ஞலூர் என்பது சோழநாட்டிலுள்ள ஒரு சிற்றூர். அங்கு மறையவர் வாழ்த்து வந்தனர். அவ்வூரில் விசார சருமன் என்ற சிறுவன் சிவபெருமான்மீது எல்லையற்ற அன்பு பூண்டிருந்தான். இவன் தந்தையின் பெயர் எச்சதத்தன். இடையனின் கொடுமையினின்றும் பசுக்களைக் காத்தற் பொருட்டு விசார சருமன் அன்றாடம் பசுக்களை ஓட்டிக்கொண்டு போய்ப்புல் வெளியில் மேய்த்து வருவான். இவ்விதம் பசுக்களை மேய்த்துக்கொண்டு வாழ்ந்த சிறுவன், சிவன் மீது கொண்டுள்ள ஈடுபாட்டால், பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கும்போது, மணலில் அமர்ந்து, மணலால் சிவலிங்கம் அமைத்து, அதனை மெய்மறந்து வழிபடுவது வழக்கம். அதைக்கண்ணுற்ற பசுக்களும் மண்ணாலான சிவலிங்கத்தின்மீது பால் சொரிந்து

தங்கள் பக்தியை வெளிக்காட்டின. இதனால், பசுக்கள் வீடு சென்றதும் குறைந்த அளவில்தான் பால் கறந்தன. அதைக்கண்ட பசுக்களுக்குரிய மறையவர் எச்ச தத்தனிடம் விசாரரைப்பற்றி முறையிட்டனர்.

இதைக்கேள்வியுற்ற எச்ச தத்தர் தம் மகன் மாடுமேய்க்கு மிடத்திற்குச்சென்று, மறைவிலமர்ந்து கொண்டு நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தார். மகன் சிவலிங்கம் சமைத்ததையும், பசுக்கள் பால் சொரிந்ததையும் கண்ட எச்சதத்தர் சீற்றம் மிகக் கொண்டனர்; விரைந்துசென்று மகனைக்கோல் கொண்டு புடைத்தார்; கடுமொழிகளையும், சுடுமொழிகளையும் புகன்றார்; சின மிகுதியினால் மகன் வைத்திருந்த திருமஞ்சனக் குடத்தையும் காலால் உதைத்து உடைத்தார். அதுவரை சிவபூசையில் ஆழ்ந்திருந்த விசார சருமர் கண் விழித்தார். தந்தையின் செயல்கண்டு, சினங்கொண்டு, தந்தையின் கால் மீது ஒரு சிறுகோலை எறிந்தார். அக்கோல் மழுவாயுதமாக மாறித்தந்தையாரின் காலைவெட்டியது. அதையும் பொருட்படுத்தாது விசார சருமர் தொடர்ந்து சிவபூசையில் ஆழ்ந்தார்.

இச்சிறுவனது பத்தியின் சிறப்பைக்கண்ட சிவபெருமான், உமாதேவியாருடன் விசார சருமருக்குக்காட்சி தந்தார். விசார சருமரும் இறைவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் காதலால் கசிந்துருகிக் கண்ணீர் மல்கினார். சிவபெருமான் அச்சிறுவனை அன்புடன் நோக்கி 'நம் பொருட்டால் ஈன்ற தாதையின் காலை ஒடித்தாய்; இனி நாமே உனக்குத் தாதையாவோம்,' என்று கூறியணைத்துக்கொண்டு கருணையால் உச்சி மோந்தார்.

'சிறிய பெருந்தோன்றலார்' எனச்சேக்கிழார் சிறப்பித்துப் பாடுதலை இவண்நோக்குதல் நலமாகும்.

சிவன் கைப்பட்டதால் சிறுவரும் சிவமய மானார்; தேவர்மலர் மாரி பொழிந்தனர். சிவபெருமான் அச்சிறுவரைத்

தம்தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக்கி 'நாம் உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவும் உனக்காகச் சண்டேசனுமாம் பதம் தந்தோம்' என்று கூறித் தமது கொன்றை மாலையினை அவர் முடிமீது சூட்டினார். இவ்விதமாய் விசார சருமர், சண்டீசர் என்னும் பெயர்பெற்றார். இந்நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் பெருமான் 'பெரியபுராணத்தில்' விரிவாக விளக்கிச்செல்கிறார். பெரியபுராணத்துள் வரும் இந்நிகழ்ச்சிகளைக்கூறும் கீழ்க்காணும் செய்யுள்களைப் படித்துணர்ந்து இச்சிற்பத்தைப் பார்வையிட்டால் இச்சிற்பத்தின் அருமையும் பெருமையும் புலப்படும்.

செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப்பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச்
சூழ்ந்த ஒளியில் தோன்றினார்.
அண்டர் பிரானுந் தொண்டர்தமக்
கதிபனாக்கி, அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

மேற்கண்ட பாக்களினால் சண்டீசப் பதம் பெற்ற வரலாறு

படம்பிடித்துக் காட்டப்பெற்றுள்ளது. இப்படத்தினைச் சிறப் பமாகச் செதுக்கியுள்ள சிற்பியின் அருஞ்செயல் போற்றுதற்குரியது. சொற்சித்திரமும் கற்சித்திரமும் விசித்தரமாக அமைந்துள்ளன. சொல்வன்மையும், கைவன்மையும் ஒன்றுடன் ஒன்று போட்டிப் போட்டுக்கொண்டு சண்டீசர் வரலாற்றை விளக்குகின்றன.

சண்டேசுவரர்க்கு அருள் புரியும் மூர்த்தியின் சிலை, காண் போரின் கண்ணையும் கருத்தையும், கவர்ந்து, நீங்காத நினைவினை மனத்தகத்தே ஏற்படுத்துகிறது. இச்சிற்பச் சிறப்பைச் சொற்களினால் போற்றுவது இயலாது; இதனை நேரிற் கண்டுகளித்தால் தான் இதனது வியக்கத்தக்க சிற்பக்கலையை முழுமையாக உணர்ந்து போற்றமுடியும்.

தொல்பொருள் ஆய்வாளர் திரு. நடனகாசிநாதன் அவர்கள் 'தஞ்சைப்பெருவுடையார் கோவிலில் காணமுடியாத சிலைக்கலைப் படைப்புகளைக் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவிலில் காணலாம். கோவிலின் வடக்குப் பக்கநுழைவாயிலில் இருபக் கங்களிலும் உள்ள கலைச்செல்வி, சண்டேசுவர அனுக்கிரகமூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப்புகழ்பெற்ற சிற்பங்களாகும். என்று தமது நூலில் போற்றிப் புகழ்ந்திருப்பதாலும் சிற்பச்சிறப்பினை நன்கறியலாம்.

ஆராய்ச்சியறிஞர் சிலர் சண்டேசுரரது உருவம் கம்பீரமான தோற்றத்தில் காணப்படுதலின், சிவனது அருளினைப்பெறும் சுண்டேசுரர் உருவத்தினைச் சமைத்த சிற்பி மாமன்னன் ராஜேந் திரனை மனத்திற்கொண்டு ராஜேந்திரனையே ஆங்குவடித்து விட்டான் எனக்கருதுகின்றனர். இச்சிற்பத்தினைக்காணும்போது ராஜேந்திரனே சிவனிடம் அருள்பெறுவது போன்ற உணர்வு தம்மனத்தில் ஏற்படுகிறது என்று அவர்கள் கருதுகின்றனர். இஃது ஆய்வுக்குரிய ஒன்று.

'இக்கோவிலின் சுவர்மாடத்தில் காட்சிதரும் முருகப்பெருமானின் உருவமும், கோவிலினுள் உற்சவ

மூர்த்தியாக உள்ள முருகப்பெருமானின் செப்புத்திருமேனியும் ஒரே வடிவமாக உள்ளமை அருமையினும் அருமை என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்; என்று திரு. நடனகாசிநாதன் அவர்கள் காலச்சுவடுகள் எனும் தமது நூலில் குறிப்பிடுவதனால் ராஜேந்திரன் காலத்திய சிற்பச் சிறப்பினை நாம் தெள்ளிதின் உணரமுடிகின்றது.

கங்கைகொண்ட சோளேச்சுரர் கோவிலிருந்து மூன்று மீட்டர் தொலைவு கிழக்கே அமைந்துள்ள செங்கமேடு என்னும் சிற்றூரிலுள்ள தோப்பில் காணப்படுகின்ற பைரவர் உருவங்கள் இரண்டும் கலிங்கபாணியில் காணப்படுதலின் அவை முதலாம் ராஜேந்திரனால் தனது கலிங்க வெற்றியின் நினைவுச்சின்னங் களாகக் கலிங்கநாட்டினின்றும் கொண்டுவரப் பட்டவையா யிருத்தல்வேண்டுமென்று தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள் கருதுகின்றார்.

வீரரெட்டி தெருவில் காணப்படும் துர்க்கை உருவமும், மணல்மேட்டில் காணப்படும் துர்க்கை உருவமும் சாளுக்கிய பாணியில் அமைந்திருத்தலின், சாளுக்கிய நாட்டிலிருந்து இவை கொணரப்பட்டிருக்கலாம்.

கங்கைகொண்ட சோழபுரம் பன்னாட்டுச் சிற்பக் கூடமாக விளங்குகின்றதென்பதனையும் இதனாலறியலாம்.

ஒரு காலத்தில் கட்டடக் கலையுயர்ச்சியும், சிற்பக்கலை வளர்ச்சியும் பெற்றுத்தெயவ மணங்கமழ்ந்து, கம்பீரமாகத் தோற்றமளித்த கங்கைகொண்ட சோளேச்சரம் இன்று பொலிவிழந்து. பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. சுற்றுமதிலின் மேற்பகுதியும், பெருஞ்சிற்ப வேலைப்பாடு மிக்க கற்களும் இடிக்கப்பட்டுக் கொள்ளிடத்தின் கீழணை கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இன்றும் கல்வெட்டுகள் கொண்ட பல கற்றூண்களையும், கற்களையும் கீழணைக்கட்டில் காணலாம். இவ்வூர்ப் பொதுமக்கள், இக்கற்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுத்தநிறுத்த முயன்றும்,

வெற்றிகிட்டவில்லை. இம்மதிற்சுவருக்கு ஈடாக வேறு சுவர் கட்டித்தருவதாக ஆங்கிலேயரால் உறுதி மொழிகள் கூறப்பட்டபோதிலும், அவ்வாறு நிறைவேற்றப் பெறவில்லை. சுவெல்லின் பழமைப்பட்டியலில் (புராதன ஜாபிதா) இக்கோயில் ஐந்நூற்று எண்பத்திரண்டு அடிநீளமும், முந்நூற்று எழுபத்திரண்டு அடி அகலமும் நூற்றெழுபத்து நான்கு அடி உயரமும் கொண்ட ஒரு மத்திய கோபுரத்துடன் விளங்கியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. மேலும், வெளிப்புற மதிலில் ஆறுகோபுரங்களும் நான்கு மூலைகளிலும், கொத்தளங்களும், அகழிகளும் சூழப்பெற்றிருந்தன என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால், இன்றே, இடிந்த நிலையில் காணப்பெறுகின்றன. ஏறத்தாழ எண்பதடி உயரத்தில் முழுவதும் கருங்கல்லாலான கோபுரமும் சாந்தாலான ஏழு கலசங்களும் அழிந்துபட்டுள்ளன. கொள்ளிடத்தில் கீழணை கட்டகல் வேண்டிவெடிவைத்தபோது, கோபுரமும் இடந்து விழுந்ததாக அங்குள்ள முதியோர் கூறுகின்றனர். கோயில் திருச்சுற்றும் நன்னிலையின்றி, முள்ளும் கல்லும் நிறைந்து காணப்படுகின்றன. கருவூர்த் தேவர்மனமுருகிப் பாடிய திருவிசைப்பாக்களைக்கொண்ட சோளேச்சரம், உருமாறிக்கிடக்கின்றது. இக்கோவிலுக்கு முந்நூற்று அறுபத்தைந்து காணி நிலமும், நல்லவருவாயும் இருந்தபோதிலும் தக்க கண்காணிப்பு இன்றிப்பழுது பார்க்கப்பெற்றுச்சீர்செய்யப்பெறாமல் இழிநிலையில் காணப்படுகிறது. இவை முற்றுமழியின் ராஜேந்திரன் காலத்திய கட்டடக் கலைக்குச் சான்றுகள் இன்றிப்போய்விடும். நன்னிலையில் இருந்த இக்கோவில் முற்காலத்தில் கோட்டையாகப் பயன்படுத்தப்பட்டதால் பழுதடைந்து விட்டது என்று கூறப்படுகிறது.

கங்கைகொண்டானான சிவபெருமானுக்குக் கங்கைகொண்டா னாகிய முதலாம் ராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கங்கைகொண்ட சோளேச்சரத்தில் ஆலயம்

எழுப்பினான். ராஜேந்திர சோழன் சிறந்த சிவநேயச்செல்வனாக விளங்கியதோடு, கலையார்வம் மிக்க கலைஞனாகவும் திகழ்ந்தான் என்பதற்கு வேறு சான்று தேவையோ?

எசாலம் திருராமேஸ்வரம் திருக்கோயில்

ராஜேந்திரனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில் களுள் எசாலம் என்னும் ஊரில் திருராமேஸ்வரம் எனும் பெயரில் கட்டப்பட்ட கற்றளி குறிப்பிடத்தக்கது. விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தத் திருக்கோயில் ராஜேந்திரனின் குல குருவான (ராஜ குரு) சர்வசிவ பண்டிதரால் கட்டப்பட்டது. இது சோழர் காலத்திய கற்றளிக்கோர் சிறந்த எடுத்துக்காட்டு. இந்தக் கோயில் விமானம் அதிட்டானம் முதல் சிகரம் வரை கற்றளியாக விளங்குவது பாராட்டத்தக்கது. இந்தக் கற்றளி திராவிடக் கட்டடக் கலைப் பாணிக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

இது விமானம், உபபீடம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி முதலான எட்டு உறுப்புகளையும் எழிலும் எளிமையும் கொண்டு மிளிர்கிறது. முழுக்க முழுக்கக் கல்லாலான இந்த விமானத்தின் உறுப்பு ஒவ்வொன்றும் அளவோடும் அழகோடும் விளங்குகிறது. கங்கைகொண்ட சோளேச்சரம் பல தளங்களைக் கொண்டு ஏறுபோல் திகழ்கிறது. ஆனால், இங்குள்ள விமானமோ ஒரே தளத்துடன் ஏகதள விமானமாக மிளிர்கிறது.

எசாலம் திருக்கோயில் கலைச் சிறப்பை மா.சந்திரமூர்த்தியும் ச.கிருஷ்ணமூர்த்தியும், 'எசாலம் வரலாற்றுப் புதையல்', (1995) எனும் தனி நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளனர். 'சோழரின் கட்டடக் கலை' எனும் உப தலைப்பில் இவர்கள் இந்தத் திருக் கோயிலின் அமைப்பை பக்கம் 178 முதல் 189 வரை உயிரோட்டமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர். இத்திருக்கோயிற் சிற்பங்களின் சிறப்பினைச் 'சீர் மிகு சிற்பங்கள்' எனும் தலைப்பில் பக்கம் 190 முதல் 211 வரை கலை

நயத்துடன் விளக்கியுள்ளனர். இக்கோயில் இராமநாத ஈஸ்வரர் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலின் அமைப்பைச் சுருக்கமாகக் காண்போம்.

உபபீடம்:

இது அதிட்டானத்தின் கீழுள்ள பகுதியாகும். அடித்தளத்துடன் துணைப்பீடம் அமைப்பது சோழர் காலக் கட்டடக்கலை அமைப்பு முறையில் ஒரு நெறியாக இருந்துள்ளது. இங்குள்ள உபபீடம் தரை மட்டத்தில் காணப்படுகிறது.

அதிட்டானம்:

உபபீடத்தின் மேலுள்ள பகுதி அதிட்டானம் என்று வழங்கப்படுகின்றது. இது தளம் என்றும் பீடம் என்றும் அழைக்கப்படும். இக்கோயிலின் அதிட்டானம் முறையே உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, பத்ம வேதிகை ஆகிய அங்கங்களைக் கொண்டு எளிமையாகக் காட்சி தருகிறது. சுமார் ஒன்றரை மீட்டர் உயரத்தில் இது அழகுற அமைந்துள்ளது.

உபானத்தின் மேலுள்ள ஜகதிப்படை மிக எளிமையான அமைப்புடையது. இதன் மேலுள்ள குமுதப்படை, முப்பட்டை வடிவில் வடிக்கப்பட்டுள்ளது.

இக்குமுத வரியின் மேலும் கீழும் இதழ்கள் இன்றி எளிமையாக அமைந்துள்ளது. இதன் மேலுள்ள கண்டவரி மேலும் கீழும் எளிய கம்பு எனும் சுற்று உறுப்புடன் காணப்படுகிறது. இதன் இடை இடையே உள்ள கண்டப்படை சிற்பங்கள் ஏதுமின்றி எளிமையாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது.

கண்டவரியின் மேலுள்ள பட்டிகையும் அதன் மேலுள்ள கண்டவரியும் எளிய அமைப்புடையன. அதன் மேலுள்ள வேதிகை-பத்ம இதழ்கள் சிறிதாகப் படர்ந்து பாங்குற அமைந்துள்ளது.

சுவர்ப் பகுதி:

கருவறை அதிட்டானத்தின் மேல் மட்டத்திலிருந்து உத்தரத்தின் அடி மட்டம் வரை உள்ள பகுதியே சுவராகும். கருவறை புறச் சுவரைச் சுற்றிலும் தெற்கு மேற்கு வடக்கு ஆகிய திசைகளில் முறையே பக்கத்திற்கு ஒன்றாக மூன்று தேவ கோட்ட மாடங்கள் காணப்படுகின்றன.

தேவ கோட்ட மாடங்களின் பக்கங்களில் அரைத் தூண்கள் அணிசெய்கின்றன. பக்கத்திற்கு எட்டுத் தூண்கள் வீதம் மூன்று பக்கங்களிலும் 24 தூண்கள் சுவரை அலங்கரிக்கின்றன.

இவற்றில் தேவ கோட்ட மாடங்களை ஒட்டியுள்ள இரு தூண்கள் மட்டும் முழுமையாகவும் ஏனைய 6 தூண்கள் சுவரை ஒட்டிய அரைத் தூண்களாகவும் அமைந்துள்ளன. இத்தூண்கள் யாவும் கால், உடல், இடைக் கட்டு, கலசம், தாடி, குடம், கண்டம், பத்மம், பலகை, வீரகண்டம், போதிகை ஆகிய உறுப்புகளோடு அமையப்பெற்று அதன் மேலுள்ள உத்திரத்தோடு இணைக்கப் பட்டுள்ளது.

தேவ கோட்டம்:

கருவறையைச் சுற்றியுள்ள புறச் சுவர்கள் மூன்றிலும் தட்சிணா மூர்த்தி, திருமால், நான்முகன் ஆகிய தெய்வ வடிவங்களை அமைத்துள்ளனர். இத்தெய்வங்கள் அமைந்த மாடங்களின் பக்கங்களை அழகிய இரு அரைத் தூண்கள் அழகு செய்கின்றன.

அர்த்த மண்டபத் தேவ கோட்டம்:

இக்கோயிலின் அர்த்த மண்டபப் புறச் சுவரில் தெற்கிலும் வடக்கிலுமாக இரு தேவ கோட்டங்கள் அமையப்பெற்று, அம் மாடங்களில் தெற்கில் விநாயகரும் வடக்கில் துர்காதேவியும் அருள் பாலிக்கின்றனர்.

அர்த்த மண்டபப் புறச் சுவர்:

அர்த்த மண்டபப் புறச் சுவர் கருவறை அதிட்டான அமைப்பினை ஒத்து அமைக்கப்பட்டு இங்கு கண்டப் படைகளில் சிற்பங்கள் இன்றி எளிமையாகப் படைத்துள்ளனர்.

அர்த்த மண்டபச் சுவர் உத்தரத்தின் மேல் பூத வரியும் அதன் மேல் கபோதகமும் யாளி வரியும் அணி செய்கின்றன.

பிரஸ்தரம்:

இக்கோயில் சுவர்ப் பகுதியின் மேல் மூடியாகவுள்ள பகுதியைக் கூரை என்றும் பிரஸ்தரம் என்றும் தோள் என்றும் கூறுவர். இதற்குத் தள வரிசை, மஞ்சம். கபோதகம் எனும் பெயர்களும் உண்டு.

இது சுவரை அலங்கரிக்கும் தூண்களது போதிகையின் மேல் மட்டத்திலிருந்து யாளிவரியின் மேல் மட்டம் வரையுள்ள பகுதியாகும். இக்கூரைப் பகுதி உத்தரம், கம்பு, பூதவரி, கபோதம், யாளிவரி போன்ற பல உறுப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

விமானம்:

இவ்விமானம் அடித்தளம் முதல் சிகரம் வரை கருங்கல் கட்டாகவே அமைந்துள்ளது. கூரையின் மேல் உள்ள வேதிப் படைகளின் நான்கு மூலைகளிலும் நான்கு நந்தி உருவங்கள் நான்கு திசை நோக்கிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளன.

கருவறை கூரையின் மேல் ஒரு தள விமானம் அமைந்துள்ளது. இதன் கிரீவம் வட்டவடிவமானது. கிரீவக் கோட்டத்தின் நான்கு திசைகளிலும் - தெற்கில் வீணாதர மூர்த்தியும், மேற்கில் வீற்றிருக்கும் திருமாலும், வடக்கில் நான்முகனும், கிழக்கில் இந்திரனும் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளனர்.

கிரீவக்கோட்டத்தின் பக்கங்களைச் சோழர் கால அழகிய உருட்டைத் தூண்கள் அணிசெய்கின்றன. இக்கோட்டத்தின் மேலுள்ள கீர்த்தி முக நாசிக் கூடுகளிலும் இராஜேந்திரசோழன்

காலத்திய தெய்வ உருவங்கள் அழகே உருவாகக் காட்சி தருகின்றன.

நாசிக் கூடுகளில் முறையே, தெற்கில் நடராஜர், மேற்கில் யோக நரசிம்மர், வடக்கில் பிரம்மா, கிழக்கில் அம்மையப்பன் உருவங்கள் அணி செய்கின்றன. கிரீவ உத்தரத்தின் மேல் வரிசையாக அன்னவரி அழகுடன் மிளிர்கின்றது.

சிகரம்:

இக்கோயிலின் சிகரம் கிரீவத்தைப் போன்று வட்ட வடிவாக உள்ளது. இது வேசர வகை எனும் கலை முறையைச் சார்ந்தது; இவை எளிமையாகவும் எழிலாகவும் அமைந்து அழகாகக் காட்சி தருகிறது. தலைப் பகுதியாகிய இச்சிகரத்தின் விளிம்புகளில் கண்ணாடிச் சட்டங்கள் போன்ற அமைப்பு கல்லிலே செதுக்கப்பட்டுள்ளன. சிகரத்தின் உச்சியில் மகா பத்மம் விரிந்த தாமரையாக மலர்ந்திருக்கிறது. அதன் மேலுள்ள கலசம் எனும் ஸ்தூபி செப்பால் ஆனது.

முழுதும் கல்வெட்டினால் உருவானது; இவ்விமானம் 40 அடி அளவுடையது.

இவ்விமானம் எளிமையாக இருப்பினும், பார்ப்போரின் கண்களைக் கவரும் பான்மை கொண்டது.

அம்மன் சந்நிதி:

இத்திருக்கோயிலின் மகாமண்டபம் சதுர வடிவில் இடை நாழிகையின் முன்புறம் அமைந்துள்ளது. இது 8 மீட்டர் அகலமும் நீளமும் கொண்டது. இம்மகா மண்டபத்தில் வரிசைக்கு நான்கு தூண்கள் வீதம் நான்கு வரிசைகளில் மொத்தம் 16 தூண்கள் உள்ளன.

இம்மகா மண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதி செவ்வக வடிவில் எழிலாக விளங்குகிறது. இதன் கருவறையும் நீண்ட சதுரம் கொண்டது. திரிபுரசுந்தரி அல்லது கேதாரியம்மன் என்பது இங்கு அருள் பாலிக்கும் அம்மனின்

திருப்பெயராகும். அம்மன் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் அருள் புரிகிறார். மேற்கைகள் இரண்டில் தாமரை மலரைத் தாங்கியும் கீழ்க் கைகள் அபய வரத நிலையிலும் உள்ளன. அம்மன் பிற்காலத்ததாகும்.

கங்கைகொண்ட சோளேச்சரத்தைக்கட்டிய ராஜேந்திரன், ஈழநாட்டின் கண் மாந்தோட்டம், மாத்தோட்டம் என்னுமிடங்கில் சிவன் கோவில்களும் கட்டியுள்ளான். மேலும், சதுரானன பண்டிதரின் வேண்டுகோளுக்கிணங்க மன்னனின் ஆணைப்படி திருவெற்றியூர் ஆதிபூரிஸ்வரர் கோயில் 'ரவி' என்ற நேரவீர சோழச் தச்சனால் கற்றளியாக மாற்றப்பட்டது. இக்கோவிலின் கண்ணுள்ள பைரவர், தக்கணாமூர்த்தி, சண்டேசுவரர் சிற்பங்கள் மிக்க அழகுடையவை. ராஜேந்திரன் வேம்பற்றூர்க் கோயிலின் சுற்றாலயத்தையும் கோபுரத்தையும் புதுப்பித்தான்.

ராஜேந்திரன், மைசூர் மாநிலத்தில் பெங்களூரிலிருந்து வடக்கே நாற்பது கல்தொலைவில் உள்ள குணிகல் (Kunigal) என்ற ஊருக்கருகிலுள்ள (ஒரு கல்தொலைவு) கொத்தகெரெ (Kothakare) என்னுமிடத்தில் கோவில் ஒன்றனைக் கட்டியுள்ளான். இதனருகில் ஒரு பெரும்ஏரிகள் வெட்டப்பட்டன. இவற்றுள் ஒன்றும் இன்றும் 'ராஜேந்திர சோழப்பேரேரி' எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. எனவே, இவ்வேரியும் அவனால் வெட்டப்பெற்றிருத்தல் வேண்டும் என்று நாம் கருத இடமுண்டு. கொத்தகெரெலில் முதலாம் ராஜாதிராஜனின் கல்வெட்டொன்றும் காணப்படுகிறது.

பெருங்களூர் மாவட்டம் சென்னப்பட்டணம் வட்டத்தில் தொட்டமளூர் (Doddamalur) என்னுமிடத்தில் காணப்பெறும் கோவிலும் ராஜேந்திரனது காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

சகம் 943 இல் மைசூர் மாநிலப் பேலத்துருவில் ஒரு பழையகோவில் புதுப்பிக்கப்பெற்றது. பெரும்அளவில் அடியவர்களுக்கு உணவும் வழங்கி உருத்திர ஓமமும் நடந்ததாக

ராஜேந்திரனின் 9வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. ராஜேந்திர சோழனின் 24ஆம் ஆட்சியாண்டில் சேரச்சிற்றரசனாகிய இராச்சிம்மனால் ராஜேந்திர சோழ விண்ணகர் என்ற கோவில் எடுக்கப்பெற்றது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனும் ஊரில் தன்னுடைய தந்தையின் நினைவாகச் சுந்தர சோழ ஆழ்வார் கோவிலும், சகோதரன் நினைவாக ராஜராஜ ஆழ்வார்கோயிலும் குந்தவையினால் எடுக்கப்பெற்றதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. செங்கற்பட்டு மாவட்டம் காவன் தண்டலம்' என்னும் இடத்தில் ராஜேந்திரனின் நான்காம் ஆண்டில் அரச அதிகாரி ஒருவர் ராஜேந்திரனின் நான்காம் ஆண்டில் அரச அதிகாரி ஒருவர் ராஜேந்திர சோழீச்சுரம் என்னும் கோவிலைக் கட்டினார். இராஜ ராஜன் நினைவாக வடஆர்க்காடு மாவட்டம் செங்குன்றத்தில் சபயங்கொண்ட சோழீச்சுரம் என்ற கோயில் கட்டப்பட்டது. பஞ்சவன் மாதேவீச்சுரம் என்னும் பள்ளிப்படைக்கோவில் ராஜேந்திரனின் பட்டத்தரசி பஞ்சவன் மாதேவியின் பெயரால் பழையா றையில் அமைக்கப்பட்டமையை இவனது ஏழாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம். மைசூர் மாநில கோலாரில் கோலாரம்மா கோவில் என்னும் பிடாரி ஆலயம் இவனது இருப்பதாம் ஆண்டில் புதிப்பிக்கப்பட்டதாகக் கல்வெட்டால் அறிகிறோம். கண்ணினால் திருக்கயிலையில் இருந்த கோலம் நண்ணித் திருநாவுக்கரசரால் பாடப்பெற்றதாகக் கருதப்பெறும் திருவையாறு ஐயாறப்பர் திருக்கோயிலில் தென் திருச்சுற்றில் தக்கண (தென்) கைலாயம் என்னும் திருக்கோயில் இவன் காலத்தில் மீண்டும் கற்றளியாக்கப்பட்டது.

இக்கோயிலில் நுளம்பபாடிப் பகுதியைச்சேர்ந்த கல்லால் ஆகிய 44 தூண்கள் அமைந்து ராஜேந்திரனுடைய வெற்றிச்சிறப்பைத் தமிழுலகிற்குக் காட்டுகின்றன. ராஜேந்திரன் காலத்தில் 'அகரம்' என்ற ஊரில் கைலாயநாதர் கோயில்

கட்டப்பட்டதனைக்கல்வெட்டு வாயிலாக அறியலாம். வட ஆர்க்காட்டுத் திருவல்லத்தில் வில்வவனே சுவரர் ஆலியத்தின் தெற்குப் பக்கத்தில் திருவையா ஈசுவரம் என்ற கோயில் இவன் காலத்தில் வைதும்பர் தலைவன் ஒருவனால் எடுப்பிக்கப்பட்டது. அளகாதிரிப் புத்துர் சூரியன் கோயில் எடுக்கப்பெற்றதும் இவன் ஆட்சிக்காலத்தில்தான்.

(* இஃது இராமனாதன் கோயிலில் உள்ளது.)

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், திருமழபாடியில் உள்ள வைத்தியநாதசுவாமி கோயில் இவனால் புதுப்பிக்கப்பெற்றது. இவன் தனது எட்டாமாட்சியாண்டில் வானமங்கை என்னும் ஊரில் 'கைலாசநாதர் கோயில்' ஒன்றினைக் கட்டுவித்தான் என்பதனைக் கல்வெட்டால் அறியலாம்.

ராஜேந்திரன் கலையார்வமும் இறையன்பும் நிரம்பப் பெற்றவனாதலின் எண்ணிறந்த கோயில்கட்கு அறக்கொடைகள் அளித்துள்ளான். காமரச வல்லியிலுள்ள கார்கோடீசுவரத்திற்கும் (திருச்சி மாவட்டம்), திருவாலங்காட்டுச் சிவன் கோயிலுக்கும், வேம்பற்றூர்க்கோயிலுக்கும், திருச்சின்னாபுரம் கோயிலுக்கும் இவன் நிவந்தங்கள் அளித்துள்ள செய்தியினை ஈண்டு நாம் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இவனது ஆட்சிக்காலத்தில் கூழம்பந்தலில் கங்கைகொண்ட சோழீச்சரர் ஆலயம் அமைக்கப்பெற்றது. இவன் குருவான ஈசான பண்டிதர் அமைத்த இக்கோயிலுக்குச் செயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் புலிவல நாட்டு ஆதுவப் பாக்கத்தில் வெள்ளான் வகையாக விளங்கும் நிலங்களில் காணிக் கடனாகச் செலுத்தப்பட வேண்டிய நெல் இரண்டாயிரத்து இருநூற்றைம்பதின் கலத்தையும் பொன் அறுபத்தைங் கழஞ்சையும் வரியிலியிட்டுக் கொடுத்துள்ளான் இம்மன்னன்.

கலைப்புரவலனாகிய இவன் கன்னியாகுமரியில்,

கோனேரீசுவரர் கோயில் எனும் ஆலயத்தைத் தன் தந்தையின் நினைவாக எடுத்துள்ளான். இதனை,

இக்கோயில் சோழர் காலத்துக் கோயில்தான் என்பதும், அதுவும் சோழமன்னன் முதலாம் ராஜராஜனின் நினைவாக அவனுடைய அருமைமைந்தன் முதலாம் ராஜேந்திரன் எடுப்பித்தது என்பதும் அக்கோயிலிலேயே காணப்பெறும் கல்வெட்டுகளால் உணர்ந்து கொள்ளமுடிகிறது. என்று கல்வெட்டு ஆய்வாளர் திரு. நடனகாசிநாதன் அவர்கள் தமது காலச்சுவடுகள் எனும் நூலின்கண் குறிப்பிடுவதாலறியலாம்.

மேலும் சில கலைப் பணிகள்

கலைப் புரவலனாகத் திகழ்ந்த இவ்வேந்தன் ஏறத்தாழ 24 கோவில்களுக்கு மேல் கட்டியும், புதுப்பித்தும் விரிவுப்படுத்தியும் உள்ளான் எனக் கண்டோம். ஆனால் அண்மைக் கால ஆய்வுகளில் மேலும் சில கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருவல்லம் திருவையாறு ஈஸ்வரம், எசாலம் இராமீஸ்வரர் சிவன் கோயில், 1017-ல் புதுப்பிக்கப்பட்ட கரூர்-ஈரோடு சாலையில் உள்ள நட்டாற்றீசுவரர் கோயில், பிரமதேசம் கோயில், மங்கலம் ராஜசேகர் ஈஸ்வரமுடைய மகாதேவர் கோவில், முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துப் பட்டூரில் ஜயமல்லீஸ்வரம் (பள்ளிப்படை), அரியலூர் மாவட்டம், முனியங்குறிச்சிப்புத்தூரில் (சூரியக்குடி) ஜோதீஸ்வரர் கோயில், செட்டித்திருக்கோணத்தில் இரணசிங்க ஈஸ்வரம், பெரிய திருக்கோணத்தில் மதுராந்தக ஈஸ்வரம் எனும் சிவன் கோயில், ராஜேந்திர சோழ விண்ணகரம் எனும் பெருமாள் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவ்வேந்தன் தன் சிறப்புப் பெயரால் விக்கிரம சோழபுரம் எனும் வணிக நகரத்தை உருவாக்கி அங்கு சிவன் கோவிலை அமைத்தான். உடையவர் தீயனூரைச் சுற்றி வணிக நகரமும், பிரம்மதேய ஊரும், அரண்மனையும் கட்டினான். பாண்டிய நாட்டினை ஆண்ட சோழ பாண்டியன் திருநெல்வேலி மாவட்டம்

மன்னார் கோயிலில் 'ராஜேந்திர சோழ விண்ணகரம்' எனும் பெயரில் விண்ணகரம் ஒன்றை எடுப்பித்தான்.

மேற்கூறியவற்றால் இவன் சிறந்த கோயிற்பணி புரிந்தானென்பது விளங்கும்.

கட்டடக் கலை

ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் கட்டடநூலின் துணைகொண்டு கங்கைகொண்ட சோழபுரமும், கங்கைகொண்ட சோளேச்சரமும் கட்டப்பட்டன என்பதனை நாம் அறியலாம். கங்கைகொண்ட சோழபுரத்தில் மன்னர், வணிகர் முதலியபலருக்கும் தனித்தனி வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன் வெனவும், காலைகடை (நாளங்காடி), மாலைகடை (அல்லங்காடி) முதலியன கொண்ட கடை வீதிகளும், அகழி, மதில், கோட்டை, வாயில், கரந்துறை வாயில் போன்ற நகர அமைப்பின் சிறந்த அங்கங்களைக் கொண்டு திகழ்ந்தன எனவும் கண்டோம். அழகிய அரச மாளிகைகளும், விண்ணை முட்டும் திருக்கோயில்களும், பரந்தகன்ற மண்டபங்களும் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டதால், அக்காலத்திய கட்டடக்கலையின் சிறப்பினை நாம் நன்கறியலாம். திருக்கோயில் திராவிடபாணியிலேயே கட்டப்பட்டதென்பது ஈண்டு நாம் நினைவிற்கொள்ளத்தக்கதாகும். சோழக்கலைஞர் அரக்கர்களைப்போலச் செயல்தொடங்கி நுண்வினைப் பொற்கொல்லர் போல் செய்து முடிக்கும் திறன் வாய்ந்தவர்' என்ற அறிசர்பெர்குசன் அவர்களின் புகழுரை ராஜேந்திரனது கட்டடக் கலைக்கும் சாலப்பொருந்தும். பல்லவர்களது ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பெற்ற புத்தம் புதிய முறையிலான கட்டடக்கலை ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் உச்சநிலையில் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சிற்பக் கலை

சிற்பக்கலை தலையாய கலையாக வைத்தெண்ணப்படுகிறது.

செம்பு, பொன், வெள்ளி, ஐம்பொன் முதலிய உலோகங்களாலும், மண்ணாலும், சுண்ணாம்பாலும், கல்லாலும், மரத்தாலும், நெட்டியாலும் பாவைகள் அமைப்போர் சிற்பிகள், அவர்கள் படைக்கும் சிற்பங்கள் வாய்பேசாதவை; ஆனால், சிற்பியின் திறனைப்பற்றி நம்மைப்பேச வைப்பவை.

ராஜேந்திரன் காலத்துச் சிலை வடிக்கும் சிற்பிகள் படைத்த சிற்பங்கள். இன்றும் கங்கைகொண்ட சோளேச்சரத்தில் குன்றா அழகுடன் காட்சிதருகின்றன. இங்குக்காணப்படும் சிற்பங்களுள் கலைமகள், திருமகள், சண்டீச அனுக்கிரக மூர்த்தி ஆகியவை கண்ணையும், கருத்தையும் ஈர்க்கத் தக்கவையாக அமைந்து ஒருமுறை கண்டாலும் என்றென்றும் தமது மனக்கண்ணில் நீங்கா இடம் பெறும் பான்மையாக அமைந்துள்ளமையை யாவரும் உணர்வர். பலவகையான நுண்ணிய வேலைப்பாடமைந்த ஆடவல்லான் படிமங்கள் ராஜேந்திரனது காலத்திய சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இங்குள்ள சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், துர்க்கை, போகசக்தி, அதிகார நந்தி போன்ற பேரழகு மிக்க செப்புப்படிமங்கள் மிகவும் பாராட்டத் தக்க வகையில் அமைந்துள்ளன. இவைகள் ராஜேந்திரனது காலத்தினவாகக் கருத்தப்படுகின்றன.

ராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட எசாலம் சிவன் கோயிலில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள் பேரழகு மிக்கவை. எசாலம் புதையலில் கிடைத்த விநாயகர், பைரவர், சண்டீசர் கொற்றவை, பாசுபதமூர்த்தி, ஆளுடைப்பிள்ளை முதலான கவின்மிகு படிமங்களும் இங்குள்ளன.

தனித்திருக்கும் திருமால் சிற்பம்

கங்கை கொண்ட சோழச்சுரத்தில் திருமகளோடும், நிலமகளோடும் காட்சியக்கும் திருமால், எசாலம் கோயிலில் தேவியரின்றித் தனித்து உயர்ந்த தாமரை இருக்கை மீது நான்கு கரங்களுடன் கிரீட மகுடம் தரித்து அருள் சுரக்கும் மலர்ந்த

கண்களுடன் கீழ் வலக்கையில் அபய முத்திரை காட்டி நேராக நின்ற நிலையில் அருள்பாலிக்கும் அழகே தனிதான்.

திருமேனிகள்:

சூரியன் செப்புத் திருமேனி: எசாலம் புதையலில் பேரழகு வாய்ந்த செப்புத் திருமேனிகள் பல கிடைத்துள்ளன. இவற்றுள் தமிழகத்தில் உள்ள சூரிய தேவனின் திருமேனிகளுள் உருவில் மிகச் சிறியதாயினும், சீரிய கலைச் செழுமையும் கவர்ச்சியும் மிக்கதாக இக்கோயில் சூரியன் திருமேனி விளங்குகிறது. அரியலூர் மாவட்டத்தில் ராஜேந்திரனின் புகழ்பாடும் பல கலைக்கருவூலங் கள் உள்ளன என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. இல.தியாகராஜன் முயற்சியால் இராஜேந்திர சோழனின் பல கலைப்பணிகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

ராஜேந்திரனது ஆட்சிக் காலம் சோழர் சிற்பக் கலையின் பொற்காலமாகும். இக்காவலன் காலத்திய கவர்ச்சிகரமான நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் போன்று ராஜராஜன் காலத்தில் கூட அமைக்கப் பெறவில்லை. கங்கை கொண்ட சோளேச்சரத்தில் காணப்படும் சோமாஸ்கந்தர் தொகுதி நுண்ணிய வேலைப்பாடும் கலையழகும் மிக்கதாகக் காட்சியளிக்கின்றது. எனவேதான், தமிழ்நாடு தொல் பொருள் துறை இயக்குநர் திரு.ஆர். நாகசாமி அவர்களும் தமது 'கங்கைகொண்ட சோழபுரம்' எனும் நூலின்கண் (ராஜேந்திரனது காலத்திய) இச்சோமாஸ்கந்தர் தொகுதியே இன்று காணப்பெறும் பேராதிக்கச்சோழர் காலத்துப் படிமங்களுள் பெரியது எனக்குறிப்பிடுகின்றார்.

இங்கு விமானத்திலும் கோயிலின் வெளிப்புறத்திலும் காணும் சிற்பங்களைக் காட்டிலும் உயர்ந்த சிற்பங்கள் தென்னிந்தியாவில் மட்டுமன்று, தென்னிந்தியக் கலையைப்பின்பற்றிய சாவகக் கலையிலும் இல்லை என்பது அறிஞர் கருத்தாதலின், கலைக்காவலனாம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்திய சிற்பக்கலை வளர்ச்சி பற்றி இனிதறியலாம்.

நாடகமும் இசையும்

நாடகமும் இசையும் முத்தமிழில் அடங்கும். பண்டு நாடகமும் இசையும் மன்னனால் பெரிதும் ஆதரிக்கப்பட்டன. இவைமக்களின் இன்பப்பொழுது போக்கிற்காகத் தோன்றியமையால் கிராமங்களிலும், நகரங்களிலும் இவை சிறப்புப்பெற்றன. நாடகங்கள் பெரும்பாலும் புராணக்கதைகளைப் பின்னணியாகக் கொண்டும், மன்னனது வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டும் திகழ்ந்தன. நம் ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் ராஜராஜேச்சுர நாடகம், சாக்கைக்கூத்துப் போன்றவை மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தன. அக்காலத்தில் நாடகம், கூத்து, என்னும் பெயரால் பாமரமக்களால் வழங்கப்பெற்றது.

மார்கழி, வைகாசி மாதங்களில் திருவாதிரைத் திருநாள்களில் சாக்கைக்கூத்து நிகழத்துவதற்குச் சாக்கை மாராயன் விக்கிரம சோழனுக்குக் காமரவல்லிச் சதுர்வேதி மங்கலத்தார் நிலக்கொடை அளித்தனர்.

முதலாம் ராஜேந்திரனது காலத்தில் ராஜராஜ விசயம் என்னும் நூலினைப் படித்து வருவதற்காக நாரணன் பட்டாதித்தன் என்ற சவர்ணன் ஒருவன் நிலத்தானம் பெற்றான். எனவே, நாட்டில் கலைஞர்கள் ஆதரிக்கப்பட்டுக் கலைவளர்ச்சி யேற்பட்டதென்பது புலனாகிறது.

ராஜேந்திரனது காலத்தில்திருக்கோயில்களில் ஓதுவார்களும், கந்தவர்களும், இசைக்கருவி வாசிப்போரும் நியமனம் செய்யப்பெற்றிருந்தமையின் இசையும் நல்லவளர்ச்சி பெற்றது.

இலக்கியம்

இவன், கல்வி கேள்விகளில் மேம்பட்டவனாய்த் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் ஈடுபாடு கொண்டதோடு அமையாது கற்றோரைப் போற்றிப் புரந்தமையால் 'பண்டித சோழன்' என்று இவனை வாயார வாழ்த்தினர் மக்கள். இவனது

ஆட்சிக்காலத்தில் பத்திப் பரவசமூட்டும் பக்திப்பாடல்களும், காவியவளம் கொண்ட வடமொழிப்பாடல்களும் எண்ணிறந்த அளவில் இயற்றப்பெற்றன.

இவனது ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்ற தமிழ்க்கல் வெட்டுகளும் வடமொழிக் கல்வெட்டுகளும் என்றென்றும் சிறந்த இலக்கியமாக வைத்து எண்ணப்படும் தகுதி படைத்தவையாகும். இவனது திருக்களர்செப்பேடு தனித்தமிழில் காணப்படுதலின் அக்காலத் தமிழ் வளர்ச்சியை நாம் காண இயலும். நாராயண கவி என்னும் வடமொழிப்புலவரால் கவின்மிகு காவியநடையில் எழுதப்பெற்ற இவனது திருவாலங்காட்டுச்செப்பேடு சொற் செறிவும், பொருட்செறிவும் கொண்டு இலங்குகின்றது. கருவுக்குள் உருவாகும் சிசுவும் கூடக் கசிந்துருகும் சீரிய பத்திப்பாக்களைக் கங்கைகொண்ட சோளேச்சரத்தானுக்குப் படைத்த கருவூர்த்தேவர் சிறந்த கவிஞரென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். இலக்கிய நயமும் பக்திச்சுவையும் கொண்ட இத்திருவிசைப்பா ஒன்பதாந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. ராஜேந்திரன் காலத்திய இலக்கிய வளர்ச்சிக்கு இத்திருவிசைப்பா ஒன்றனை மட்டுமே சான்றாகக் கொள்ளுதல்தகும்.

மேற்கூறியவற்றால் சோழப்பெருமன்னனான ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் கட்டடக்கலை, சிற்பக்கலை, நெய்தற்கலை, நாடகக்கலை, இசைக்கலை, இலக்கியக்கலை, ஆகியவை உன்னத நிலையில் விளங்கியமையை நன்கறியலாம்.

அக்காலத்தில் ஆண் மக்களாலும், பெண் மக்களாலும் ஆடற்கலை (Dancing) பெரிதும் போற்றப்பட்டன. திருக்கோயில்களில் பணிபுரியும் பதியிலாரும், ஆடற்கலையில் தேர்ச்சி பெற்றுத்தெய்வச் சந்நிதிகளிலும், மன்னனது அவையிலும் ஆடல் நிகழ்த்தும் ஆண்களும் அக்காலத்தில் இருந்தனர். அவர்கட்கு மன்னன் மானியங்கள் வழங்கியதோடு சிறப்புப் பெயர்களும் வழங்கினான். அக்கூத்தர்களுள் சாக்கையர்

என்பார் புகழ்பெற் றவாரவர்.

மேற்கூறப்பட்ட கலைகளேயன்றி ஓவியக்கலை, சோதிடக்கலை, வானநூற்கலை, மருத்துவக்கலை, மல்யுத்தக்கலை, சமையற்கலை, மலர்தொடுத்தல், அணிகலன் செய்யுங்கலை போன்றவையும் ராஜேந்திரனது காலத்தில் சிறப்புற்று விளங்கின.

சிலகலைகளுக்கென்று, தனித்தனியாகக் கலை மன்றமும் நிறுவப்பெற்றிருந்தது. அனைத்துக்கலை மன்றங்களும் ஒரு சேரத்திகழ்ந்த இடம்திருக்கோயில் திருக்கோயில், மக்களை நன்னெறிப்படுத்தியதுடன், பயனுள்ள வழிகளில் பொழுது போக்கவும் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இப்பணிகள் தொடர்ந்து நன்முறையில் நடைபெற மன்னன் அறக்கொடைகள் அளித்துள்ளான். கோயிற்பணிகளுக்குப் போக எஞ்சியுள்ள பணம் கல்விக்கும், மருத்துவத்திற்கும் செலவிடப்பெற்றன. மக்களைப்பலதுறைகளில் முன்னேற்றும் வழிகாட்டியாக அமைந்த திருக்கோயில்கள் நன்முறையில் செயல்பட்டன; கலைகளும் வளர்ச்சிபெற்றன.

மேற்கூறியவற்றால் கல்விச்சிறப்போடு கலையுணர்வும் மிக்க ராஜேந்திரசோழன், மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தந்ததோடு நில்லாது மக்களின்பொழுது போக்கிற்கும், மன அமைதிக்கும் துணைபுரியும் பலவகைப்பட்ட கலைகளை முன்னேற்றுவதில் பெரிதும் நாட்டங்கொண்டான். இவனது ஆட்சிக்காலத்தில் சோழநாடு கலைத்துறையில் பெற்றவளர்ச்சியினை, முயற்சியினை, அகஸ்டஸ் ஆட்சிக்காலத்தில் ரோமப்பெருநாடு பெற்றிருந்த கலை வளர்ச்சியுடன் ஒப்புமை கூறலாம். ராஜேந்திர சோழன் உரோமப் பெருமன்னனான அகஸ்டஸைப் போல் கலைக்காவலனாய்த் திகழ்ந்தமையின் 'தென்னாட்டின் அகஸ்டஸ்' என்ற புகழுரையைப்பெறும் தகுதியுடையவனானான். உரோம் நாட்டின்கண் அகஸ்டஸ் காலத்தில் பல அழகிய மாளிகைகள்

எழுப்பப்பெற்றன. ராஜேந்திரனது ஆட்சிக்காலத்திலும் கங்கைகொண்ட சோழபுரம், கங்கைகொண்ட சோளேச்சரம், மதுரையில் அரசமாளிகை, கோலாரில் (மைசூர்நாடு) துர்க்கை கோயில், திருவிசலூர்க்கோயில் (புதுப்பிக்கப்பட்டது), திருமழபாடி கோயில் (புதுப்பிக்கப்பட்டது), மண்ணைகொண்ட சோழன் மண்டபம், கங்கைகொண்ட சோழீச்சுரர் கோயில் (கூழம்பந்தல்) ஈழத்தில் பல சைவ வைணவக்கோயில்கள் போன்ற அழகிய பல கட்டடங்கள் விண்முட்டும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன என்பதனை எண்ணிப்பார்க்குங்கால் இவனுக்கு இப்பெயர் பொருத்தமுடையது என்பதனை அறியலாம்.

14

அரசியல்

பண்டைக் காலத்தில் மன்னன் நாட்டின் உயிர்நாடியாகக் கருதப்பட்டான். மன்னனின் முதலாவது கடமை நாட்டில் நல்லாட்சி முறையினை ஏற்படுத்தி மக்களைக்காத்தலாகும். மன்னன் ஒருவனே நாட்டினை ஆட்சிபுரிதல் என்பது இயலாத காரியம். எனவே, பண்டை மன்னர்கள் அரசாட்சியில் தனக்கு தவிபுரிய அமைச்சர்களையும் அலுவலர்களையும், பல குழுக் களையும் ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறு மன்னன் பல துணையுடன் நாட்டைத் திறமையுடன் ஆண்டான்.

இந்திய ஆட்சி முறை வரலாற்றில் மௌரியர்களின் ஆட்சி முறை முதன்மை வகிக்கின்றது. இது பிற இந்திய ஆட்சி முறைகளுக்குத் தாயாக, வழிகாட்டியாக, முன்னோடியாகத் திகழ்கிறது. குப்தர் கால ஆட்சி முறையும் இதனைப் பின்பற்றியே வகுக்கப்பட்டது. மௌரிய ஆட்சி முறையைப் போன்றே சோழர் ஆட்சி முறையும், அல்லாவுதீன் கில்ஜியின் ஆட்சி முறையும், ஷெர்ஷாவின் ஆட்சி முறையும், அக்பரின் ஆட்சி முறையும், சிவாஜியின் ஆட்சி முறையும் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவைகள் போற்றுதற்குரிய பல அம்சங்களைத் தம்மகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மௌரிய ஆட்சி முறையில் நகராட்சி முறையும் (Municipal Administration) ஷெர்ஷாவின் ஆட்சி முறையில் வருவாய்த்துறை

நிர்வாகமும் (Revenue Administration) போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தன போல், சோழர்களின் ஆட்சி முறையில் கிராம சுயாட்சி முறை (Village Administration) குறிப்பிடத் தக்க முறையில் சிறந்திருந்தது. இவர்களது 'குடவோலை முறை' பன்னாட்டுப் புகழ் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும். இக்குடவோலை முறை சில அம்சங்களில் தற்காலத் தேர்தல் முறையினை ஒத்துள்ளது. பன்னெடுங் காலமாகத் தமிழகத்தில் நிலவி வந்த சோழர் ஆட்சி முறை பற்றி ஈண்டு ஆய்வோம்.

சோழர் வரலாற்றினை விளங்கும் இலக்கியச் சான்றுகள், சோழர் காலத்தில் எழுந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றின் துணை கொண்டு, சோழர் ஆட்சி முறையினை நாம் அறியலாம். சோழர் ஆட்சிமுறை பல சிறந்த ஆட்சிக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மன்னன் நிலை

ஒரு நாட்டின்கண் வாழும் மக்கள் இன்புற்று வாழ வேண்டுமெனில் அந்நாட்டில் அரசமுறை சிறந்து விளங்குதல் வேண்டும். எனவேதான், வள்ளுவப் பெருந்தகையும்

'ஆங்(கு) அமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே

வேந்(து) அமைவு இல்லாத நாடு'

என்று கூறி மக்களின் நல்வாழ்விற்கு வேந்தனின் முக்கியத்துவத்தை நன்கு சுட்டிக் காட்டுகின்றார்.

'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;

மன்னன் உயர்த்தே மலர்தலை உலகம்'

என்ற புறப்பாடல் மோசிகீரனார் அருளிச் செய்ததாகும். எனவே, பண்டைக் காலத்தில், நாட்டு மக்களின் நல்வாழ்விற்கென அமைந்த, நல்லரசின் இன்றியமையாமையை மக்கள் உணர்ந்திருந்தனர் என்பது புலனாகும்.

நல்வேந்தன் அமையப் பெறாத நாடு கடும்புலி வாழும்

காட்டினம் கொடிது என்பதை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். சோழ மன்னர்களும், நாட்டு நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்த போதிலும், தன்னிச்சைப்படி ஆட்சி செலுத்தும் வல்லாட்சியாளனாக விளங்காது, மக்களின் நலனில் நாட்டம் கொண்டு ஆட்சி நடத்தினர். எனவே, அக்கால ஆட்சி முறையினைக் 'குடி தழுவிய கோனாட்சி முறை' எனக் கூறுதல் பொருத்தமானதாகும். மக்களால் விரும்பப்பட்டு, மக்களுக்காகவே, அரசோச்சிய மன்னர்களே, அக்காலத்தில் ஆண்ட காரணத்தால்தான், வள்ளுவப் பெருந்தகையும்,

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கு முலகு'

எனக் குறித்துச் சென்றார்.

சோழ மன்னர் மக்களின் உலகியல் வாழ்விற்கும், பண்பாட்டுக் கூறுகளின் செழிப்பிற்கும், அயராது பாடுபட்டனரே யன்றித் தன்னலம் ஒன்றையே கருதினரல்லர். குடி மக்களின் நலனே தன்னல மெனவும், அவர்களின் மகிழ்ச்சியே, தன் மகிழ்ச்சியெனவும் கொண்டு, நல்லாட்சி நடத்தியமையின், பண்டு மன்னன் இறைவனென்றே மக்களால் மதிக்கப் பெற்றனன். மக்களாகிய உடலுக்கு மன்னன் உயிராகவே கருதப்பட்டான்.

சோழ மன்னர், முடி புனைந்து ஆட்சி செய்தமையின் முடி மன்னர் என்று அழைக்கப் பெற்றனர். மன்னர், 'தேவர்', 'பெருமாள்', 'நாயனார்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றனர்; 'உடையார்', 'சக்ரவர்த்தி', 'திரிபுவன சக்ரவர்த்தி' எனவும் அழைக்கப்பட்டனர் முதலாம் ராஜராஜன் காலம்முதல், சோழப் பெருமன்னர் களின் ஏகாதிபத்தியம், நான்கு திக்குகளிலும் பரவிற்று. இப்பேரரசின் தனிநாயகம் வகித்த மன்னர்களை ராஜகேசரி வருமன், பரகேசரி வருமன் என்னும்

பட்டங்களுடன் 'கோப்பரகேசரி வருமன்', என்று முன்னோர் வழங்கி வந்தனர். நமது ராஜேந்திர சோழன் 'கோப்பர கேசரி வருமன்' என அழைக்கப் பெற்றான் என்பதை முன்பே கண்டோம்.

ஆட்சித் துறையின் தலைமையிடத்தை மன்னன் பெற்றிருந்தான். மன்னர்கள் அரசவையில் மிகுந்த ஆடம்பரத்தையும், வனப்பையும் ஏற்படுத்தி இருந்தனர். மன்னன் தன் தேவிகளுடன் உல்லாசமாக இருக்கப் பல அரண்மனைகளும், பொழுது போக்கிடங்களும், பூங்காக்களும், கலை மண்டபங்களும் நிறுவியிருந்தான். எனவே, சோழ மன்னரின் முடியாட்சியினை ஆடம்பர ஆரவாரமிக்க, பை சாண்டைன் நாட்டு முடியாட்சியுடன் (Byzantine Monarchy) ஒப்புமை கூறலாம்.

மன்னர் நீதியின் ஊற்றாகவும் விளங்கினர். சட்டத்திற்கு உட்பட்டவராகவே மன்னர் நடந்து கொண்டு, சட்டத்திற்கு மதிப்பளித்தனர். சட்டம் மன்னரைவிட உயர்ந்ததெனக் கருதப் பட்டதேயன்றி, மன்னர் சட்டத்தைவிட உயர்ந்தவராகக் கருதப்படவில்லை. 'சட்டத்தின் முன் யாவரும் சமம்' என்ற கோட்பாடு பண்டு நிலவி வந்தது.

மன்னர், அரசியர் ஆகியோர் படிமங்கள், திருக்கோயில்களில் அமைக்கப் பெற்றதனை நோக்குமிடத்து, அக்காலச் சோழ மன்னர், தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்று எண்ண இடமுண்டு.

ஆட்சித் தவைனாக விளங்கிய மன்னன் இட்டது சட்டமும், வைத்தது வரிசையுமாகப் பெரும்பாலும் இருந்தது. 'திருவாக்கிற்கு எதிர் வாக்குண்டோ?' என்றும் 'அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்' என்றும் பழமொழிகள் கூறப்பட்டிருத்தல், அக்காலத்து மன்னனுக் கிருந்த அதிகார வலிமையினை யுணர்த்தும். ஆனால், சோழ மன்னர், எதேச்சாதிகாரியாக இல்லாமல் நாட்டு மக்களின் நன்மை கருதி

யாண்டனர்.

சோழப் பேரரசின் அரசாங்க உள்துறைகளை அமைச்சரும், உடன் கூட்டத்து அதிகாரிகளும், மகாசபையார்களும் தலைமையாக நின்று நிருவகித்து வந்தார்கள். உள்நாட்டுக் கலகம் வெளிநாட்டுப் படையெடுப்பு ஆகியவற்றைத் தடுத்துத் தேச அமைதியைக் காத்து வந்தவர்கள், மண்டல மாக்களும், படைத் தலைவர்களுமான சாமந்தர்களே யாவர். எனவே, மன்னன் தனது ஆட்சிப் பொறுப்பினை அமைச்சர், அதிகாரி, சாமந்தர் ஆகியோரின் துணை கொண்டே ஏற்று நடத்தி வந்தான் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

மன்னனுக்கும் அவனது தகுதிக் கேற்பப் பல அரசச் சின்னங்கள் உள. அவை குலம், பெயர், முடி, கோல், மாலை, கட்டில், குடை, கொடி, முத்திரை, முரசு, கடிமரம், குதிரை, யானை, தேர், மனை எனப் பதினைந்து வகையாகும்.

அரசாள்வோன் மகன், அடுத்து மன்னனாக அமரும் வழி முறைக் கொள்கை, அக்காலத்து நிலவிய மரபாகும். பொதுவாக மன்னனுடைய கோப்பெருந் தேவியின் மூத்த மகன் அரியணையேறுதல் மரவு. மூத்த மகன் இறந்துவிடின், இளைய மகனும், ஆண் மக்களே இல்லாத போழ்து, கோப்பெருந்தேவிக்கு அடுத்த தேவியின் ஆண் மக்களுள் மூத்தோனும், அரியணையேறுதல் வழக்கம். மேற்கூறியவர் யாரும் இல்லாத போது மன்னனின், பிற நெருங்கிய உறவினருள் தக்கோன், அரியணையேற்றப்படுவான்.

பேரரசனும் இளவரசனும்

சோழ மன்னனே சோழப் பெருநாட்டின் தனித் தலைவனாவான். இவனே சட்டமியற்றுதல் (Legislature) கருமம் ஆற்றுதல் (Executive), நீதி வழங்குதல் (Judiciary), என்னும் முத்துறை அதிகாரக் கூறுகளையும் பெற்றுத் திகழ்ந்தான். சோழப் பெரு மன்னர்கள் பட்டத்திற்குரிய தம் புதல்வர்க்கு

இளவரசு பட்டம் கட்டி, ஆட்சித் துறைகளில் நன்கு பழக்கி வருவது வழக்கமாக இருந்தது. இம் முறையினை, முதன் முதலில் ஏற்படுத்திய பெருமைக் குரியவன் முதலாம் ராஜராஜ சோழனாவான். இச்செயலால் பட்டத் தகராறு ஏற்படுதல் தவிர்க்கப் படுவதோடு, வருங்கால மன்னன், ஆட்சியில் பயிற்சி பெறுகின்ற பொன்னான வாய்பினைப் பெறுகின்றான்.

நம் ராஜேந்திரனும் தனது எட்டாம் ஆட்சி யாண்டுக் காலத்தலேயே தன் மகனாகிய முதலாம் ராஜாதிராஜனுக்கு இளவரசு பட்டம் கட்டினான். இவ்விதம் இளவரசு பட்டம் பெற்ற இளவரசன். தன்பெயராலேயே ஆணைகள் பிறப்பிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தான். எனவேதான், ராஜேந்திரனின் காலத்தில் தந்தை, மகன்... இவர்களது இணைந்த ஆட்சியினைக் காண முடிகின்றது.

இவன் தன் மகன்பால் அரசியலை ஒப்படைத்ததால்தான், வியத்தகு வெற்றிகள் பெற்றுப் பெருவீரனாகத் திகழ முடிந்தது. நம் ராஜேந்திரன், ராஜாதிராஜனை நாடாட்சியிலும், போர் நிகழ்ச்சியிலும் 26 ஆண்டுகள் பழக்கி வந்தமை ஈண்டுக் குறிப்பிடத தக்க தாகும்.

நம் ராஜேந்திரனின் இறுதிக் காலங்களில், பட்டத்து இளவரசனான, முதலாம் ராஜாதிராஜனே பலபோர்களில் தலைமையேற்றுச் சென்று, வெற்றி வாகை சூடினான் என்று முன்பே கண்டோம். இவற்றுள் மேலைச் சாளுக்கியப் போர், ஈழப் போர் போன்றவை மிகவும் குறிப்பிடத் தக்கவையாகும். இவ்விதமாகத் தந்தைக்கு உற்ற துணையாய் விளங்கிய முதல் ராஜாதிராஜனே, நம் ராஜேந்திர சோழனின் இறப்பிற்குப் பின்னர், சோழப் பெருநாட்டின் மன்னனாக முடிசூட்டப் பெற்றான் என்பதும், ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்கதாகும். இளவரசர்களாக நியமிக்கப் பெறுவோர், தமது ஆட்சி யாண்டினை, இளவரசு பட்டம் பெற்ற ஆண்டிலிருந்தே கணக்கிடுவர்.

பேரரசின் உட் பிரிவுகள்

சோழப் பேரரசு, அக்காலத்தில் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மண்டல அதிகாரி 'மண்டலிகள்' அல்லது 'மண்டல முதலி' யென அழைக்கப் பட்டனர். ஆள்விளை பொருட்டு, முதலாம் ராஜராஜன் காலத்துச் சோழப் பெருநாடு சிறியதும், பெரியதுமான ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

பெருமன்னர் அண்டை நாடுகளை வென்று, அவர்களைச் சிற்றரசர்களாகப் பாவித்து, அவர் நாடுகளைத் தன் பேரரசிற்குட்பட்ட மண்டலங்களாக இணைத்துக் கொண்டு, அவற்றிகுத் தன் விருதுப் பெயர்களை இடுவது வழக்க மாகும்.

முதலாம் ராஜராஜன் பெருவீரனாக விளங்கியதால், அவனது பேரரசு பல மண்ணடலங்களைப் பெற்றிருந்தது. முதலாம் ராஜராஜனின் பேரரசில் அடங்கிய மண்ணடலங்களையும், அவற்றின் சிறப்புப் பெயர்களையும் ஈண்டுக் காண்போம்.

நாட்டுப் பெயர்		மண்டலப் பெயர்
சோழநாடு	.....	சோழ மண்டலம்
பாண்டி நாடு	.....	ராஜராஜப் பாண்டி மண்டலம்
சேர நாடு	.....	மலை மண்டலம்
கொங்கு நாடு	....	அதிராஜராஜ மண்டலம்
தொண்டை நாடு	....	ஜயங்கொண்ட சோழ மண்டலம்
கங்கபாடி	....	முடிகொண்ட சோழ மண்டலம்
நுளம்பபாடி	....	நிகரிலிச் சோழ மண்டலம்
வேங்கை நாடு	....	வேங்கை மண்டலம்
இலங்கை (ஈழம்)	....	மும்முடிச் சோழ மண்டலம்

சோழ மண்டலமென்பது இன்றைய தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி மாவட்டங்களையும், தென்னார்க்காடு மாவட்டத்தின் தென்

பகுதியையும் தன்னகத்தே கொண்ட நிலப் பரப்பாகும்.

சயங் கொண்ட சோழ மண்டலம் என்பது தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதியினையும், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சித்தூர் மாவட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள நிலப்பரப்பாகும்.

ராஜராஜப் பாண்டி மண்டலம் என்பது மதுரை, இராம நாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்ட தாகும்.

அதிராஜராஜ மண்டல மென்பது கோயம்புத்தூர் மாவட்டத் தையும், சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியைம் தன்னகத்தே கொண்டுள்ள தாகும். வேங்கை மண்டலம் என்பது கீழைச் சாளுக்கிய நாடாகும்.

மும்முடிச் சோழ மண்டலமென்பது ஈழ நாடாகிய இலங்கையாகும். ராஜராஜன் காலத்தில், வட இலங்கை மட்டுமே சோழராட்சியில் இணைக்கப் பெற்று, மும்முடிச் சோழ மண்டல மென அழைக்கப் பட்டது. நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத் திலோவெனில், இலங்கை நாடு முழுவதும், மும்முடிச் சோழ மண்டலத்தில் சேர்க்கப்பட்டது.

இனி, ஒவ்வொரு மண்டலமும் பல வள நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பெரும்பான்மையாக நோக்குமிடத்து, வளநாடு என்பது இரண்டு பேராறுகளுக்கு இடையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகும். சான்றாகச் சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாடு, அரசி லாற்றுக்கும், காவிரி யாற்றுக்கும் இடைபட்ட நிலப் பரப்பாகும் என்பது, தஞ்சை ராஜராஜேச்சுரத்தில் காணப்படும் ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது.

முதலாம் ராஜராஜனது காலத்தில் சோழப் பேரரசு, வள நாடுகளாகவும், 79 நாடுகளாகவும் பகுக்கப் பட்டிருந்தது. அவ்வொன்பது வள நாடுகளின் பெயர்கள் அனைத்தும், முதலாம்

ராஜராஜனின் இயற்பெயரும் பட்டப் பெயர்களுமே யாகும். அவை,

1. ராஜேந்திரசிங்க வளநாடு, 2. இராஜாரிய வளநாடு, 3. நித்த விநோத வளநாடு, 4. சத்திரிய சிகாமணி வளநாடு, 5. உய்யக் கொண்டான் வளநாடு, 6. அருண்மொழித் தேவ வள நாடு, 7. கேரளாந்தக வளநாடு, 8. ராஜராஜ வளநாடு, 9. பாண்டிய குலாசனி வளநாடு என்பன வாகும்.

ஒவ்வொரு வள நாடும் பல நாடுகளாகவும் பகுக்கப் பட்டிருந்தது. நாட்டதிகாரி நடாள்வான் எனவும், நாட்டு நாயகம் எனவும், நாடுடையான் எனவும், நாட்டு வியவன் எனவும் அழைக்கப்பெற்றான்.

வளநாட்டு அதிகாரிகளும், நாட்டதிகாரிகளைப் போன்றே அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். நாடு என்பது தொண்டை மண்டலத்தில் 'கோட்டம்' எனவும் சோழ மண்டலத்திம் பிற பகுதிகளில 'கூற்றம்' எனவும் அழைக்கப் பெற்றது. ஒவ்வொரு கூற்றமும் பல ஊர்களைக் கொண்டது. சிற்றூராயின் பலவூர் சேர்ந்ததும், பேரூராயின் தனித்தும், ஊர் என்னும் அடிப்படை ஆள் நிலவுறுப்பாகப் பகுக்கப் பட்டிருந்தன. தனியூராகவுள்ள பேரூர் 'தனியூர்' என்றும், கூட்டூரின் பகுதியான சிற்றூர் 'பற்று' அல்லது குறைப்பற்று என்றும் பெயர் பெறும். பல பற்றுகள் சேர்ந்த கூட்டூர், அதிலுள்ள முதன்மையான சிற்றூரால் அழைக்கப் பெறும். தனியூரான பேரூராயிருப்பினும், குறைப்பற்றான சிற்றூரா யிருப்பினும், பார்ப்பனத் தலைமையுள்ள ஊர்க ளெல்லாம் சதுர்வேதி மங்கலம் எனும் பொதுப் பெயரால் அழைக்கப் பெற்றன.

அக்காலத்தில், ஓர் ஊர், மண்டலம்...வளநாடு..நாடு..ஊர் என்ற முறையில் குறிக்கப்பட்டு வந்தது, சான்றாகச் 'சயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்துப் பாலையூர், நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் முடிகொண்ட சோழன்' என்றும், 'சோழ மண்டலத்து, உய்யக் கொண்டார் வளநாட்டு,

வேணாட்டு, கேரளந்தகச் சதுர்வேதி மங்கலத்து நராக்கன் மாராயன் சனநாதபனான ராஜேந்திர சோழ ரிமாதி ராஜன்' என்றும், நம் ராஜேந்திர சோழனின் கரந்தைச் செப்பேடு குறிப்பிடுவதனால் அவன் காலத்திய நாட்டுப் பிரிவுகளை நாம் அறியலாம்.

இந்நாட்டுப் பிரிவுகள் சில மன்னர் காலத்தில் சில மாற்றங்களையும் பெற்றன. சோழர் மண்டலத்திள்ள சத்திரிய சிகாமணி வளநாடு, முதற் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் குலோத்தங்க சோழ நாடு எனவும், ராஜேந்திர சிங்க வளநாடு, உலகுய்ய வந்த சோழ வளநாடு எனவும் விருதராஜ பயங்கர வளநாடு எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதையும் ஈண்டு நாம் எடுத்துக் காட்டாகக் காட்டலாம். இங்கனமே, முதற் குலோத்துங்க சோழனின் மகன் விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் உலகுய்ய வந்த சோழ வளநாடு என்பது விக்கிரம சோழ வளநாடு என்னும் பெரினைப் பெற்றது.

சோழ மண்டலத்தின் கண் இருந்த ஒன்பது வள நாடுகளின் பெயர்கள், ராஜராஜனது இயற்பெரரையும், சிறப்புப் பெயர்களையும் கொண்டிருத்தலின் வளநாடு எனும் உட்பிரிவு ராஜராஜனுக்கு முன் ஆண்ட மன்னர்கள் காலத்தில் இருந்ததில்லை என்பதையும், ராஜராஜனே இப்பிரிவுகளை முதன் முதலில் ஏற்படுத்தினான் என்பதனையும் ஈண்டு நாம் மனதில் கொள்ள வேண்டும்.

வளநாட்டின் உட் பிரிவாகிய நாடுகளுள் சில, கூற்றங்கள் என அழைக்கப் பெற்றன. நாடுகளம், கூற்றங்களும் அவற்றிலுள்ள பேரூர் ஒன்றைத் தலைநகராகக் கொண்டிருந்ததால், அதன் (பேரூர்) பெயராலேயே அந்நாடு வழங்கப் பெற்றது. இதனை நல்லூர் நாடு, அம்பர் நாடு, ஆக்கூர் நாடு, நாங்கூர் நாடு, தஞ்சாவூர்க் கூற்றம், ஆவூர்க் கூற்றம், வெண்ணிக் கூற்றம் எனும் பெயர்களா லறியலாம்.

சோழநாட்டின் ஒன்பது வளநாடுகளுள் ஒன்றனைப் பற்றியும்

அதன் பிரிவுகளைப் பற்றியும் விரிவாகக் காண்பது நலம் பயப்பதாகும். ஈண்டு நாம் ராஜேந்திரன் காலத்திய நித்த விநோத வள நாட்டினைப் பற்றி விவரமாக அறியலாம். கல்வெட்டாராய்ச்சி அறிஞர் திரு. சி. கோவிந்தராஜர் அவர்கள் கரந்தைச் செப்பேட்டினை ஆய்ந்து நித்த விநோத வளநாட்டின் பிரிவுகளையும் வெண்ணிக் கூற்றத்துள் அடங்கிய ஊர்ச் சபைகளையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

'தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி வட்டத்தின் வடக்குப் பகுதியும், அரிசிலாற்றுக்குத் தெற்குப் பரப்பும், தஞ்சாவூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், பாபநாசம் வட்டத்தின் மேற்குப் பகுதியும் கூடிய வளம் நிறைந்த பகுதியே நித்த விநோத வள நாடாகும். இவ்வள நாட்டுள் ஆவூர்க் கூற்றம், நல்லூர்நாடு, காந்தார நாடு, கரம்பை நாடு, கிழர்க் கூற்றம், பாம்புணிக் கூற்றம், முடிச் சோழநாடு, பொய்யூர்க் கூற்றம், பூண்டி நாடு என்ற பிரிவுகள் உள்ளன. இதன் தென் சிறையாக இணைந் திருந்ததே வீர சோழ வள நாடு. இரண்டு வள நாட்டிலும் இடம் பெற்றிருந்ததும், வெண்ணி நகரப் பெருங்குறி சபையோடு கூடியதுமான கூற்றமே வெண்ணிக் கூற்ற மாகும்.'

இவ்வெண்ணிக் கூற்றத்துள், 1. முல்லை வாயில், 2. மதநாலய மங்கலம், 3. பாப்பார குலத்தூர், 4. அவநிகேசரி, 5. கொட்டையூர், 6. நகரம் சோழ விச்சாதிர சதுர்வேதி மங்கலம், 7. தேவன் மங்கலத் தூர், 8. வெண்ணி நகரம், 9. பெரு நங்கை மங்கலம், 10. அவாயச் சதுர்வேதி மங்கலம், 12. பூண்டி யாகிய ஒலோகமாதேவிச் சதுர்வேதி மங்கலம், 13. வெண்ணுப் புத்தூர், 14. நெற்குன்றத்தூர் ஆகிய ஊர்களின சபைகள் அங்கம் வகித்தன.

இதனைப் போன்று எல்லா மண்டலங்களுக்கும், வளநாடுகளுக்கும், நாடுகளுக்கும் எல்லைகள் தெளிவாக்கப்பட்டு, அவற்றின் பகுதிகள் நன்கு விளக்கப் பட்டிருந்தன யென்பதனைக் கல் வெட்டால் அறியலாம்.

அக்காலத்திய சோழப் பெருநாட்டின் கண்ணுள்ள மண்டலங்கள் கதற்காலத்திய மாகாணங்களுக்கும் (States), அக்காலத்திய வளநாடுளள் தற்காலத்திய மாவட்டங் களுக்கும் (Districts), அக்காலத்திய நாடுகளும் கூற்றங்களும் தற்காலத்திய வட்டங்களுக்கும் (Taluk) நிகரானவை எனப்தும் ஈண்டு உணரத் தக்க தாகும்.

நகரங்கள்

நாட்டின் அணிகலன் நகர மாகும். வளங் கொழிக்கும் பெரிய மாளிகையைக் குறிக்கும் 'நகர்' என்பதன் அடிச் சொல்லிலிருந்த 'நகரம்' பிறந்த தாதலின் பெரிய மாட மாளிகைகள் நிறைந்த இடமே நகர மாகும் என்பது நன்கு விளங்கும். நகரங்களுள் தலை சிறந்து விளங்குவது தலைநகராகும். பண்டைக் காலத்தில் சோணாட்டின் கண் புகழ் பெற்ற நகரங்கள் பல காணப்பட்டன. அவை அழகும் செல்வமும் பெற்று விளங்கின.

பண்டைக் காலத்தில் புலவர்கள், பெண்கள் அழகினை நகரத்துடன் ஒப்பிட்டுக் கூறுவதனை மராபாகக் கொண்டிருத்தலின், பெண்களின் அழகினை, விரும்பிப் போற்றினர் எனலாம். பண்டைய நகரங்கள் அனைத்தும் வாணிகச் சிறப்பும், தொழிற் சிறப்பும், வளமும் பெற்றுத் திகழந்தன. நகரங்கள் அமைத்தலில் நம் முன்னோர் சிறந்து விளங்கினர். நகரங்களுள் தலைசிறந்து விளங்குவது தலைநகர மாகும். தலை நகரத்தில் இருந்துதான் மன்னன் ஆட்சி புரிதல் பண்டைய மரபாகும். தலைநகரம், திட்டமிட்டு அமைக்கப்பட்டு, அரண்மனை அல்லது கோயிலை மையமாகக் கொண்டு, ஆறு போன்று நீண்டு அகன்ற தெருக்களையும், பாதுகாவல் மிக்க கோட்டையையும், அகழியையும் கொண்டு கவினுற்று விளங்கிற்று.

'மண்ணுற ஆழ்ந்த மணி நீர்க் கிடங்கின்

விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை

தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையின நிவந்த மாடமொடு'

எனவரும் 'மதுரைக் காஞ்சி' அடிகளால் அறியலாம்.

மூவேந்தர்களுள் மங்காச் சிறப்பினைக் கொண்ட சோழ வேந்தர் ஆட்சிக் காலத்து உறையூர், கருவூர், அழுந்தூர், குட வாயில், திருவாரூர், தஞ்சை, பழையாறை, கங்கை கொண்ட சோழபுரம், ராஜராஜபுரம் என்பன அகநாட்டுத் தலைநகர்களாகவும், காவிரிப்பூம் பட்டினம் போன்றன கரை நாடுத் தலைநகர் களாகவும் விளங்கின. பழையாறை நகர் நந்திபுரம், ஆயிரந்தளி, முடி கொண்ட சோழபுரம் எனவும் அழைக்கப் பெறுகிறது. விசயாலயன் வழியில் வந்த சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பழையாறை, தஞ்சை, கங்கை கொண்ட சோழ புரம், ராஜராஜபுரம் என்பன தலைநகரங்களாக விளங்கின.

நம் ராஜேந்திர சோழனது ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் தஞ்சையே தலைநகரா யிருத்திருக்க வேண்டும். ஏனெனில், ராஜேந்திர சோழன் தனது கங்கை வெற்றிக்குப் பின்னரே கங்கை கொண்ட சோழ புரத்திற்குத் தனது தலைநகரை மாற்றினான். இவன் ஏறத்தாழக் கி.பி. 1025 இல் கங்கை கொண்ட சோழ புரத்தைத் தலைநகராய்க் கொண்டிருத்தல் வேண்டு மென்று நாம் கருத இடமுண்டு.

பிற்காலச் சோழ வமிசத்தைத் தோற்றுவித்த விசயாலயன் கி.பி. 846 இல் முத்தரையர்களை வென்று, தஞ்சையைக் கைப்பற்றி, அதனைத் தலை நகராகக் கொண்டான். தஞ்சை, 'தஞ்சாபுரி' என்றும் 'இஞ்சி சூழ் தஞ்சை' என்றும் போற்றப்படுகிறது. இஞ்சி யென்பது மதில் எனப் பொருள்படும். எனவே, தஞ்சைப் பெருநகரானது உள்மதில், புறமதில் ஆகிய மதில்களைக் கொண்டு மிகப் பெரிய நகராக விளங்கியது

என்பது புலனாகும். தஞ்சை ஏறத்தாழ 180 ஆண்டு காலம் சோழர்களின் தலைநகராக விளங்கிய சிறப்புடைய தாகும். நம் முதலாம் ராஜேந்திரனால் அமைக்கப் பட்ட புதிய தலை நகரான கங்கை கொண்ட சோழபுரம் ஏறத்தாழ 250 ஆண்டுகளாகச் சோழர்களின் தலைநகராகச் சிறப்புற்று விளங்கியது. இந்நகரின்கண் ராஜேந்திரனால் கட்டப் பெற்ற கங்கை கொண்ட சோளேச்சரர் ஆலயம் கலைச் சிறப்பு மிக்க தாகும். கங்கை கொண்ட சோழ புரத்தின் முழு விவரங்களைக் 'கலைத் தொண்டு' என்னும் பகுதியில் காண்க.

சோழர்கள், பல்லவர்களை முறியடித்த பின்பு 'காஞ்சி மாநகரினைத்' துணைத் தலைநகரமாகக் கொண்டு, சில காலம் அங்குத் தங்கி இருந்தனர். நம் ராஜேந்திரனும் மேலைச் சாளுக்கியரின் மீது படையெடுத்த போது, காஞ்சி அரண்மனையிலிருந்து புறப்பட்டடான் என்று கல்வெட்டு உணர்த்துகின்றது. காஞ்சியில் ஜீன காஞ்சி எனும் பகுதியில் சோழர்கள் தங்குவதற்குக் கொட்டகாரம் ஒன்று அமைத்திருந்தனர். கொட்ட காரம், அம்பலம் எனவும் அழைக்கப்பட்டது. இஃது உலோகங்களால் அமைக்கப்பட்டதாதலின் தீயினால் அழிக்க முடியாததாக இருந்தது.

நம் ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுர அரண்மனையில் மட்டுமன்றிக் காஞ்சி அரண்மனையிலும், பழையாறை அரண்மனையிலும், தஞ்சை அரண்மனையிலும் சில காலம் தங்கினான். மன்னனது அரண்மனையில், அவனுக்குப் பணிபுரிய ஏவலர்கள் பலர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் தமக்கு இடப்பட்ட கட்டளைகளை அட்டியின்றி முடித்தனர். அவர்களுள் சிலர் மன்னனின் மெய்க் காப்பாளர்களாக விளங்கினர் என்பதைத் 'திருமெய்க்காப்பார்' என்று சில சமயங்களில் குறிப்பிடப் பெற்றிருத்தலின் இனிது அறியலாம். மன்னனுக்குப் பணி புரியும் பரிவாரங்கள்

மன்னனைத் தெய்வமாகப் போற்றினர்.

வேளங்கள் (Velans) என அழைக்கப்பெறும் இவ்வரண்மனை ஊழியர்கள், குடியிருப்பதற்கெனத் தனிக் குடியிருப்புகள் தஞ்சையிலும், கங்கை கொண்ட சோழ புரத்திலும் அமைக்கப் பட்டிருந்தன. அரச குடும்பத்தினர் பலர் தனித் தனி மாளிகையில் வசித்தனர். இவர்கள் தமக்கெனத் தனியாக ஏவலர்களை அமர்த்திக் கொண்டனர். கங்கை கொண்ட சோழ புரத்தில், பல மாளிகைகள் இருந்தன என்பதால் இவை இனிது விளங்கும்.

அரண்மனைக் காரியங்களைக் கவனிக்க மாளிகை நாயகம், திருமுகக் கணக்கு, அகப் பரிவாரம், அணுக்கச் சேவகம், உழைச் சுற்றாளர், அடையாளக்காரர் போன்றவர்கள் நியமிக்கப்பட்டனர்.

மன்னனின் முன்னோரின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறிக் குடிப் பெருமையை உணர்த்தி, மன்னனின் ஊக்கத்தினையும், வீரத்தையும் கிளருமாறு 'ஏத்தாளர்' என்ற பாடகர் பலரிருந்தனர்.

மத்திய அரசு

மன்னன், தான் விரும்பிய செயலைத்தானே தன்னிச்சைப்படி நடத்துதற்கு அதிகாரம் பெற்றவ னெனினும், அரசியல் அதிகாரிகளுடனிருந்து ஆராய்ந்தே செயல்படுத்தினான். ஆட்சித் துறையின் பல்வேறு கிளைகளின் நிருவாகத் தலைவர்கள், மன்னனுக்கு ஆட்சி நிர்வாகத்தில் உற்றதுணையாக, ஊன்று கோலாக விளங்கியிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் காணக் கிடக்கின்றன.

நாட்டின் அன்றாட நிர்வாகத்தில், உடன் கூட்டத் ததிகாரிகள் என்றழைக்கப்படும் உயர்மட்ட அதிகாரிகள், மன்னனுக்குப் பெருந்துணை புரிந்ததாகக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. இவர்கள் மன்னனின் தேவைகளைக் கவனித்து வந்தனர்.

அரசாட்சியில் மன்னனுக்குப் பெருந்துணை புரிந்தவர் அமைச்சர்களும், தலைமைச் செயலாளருமாவர். இவர்களைக்

கலந்து கொண்டுதான் மன்னன் ஆணை பிறப்பிப்பது வழக்கமாயிருந்தது. சோழப் பெருமன்னர்கள் அமைச்சர் குழு ஒன்றனையும், அதன் தலைவரான முதலமைச்சரையும் நியமனம் செய்து, அவர்களின் ஆலோசனைகளை அவ்வப்பொழுது கேட்டு நாடாட்சி புரிந்தான் என்பதனை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். அரசியல் அலுவலர்களுள் 'பெருந்தனத்தார்', 'சிறுதனத்தார்' என இரு பிரிவுகள் நிலவி வந்தன. உயர்தரச் செயலாளர் பெருந்தன மெனவும், கீழ்ப் பிரிவுச் செயலாளர் சிறுதன மெனவும் அழைக்கப் பெற்றனர். இவ்வலுவலர் பதவிகள் பெரும்பாலும் பரம்பரை யுரிமை பற்றி வரலாயின.

'மத்தியஸ்தன்' எனப்படும் அலுவலரும் மன்னனுக்குப் பேருதவி புரிந்து வந்தான். இவன் 'கரணத்தான்' எனவும் அழைக்கப்பெறுகிறான். ஊரார் தீட்டிய ஆவண ஓலையில் கையொப்பமிட்டு மன்னன் சார்பாகத் தன் இசைவினைத் தெரிவித்தல் இவனது கடனாகும்.

ராஜேந்திரனது கரத்தைச் செப்பேட்டினைக் கொண்டு சதுர்வேதி ஸ்ரீ ஜகநாதன் என்பான் இம்மன்னனது அமைச்சனாகப் பணிபுரிந்து புகழ் பெற்றான் என்பது புலனாகிறது.

ஐம்பெருங்குழு என்ற அதிகாரச் சுற்றம், மன்னனுடைய ஆட்சிக்கு, அடிப்படைத் துணையாயிருந்தது. ஐம்பெருங்குழுவிற்கு அடுத்து, அதனினுஞ் சற்று விரிவாக விளங்கிய அதிகாரச் சுற்றம் எண்பேராயம் என்பதாகும்.

ஊறுதிச் சுற்றம் என்ற குழு மன்னனுடைய நன்மையையும், உடல் நலத்தையும் கவனித்த வந்தது.

அரசியற் பொறுப்புச் சுற்றம் என்ற குழு, மன்னனில்லாத அல்லது அவன் கடுநோயுற்ற பொழுது அரசியலைக் கவனித்தது.

அரசியல் அலுவலர்கட்கு நில மானியங்கள் வழங்கப்பட்ட தன் மூலம் ஊதிய மளிக்கப்பட்டது. இதனை 'ஜாகீர்' முறையுடன் ஒப்பிட்டுணரலாம். இதைத் தவிரப் போர்த் திறைப் பொருள்களிலும், அலுவலர்கட்குப் பங்கு கொடுக்கப்ப்ட்டது.

சோழர் காலத்தில் அதிகாரம் மையப்பட்டிராமல் பன்முகப் படுத்தப்பட்டிருந்தது போற்றத் தகுந்த தொன்றாகும். அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டதால் அலுவலர்கள் முறையாகத் தம் கடமைகளை ஆற்ற முடிந்தது. மேற் கூறியவற்றால்,

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பார் இலானும் கெடும்.

என்னும் குறள் மொழிக் கிணங்க மன்னன், தன் மனம் சென்ற வழி ஆட்சி நடத்தாது அறிஞர் பெருமக்களின் அறிவுரை கேட்டு ஆட்சி நடத்தினான்.

அரசியல் அதிகாரிகளும் கடமைகளும்

சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் பல்வகைத் துறைகளையும் நிருவகித்த பெருமை, அதிகாரிகளைச் சாரும். இவர்களுள் அமைச்சர் முதன்மை பெற்றவராவர்.

ஐம்பெருங் குழு

அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் என்னும் ஐவர் குழுவின் பெருந்தொகுதியே ஐம்பெருங்குழு என அழைக்கப்படுகின்றது.

சோழ நாட்டில், தூதர்கள் பெருந்தொகையினரா யிருந்தனர் என்பது தெளிவு. அரச தூதர் சட்டையுந் தலைப்பாகையும் அணிந்திருந்தனர்.

தூதர் மன்னன் விடுத்த செய்திகளைப் பிற மன்னரிடத்துக் கொண்டு சேர்ப்போ ரென்றும் மன்னனின் கட்டளையை நாட்டதிகாரிகளிடத்தும், ஊரதிகாரிகளிடத்தும் கொண்டு சேர்ப்போ ரென்றும் மன்னனின் கட்டளையை நாட்ட

திகாரிகளிடத்தும், ஊரதிகாரிகளிடத்தும் கொண்டு செல்வோ ரென்றும் இருவகைப் படுவர். இவர்கள் அதிகாரிகள், மன்னர், இளவரசர் ஆகியோரால் மதிக்கப்பட்டனர்.

எண் பேராயம்

கரணத்தியலவர் (கணக்கர்), கரும விதிகள் (மன்னது கட்டளையை நிறைவேற்றும் அதிகாரிகள்) கனகச் சுற்றம் (பண்டாரம் எனப்படும் நிதியக யதிகாரிகள்), கடை காப்பாளர் (அரண்மனை வாயிற் காவலர்), நகர மாந்தர் (நகரப் பெருமக்கள்), வணிகப் பெருமக்கள், படைத்தலைவர், யானை மறவர் இவுளி மறவர் (குதிரைச் சேவகர்), என்னும் கூட்டத்தாரின் பெருந்தொகுதி எண் பேராய மாகும்.

உறுதிச் சுற்றம்

குறிக்கப்பட்ட படைத் தலைவர், நிமித்கர், மருத்துவர், நட்பாளர், அந்தணர் ஆகிய ஐவர் சேர்ந்த குழு உறுதிச் சுற்றமாகும். மன்னனைப் பேணிப் பாதுகாப்பது இக்குழுவின் கடமையாகும்.

அரசியற் பொறுப்புச் சுற்றம்

ʻஆசான் (புரோகிதன்), பெருங்கணி (கணியர் தலைவன்), அறக்களத் தந்தணர் (நியாய சபையினர்), காவிதி (வரியதி காரிகள்), மந்திரக் கணக்கர் (அரச கட்டளை எழுதுவோர்) ஆகிய ஐந்திறத்தாரைக் கொண்டது, அரசியற் பொறுப்புச் சுற்றமாகும். மன்னனில்லாத போழ்து, நாட்டாட்சியினை மேற்கோள்ளும் பெரும்பொறுப்பு இக்குழுவினைச் சார்ந்தது.

அரசவை

மன்னன், சூழ்வினை அமைச்சர், படைத்தலைவர் பல்வேறு ஆள்வினைத் திணைக் களத்தலைவர், பெருங்கணி, ஆசான், பல் வகைப் புலவர், மற்றும் நாள்தோறும் குழுமி யிருக்கும் நிலையான கூட்டம் அனைத்தும் அரசவை எனப்படும். அரசவை கூடுமிடம் அவைக்கள மாகும். அவைக் களத்தின்கண் மன்னன்

முக்கிய இடத்தினை வகிப்பான். மன்னனுக்கடுத்து முதலமைச்சனே தலைமை யிடத்தினை வகிப்பான்.

படைத் தலைவன்

மன்னனது காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை இவற்றிற்குத் தலைமை வகித்துப் போர் நிகழுங் காலங்களில், படை நடத்திச் சென்று போர் செய்வோன் படைத் தலைவனாவான். மன்னனின் வெற்றிகட்கு இவனே காரண மாவான்.

நாட்டதிகாரிகள்

நாட்டதிகாரிகள் ஒவ்வொரு உள்நாட்டிற்கும் தலைவர்களாய் விளங்குவோராவர். இவர்கள் தமது கண்காணிப்புக் குட்பட்ட நாட்டைச் சுற்றிப் பார்த்துக் குடி மக்களின் நலன்கள், அற நிலையங்கள், நிதி வழங்கும் முறை, முதலானவற்றை மேற் பார்வையிட்டு மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வர்.

நாடு காவலதிகாரி

நாட்டிலுள்ள ஊர்களில் களவு, கலகம், அமைதி யின்மை, போன்ற தீச் செயல்கள் நடவாமல் காத்துவரும் அதிகாரி நாடு காவலதிகாரி யாவார். இதனால், நாட்டில் குழப்பங்கள் அப்போ தைக்கப் போது அடக்கப்பட்டன.

நாட்டை அளப்போர்

ஒவ்வொரு நாட்டையும், கூறுபட அளவிட்டுக் கணக்கில் வைப்போர் நாட்டை அளப்போராவர். முதலாம் ராஜராஜனது ஆட்சிக் காலத்தில் சோழப் பெருநாடு முழுதும் அளக்கப்பட்டது.

நாடுகண் காட்சி

நாடுகண் காட்சி என்போர், நாட்டை அளப்போர் சரியாக நாட்டை அளந்துள்ளனரா என்பதை மேற்பார்வையிடும் அதிகாரிகளாவர்.

வரியிலார்

இவர்கள் கூறுபட அளந்திட்ட நாட்டின் நிலங்களின் மீது வரியிட்டு, வரிகளின் மூலம் தண்டப்படும் தொகையைக் கணக்கில் எழுதி வைப்பவராவர். ஊர்களிலும், தலைநகரிலும் தண்டப்பட்டு வந்த வரித்தொகையின் கணக்கையும் இவர் பதிவார்கள்.

வரிக்குக் கூறு செய்வோர்

ஒவ்வொரு ஊரினின்றும் மன்னனுக்கு வரவேண்டிய காணிக் கடனின் கணக்கினை வைப்போர் வரிப் பொத்தகம் என அழைக்கப் பெற்றனர். காணிக் கடன் என்பது நிலவரியாகும். கிழான் அரங்கன் வீதி விடங்கன் என்பான் ராஜேந்திரனின் காலத்து வரிப் பொத்தகமாக அமர்த்தப்பட்டான். இறையான் சேரிக் கிழவன் புழமதனிராமன் என்பானும் இப்பணியில் அமர்த்தப்பட்டான்.

புரவு வரி

புரவு வரி என்போர் நிலவரி நீங்கிய இறையிலி நிலங்களிலிருந்தும், ஊர்களிலிருந்தும், வருவதற்குரிய பிற வரிகளின் கணக்கினைப் பதிவு செய்பவராவர்.

புரவு வரித் திணைக் களம்

புரவு வரித் தொகுதி புரவு வரித் திணைக் களம் எனப்படும். நம் ராஜேந்திரன் காலத்தில் 1. பொன்னன் கொண்டயன், 2. சிறுகுடையான் அடிகள் திருமணி, 3. ஆலங்குளவன் ஆதித்தன், 4. சூல பாணி அருமொழி ஆகிய நால்வருமம வரித் திணைக் களப் பணியாற்றினர் என்பது கல்வெட்டால் அறியப்படுகிறது.

புரவு வரித் தணைக் களத்துக் கண்காணி

புரவு வரித் திணைக் களத்துக் கண்காணி என்போர், புரவு வரித் திணைக் களத்து அதிகாரிகளைக் கண்காணிக்கும் உயர் அதிகாரி யாவர். 1. பெரும்பேற்கிழான் பட்டன் வாசுதேவன், 2. சீகண்டன் சேந்தன் ஆகிய இருவரும் நம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் புரவு வரித் திணைக் களத்துக் கண்காணிகளாவர்.

புரவு வரிச் சீகரணம்

புரவு வரித் திணைக்களத் தலைமைக் கணக்கனின் தலைவன் புரவு வரித் திணைக்கள நாயகம் எனும் பெயரால் அழைக்கப்பட்டான்.

கருமி

'ஓலை நாயகம்' என்னும் அதிகாரியால் சரி பார்க்கப்பட்ட மன்னனது ஆணையைப் பதிவேட்டில் பதிவு செய்யும் அதிகாரி 'கருமி' எனப்படுவார். இவ்வாறு பதிவு செய்யப்படுதலே 'வரி யிலிட்டுக் கொள்வது' என்ப தாகும்.

வரியிலீடு, புரவு வரித் திணைக்கள முகவெட்டி

மேற்கூறிய அதிகாரிகளைப் போல இவ்விருவரும் வரியதிகாரிகளாவர்.

ஓலை எழுதுவோன்

மன்னனது ஆணையினை ஓலையில் எழுதுவதால் இவன் ஓலை எழுதுவோன் எனப்பட்டான். ராஜேந்திரனது கூழம்பந்தல் கோயில் கல்வெட்டினால் மகிபால குலகாலன் என்பான் இப்பணியினைச் செய்தான் என அறிய முடிகின்றது.

'இப்படி வரியிலிட்டுக் கொள்க வென்று நாம் சொல்ல நம் ஓலை எழுதும் சயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் முடிகொண்ட சோழன் எழுத்தினாலும்' என ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேடு குறிப்பிடுவதனால், அரையன் முடிகொண்ட சோழன் என்பான் ஓலை எழுதுவானாகப் பணி புரிந்தான் என்பதை அறிகிறோம்.

ஓலை நாயகன்

ஓலை எழுதுவோரால் எழுதப்பட்ட மன்னனின் ஆணைகளைச் சரிபார்க்கும் பொறுப்பினை யுடையவர் ஓலை நாயகமாவார். 1. விக்கிராம சோழ சோழிய வரையன், 2. ராஜராஜ பிரம்ம ராயன், 3.

உய்யக் கொண்டர் வளநாட்டு வெணாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து நராக்கன் கிருட்டிணன் இராமனான ராஜேந்திர சோழப் பிரம்ம ராயன், 4. உய்யக் கொண்டார் வள நாட்டுத் திரைமூர் நாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரை சூருடை யான் ஈராயிரவன் பல்லவயனான உத்தம சோழப் பல்லவரையன், 5. அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டு உத்தம சோழ நல்லூருடையான் பாளூர் அம்பலத் தடியான முடி கொண்ட சோழ விழுப்பரையன் ஆகியோர் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் ஓலை நாயகன் என்ற அதிகாரிகளாகப் பணி யாற்றினர் என்பதைக் கல்வெட்டுகளாலும், செப்பேடுகளாலும், அறியலாம்.

நாழிகைக் கணக்கர்

அத்தாணி மண்டபத்திலும் அரண்மனையிலும், அவ்வப்போது நாழிகை யறிந்து (காலத்தை) மன்னனுக்கு அறிவிப்போர், நாழிகைக் கணக்கர் ஆவர். இவர்கள் நாழிகை வட்டிலின் துணைகொண்டு நாழிகை யறிவர்.

திருவாய்க் கேள்வி

இஃது அரச ஆணைவாய்க் கேள்வி என வழங்கப் பெற்றது. மன்னன் அவ்வப்போது திருவாய் மலர்ந்தருளும் ஆணைகளைக் கேட்டுவந்து திருமந்திர ஓலையிடம் அறிவிப்போர் திருவாய்க் கேள்வி என அழைக்கப்பெற்றனர்.

திருமந்திர ஓலை

திருமந்திர ஓலை யெனபோர் மன்னனின் ஆணையைத் திருவாய்க் கேள்வி என்னும் அதிகாரி அறிவிக்க அறிந்து அவ்வரச ஆணையினை எழுதியும் இன்னின்ன காலத்து இன்னின்ன நடத்தற்குரியன என்பதை மன்னனுக்கு நினைவூட்டியும், அவனால் நடத்தற்குரிய காரியங்களை நிர்வகித்துப் பார்த்தும், அவனின் அந்தரங்கச் செயலனாக இருந்து பணி புரிவோனாகும்.

‘முறையிடத்திரு மந்திர வோலையாண்

முன்வ ணங்கிமு ழுவதும் வேந்தர்தம்

திறையி டப்புற நின்றனர் என்றாலும்

செய்கை நோக்கிவந் தெய்தி யிருக்கவே'

என்று செயங் கொண்டார் கூறுவதாலும் இது விளங்கும்.

திருமந்திர ஓலை நாயகம்

திருமந்திர ஒலை என்னும் அதிகாரிகளுக்குத் தலைவராக இருந்து, செய்திகளைக் கண்காணிப்பவர்கள் திருமந்திர ஓலை நாயகம் என்னும் பெயரால் அழைக்கப் பெற்றனர். பொதுவாக நாயகம் என்றாலே தலைவன் எனப் பொருள்படும். நம் ராஜேந்திரன் காலத்தில் கங்கை கொண்ட சோழ புரத்து இராஜ வித்தியாதரப் பெருந்தெருவில் சோநகன், சாவூர் பரஞ்சோதி ஆகியோர் திரமந்திர ஓலை நாயகமாகப் பணி புரிந்தனர்.

பட்டோலைப் பெருமான்

நாள்தோறும் நடக்கும் அரசியல் நிகழ்ச்சிகளை, நிகழ்ச்சிப் புத்தகத்தில் குறித்து வைப்பவன் பட்டோலைப் பெருமான் எனப் பெயரிடப பட்டான்.

பட்டோலை

தபால் எழுதுவோன் பட்டோலை எனப்பட்டான்.

வாயிற் கேட்போர் (Secretarial Staff)

வாய்க்கேள்வி எனப்படும் அரசு ஆணையைக் கேட்டெழுதும் அதிகாரச் சுற்றத்திற்கு வாயிற்கேட்போர் எனப் பெயர்.

விடையில்

கிராம சபைகளினின்றும், நாட்திகாரிகளிடத்திருந்தும், பிற அதிகாரிகளிடத்திருந்தும், வரும் ஓலைகளைப் படித்தறிந்து அவற்றிற்குத் தக்கவாறு, அரசாங்க சட்ட திட்டப்படி விடையெழுதி அனுப்புவோர் விடையில் எனப்பட்டனர். மற்றும் மன்னனுடைய ஆணைத் திருமுகத்தைத் தூதுவர் மூலமாக உரியவர்கட்கு அனுப்புவோரும் இவர்களே யாவர்.

விடை அதிகாரி

மேற்கூறியவாறு தக்க விடைகளை எழுதி யனுப்பும் விடையில் என்னும் அலுவலர்களின் தலைவனுக்கு விடையதிகாரி எனப்பெயர்.

ஆணத்தி

இவர் மன்னனது ஆணையாகிய திருமுகத்தை எடுத்துச் செல்லும் அதிகாரியாவார்.

கரும விதிகள்

கருமிகள் என்னும் ஆக்க வினைத் துறையர்களை, ஏவி நடத்தி மேற்பார்வையிடும் அதிகாரிகள் கரும விதிகளாவர்.

உடன் கூட்டம்

மன்னன் தலைநகரின் கண் தங்கி யிருக்குங் காலையும், நாடு காவல் மேற்கொண்டு வெளியிடஞ் செல்லு மிடத்தும், அவனுடன் கூட விருக்கும் அரசியல் வினைக் கூட்டத்தார் உடன் கூட்டம் என அழைக்கப் பெறுவர். பல அரசியல் துறைகளின் தலைவர்கள் இக்குழுவில் இடம் பெறவர். வரி, தொழில், வாணிகம், செலவு முதலியன பற்றி மன்னன் இவர்களுடன் கலந்தாலோ சித்துச் செயல்படுவான். இவ்வுடன் கூட்டத்தை அமைச்சர குழு எனக் கூறுதல் தவறாகாது. இவர்கள் மன்னனின் உயர்மட்ட அதிகாரிகள் என்பதனைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

உடன் கூட்டத்து அதிகாரங்கள்

உடன் கூட்டத்தினருள் அதிகாரிகளா யிருப்போர் உடன் கூட்டத் ததிகாரிகளாவர். நம் ராஜேந்திரனது ஆட்சியில் உதய திவாகரன் தியன ராஜராஜ மூவேந்த வேளான் சூற்றியான் சோழ வேளான் சூற்றியான் சோழ வேளான் என்பவர்கள், உடன் கூட்டடத்துக் கருமம் ஆராய்பவர்களாக இருந்தனர் என்பது கல்வெட்டால் அறியப்படுகிறது.

பொதுவாக வினையாற்றும் காலை மன்னனைச் சூழ்ந்திருக்கும் பரிவாரம் மூன்று வகைப்படுவர். அவை ஏவற் பரிகாரம், காவற் பரிகாரம், வினைப் பரிகாரம் ஆகும்.

கட்டியங்காரன் (Herald)

மன்னன் அரண்மனையினின்றுமம வெளியில் புறப்பட்டு நாடு நகரங்களுக்குச் செல்லும் போதெல்லாம் அவனது பரிவாரத் திற்கு முன் சென்று, மன்னனது வருகையை ஆங்கு அறிவித்து மக்களை வழியினின்றும் விலக்கிப் போக்குவரத்து வசதியினை யேற்படுத்துவோன் கட்டியங்காரனாகும். தற்காலத்தில் அமைச்சர்களும் பெருந்தலைவர்களும் நகரங்களுக்கு வருகை புரியும்போது மக்கள் கூட்டத்தினை, ஒருநெறிப்படுத்தித் துரிதப் போக்குவரத்துக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும் காவல் துறைக்கு ஒப்பானவர் கட்டியங்காரர் எனக் கூறலாம்.

படையுள் படுவோன் அல்லது சின்னமூதி

மன்னன் போர்த் தொடர்பாகப் பிறப்பிக்கும் ஆணைகளை அவ்வப்போது காள மூதிப் படைகட்குத் தெரிவிப்பவன் படையுள் படுவோன் ஆவான். அவன் படைக் கிழவன், சிறுக்கன், படைச் சிறுக்கன், படைச் சிறுபிள்ளை என்பன போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டான்.

அரசாங்கச் செயலாளன்

உடன் கூட்டத்தாரின் முடிவுகளை மன்னன் ஆணைப்படி அவ்வத் துறை அதிகாரிகட்கு அறிவித்து, எப்பொழுதும் மன்னனருகேயிருந்து அரசியல் செய்திகளை மன்னனுக்கு அறிவிப்பவன் அரசாங்கச் செயலாளன் ஆவான்.

மாளிகை நாயகம் (Chamberlain)

அரண்மனைக் காரியங்களை மேற்பார்வை செய்வோன் மாளிகை நாயகம் எனப்பட்டான். அக்காலத்து அரண்மனை, மாளிகை எனவும் அழைக்கப் பெற்றது ஈண்டு நாம் நினைவிற் கொள்ளத் தக்க தாகும்.

திருமுகக் கணக்கு

திருமுகக் கணக்கு என்போன் அரண்மனை வரவு செலவுக் கணக்கு எழுதுவோனாவான்.

அரசப் பரிவாரம்

அரண்மனையில் பணி புரியும் ஏவலர்கள் அகப் பரிவாரம் என அழைக்கப்பெற்றனர்.

அணுக்கச் சேவகம்

மன்னனெடு நெருங்கிப் பணி செய்வோர் அணுக்கச் சேவகம் எனப்பட்டனர்.

உழைச் சுற்றாளர்

மன்னனுக்குக் கவரி, ஆலவட்டம் ஆகியவை வீசுவாரம் குடை, கொடி ஆகியவை பிடிப்பாரும் அடையாளக்காரர் என்றழைக் கப்பட்டனர்.

ஊர்களிலிருந்த வினைஞர்

ஒவ்வொரு ஊரிலும் மன்னனாணைப்படி ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபை நிர்வாகத்தைக் கவனித்து வந்தது. அச்சபையார் ஆளுங்கணம் எனவும், கணகப் பெருமக்கள் எனவும் வாரியப் பெருமக்கள் எனவும், கணவாரியப் பெரு மக்கள் எனவும் அழைக்கப் பெற்றனர்.

நகரத்தார்

நகர மக்களால் என்போன் ஊர்ச் சபைக் கணக்கினை எழுதி வந்தான். கணக்கு மிகுதி யில்லையாயின் அச்சிற்றூரில் கணக்கு வாரியமும், கரணத்தானும் தேவையில்லை.

பாடிகாவல்

ஊரைக் காவல் புரிவோர் பாடிகவல் என அழைக்கப் பெற்றனர். காவல் புரிவோரின் தலைவன் 'பெரும் பாடி காவல்' எனப்பட்டான். இவனே 'தலையாரி' எனவும் அழைக்கப்பட்டான். இவனுக்குக் கீழ்ப்பட்டவரைச் சிறுபாடி காவல் எனக் கூறுதல்

மரபு.

வேலி நாயகம்

கொடிக்கால், தோட்டம், தோப்பு ஆகியவற்றின் வேலைகளைக் கவனிக்கும் அலுவலன் வேலி நாயகம் எனப்பட்டான்.

வெட்டி

ஊர்ச் சபையிலுள்ள கீழ் வேலைகளைக் கவனிப்பவன் 'வெட்டி' எனப்பட்டான். இவன் 'வெட்டியான்' எனவும், 'வெட்டியாள்' எனவும் அழைக்கப்பட்டான்.

அறங்கூறவையம்

தலைநகர், பேரூர் போன்ற நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்களின் வழக்குகளைக் கேட்டு முறை செய்வதற்கு அறமன்றங்கள் அன்று இருந்தன. அம்மன்றத்தில் பல உறுப்பினர்கள் இருப்பர். அம்மன்றமே அறங்கூறவையம் என வழங்கிற்று. அறங் கூறவையம், அறக்களம், மன்றம், நியாயசபை, தருமாசனம் என்பன போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டது. அறங்கூறவையத்து உறுப்பினர்களும் நியாயத்தார், அறக்களத்தார், மன்றத்தார், தருமாசனத்தார் எனவும் அழைக்கப்பெற்றனர்.

அறப்புறங் காவலர், புண்ணியக் கணப் பெருமக்கள்

பல்வேறு இடங்களிலுள்ள மடம், மருத்துவமனை போன்ற அறநிலையங்களை மேற்பார்வை யிடுதற்குத் தனித்தனிக் குழு குழுவார் அமர்த்தப் பெற்றிருந்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்களில் இடம் பெற்றோர் அறப்புறங் காவலர் எனவும் புண்ணியக் கணப் பெருமக்கள் எனவும் அழைக்கப் பெற்றனர்.

நாடு கண்காணி நாயகம் (Kankani Nayakam of The Nadu)

வலியூருடையான் ஐயப்படி குணநிதி என்பான் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில், கோயில் வரவு செலவுக் கணக்குகளைச் சரி பார்த்தான் என்பதனைக் கோயல் கல்வெட்டால் அறியலாம்.

எனவே, நாடு கண்காணி நாயகம் அக்காலை கோயில் கணக்குகளைச் சரி பார்க்கும் அதிகாரியென எண்ணலாம்.

தண்டுவான்

ஊர்தோறும் வரிகளைத் தண்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட அரசியல் வினைஞன் தண்டுவான் எனப்பட்டான். இவன் தண்டாளன் எனவும் அழைக்கப்பட்டான்.

வண்ணக்கர்

பேரூர்கள் தோறும் பொற்காசுளையும், காசாக வழங்கின பொற்கட்டிகளையும், அளவிட்டு ஆராய்ந்து, நோட்டஞ் செய்து, முத்திரையிடும் அலுவலர் வண்ணக்கர் எனப்பட்டனர். இவ்விதம் முத்திரையிடப்பட்ட பொன்னே அரசாங்கத்தால் புழக்கத்திற்கு வெளியிடப்பட்டன.

மேற்கூறப்பட்ட இன்றியமையாத அலுவலர்களே யன்றி, வேறு சில அலுவலர் பற்றிய குறிப்புகளும், கல்வெட்டில் காணப்படுகின்றன.

இவ்வலுவலர்களின் வினை அறுதியிட்டு உறுதியாக அறியப்படவில்லை. இருப்பினும் இவ்வலுவலர்களின் பெயர்களை மட்டும் ஈண்டுக் காண்போம். இவர்கள் முதலிகள், பழ நியாயம், அரசு மக்கள், தெரிப்பு, முகவெட்டி, பெரும்பணைக்காரன், நடுவிருக்கை, சிறுதனம், பெருந்தனம், சிறுதரம், பெருந்தரம் பெருந்தரத்து மேல் நாயகம் ஆவர்.

இவற்றுள், 'நடுவிக்கை' என்போன் அறங்கூறவையத்தானாய் இருத்தல் வேண்டும் என்று எண்ண இடமுண்டு. 'நடுவிருக்கை' என்பது அரசாங்கப் பதவிகளுள் ஒன்று. குறித்த செயலொன்றை நிறைவேற்ற வேண்டு மென்று வேந்தன்பால் விண்ணப்பித்தல் இவனது கடமை யாகும், என ராஜேந்திரனின் கரந்தச் செப்பேட்டிற்கு விளக்கவுரை எழுதியுள்ள கல்வெட்டறிஞர், பேராசிரியர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் 'தமிழ்ப் பொழில்' என்னும் இதழின்கண் குறிப்பிட்டுள்ளார். இதுவும்

பொருத்தமுடைத்தே. கிராம சபையில் 'நடுவிருக்கை' என்பான் நியாயஸ்தனாவான். மத்திய ஆட்சில் 'நடுவிருக்கை' என்பான் அரசனால் எல்லை நிர்ணயிக்க நாட்டாருடன் அனுப்பப்பட்ட அதிகாரி யாவான். எனவே, இருவிதமான 'நடு விருக்கை' எனப்படுவர் என்று' திரு. கு. தாமோதரன் குறிப்பிடுகிறார்.

முதலாம் ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டின் மூலமாக அவனது காலத்தில் அருமொழி தேவவளநாட்டு, இங்கணாட்டு, இளையான் குடியான் ராஜாதித்தன் கூத்தாடியான விழுப்பரையன் என்பான் நடுவிருக்கை அலுவலனாக இருந்தான் என்பது புலனாகின்றது. பெருந்தரத்து மேல்நாயகம் என்பான் வள நாட்டதிகாரிகள் தலைவனாகவும் இருந்திருக்கக் கூடும்.

சதாசிவபட்ட சோமயாஜி, பரமேசுவரப் பட்டர் ஆகிய இரு நடுவிருக்கும் அதிகாரிகள் நம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் பணி புரிந்தனர் என்பதைக் கூழம்பந்தல் கங்கை கொண்ட சோளேச்சுரர் கோயில் கல்வெட்டா லறியலாம்.

முகவெட்டி

நம் ராஜேந்திர சோழனது ஆட்சியில் 1. சங்கரநந்திபட்டன், 2. ஐயாறன் தேவர் கண்டன், 3. நெற்குன்றங் கிழான் காமன் சந்திர சேகரன், 4. வேளான் பெருமான் என்ற நால்வரும் முகவெட்டி எனும் அதிகாரியாகப் பணியாற்றினர் என்பது, கூழம்பந்தல் கோயில் கல்வெட்டால் அறியலாம். மன்னனது அறக்கட்டளையை யுணர்த்தும் ஆணைவரி என்ற புத்தகத்தில் எழுதப்பட்டபின்பு 'முகவெட்டி' அதில் கையொப்பமிட்டுத் தங்களது இசைவினைத் தெரிவிக்க வேண்டும்.

கீழ் முகவெட்டி

முகவெட்டி என்ற அதிகாரிகட்கு உட்பட்டுப் பணி புரிந்தோர் கீழ முகவெட்டி என அழைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். 1. பட்டன் மாசறு சோதி, 2. நாராயண பட்டன் ஆகிய இருவரும் நம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்துக் கீழ் முகவெட்டி அதிகாரிகளாகப்

பணி புரிந்தனர் என்ற செய்தி கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றது.

வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்திலுள்ள கூழம்பந்தல் என்ற சிற்றூரின்கண் அமைக்கப்பட்டுள்ள கங்கை கொண்ட சோரீச்சுரர் கோயில் சுவரில் காணப்படும் கல்வெட்டில், ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில், மாணிக்கன் எடுத்த பாதமான சோழ மூவேந்த வேளான் என்பான் 'கருமம் ஆராய்பவராகவும்' சனனாதனான ராஜேந்திர சோழ பிரமாதி ராஜன் என்பான் 'ஒப்பிட்டுப் புகுந்த அதிகாரி'யாகவும், பொற்காடன் மதுராந்தகனான ராஜராஜ மார்த்தாண்ட மூவேந்த வேளான் 'கண்காணி' யாகவும் பணியாற்றியதாக அறிகிறோம்.

அதிகாரிகள் பெற்ற பட்டங்கள்

அரசியல் துறையில் மன்னனுக்கு உறுதுணையாக நின்று பேருதவிகள் புரியும் அதிகாரிகள் மன்னனால் மதிக்கப் பெற்று, அவர்களது தொண்டினைப் பாராட்டும் மகத்தான பட்டங்கள் வழங்கிச் சிறப்பிக்கப் பெறுதல் பண்டை வழக்கமாயிருந்தது. இவ்வாறு மன்னனால் பாராட்டப் பெற்றதால் அதிகாரிகள் அரசாங்கப் பணிகளில் ஊக்குவிக்கப் பெற்று, மேலும் பல தொண்டுகள் புரிய ஆவல் கொண்டனர்.

ஆங்கிலேய புரட்சியில் கூட ஆற்றல் மிக்கவர்களைப் பாராட்டும் வகையில் 'இராவ் பகதூர்', 'திவான் பகதூர்,' 'சர்' முதலான பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தமை எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருகை புரிவதற்குப் பன்னாறு ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தின்கண் நல்லாட்சி செலுத்திய சோழ வேந்தர் அரசியல் அதிகாரிகளுள் சிறந்தோர்க்கும், போர்க் காலங்களில் தம் உயிரினையும் பெரிதென மதியாது வீரப்போர் புரிந்த மறவர்கட்கும் பட்டங்கள் பல அறித்து மகிழ்ந்தனர்.

அங்கனம் மன்னரால் வழங்கப் பெற்ற பட்டங்கள் மூவேந்த வேளான், பூவேந்த வேளான், கேரள ராஜன், காலிங்க ராயன், கச்சிராயன், வாண கோவரையன், பல்லவ ராயன், சேதிராயன், காடவ ராயன், தொண்டையன், சோழ பாண்டியன், விழுப்பரையன், இடங்கோவெள், ஈழங்கொண்டார், களத்தில் வென்றார் முதலியன வாகும். இப்பட்டங்களை மன்னன் பெரும்பாலும் தன் பெயர்களோடு இணைந்தே வழங்குவது வழக்கம்.

இதன் உண்மையை ராஜேந்திர சோழ மூவேந்த வேளான் ராஜேந்திர சோழ பிரம்ம ராயன், முடிகொண்ட சோழ விழுப்பரையன், ராஜேந்திர சோழப் பல்லவராயன், நாட்டு முத்தரைய அர்த்தார் தேவன் என்ற உத்தம சோழப் பெரியரையன், வீர சோழ அணுக்கன் ஆயப்பாடி மழபாடி, குமார காலன் வாசு தேவன் என்ற அதிசய சோழ மூவேந்த வேளான், அரையன் முடிகொண்ட சோழன், நராக்கன் மாராயன் சனனாதபனான ராஜேந்திர சோழ பிரமாதிராஜன் என்று ராஜேந்திர சோழனது ஆட்சிக் காலத்தில் வழங்கப்பெற்ற பட்டங்களால் நாம் தெளிவாக அறியலாம். அன்றியும் பெருந்தரம், சிறுதரம் என்ற இரண்டு பட்டங்கள் இருதலைக் கல்வெட்டுகளின் உதவியால் அறியலாம். இவற்றின் மூலம் அக்காலத்து அதிகாரிகளுள் உயர்வு தாழ்வு நிலவியதை உணரலாம்.

இது தற்காலத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர் என அலுவலர்களைப் பாகுபாடு செய்யப்பட் டுள்ளதை ஒக்கும் எனக் கூறுதல் பொருந்தும்.

அரச ஆணை

சோழ மன்னர் காலத்து ஆட்சித் துறையில் பணிபுரிந்த ஒரு சில அலுவலர்கள் பற்றியும் அவர்களின் அலுவல்களைப் பற்றியும் இதுவரை ஒரு சிறிது கண்டோம். இவ்வதிகாரிகள்

எவ்விதமாக ஒரு பணியில் இனைந்து முறையாகப் பணியாற்றினர் என்பதை அறிந்துகொண்டால்தான், ஒவ்வொரு அலுவலரின் பணியினையும், நாம் விளக்கமாக உணர முடியம், ஈண்டு நாம் நிலக்கொடை பற்றிய மன்னனுடைய ஆணை உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும் முறையினைக் கல்வெட்டுகள் எவ்விதம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன என்பதைக் காண்போம்.

மன்னன் திருவாய் மலர்ந்தருளுகின்ற ஆணை 'திருமந்திர ஓலை' என்னும் அதிகாரியால் ஓலையில் தீட்டப்படுகின்றது. இவ்விதம் எழுதப்பட்டவற்றைத் 'திருமந்திர ஓலை நாயகம்' என்னும் அதிகாரி ஒப்பு நோக்குகிறார். ஒப்பு நோக்கப்பட்ட இவ்வாணையினை 'விடையில் அதிகாரி' என்னும் அலுவலர் 'வரி' என்ற புத்தகத்தில் எழுதும்படி பணிக்கிறார். 'உடன் கூட்டம்', 'விடையில்', 'நடுவிருக்கை' முதலிய அதிகாரிகள் அதனை எழுதும்படி செய்கின்றனர். இவ்விதமாக மன்னனது ஆணை எழுத்தால் எழுதப் பெற்றுச் சரிபார்க்கப்படுகின்றது.

இதன் பிறகுதான் 'புரவு வரித் திணைக் களம்', 'வரிப் பொத்தகம்', 'முகவெட்டி', அதிகாரிகள் தங்கள் கையொப்பங்களை அதிலிட்டுத் தங்களது. ஒப்புதலைத் தெரிவிக்கின்றனர். அவர்களது இசைவினைப் பெற்ற பின்பு இவ்வானை முழுமை பெற்று, நிறைவேற்றப்படத்தக்க தயார் நிலையி லிருக்கும்.

பின்னர், இவ்வாணை எவ்வூரைச் சார்ந்த நிலம் கொடையாக அளிக்கப் படவேண்டுமோ, அவ்வூருக்கு அரச மரியாதையுடன் அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்படும்.

மன்னன், நிலம் நன்கொடை யளிக்கும் ஆணை பற்றிய செய்தியினை முன்கூட்டியே அறிந்து கொண்ட அவ்வூர் அதிகாரிகளும் பிறரும் 'ஆணை' கொண்டு வரும்போது தங்களிருக்கை யினிற்றும் எழுந்து, கைகூப்பி வணங்கி, அவ்வாணையைத் தங்கள் தலையின் மீது கொண்டு செல்வர். பின்பு அவ்வாணை பெருமக்கள் முன்பு படிக்கப்பெறும்.

அதன் பின்னர் ஆணையில் குறிப்பிட்டுள்ள நிலத்தின் எல்லையை நிலம் கூறு செய்வோர் ஊர் கரணத்தார், நாட்டார் ஆகியோரை வைத்துக் கொண்டு 'பிடிசூழ' எல்லைகளை நிர்ணயம் செய்வார்கள்.

இவ்வெல்லைகள் மாற்றப் படாமலிருக்கும் பொருட்டும், யாவர்க்கும் தெரியும் பொருட்டும் கல்லும் கள்ளியும் எல்லை நெடுகிலும் நடப்படுகின்றன.

சிவன் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்டால் 'திருச்சூலத்தைக்' கல்லில் பொறித்து நடுதல் வழக்க மாகும்.

திருமால் கோயிலுக்கு நிலம் வழங்கப்பட்டால் 'திரு ஆழியை'க் கல்லில் பொறித்து நடுவது வழக்காயிருந்தது.

இவ்விதம் எல்லை நெடுகிலும் கல் நட்ட பின்பு எல்லாத் தரப் பினரும் சம்மதம் தெரிவித்த பின்பு, ஓலையிலுள்ள இவ்வாணை கல்லிலும் செம்பிலும் எழுதப்படுகிறது.

இது போன்ற அறக் கொடைகளைப் பற்றிய விரிவான செய்திகள் கல்வெட்டுகளைக் காட்டிலும், செப்பேடுகளில் குறிக்கப் பெற்றுள்ளன. திருவாலங்காட்டுச் செப்பேடு, பெரிய லெய்டன் செப்பேடு, அனபில் செப்பேடு ஆகியவைகளை எடுத்துக்காட்டுகாளக ஈண்டு நாம் குறிக்கலாம்.

மன்னன் அறக்கொடை வழங்கிய செய்தியினைச் செப்பேடுகள் 'அறவோலை செய்திருந்தோம்' எனக் குறிக்கிறது. மன்னனது ஆணை அனைத்தும் முதலில் ஓலையிலோ, அல்லது திரைச் சீலையிலோ எழுதப் பெற்றுப் பின்னர் கல்லிலும் செப்பேடுகளிலும் வெட்டப்படும்.

முதலாம் ராஜேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு அம்மன்னன் ஆணையைப் பிறப்பிக்கையில் உடனிருந்த அதிகாரிகள் யாவர் என்பதைக் கூழம்பந்தல் கோயில் கல்வெட்டு விளக்கிக் கூறுகின்றது. இவன் தானம் கொடுத்த போது, 'ஓலை எழுதுவோன்', 'ஓலை நாயகன்',

‘ஒப்பிட்டுப் புகுந்த அதிகாரி’ ‘உடன் கூட்டத்துக் கருமம் ஆராய்வர்’, ‘நடுவிருக்கும்‘, ‘கருமம் ஆராய்வர்’, ‘புரவுவரித் திணைக் களத்துக் கண்காணி’, ‘புரவுவரித் திணைக் களம்‘, ‘வரிப் பொத்தகம்‘, ‘வரிப் பொத்தகக் கணக்கு’, ‘வரியிலி’, ‘கீழ் முகவெட்டி’, ‘கண்காணி’ ஆகிய அதிகாரிகள் இருந்ததாகக் குறிக்கின்றது. எனவே, இவர்கள் இன்றியமையாத அதிகாரிகள் என்பது புலனாகின்றது.

அரசன் இட்ட அறவாணை எவ்வாறு எழுதப் பெற்றுச் செயல் படுத்தப்பட்ட தென்பதை முதலாம் ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேடு மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அரசிய லதிகாரிகள் எவ்விதம் தம் பணிகளைச் செய்தனர் என்பதனையும், இப்பணியில் ஈடுபட்ட அரசியலதிகாரிகள் யாவரென்பதனையும் இச்செப்பேடு விளக்கிக் கூறுவதால் இச் செப்பேடு சோழர் அரசியல் வரலாற்றின் சிறந்த ஆதாரமாகப் பயன்படுகின்றது. இதனை நாம் தெளிவாக முறையாகக் காணுதல் நலம். ‘ஆக இப்படி வரியிலிட்டுக் கொள்க வென்று நாம் சொல்ல, நம் ஓலை எழுதும் சயங் கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் மும்முடிச் சோழன் எழுதினான்’.

ஓலை நாயகம் என்னும் அதிகாரிகளான 1. நராக்கன் கிருட்டிணன் இராமனான ராஜேந்திர சோழப் பிரமாதிராயன், 2. அரையன் ராஜராஜனான விக்ரம சோழர் சோழியவரையன், 3. அரை சூருடையான் ஈராயிரவன் பல்லவனான உத்தம சோழப் பல்லவரையன், 4. பாளூர் அம்பலத்தடியான முடி கொண்ட சோழ விழுப்பரையன் ஆகியோர் ஓலையில் பொறிக்கப் பட்டுள்ள செய்தியினைச் சரி பார்த்தனர்.

பின்னர், 1. நராக்கன் மராயன் சனாதான ராஜேந்திர சோழ பிரமாதிராஜன், 2. காஞ்சி வாயிலுடையான் உதய திவாகரன் தில்லை யாளியான ராஜராஜ மூவேந்த வேளான், 3. ராஜாதித்தன் வத்தாடியான பரகேசரி விழுப்பரையன், 4. பரமேசுவர சர்வ

கிருத்தியாஜி மாவடிகள் ஸ்ரீதர ஸ்ரீபட்டசோமயாஜி ஆகிய அரச கருமம் ஆராய்பவர் அவ் வோலையினைப் பார்த்து, அரச கரும அணுக்கத்தினர் என்னும் அதிகாரிகளுக்குச் சரி பார்க்கும் பொருட்டு அனுப்பி வைத்தனர்.

இவ்வோலையைச் சரிபார்த்த அரச கரும அணுக்கத்தினராகப் பணி புரிந்த அதிகாரிகள் கீழ்க்கண்டோராவார் என்பதனையும் இச்செப்பேடு குறிப்பிடுகின்றது.

1. வயலூர் கிழவன் தத்தன் சேந்தனான ராஜேந்திர சோழ அணுக்கப் பல்லவரையன்

2. பரகேசரி நல்லூருடையான் மாணிக்கன் எடுத்த பாதமான சோழ மூவேந்த வேளான்

3. சிறிஞார் கிவன் தன்னிச்சை ஆதித்தன்

4. வைப்பூர் கிழவன் தீரன் பாஸ்கரன்

இந்நாஸ்வரால் சரிபார்க்கப்பட்ட இவ்வோலை நிலவரி நிருவாகத் துறைத் தலைமை யதிகாரி (புரவு வரித்திணைக் களத்துக் கண்காணி)க்க அனுப்பப்படும். அறக் கட்டளைக்குரிய ஊர்களின் முன்னாள் பெயர், வரிவகை ஆகியவற்றைக் கண்காணிப்புச் செய்வது இவ்வதிகாரியின் கடனாகும்.

புரவு வரித்திணைக் களத்துக் கண்காணி என்னும் அதிகாரியான விசாலூர்க் கிழவன் கணபதி அழகியான் அறக்கட்டளைக் கரிய ஊர்களின் விவரம் பற்றிக் கண்காணிப்புச் செய்தான். பின்பு,

புரவு வரித் திணைக் களம் என்றழைக்கப்படும் நிலவரி நிருவாகத் துறையதிகாரிகளான 1. பூஞ்சாற்றுடையான் நக்கன் அரங்கன், 2. தலையூருடையான் நக்கன் தாமோதரன், 3. அழிஞ்சில் மங்கல முடையான் நாகன் நக்கன், 4. பெரும்பேடுகிழன் பட்டன் வாசுதேவன் ஆகியோர் வரிமுறையைத் தணிக்கை செய்தனர்.

அதனை வரிப்பொத்தகம் என்னும் அதிகாரியான இறையான் சேரி கிழவன் புழமதனி ராமன் பார்த்து,

முகவெட்டியெனும் அதிகாரிகளான 1. உவர்க்குடி கிழான் அரையன் கணபுரம், 2. இலுப்பையூ ருடையான் இராமன் அமலன், 3. வீராண முடையான் நூற்றெண்மன் கரூணாகரன், 4. பனையூருடையான் காவிதி வெண்காடன் ஆகியோருடன் ஒப்படைத்தான். அவர்கள் தம்மிடம் உள்ள கணக்குகளுடன் ஒப்பிட்டுச் சரி பார்த்தனர். பின்பு,

வரிப்பொத்தகக் கணக்கு என்னும் அதிகாரியான செல்காரூருடையான் நாதுங்கன் கருத்தன் நிலத்தின் கணக்கோடு இறையிலி அளவையும் குறித்து வைத்த பின்பு அதனை வரியிலிடு எனும் அதிகாரியான நிலவரிக் கணக்கில் புது வரிகளைச் சேர்க்கும் பணி பூதிக் குடையான் சிங்கன் புலியன் மேற்பார்வையிட்டு வரிப் பொத்தகக் கணக்கில் இறையிலியாக இடடெழுதி அரச கட்டளை ஓலையைப் பூர்த்தி செய்தான்.

பின்பு பட்டோலை (மன்னனது கட்டளை ஓலைகளை அதிகாரிகள் சரிபார்த்து நிறைவு செய்த பின் ஓலையைத் திருமுகமாக எழுதுவோன்) என்னும் அதிகாரியான நரிக்குடையான் சத்தி இராமன் அரச ஆணை ஓலையைத் திருமுகமாகத் தீட்டினான்.

பின்பு, அரசாணைகளைத் தணிக்கை செய்யும் துறைகளின் தலைமை யதிகாரிகள் ஒன்று கூடிக் கையெழுத்திட்டு ஒப்புதல் தெரிவித்தனர்.

இவ்விதம் முறையாகத் தணிக்கை செய்யப் பெற்ற பின்பு, மன்னன் ராஜேந்திரன் தான் பிரமதேய மாகும் கிராமங்களை அறிவோலை செய்யக் கருதி, 1. வீரசோழ வள நாட்டினை யளந்து வகை செய்யும் 'கண்காணி நாடுவகை புரியும் அதிகாரி களத்தூர் கிழவன் சிறியான் ஆதித்தன்', 2. புரவு

வரித்திணைக்களம் என்னும் அதிகாரி பூஞ்சிற்றூருடையான் நக்கன் அரங்கன், 3. விளாநாட்டு ராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்துக் கவுணியன் கிருஷ்ண மாற்பட்டன் ஆகிய மூவரையும் மன்னனே நியமித்துத் தானத்துக்குரிய ஊரவர்களுடன் அருகிருந்து எல்லைகளைக் காட்டிப் 'பிடி சூழ்ந்து பிடாகை நடந்து எல்லைகட்குக் கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து போகவும்' என்று திருவாய் மலர்ந்தருளினான்.

மன்னனது ஆணையைத் திருமந்திர வோலை என்னும் அதிகாரியான ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் கிழவன் அரையன் முடி கொண்ட சோழன் எழுதினான். அத்திருமுகத்தினைத் திருமந்திர ஓலை நாயகம் எனும் அதிகாரிகள் பார்த்து ஒப்புதல் செய்தனர். பின்பு, முறைப்படி அறவோலைப்படி சாசனம் செய்யப்பெற்றது.

இவ்வறவோலை மூலம் ராஜேந்திர சோழன் ஐம்பத்தோரூர்களையும் ஓரூராக இணைத்துத் தனது தாயின் பெயரால் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயரிட்டுத் தமது எட்டா மாட்சி யாண்டில் பிரமதேய மாக்கினான்.

அரசிறை

சோழர் காலக் குடிகள் தம் மன்னனுக்குச் செலுத்தி வந்த நிலவரியே அரசிறை எனப்பட்டது. இது காணிக் கடன், செய்க்கடன் எனவும் அழைக்கப்பட்டது. நிலம், விளை நிலம், விளையா நிலம் என இரு வகையாகப் பகுக்கப்பட்டன. இக்காணிக் கடன், விளையும் நெல், வரகு போன்ற தானியங்களுள் ஒரு பகுதியாகவோ, பொன்னும், காசுமாகவோ செலுத்தப்படுவது வழக்கம். இக்காணிக்கடன் குடிமக்க ளிடமிருந்து ஊர்ச்சபையாரால் ஆண்டுதோறும் வசூலிக்கப்பெற்று மன்னனது தலைநகரத்திலுள்ள அரசாங்கக் கருவூலத்திலுள்ள தலைமைப் பண்டாரம் பெற்றுக் கொண்டு

பதிவு செய்து கொள்வார்.

கடந்த ஈராண்டிற்கும் நிலவரி செலுத்தாத குடிமகன் நிலங்கள் மூன்றாமாண்டுத் தொடக்கத்தில் பறிமுதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுவது வழக்கம். அங்கனம் விற்றமையால் கிடைத்த பொருள் அரசாங்கத்தில் சேர்க்கப்படும். இவ்வதிகாரம் ஊர்ச் சபையார்க்கே கொடுக்கப்பட்டதால் வரி வசூல் எளிதாயிற்று

வரி வகைகள்

சோழர் காலத்தில் ஏறத்தாழ 400 வகையான வரிகள் வசூலிக்கப்பட்டன. நிலவரியே யன்றிக் கண்ணாலக் காணம், குசக்காணம், நீர்க்கூலி, தறியிறை, தரகு, தட்டாரப்பாட்டம், இடைப் பாட்டம், ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப் பாறை, நல்லா, நல்லெருது, நாடுகாவல், உலகு, ஈழப்பூட்சி முதலான வரிகளும் சோழர் அரசியலில் இருந்துள்ளன.

கடன், கூலி, குறை, பாட்டம், பூச்சி என்பன வரிகளையுணர்த்தும் மொழிகளாகும்.

வரிகளின் பட்டியல் மிகுந்துள்ளதால் சோழர் காலத்தில் அரசாங்க வரிகள் மிகுந்திருந்தன என நாம் எண்ணுதல் கூடாது. ஏனெனில், அக்காலை பற்பல தொழில்களுக்கும் வரிகள் விதிக்கப்பட்டிருந்த தென்பதை ஈண்டு நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தொழில் பெயரையும் சுட்டி வரிப் பெயரும் குறிக்கப் பெற்றிருத்தலின் வரிப் பெயர்கள் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால், தற்காலத்திலோ, தொழில் வரி எனும் பொதுப் பெயரால் பல்வகைத் தொழிலாளர்களிடம் வரி வசூலிக்கப்படுகின்றது. இத்தொழில் வரி எனும் பெயரில் பல்வகையான தொழிலாளர்களின் தொழில் வரிகளும் அடங்கி யுள்ளன என்பதை உணரும் போது இவை நன்கு விளங்கும்.

கண்ணாலக் காணம் என்பது திருமணவரி. இது மணமகனும், மணமகளும் திருமண நாளன்று அரசாங்கத்திற்குச் செலுத்தும்

வரியாகும். இவ்வரி குறைந்த அளவில்தான் வசூலிக்கப்பட்டது. முதலாம் பராந்தகனின் ஈரோட்டுக் கல்வெட்டைக் கொண்டு கண்ணாலக் காணம் எனும் பெயரில் அரைக்கால் பணம் வசூலிக்கப்பட்டதாக அறிகிறோம்.

இடைப்பாட்டம் என்பது இடைப்பூச்சி அல்லது இடைவரி எனப் பெயர் பெறும். தறியிறை என்பது தறிப்புடைவை எனப்படும். தட்டாரப் பாட்டம் என்பது தட்டுக்காயம் எனவும் தட்டொலி எனவும் வழங்கப் பெற்றது. நாடு காவல் எனும் வரி, பாடி காவல் எனவும் வழங்கப்பெற்றது. இஃது ஊர்களைக் காத்தற் பொருட்டு வாங்கப்பட்ட ஒரு தனி வரியாகும். உல்கு என்பது சுங்க வரியாகும். கள் இறக்குவோர்மீது போடப்பட்ட வரி ஈழம்பூட்சி எனப்படும். மேற் கூறப்பட்ட வரிக ளெல்லாம், எல்லாக் காலத்தும், எல்லா விடத்தும், எல்லாரிடத்தும் வசூலிக்கப்பட்டவை யல்ல. சங்க காலத்தைக் காட்டிலும் பிற்காலச் சோழர் காலத்தில் வரிகள் மிகுதி யாகும் என்பது ஈண்டு நோக்குதற் குரியது. இக்காலத்திலில்லாத ஆள்வரி, மணவரி முதலியன தற்காலத்திய நேர்வரியையும் (Direct Tax) விற்பனை வரி, ஓடக் கூலி முதலியன தற்காலத்திய மறைமுக வரி (Indirect Tax) யையும் போன்றவை என்பது குறிப்பிடத் தக்க தாகும்.

பாசன வரி

நம் வேந்தனது காலத்தில் ஏரி, குளங்களிலுள் நிலைநீரையும், ஆற்று நீரையும் பாய்ச்சிக் கொள்வதற்கு நீர்ப்பாசன வரியும் வசூலிக்கப்பட்டதாக அறிகிறோம். இதனை 'நீர்நிலைப் பாட்டம்', 'ஒழுக்கு நீர்ப்பாட்டம்' எனக் கல்வெட்டுகள் கூறுதலின் அறியலாகும். நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் சயங்கொண்ட சோழ மண்டலத்தில் வழக்கத்திலிருந்த வரிகள் சிலவற்றின் பெயர்களைச் சயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டில் அமைந்திருந்த கூழம் பந்தல் கிராமத்திலுள்ள கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில்

கல்வெட்டு அறிவிக்கின்றது. அவை உழவிறை, எச்சோறு, கூற்று நெல், வெட்டி, அமிஞ்சி ஆகியன வாகும். உழவிறை என்பது உழவுத் தொழில் புரிவோர் மீது விதிக்கப் பட்ட வரியாகும்.

எச்சோறு எனப்படுவது நிலங்களைக் கூறு செய்யும் அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் சோறு என்ப தாகும்.

வெட்டி என்பது நிலங்களைக் கண்காணித்து வருவதற்காக வசூலிக்கப்பெறும் வரி யாகும்.

நிலங்களுக்கு நீர்பாய்ச்சுதற்காக வசூலிக்கப்படும் வரி அமஞ்சி எனும் பெயரால் வழங்கப் பெற்றது.

இறையிலி நிலங்கள்

நிலத்தை யளக்கும் போது, ஊர் மக்கட்குப் பொதுவாகப் பயன் படக்கூடிய பகுதிகள், இறை யில்லாதவைகளாக ஒதுக்கப்பெற்றன. நம் ராஜராஜன் காலத்தில் கீழ்க்கண்டவைகள் இறையிலி நிலங்களாக ஒதுக்கப்பட்டவை யாகும்.

அவை ஸ்ரீ கோயில், பிடாரி கோயில், ஐயனார் கோயில், சேட்டையார் (மூதேவி) கோயில், காடு காண் (துர்க்கை) கோயில், ஊர் இருக்கை, ஊர்நத்தம், கம்மாளச் சேரி, தளிச்சேரி, வண்ணாரச் சேரி, பறைச் சேரி, தீண்டாச் சேரி, உழைப்பளையர் இருக்கும் சேரி, குளம், குளக்கரை, திருமஞ்சைக் குளம், ஊருணி குளம், அதன் கரை, பறைக்குளக் குழி, கிணறு, அதன்தொட்டி, வெள்ளான் சுடுகாடு, பறைச் சுடுகாடு, சுடுகாட்டுக்குப் போகும் வழிகள், நாய் வாலம், மருத்துவப் பேறு, கணி முற்றூட்டு, சாலா போகம், பள்ளிச் சந்தம் பள்ளி, பெண்பள்ளி, திரப்பான மகாதேவர், தேவதானங்கள், திருவடிகள் தேவதானங்கள், பள்ளிச் சந்தம் இறங்கின ஊர்கள், நத்த வனங்கள், பெருவழிகள், களமாய்க் கிடந்த நிலங்கள், கன்று மேய்ப் பாழாய்க் கிடந்த நிலங்கள், கொட்டகாரம், ஆறுகள், குறங்கறுத்துப் புறவூர்க்கு நீர்பாய்ந்த வாய்க்கால்கள், ஊடறுத்துப் போன வாய்க்கால்கள், ஊர்க்களம், நீரோடுகால் முதலானவையாகும்.

மன்னன் வழங்கும் நிலத்தானங்கள்

சோழ மன்னர்கள் பல வகைப்பட்ட கோயில்களுக்கும், அறச்சாலைகளுக்கும், புலவர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் நிலத்தானம் செய்து வந்தனர். இங்ஙனம் தானமாக வழங்கப் பெற்ற நிலங்களின் மீது வரி விதிக்கப்பட வில்லை. சங்ககாலச் சோழர்கள் யாகங்களையும், வேதத்தில் கூறப்பட்டுள்ள ஐதிகச் சடங்குகளையும் ஆடம்பரமான முறையில் நிகழ்த்தினர் என்பதனைச் சங்க கால இலக்கியங்களால் நன்கறியலாம். இந்தியப் பெருமன்னர்கள் பெரும்பாலும் விரும்பிச் செய்த 'அசுவமேத யாகத்தினைச் சோழ மன்னர்கள் செய்ததாகத் தெரியவில்லை. சோழ வேந்தர்களுள் ராஜாதிராஜன் மட்டும் தான் அசுவமேத யாகம் செய்தான் என்ற செய்தியை அவனது வெட்டெழுத்துகள் உணர்த்துகின்றன.

மனுநீதி முறையிலும், வேத மார்க்கங்களிலும் ஆட்சி புரிந்த சோழப் பெருமன்னர்கள் அசுவமேத யாகம் செய்யாதது விந்தையே யாகும், இதன் காரணம் யாது? என்பதை நாம் ஆராயும் போது, சோழ மன்னர்கள் உயிர்ப்பலியிடும் யாகத்தின் மீது வெறுப்பு கொண்டு தானத்தினை (கொடை) மேற்கொண்டனர் என்பது உய்த்துணரப் படுகின்றது. தானத்தில் நம்பிக்கை வைத்து இம்மன்னர்கள் ஒல்லும் வகை யெல்லாம் அறவினை செய்தனர்; நிலக்கொடை யளித்தனர்.

தாம் வணங்கும் தெய்வத்திற்கும், தாம் மேற்கொண்ட சமயத் துறைக்கு மன்றிப் அச் சமயத்திற்கும் நன்கொடைகளை வாரி வாரி வழங்கினர். எனவே தான், சமயத் துறையில் இம்மன்னர்கள் கொண்டிருந்த பரந்த மனப் பான்மையினையும் எம்மதமும் சம்மதம் என்ற சமரசக் கொள்கையினையும் பொன்னேபோல் போற்றினர். சமயத் துறையில் சோழ மன்னர்கள் மாமன்னர் அக்பருடனும், மாமன்னர் அசோகருடனும் ஒப்புமை கூறத் தக்கவ ராவார்கள். ஈண்டு இம் மன்னர்கள் இறையிலியாக அளித்த பல விதமான நிலக்கொடை பற்றிக்

காண்போம்.

தேவதானம்

சிவன் கோயிலுக்கு அளிக்கப்படும் நிலங்கள் தேவதானம் என அழைக்கப்படும்.

திருவிடையாட்டம்

வைணவக் கோயிலுக்கு அளிக்கப்படும் நிலக்கொடை திருவிடை யாட்டம் எனப்படும்.

பள்ளிச் சந்தம்

சமண, பௌத்த ஆலயங்களுக்கு வழங்கப் பெறும் நிலங்கள் பள்ளிச் சந்தம் என வழங்கப்படும்.

சாலா போகம்

அறப்பணி புரியும் அறச்சாலைகட்கு அளிக்கப்படும் நிலங்கள் சாலாபோகம் எனப்படும்.

பிடாரி பத்தி

பிடாரி பத்தி என்பது பிடாரி கோயில்கட்கு அளிக்கப்படும் நிலக் கொடையாகும். இது பிடாரி விளாகம் எனவும் பெயர் பெறும்.

ஐயன் போகம்

ஐயனார் கோயில்கட்கு விடப்படும் நிலம் ஐயன் போகம் எனப் பெயர் பெறும்.

புலவர் முற்றூட்டு

புலவர்களின் முன்னேற்றம் குறித்து அளிக்கப்படும் கொடை புலவர் முற்றூட்டு எனப்படும்.

கணி முற்றூட்டு

இது நாழிகை, கணிதம், சோதிடம் ஆகியவற்றில் வல்லானுக்கு அளிக்கப்படும் நிலக்கொடை யாகும்.

பிரம தேயம்

பார்ப்பனர்கட்குத் தரப்பட்ட நிலக்கொடை பிரமதேயம், பட்ட விருத்தி என்று அழைக்கப்பட்டது. மறையோர் எனப்படும் பார்ப்பனர்கட்குத் தரப்படும் மானியம் இருவகை யாகும். அவை தொகுதியினருக்குக் கொடுப்பதும், தனிப்பட்ட வருக்குக் கொடுப்பதும் ஆகும்.

தொகுதிப்பட்டவருக்குக் கொடுக்கப்படும் மானியங்கள் அகரப்பற்று, அக்கிர கார வாடை, அக்கிர சாலைப்புறம் எனப் பெயர் பெறும். அரப்பற்று என்பது பார்ப்பனர் மட்டும் குடியிருக்கும் இறையிலி நில மாகும். அக்கிரகாரவாடை என்பது, பார்ப்பனர் பெரும்பான்மையாகவும், பிற இனத்தினர் சிறு பான்மையாகவும், குடியிருக்கும் இறையிலி நிலமாகும். அக்கிர சாலைப்புற மென்பது, பார்ப்பனரை உண்பிக்கும் அக்கிர சாலைக்கு அளிக்கப்பட்ட மானியமாகும். தனிப்பட்ட பார்ப்பனருக்குத் தரப்பட்ட மானியம் வேத விருத்தி, பட்ட விருத்தி அத்தியான விருத்தி, தயித்ரியக் கிடைப்புறம், பாரதப் புறம் எனப்படும்.

ராஜேந்திரன் தனது எட்டாம் ஆட்சி யாண்டில் வான மங்கை யெனும் ஊரிமை யமைத்து, அதில் நான்காயிரம் அந்தணர்களைக் குடியேற்றினான் என்பதனைக் கல்வெட்டுச் செய்தியாலறியலாம்.

ராஜேந்திர சோழன் தனது எட்டா மாட்சி யாண்டில் (கி. பி. 1020) நூற்றேழாம் (107) நாளில் பெரும் பற்றப் புலியூர் மாளிகையிலுள்ள 'ராஜேந்திர சோழப் பிரமாதிராஜன்' என்ற மண்டபத்திலிருந்து விரத மேற்றிருந்த போது ஒர் பிரம தேய தானம் செய்ததாகக் கரந்தைச் செப்பேடு குறிக்கினறது. மூவாயிரத் தொருநூற்று முப்பத்தைஞ்சே நான்மாவரை முந்திரிகைக்கீழ் முக்காணி நிலவளவு கொண்ட ஐம்பத் தோரூர்களைத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயரிட்டு அவ்வக்கிரகாரம் முழுவதையும் அங்கு வாழ்ந்திருந்த அந்தணப் பெரியோர்கட்கு நீர் வார்த்துக் கொடுத்தான்

மேற்குறிப்பிட்டுள்ள ஐம்பத்தோரூர்க ளாவன:

1. செம்பங்குடி, 2. குளப்பாடு, 3. துளார், 4. நல்லம்பர், 5. திரிபுவன மாதேவி நல்லூர், 6. விச்சூரான சிக்கர், 7. முஞ்ஞாவல், 8. கூத்தனூர், 9. கமுகன் சேந்தன்குடி, 10. வைகுந்த நல்லூர், 11. மகிமாலய நல்லூர், 12. கீழமாத்தூர், 13. பரகேசரி நல்லூர், 14. பெண்ணாகடம், 15. உறத்தூர், 16. சிறையூர், 17. கீழ்ச் சோற்றுத்துறை, 18. நெடுவாயில் 19. ஏறுபாடி, 20. புளிகைக்குடி, 21. பெருங்குடி, 22. முண்டனூர், 23. தாமோதர நல்லூர், 24. அரசூர், 25. வாளுவ நல்லூர், 26. குணசீல நல்லூர், 27. செய்யா நல்லூர், 28. சிறிறலி நல்லூர், 29. நித்த விநோத நல்லூர், 30. வேங்கூர், 31. நியாய நடைநல்லூர், 32. சேந்த மங்கலம், 33. இகழாநிலை நல்லூர், 34. வீரநாராயண மங்கலம், 35. கருவூர், 36. கோவிந்த நல்லூர், 37. வீர சோழ நல்லூர், 38. கொஞ்ஞாப்பூர், 39. மணி மங்கலம், 40. துறையா நல்லூர், 41. வாமன நல்லூர், 42. ஆத நல்லூர், 43. சிறு முன்னியூர், 44. மேட்டு மேற்குடி, 45. பூத மங்கலத்துப் பால்காடன் காரிக் குறிச்சி, 46. பருத்தி நியமத்துப் திறப்பான தேவதானக்குடி, 47. விளங்குடி, 48. வெண்ணிக் கணிமுற்றூட்டிறங்கல் நெடுங்கணக்குடி, 49. பூத மங்கலத்துப்பால் அயலூட்டிக் காணி, 50. பள்ளிச்சந்த மிறங்கின ஸ்ரீகரண மங்கல மான கொட்டாரக்குடிப் பள்ளி, 51. புறக்குடி. இவ்வூர் நிலங்களின் வாயிலாக ஆண்டுதோறும் ஐம்பத் தோராயிரத்து ஐம்பதின் கல நெல்லும், மீன் பாட்டங்காசு முப்பத்திரண்டரையும் அக்கம் அறுபத்தைஞ்சும் வருவாயாகக் கிடைத்தன. இத்தானத்தால் ஆயிரத் தெண்பது சதுர்வேதிபட்டர்கள் தானம் பெற்றதனையும் கரந்தைச் செப்பேடு உணர்த்துகின்றது. ராஜேந்திரனைப் போன்று பார்ப்பனர்கட்கு வரையாது வழங்கிய வள்ளலைத் தமிழக வரலாற்றில் காண்ப தரிது.

இப்பிரம தேய தானத்தைக் கரந்தைச் செப்பேடு இவ்வாறு குறிக்கின்றது.

‘ஸ்வஸ்திஸ்ரீ கோனேரின்மை கொண்டான் நித்த விநோத வளநாட்டு வீர சோழ வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நாட்டார்க்கும், பிரமதேயக் கிழவர்க்கும், தேவதானப் பள்ளிச்சந்தக் கணிமுற்றூட்டு வெட்டிப்பேற்றுப் பழவறச் சாலாபோகம் உள்ளிட்ட ஊர்களிலார்க்கும், நகரங்களிலார்க்கும், நமக்கு யாண்டு எட்டாவது நாள் நூற்றேழினால் நாம் பெரும்பற்றப்புலியூர் விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபன் ராஜேந்திர சோழ பிரமாதிராஜனில் நாமுண்ணா விருந்து.

நித்த விநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு நாட்டுப் பொது திரிபுவன மாதேவிப் பேரேரியும், இவ்வேரியரயர்கள் கமுகு கொள்ளி வெட்டிப் பேறும், நாட்டுப் பொது ஊர் நத்தமும், நாட்டுப் பொது சிறு பற்றைக் காடும் என்றளந்து வந்த நிலமும், இந்நாட்டு நெற்குப்பைத் திருமால் காடனும், தஞ்சை நாட்டுக் கோனும், வேளாண் அரங்கனும் உள்ளிட்டார் பற்றும்’ கூடியதாக அளந்து வந்த ஊர்கள்.

இக்கரந்தைச் செப்பேட்டினைக் கொண்டு, தானத்தினைப் பெற்றுக்கொண்ட ஆயிரத் தெண்பது சதுர்வேதி பட்ட சிரேட்டர்களின் பெயர்களும், கோத்திரமும், சூத்திரமும், பங்கும் மிகத் தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்க தொன்றாகும், அவற்றுள் ஒன்று,

‘இவ்வூர் விசுவாமித்திர கோத்திரத்துத் திருவஸ்தம்பசூத்திரத்துக் கொடுங்கை அதிராச்சரன் ஸ்ரீவத்ஸகங்க பட்டனுக்குப் பங்கொன்று’

ஸ்ரீவத்ஸ கங்க பட்டனைப் போல் கேசவன் திருவரங்கப்பட்டன், ஹபுலிப்புரத்து மகாசேனன் ஸ்ரீமாதவ கிரமவித்தன், தேவதத்தன் ஆனந்த பிடாரபட்டன் மற்றும் பலர் தானம் பெற்றனர்.

சதுர்வேதிப் பட்டர்களைப் போன்று, பிரமதேய இறையிலி ஊர்களிலுள்ள உகச்சர், நாவிதர், குயவர் ஆகிய சமுதாயத்

தொழிலாளர்கட்கும் மன்னன் இறையிலியாக நிலத்தானம் செய்தான்.

இதனைத் 'திரிபுவன மாதேவிச் சரூப்பேதி மங்கலத்துப் பிடாகை குளப்பாட்டு உவச்சன் அமலன் தேவனுக்கு உகச்சப் பங்கொன்று11' 'இந்நாட்டு ஆவூர் கூற்றத்து மனுகுல சூளாமணிச் சருப்பேதி மங்கலத்து நாவிசன் மண்டகனாபகனுக்கு நாவிசப் பங்கு அரை11' (இவற்றைப் போன்று பல பங்குகள் செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளன.) என்னும் கரந்தைச் செப்பேட்டுப் பகுதியா லறியலாம்.'

அம்பல மானியம்

அரசியல் வினைஞருள் ஊர்த் தலைவனுக்கு அளிக்கப்படுபவை அம்பல மானிய மாகும்.

அமர நாயகம்

போர்ப்படைத் தலைவனுக்கு அளிக்கப்படும் மானியம் அமர நாயகம் எனப் பெயர் பெறும்.

எட்டிப் புரவு

வணிகருட் சிந்தோருக்குச் சோழப் பெருமன்னர்கள் 'எட்டி' எனும் பட்டத்தை வழங்கினர். வணிகருட் சிறந்தோருக்கு வழங்கப்பட்ட மானியம் 'எட்டிப் புரவு' எனப் பெயர் பெற்றது.

ராஜேந்திர சோழன் வேத, வேதாந்த, வியாகரண, ஆகம புராண வளர்ச்சிக்கும் அளவிறந்த தானங்கள் புரிந்து நாட்டின் ஆன்மீகக் கல்வியை வளர்ச்சியுறச் செய்தான் என்பதனைக் கரந்தைச் செப்பேடு விளக்குகின்றது.

அவற்றுள் மீமாம்ச பட்டவிருத்திக்கு ஐவேலி நிலமும், வேதாந்த பட்ட விருந்திக்கு ஐவேலி நிலமும், பிரகரணப்பட்ட விருத்திக்கு நால்வேலி நிலமும், பவிழியக் கிடைப் புறத்துக்கு ஒரு வேலி நிலமும், வாச்சனையக் கிடைப் புறத்துக்கு ஒரு வேலி நிலமும், சாதோகக் கிடப் புறத்திற்கு ஒரு வேலி நிலமும்,

காப்பியக் கிடைப்புறத்திற்கு ஒரு வேலி நிலமும், காப்பியக் கிடைப்புறத்திற்கு ஒரு வேலி நிலமும், சமிதி முலச்சரயம் ஒதுவிப்பானுக்கு ஒரு வேலி நிலமும், மகாபாரதம் ஒதுவிப்பானுக்கு ஒரு வேலி நிலமும், அம்பலம் மெழுகித் தொட்டி நீர்த் தண்ணீராட்டுவானுக்கு ஒரு வேலி நிலமும், தானம் செய்யப் பெற்றதாக ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேடுகள் உணர்த்துகின்றன.

'இவ்வூர்ச் சாசனம் வெட்டிப் பூச்சையாகப் பெற்ற காஷ்மகாரி கிருஷ்ணரங்கனான திரிபுவன மகாதேவிப் பேராசிரியனுக்குத் துணி நிலம் வேலி.

இவ்வூர் சாசனம் வெட்டிப் பூஜ்ஜையாகப் பெற்ற காஷ்மகாரி ஆராவமுது புருடோத்தமனான ராஜேந்திர சிம்மப் பேராசிரியனுக்குத் துணி நிலம் வேலி.'

மேற்கண்ட கரந்தைச் செப்பேட்டுப் பகுதியால் சாசனத்தை எழுதிய ஆசிரியர்கட்கும் நிலத்தானம் அளிக்கப்பட்டதை யறியலாம். இச்சாசனத்தைச் செப்பேட்டில் வெட்டிய சங்கராரியருடைய மகனான நாராயணனுக்கும் நிலத்தான மளிக்கப்பட்டது.

மடப்புறம்

மடத்திற்கு விடப்படும் இறையிலி நிலம் மடப்புற மாகும்.

தண்ணீர்ப் பட்டி

தண்ணீர்ப் பந்தலுக்கு விடப்பட்ட மானியம் தண்ணீர்ப் பட்டி எனப் பெயர் பெறும்.

இரத்தக் காணி

போரில் இறந்துவிட்டவனின் மகனுக்கோ, மனைவிக்கோ வழங்கப்படும் மானியம், இரத்தக் காணி எனப்படும். இஃது இரத்தக் காணிக்கை, இரத்த மானியம், உதிரப்பட்டி எனவும் அழைக்கப்படும்.

மேலே குறிக்கப்பெற்ற தானங்களைப் போலவே கணக்கன், வெட்டியான், மரத்துவன், நட்டுவனார், பறை யறிவிப்போன் போன்ற பல அரச ஊழியர்களுக்கும் மானியங்கள் வழங்கப் பெற்றன.

ஆவணக் களரி

அரச முத்திரையுடன் கூடிய முறியோலை (தற்காலப் பத்திரம்) அக்காலததில் ஊர்கள் தோறும், எழுதப் பெற்ற ஆவணங்களைக் (விலையோலை) காப்பிட ஆவணக் களரி நிறுவப்பெற்றது. ஒரு நிலத்தை விற்பவனுமம, வாங்குபவனும், அல்லது அடமானம் வைப்பவனும், தம்முள் இசைந்து எழுதின ஆவணத்தை எடுத்துக் கொண்டு போய், ஆவணக் களரியாரின் முன் தம்முடைய இசைவினையும், உறுதி மொழியினையும் தெரிவித்து, ஆவணத்தைக் காப்பிடும்படி கேட்டுக்கொள்வர். ஆவணத்தின் மீது அரச முத்திரையிட்டுப் பதிவு செய்யப் பெறுதலே காப்பிடப்படுதல் என அழைக்கப்பெற்றது.

நிலத்தின் எல்லைகளம், விலையும் இவ்வாவணத்தில் குறிக்கப் பெற்றிருக்கும். இவ்வாவணம் என்றென்றும் பயன்படக் கூடிய தொன்றாதலின், அவ்வூரிலுள்ள கோயிற் சுவரிலும் இதனைப் பொறித்து வைத்தல் வழக்க மாகும்.

ஆவணம்

ஆவணம் என்பது அவ்வவ்வினைக்கும் எழுதப்பட்ட கருவிக்கும் ஏற்ப ஏடு, ஓலை, கரணம், கலம், சீட்டு, செய்கை, தீட்டு, நறுக்கு, பட்டிகை, பட்டயம், முறி எனப் பல பெயர் பெறும். ஆவணம் என்பது பத்திரம், பிறமானம் என்னும் வட சொற்களால் தற்காலத்தில் வழங்கப்பெறுகின்றன.

'இனி இந்நான்கெல்லைக் குட்பட்ட தரமிலி மிகுதிக் குறைவு பட்ட குழிகள். இக்குழி (600) அறுநூறுக்கு எம்மிசைந்த விளைசான பொருள் அன்றாட நற்காசு 20. இப்படி இருபதும் ஆவணக்களரியே காட்டிக் காப்பிட்டுக் கை செலவறக் கொண்டு

விற்று, விலைப் பிரமாணஞ் செய்து கொண்டு மண்ணற விற்றுப் பொருளறக் கண்டோம்' என்னும் சாசனப் பகுதியும் இதனைக் கூறுதலின் நன்கறியலாம்.

நிலங்கள்

ஒரு நாட்டின்கண் உள்ள ஊர்களை முறையாக அளந்தால் தான், அங்குள்ள விளை நிலங்களின் சரியான அளவும், அவற்றிற்குரிய நிலவரி குடிமக்களிடமிருந்து எவ்வளவு வசூலிக்கப்பட வேண்டு மென்பதும், அறுதியிட்டு உறுதியாகக கூற முடியும். எனவேதான், அக்காலத்தில் நாடு முழுவதும் அளக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டது. நில வரியைத் துல்லியமாய் நிரணயிக்க நிலம் அளத்தல் அவசிய மாகிறது.

சோழப் பெருநாடு முழுமையும், முதலாம் ராஜராஜன் காலத்தில்தான் முதன் முதலாக அளக்கப்பட்டது. கி. பி. 1001 இல் சேனாதிபதி குரவன் உலகளந்தான், ராஜராஜ மாராயன் என்பானும், உல களவித்த திருவடிகள் சாத்தன் என்பானும் நிலம் அளந்தனர் என்பதனைக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

நிலம் அளந்த கோலினை 'உலகளந்த கோல்' என்பர். இது 'சிற்றம்பலக் கோல்,' 'பங்கிட்ட கோல்' எனவும் வழங்கப்பெற்றது. இக்கோல் பதினாறு சாண் அளவுடைய தாகும். ராஜேந்திர சோழன் ஆட்சிக் காலத்திலும் இக்கோல் கொண்டே நிலம் அளக்கப்பட்டது என்பது கூழம்பந்தல் கோயிற் கல்வெட்டால் அறியலாகும்.

முதற் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் கி. பி. 1086 லும் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் போது கி. பி. 1216 லும் சோழப் பெருநாடு முழுமையும் அளக்கப்பட்டது.

எல்லை மாறும் போதெல்லாம் வள நாடுகளும், நாடுகளும் அளக்கப்பெறும். அவற்றை யளக்குங் கோல் 'இறையிறுக்குங் கோல்' எனப்பட்டது. முற்காலத்தில் 'குடி தாங்கிக் கோல்' எனும் பெயரில் ஒரு கோல் இருந்ததாகத் தெரிகிறது.

நில வகையும், அளவும், தரமும்

நிலங்கள் நீர்நிலம், கொல்லை, காடு என்று மூன்று வகை யாகப் பகுக்கப்பட்டன. இவற்றுள் நீர் நிலம், கொல்லை என்பன முறையே நன்செய், புன்செய் என அழைக்கப்படும். நூறு குழி கொண்டது ஒருமா ஆகவும் இரண்டாயிரங்குழி கொண்டது (இருபதுமா) ஒரு வேலியாகவும் அளக்கப்பட்டன. 'வேலி நூற்றுக் கல வரிகைக் கீழ் வந்த நிலம் ஏழரையே முக்காணி' எனக்கூறப பட்டிருத்தலின் வேலி ஒன்றக்கு நூற்றுக் கால விளைவுள்ளதும், அதற்குக் கீழ்ப்பட்டதுமென, நிலங்கள் இரு வகையாகப் பகுக்கப்பட்டன. இச்செய்தியினை ஒலோக மாதேவிச்சுவரக் கல்வெட்டினால் அறியலாம்.

நுட்பமான நில அளவு

அக்காலத்தில் நிலத்தின் சிறு பகுதியும் விடாமல் மிகவும் நுட்பமாக அளக்கப்பட்டது. இதனை 'இறையிலி நீங்கு நிலம் முக்காலே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா முக்காணிக் கீழ் முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவினால் இறை கட்டின காணிக்கடன்' என்பதனாலும், ராஜராஜன் காலத்தில்ல் அளத்தற்கரிய மிக நுண்ணிய சதுரத்தையும், அதாவது ஒரு வேலியில் 5,24,288,00,000 இல் ஒரு பாகத்தையுங்கூட அளவிட்டு, அதனின்று வரவேண்டிய வரி கணக்கிடப்பட்டதாலும் நன்கு விளங்குமம. இவ்வளவு துல்லியமாக அளக்கப்பட்மை நமக்குப் பெரு வியப்பை யளிக்கின்றது.

இவ்விதம் நுண்ணிய முறையில் அளக்கப்பட்ட நிலங்கள், எல்லைகளிட்டுப் பிரிக்கப்பட்டு, மற்ற நிலங்களினின்றும் வேறு படுத்தப் பட்டன. 'நாற்கோலாசறுதியில் நாட்டின புல்லடிக் கல்லேயுற்று' எனவும் 'இப்பரிசு கல்லு கள்ளியும் நட்டு' எனவும் கல் வெட்டுகளில் காணப்படுதலின் நிலத்தை யளந்து, எல்லைகள் காக்கப்பட்டன. சென்ற அத்தியாயத்தில் குறிக்கப் பெற்றதைப் போல் கோயில் நிலமாயின் கோயிற் சின்னங்களும்

கற்களில் பொறிக்கப்பெற்று நடப்பட்டன.

நீர்ப் பாசனத்தின் பொருட்டுக் கண்ணாறுகள் பல வெட்டு வித்து, இன்னின்ன கண்ணாறுகள், இவ்வளவு இவ்வளவு சதுரத்துக்குப் பாய்வது என்று வரையறை செய்யப்பட்டிருந்தது எனக் கருந்திட்டைக்குடி ஆலயக் கல்வெட்டால் விளங்குகிறது.

நிலத்தின் அளவும், எல்லையும், வருவாயும் எத்துணைத் தெளிவாகவும் நுண்ணிய முறையிலும் அக்காலத்தில் குறிக்கப்பெற்றுச் சாசனங்களில் எழுதப் பெற்றது என்பதற்குக் கரந்தைச் செப்பேட்டில் கீழ்க் காணும் செம்பங்குடி என்ற ஊரளவுக் கணக்கினைக் கொண்டறியலாம்.

'செம்பங்குடி அளந்தபடி நிலன் நூற்று முப்பத்தேழே யாறுமாக் காணி யரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்மா வரையிலும், இவ்வூர்ப் பிடாரி கோயிலும் திருமுற்றமும், ஐயன் கோயிலும், திருமுற்றமும், ஐயன் கோயிலும், இவ்வூர் நிலயத்தை ஊடறுத்துப் போன சிங்க ளாந்தகன் வாய்க்காலும், இவ்வூர், நிலத்தைப் போய் ஊடறுத்துப்போய் மயிமாலய நல்லூருக்குப் பாயும் வாய்க்காலும், இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போம் கருணைக் காலான மும்முடிச் சோழ வாய்க்காலும், இவ்வூர்ச் சுடுகாடுமான நிலன் அரையே மும்மாவரை முந்திரிகைக கீழ் எட்டுமா முக்காணிக் கீழ் முக்காலே ஒரு மாநீக்க நிலன் நூற்று முப்பத்தாறரையே இரண்டுமா முக்காணி முந்திரிகைக் கீழ நான்கு மாவினால் நெல்லு நாலாயிரக் கலமும், மீன் பாட்டம் காசு மூன்றும்.'

எனவே, சோழர் ஆட்சிக் காலத்தில் நிலங்கள் நுண்ணிய முறையில் (நுட்பமாக) அளக்கப்பட்டுத் தரம் பிரிக்கப்பட்டு, நிலவரி ஒழுங்குபடுத்தப்பட்டு, வசூலிக்கப்பட்ட தென்பது நன்கு புலனாகின்றது. தற்கால அதிகாரிகளைப் போன்று சோழர் காலத்தும் அதிகாரிகள் திறமையாகப் பணியாற்றினர் என்பது புலனாகின்றது.

கிராம ஆட்சி

ஊர்ச் சபை அமைப்பும் கடமைகளும்

நம் ராஜேந்திரன் காலத்தில் ஊர்கள் தோறும் சபைகள் இருந்தன. அச்சபையினர் தத்தம் ஊரிலுள்ள நிலங்களுக்கு அரசிறை ஏற்படுத்தியமையும், அதனை வசூலித்து மன்னனுக்குச் செலுத்தியமையும், ஈராண்டு வரை வரி செலுத்தாதார் நிலத்தின் மூன்றா மாண்டு தொடக்கத்தில், பறிமுதல் செய்து விற்று ஊருடைமை யாக்குதலும், கோயிலுக்கு மெய்க்காவலர், கணக்கர் போன்றோரை நியமித்தல் போன்ற இன்னோரன்னவேலைகளைச் செய்து வந்தமையும் குறிப்பிடத் தக்கனவாகும். இவறறுக்கான நிர்வாகச் சபையினரை இவர்கள் தேர்ந் தெடுத்த செய்தி கல்வெட்டில் காணப் பெறவில்லை. இருப்பினும் தோட்ட வாரியர், சம்வத்சர வாரியர், ஏரி வாரியர், பஞ்ச வாரியர், பொன் வாரியர், தடிவழி வாரியர் (தற்காலப் பெருவழித்துறை போன்ற உறுப்பினர்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுருங்கக் கூறுமிடத்து அந்நாளில் ஊராட்சி முழுமையும் இச்சபையாரால் தான் நடத்தப்பட்டது எனக் கூறலாம்.

நம் ராஜேந்திர சோழனும் தன் முன்னோர் காலத்து ஊராட்சி முறையினையே பின்பற்றி அதன் சிறப்பியல்புகளை நன்கறிந்தவனா யிருந்தான். எனவே, ஈண்டுச் சோழப் பெருமன்னர்கள் வாழையடி வாழையடி வாழையாகப் பின்பற்றிய ஊராட்சி முறை பற்றி ஆய்வோம்.

சோழப் பெருமன்னர்கள் தமது ஆணையின் கீழ் வாழும் மக்கள் ஆட்சித் துறையில் தேர்ச்சி பெறவும், தத்தம் ஊரின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, அதில் அக்கறை கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவும், ஊர்கள் தோறும் சபைகளை நிறுவியிருந்தனர். இக்கிராம ஆட்சி முறை சோழர் கால ஆட்சி முறையின் போற்றத்தகுந்த கூறுபாடாகும்.

இது பன்னாட்டினரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றுளது. இது தற்காலத்திய தல சுயஆட்சி முறையினை ஒத்ததாகும். சோழர் காலக் கிராம ஆட்சியில்தான் மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்களரசினை நாம் காண முடிகிறது. ஊர்ச்சபை உறுப்பினர்கள் பொது மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவராவர்.

அக்காலத்தில் ஒவ்வொரு ஊரும் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு () என வழங்கினர். ஒவ்வொரு குடும்பிற்கும் ஒர் உறுப்பினர் மட்டும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஊர்ச்சபை உறுப்பினர் எண்ணிக்கை, அவ்வூரின் அளவிற்கு ஏற்றாற்போல் அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில உள்ள உத்திரமேரூர் முப்பது குடும்புகளைக் கொண்டதாகவும், தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை (சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்) ஏறக்குறைய அறுபது குடும்புகள் உடையதாகவும் இருந்தன என அறிகிறோம். எனவே, பெரிய ஊர்களில் அதிக உறுப்பினர்களம் சிறிய ஊர்களில் குறைந்த உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது உறுதி.

இனிச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் தகுதிகள் யாவை? என்பதை கவனிப்போம். காணிக்கடன் செலுத்துதற் கேற்ற கால்வேலி நிலமும், சொந்த மனையும், உடையவராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்கு கற்று அவற்றைப் பிறர்க் குணர்த்தவும் வல்லவராய், கருமம் ஆற்றுவதில் திறமை பெற்றவராய், முப்பத்தைந்து வயதக்கு மேற்பட்டு எழுபத்தைந்து வயதுக் கட்பட்டோராய், நல்வழியில் சம்பாதித்த பொருளினைப் பெற்றுத் தூய வாழ்க்கையினைப் பின்பற்றுவோராய், மூன்றாண்டுகட்கு உட்பட்டு நிறைவேற்றுக் கழகத்தினும் (நிர்வாக சபை) உறுப்பினராக இரந்திராதவராய் இருப்பவரே ஊர்ச்சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்

பெறும் உரிமை யுடையோ ராவர்.

அரைக்கால் வேலி நிலமே உடையவராய், ஒரு மறையைக் கற்றுணர்ந்தவராய், நான்கு பாடியங்களுள் ஒரு பாடியத்தைப் பிறர்க்குணர்த்தும் திறன் கொண்டவராய் இருப்பவரும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற உரிமை உடையோ ராவர்.

சுருங்கக் கூறுமிடத்துக் காணிக்கடன் இருந்தற் கேற்ற நிலமும், சொந்த வீடும், அறவழியில் சம்பாதித்த பொருளும் உடையவராய்க் கல்வி கேள்விகளிற் சிறந்த ஒழுக்க சீலராய், நேர்மையான முறையில் செயல் படுவோரே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற உரிமை யுடையவராவர். இக்காலையும் இவை போன்ற தகுதிகள் வற்புறுத்தப்டின், ஊரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலோர் தகுதி யில்லாதவர்களாகத் கூறப்படுவர் என்பது திண்ணம். அக்காலை சொத்துடையோரும், ஒழுக்கச் சீலரும் பதவி வகித்தலைத்தான் மக்கள் விரும்பினர் போலும்,

இனி ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகாதார் யாவர்? என்ற பட்டியலும் ஈண்டு கண்டு மகிழத் தக்கதாகவும், சுவை பயக்கத் தக்கதாகவும் உள்ளது. எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், அவருக்குச் சற்றவ்வை, பேரவ்வை, அத்தை, மாமன் என்ற இவர்களின் மக்களும், அவர்தம் தந்தைம், தாயுடன் பிறந்தவன், தந்தையுடன் பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியோடு பிறந்தவன், பெண் கொடுத்த மாமன், உடன் பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் என்றிவர்களும், இவர்களின் சுற்றத்தார்களும், உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகாதவராவர்.

இவர்களேயன்றி நெருங்கிய உறவினர்களாகிய பெண்ணைத் தகாப் புணர்ச்சி செய்தவரும், பார்ப்பனக் கொலை செய்தவரும், கள்ளுண்பவரும், களவாடுபவரும், ஆசான் மனைவியைக் கூடியவரும் கிராம குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப் பெற்றவரும், அவருக்கு உறவினரும், ஆராயாமல் செயல்படத்

துணியும் இயல்பினரும், பிறன் பொருளை வவ்வினரும், கள்ளக் கையெழுத்திட்டோரும், தீமையான செயல் செய்ததன் பொருட்டுக் கழுதை மீதேற்றப்பபட்டவரும், இழி குலத்தவரின் கூட்டுறவு காரணமாகச் சாதியினின்று விலக்கப்பெற்றுக் கழுவாய் செய்யப் பெறாதவரும் போன்றவர்கள் ஊர்ச்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் தகா தவராவர். இவர் போன்ற தகாதோர் அன்று பதவியில் அமர்த்தப்பட்டமையின் காரணமாகத்தான் அன்று நல்லாட்சி நடந்தது. கையூட்டுப் பெறுதலும், தரக்குறைவாக நடத்தலும் இல்லாதிருந்தன.

இன்னும் எத்தகைய கையூட்டு வாங்கினோரும், கிராமத் துரோகியென ஒதுக்கப்பட்டோரும், பொது மகளிருடன் கூடினோரும், கழுவாயால் தூயவரான போதும் தம் வாழ் நாள் முடிவுறும் வரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியினை இழந்தவராவார்.

குடவோலை முறை

மேற்குறித்த தகுதிகள் படைத்தவர்கள் காரிய நிறை வேற்றுக் கழக உறுப்பினராகக் குடவோலை முறைப்படியே ஆண்டு தோறும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர. தேர்ந்தெடுத்தற்கக் குறிக்கப்பெற்ற நாளில், அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள மாளிகையில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறாகவுள்ள எல்லாப் பொதுமக்களையும் கூட்டுவர். அக்கூட்டத்தின் மத்தியில் ஒரு குடம் வைக்கப்பெறும். அவண் குழுமியுள்ள நம்பியருள் வயது முதிர்ந்தார் ஒருவர் அக்குடத்தை யெடுத்து அதனள் ஒன்றும் இல்லை என்பதை எல்லோரும் அறியக் காட்டிக் கீழே வைப்பார். பின்னர், ஒவ்வொரு ஊரையும் முப்பது பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் தமக்குத் தகுதி உடையார் என்று தோன்றுவோரின் பெயரினை ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒன்று சேர்த்து, இன்ன பகுதியைச் சார்ந்த

ஓலை என்பது விளங்க, அப்பகுதியின் வாயோலை ஒன்றைச் சேர்த்துக் கட்டிக் குடத்தில் இடுவர். இங்குப் பகுதி எனப்படுவது குடும்பு எனவும் பெயர் பெறும். இவ்விதம் அவ்வூரிலுள்ள முப்பது பகுதியினரும் தமது ஓலையைக் குடத்திலிடுவர்.

பின்னர், அம்முதியவர் அங்கு நடைபெறுவதனை அறியாத ஓர் இளஞ்சிறுவனை அழைத்து, அக்குடத்தினின்றும் ஓர் ஓலைக்கட்டினை எடுப்பித்து அதனை அவிழ்த்து, வேறு ஒரு குடத்தினின்றும், ஒரு ஓலையை மட்டும் அச்சிறுவனைக் கொண்டு எடுக்கச் செய்து, அதனைத் தாம் பெற்று, அங்கிருக்கும் கரணத்தான் கையில் கொடுப்பர். இங்கு கரணத்தான் என்று குறிக்கப் பெறுபவன் கிராமக் கணக்கணாவான். அவன் தன் ஐந்து விரல்களையும் அகல விரித்துத் தன் கையில் ஒன்றும் இல்லை என்பதனைப் பிறர் அறியக் காட்டி, அகங்கையால் அவ் ஓலையினை வாங்கி, அதில் எழுதப் பெற்றுள்ள வேட்பாளரின் பெயரினை அங்குள்ளார் அனைவரும் கேட்கும்படி உரக்கப்படிப்பான். அங்குக் குழுமியுள்ள நம்பிமார் அனைவரும் அவ்வோலையிலுள்ள பெயரினைப் படித்துப் பார்ப்பர். இவ்விதம் அனைவரும் படித்து உணர்ந்த பின்னரே அப்பெயர் ஒரு ஓலையின்கண் குறிக்கப்பெறும். அவ்வோலையின்கண் குறிக்கப் பெற்ற பெயரினை உடையவர், அக்குடும்பிற்கரிய கிராம சபை உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவராக உறுதி செய்யப் பெறுவர். இங்ஙனமே மற்றைய குடங்களையும் குலுக்கி முன்போல் எடுப்பித்து அவர்கள் பெயர்களையும் ஓலையில் எழுதிக்கொள்வர். இவ்விதமாக ஊர்ச் சபை உறுப்பினர்கள் பொதுமக்களால் குடவோலை முறைப்படி தேர்ந்து எடுக்கப் பெறகின்றனர்.

நாம் மேற்கூறியவாறு அக்கால ஊர்ச் சபை நிகழ்ச்சிகள் அனைத்தும் கிராமக் கணக்கனை முன் வைத்து நடத்தப் பெற்றன என்பதனைக் கீழ்க்காணும் பெரிய புராணப் பாடல் உணர்த்துகின்றது.

‘இருள்மறை மிற்றோன் கையில்
ஓலைகண் டவையோர் ஏவ
அருள் பெறு கரணத் தானும்
ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள் பெறு மடியை நீக்கி
விரித்ததன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப
வாசகம் செப்பு கின்றான்.’

மேற்கூறிய இலக்கியச் சான்று மட்டுமன்றிக் கல்வெட்டும் இக் குடவோலை முறையினைக் கீழ்க்கண்ட முறையில் குறிக்கின்றது.

‘சாலவும் விருத்தரும் பாலரும் அல்லாதார் குறைக்கு மகளில் பொன்காண வல்லவர் எனப்படுவாரை நோக்கி மாட வீதியார் கூடிக் குடவோலை எழுதிப் புகவிட்டுத் தங்கள் சேரியில் நால்வரைக் குடவோலையில் போந்தாரைக் கொள்வதாகவும் இப்பரிசே சங்கரப்பாடியில் மூவரைக் கொள்வதாகவும்.’

உறுப்பினர் தேர்தல், கடமை, வாரியம் போன்றவை மிகத் தெளிவாகவும் விரிவாகவும், சிறப்பாகவும் சோழர்காலக் கல் வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளன. பராந்தகச் சோழன் காலத்திய உத்திரமேரூர் கல்வெட்டு இம்முறையினைக் கடவோலை முறை எனச் சிறப்பித்து உலகிற்கு எடுத்துக் காட்டியது. பராந்தகன காலத்தில் இம்முறை செப்பம் செய்யப்பட்டடு முழுமை பெற்ற போதிலும், சங்க காலத்தேயும் வழக்கிலிருந்த செய்தி இலக்கியங்களால் அறியப்படுகிறது.

மரூதனிளநாகனார் என்னும் புலவர் தமது காலத்தில் வழக்கிலிருந்த குடவோலை முறையினை அகநானூறு எனும் நூலில் கீழ்க்கண்டவாறு குறித்துள்ளார்.

‘கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்

பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுக ணாளர் குடர்தரீ இத் தெறுவரச்
செஞ்செவி எருவை யஞ்சுவர இருக்கும்'

வாரியங்கள்

இவ்வண்ணம் ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஊர்ச்சபையின் உட்பிரிவுக் கழகங்கள் அமைக்கப்பெறும். அக்கழகங்கள் வாரியங்கள் என அழைக்கப்பெற்றன. வாரியங்களுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுங்காலை அங்கத்தினரின் வயது, கல்வியறிவு போன்றவைகளும் கருத்தில் கொள்ளப்பெறும்.

இவ்வங்கத்தினர்கள் முப்பதின்மருள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும் முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் பன்னிருவர் தோட்ட வாரியராகவும், அறுவர் ஏரி வாரியாகவும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். பின்னரும், இம்முறையே முப்பது ஓலைகளைத் தேர்ந்தெடுத்துக் குடத்திலிட்டுக் குலிக்கி, அவறறுள் பன்னிரண்டினை எடுக்கச் செய்து, அறுவரைப் பொன் வாரியாகவும், அறுவரைப் பஞ்சவார வாரியாகவும் அமர்த்துவர்.

ஆகவே, இக்காரிய நிறைவேற்றுக் கழகம், சம்வத்சர வாரியர், தோட்ட வாரியர், ஏரி வாரியர், பஞ்ச வாரியர் என்ற ஐந்து வகையான வாரியரைத் தன்னகத்தே கொண்ட தாகும். அக்காலை கிராம சபையில் ஐந்து உட்கழகங்கள் இருந்தன என்பது புலனாகும்.

சபையின் உறுப்பினர் தம்மைத் தேர்ந்தெடுத்த நாளிலிருந்து முந்நூற்றறுபது நாள் வரையிலும் (ஓராண்டு) எவ்வகை ஊதியமும் பெறாது தம் கடமைகளை ஆற்றுவதற்கு உரிமையும், அதிகாரமும் பூண்டவராவர். இவர்கள் ஆளுங் கணத்தார் எனவும், கணப் பெருமக்கள் எனவும்

அழைக்கப்பெற்றனர். கழக உறுப்பினர் ஏதேனும் குற்றம் புரிந்தால் உடனே பதவியினின்றும் நீக்கப்படுவர்.

நியாய விசாரணை செய்து குற்றத்திற்கேற்ற தண்டனை விதித்தலும், கோயிற் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா? என்பதை மேற் பார்வை யிடுதலும், ஊரைச் சுற்றிப் பார்த்து நன்மை தீமைகளை நாடித் தேவையானவற்றைச் செய்தலுமாகிய பொதுக் காரியங்களை மேற்கொள்வது சம்வத்சரவாரியர் கடமையாகும்.

ஏரி, குளம், ஊருணி, வாய்க்கால் முதலிய நீர் நிலைகளைப் பழுதுறாமல் பாதுகாத்தலும், விளைச்சலுக்கு வேண்டிய நீரைச் சரிவரப் பாய்ச்சுவித்தலும் போன்ற காரியங்களைச் செய்தல் ஏரி வாரியர் கடமை யாகும். புஞ்சை, புறம்போக்கு நிலங்களைப் பற்றிய எல்லாவற்றையும் கண்காணிப்பது தோட்ட வாரியர் கடமை யாகும்.

பஞ்ச காலங்களில் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஊரிலுள்ள தானிய விளைவில் ஒருசிறு பகுதியைப் பெற்றுப் பாதுகாத்து வைப்பது பஞ்ச வாரியர் கடமையாகும். தானிய விளைவில் ஆறில் ஒரு கடமை மன்னனுக்காகவும், மீதமுள்ள ஐந்து கூறு நிலமுடையார்க்காகவும் பிரித்துக் கொடுப்போரும் இவராவர்.

பொன்னை உரை காண்பதும், அரசரால் வெளியிடப்பெறும் பொற்காசுகள், செப்புக் காசுகள் ஆகியவற்றை ஆராய்ந்து கண் காணிப்பதும் பொன் வாரியத்தார் கடமையாகும். இவ்வாரியத்தில் ஒன்பது உறுப்பினர் பணி புரிந்தனர். இவ்வொன்பதின்மருள் படைவீரர் இருவரும், சங்கர பாடிகள் (வாணியர் அல்லது செக்கார்) மூவரும் இடம் பெற்றிருந்தனர். இவர்கட்கு மாதந்தோறும் ஏழரை மஞ்சாடிப் பொன் ஊதியமாக அளிக்கப்பட்டது. சிறுவரும் வயது கடந்தவரும் இவ்வாரியத்தின் உறுப்பினராக முடியாது. சிறுவரும் வயது கடந்தவரும் இவ்வாரியத்தின் உறுப்பனிராக முடியாது. இவர்கள் ஒரவஞ்சனை

யின்றி மக்களின் பொன்னை மாற்றிய வேண்டும். இவர்கள் ஓரவஞ்சனை யின்றி மக்களின் பொன்னை மாற்றிய வேண்டும். இவர்கள் ஆணிக் கல்லைப் பொன்னை உரைக்கும் கட்டளைக் கல்லாகப் பயன்படுத்தினர். இவ்விதம் உரைத்து எடுக்கப்பட்ட பொன் துகளைப் பொன் வாரியத்தார் ஏரி வாரியப் பெருமக்களிடம் ஒப்படைப்பர். பொன் வாரியத்தார் தங்கள் கடமைகளை நேர்மையாகவும் நாணயமாகவும் ஆற்றுதல் வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் மூன்று திங்களுக்கு ஒரு தடவை ஆட்டை (ஆண்டு) வாரியத்தினர் முன்னிலையில் 'நாங்கள் எமக்கிட்ட கட்டளையை மீறி, உரை காண வேண்டி வந்த பொன்னைக் களவாடி யிருப்போமாயின், யாம் என்றென்றும் பசிப் பிணியால் துன்புற்று அழிவோமாக' என்று உறுதி மொழியினை எடுத்துக் கொண்டு அதன் வழி நடந்தனர்.

மேற்கூறிய வாரியங்களே யன்றிக் கழனி வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிவழி வாரியம், ஆட்டை வாரியம், உதாசீன வாரியம் போன்ற வாரியங்களும் சில கிராமங்களில் இருந்தன. ஊர்க் கணக்குகளைக் கண்காணிக்கம் பொறுப்புக் கணக்கு வாரியத்தாரிடம் விடப்பட்டது.

தஞ்சை நிலங்களைப் பற்றிய யாவற்றையும் கண்காணித்து வரும் பொறுப்புக் கழனி வாரியத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆறு, ஏரிகளிலுள்ள மதகுகளை மேற்பார்வையிட்டுத் தேவைக்கேற்பத் தண்ணீரை வடித்தும், பெருக்கியும் கண்காணிப்பவர் கலிங்கு வாரியத்தார் எனப்பட்டனர். கலிங்க என்பது மதகாகும்.

வயல்களிலும், ஊர்ப் புறங்களிலும் உள்ள பாதைகளையும், சாலைகளையும் கண்காணித்துப் பணி புரிவோர் தடிவழி வாரியத்தாராகும்.

மேற்கூறிய கழகத்தார் பணித்தவற்றைச் செய்பவன் 'கரணத்தான்' எனப்படுவான். இவனை மத்தியஸ்தன் எனவும்

கூறுவ துண்டு. நல்வழியில் ஈட்டிய பொருளும், நல்லொழுக்கமும் உடையவனையே கரணத்தானாக ஏற்படுத்துவர். இவன் கணக்குகளை எழுதுதல் வேண்டும். இவன் எழுதிய கணக்கைப் பெருமக்கள் வேண்டும்போது, தானே நேரில் காண்பித்து அவர்களது நன்மதிபப் பெற வேண்டும். இல்லையேல் அடுத்த ஆண்டில் கணக்கெழுதும் உரிமை இவனுக்குக் கொடுக்கப்படமாட்டாது.

கணக்னுக்கு ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும், ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும் இரண்டு கூறையும் சம்பளமாகக் கொடுக்கப்படுவது வழக்கம். இவன், தான் எழுதிய கணக்கைச் சபையார் முன் ஆண்டுதோறும் ஆய்வுக்காக வைத்தல் வேண்டும். தான் எழுதியுள்ளது சரியான கணக்கு என்பதைக் காய்ச்சின மழுவைக் கையில் ஏந்தி உறுதமொழி கூறிக் கொடுத்தல் வேண்டும். அங்கனம் கொடுக்குங்கால் கையில் சூடு படாதிருந்தால், கணக்கனுக்குரிய ஏழு கழஞ்சு பொன் சம்பளத்துடன் காற்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்டும். கையில் ஊறுபாடு நேருமாயின், பத்துக் கழஞ்சு பொன் தண்டம் வேறு தண்டமும் சபையாரால் விதிக்கப்படும்.

இவ்வாறு சோழர் காலத்தில் ஊர்தோறம் மாளிகை அமைக்கப் பெற்றிருந்தது. ராஜராஜன் காலத்தில் மதுராந்தகச சதுர்வேதி மங்கலத்தில் பெருமக்கள் கூடுவதற்கெனச் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் அமைக்கப் பட்தாகக் கல்வெட்டுச் சான்று பகர்கின்றது. ஊர்ச்சபை கூடுவதற்கெனத் தனி மண்டபமில்லாத ஊர்களில் கோயில் மண்டபத்திலோ, மரத்தடியிலோ சபை கூடியது. நம் ராஜேந்திரன் காலத்தில் காமரசவல்லி என்னும் ஊர்ச்சபையினர் ஸ்ரீகைலாசம் உடையார் கோவில் கூடினர் என்று அவ்வூரிலுள்ள கார்கோடிஸ்வரர் கோவில் கல்வெட்டுக் கூறுகிறது. காமரசவல்லி திருச்சி மாவட்டத்தில் ஏலாக்குறிச்சியிலிருந்து நான்கு கல் தொலைவிலுள்ளது.

ஊரச்சபை கூடுகின்ற நாளைக் காளம் ஊதுவித்து உறுப்பினர் கட்கு உணர்த்தினர் என்பதும், அவசியம் நேர்ந்த காலங்களில் பகற் காலத் தன்றி இராக்காலத்தும் சபையினர் கூடிக் காரியங்களை ஆய்ந்தனர் என்பதும் கல்வெட்டுகளால் விளங்குகின்றன. ஊர் மக்களின் தேவைகளை ஊர்ப் பெருமக்களே பூர்த்தி செய்து வந்தனர். இது தற்காலத்திய தல சுய ஆட்சி முறையினை ஒத்த தாகும். எனவே, இற்றைக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே சோழர்கள் கிராம சுய ஆட்சி முறைக்குக் கால்கோளிட்டனர் என்றும், இன்றைய தல சுய ஆட்சியின் சிறந்த கூறுபாடுகள், அன்றைய ஆட்சி முறையில் கருக்கொண்டிருந் தமையையும் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

வேட்டைக்காரன் ஒருவன் விலங்கின்மீது அம்பெய்தான்; அதுகுறி தவறி உழவன் மீது தைத்து, உழவன் இறந்துபட்டான். ஒருவன் தன் மனைவியைச் சினத்தால் தள்ளினான்; எதிர் பாராத விதமாக அவள் கீழே விழுந்து இறந்தாள்.

ஒருத்தி தன் மகள் மீது எறிந்த கோல் அருகில் நின்ற வேறொரு பெண் மீது பட்டு அவள் மாண்டுவிட்டாள். மேற் கூறப்பட்ட மூன்று குற்றங்களும் எதிர்பாரா நிலையில் நிகழ்ந்தமையின் திருக்கோயில்களில் விளக்கெரிக்கப் பொற்கொடை யளிக்குமாறு தீர்ப்புக் கூறப்பட்டது. கடமைகளை நிறைவேற்றத் தவறினோர் பொன் தண்டம் விதிக்கப் பட்டனர்.

அவர்கள் அத்தண்டத்தைக் கொடாதொழியின் அன்னோரின் சொத்துக்கள் மன்னனது ஆணையின்படி விற்கப்பட்டன வாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

படை

ஒரு நாட்டு அரசியற்குப் படையே அடிப்படை. படையின்றி நாடில்லை; நான்றிப் படையுமில்லை; போர் என்பது இன்று எல்லோராலும் வெறக்கப்பட்ட போதிலும் இக்காலத்தில்

படையில்லாத நாடே இவ்வுலகின்கண் இல்லை. 'வலிமையே உரிமை' என்ற கோட்பாடு அரசோச்சிய அக்காலத்தில் படையின் இன்றியமையாமை பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஒரு நாட்டிற்குப் படையின் முக்கியத் துவத்தை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகையும்,

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்

வெறுக்கையுள் எல்லாந் தலை

என்று கூறி வேந்தனுக்கு வெல்படை தலையாயது என்பதைக் குறிப்பிட்டார்.

படை, மன்னனின் இன்றியமையாத உறுப்பாதலின் மன்னர்க்குரியவற்றைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரத்திலும், படை தலையாயதாகக் குறிக்கப் பெற்றது. செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகளும் படையை மன்னனின் திருமேனி எனச்சுட்டினார். அறம் உரைக்கும் திருவள்ளுவரும் பொருட்பாலின் முதற் பாவின் முதற்சொல்லாகப் போர்க்குரிய படையை வைத்து,

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு.

என அரசுக்குரிய இன்றியமையாத ஆறனுள் படைக்கே முதன்மை அறித்தார்.

படை வகைகள்

படையானது, போர் நிகழும் இடம் பற்றி 1. நிலப்படை (), 2. கடற்படைஎன இரு வகைப்பட்டது. அக் காலத்து ஆகாய விமானப் படை இல்லை.

நிலப் படை, ஊர்தி பற்றி 1. கரிப் படை, 2. பரிப் படை, 3. தேர்ப்படை, 4. காலாட்படை என நால்வகைப்பட்டது. காலாட்படை, கருவிபற்றி 1. விற்படை, 2. வாட்படை, 3. வேற்படை என மூன்று வகைப்பட்டது.

'மும்முடிச் சோழத் தெறிந்த ஆனையாள்கள்', 'சிங்களாந்தகத் தெறிந்த குதிரைச் சேவகர்', 'கேரளாந்தகத் தெறிந்த பரி வாரத்தார்' என்று வழங்கப் பெறுதலின், மன்னனிடம் யானைப் படை, குதிரைப்படை, காலாட்படைகள் மிகுதியாக இருந்தன என்பது புலனாகும். ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் தேர்ப்படை இருந்ததாகக் கல்வெட்டுகளில் குறிப்புகள் காணப்பெறவில்லை. ரர்கள் போர்க் கல்வெட்டுகளில் குறிப்புகள் காணப்பெறவில்லை. வீரர்கள் போர்க் களத்தின்கண் தேரைச் செலுத்திச் சென்றதாகவும், தேர்ப்படையினைத் தாக்கியதாகவும் எவ்விதக்குறிப்பும் காணக்கிடைக்க வில்லை. மன்னர்கள் யானை மீதிருந்தும் குதிரை மீதிருந்தும் போர் புரிந்தனர் என்றுதான் கூறப்பட்டுள்ளதே யன்றித் தேர் மீதிருந்து போர் செய்ததாகக் குறிக்கப்பெற வில்லை. எனவே, ராஜேந்திரன் காலத்தில் தேர்படை ஒரு தனிப்படையாகக் கருதப்பெற வில்லை.

ராஜேந்திரனது காலத்தில் தேர்ப் படையே இல்லையெனக் கூறுதல் தவறாகும். தமிழ்நில வழக்குப்பற்றி நூல் செய்த ஒல்காப் பெரும்புலமைத் தொல்காப்பியனார் 'தொல்காப்பியம்' எனும் நூலின் கண் புறத்திணையியலில் 'தானை யானை குதிரை யென்ற நோனாருட்கு மூவகை நிலையும்' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் கண் தானையையம் சேர்த்து முப்படைகளையும் கூறிக் குதிரையின்றித் தேர், தானே செல்லயியலாமையின் தேர்க்கு மறம் இல்லையாதலின் அதனைக் கூறாதொழிந்தார். இது பற்றியே ராஜேந்திர சோழனது காலத்திய வெட்டெழுத்துகளில் தேர்ப்படை யெனத் தனித்துக் கூறவில்லை போலும்! எனக் கொள்ளல் பொருத் முடைத் தாகும்.

படை வகையும் பெயரும்

'பரிவார மெய்க்காப்பாளர்', 'உடனிலை குதிரைச் சேவகர்' எனக் கல்வெட்டுச் செய்திகள் கூறுவதனால் மன்னன், தனது தற்காப்பின் பொருட்டுடு மெய்க்காப்பாளரையும், குதிரைப் படை

யொன்றனையும், குதிரைப் படை பொயன்றனையும் தன்னுடன் கொண்டிருந்தான் என்பது புலப்படும்.

அக்காலத்தில் போர்க் கருவிகள், எய்ப்படை, எறிபடை, குத்துபடை, வெட்டுபடை, அடிபடை, தடுபடை என ஆறு வகையாக இருந்தன. வில்லம்பு எய்ப்படையாகும். விட்டேறு எறிபடை யாகும். வேல், ஈட்டி, குந்தம் முதலியன குத்துபடை ஆகும். வாள் வெட்டுபடை ஆகும். மழு, தண்டு முதலியன அடிபடை ஆகும். கவசம், கேடயம் முதலியன தடுபடை ஆகும்.

மேலே கண்ட ஒவ்வொரு படைக் கருவியிலும் நன்கு தேர்ந்த தனித்தனிப் படைகளும் இருந்தன. இதனைப் பாராந்தகக கொங்க வாளர், 'வலங்கைப் பழம்படைகளிலார்', 'சிறுதனத்து வடுகக் காவலர்', 'பண்டித சோழத் தெறிந்த வில்லிகள்' எனவும் 'மூலப் பரிவார விட்டேறு' எனவும் 'கைக்கோளப் பெரும்படை' எனவும் 'வாள் பெற்ற கைக்கோளர்' எனவும் சாசனங்களில் குறிக்கப் பெற்றிருத்தலின் அறிய லாகும். வில்லிகள் என்போர் வில் வீரர்களாவர். விட்டேறு என்பது வேற்படை யாகும்.

அக்காலத்தில் மெய்யுறை பூண்ட வீரர்படையும் இருந்தது என்பதனைத் 'தெரிந்த அந்தளகளர்' என்பதால் அறியலாம். அந்தளம் என்பது மெய்யுறையாகும். யானை வீரர் குஞ்சர மல்லர், ஆனை ஆள்கள், ஆனைப் பாகர், அத்தி மல்லர் என அழைக்கப் பெற்றனர். குதிரை மறவர் இவுளி மறவர் என்றும் குதிரைச் சேவகர் என்றும் அழைக்கப் பெற்றனர். படைகளைக் குறிப்பிடு மிடத்து, இன்ன விடத்து வெற்றி பெற்ற சிறப்பினுக்குரிய தானை இது வென்பது விளங்க 'அழகிய சோழத் தெறிந்த', 'அரிதுர்க்கலங்கணத்தெறிந்த', 'சண்ட பராக்கிரமத் தெறிந்த', 'விக்கரிமா பரணத் தெறிந்த', 'கேரளாந்தகத் தெறிந்த', 'சிங்களாந்தகத் தெறிந்த' என்பன போன்ற அடைமொழிகள் கொடுத்து அவற்றைச் சிறப்பித்தனர்.

போர் செய்ய, மன்னன் நாள் பார்த்தலும் அவன் படை வீரர்கள் குறி பார்த்தலும் மரபு. நாளும் கோளும் பார்த்துப் போரக்குச்

சென்றால் வெற்றி கிட்டு மென்பது அவர்கள் நம்பிக்கையாகும். படை தங்கியிருந்த இடம் 'கடகம்' என்றும் 'பாசறை' என்றும் அழைக்கப்பெற்றது.

வேளைக்காரப் படை

மேற்கண்ட படைகளே யன்றி ராஜேந்திரனிடம் உற்றிடத் துயிர் வழங்கும் வலங்கை, வேளைக்காரப் படைகள் இருந்தன. வீரத்தின் இருப்பிடமாய்த் திகழ்ந்த இவர்கள் மன்னனுக்காகத் தம் இன்னுயிரையும் தத்தஞ் செய்யத் தயங்காதவ ராவர். இவர்கள் வேளைக்காரர் எனக் குறிக்கப் பெற்றிருத்தல் தகாது. கண்ணை இமை காப்பதுபோல் இவர்கள் மன்னைக் காத்தோம்பினர்; தம் சோர்வால் மன்னனுயிர்க்குத் தீங்கு விளையின் தாமும் உடன் இறக்கும் தன்மையராவர். ஆற்றல் மறவர்களான இவர்கள், 'இன்னவாறு செய்வேன்; செய்யா தொழியின் இன்ன கேடுறுவேன்' என வஞ்சினங் கூறிச் சொன்னவாறு செயல்படுவர். சொன்னதைச் செய்து முடிக்கும் திறலுடைய இவர்கள் வேளைக்காரப் பெரும்படையெனக் குறிக்கப் பெறுகின்றனர்.

எனவேதான், திருவகுப்பு நூலுடையார் தம் அடியார்க்குக் கேடு விளையாமல் முன்னின்று காத்தோம்பும் தமிழ் நாட்டுத் தெய்வமாம் முருகப் பெருமானை வேளைக்காரன் என்றனர் போலும்! இதனால், வேளைக்காரர் எத்தனை மேம்பட்டவர் என்பதனை விளம்ப வேண்டுவ தில்லை.

நிலைப் படை

பெருவீரனான ராஜேந்திரனிடத்துத்தான் வென்று கைக் கொண்ட நாடுகளில் குழப்பமும், அமைதியின்மையும் ஏற்படாது காத்தற் பொருட்டு 'நிலைப் படையும்' இருந்திருத்தல் வேண்டு மென்று எண்ணுதல் தகும.

தானைத் தலைவர்கள்

படைக்குத் தலைவன் படைத் தலைவனாவான். அனைத்துப்

படைக்கும் தலைமை யேற்ப்பவனை இவன் காலத்தில் 'மாதண்ட நாயகன்' எனவும், ஒவ்வொரு படைக்கும் தலைமை யேற்ப்பவனைத் தண்ட நாயகன் எனவும் சேனாதிபதி எனவும் சாமந்தன் எனவும் அழைத்தனர் படைத் தலைவன், படைமுதலி, சேனை முதலி எனவும், பெரும்படைத் தலைவன், பெரும்படை முதலி, சேனாவரையன், சேனாதிராயன் எனவும் அழைக்கப்பெற்றனர்.

நம் ராஜேந்திரன் காலத்தில் விக்கிரம சோழியவரையனாகிய அயைன் ராஜராஜன், கிருட்டிணன் இராமனான மும்முடிச் சோழப் பிரம ராயன், வல்லவரையன் வந்தியத் தேவன், ராஜேந்திர சோழப் பல்லவ ராயன், ராஜராஜ மாராயன் ஆகியோர் படைத் தலைவர்களாகப் பணியாற்றினர்.

கடற் படை

கடல் கடந்த நாடுகளை வென்று அடிமைப் படுத்த விரும்பும் மன்னன் கடற்படையின்றி, யாதும் செய்ய இயலாது. எனவே, தமிழ் நாட்டினர் பண்டைக்கால முதல் கடற்படை வைத்துக் கடலாண்டனர்.

இவ்வுலகின் கண் பரந்து விரிந்த பேரரசினை நிறுவிய ஆங்கிலேயர்கள் தங்களது கடற்படையின் வலிமை கொண்டே 'செயற்கறிய' செய்தனர் என்பதை வரலாறு என்றும் மறவாது.

இந்தியாவின் கண் பரந்துபட்ட பேரரசினை நிறுவிய மொகலாயர்களத பேரரசு வீழ்ந்துபடக் காரணமாக இருந்தவற்றுள் கடற்படை வலிவின்மையும் ஒன்றாகும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

கடற் படையின் இன்றியமையாமையை நன்குணர்ந்த சோழர்கள் கடற் படையினை நிறுவியிரந்தனர் என்பது போற்றுதற் குரியது. பண்டைக் காலத்தில் ஆட்சி புரிந்த கரிகாற் சோழனும் கப்ற் படைகொண்டு ஈழத்தினை வென்று, சிங்களவரைக் கொண்டுவந்து காவிரிக்குக் கரை கட்டிய வீர

வரலாறு நாம் மறக்காக ஒன்று.

விசயாலய சோழக் குடியின் அருமந்த மன்னனாம் முதல் பராந்தக சோழன் மதுரையினையும், ஈழத்தினையும் வென்று 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' எனப் பெயர் பூண்டான்.

சுந்தர சோழனும் ஈழத்தின்மீது போர் தொடுத்தான். சோழர் வரலாற்றிலொரு பொற்காலத்தினை உருவாக்கிய முதலாம் ராஜராஜ சோழனும், கப்பற் படையினைச் செப்பம் செய்து ஈழத் தீவினையும் மாலத் தீவினையும் வென்று மங்காப்புகா பெற்றான்.இக்கடலாண்ட காவலர்களின் கால்வழி வந்தோனான நம் ராஜேந்திரனும், அலைகடல் நடுவுள் பல கலஞ் செலுத்தம் திறலுடையோன் என்பதால் தனக்கென ஒரு தலைமை யிடத்தைப் பெற்றுத் தனக்கு ஒப்பாரு மின்றி, மிக்காரு மின்றித் தலைசிறந்து விளங்கினான். இவன் காலத்திய சோழர் கடலாதிக்கம், இங்கிலாந்து நாட்டின் கடலாதிக்கத்துடன் ஒப்புமை கூறத் தக்க தாகும். இவனது வெற்றிப் புகழினை மலாய்த் தீபகற்பத்தின் மண்ணும், கடார நாட்டின் கடலலைகளும், சுமத்திராத் தீவின் சோலைகளும், ஈழத்தீவின் தென்னைகளும் பாடிக் கொண்டிருந்தன வெனின் இவனது கப்பற்படைத் திறனைச் சொல்லவும் வேண்டுமோ!

இவன் எண்ணிறந்த போர்க் கலங்களைக் கட்டுவித்துப் போர் வீரர்கட்குக் கடற்போரில் நற்பயிற்சியளித்துக் கடல் கடந்த வெற்றிகள் பல பெற்று, இந்திய மன்னர்களுள் தலைசிறந்த கடலாண்ட காவலனாகப் போற்றப் பெறுகிறான். இவனது கடலாதிக்கம், சோழர்களது கடல் வாணிகத்தைப் பெருக்கவும், பொருளாதாரம் முன்னேற்ற மடையவும் வழி வகுத்தது.

முதலாம் ராஜராஜனின் ஆட்சிக் காலத்திலும், முதலாம் ராஜேந்திரனின் ஆட்சிக் காலத்திலும்

'வலங்கை- இடங்கை மகாசேனை' என்ற ஒருபடை

யிருந்ததாகத் தெரிகின்றது. இப்படை மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருததல் வேண்டு மென்று பிரிவுகளாக அமைக்கப் பட்டிருந்த தென்றும், அவற்றுள் ஒன்றான வலங்கைப் பிரிவு நிலையான பிரிவு என்றும், இடங்கை என்பது வணிகர்களையும் தொழிலாளர் சிலரையும் கொண்ட தென்றும், மூன்றாவது பிரிவு கோயில் பணியாளர்களைக் கொண்டிருந்த தென்றும் கருத இடமேற்படுகிறது.' என்று தென்னிந்திய வரலாற்று மேதை திரு. பண்டாரகர் கே. கே. பிள்ளையவர்கள் குறிப்பிடுவதாலும் இதனை நாம் நன்கறியலாம். இப்படை வைணவ ஈடுபாடுடையதாக விளங்கியது. கோயில்களின் பாதுகாப்பினையும், கோபுரங்களின் பாதுகாப்பினையும் ஆங்காங்கு நிறுத்தப்பட்டிருந்த படைகளே ஏற்றன என்ற செய்தியும் கல்வெட்டுகளால் உறுதிப்படுகின்றது.

தமிழக வரலாற்றிலேயே, சோழரின் ஆட்சியில் தான் வலங்கை, இடங்கைப் பிரிவுகளைப் பற்றிய குறிப்புகள் நிறுவப்பட்டிருந்ததாகப் பொலந்நறுவையில் காணப்பெறும் கல்வெட்டாலறியலாம். இக்கல்வெட்டு இலங்கை நாட்டினைக் கி.பி. 1065 முதல் கி.பி. 1120 முடிய ஆட்சி புரிந்த விசாயபாகு என்ற மன்னனின் காலத்தில் வெளியிடப்பட்ட தாகும்.

இதுகாறும் கூறியவற்றால் சோழப் பெருமன்னர்கள் படையின் முக்கியத்துவத்தை யறிந்த காரணத்தால் தமது படை வலியைப் பெருக்கி, உள்நாட்டமைதியைக் காத்ததோடமையாது, வெளிநாட்டுப் படையெடுப்பில் நாட்டங் கொண்டு, வெற்றி பல கண்டு, தமது நாட்டினை விரிவுபடுத்தித் தமது ஏகாதி பத்தியத்தினையும் நிறுவினர். தமிழக மூவேந்தர்களும் கடற்படையினைப் பெற்றிருந்த போதிலும் அவர்களுள் சோழர்களே கடலாதிக்கத்தில் முன்னணியில் திகழ்ந்தனர் என்பதனை அறியலாம்.

கோயில்கள்

'கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டா' என்பது

முதுமொழி, இம்முதுமொழியினைப் பின்பற்றிச் சோழர்காலத்தில் நாடெங்கிலும் எண்ணற்ற கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்கள் இறைவனை வழிபாடு செய்து வீடு பேறடையும் இடமாக மட்டும் அடையாது, மக்கள் அறிவு வளர்ச்சிக்குரிய நாடகம், நாட்டியம், சமயச் சார்புடைய சொற்பொழிவுகள் போன்றவை நிகழும் இடமாகவும் திகழ்ந்தது. எனவே, எல்லா விதமான கலை மற்றங்களும் ஒருசேரத் திகழ்ந்த இடம் திருக்கோயில் பயன்படுதல் போல, மக்கள் ஆன்மீக வளர்ச்சிக்குச் சத்தான உணவு பயன்படுதல் போல, மக்கள் ஆன்மீக வர்ச்சிக்கு இறை வழிபாடு பயன்பட்டது. ஆகவே, 'கோயில்கள் பல்கலைக் கழகங்கள்' என்றால் அது மிகையாகாது.

சோழர் காலத்தில் கோயில் சமுதாயத்தின் முதுகெலும்பாக, உயிர் நாடியாக விளங்கியது. தூய பணிகள் பலவற்றினைப் புரிந்து வந்த கோயில், மக்களால் பெரிதும் விரும்பப்பட்டதில் வியப் பொன்று மில்லை. சோழர் காலக் கோயிலின் முக்கியத்துவத்தினைக் கலாநிதி திரு. டி. வி. மகாலிங்கம் அவர்கள் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றார். 'கோயிலானது ஒரு தலத்திலுள்ள மக்களின் சமய வாழ்க்கையின், முக்கியத்துவம் பெற்ற உயிர்த்துடிப்புள்ள இடமாக விளங்கியதோடு, அவ்வூர் மக்களுடைய அரசியல், சமுதாய, பொரளாதாரத் துறைகளைச் சார்ந்த பல் வேறு இயக்கங்களிலும் பங்கொண்ட சமூக நிறுவனமாகச் சிறந்து விளங்கியது. தானே நிலப் பிரபுவாகவும் முதலாளியாகவும், (மக்களுக்கு வேலை கொடுப்பவராகக்) கோயில் திகழ்ந்தது. கோயிற் பண்டாரமானது நிதியகம் போல அமைந்து வைப்புப் பணங்களைப் பெற்றும், கடனுதவி வழங்கியம் மக்களுக்கு உதவி செய்தது. கிராமப்புறக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கும் கோயில்கள் பெரிதும் உதவின. அரசாங்கத்திற்குச செலுத்தப்பட வேண்டிய வரிகள் கோயில்களால் அளவிடப்பட்டன. தனிப்பட்டவர்கள் தங்கள்

நிலத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளும் (மன்னால்) கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றைவிடக் கோயில்களும் மக்களிடமிருந்த வழக்கமான கடமைப் பணத்தையும் பெற்றன.....மன்னர் கோயிற் பாது காப்பில் தனிக் கவனம் செலுத்தினர்.

எடுத்துக்காட்டாகச் சோழப் பெருமன்னன் முதலாம் ராஜராஜன் ஆட்சிக் காலத்திலே திருவாழீச்சுவரத்திலுள்ள பெருங்கோயிலும், அதன் பண்டாரமும், பணியாட்களும் சோழப் படையின் ஒரு பிரிவான மூன்று கை மகாசேனையின் பாதுகாப்பிலிருந்தது.....நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கோயில் முக்கியப் பங்கு வகித்தது. பெருவாரியான நிலவுடைமைகளையுடையதாய்ச் செல்வ மிகுந்த நிறுவனமாயிருந்த காரணத்தால் பலருக்கு வேலைவாய்ப்பு வசதி யளித்தது கோயில். ராஜராஜன் ஆட்சிக் காலத்திலே தஞ்சைப் பெருவுடையார் கோயில் மட்டும் அறுநூற்று ஒன்பது பணியாள்கள் வரை பணியாற்றினர்.'

'கோயிலில் பல்வேறு வகையான பணிகளில் அவர்கள் ஈடு பட்டனர்....ஊரிலேயுள்ள பெரிய நிலவுடமை நிறுவனம் என்ற முறையில் கோயில் ஊரின் விவசாயத்தில் ஊக்கங் காட்டியது. வயல்களில் பயிர் செய்வதோடு அமையாது, புதிய நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்தது. பாழ்பட்ட கிராமங்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க முயன்றது.....

கோயில் பல்வேறு வகையான பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர்....ஊரிலேயுள்ள பெரிய நிலவுடமை நிறுவனம் என்ற முறையில் கோயில் ஊரின் விவசாயத்தில் ஊக்கங் காட்டியது. வயல்களில் பயிர் செய்வதோடு அமையாது, புதிய நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்தது. பாழ்பட்ட கிராமங்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க முயன்றது.....' கோயில் பண்டாரமானது நிதியகம் போலக் கடமை யாற்றியதால் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், ஊராட்சி மற்றங்களுக்கும்,

வட்டியுடனும், வட்டி யில்லாமலும் கடனுதவியது. உழவர்கள் தமது தொழில் தேவைகளுகாகக் கடன் பெற்றனர். சிலர் தம் பெண்களுக்குச் சீதனம் கொடுப்பதற்கும் கோயிலிலிருந்த கடன் பெற்றனர். எனவே, அக்காலத்தில் கோயில் சமுதாய வாழ்வின் நடுநாயகமாக விளங்கிற் றென்பதைத் தெற்றென அறியலாம்.

சோழர் ஆட்சிக் காலத்தில் கோயில்கள் பெற்ற வளர்ச்சியினை வரலாற்றறிஞர் திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் 'சோழர்கள்' எனும் நூலின்கண் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். '.....மத்திய காலத்து இந்து சமயம் தென்னிந்தியாவிற்கு அளித்த இரு பெருங்கொடைகள் கோயிலும் மடமும் ஆகும். சோழரின் ஆட்சிக் காலப பகுதியிலேயே இவ்விரு நிறுவனங்களும் மெல்ல வளர்ந்து சூழ்நிலைக் கேற்ப மாற்ற மடைந்தன; இவை பொது மக்களின் கற்பனையைக்கேற்ப மாற்றமடைந்தன; இவை பொது மக்களின் கற்பனையைக் கவர்ந்தன; பணக்காரரின் ஆதரவைப் பெற்றன; இக்கவனமும் ஆதரவும் கிடைக்கவும், இந்நிறுவனங்கள் பௌத்த விகாரைகளையும், சமணப் பள்ளிகளையும் விஞ்சி யெழுத்து உறுதியான நிலையை யடைந்தன. இன்றுவரை இந்த உயர்நிலையை இவை பெற்று வந்துள்ளன.....விசயாலயன் மரபு சோழர் ஆட்சியிலே, தென்னிந்தியாவின் சைவ சமயத்தின் பொற்காலம் தொடங்குகிறது எனக் கூறலாம்'.

கோயில்கள் மன்னர்களாலும் பிறராலும் கொடையாக அளிக்கப்பெற்ற பெரும்பொருளும், நிலமும் உடையனவாய் அக்காலத்தில் சிறந்து விளங்கின ஒவ்வொரு மாதமும் பூரணையில் கோயில்களுக்கு விழா நடைபெற்றது. உச்சிப் போதல் கோயில்களில் மகேச்சுரர்க்கு நாள்தோறும் அன்ன மிடுவது வழக்கமாக இருந்தது. நாள்தோறும் திருமுன்னர் தேவாரப் பதிகங்கள் விண்ணப்பஞ் செய்வதற்கு நிவந்தங்கள் வடிப்பட்டிருந்தன. திரப்பதிகம் ஓதுவார் பிடாரர்கள் எனப்பட்டனர். மன்னர்களாலும், மன்னன் தேவியராலம், அதிகாரிகளாலும்,

தனிப்பட்டோராலும், வணிகக் கழகங்களினாலும் அக்காலத்தில் கோயில்களுக்கு நிலம், சாவா மூவாப் பேராடு, பொன், பொருள் ஆகியவை கொடையாக வழங்கப் பெற்றன. இக் கொடைகள நந்தா விளக்கிற்காகவும், பூசையினை தொடர்ந்து நடத்துதற்கம், திருப்பதிகம் ஒதுதற்கும் பயன்பட்டன.

கோயிற் காரியங்களை அவ்வூரிலள்ள சபையினரே மேற்பார்வையிட்டு வந்தனர். மன்னனும் அரசாங்க அதிகாரிகளும், நாட்டைச் சுற்றிப் பார்த்து வருங்காலை, கோயில்களில் காரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறுகின்றனவா? என்று ஆராய்ந்து வருவது வழக்கம்.

கோயில் கணக்கு எழுத கரணத்தார் என்பார் நியமிக்ப் பட்டிருந்தனர். ஒவ்வொரு கரணத்தாரும் தமககு உதவியாகத் தமக்குக் கீழ் இரு கரணத்தார்களை நியமத்துக் கொண்டனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்களே கீழ்க் கரணத்தார் என அழைக்கப் பெற்றனர்.

நாடு கண்காணி நாயகம் என்ற அதிகாரி கோயில் வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்ததாக ராஜேந்திரனது கல்வெட்டால் அறியலாம். நம் ராஜேந்திரன் காலத்தில் வலியூருடையான் ஐயப்பாடி குணநிதி என்பான் கோயில் கணக்கினைக் கண்காணித்ததாக அறிகிறோம்.

திருக்கோயிலையும் அதிலுள்ள பொருள்களையும் பாதுகாப்பவர் திருமெய்க்காப்பாளர் என அழைக்கப் பெற்றனர்.

நாடு கண்காணி நாயகம் என்ற அதிகாரி கோயில் வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்ததாக ராஜேந்திரனது கல் வெட்டால் அறியலாம். நம் ராஜேந்திரன் காலத்தில் வலியூருடையான் ஐயப்பாடி குணநிதி என்பான் கோயில் கணக்கினைக் கண்காணித்ததாக அறிகிறோம்.

திருக்கோயிலையும் அதிலுள்ள பொருள்களையும் பாதுகாப்பவர் திருமொய்க்காப்பாளர் என அழைக்கப் பெற்றனர்.

தேவார நாயகம் என்பான் தேவாரத திருப்பதிகங்கள் ஓதும் பிடாரர்களை மேற்பார்வையிட்டான். முதலாம் ராஜேந்திரன் என்பவன் தேவார நாயகம் செய்பவனா யிருந்தான் என்பதனைக் கும்பகோணம் வட்டம் மானம்படி என்ற ஊரிலுள்ள கல்வெட்டால் அறியலாம். இவன் சிவன் கோயில்களில் திருப்பதிகம் பாடுவோரைக் கண்காணிப்பதோடு கோயில்களில் நடைபெற்ற நாள் வழிபாடு முதலான எல்லாவற்றையும் மன்னனது ஆணையின்படி ஸ்ரீகாரியஞ் செய்த அதிகாரி யாவான்.

கோயில் காரியம் செய்பவர் ஸ்ரீகாரியம் செய்பவர் என அழைக்கப் பெற்றனர். ஸ்ரீகாரியம் செய்வோர், மேற்பார்வையிடுபவர், ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம் எனப்பட்டனர்.

கோயிலுக்குரிய பணிகளைச் செய்வதற்கப் பதியிலார் நூற்றுக் கணக்கில் நியமிக்கப் பட்டிருந்தனர். இவர்கள் பதியிலார் எனவும் தளிச்சேரிப் பெண்டுகள் எனவும் அழைக்கப் பெற்றனர். இவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலி நிலம் நிவந்தம் கொடுக்கப்பட்டது. இப்பெண்களுள் பலர் ஆடல் பாடல்களில் வல்லுநராகத் திகழ்ந்தனர். இவர்கள் தங்கள் பெயர்கட்குமுன் நக்கன் என்னும் பெயரினை இணைத்துக் கொண்டனர். நக்கன் என்னும் பெயரினை இணைத்துக் கொண்டனர். நக்கன் என்பது சிவனுக்குரிய பெயர்களள் ஒன்று. இப்பெண்கள் தங்கள் வாழ்வினைச் சிவன் கோயிலுக்காக அர்ப்பணித்தமையின் இப்பெயரினை இணைத்துக் கொள்ளுதல் பொருத்த மானதே யாகும்.

கோயில்களில் பாடுவோர் காந்தர்விகள் எனப்பட்டனர். கொட்டி மத்தளக்காரர், பக்க வாத்தியர், வீணை வாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரை சங்கு முழங்குவோர் ஆகியோரும் அக்காலத்தில் கோயில்களில் இசை மழை

பொழிந்தனர்.

பண்டைக்காலத்தில் கோவில்களில் பணிபுரியப் பலர் நியமிக்கப் பட்டிருந்ததாகக் கோலாரிலுள்ள துர்கைக் கோயிலில் வெட்டப் பட்டிருந்ததாகக் கோலாரிலுள்ள துர்க்கைக் கோயிலில் வெட்டப் பட்டிருந்த கல்வெட்டுக் கூறுகின்றது. இக்கோயிலில் பூசனை நிகழ்த்துவத்ற்குச் சைவப் பிராமணன் ஒருவனும், பூசனைக்கரிய மற்றப் பணிகளைச் செய்ப் பிரிமச்சாரிகள் நால்வரும், வழிபாட்டிற்குரிய (அபிடேகம்) நீர், பூ, போன்ற பொரள்களைச் சித்தம் செய்து வைக்கப் பணியாளர்களும், கோயில் நந்தவனத்தைப் பராமரிக்க இரண்டு குடும்பங்களும், கோயிலைப் பாதுகாப்பதற்கக் காவலர் மூவரும், பைரவர் மூவரும், யோகீஸ்வரர் நால்வரும் நியமனம் செய்யப் பெற்றிருந்தனர். தேவாரத் திருப்பதிகங்கள் முறையாக ஓதப்பெறுவதற்குப் பத்து ஓதுவார்களும், கோயில் கணக்கினைக் குறித்து வைக்க ஒரு கணக்கனும், நாட்டியம் நிகழ்துவதற்கு ஆடல்பாடல்களில் தேர்ச்சி பெற்ற இருபத்து நான்கு தேவரடியார்களான நடன மாதர்களும், ஒரு குயவனும் ஒரு வண்ணானும், ஒரு சோதிடனும், மேற்பார்வையிடும் அரசியல் பணியாளன் ஒருவனும், ஒரு கருமானும், ஒரு தச்சனம் நியமிக்கப்பட்டனர். மேலும், வியாகரணம், மீமாம்சம் போன்றவற்றினைக்கற்பிக்கும் ஆசானும், கோயில் திருப்பணி செய்ய அலுவலர்களும் கோயிலில் நியமிக்கப் பட்டனர். இவர்கள் தம்தம் கடமைகளைக் குறைவறச் செய்து முடித்தனர்.

இவனது ஆட்சிக் காலத்தில் கோயில் பணிகளையாற்ற கோயில்களில் எழுந்தருளுவித்தவற்றுள் கடவுள் வடிவம் திருமேனி யெனவும், மக்கள் வடிவம் பிரதிமம் எனவும் வழங்கப்பெற்றன என்பதனை 'எழுந்தருளுவித்த பிச்சதேவர் திருமேனி', 'நம்பி ஆரூரர் பிரதிமம்' என்ற கல்வெட்டுப் பகுதிகளா லறியலாம்.

கோயிற்குரிய செலவு போக எஞ்சிய பொருளின் ஒரு

பகுதியினைக் கல்வி வளர்ச்சிக்காகப் பயன் படுத்தினர் என்ற செய்தியைத் தென்னார்காடு மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டால் அறியலாம்.

கோயிற் செலவு போக எஞ்சியதின் ஒரு பகுதியை மருத்துவ மனைகட்கும் பயன்படுத்தப்பட்ட செய்தியினைச் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் கோயில் கல்வெட்டாலறியலாம்.

நம் தமிழகத்தின்கண் விளங்கிய பல செங்கற் கோயில்கள் பிற்காலச் சோழர் காலத்துக் கற்றறிகளாக மாற்றப்பெற்றன. பிற்காலச் சோழர் காலத்தக் கோயில்களுள் தலைசிறந்து விளங்குவது ராஜராஜன் கட்டுவித்த தஞ்சை ராஜராஜேச்சுரமும், ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைத்த கங்கை கொண்ட சோழீச்சரமும் ஆகும்.

சோழர்களின் கலைத் திறன் இன்றும் பன்னாடடறிஞர்களின் ஒருமித்த புகழ்ச்சியினைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கோயில்களின் கலைப்பணியின் விளைவாக, வீழ்ச்சி நிலையிலிருந்து கலை மீட்கப்பட்டு உச்ச நிலைக்குக் கொண்டு வரப்பட்டன. எனவே தான், 'சோழக் கலைஞர் அரக்கர்களைப் போலச் செயல் தொடங்கி நுண்வினைப் பொற்கொல்லர் போலச் செய்து முடிக்கும் திறம் வாய்ந்தவர்' என அறிஞர் பெர்குசன் அவர்கள் புகழ்ந்துரைக்கின்றார்.

நம் ராஜேந்திர சோழனும் கோயில்கள் பல அமைத்துக் கோயில் நிருவாகத்தினைச் சிறந்த முறையில் மேற்பார்வை செய்தான். இவனது ஆட்சிக் காலத்தில் கோயில் காரியங்களைக் கவனிப்தற்கென்றே ஒரு பெருங்குழுவினை நிறுவி யிரந்தான் என்பது பெரிதம் போற்றுதற் கொன்றாகும். ஐம்பத்தாறு அங்கத்தினர்கள் தங்களுக்குள் பதினான்கு குழுக்களாகப் பிரிந்து கோயில் நிருவாகத்தினை மேற் கொண்டனர். ஒவ்வொரு குழுவிலும் நான்கு அங்கத்தினர்கள் இடம் பெற்றிருந்தனர். வேலைத்திறனுக் கேற்ப அங்கத்தினர்கள் தங்கள்

ஊதியத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

மேற்கூறிய செய்கிளை உக்கல் சிவன் கோயிலில் காணப் பெறுகின்ற ராஜேந்திரனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டா லறியலாம்.

இவ்விதம் பல குழுக்களை நிறுவி, அவற்றிற்கெனத் தனித் தனிக் கருமங்களை ஒப்படைத்துள்ள செய்தி, மௌரியர்களின் நகராட்சி நிருவாகத்தினை நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது.

சமயம்

'சமயம் மக்களுக்கு அபின்' எனச் சிலர் குறைபட்டுக் கொண்ட போதிலும், ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தினை அச்சமுதாயத்தின் சம நிலையைக் கொண்டே அளந்தறிய முடியும். அக்கால மன்னனும் மக்களும் சமய அடிப்படையில் தங்களத வாழ்வினை அமைத்துக் கொண்டனர். சமயமும் வாழ்வும் ஒன்றுக் கொன்று பின்னியும் பிணைத்தும் இழைத்தும் இணைந்தும் பண்டு காணப்பட்டதை எவரும் மறக்கவோ, மறைக்கவோ, ஏன்? மறுக்கவோ முடியாது.

சோழர் ஆட்சிக் காலத்தில் சைவமும் வைணமும் பீடு நடைபோட்டன என்ற போதிலும், சைவ சமயம், சோழப் பெருமன்னர்களால் பெரிதும் போற்றப்பட்டன. சோழப் பெருமன்னர்கள் சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு, அதற்குப் பேராதரவு அளித்த போதிலும் மற்றச் சமயங்களை வெறுத்தார்க ளில்லை. எம்மதமும் சம்மதம் என்ற பரந்த கொள்கையினைப் பறை சாற்றிய சோழ மன்னர்கள் சமண சமயத்திற்கும் புத்த சமயத்திற்கம் வழிபாட்டுரிமை அளித்தனர். இருப்பினும் பௌத்தமும் சமணமும் வீழ்ச்சியுறும் நிலையில் காணப்பட்டன. இவைகள் செல்வாக்கிழக்கத் தொடங்கியதே யன்றி, முழுமையாக அழிந்துவிடவில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்க ஒன்றாகும் காஞ்சியில் சமணம் நன்கு வேரூன்றி

யிருந்தமை ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்க தாகும்.

நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலம் சைவ சமயத்தின் பொற்காலம் எனக் கொள்ளுதல் மிகையாகாது. ராஜேந்திரனின் காலத்தில் சைவ சமயத்தில் பல பிரிவுகள் இருந்துவந்தன. அவற்றுள் காளாமுகச் சைவமும் ஒன்று.

ராஜேந்திர சோழப்பெருமன்னன் காளாமுகத்தைச் சார்ந்த இலகுவீச பண்டிதரிடத்துச் சைவ ஆகமங்களைக் கற்றுத் தேர்ந்தான். செம்பியன் மாதேவியாலும், குந்தவைப் பிராட்டியாலும் வளர்க்கப்பெற்ற இவன், இளமைப் பருவத்திலேயே சைவ சமத்தின் பால் நாட்டம் கொண்டான். 'சிவபாத சேகரன்' என்றும் 'திருமுறை கண்ட சோழன்' என்றும் போற்றப் பெறுகின்ற முதலாம் ராஜராஜனின் தவப் புதல்வனாகத் தோன்றிய இவன் சைவ சமயத்தில் நல்ல ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதில் வியப் பொன்றுமில்லை.

வேத, வேதாந்த, வியாகரண, ஆகம புராண அறிவு நிரம்பப் பெற்ற ராஜேந்திரன், சைவ சமய வளர்ச்சிக்கு ஒல்லும் வகை யெல்லாம் அரும்பணியாற்ற விழைந்தான்; சிவபெருமானின் சீரிய கழல்களை ஏத்தும் பணியே தூய பணி யெனக் கொண்டு, சைவ சமயத்துடன் தனது வாழ்க்கையை இணைத்துக்கொண்டு சமய வாழ்வு மேற்கொண்டான்; தில்லையம்பல நடராஜன்மீது எல்லை யற்ற அன்பு கொண்டான்; நாடெங்கினும் நடராஜர் படிமங்களை வடித்து, அவன் தலையிலே கங்கையைச் சூட்டி மகிழ்ந்தான்; தங்கை கொண்ட சோழபுரத்தின்கண் பிரமாண்டமான சிவாலயம் ஒன்றை எழுப்பினான்; திருவொற்றியூர் இறைவனது உட்கோயிலை அமைத்தான்; கடல் கடந்த ஈழ நாட்டின்கண் மகா தோட்டம், மாந்தோட்டம் என்னு மிடங்களில் சிவனுக்குத் திருக்கோயில்கள் எழுப்பினான்; திருமழபாடி சிவன் கோயிலைப் புதுப்பித்தான்; திருக்கோயில்கட்கு நிவந்தங்கள் விட்டான்; சிவ நேயச் செல்வனாக விளங்கினான்.

ராஜேந்திரன் கங்கைக்கரை நாடுகளிலிருந்து சைவ பிராமணர்களை அழைத்து வந்து தமிழத்தில் குடிறயேற்றிச் சைவ சமய வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டான். இவனது முயற்சியால் தென்னாட்டுச் சைவமும் வடநாட்டுச் சைவமும் ஒன்று கலந்தன. பல்வேறு பகுதிகளில் நிலவி வந்த சைவம் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டது. சாக்கதர்கள், காளாமுகர், சண்மார்க்கர் முதலிய சைவ சமயப் பிரிவினர் தங்கள் பணிகளைத் தொடந் தாற்றினர். இஃது எவ்வகையில் சிவ ஞான போதம் உருவாகக் காரணமாயிற்று? என்பது புலனாக வில்லை.

சிவநேயச் செல்வனான இவன் எம்மதமும் சம்மதம் என்ற பரந்த கொள்கையைப் பறை சாற்றினான். இவனது ஆட்சிக் காலத்தில் சைவ சமயத்துடன் வைணவமும், புத்தமும், சமணமும் தழைத் தோங்கின.

தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் நாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட, சூடாமணி விகாரை, என்ற புத்த ஆலயத்திற்குப் பள்ளிச் சந்தமாக விடப்பட்டிருந்த ஆனை மங்கலம் என்னும் கிராமத்தைத் தனது ஆட்சிக் காலத்தில் சாசனமாக வழங்கிச் 'சூரிய சந்திரர் உள்ளவரை' அனுபவிக் அவ்வாலயத்திற்க அனுமதி யளித்தமையின் ராஜேந்திரன் சமயப் பொறை மிக்கவன் என்பது புலனாகும்.

சோணாட்டின்கண் பல வகை மதத்தினரும் சகோதரர்போல் அன்பு கலந்து வாழ்ந்தனர். எல்லோருக்கம் மத சுதந்திரம் அளிக்கப்பட்டது. காஞ்சியில் பல சமணப் பள்ளிகளும், புத்த விகாரைகளும் அமைக்கப்பட்டிருந்ததால் புறச் சமயத்தாருக்கும் மன்னன் ஆதரவு நல்கினான் என்பது புலனாகின்றது. சோழர் காலத்தில் பல வைணவக் கோயில்களும் கட்டப்பட்டன். இக் கோயில்களில் நாலாயிரத்திவ்விய பிரபந்தம் விண்ணப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்திருந்தான் என்பதனைக் கீழ்க்கண்ட கல் வெட்டுகளா லறியலாம்.

இவனது எண்ணாயிரம் கல்வெட்டு, திருவாய்மொழி விண்ணப்பிக்கவும், வியாகரணம், வேதம் கற்பிக்கும் கல்வி நிலையத்தை நடத்தவும் இவன், ராஜராஜ விண்ணகர்க்க 46 வேலி நிலம் அளித்தாகக் கூறுகிறது.

இவனது பத்தொன்பதாம் ஆண்டு உத்தரமேரூர்க் கல் வெட்டு இவன் ஊர்ச்சபை, கோயிலுக்கு 2240 குழி நிலம் இறையிலியாக அளத்தைக் கூறுகிறது நித்திய பூசனைக்கம், சிறப்புப் பூசனைக்கும் இதன் வருவாய் பயன்படுத்தப் பட்டதாகவும் இரண்டு காலங்களிலும் மூவர் திருமொழி விண்ணப்பம் செய்ய 1470 வேலி நிலத்தின் வருவாய் பயன் படுத்தப்பட்டதாகவும் கூறுகின்றது. இவண் திருமொழி யென்பது நாலாயிரத் திவ்விய பிரபந்த மாகும்.

ராஜேந்திரசோழ விண்ணகரத்து வெள்ளைமூர்த்தி ஆழ்வார்க்கு 1520 குழி நிலம் விற்று இறையிலியாக்கப் பட்டதுடன், மூவர் திருமொழி விண்ணப்பம் நாடேறும் நிகழ்த்தப்பெற ஏழு குறுணி நெல் அளிக்கப்பட்டதாக இவனது 26 ஆம் ஆண்டு உத்தரமேரூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

எனவே, ராஜேந்திரனது காலத்தில் சமயக் காழ்ப்பு இன்றி, எம்மதத்தினரும் சம உரிமை பெற்று வாழ்ந்தனர் என்பது விளங்குகின்றது.

கல்வி

பண்டைத் தமிழர் கல்வியின் சிறப்பை நன்குணர்ந்திருத்தனர். கல்வி கற்காத மக்களை விலங்ககளோ டொப்பவே கருதினர் என்பதனை,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்.

என்னும் வள்ளுவர் வாய்மொழியால் நன்கு அறியலாம். திருகுறள் பொருட்பாவில் இறை மாட்சிக்குப் பின்னர் கல்வி, கல்லாமை, கேள்வி என்னும் தலைப்புகளிலும் கல்வியின்

முக்கியத் துவமும் பயனும் வற்புறுத்திக் கூறப்பட்டுளள் மையாலும்,'

எண்ணென்ப ஏனைஎழுத்தென்ப இவ்விரண்டும்

கண்என்ப வாழும் உயிர்க்கு.

என்று வள்ளுவப் பெருந்தகை, கல்வியினைக் கண் போன்ற தெனக் கூறுவதாலும் நம் முன்னோர் கல்வியின் இன்றியமையாமையை நன்கு அறிந்திருந்தனர் என்பது தெளிவு.

பண்டைக் காலத்தில் கல்வி திட்டம் பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி யென மூவகை நிலைகளைப் பெற்றிருந்தது. சிறப்புக் கல்வி யென்பது தாம் விரும்பும் தொழில் அல்லது கலை, வானநூல், நெய்தல் கலை, உழவுத் தொழில், படைக் கலம் பயிற்றல், ஆட்சியல், மனையியல். ஓவியக்கலை, சிற்பக்கலை, ஆசிரியரியல், புலவரியல் போன்றவை தொழிற் கல்வியுள் அடங்கின என்பதனை இலக்கியச் சான்றுகளால் அறிய லாகும். சோழ மன்னர்கள் கல்வியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு அதன் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தனர். அக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் மரத்தடியிலோ, வீட்டுத் திண்ணையிலோ பள்ளிக்கூடம் நடைபெற்றது. ஊர்ப் பொது நிலத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டு ஆசிரியர்களக்கு விகாரங்கள், மடங்கள், பள்ளிகள் கோயில்கள் ஆகியவற்றுடன இணைக்கப் பெற்றிருந்தன.

இக்காலை படித்தல், எழுதுதல், கணக்குச் செய்தல் (Reading, writing, arithmetic) என்று கூறப்படுபவை, அக்காலை எண் எழுத்து ஆகியவற்றுள் அடங்கியதாக விளங்கின. எனவேதான், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனக் கூறப் பெற்றது. அக்காலத்தில் முந்திரி, மாகாணி போன்ற நுண்ணிய வாய்பாடுகள் இருந்தன.

பிற்காலச் சோழ வேந்தர் காலத்துத் தமிழுடன், வடமொழியும்

போதிக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் கற்றலும், ஆங்கிலத்தில் உரையாடுவதும், எழுதுவதும் பெருமை என எண்ணப்பட்டது போல் பண்டைக் காலத்தில் வட மொழி கற்பது பெருமையாக எண்ணப்பட்டது எனவேதான், சோழப் பெருமன்னர்களுள் பலர் வடமொழியிலும், தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். குறிப்பாக முதலாம் ராஜராஜனும், முதலாம் ராஜேந்திரனும் வடமொழியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். இவர்களின் கல்வெட்டுகள் வடமொழியிலும் தமிழிலும் வெளியிடப் பெற்றறிருப்பதால் இதனை நாம் உறுதியாகச் சொல்லலாம்.

சோழ வேந்தர்கள் கல்விக் கூடங்களக்குத் தாராளமாக மானியங்களை வழங்கினர். உயர்கல்வி கோயில், மடம், பள்ளி ஆகிய இடங்களல் போதிக்கப்பட்டது. பெரிய அளவிலான நூல் நிலையங்களும் இங்கு அமைக்கப்பட்டிருந்தன. மீமாம்சை, வியாகரணம் (இலக்கணம்) வேதாந்தம், பாணினி வியாகரணம், பொது உயர்கல்வியின் பல்துறைகள் பற்றிய அறிவார்ந்த பாடங்கள் முதலியன போதிக்கப்பட்டன. இக்கல்விக் கூடங்களில், சான்றோர் பலர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். மாணாக்கர் அனைவரும் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்களக்கு இலவசக் கல்வியும், உணவும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

எண்ணாயிரம்

முதலாம் ராஜேந்திரன் காலத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் (ராஜ சதுர்வேதி மங்கலம்) என்னும் ஊரில் மறைநூல், (வேதம்) விடுதிக் கல்லூரி ஒன்று நிறுவப்பெற்றது. இது விழுப்புரத்திற்கும் திண்டிவனத்திற்கும் இடையே உள்ள ஊராகும். இவ்வூர் சபையார் மத்திய அரசின் அலுவலர் முன்னிலையில் கல்லூரி மாணவர்களுக்கு அரசன் ஆணைப்படி உண்டி வசதியும், ஆசிரியப் பெருமக்கட்கு ஊதிய வசதியும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்ததாக எண்ணாயிரம்

கல்வட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டின் உதவியால் அக்காலத்தில் உயர் கல்விக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத் துவத்தினையும், கற்பிக்கப்பட்ட பலவகைத் துறைகளைப் பற்றியும், ரோசிரியர்கட்குக் கொடுக்கப்ப்டடட ஊதியத்தின் மூலம் பல்வகைப் பட்ட பாடங்கள் போதிக்கம் பேராசிரியர்களின் சிறப்பினைப் பற்றியும், மாணவர்களின் பராமரிப்புச் செலவுகள் பற்றியும் தெள்ளத் தெளிய அறிந்துகொள்ள முடிகின்றது.

இக்கல்லூரியில் மொத்தம் முந்நூற்று நாற்பது மாணாக்கர் கல்வி பயின்றனர். இவர்களுள் இளநிலையாளர் (Junior Student) இருநூற்று எழுபதின்மரும் முதுநிலையாளர் (Senior Student) எழுபதின்மரும் உயர்கல்வி பெற்றனர். இவர்கட்கப் பல்வகைத் துறைக் கற்பிக்கப் பதினான்கு பேராசிரியர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

இளநிலை மாணவருள் எழுபத்தைந்து மாணாக்கர் இருக்கு வேதமும் எழுபத்தைந்து மாணாக்கர் யசூர வேதமும், இருபது மாணாக்கர் சாந்தோகசாமனும், இருபத்தைந்து மாணாக்கர் வியாகரணமும் கற்றுவந்தனர், நாற்பதின்மர் உரூபாவதார இலக்கணமும் இருபதின்மர் அதர்வண வேதமும், இருபதினமர் சந்தோகாசாமனும், இருபதின்மர் தலவகாரசாமனும் பயின்றனர்.

இங்ஙனம் மாணாக்கர் தமக்கு விருப்பமுள்ள பாடப் பிரிவினைத் தேர்ந்தெடுத்து அதனை ஆழ்ந்த முறையில் கற்றுத் தேர்ந்தனர் என்பது புலனாகும். முதுநிலை மாணாக்கர் மேம்பட்ட மூன்று பாடங்களைக் (Three advanced subjects) கற்று வந்தனர். இருபத்ஐதந்து மாணாக்கர் வியாகரணமும், முப்பத்தைந்து மாணாக்கர் பிரபாகர மீமாம்சமும், பத்து மாணாக்கர் வேதாந்தமும் பயின்றனர். முதுநிலை மாணாக்கர் தேர்ந்த மேம்பட்ட கல்வியினைப் பெற்றுப் புகழ் பெற்றனர். இவர்கட்கு இளநிலை மாணாக்கரைவிட 66 சதம் அதிகம் செலவாயிற்று என்பதனால் இக் கல்வி தரம் உயர்ந்தது என்பது புலப்படும்.

சமஸ்கிருத இலக்கணத்தின் முன்னுரை என்னும் பாடத்தினைக் கற்போர் உரூபாவதாரத்தைக் கற்க வேண்டியிருந்தது மாணாக்கர் நான்கு வேதத்தினையும் ஐயம் திரிபறக் கற்றனர். தென்னாட்டில் வடமொழிப் போதனை வரலாற்றில், ராஜேந்திரனது காலம் குறிப்பிடத் தக்க தாகும்.

இக்கல்லூரியின் கண் நற்பணி புரிந்த பேராசிரியப் பெருமக்கள் நல்ல ஊதியம் பெற்றனர். தற்காலத்தில் கல்லூரியில் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் பேராசிரியர்கள் ஊதியத்தைப் பொறுத்த மட்டில் எவ்வித வேறுபாடுகளும் இன்றி, ஒரே நிலையில் காணப்படுகின்றனர். ஆனால், அக்காலத்திலோ, சில பாடங்களைக் கற்பிக்கும் பேராசிரியர்கள், நிறைந்த ஊதியம், வேறு சில பாடங்களைக் கற்பிக்கம் பேராசிரியர்கள், குறைந்த ஊதியமும் பெற்றனர். அக்காலத்தில் வேதாந்தம் கற்பிக்கும் பேராசிரியர் மட்டும் நாள் படியாக (Daily allowance) 1 1/3 கலம் பெற்று மற்றப் பேராசிரியர்களைக் காட்டிலும் நிறைந்த ஊதியத்தினராக விளங்கினர். மீமாம்சையும் வியாகரணமும் கற்பிக்கும் நம்பிகள் ஒரு நாள் படியாக ஒரு கலம் நெல் பெற்ற, அடுத்த நிலையில் இருந்தனர். ஏனைய பேராசிரியப் பெருமக்களோ, மூன்று குறுணி அல்லது கால்கலம் நெல் பெற்றனர்.

மேற்கூறிய நாள்படியே யன்றி, வேதாந்தப் பேராசிரியரைத் தவிர, மறிறப் பேராசிரியர்களம் மதுநிலை மாணக்கரும் ஊதியமாகப் பொன்னும் பெற்றனர். வியாகரணம், மீழ்ம்சை, கற்பிக்கின்ற பேராசிரியர்கள் தாங்கள் தற்பிக்கின்ற ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒவ்வொரு கழஞ் பொன்னும், பாடம் முழுவதற்கும் முறையே எட்டுக் கழஞ்சும், பன்னிரண்டு கழுஞ்சும் பெற்றனர். மற்றப் பேராசிரியர்கள் ஒவ்வொரு மாணாக்கருக்கும், ஆண்டிற்கு அரை கழுஞ்சு என்னும் விகிதத்தில் ஊதியம் பெற்றனர். வேதாந்தம் பயிற்றும் பேராசிரியருக்குப் பொன் அளிக்கப்படவில்லை. ஏனெனில்,

வேதாந்தத்தினைப் பயிற்றுவித்து அதன் மூலம் பொன் பெறுதல் சட்டப்படியும், வழக்கப்படியும், அக்காலத்த அனுமதிக்கப்ட வில்லை. இதனால், வேதாந்தத்தின் மென்மையினை அக்கால மக்கள் பெரிதும் மதித்தனர் என்பது உய்த்துணரப் படுகின்றது.

மாணாக்கர்கட்குக் கல்வி, உண்டி, உறையுள், உடை ஆகியவை இலவசமாக அளிக்கப்பட்டமையும், பேராசிரியர்கள் மாணாக்கர்மீது தனிக் கவனம் செலுத்தி, அவர்களது கல்வி நிலையினை மேற்பார்வை யிட்டமையும் தற்காலக் கல்வி முறையின் சிறந்த அமிசமான தனி முறைப்பயிற்றுத் திட்டமுறை அக்காலத்துச் செயல் பட்டமையும் பண்டைக் காலத்திய குருகுலக் கல்வி முறையினைப் பின்பற்றியமையும், இக்கல்வி முறையுள் போதற்குரிய அமிசங்களாகும். ஒவ்வொரு துறையிலும், மாணாக்கர் சேர்க்கப்படுவதில் கட்டுப்பாடு நிலவியது. குறிப்பிட்ட அளவிற்குமேல் மாணாக்கர்கள் சேர்க்கப்பட வில்லை. மாணாக்கர்கள் தகுதி அடிப்படையில்தான் சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு பேராசிரியரும் தமக்குக்கீழ் இருபத்தைந்து மாணாக்கரை அமர்த்திக்கொண்டு மேற்பார்வையிட்டனர். தற்காலக் கல்வி முறையில் பல சிறப்புக் கூறுபாடுகளைத் தன்னகத்தே கொண்ட இக்கலலூரி, செம்மையாக நடைபெற்று வருவதற்கு மன்னன் எல்லா உதவிகளையும் செய்தான். எண்ணாயிரம் கல்லூக்கு முந்நூறு ஏக்கர் நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது ஈண்டுக் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் இதைப் போன்று முந்நூற்று நாற்பது மாணாக்கர் பயின்ற மற்றொரு கல்லூரியும், நூற்றுத் தொண்ணூறு மாணாக்கர் பயின்ற மூன்றாவது கல்லூரியும், வயாகரண தான மண்டபம் என்னும் வடமொழிப் பாணினி இலக்கணக் கல்லூரி ஒன்றும், திருவொற்றியூரில் புகழ்பெற்று விளங்கியதைக் கல்வெட்டுச் சான்றுகளால் அறியலாம். வேப்பத்தூரில் அமைக்கப் பெற்றிருந்த வடமொழிக் கல்லூரியும் அக்காலத்துப் புகழ்பெற்ற

கல்லூரிகளுள் ஒன்றாகும். திருமுக்கூடல் என்னும் இடத்தில் ஒரு வடமொழி விடுதிக் கல்லூரி இருந்ததாக கல்வெட்டுகளால் அறியலாம்.

பாண்டிச்சேரி யருகே திரிபுவனி (Tribhuvani) என்னுமிடத்தில் அமைக்கப் பெற்றிருந்த கல்லூரியில். இரு நூற்றறுபது மாணாக்கர், பன்னிரண்டு பேராசிரியரிடம், கல்வி பயின்றதாகக் கல்வெட்டின் உதவியால் அறிகிறோம். இக்கல்லூரி ஏறத்தாழ எண்ணாயிரம் கல்லூரியைப் போலவ அமைக்கப் பெற்றிருந்தது. கல்லூரிகள் பெரும்பாலும் கோயிலோடு சேர்க்கப்பட்டிருந்தன.

மேற் கூறப்பட்ட வடமொழிக் கல்லூரிகளே யன்றி, முதலாம் ராஜராஜன் காலத்தில் தஞ்சையில் ஒரு கலைக்கல்லூரி நிறுவப் பெற்று இசை, நடனம், நாடகம் போன்ற அழகு கலைகளும், தமிழ், சமஸ்கிரதம் போன்ற மொழிகளம் பயிற்றுவிக்கப் பெற்றன. இங்கு இசைக் கூடம், நடனக் கூடம், நாடகக் கூடம் போன்ற தனித்தனிக் கூடங்கள் பல அமைக்கப் பெற்றிருந்தன. கோயில்களை யொட்டி, அமைந்த கல்லூரிகள் கலவித் தொண்டும், கலைத்தொண்டும் புரிந்து வந்தன. இககல்லூரிகள் பன்னிரண்டாம் நூற்றாண்டடில் ஏற்பட்ட வேற்றரசர் படையெடுப்பினாலும், அரசியல் குழப்பங்களினாலும் தடைபட்டன.

மேற் கூறியவற்றால் சோழர் காலத்தில் கல்வி நிலை மேற்பட்டிருந்ததையும், சோழப் பெருமன்னர்கள், வடமொழிக் கல்லூரிகளை யமைத்து, வேதாந்தம், வியாகரணம், மீமாம்சம் போன்றவை கற்பிக்கப்படதற்கு மானியங்கள் அளித்ததையும் கோயில்கள் கல்விப் பணியினை மேற்கொண்டதையும் இனிது அறியலாம்.

இதில் வியப்புக் குரியது யாதெனில், தமிழ்க் கல்வி பயிற்று விக்க மானியங்கள் விடபட்டதாக ஒரு கல்வெட்டானும் இல்லை. தமிழ் நாட்டினை யாண்டு வந்த தமிழ் மன்னர்கள் தித்திக்கும் தீந்தமிழ்க் கல்வியைப் போற்றது விட்டமை பெருங்குறை

பாடேயாகும். இதனை எண்ணுந்தொறும், எண்ணுந்தொறும் 'தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை' என்ற இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புதுமைக் கவிஞனான பாவேந்தன் பாரதிதாசன் மனம் குமுறிப் பாடிய பாடல்தான் நம் காதுகளில் ஒலிக்கிறது. ஊர்தோறும் தமிழ்க் கல்வி கற்பிக்கப்பட்டமையாலும், ஒரு சில இடங்களில் மட்டும் வடமொழியும், வேதபாடமும் பயிற்று விக்கப் பட்டமையாலும், பின்னது கல்வெட்டில் இடம் பெற்றிரத்தல் வேண்டும். மேலும், பிற்காலச் சோழர் காலத்தில் வடமொழி யார்வம் (வடமொழி மோகம்) மேலோங்கி யிருந்ததாலும் மன்னர்கள் வடமொழியினைப் பெரிதும் ஆதரித்துத் தமிழ்மொழி வளர்ச்சியினைப் புறக்கணித்தனர் போலும்!

மன்னனின் மெய்க்கீர்த்திகளும், கல்வெட்டுகளும் தமிழிலும், வட மொழியிலும், வெளியிடப் பெற்றிருத்தலின், சோழர் காலத்தில் தமிழும், வடமொழியும் பெரிதும் வளர்ச்சி பெற்றன வென அறியலாம். பல்லவரது ஆட்சிக் காலத்தில் காணப்பெற்ற வடமொழியார்வம் சோழர் காலத்தில் பல்கிப் பெருகியது.

கோயில்களில் கிடைக்கின்ற வருவாய் கோயில் நிருவாகச் செலவிற்கும், கல்விப் பணிக்கும் பயன்படுத்தப்பட்டது. ராஜேந் திரனைப் போன்ற மன்னர்கள் கல்விமான்களை ஆதரித்துப் போற்றியதுட்ன், தாங்களம் கற்றுணர்ந்த அறிஞர்களாய் விளங்கினர். இங்கனம் பண்டுதொட்டு நம் தமிழகத்தின்கண் நிலவி வந்த கல்வி முறை, மேலை நாட்டுக் கல்வி அறிஞர்களால் யாது காரணம் பற்றியோ, கல்வி வரலாற்றில் சேர்க்கப்படவில்லை. தமிழகக் கல்வி முறை இவ்விதம் புறக்கணிக்கப் பட்டது பெருங்குறையே ஆகும்.

பொருளாதார நிலை

சோழர்களின் அரசியல் நிலையினைப் போன்று, பொரளாதார நிலையும் போற்றுதற்குரிய முறையில் அமைந்திருந்தத. சோழப் பெருமன்னர்கள் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதில்

பெருமுயற்சிகள் மேற்கொண்டனர். செழுமை மிக்க சோழநாட்டில் உழவர் பெருங்குடி மக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கினர்; உணவிப் பஞ்சத்தைப் போக்கினர்; வணிகர்கள் திறம்பட வாணிகம் புரிந்தனர்; தொழிலாளர்கள் பெயரளவில் பெருள்களை உற்பத்தி செய்தனர்; நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தது; மக்களனைவரும் வாழ்வாங்கு வாழ்ந்தனர். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் பொருளாதார வளர்ச்சியே முதன் முதன்மையான தாகும். இதனை நன்கறிந்த சோழப் பெருமன்னர்கள் ஒல்லும் வகை யெல்லாம் முயன்று சோணாட்டின் பொருளாதார நிலையினை மேலும் மேலும் உயர்த்தினர். ராஜேந்திர சோழனும், சோழநாட்டின் பொருளாதார நிலையினை உயர்த்தப் பெருமளவில் பாடபட்டான். ஈண்டு நாம் சோழப் பேரரசின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த நாணயங்கள், அளவைகள், வாணிகம், தொழில் பற்றிய சில செய்திகளை ஆராய்வோம.

நாணயங்கள்

ஒரு நாட்டின் வாணிக வளர்ச்சிக்கு நாணயங்கள் இன்றியமையா தவை யாகும். சோழ மன்னர்கள் காலத்தில் அழகிய நாணயங்கள் வெளியிடப் பெற்றன. சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் செம்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பெற்ற நாணயங்கள் வழக்கத்தி லிருந்தன என்பதனைக் கல்வெட்டுச் செய்தியாலும், இதுவரை நமக்குக் கிடைத்துள்ள (தோண்டி எடுக்கப்பட்டுள்ளன) நாணயங்களாலும் அறியலாம். சோழ மன்னர்கள் தங்கள் நாணயங்களில் தங்களது இயற்பெயரையோ, சிறப்புப் பெயரையோ பொறித்திருந்தனர். இதனை கொண்டு இன்ன காசு இன்ன மன்னன் காலத்தில் வெளியிடப் பெற்ற தென்பதனை அறிந்து கொள்ளலாம்.

சோழர் கால நாணயங்களைப் பற்றி அறிந்துகொள்ள டாக்டர் கன்னிங்காம், சர் வால்டர் எலியட், டாக்டர் ஹுல்டஷ் போன்ற

அறிஞர் பெரமக்களின் நூல்கள் பெரிதும் ப்யன்படுகின்றன. 'இந்திய நாணயயியல் கழகம்' வெளியிட்டுவரும் கட்டுரைகளும் பண்டை நாணயங்களைப் பற்றிய விரிவான செய்திகளை எடுத்தியம்புகின்றன.

பிற்காலச் சோழர் காலத்தில் அளவிறந்த பொற்காசுகள் கொடை வகையிற் கொடுக்கப் பட்டதாலும், அணிகலன், தெய்வப் படிமம், அம்பல முகடு, தட்டுமுட்டு முதலிய பல வகைகளில் இட்டுவைக்கப் பட்ட பொன்முதல் முழுகிய முதலாய் இருந்ததனாலும், வெளிநாட்டு மன்னர்களின் படை யெழுச்சியின் போது கொள்ளை யடிக்கப் பட்டதாலும், திறை கொள்ளப் பட்டதாலும், நாள்கள் செல்லச் செல்ல மக்கள் பெருக்கத்தினாலும், விளைவு பெருக்க மின்மையாலும் நாணயச் செலாவணிக்குத் தேவையான அளவு பொன் கிடைக்க வில்லை. எனவே, கீழ்த்தர நாணயங்கட்கு முதன் முதலாக வெள்ளி பயன்பட்டது. இரட்டை நாணயத் திட்டமும் ஏற்பட்டது. பின்பு வெள்ளியும் அருதி டவே, செம்பு கடைக் கீழ்த்தர நாணயங்கள் அடிக்கப் பயன்பட்டது செப்பு நாணயங்கள் புழக்கத்திற்க வந்ததால் மும்மை நாணயத் திட்டம் அன்று பின்பற்றப் பட்டது.

அக்காலைப் பொன் நாணயங்கள் தலைத்தர நாணயங்களாகவும், வெள்ளி நாணயங்கள் இடைத்தர நாணயங்களாகவும், செப்பு நாணயங்கள் கடைத்தர நாணயங்களாவும் கருதப்பட்டன.

எனவே, தங்க நாணயங்கள் தலைமை நாணயங்களாகவும், வெள்ளி, செப்பு நாணயங்கள் சில்லரை நாணயங்களாகவும் இருந்தன. காசு, பொன், கழஞ்சு, மாடை எனப் பல தரப்பட்ட காசுகள் வழங்கப்பெற்ற போதிலும் பிற்காலத்தில் காசு ஒன்றே இறுதிவரை புழக்கத்தில் இருந்தது.

நற்காசுகளையும் கலப்புக் காசுகளையும் உரைத்துப் பார்க்க அக்காலை 'கட்டளைக்கல்' எனும் உரை கல்லும், 'தண்டவாணி'

எனும் உரையாணியும் இருந்தன, சோழர் காசுகள் முதலாவது சதுர வடிவாகவும், நீண்ட சதுரமாகவும் இருந்து பின்னர் வட்ட வடிவினைப் பெற்ற தென்பர் நாணய ஆராய்ச்சியாளர்.

அஃக சாலை

காசடிக்கும் இடம் அஃக சாலை எனப்பட்டது. காசடிப்பதற்குத் தனிவரி விதிக்கப் பட்டது. இஃது அடிக்காசு, பொன் வரி, மாடைக் கூலி எனும் பெயர்களால் அழைக்கப்பெற்றது.

ராஜேந்திரன் காலத்தில் செம்பினாலும், பொன்னினாலும், வெள்ளியினாலும் செய்யப் பெற்ற காசுகள் புழக்கத்தில் இருந்தன. செப்புக் காசுகள் நிறைந்த அளவில் புழக்கத்திலிருந்தன ஈழக் காசு எனப்பட்ட காசுகளும் அக்காலத்தில் இருந்தன. இவை மாற்றுக் குறையாத பொற் காசுகளாகும். காய்ச்சி உருக்கினும் மாற்றும் நிறையும் குன்றாததென அதிகாரிகளால் ஆராயப் பெற்ற பொன்னும் அக்காலை வழக்கிலிருந்தது. தூய வெள்ளிக் காசும் துளையிடப் பட்டதாகத் தெரிகிறது. அக்காலச் சோழ மன்னர் நாணயங்கள் அனைத்தும் ஒரே எடை யுள்ளனவாகச் செய்யப்பட்டிருந்தன வென்று பண்டாரகர் கன்னிங்காம் தமது நூலில் குறித்துள்ளார். சோழர் காலத்திய செப்பு நாணயங்கள் அதிக அளவிலும், பொன், வெள்ளி நாணயங்கள் குறைந்த அளவிலும் இன்று காண முடிகின்றன. சோழர் கால நாணயங்களில் சோழர்களின் முத்திரையான புலியும், அதனருகில் சேர, பாண்டிய சின்னங்களான வில்லும், மீனும் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றைச் சுற்றிலும் வெளியிட்ட மன்னனின் பெயர் பொறிக்கப் பட்டுள்ளன. 'கங்கை கொண்ட சோழன்' எனப் பெயர் பொறிக்கப் பட்ட தங்க நாணயமும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இஃது ராஜேந்திரன் காலத்தது என்பதில் ஐயமில்லை.

முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் 'ராஜேந்திரன் மாடை', 'ராஜேந்திர சோழக்காசு', எனும் பெயர்களில் நாணயங்கள் வெளியிடப் பட்டதாகக் கல்வெட்டுகளால்

அறியலாம். ராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்திற்கு முன்பே 'மதுராந்தக தேவன் மாடை' எனும் பெயரினைக் கொண்ட ஒரு நாணயமும் சோணாட்டில் வழக்கில் இருந்ததாக அறிகிறோம். இஃது உத்தம சோழன் எனப் பெயர் பெறும் மதுராந்தக சோழ மன்னன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப் பட்ட பொற்காசு என்பது தெளிவு. மன்னன் தனது பெயரால் காசு, மாடை என்னுமிரு வகையான நாணயங்களை வெளியிட்டான் என்பதனை இவ்விரு வகையான நாணயங்கள் வழக்கத்திலிருந்ததால் அறியலாம். முதலாம் குலோத்துங்க சோழனக்கு முன்பு ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் அனைவரும் இவ்விரு வகையான நாணயங்களை புழக்கத்தில் கொண்டு வந்தனர் என்பது அறிஞர் கருத்து.

ராஜேந்திரன் காலத்திய காசுகள்

'உத்தமசோழந்', 'மதுராந்தகந்', 'முடிகொண்ட சோழந்', 'ஸ்ரீராஜேந்திரஹ', 'கங்கை கொண்ட சோழந்', 'கங்கை கொண்ட கொளஹ', 'யுத்தமல்லா' முதலான பெயர் பொறித்த தங்கக் காசுகளை இவன் வெளியிட்டுள்ளான்.

இவன், மேலும் கலப்புத் தங்கத்தால் ஆன சில காசுகளையும் வெள்ளி, செப்புக் காசுகளையும் அச்சிட்டுள்ளான். அரியலூரில் கிடைத்த செப்புக் காசில் 'ராஜேந்திர' என்று கிரந்தத்திலும், தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. கிரந்தத்தில் 'ராஜ' எனும் பெயரும், 'ந்திர' எனும் பெயர் தமிழிலும் எழுதப்பட்டுள்ள இக்காசு மிகவும் குறிப்பிடத்தக்கது.

விக்க(ரம)ன் எனத் தமிழில் பொறிக்கப்பட்டுள்ள செப்புக் காசு ஒன்றும் கரூரில் கிடைத்துள்ளது. இப்பெயர் ராஜேந்திரனின் சிறப்புப் பெயரான 'விக்கிரம சோழன்' என்பதன் சுருக்கமாகும்.

கரூரில் கிடைத்த மற்றொரு செப்புக் காசில் பன்றியின் உருவம் காணப்படுகிறது. இது ராஜேந்திரன் சாளுக்கியரின் மீதான வெற்றிச் சின்னம் ஆகும். மற்றொரு செப்புக் காசில்

யானையும் அதன் எதிரே ஜய ஸ்தம்பம் ஒன்றும் அதன் வலப்புறம் பன்றியின் உருவமும் காட்டப்பட்டுள்ளது. முன்னது இவ்வேந்தன் கங்கர் மீது பெற்ற வெற்றியையும் குறிப்பதாகக் கொள்ளலாம். எழுத்தில்லா இக்காசும் கரூர் அமராவதிப் படுகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மாடை என்ற நாணயம் ஒரு கழஞ்சு எடை கொண்டதும் ஒன்பதரை மாற்றுக் கொண்டதுமான செம்பொன்னால் செய்யப்பட்டது எனபது ஆராய்சியாளர்கள் முடிபாகும். எனவே, மாடை என்பது நாற்பது குன்றிமணி எடை கொண்ட பொன் நாணயமாகம் என்பது புலனாகும். 'மாடை ஒன்றுக்குக் காசு இரண்டாக' எனும் தொடர் மைசூர் நாட்டிலுள்ள கோலார் என்னும் இடத்திலுள்ள முதலாம் குலோத்துங்க சோழனின் கல் வெட்டுப் பகுதியில் இடம் பெற்றிருத்தலினாலும், ஒன்பதரை மாற்றும் ஒரு கழஞ்சு எடையுமுள்ள மதுராந்தகன் மாடை இரண்டு காசுகளுக்குச் சமமானது' என்று திருப்புகலூரிலுள்ள முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டொன்று உணர்த்துவதாலும் இதனை நாம் நன்க றியலாம்.

மாடை, காசு, பழங்காசு, ஈழக்காசு ஆகிய நாணயங்கள் யாவும் 'பொன்' எனும் பொதுப் பெயராலேயே அக்காலத்தில் அழைக்கப்பட்டன. ஒரு மன்னனது ஆட்சிக் காலத்தின் கண் வெளியிடப் பெற்று அவனது ஆட்சிக் காலத்தில் வழக்கத்திலுள்ள காசு 'அன்றாடு நற்காசு' என அழைக்கப் பெற்றதாகவும், அம்மன்னனுக்குமுன் ஆட்சி புரிந்த மன்னர்களால் வெளியிடப் பெற்று வழக்கத்திலுள்ள காசு 'பழங்காசு' என அழைக்ப் பெற்றதாகவும் கல் வெட்டுச் செய்தியா லறியலாம்.

சோழ மன்னர்களது ஆட்சிக் காலத்தில் வழக்கத்திலிருந்த மற்றொரு பொற்காசு 'ஈழக் காசா'கும். இதன் பெயர்க் காரணம் பற்றி ஆராய்ச்சி அறிஞரிடையே கருத்து மாறுபாடுகள் நிலவுகின்றன. 'ஈழம்' என்ற சொல் 'பொன்' எனப்

பொருள்படுதலின் ஈழக்காசு என்பது சோழரின் பொற்கா சென்று ஒரு சிலரும், ஈழக்காசென்பது ஈழ நாட்டின்கண் அரசாட்சி புரிந்து வந்த வேந்தர்கள் தத்தம் காலங்களில் வெளியிட்ட காசுகளாகு மென்று ஒரு சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சோழப் பெருமன்னர்களான முதலாம் பராந்தகன், முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் போன்றோர் தமது ஆட்சிக் காலங்களில் ஈழ நாட்டின்மீது படை யெடுத்துக் சென்று, அந்நாட்டிலிருந்து பொன்னும், மணியும், மின்னும் வைரமும், இன்னும் பல விலை யுயர்ந்த அணிகலன்களும் திறைப் பொருளாகக் கொணர்ந்தனர் என்பதனை நாம் முன்பே கண்டோம். இவ்விதமாகத் திறைப் பொருளாக ஈழத்தினின்றும் சோழநாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட காசுகள் சோழநாட்டில் வழக்க்ததி லிருந்ததால் இக்காசுகள் 'ஈழக் காசுகள்' என அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டுமென எண்ணுவது பொருத்முடையதே. ராஜேந்திர சோழன் கடாரத்தினை வென்று, அங்கிருந்து கொண்டுவந்த காய் 'கடாரங்காய' எனப் பெயர்பெற்றிருத்தலை போல 'ஈழக்காசும்' பெயர் பெற்றிருத்தல் வேண்டும். இக்காசுக ளனைத்தும் அரைக் கழஞ்சு எடை கொண்டனவாகவும், மாடையைப்போன்ற மாற்றுடையனவாகவும் இருந்தமை ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஈழக் காசினைப் போன்று 'ஈழக் கருங்காசு' எனும் நாணயமும் அக்காலை வழக்கில் இருந்ததாகக் கல்வெட்டுச் செய்தியாலறியலாம். இது வெள்ளியினால் செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்று சிலரும் செம்பால் (செப்புக் காசு) செய்யப் பெற்றிருத்தல் வேண்டு மென்று சிலரும் குறிப்பிடுகின்றனர். இதனைப் பற்றிய எடையும், மாற்றும் அறியப்பட வில்லை. இவை தமிழகத்தின் பல பகுதகளில் தோண்டி யெடுக்கப் பட்டுள்ளன.

'அக்கம்' என்ற காசு சோழநாட்டில் வழக்கி லிருந்ததாக

முதலாம் பராந்தக சோழனின் ஆனைமலைக் கல்வெட்டாலும், (கி.பி. 939 இல் குறிக்கப்பட்டது) முதலாம் ராஜராஜ சோழனின் தஞ்சை ராஜராஜேச்சுரக் கல்வெட்டாலும் முதலாம் ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டாலும் அறியலாம். ஏழரை புதிய அக்கம் கொண்டது ஒரு ஈழக்கா சென்பதனை 'ஒரு ஈழக் காசுக்குப் புத்தகம் ஏழரையாக' எனும் ஆனைமங்கலக் கல்வெட்டுப் பகுதியா லறியலாம்.

'திரமம்' என்ற மற்றொரு நாணயமும் தமிழகத்தில் வழங்கி வந்ததாகச் சோழர் கல்வெட்டுகள் செப்புகின்றன. சேரநாட்டுப் பகுதிகளிலும் இந்நாணயம் வழக்கி லிருந்ததெனச் சேரர் கல்வெட்டுச் சான்று பகர்கின்றது. இது கிரேக்க நாணயத்தின் பெயராக இருத்தலின், தமிழகத்தின் கண் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்தே வழங்கி யிருத்ல் வேண்டுமெனக் கருதப்படுகிறது. காஞ்சி, உடையார்குடி (தஞ்சை மாவட்டம்), திருப்புகலூர் ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளில் இந்நாணயத்தைப் பற்றி ஒரு சில இடங்களில குறிக்கப் பெற்றுள்ளன.

சோழர் காலத்திய பொன நாணயங்கள் நமக்கு அதிக அளவில் கிடைக்கப் பெறவில்லை யென்பதனால் பொன் நாணயங்கள் அக்காலத்தில் குறைந்த அளவில்தான் வழக்கில் இருந்திருக்கக் கூடுமென எண்ண இடமுண்டு. சிறிய அளவில் கிடைக்கும் இப்பொன் நாணயங்கள் மக்கள் கையில் கிடைத்தால், யாவருக்கும் காட்டாது அவற்றை உருக்கி பொன் அணிகலன்கள் செய்த கொள்ளும் மனப்பான்மை மக்களிடையே நிலவி வருதலின், ஆராய்ச்சியாளர் கையில் பெரும்பான்மையான நாணயங்கள் வந்த சேர வில்லை.

அதிர்ஷடவசமாகக் கி.பி 1946 ஆம் ஆண்டில் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தைச் சார்ந்த 'தவளேசுவரத்தில்' நூற்றிருபத்தேழு பொன் நாணயங்கள் புதை பொருள ஆராய்ச்சியாளரால் தோண்டி எடுக்கப் பட்டுள்ளன.

இந்நாணயங்கள் ஆராய்ச்சியா ளர்கட்குப் பெரிதும் பயன்படுகின்றன. இவை கீழைச் சாளுக்கிய மன்னனாகிய இராஜ ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும், முதலாம் ராஜேந்திரன், முதலாம் ராஜாதிராஜன் ஆகிய சோழப்பெரு மன்னர்களது ஆட்சிக் காலத்திலும் வெளியிடப் பட்டவையாகும். இவை யாவும் செம்பொன்னால் செய்யப் பட்டவை யாகும். இவற்றுள் நாற்பத் தொன்பது செம்பொற் காசுகள் ராஜராஜ நரேந்திரனது காலத்தனவாகும். இவை வேங்கி நாட்டில் (கீழைச் சாளக்கிய நாடு) கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் வழங்கிய நாணயங்கள் என்பதும் அறியத் தக்கதாகும் 'கங்கை கொண்ட சோழன்' என்று கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள முப்பத்திரண்டு பொன் நாணயங்களும் அத்தொகதியில் காணப்படுகின்றன. இவைகள் யாவும் முதலாம் ராஜேந்திர சோழனின் இருபத்தெட்டாம் ஆட்சி யாணடு முதல் முப்பத்து மூன்றாம் ஆட்சி யாண்டு முடிய உள்ள கால அளவில் வெளியிடப் பெற்றனவாக அறிகிறோம். எனவே, இவை கி.மு. 1040 க்கும் 1045க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பட்டனவாகத் தெள்ளிதின் அறியலாம். 'மலைநாடு கொண்டான்' என்று கிரந்த எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ள நாற்கத்தாறு பொன் நாணயங்கள் அத்தொகுதியில் காணப்படுகின்றன. இவண் 'மலைநாடு கொண்டான்' எனச் சிறப்பிக்கப் படுபவன் முதலாம் ராஜேந்திர சோழனின் மகனான முதலாம் ராஜாதிராஜ சோழனாவான். இவன் கி.பி. 1018 இல் இளங்கோப் பட்டம் பெற்றுத் தந்தையுடன் இணைந்த ஆட்சியினை மேற்கொண்டவன் ஆவன். இவன் இளங்கோவா யிருந்த காலத்தில் சேர நாடாகிய மலை நாட்டை வென்றான். இந்நாணயங்கள் இவ் வேந்தனின் முப்பத்து நான்காம் ஆட்சி யாண்டு முதல் முப்பத்தாறாவது ஆட்சி ஆண்டிற்குள் வெளியிடப் பெற்றன வாகும். எனவே, இந்நாணயங்கள் கி.பி. 1052 முதல் கி.பி. 1054 முடிய உள்ள காலத்தில் வெளியிடப்

பெற்றிருத்தல் வேண்டு மெனபது உறுதிப் படுகின்றது.

'கங்கை கொண்ட சோழன்', 'மலைநாடு கொண்டான்' எனும் பெயர்களில் நாணயங்கள் வெளியிட் டிருத்தலின், மன்னர்கள் தங்களத வெற்றியின் நினைவாகப் புதிய நாணயங்கள் வெளியிட்டனர் என்பது புலனாகும். இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள சோழர் கால நாணயங்களுள் உத்தம சோழன் காலத்தில் வெளியிடப் பெற்றுள்ள பொற்காசுதான் பழமையானது என்பது குறிப்பிடத் தக்க தாகும்.

இதுகாறும் கூறியவற்றுள் சோழ மன்னர்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் பலவிதமான பொற்காசுகளையும், வெள்ளிக் காசுகளையும், செப்புக் காசுகளையும் வெளியிட்டு, நாட்டின் வாணக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தன ரென்றும், அதனால், சோழரின் பொருளாதார நிலை முன்னேறியது என்னும் தெள்ளிதின் புலனாகும்.

எடுத்தலளவைக் கருவிகள்

நம் வேந்தனது காலத்தில் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நான்கு வகைப்பட்ட அளவைகளம் வழக்கத்தில் இருந்தன. ஈண்டு எடுத்தல் எனக் குறிக்கப்பெற்றது நிறுத்தல் அளவையாகும். மணிகளும் பொன்னும், வெள்ளியும் முதலான விலை யுயர்ந்த பொருள்கள், மிக நுணுக்கமாக நிறுக்கப்பட வேண்டுவன ஆதலின் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்னும் நிறை கல்லால் நிறுக்கப்பட்டன. செம்பு, பித்தளை, வெண்கலம், தாரா என்பனவும் சரூக்கரை, கடுகு, மிளகு, புளி என்பனவும் போன்ற சாதாரணப் பொருள்கள் பலம் என்னும் நிறைகல்லாலும் நிறுக்கப் பட்டன. பொன்னின் மாற்றினை ஆராய்ந்தறியப் பயன்படும் ஆணி ஒன்று அக்காலத்திலிருந்தது. அதற்குத் தண்டவாணி என்று பெயர்.

தற்காலத்தில் வழங்கும் சேர், வீசை, துலை முதலியவை முற்காலத்தில் வழக்கில் இருந்தனவாகக் குறிப்புகள் இல்லை.

செம்பு, பித்தளை முதலியன 'செப்புக்குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலம்' என்பது போல எத்துணையாயினும் பலத்தாலேயே நிறுக்கப் பட்டன என்று குறிக்கப் பெற்றிருத்தல் ஈண்டு நோக்கற் பாலது. அரசாங்க முத்திரை யிடப்பெற்ற நிறைகல் 'குடிஞைக்கல்' எனப்படும்.

முகத்தலளவைக் குறிகள்

நெல், அரிசி, பருப்பு, பயறு, உப்பு, நெய், பால், தயிர், தானியங்கள் முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்பன போன்ற முகக்குங்கருவிகளால் அளக்கப்பட்டன. அரச முத்திரையிடப்பட்ட ஊர் மரக்கால் 'ராஜ கேசரி' என அழைக்கப்பட்டது. இது நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் 'அருண் மொழித்தேவன்' எனவும் பெயரிடப் பட்டது. கோயில் மரக்கால் ஆடவல்லான் எனப் பெயர் பெற்றது. இம்மரக்கால் பெரிய கோயில் பண்டாரத்தில் இருந்தது.

நீட்டலளவைக் கருவிகள்

சோழர் காலத்தில் நீட்டலளவைகளும் நுண்ணியனவாக விளங்கின. நீட்டலளவை தோரை, விரல், சாண், முழம் என்பவற்றால் நடைபெற்றது. இதனை 'இரு முழமே ஒரு விரலே இரண்டு தோரை நீளமும்' என்ற சாசனப் பகுதியால் அறியலாம்.

அளவைகளைப் பொறுத்த மட்டில் ராஜராஜன் கலத்தவற்றையே ராஜேந்திரன் பின்பற்றினான். ஈண்டு நாம் ராஜராஜன் காலத்து நிலவிய அளவை வாய்பாட்டைப் பார்போம்.

நிறுத்தலளவை

2 குன்றி	___	1 மஞ்சாடி
20 மஞ்சாடி	___	1 கழஞ்சு

முகத்தலளவை

5 செவிடு	___	1 ஆழாக்கு

2 ஆழாக்கு	___	1 உழக்கு
2 உழக்கு	___	1 உரி
2 உரி	___	1 நாழி
5 நாழி	___	1 குறுமணி
5 குறுமணி	___	1 பதக்கு
5 பதக்கு	___	1 தூணி
5 தூணி	___	1 கலம்
நீட்டலளவை		
8 தோரை	___	1 விரல்
12 விரல்	___	1 சாண்
2 சாண்	___	1 முழம்
கால அளவை		
60 நொடி	___	1 விநாடி
60 விநாடி	___	1 நாழிகை
7 1/2 நாழிகை	___	1 சாமம்
8 சாமம்	___	1 நாள்
7 நாள்	___	1 வாரம்
15 நாள்	___	1 பக்கம்
2 பக்கம்	___	1 மாதம்
6 மாதம்	___	1 அயனம்
2 அயனம்	___	1 ஆண்டு
நில அளவை		
16 சாண்	___	1 கோல்
18 கோல்	___	1 குழி
100 குழி	___	1 மா

240 குழி	___	1 பாடகம்
10 மா	___	1 வேலி

ஒரு கோல் என்பது பதினாறு சாண் கொண்ட தாகும். கல் வெட்டுகளின் துணைகொண்டு சோழர் காலத்தில் பதினாறு சாண் கோல், கடிகை களத்துக் கோல், திருப்பாதக் கோல், மாளிகைக் கோல், கடிகை களத்துக் கோல், திருப்பாதக் கோல், மாளிகைக் கோல் போன்ற பலவிதமான கோல்கள் நிலத்தினை அளப்பதற்குப் பயன்பட்டன. கோலின் அளவினைப் பொறுத்துக் குழியின் அளவு மாறுபட்டது. எனவே, ஒருமா என்பது எவ்வளவு குழி கொண்டது என்பதும் ஒரே அளவாக இல்லை.

எடுத்துக்காட்டாக நம் ராஜேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டில் தென்னார்காடு மாவட்டம் கீலூரில் (பதினாறு சாண் கொண்ட கோலால் அளக்கப்பட்டது) இரு நூற்றம்பைத்தாறு குழி கொண்டது ஒருமா எனக் கணக்கிடப்பட்டது. ஆனால், அதே ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாடுதுறையில் (மாளிகைக் கோலால் அளக்கப்பட்ட) நூறுகுழிகள் கொண்டதே ஒருமா எனக் கணக்கிடப்பட்டது. பன்னிரண்டாண்டுகள் கழிந்த இருநூறு குழிகள் கொண்டது ஒருமா எனக் கணக்கிடப்பட்டது. எனவே, இடத்திற்கு இடம் நில அளவு சிறிதளவு மாற்றம் பெற்ற தென்பதனை அறியலாம்.

வணிகமும் கைத்தொழிலும்

ஒரு நாட்டின்கண் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான பொருள்களை வினியோகம் செய்வோர் வாணிகப் பெருமக்களாவர். இவர்கள் ஓரிடத்தில் மிகுதியாகக் கிடைக்கும் பொருள்களை நாட்டின் பிற பகுதிகளுக்குக் கொண்டு சென்று, விற்று இலாபம் பெறுவர். வணிகர்கள், ஒரு நாட்டின் பொருளாதார நிலையினை முன்னேற்றும் பணியில் நல்ல தொண்டு செய்வர்.

நகரங்களிலும், கிராமங்களிலும் வாணிகம் புரிந்து வாழ்ந்து

வந்த வணிகர் பலர் திருக்கோயில்களுக்கும், ஏரி, குளம், கிணறு வெட்டுவதற்கும் பொருளும், நிலமும், அளித்து மக்களக்குத் தொண்டு செய்ததாகக் கல்வெட்டுச் சான்றுகளா லறியலாம்.

வாணிகர்கள் தனித்தும், குழுக்களாகச் சேர்ந்தும் வாணிகம் புரிந்து வந்தனர். இவர்கள் மன்னனால் பெரிதும் மதிக்கப் பெற்றனர். வாணிகம், உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என இரு வகையின வாகும். உள்நாட்டு வணிகத்திற்கு வண்டிகளும், பொதி மாடுகளம், சிறு வழிகளும், பெருவழிகளம் பயன்பட்டன. வெளிநாட்டு வாணிகம் பெரும்பாலும் கடல் கடந்து நடைபெற்றதால் கலங்கள் தேவைப்பட்டன. நம் தமிழர்கள் பண்டு தொட்டுக் கடல் கடந்த வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை இலக்கியச் சான்றுகளாலும், வெளிநாட்டு நூல்களாலும் அறியலாம்.

1. 'பொன்சொரி கதவு தாளிற்றிறந்து பொன் யவனப் பேழை'
2. 'அருமணி வயிரம் வேய்ந்த அருங்கலப் பேழை ஐந்நூற்(று) எரிமணி செம்பொன் ஆர்ந்த விராயிரம் யவனப் பேழை'
3. 'மணியியல் யவனச் செப்பின் மங்கலத் துகிலை வாங்கி'

போன்ற இலக்கியக் குறிப்புகளிலிருந்து தமிழகம், யவன நாட்டுடன் மேற்கொண்டிருந்த வாணிகத்தை யறியலாம்.

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் நிருவாகம் மிகத் திறம்பட விளங்கியமையால், அமைதியான ஆட்சி நிலவியது. நாடு அமைதியாக இருந்தமையால் கைத்தொழில்களோடு பொருள்களின் உற்பத்தியும் பெருகியது. சோழ நாட்டுக் குட்பட்ட பல பகுதிகளில் உள்நாட்டு வாணிகம் செம்மையாக நடைபெற்றது. தனிப்பட்ட வணிகர்களும் வணிகர் சங்கங்களும், கடல் கடந்த வாணிகத்திலும் ஈடுபட்டி ருந்ததாகக் கல்வெட்டுகளால் அறியலாம். சீனம், கிழக்கிந்தியத் தீவுகள், அராபியா ஆகிய நாடுகள், சோழ நாட்டுடன் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தன.

சோணாட்டு வணிகர்கள் மேற்கே இலட்சத் தீவுகள், அராபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுடனும் தெற்கே ஈழம், மாளவத் தீவுகள் போன்றவற்றுடனும், கிழக்கில், பருமா, சாவா, சுமத்திரா, சீனா போன்ற நாடுகளுடனும் கடல் வாணிகம் புரிந்து வந்தனர்.

நம் ராஜேந்திரனது காலத்தில் சீன நாட்டுடன் சிறப்பான முறையில் வாணிகம் நடைபெற்றுள்ளதாகச் சீன நூல்கள் சான்று பகர்கின்றன. ராஜேந்திர சோழன் தன் தூதுவர்களைச் சீன நாட்டிற்கு அனுப்பினான் எனவும், சீன மன்னனும் சோணாட்டிற்குச் சீனத் தூதுவர்களை அனுப்பினான் எனவும், நாம் முன் பகுதியில் கண்டோம். இச்செயலால் சோணாட்டிற்கும், சீன நாட்டிற்கு மிடையே வாணிக உறவு உன்னதமான நிலையில் இருந்ததாக அறியலாம்.பன்னெடுங் காலமாகவே தமிழகமும் சீன நாடும் நட்புறவும் வாணிகத் தொடர்பும் கொண்டு விளங்கியதனை வரலாறு உணர்த்துகின்றது. முதலாம் ராஜராஜனது ஆட்சிக் காலத்திலும் தமிழக சீன உறவு நீடித்தது என்பதனை இவன் சீன நாட்டிற்கு அனுப்பிய தூதுக் குழுவால் அறியலாம்.

ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் இவ்வாணிக உறவும் நட்புறவும் மேலும் சிறந்தோங்கின. கடல் கடந்த நாடுகளில் தனது மேலாதிக்கத்தினை நிறுவிக் கடல் வாணிகத்தைப் பெருக்க விழைந்த ராஜேந்திரன், சோணாட்டிற்கும் சீன நாட்டிற்குமிடையே நிலவிய வாணிகத்தைக் கடார வேந்தன் தடுக்க முயன்றதால்தான் இவன் கடாரப் படையெழுச்சியினை மேற் கொண்டான் என்பதனை முன்பே கண்டோம்.

மேலும், தஞ்சை மாவட்டத்தின் கண் பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள 'விக்கிரம்' என்னும் கிராமத்திலும், ஓலயக் குன்னம் என்னும் கிராமத்திலும், தஞ்சை மாவட்டம், மன்னார்குடி வட்டம் தல்லிக்கோட்டை என்னும் கிராமத்திலும் நூற்றுக் கணக்கான சீன நாணயங்கள் தோண்டி எடுக்கப் பெற்றுள்ள மையாலும், சோணாடு ராஜேந்திரனது ஆட்சிக்

காலத்தில் சீன நாட்டுடன் கொண்டிருந்த உன்னதமான வாணிகத்தினை நாம் நன்கறியலாம். இவண் குறிப்பிடத் தக்கது யாதெனில், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இரண்டாயிரத்து நூற்று அறுபத்தைந்து சீன நாணயங்கள் கிடைக்கப் பெறுதலின், சோணாட்டு சீன நாட்டு வணிகம் எவ்வளவு உயர்ந்த நிலையில் விளங்கியிருக்க வேண்டு மென்பதை நன்கு உணர முடியும்.

மேற்குறிக்கப்பெற்ற சீன நாணயங்கள் ராஜேந்திரனின் சம காலத்தில் சீன நாட்டை யாண்டு வந்த மன்னர்கள் காலத்தில் வெளியிடப்பட்டவையாகும் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

காசுகள் ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும், வணிக வளர்ச்சியையும் சுட்டிக் காட்டுவதுடன், வேந்தனின் அயல் நாட்டுறவைக்கூடக் கோடிட்டுக் காட்டுகின்றன. கரூர் அமராவதிப் படுகையிலும் ஓலயகுண்ணம் புதையலிலும் கிடைத்துள்ள சீனக் காசுகள் ராஜேந்திரன் சீனாவுடன் கொண்டுள்ள வணிகத் தொடர்புகளைப் பறைசாற்றுகின்றன. கரூரில் கிடைத்துள்ள நூற்றுக்கணக்கான சீனக் காசுகளுள் 21 காசுகளைப் பற்றி ஆய்வுகள் நிகழ்த்தியுள்ள நாணயவியல் அறிஞர் திரு. ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவற்றுள் ஐந்து காசுகள் ராஜேந்திரனின் காலத்தவை என்று வரையறை செய்துள்ளார். இவை சீனாவின் வடசாங் வம்சத்தாருடன் (Northern Song dynasty) ராஜேந்திரன் கொண்டிருந்த வணிக உறவுகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. சென்சாங், ரென்சாங் (Zhen Zong, Ren Zong) ஆகிய சீனப் பேரரசர்கள் காலத்திய கீழ்க் காணும் ஐந்து காசுகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

காசு-சியாங் ஃபூ தாங் போவ், கி.பி. 1008-16 - ஒரு காசு
(Xiang Fu Tong Bao)

காசு-டியான் சீ டாங் போவ், கி.பி. 1017-22 - ஒரு காசு

(Tian XI Tong Bao)

காசு-டியன் ஷெங் யுவான் போவ், கி.பி. 1023-31 - இரு காசு
(Tian sheng yuan Bao)

காசு-ஹூவாங் சாங் டோங் போவ், கி.பி. 1039-54 - ஒரு காசு
(Huang Song Tong Bao)

ஓலய குன்னம் புதையலில் கிடைத்த ராஜேந்திர சோழனின் காசுகள் பற்றி அனைவரும் அறிவர். விக்ரமம் புதையலில் இருபது சீனக் காசுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் கீழ்க் காணும் ஐந்து காசுகள் ராஜேந்திரனின் காலத்ததாகக் கருதப்படுகிறது. இவை தென், வட சாங் சீன அரசர் காலத்தவை.

சென் சாங் (Zhen Zong) மன்னர் காலம்

சியாங் பு டாங் போவ் (1018-1016) - 1 காசு

டீயான் சீ டாங் போவ் (1017-1022) - 1 காசு

ரென்சாங் காலம் - மிங் சோ யுவான் போவ் (1032-33) - 1 காசு

ஜிங் யூ யூ (1034-38) - 1 காசு

ஹூவாங் சாங் யுவான் போவ் (1039-54) - 1 காசு

(இக்காசுகள் சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் உள்ளன)

மேற்கூறப்பட்ட சீனக் காசுகள் மட்டுமின்றி கங்கைகொண்ட சோழபுரத்தில் கிடைத்துள்ள வெண்மை நிறம் மற்றும் வெளிர் செந்நிறத்தில் உள்ள சீனப் பீங்கான் ஓடுகளும் சீன-சோழ வணிக உறவைப் பறைசாற்றுகின்றன. இவை கி.பி. 11-12-ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதும் தமிழகத்தில் கிடைத்துள்ள சீனப் பீங்கான் ஓடுகளுள் காலத்தால் முற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 1015 மற்றும் 1033-ம் ஆண்டுகளில் இவ்வேந்தன் சீனத்துக்குத் தூதுக் குழுக்களை அனுப்பித் தன் நட்பையும் அரசியல் வணிக உறவுகளையும் வலுப்படுத்தியுள்ளான்

என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

நுண்ணிய விலையுயர்ந்த பருத்தி ஆடைகளும், அம்பர், முத்து, பவளம், நகைகள், காண்டாமிருகக் கொம்புகள், வாசனைத் திரவியங்கள் முதலான பொருள்களம் இந்தியாவி னின்றும், சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் படடனவாக வரலாற்றறிஞர் குறப்பிடுகின்றனர். இவ்வணிகத் தொடர்பு கிட்டத்தட்ட பதின்மூன்றாவது நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை நீடித்தது. தமிழ் நாட்டு வணிகர்கள் சீனாவிலும் பாரசீக வளைகுடாவிற்கு அருகிலுள்ள நாடுகளிலும் குடியேறி இருந்தனர் என்ற செய்தி, நம் தமிழர்களின், கடல் கடந்த வாணிகத்தினை உறுதிப்படுத்துகின்றது.

தமிழ் நாட்டுச் சிற்பங்கள், சீனக் கோயில் ஒன்றில் காணப்ப டுவதாலும், சீன நாட்டு நாணயங்கள், தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலும் காணக் கிடைத்தலினாலும், முத்து, யானைத் தந்தம், கண்ணாடிப் பொருள்கள், வண்ணாப்பட்டுக் கலந்த பருத்தித் துணிகள், பாக்கு ஆகிய பொருள்கள் சோணாட்டிலிருந்து சீன நாட்டின் துறைமுகத்தை வந்தடைந்தன என்று சீன அறிஞரான செள-ஜீ-குவா (Chau-Ju-Kua) குறிப்பிடுவதனாலும் தமிழர்கள் சீன நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு நன்கு விளங்குகின்றது. பன்னெடுங் காலமாகவே, தமிழ்நாடு அராபியாவுடன் குதிரை வாணிகத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், பிற்காச் சோழர் காலத்தில் இது மேலும் சிறப்புற்றிருந்தது. சோழர்கள் சிறந்த தொரு குதிரைப் படையினை நிருவகித்து வந்தனர் என்ற செய்தி, கல்வெட்டுச் சான்றுகளால் அறியப் படுவதால் சோழர்கள் அராபிய நாட்டினின்றும், குதிரைகளைப் பெருவாரியாக இறக்குமதி செய்தனர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். ஏனெனில், கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளன 'குதிரைச் செட்டிகள்' என்ற தொடர், மலை நாட்டிலிருந்து குறிக்கப்பெறுவதால் பெரும்பாலான குதிரைகள், அராபிய நாட்டினின்றும் இறக்குமதி

செய்யப்பட்ட தெனக் கருதுதல் தவறாகாது.

நம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் சோழ-அராபிய வாணிகம் சிறந்து விளங்கியது. இதனை ராஜேந்திரனது கோலார் கல்வெட் டொன்றில் செதுக்கப்பட்ட கீழ்க்கண்ட வரிகளால் இனிதறியலாம்.

'திருமந்திர ஓலை நாயகம் கங்கை கொண்ட சோழபுரத்து ராஜ வித்தியாதரப் பெருந்தெருவில் சோநகன், சாவூர்ப் பரஞ் சோதி'

இவண் சோநகன் எனும் சொல் கிரேக்க மொழியிலுள்ள 'ஐயோனியன்' என்ற சொல்லின் திரிபே என்றும், அறிஞர் சிலர் எண்ணுகின்றனர். பொதுவாக ஐயோனின் என்பது பண்டைக் காலத்தில் ஆசியக் கண்டத்திலிருந்த கிரேக்கர்களைக் குறிக்குமெனின், மேல் எடுத்தாண்ட கல்வெட்டின் காலத்தில் அச்சொல் தென்னிந்தியாவில், அராபியரைத்தான் சுட்டிற்று. அராபியன் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் அரசியலில் உயர்ந்த பதவிகள் பெற்றுச் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அராபிய வாணிகம் சிறப்புப் பெற்றிருந்தமை உய்த்துணரப்படும்.

அக்காலத்தில் ஒவ்வொரு வணிகனும், தனித்த முறையில் தன் தொழிலை நடத்தி வரவில்லை. வெளிநாட்டு வாணிகத்திற்கு முக்கியமாக விரிந்த முதலும், ஆண் கூட்டடமும் இன்றியமை யாதவை. வர்த்தகம் என்பது ஒருவரோ, இருவரோ பெரும் பொருளைச் செலவிடப் பலர் கூடிச் செய்யக் கூடிய வர்த்தக முறைகளில் ஒன்றாகும். இவ்வாறு தேர்ச்சி பெற்றார் பலர் ஒன்று கூடி வாணிக நிமித்தமாகக் குழுக்கள் பல நிறுவியிருந்தனர். இக்குழுக்களை ஐரோப்பிய நாடுகளில் மத்திய காலத்தில் நின்று நிலவிய 'கில்டு' என்று சொல்லப்பட்ட குழுக்களுடன் ஒப்பிடலாம்.

கல்வெட்டின் துணை கொண்டு உள்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டு வந்த 'நகரம்' (நகரத்தார்) வெளிநாடுகளில் வாணிகம் செய்து வந்த 'நகரம்' (நகரத்தார்) வெளிநாடுகளில் வாணிகம்

செய்து வந்த 'மணிக் கிராமம்', வலஞ்சியர்' என்ற இரண்டு வகையான வணிகச் சங்கங்கள் இருந்து வந்தன என்பதை யறிகிறோம். 'சித்திரமேழிப் பெரிய நாட்டார்', 'திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்', 'தவனச் செட்டிகள்', சயபாலர்கள், முனைவீர கோடியர், முடற்படைக் கலைஞர் ஆகிய வணிகக் கூட்டத்தினர் தங்களை 'ராஜராஜப் பெருநீரவியோம்' என்று குறிப்பிட்டுள்ள செய்தியினை அன்பில் கல்வெட்டொன்றால் அறியலாகும்.

கி.பி. 1015 ஆம் ஆண்டில் நிகரிலி சோழர் சதுர்வேதி மங்கலத்துச் சபையினர் வணிகக் குழுவினர்க்கு வீட்டுமனை வழங்கிய செய்தியாலும், கி.பி. 1033 இல் அம்பாசமுத்திரத்தின் சிவன் கோயிலுக்கு வணிகர சங்க நன்மைக்காகக் கொடை யளிக்கப் பட்டிருப்பதாலும், ராஜேந்திரன் காலத்திலும் வணிகக் குழு சிறப்புற்றிருந்தமையினை நன்கறியலாம்.

திருவிளக்குக் குடியிலுள்ள கோயில் கல்வெட்டின் மூலம் வலஞ்சியரும், நானா தேசியத் திசை ஆயிரத்த ஐந்நுற்றுவர், பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த வணிகச் சங்கத்தவ ராவர். அலைகடலுக்கப்பாலும் இவர்கள் புகழ் பரவியிருந்த செய்தியினைச் சுமத்திரா வில் 'லோபா டோவா' என்ற இடத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டாலறியலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தின்கண் உள்ள எண்ணாயிரம் என்ற ஊரின் தெற்குக் கடைத் தெருவில் வலஞ்சியர்களும், அந்தணர்களும் சேர்ந்து வாணிகம் புரிந்தனர் என்ற செய்தி, கல்வெட்டுகளால் புலனாகின்றது. கி.பி. 1037 ஆம் ஆண்டில் வாலையூர் என்னும் ஊரின்கண் இருந்த நகரம் அவ்வூர்க் கோயிலில் விளக்கெரியும் திருப்பணிக்காகத் தமது வாணிகத்தில் சில முறைகளைக் கையாண்டது. தானியங்களை விற்போரும் வாங்குவோரும் ஒரு காலத்தில் 'ஒரு நாழியில் கால் அளவு பாட்டம்' தானியம் கொடுத்தனர்; நிறை யொன்றுக்கு ஒரு பலத்தில் கோல் கூலியும், ஆயிரம் பாக்கிற்குப் பத்துப் பாக்கம்' கொடுத்து வந்தனர். பொதுவாக வணிகச் சங்கத்தினர்

பலவிதமான நன்கொடைகளை அளித்து மகிழ்ந்தனர். மன்னரும் அதிகாரிகளும் உள்ளூர் அவையினரும் வணிகர்களுக்கப் பெருமதிப் பளித்தனர்.

இதுகாறும் கூறியவற்றால், வணிகப் பெருங்குடி மக்கள் பல குழுக்களாகத் தங்களைப் பிரித்துக் கொண்டு கடல் கடந்த வாணிகத்தில் ஈடுபட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலினர் என்பது புலனாகும். இவ்வணிகப் பெருமக்களுள் நிலவிய பிரிவும், வேறுபாடும் யாதெனத் தெளிவாக அறிந்து கொள்ளப் போதிய ஆதாரங்கள் கிடைத்தில. உதாரணமாக நகரத்தாருக்கும் வலஞ்சியருக்கு மிடையே உள்ள வேறுபாடு யாதென்பது விளங்கவில்லை. மாதந்திரத்தின் மூதாரையர் வலஞ்சியர் ஆவர். மாதந்திரத்தாரின் தலைமை (மூல) அலுவலகம் வடநாட்டின் கண் உள்ள பீசப்பூரின் அருகிலுள்ள ஐயப்பொழில் ஆகும். ஐயப் பொழிலைத் தலைமை யிடமாகக் கொண்டு வாணிகம் புரிந்து வந்த குழுவினர் 'நானாதேசி திசையா யிரத்து ஐந்நூற்றுவர்' என அழைக்கப் பெற்றனர்.

மாதந்திரத்தார் படைத் தலைமையின் நிர்வாகக் குழுவாகக் கருதப்படுகின்றனர். 'வலஞ்சியர்', 'நகரத்தார்' ஆகிய இருவரின் வேறுபாடு தெறிவாகப் புரிய வில்லை யாயினும், வலஞ்சியர் மாதந்திரத்தாரின் மூதாதையர் என்பதும் நகரத்தார் மாதந்திரத்தாருடன் இணைந்தவர் என்பதும் நன்கு புலனாகின்றது. இக்கல்வெட்டுச் சிங்கள மன்னனான விசயபாகுவால் வெளியிடப் பெற்றுப் பொலந் நறுவையில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இம்மன்னன் புத்த ஆலயம் ஒன்றனை எடுப்பித்து அதன் பாதுகாப்பினை 'வேளைக்காரரின்' பொறுப்பில் விட்டிருந்தான். அவ்வேளைக் காரர்கள் 'மாதந்திரத்தோங்கூடி, எங்களக்கு மூதாதைகளாயுள்ள வலஞ்செயரையும் எங்களோடு கூடிவரும் நகரத்தார் உள்ளிட்டாரையுங் கூட்டி.....கலந்த பேசி, மன்னனுடைய விருப்பத்திற்கு ஒப்புக் கொண்டு, கல்வெட்டில் வலங்கை,

இடங்கை, சிறுதனம், பிள்ளைகள், தனம்வடுகர், மலையாளர், பரிவாரக் கொந்தம், பலகலனை யுள்ளிட்ட திருவேளைக்காரோம்' என்று கையொப்ப மிட்டதாகக் கூறப்படுகின்றது. 'வேளைக்காரர்கள்' என்போர் வாணிகத் துறையுடனும் தொடர்பு கொண்டவர் என்பதனை ஈண்டு நாம் உய்த்துணரலாம். இப்பிரிவினர் பலரும் அக்காலத்திலேயே அயல்நாட்டு வாணிகத்தை மேற்கொண்டு திறம் படச் செய்தனர்.

வலஞ்சியரைப் பற்றிய விரிவான செய்திகளை முதலாம் ராஜேந்திரன் காலத்திய காட்டூர்க் கல்வெட்டா லறியலாம். இவர்கள் வாசுதேவன், கந்தழி, வீரபத்திரன் ஆகிய கடவுளரிடம் தோன்றியவராகவும், வீர வலஞ்சிய சமயத்தைக் காக்க உறுதி பூண்டவராகவும், துர்க்கையை வழிபடுபவராகவும் இக்கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றனர். இவர்களுள் பல பிரிவுகள் இருந்தன. அவற்றுள் நான்கு திசைகளின் ஆயிரம் வட்டங்கள், பதினெண் நகரங்கள், முப்பத்திரண்டு வேளர்புரங்கள், அறுபத்து நான்கு கடிகைத் தானங்கள் போன்றவை குறிப்பிடத் தக்கவை யாகும்.

செட்டிகள், செட்டிப் பிள்ளைகள், சிங்கம், சிறுபுலி, கவரர்கள், கந்தழிகள், பத்திரகர்கள், காவுண்ட சாமிகள், வலங்கை, வாரியன் ஆகியவர்களும் இவர்களது குழுவில் சேர்ந்திருந்தனர்.

அக்காலக் கிராம ஆட்சியில் நான்கு வகையான சபைகள் இயங்கி வந்தன. அவற்றுள் வணிகர்கள் வாழ்ந்த நகரங்களில் இயங்கி வந்த சபையும் ஒன்றாகும். இச்சபையினர் தமக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்தனர். (சதுர்வேதி மங்கலத்திலிருந்த பிராமணர் சபையும், திருக்கோயில் தேவதான சபையும், பிராமண ரல்லாதார் வாழ்ந்த ஊர்களில் உள்ள சபையும் மற்ற மூன்று சபைக ளாகும்.)

'நாநாதேச திசையாயிரத்தைஞ்நூற்றுவர்,' 'நாநாதேசிகள்' எனவும், கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளனர் இவர்கள் எல்லா நாடுகளுக்கும் சென்று வாணிகம் புரிந்தமையின் நாநா

தேசிகன் (நாநாதேசி - பலதேசங்கள்) எனவும், இவர்களது குழுவில் ஐந்நூறு வணிகர்கள் இடம் பெற்றிருந்தமையின் ஐந்நூற்றுவர் எனவும், ஆயிரம் திக்குகளுக்குச் சென்று வாணிகம் புரிந்த ஐந்நூற்றுவராதலின் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் எனவும் அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். கி.பி. 1088 ஆம் ஆண்டில் சுமத்திரா நாட்டில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டில் 'திசையாயிரத்தைஞ்நூற்றுவர்' என்ற வணிகக் குழுவினரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இது முதலாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் வரையப்பட்ட கல்வெட்டென்பது குறிப்பிடத் தக்க தாகும்.

நானாதேசிகள் வாணிகம் செய்துகொண்டு வாழ்ந்து வந்த இடங்கள் வீரபட்டினம் எனவும், எறிவீர பட்டினம் எனவும் அழைக்கப் பெற்றனவாகக் கல்வெட்டுகளா லறியலாம். இவர்கள் முதலாம் ராஜேந்ததிர சோழனின் ஆட்சிக் காலத்தில் மயிலாப்பூரில் கூடிச் செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டத்திலுள்ள அய்யாப்புழல் காட்டூர் என்னு மிடத்தை வீரப் பட்டினமாக மாற்றினர் என்ற செய்தியினையும், அவ்வூர்ப் பொதுமக்களுக்குப் பல வழிகளில் நன்மை புரிந்தனர் என்ற செய்தியினையும் அவ்வூர்க் கல்வெட்டா லறியலாம்.

நானாதேசிகளும், நாட்டாரும் நகரத்தாரும் முதலாம் ராஜாதிராஜனின் ஆட்சிக் காலத்தில் சீராவள்ளி என்ற ஊரில் கூடி, 'நானாதேசியத சமடி எறிவீர பட்டினம்' என்று அவ்வூரின் பெயரை மாற்றி யமைத்ததுடன் அவ்வூர் மக்களுக்குச சில உரிமைகள் வழங்கியதாகவும் அறிகிறோம். இதனைச் சித்தூர் மாவட்டம் மதனபல்லி வட்டத்திலுள்ள பசினி கொண்டா கல்வெட்டொன்றால் அறிய லாகும்.

மேற்கூறியவற்றால் வாணிகத் தலங்கள் வீரர்களால் பாதுகாக்கப்பட்டன வென்றும் வீரர்களின் பாதுகாப்பிற் குட்பட்ட வாணிகத் தலங்கள் வீரபட்டினம், எறிவீரபட்டினம் எனும் பெயர்களால் அழைக்கப்பெற்றன என்றும் அறியலாம்.

தலை நகரங்களிலும், கடற்கரைப் பட்டினங்களிலும், அயல் நாடுகளிலும் வாணிகம் செய்து பெரும் பொருளீட்டிய வணிகக் குழுவினர் மணிக்கிராமத்தாராவர் என்பதனைக் கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் அறியலாம். இவர்கள் மிகப் பழமை வாய்ந்த வாணிகக் குழுவினராவர். இவர்கள் உறையூர் மணிக் கிராமம், காவிரிப்பூம் பட்டினத்து மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக் கிராமம், இளங்கோப் பட்டினத்து மணிக்கிராமத்தார் என்று கல்வெட்டுகளால் சிறப்பிக்கப் பட்டுள்ளமையின் இவர்கள் தலைநகரங்களில் வாணிகத்தில் சிறந்திருந்தனர் என்பது புலனாகும். சாயம் தேசத்தில் காணப்படுகின்ற தமிழ்க் கல்வெட்டொன்று, அந்நாட்டில் மணிக்கிராமத்தார் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே சிறப்புடன் வாணிகம் செய்த செய்தியினைக் குறிப்பிடுவதால் அவர்களின் வாணிகச் சிறப்பினை நாம் நன்குணரலாம். இக்கல்வெட்டுத் தெள்ளாறெறிந்த நந்திவருமப் பல்லவன் காலத்தில் வெளியிடப் பெற்ற தாகும். இச்செய்தியால் மணிக்கிராமத்தாரின் கடல் வாணிகச் சிறப்பை நன்கறியலாம்.

தமிழகத்தின்கண் வாணிகம் புரிந்து வந்த புகழ் மிக்க குழுவினருள் அஞ்சுவண்ணத்தார் என்ற வகையினரும் ஒருவராவர். இவர்கள் முகமதிய மரபினர் என்பதும் தமிழ்நாட்டில் தங்கி வாணிகம் செய்தனர் என்பதும் சில ஆதாரங்களால் புலனாகின்றன. 'இயவனராஜன் கலுபதிதாமுத லெண்ண வந்தோர்...அயன் மிகு தானையர் அஞ்சு வண்ணத்தவர்' எனவும் 'ஏழ் பெருந்தேரங்கத் தியவனர்கள்..அல்லா என வந்து' எனவும் 'பல் சந்த மாலை' எனும் நூலின் பாடல்கள் குறிப்பிடுவதால் இவர்கள் முகமதியராயிருத்தல் வேண்டு மென்பது அறியப்படும். இவர்கள் சில பாடல்களில் 'சோனகர்' எனவும் குறிப்பிடப் பெறுகின்றனர்.

'கலைமதி வாய்மைக் கலும்பா வழிவருங்

கற்பமைந்த, தலைமையர் ஏழ்பெருந் தெரங்கமும்

பெற்றவர் ... .'

இவர் எனப் பிறிதொரு பாடற் பகுதி குறிப்பிடுவதால், இவர்கள் 'காலிப்' வழிவந்தவர் என்பதும் புலனாகும்.

இவர்களைப் பற்றிய குறிப்பு முதலாம் ராஜேந்திரனின் காலத்திலிருந்த சேரமான் பாஸ்கர ரவிவருமன் காலத்திய செப்பேட்டில் இடம் பெற்றுள்ளது. முதலாம் ஆதித்த சோழனின் காலத்திலிருந்த சேரமான் தாணுரவியின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப் பெற்ற செப்பேட்டிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணக் கிடைத்தலின் இவர்களின் பழமையை என்னென்பது! இச்செப்பேட்டுச் செய்திகளால் அஞ்சுவண்ணத்தார் சேர நாட்டின் கண் சிறப்புடன் வாணிகம் செய்த வணிகக் குழுவினர் என்பது விளங்கும். எனவேதான், பண்டாரக்ர் குண்டரட்டு, என்போர் சேர நாட்டிலிருந்த யூதர்களா யிருத்தல் வேண்டு மென்று கருதுகின்றனர். இவர்கள் யார்? என்பது குறித்து வரலாற்றறிஞர் களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இவர்கள் சேரநாட்டில் மட்டு மன்றிப் பாண்டி நாட்டிலும் வாணிகம் செய்தனர் என்பதனைக் கீழ்க் கடற்கரையில் பாண்டி நாட்டிலுள்ள தீத்தாண்ட தானபுரத்துக் கல்வெட்டா லறியலாம். இவர்கள் சோழ நாட்டின்கண்ணுள்ள நாகப்பட்டினத்தில் வணிகம் புரிந்ததைக் கீழ்க்கண்ட பழம் பாடலொன்றால் அறியலாம்.

'குடக்கினில் துரங்கமும் வடக்கினில் கலிங்கமும்

குணக்கினில் பசும்பொனும் குறித்ததெற் கிலாரமும்

அடிப்பரப் புடைக்கலத் தனேகவண்ண மாகவந்த

தஞ்சுவண்ண முந்தழைத தறத்தின்வண் ணமானவூர்

கடற்கரைக் குவித்திடு சந்தனத்தை இத்துடன்'

கலந்திறைக்கு மந்தியைக் கனன்றுமு சுவின்குலம்

புடைப்பதற் கெழுந்துகை முறுக்கலும் இழுக்கினவாய்

புக்கமுத்தை விட்டெறிந்து பூகமேறு நாகையே'

அஞ்சுவண்ணத்தார் தமிழகம் முழுவதும் நன்முறையில் வாணிகம் செய்து நற்புகழ் பெற்ற குழுவினராவர்.

வாணிகர்கள் புறநாடுகளுக்குச் செல்லுங்கால் கூட்டங் கூட்டமாகச் செல்வது வழக்க மாதலின், இக்கூட்டத்திற்கு 'வாணிகச் சாத்து' எனும் பெயர் நிலவிற்று. சோழ மன்னர்கள் சிறப்பு மிக்க வணிகர்கட்கு 'எட்டி' எனும் பட்டத்தைச் சூட்டிச் சிறப்பித்ததனர். சோழ நாட்டு வணிகர்கள் பூம்புகார், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களை மட்டுமன்றிக் காரைக்கால், வீரை, (வீராம்பட்டினம்), மாமல்லபுரம், வீரசோழப் பட்டினம் (கோவைளம்) மைலாப்பூர் ஆகிய கடற்கரைப் பட்டினங்களின் மூலமாகவும் கடல் வாணிகத்தை மேற்கொண்டனர்.

சோழநாட்டு வணிகக் குழுவினர் மேற்கேயுள்ள அராபிய நாட்டினருடனும், பாரசீக நாட்டினருடனும், கிழக்கேயுள்ள சுவர்ணபூமி, ஸ்ரீவிசயம், சுவர்ண தீபம், காம்போசம், சீனம் ஆகிய கடல் கடந்த நாட்டினருடனும் கடல் வாணிகம் புரிந்து சோழநாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினர்.

'நடுநுகத்துப் பகல்போல

நடுவுநின்ற நன்னெஞ்சினோர்

வடுவஞ்சி வாய்மொழிந்து

தமவும்பிறவும் ஒப்பநாடிக்

கொள்வதூஉ மிகைகொளாது

கொடுப்பதூஉங் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்துவீசும்'

என்று பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார்

குறிப்பிட்டுள்ளதைப் போன்றும்,

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோற் செயின்.

என்று திருக்குறளின்கண் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளதைப் போன்றும் தமிழக வணிகர் வாணிகத்தில் அறநெறியைப் பின் பற்றினரென உறுதியாகக் கூறலாம். இதனால், சோழர் காலத்திய வணிகருக்கும், நேர்மைத் திறத்துடன் வாணிகம் புரிந்தனர் எனக் கொள்ளுதல் தவறாகாது.

எனவே, வணிகர்கள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை யானவர்கள் ஆவர். அதிலும் சிறப்பாகக் கடல் கடந்து வாணிகம் செய்யும் வணிகர்களால்தான், ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைகிறது. வாணிகத்தில் ஈடுபட்டிருந்த நகரத்தார் கோயிலுக்கு நன்கொடைகள் அளித்துள்ள செய்தியினை, நம் ராஜேந்திரனது ஆறாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட நல்லூர் கல்வெட்டா லறியலாம்.

வணிகக் குழுக்கள் கடல் கடந்து பிற நாடுகளுக்குச் செல்லுங் காலை, படைத் துணையோடு சென்றனர் என்பதனையும், கல்வெட்டுச் சான்றா லறியலாம். இவர்கள் தமது தற்காப்பிற்காகவே படை கொண்டு சென்றனர் என்பதும் இதனால் பெறப்படுகிறது. இதனைச் சீயத்தில் கிடைத்த கல்வெட்டில், 'சேனாமுகம்' என்ற சொற்றொடராலும், 'நான்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவப் பெருஞ்சமயமும், இச்சமத்துத் திருவடிக்குப் பணிசெய்யும் எறி வீரரூம், கொங்காள்வாரும்' என்ற பசனி குண்டா கல்வெட்டாலும் அறியலாம்.

ஒரு நாட்டில் 'தலை சிறந்த மதாசாரியர்க்கு ஒப்பானவர் வர்த்தகர்கள்' என்று முகமது நபி அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருத்தலின் வணிகரின் இன்றியமையாமையை, நாம் தெள்ளிதின் உணரலாம். 'திரைகடலோடியும் திரவியம்

தேடு' எனும் முதுமொழியினைப் பொன்னெனப் போற்றிய சோழநாட்டு வணிகர்கள் கடல் கடந்து சென்று பொருளீட்டிச் சோழநாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை புரிந்தனர். எனவே, இவர்கள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறு துணையாக, ஊன்றுகோலாக இருப்பர் என்பது வெள்ளிடைமலை. நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் மாலாயா, இலங்கை, ஸ்ரீவிசயம், கடாரம், பருமா, சுமத்திரா முதலான கடல் கடந்த நாடுகளில், சோழரது புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்ததன் பயனாகக் கடல் கடந்த வாணிகமும் பெருவளர்ச்சி பெற்றது. ஐரோப்பிய அரசாங்கம் வெளி நாடுகளில் வாணிகம் புரியும் தம் நாட்டு வணிகர்கட்குப் பேரூதவி புரிந்தது. ஆனால், சோழ மன்னர்கள் வெளி நாடுகளில் வாணிகம் செய்யும் தமிழர்கட்குப் பேரூதவி புரியவில்லை. அவ்விதம் அவர்கள், பேருதவி யளித்திருப்பின், நமது அரசியல் ஆதிக்கம் கடல் கடந்த நாடுகளில் பரவியிருககும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதனால், அக்கால வணிகர்களுக்கோ, சோழ வேந்தர்களுக்கோ, பொருளாதார ஏகாதிபத்திய உணர்வு இருந்ததாகத் தெரியவில்லை என்று கருதலாம்.

தொழில்கள்

சோழரது ஆட்சிக் காலத்தில் பல வகைப்பட்ட தொழில்கள் வளர்ச்சி பெற்றிருந்தன. பொன் வேலை செய்வோர், உலோக வேலை செய்வோர், நெசவு வேலை செய்வோர், மர வேலை செய்வோர், தந்த வேலை செய்வோர் போனறார் தங்களது தொழிலைத் திறம்பட்ச் செய்து வந்தனர். உலோக சம்பந்தமான கைத்தொழிலைச் செய்வோர் அன்றாட உபயோகத்திற்குத் தேவையான உலோகப் பாத்திரங்களைச் செய்தனர். இவற்றுள் வெண்கலப் பாத்திரங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். இவை பெரும்பாலும் செல்வர்களால் பயன் படுத்தப் பட்டன. பல்வேறுபட்ட கைத் தொழில்கள் நாட்டில் வளர்ச் ¤யடைநந்தமையால் மக்கள் எல்லாவிதமான பொருள்களையும்

பெற்று இன்புற்றனர். ஈண்டு நாம் சோழர் காலத்தில் சிறந்து விளங்கிய தொழில்களுள் சில வற்றினைப் பற்றிச் சிறிது ஆய்வோம். வாணிகம், விவசாயம் பற்றிய செய்திகள் முன்பே கூறப்பட்டுள்ளன. அவற்றினை முன்பகுதியில் காண்க.

சோணாட்டின்கண் சிறப்புற்று விளங்கிய தொழில்களுள் நெசவுத் தொழிலும் ஒன்று. விவசாயத்திற்கு அடுத்தபடியாக இத்தொழில் மூலமாகவே அரசுக்குப் பெருவருவாய் வந்த தென்பதால் இதன முக்கியத்துவத்தை நன்கறியலாம்.

இத்தொழில், புதிய கற்காலத்திலேயே ஆரம்ப மாயிற்று என்று தொல்பொருள் ஆய்வறிஞர் திரு. எச்.டி.சங்காலியா குறிப்பிடுவதானாலும், ஆடையைப் பற்றி ஒல்காப்பெரும்புலமைத் தொல்காப்பியனார் தமது நூலில் குறிப்பிடுவதனாலும், பருத்தி, இலவமரம், கோங்கமரம் முதலியவை பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடுவதனாலும் இத்தொழிலின் தொன்மையை நாம் நன்கு அறியலாம்.

சோழர் காலத்தில் ஆட்டு மயிர், எலி மயிர், பருத்தி, பட்டு ஆகியவற்றால் நேர்த்தியான ஆடைகள் நெய்யப்பட்டன. இவை பாம்பு உரித்த தோல், மூங்கிலின் உட்புறததேயுள்ள மெல்லிய வெண்மையான தோல், புகை, பாலாவி போன்று விளங்கின. தமிழகத்தில் முப்பத்தாறு வகையான ஆடைகள் நெய்யப்பட்டன என்பதனை அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாட்டில் நெய்யப்பட்ட மெல்லிய, நுண்ணிய, அழகிய ஆடைகள் கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால், தமிழ் நாட்டுப் பொருளாதாரம் முன்னேற்ற மடைந்தது.

நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்தோர் கம்மியிர், காருகர் எனத்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப் படுகின்றனர். இவர்கள் கைக்கோளர் எனவும், சாலியர் எனவும், சோழிய சாலியர்

எனவும், பட்ட சாலியர் எனவும், சேணியர் எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றனர். இவர்களிடையே பல்வேறு பிரிவினர் இருந்தன ரென்பதையும் இதனா லறியலாம்.

1946 ஆம் ஆண்டு பாண்டிச்சேரியைச் சார்ந்த அரிக்கமேடு என்னுமிடத்தில் நடைபெற்ற அகழவாராய்ச்சியின் போது எழுத்துகளுடன் கூடிய பானை ஒடொன்று கிடைத்தது. அதில் கைக்கோளரென்று குறிக்கப் பெற்றுள்ளதாகவும், அது நெசவாளரைக் குறிப்பதாவும் திரு. சக்கரவர்த்தி குறிப்பிடுகின்றார் எனவே, கைகாளர், நெசவாளர் என்பது தெளிவு.

'நெசவுத் தொழில் செய்த பல்வகைப் பிரிவினருள் இக்கைக் கோளர் என்ற பிரிவினர் சமூதாயத்திலும், அரசியலிலும் நிருவாகத்திலும் செல்வாக்குப் பெற்றிருநதனர். இவர்களில் பெரும்பாலானவர் சைவர்களாக இருந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர் சைவர்களாக இருந்திருக்கின்றனர். சிலர் இலிங்கத்தை அணிகலனாக அணிந்துள்ளனர். ஒரு சிலர் வைணவராக இருந்திருக்கின்றனர். இவர்களின் வாவந்தவர்கள் தற்பொழுது காஞ்சிபுரத்தில் வசித்து வருகின்றனர்' என்று கல்வெட்டாய்வாளர் திரு. அ. அப்துல் மஜீத் அவர்கள் 'நெசவியல்' என்னும் கட்டுரையில் குறித்துள்ளதால் இவர்களது சமயத்தினை நாம் ஒருவாறு அறியலாம்.

உடற்கட்டும் வலிமையும் வீரமும் மிக்க இவர்கள் போர்ப் படையில் சேர்ந்த வீரர்களாகப் பணி புரிந்தனர். எனவேதான், கல்வெட்டுகளும் இவர்களைக் 'கைக்கோளப் பெரும்படையினர்' எனக் குறிக்கின்றது.

இவர்கள் திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து வந்தன ரென்றும், கோயில் பணியாளர்களுள் ஒருவராக விளங்கின ரென்றும், கோயில் பணியாளர்களள் ஒருவராக விளங்கின ரென்றும், திருக்கோயில்கட்குக் கொடைகள் அளித்துள்ளனரென்றும், இறைவனுக்கு ஆடைகள்

நெய்தளித்தன ரென்றும், கூத்த பிரானுக்கும், பிச்ச தேவருக்கம், கணபதிக்கும் கோயில்கள் எடுப்பித்ன ரென்றும் கல்வெட்டுச் செய்திகளாலறியலாகும்.

நம் ராஜேந்திர சோழனின் இரண்டாமாட்சி யாண்டின் கல்வெட்டினைக் கொண்டு கைக்கோளப் பெரும்படையினர் திருவிடை மருதூரிலுள்ள மகாலிங்கசுவாமி கோயிலுக்கு ஒரு சாளரமும் (சன்னல்), ஒரு கதவும், ஒரு நிலைப்படியும், மண்டபத்திற்குப் படிகளம் மைத்துக் கொடுத்தனர் என்பதனை யறியலாம்.

மேற்கூறியவற்றால் சோழர் காலத்தில் நெசவுத் தொழில் சிறப்புற்று விளங்கிய தென்றும், இதனால், அரசிற்கு நல்ல வருவாய் கிடைத்த தென்றும், இவர்கள் நெசவுத் தொழிலுடன் நாடு காக்கும் பணியிலும் ஈடுபட்டனர் என்பது புலனாகும். மக்களுக்கும், இறைவனுக்கும், மன்னனுக்கும் தேவையான ஆடைகளை நெய்து அளித்த இவர்கள், சமூதாயத்தில் நன்நிலை பெற்றிருந்தனர் என்பதும் ஈண்டு நினைவு கொள்ளத் தக்க தாகும். பட்டசாலியர் என்போர் மன்னனுக்குரிய நேர்த்தியான ஆடைகளை நெய்தனர். சோழர் காலத்தில் நெசவுத் தொழில் மேன்மையுற்றிருந்தது.

கப்பல் கட்டும் தொழில்

சோழப் பெருமன்னர்கள் வலிமை மிக்க நிலப்படையை வைத்திருந் ததோடு, ஆற்றல் மிக்க கப்பற் படையையும் வைத்திருந்தனர். குறிப்பாக அதிலும் சிறப்பாக முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் போன்ற சோழப் பெருமன்னர்கள் கடல் கடந்த நாடுகளை வென்று, தன்னடிப் படுத்தும் முயற்சியில் தளராது ஈடுபட்டிருந்தமையின் எண்ணிறந்த போர்க் கலங்களை வைத்துக் கடற்போர் புரிந்தனர். இத்துணைப் பெரிய கடற் படையினைக் கொண்டு, கடலாண்ட இவர்களது ஆட்சிக் காலங்களில் கப்பல் கட்டும் தொழில் சிறந்திருந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.

உலோகத் தொழில்கள்

தமிழர்கள் பண்டைக் காலத் தொட்டு உலோக வார்ப்புத் தொழிலில் சிறந்திருந்தனர் என்பதனை இலக்கியச் சான்றுகளா லறியலாம். சோழர்கள் காலத்திலும் இத்தொழில் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. இவர்களது காலத்தில் மக்களின் வீட்டுத் தேவைக்கம், கோயில்களுக்கும் அதிக அளவில் உலோகப் பாத்திரங்கள் தயாரிக்கப் பெற்றன. இவர்கள் காலத்தில் அழகிய நாணயங்கள் வெளியிடப் பெற்றதாலும் இத்தொழிற் சிறப்பை நாமறியலாம்.

15

சமுதாய நிலை

கி .பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தின் சோணாட்டின் சமுதாய நிலையினை நாம் அறிந்துக் கொள்ளுதல் அவசியமாகும். தமிழகத்தின் தலைசிறந்த மன்னனாம் முதலாம் ராஜராஜ சோழனின் ஆட்சிக் காலம் தமிழக வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய காலம். இவன் தனது அரும்பெரும் முயற்சியின் பயனாக மேம்பட்ட சமுதாயத்தினை உருவாக்கிப் போற்றுதற்குரியவனாகிறான். இவன் மகனான ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும் சமுதாய வாழ்வினைச் சீர்திருத்தும் வகையில் எண்ணிறந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும் சமுதாய வாழ்வு சிறந்திருந்ததில் வியப்பில்லை.

ராஜேந்திரனது போர்ச் செயல்களையும், ஆட்சி முறை யினையும் நாம் அறிந்துக் கொள்வது மட்டும் போதாது. அவனது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை பற்றியும் அறிந்துக் கொள்வது அவசியமாகிறது. ஏனெனில், மனித வாழ்வினை மைய மாகக் கொண்டு தீட்டப்பட்ட வரலாறுதான் கால வெள்ளத்தைக் கடந்து என்றென்றும் பொன்றாது நின்று நிலவும் திறம் கொண்டது. எனவேதான், வரலாற்றறிஞர் திரு.பி.டி. சீனிவாச ஐயங்காரும் 'சரித்திரம் என்பது மக்கள் வாழ்க்கை, நாகரீகம், குறிக்கோள் என்பவை பற்றிக்

கூறுவதுதான்' என்று குறிப்பிடுகின்றார். எனவே, இனி நாம் ராஜேந்திரன் காலத்திய சமுதாய வாழ்வைப்பற்றிக் காணலாம்.

'மனிதன் ஒரு சமுதாய மிருகம்' (Man is a social animal) என்று நன்றாகச் சொன்னார் அறிஞர் அரிஸ்டாடில். எனவே, மனிதன் தனித்து வாழாது சமுதாயத்துள் இணைந்து வாழ்கிறான். நம் ராஜேந்திரனது காலத்தில் சமுதாயத்தில் பல்வேறு வகைப்பட்ட நிலைகளைக் காணலாம். இச்சமுதாய வாழ்வின் அடிப்படையினைக் கொண்டே, நாட்டின் பெருமையும், சிறுமையும் கணிக்கப் பெறுகின்றன. அக்காலத்தில் மக்களிடையே பல பிரிவுகள் காணப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் அதற்கெனத் தனி வாழ்வு முறைகளை மேற்கொண்டு வந்தது. இப்பிரிவுகளுள் அந்தணர், வாணிகர், உழவர், தொழிலாளர், வீரர் போன்றோர் பற்றி நாம் அறிந்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

சோழர் காலத்திய சமுதாயம் நெகிழ்ச்சியுடையதாகக் காணப் பட்டது. சாதி, சமுதாய அமைப்பின் அடிப்படையாக விளங்கிற்று. அக்காலத்தில் சாதி அடிப்படையில் அமைந்த குழுக்கள் செல்வாக் குடன் விளங்கின. தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதி பாகுபாட்டு முறை, வாழையடி வாழையாக நம் நாட்டில் நிலவி வந்தது. அவர்கள் தத்தம் சாதி உரிமைகளைப் பாதுகாப்பதிலேயே முனைந்திருந்தனர். இதன் விளைவினால் சில பிரிவினர் தொடர்ந்து உயர்நிலை பெற்றனர்; மன்னனின் ஆதரவைப் பெற்றனர். சில பிரிவினர் என்றென்றும் தாழ்ந்த நிலையிலேயே ஆழ்த்தப் பெற்றனர். மேற்கூறிய கோட்பாட்டினை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் சோழர்காலச் சமுதாயம் எனும் கட்டிடத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அந்தணர்

இவர்கள் சமுதாயத்தில் தலையாய இடத்தைப்பெற்று அரசர், வணிகர், பொதுமக்கள் ஆகிய எல்லோராலும் மதிக்கப் பெற்றனர். இவர்கள் வேதங்களையும், சாத்திரங்களையும்

கசடறக் கற்றுத்தேர்ந்தனர்; திருக்கோயில்களிலும், அம்பலங்களிலும் இரவில் மகாபாரதம், புராணம் போன்ற அறிவு நூல்களை மக்கள் முன்பு எடுத்துரைத்தனர். அரசருக்குரிய ஆச்சாரியர்களாகவும் அரசன் நல்வாழ்வு பெறவேண்டி, வேதம் ஓதுதல், வேள்விகள் புரிதல் போன்ற கிரியைகள் செய்பவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் நற்பணி புரிந்து வந்த இவர்கள், மன்னனின் பெரு மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் உகந்தவர்களாக நடந்துக் கொண்டனர். இவர்கள் சில சமயங்களில் படைத் தலைவர்களாகவும் பணியாற்றினர். ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் ராஜராஜ பிரம மகாராஜன் என்னும் அந்தணனும், கிருஷ்ணன், இராமனான மும்முடிச் சோழ பிரம மாராயன் என்னும் அந்தணனும் படைத் தலைவராகப் பணியாற்றினர் என்பதனை ஈண்டு நாம் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இவர்கள் வட மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர்.

உயர்சாதி மக்களாகக் கருதப்பெற்ற இவர்கள் அரசியலில் அமைச்சராகவும் பணியாற்றினர். மாராயன் அருண்மொழியான உத்தமசோழப் பிரமராயன் என்னும் அந்தணன் அரசியல் தலைவனாகப் பணி புரிந்ததை ஈண்டு உணரலாம். எனவே, பார்ப்பனர் திருக்கோயில்களில் ஆதிக்கம் செலுத்தியதோடு அமையாது, அரசியலிலும் செல்வாக்குப் பெற்று, மன்னனின் நல்லாதரவைப் பெற்றனர். சில சமயங்களில் செல்வாக்குடன் விளங்கினர்; மன்னனுக்கு அறிவுரையும், ஆசியுரையும் கூறினர். புரோமசிதர் சோழர் அரசியலின் அச்சாணி எனக் கூறலாம்.

இவர்களது பணியினைப் பாராட்டும் முகத்தால் சோழ வேந்தர்கள் இவர்களுக்குப் பிரம ராயர் எனும் சிறப்புப் பட்டத் தினையும் வழங்கினர். மேற்கூறிய மூவரும் நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் 'பிரம ராயன்' எனும் பட்டத்தினைப் பெற்றுப் படைத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் பணி புரிந்தனர்.

பார்ப்பனர் அந்தணர், மறையோர், வேதியர், அருச்சகர், புரோகிதர் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெற்றனர். வேதங்கள் ஓதி வந்த இவர்களுக்கு மன்னன் இலவசமாக வீடு, ஊர், வரியிலி நிலங்கள் ஆகியவை அளிந்தான். இவர்களது வாழ்விற்கென மன்னன் ஆற்றங்கரைகளில் தெருக்கள் அமைத்து வசதி செய்து கொடுத்தான். வேதியருக்கு பிரமதேயம், சதுர்வேதி மங்கலம் எனும் பெயர்களால் கிராமங்களும், நிலங்களும் வரியின்றி வழங்கினான். எல்லா இன மக்களும் கலந்து வாழும் ஊர்களில் பார்கனர்களுக்கென்று தனித் தெருக்கள் ஒதுக்கப்பட்டன.

அந்தணர்களுக்கு அகரப் பற்று, அக்கிரசாலைப்புரம், அக்கிரகார வாடை, வேதவிருத்தி, பட்ட விருத்தி, அத்தியயன விருத்தி முதலிய பலவகையான மானியங்கள் மன்னனால் வழங்கப்பட்டன. இவற் றுள் அக்கிர சாலைப் புரமென்பது பார்ப்பனருக்கு இலவசமாக உணவளிக்கும் அக்கிரசாலைக்கு அளிக்கப்பட்ட மானியமாகும். திருக்கோயில்களிலும் பார்ப்பனருக்கு இலவசமாக மதிய உணவு அளிக்கப்பட்டது.

ராஜேந்திரன் பார்ப்பனருக்குப் பல கிராமங்களைத் தானம் செய்துள்ளதாக இவனது கரந்தைச் செப்பேடு சான்று தருகின்றது. இவன் ஓர் அந்தணனுக்குக் கோயில் படைக்கவும், வேத பாடம் கற்பிக்கவும் நிலத்தானம் அளித்துள்ளதாகத் துறையூர்க் கல்வெட்டொன்று செப்புகின்றது. இவர்கள் ராஜேந்திரனது காலத்தில் மறைக்கல்லூரிகளில் பேராசிரியராகவும் பணி புரிந்தனர்.

ராஜராஜசோழனது காலத்திலும், ராஜேந்திரசோழனது காலத்திலும் அந்தணர்கள் வடநாட்டினின்றும் அழைத்து வரப்பெற்றனர் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும். நம் ராஜேந்திரன் சருவசிவ பண்டிதருக்கும், அவருடைய சீடருக்கும் ஆசார்ய போகம் அளித்ததனை முன் பகுதியில் கண்டுள்ளோம். இதுகாறும் கூறியவற்றால் அந்தணர் சோழர் சமுதாயத்தில்

உயர்ந்த நிலையை பெற்றுப் பல சலுகைகளைப் பெற்றனர் என்பது புலனாகிறது. அந்தணர் செய்த சில குற்றங்களுக்கு குறைந்த தண்டனை வழங்கப்பட்டது. இது முறையன்று என்பது மட்டும் ஈண்டுக் கூறத்தக்கதாகும். பார்ப்பனக் கொலை புரிவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

பிராமணர்களுக்குப் பல சலுகைகளும், உயரிய நிலையும் அளித்தமையைக் கண்டு வியப்புற்ற தமிழ்நாட்டு வரலாற்று அறிஞர், பண்டாரகர் திரு. என். சுப்பிரமணியன் அவர்கள் தமது 'தமிழ்நாட்டு வரலாறு' எனும் நூலின் கண் கீழ்க்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார். 'எங்கிருந்தோ வந்த அதிகார மற்ற ஏழைகளான சிறுபான் மையோர் மன்னர்களால் சிறப்பான முறையில் நடத்தப்பட்டமை வியப்பிற்குரியதாக உள்ளது'

அமைச்சரும், உயர்தரத்து அதிகாரிகளும் பல நல்ல வசதிகளைப் பெற்று உயர்நிலையிலிருந்தனர். ஆனால், இவர்கள் நேர்மை தவறாது பணி புரிந்தனர் என்பது உய்த்துணரப்படுகின்றது. இவர்களுக்கென்று தனி வீதிகள் இருந்தன. இவர்கள் நாட்டுப் பற்றுடன் பணியாற்றித் தேவையான சமயத்தில் உயிரையும் பணயம் வைத்துப் பணிபுரிந்தனர். இவரிடையே பல கோத்திரப் பிரிவுகள் இருந்தன என்பதனைக் கரந்தைச் செப்பேட்டா லறியலாம்.

வணிகர்

இவர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதுகெலும்பு போன்றவராவர். இவர்களுள் பல பிரிவினர் இறந்தனர். உள் நாட் டில் வாணிகம் புரிவோர், வெளிநாட்டில் வாணிகம் புரிவோர் என இவர்கள் இருபெரும்பிரிவினராகப் பிரிக்கப்பட்டனர். நகரத்தார், வலஞ்சியர், நானாதேசியத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார் போன்ற பல வணிகக் குழுக்களும் வாணிகம் செய்தமை விளங்கும். கடல் கடந்து வாணிகம் புரிவோர் தாங்கள் பாதுகாப்பிற்காகப் படை வீரர்களைத் தம்முடன் கொண்டு சென் றனர். இவர்கள் மலாயா,

சீனம், சாவா, சுமத்திரா, அராபியா, காம்போசம் ஆகிய நாடுகளுடன் கடல் வாணிகம் புரிந்து, சோணாட்டின் நிதி நிலையைப் பெருக்கினர். இவர்கள் தனித் தெருக்களில் வசித்தனர்.

வணிகர்கள் மன்னரால் பெரிதும் மதிக்கப்பட்டனர். சில வணிகர் மன்னனுக்கு இணையாக வைத்தும் மதிக்கப் பெற்றனர். மன்னனும் இவர்களுக்குத் தேவையான வசதிகளைப் புரிந்து வந்தான். பெருவழிகள் பல அமைக்கப்படடன; வெளிநாட்டு வாணிகத்தில் இடையூறு நிகழ்ந்த போது, மன்னன் தலையிட்டு நிலைமையைச் சீர் செய்து பேருதவி புரிந்தான். ராஜேந்திரன் ஸ்ரீவிசய நாட்டின் மீது படையெடுத்து வணிகர் துயர்துடைத்ததனை எடுத்துக்காட்டாக ஈண்டுக் குறிப்பது பொருத்தமுடைய தாகும்.

தங்க நாணயங்களும், செப்பு நாணயங்களும் அக்காலத்தில் புழக்கத்தி லிருந்ததை ராஜேந்திரனின் காசுகளா லறியலாம். செங்கல்பட்டு மாவட்டத்தின் கண் உள்ள நாட்டம், திருமுக்கூடல் ஆகிய ஊர்களிலும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் கண் உள்ள எண்ணாயிரம், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள செங்குன்றம் ஆகிய ஊர்களிலுள்ள கல்வெட்டுகளாலும், திருவொற்றியூர்க் கல்வெட்டாலும் பண்டமாற்று முறையும் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. பண்டமாற்று வாணிகத்தில் நெல், அளவு கோலாகப் பயன்பட்டது. நெல்லின் விலை இடத்திற்கிடம் வேறுபட்டிருந்தது.

வணிகர்கள் பெருஞ்செல்வர்களாக விளங்கியமையின் திருக்கோயில்களுக்கும், பொதுக் காரியங்களுக்கும் தானம் செய்தனர். இதனை ராஜேந்திரனது ஆளும் ஆட்சியாண்டாகக் குறிக்கப் பெற்றுள்ள திருநாமநல்லூர்க் கல்வெட்டாலறியலாகும்.

உழவர்

பண்டைக் காலத்தில் உழவுத் தொழில் தலையாய தொழிலாகக் கருதப் பட்டது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரா' தலின், உழவர் நாட்டின் அச்சாணி போன்றவர்களாவர். கிரா மத்தில் விவசாயம் புரிவோர் வேலையில்லாத காலத்துக் கைத் தொழில்களையும் துணைத் தொழிலாகக் கொண்டனர்.

குடிமக்கள் அரசிறை எனப்படும் நிலவரியும் நீர்க்கூலி எனப்படும் நீர்ப்பாசன வரியும் செலுத்தினர். மன்னனும் நீர்ப் பாசனத்திற்காகப் பல ஏரிகளையும், கிணறுகளையும், வாய்க்கால்களையும் வெட்டு வித்தான். நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் சோழ கங்கம் ஏரி, ராஜேந்திரன் வாய்க்கால் போன்றன பல வெட்டப் பட்டமை ஈண்டு நினைவில் கொள்ளத் தக்கதாகும். நிலம் அளந்த கோல் 'உலகளந்த கோல்' எனப்பட்டது. இது பதினாறு சாண் அளவுடையது. எனவே, நிலங்கள் முறையாக அளிக்கப்பட்டன என்பது புலனாகும். எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைகள் அக்கால வழக்கிலிருந்தன. ஆடவல்லான், ராஜகேசரி போன்ற மரக்கால்களால் நெல் அளக்கப்பட்டது.

கைத்தொழில்

சிறுமுதல் கொண்டு வீட்டிலேயே செய்யும் தொழில் கைத் தொழிலாகும். கயிறு திரித்தல், கூடை முடைதல், பாய்முடைதல், குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள் செய்தல், தோலுறை செய்தல் போன்ற கைத்தொழில்கள் மக்களால் பெரிதும் பின்பற்றப் பட்டன. மண்பாண்டம் செய்தல், குடிசைத் தொழில்களுள் தலையாயதாகும். ஏழை மக்கள் மண்பாண்டங்களைப் பயன்படுத்தி யதால் பெயரளவில் இவை உற்பத்தி செய்யப்பட்டன.

நெய்தல்

மக்களுக்குத் தேவையான துணிகளை நெய்தல் கைக்கோளர்

கடமையாகும. பட்டிலும், மயிரிலும், பருத்தியிலும் அக்கால ஆடைகள் நெய்யப்பட்டன. உள்நாட்டுத் தேவைக்கேயன்றி வெளி நாட்டு ஏற்றுமதிக்கும் நேர்த்தியான ஆடைகள் நெய்யப்பட்டன.

பொற்கொல்லர்

சோழர் காலத்தில் மக்கள் பல அணிகலன்களை அணிந்திருந்தனர். இவை பொன், வெள்ளி, முத்து, விலை உயர்ந்த கற்கள் போன்ற வற்றால் நேர்த்தியான முறையில் செய்யப்பட்டன. பொற்கொல்லர் நுண்ணிய வேலைத்திறனை ராஜராஜனின் பெருவுடையார் கோயில் கல்வெட்டாலறியலாம். பொற்கொல்லரால் செய்யப்பட்ட பல விதமான அணிகலன்களை 'நாட்டுச் செய்திகளும் வழக்குகளும்' எனும் பகுதியில் காணலாம்.

மற்ற வினைஞர்கள்

பொற்கொல்லரேயன்றி, அக்காலத்தில் கருமான், தச்சன், சக்கிலியன், அம்பட்டன், வண்ணான், வெட்டியான், ஏவலாளன் போன்ற பல தொழில்களை மேற்கொண்டோரும் வாழ்ந்திருந்தனர். இவர்களுக்கு ஊர்ச் சபையினர் உரிமை நிலங்கள் அளத்தனர். மன்னன் இவர்களுக்குத் தேவையான போது நிலங்களும் தானம் செய்துள்ளான். கன்னலர் (Artisan) களுக்கு ராஜேந்திரன் வீட்டு மனையும், இடுகாடும் அளித்தமை தஞ்சை மாவட்டம் கீழையூர் கிராமத்தில் உள்ள அருணாசலேசுவரர் கோயில் கல்வெட்டா லறியலாம். சிற்பிகளும், ஓவியர்களும், கட்டிட வினைஞர்களும், சோதிடர் களும், செப்பேடு வரைவோர்களும் மன்னனால் பெரிதும் ஆதரிக்கப்பெற்றனர். சோதிடர், படை புறப்படுங்கால் நாளும், கோளும் பார்த்துச் செல்வர். இவர்களுக்கு மன்னன் 'கணி முற்றாட்டு' வழங்கினான்.

வீரர்கள்

சோழர் காலத்தில் ஆண் மக்களுள் பெரும்பாலோர் படைகலப்

பயிற்சி பெற்று, நாட்டுப்பற்றுக் கொண்டு நாடு காக்கும் பணியில் ஈடுபட்டனர். பெருவீரர்கள் மன்னனால் சிறப்பிக்கப் பெற்றனர். இவர்கள் தமது உயிரையும் பணயம் வைத்துப் போர் புரிந்தனர். அமைதிக் காலங்களில் வாணிகத்திலும், விவசாயத்திலும் இவர்கள் ஈடுபட்டனர், கல்வி அறிவு பெற்றவர் அரசியல் துறைகளில் பணியாற்றினர்.

உணவு

மக்கள் பெரும்பாலும் அரிசி உணவே உண்டனர். கம்பு, கேழ்வரகு, சோளம், போன்ற தானியங்களும் உணவுப் பொருளாகப் பயன்பட்டிருக்கக் கூடும். காய், கனிகள், கீரைகள், முட்டை, பால், பால்பொருள்கள், இறைச்சி, கிழங்குகள், கொட்டைகள் ஆகியவையும் உணவாகக் கொள்ளப்பட்டன. அந்தணரும் வேறு சில பிரிவினரும் சைவ உணவு உண்டனர். மற்ற பிரிவினர் சைவ உணவும், அசைவ உணவும் கொண்டனர்.

ஆடை அணிகலன்

மக்கள் பெரும்பாலும் பருத்தி ஆடைகளை அணிந்தனர். வசதி படைத்தோர் பட்டாடை அணிந்தனர். சில காலங்களில் ஆட்டு மயிர், எலி மயிர், ஆகியவற்றாலான அடைகளையும் உடுத்தினர்.

தங்கம், வெள்ளி, ஆகியவற்றாலான மோதிரம், காப்பு, சங்கிலி, கடுக்கன் போன்ற அணிகலன்கள் ஆண், பெண், சிறுவர் போன்ற எல்லோராலும் அணியப்பட்டன. தாலி என்ற மங்கல அணியும் அக்கால வழக்கிலிருந்தது. அரதன வளையல், பவழக் கடகம், பதக்கம், மாணிக்கத்தாலி, பட்டிகை, மோதிரம், உளுந்து, சோகைச் சிடுக்கின் கூடு, பாசமாலை போன்ற மணி பதித்த அணிகலன்கள் பெருஞ்செல்வர்களால் அணியப்பட்டன. திருமுடி, திருச்சரம், திரள் மணிவட்டம், தாலமணி வட்டம், திருமகரம், கைக்கடகம் போன்ற பொன் அணிகலன்களும் பெண்களால் அணியப்பட்டன. முத்தாலான முத்தின் சூடகம், முத்தின் சிடுக்குப் போன்றவைகளும் அக்காலச் செல்வ மகளிரால்

அணியப்பட்டன. அணிகலன்களைப் பற்றிய விரிவான செய்தியினை 'அரசியல் செய்திகளும், வழக்குகளும்' என்னும் தலைப்பில் காண்க. பெண்கள் மலரின் மீது விருப்பம் கொண்டு அதைத் தலையில் சூடினர் என்பது இலக்கியச் சான்றுகளால் புலனாகும்.

பொழுதுபோக்கு

வேட்டையாடுதல், கோழிச் சண்டை, ஏறு தழுவல், சதுரங்கம் ஆடல், மல்யுத்தம், சிலம்பம் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டு பொழுதை நன்முறையில் போக்கினர். ராஜராஜ நாடகம், சாக்கைக் கூத்து ஆகியவை நிகழ்த்தப்பெற்றன. மகளிர் கிளி வளர்ப்பதிலும் ஆடல் பாடல்களிலும் மனம் செலுத்தினர்.

இறந்தோரை அக்காலத்தில் சிலர் மண்ணில் புதைத்தனர்; சிலர் தீயிலிட்டெரித்தனர். இறந்த பின்பு சடங்குகள் செய்யப்பட்டன. எனவே, இவ்விரு பழக்கங்களும் அக்காலத்தில் இருந்ததனை அறியலாம்.

அக்கால மக்கள் வெற்றிலை போட்டுக்கொண்டனர். விழாக் காலங்களில் இறைவனுக்கு வெற்றிலை படைத்தனர் என்பதனைக் கல்வெட்டுச் செய்தியாலறியலாம். விருந்தினர்களுக்கும் வெற்றிலை, பாக்கு அளிக்கப்பட்டன.

அக்காலத்தில் மக்கள் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர். 'கனவு நனவாகும்' என்று நம்பினர். ஒரு காரியம் தொடங்கு முன்பும், மனை கோலும் போதும் நல்ல நேரத்தையும் நன்னாளையும் பார்த்துச் செய்தனர். காக்கை கரைதலும், பல்லி சொல்லலும் கேட்டுக் குறிப்பு உணர்ந்தனர். அவர்கள் பூதம், பேய் ஆகியவை உண்டென்று நம்பினர். தான் செய்த குற்றங்களுக்குக் கழுவாயைச் செய்தனர்.

மகளிர் நிலை

அக்கால மகளிருக்கு உரிய மதிப்பளிக்கப்பட்டது. பெண்கள் சிலர் கல்வி பயின்றனர்; திருமணம் செய்து கொண்ட

கணவனுக்கு மதிப்பளித்தனர்; கீழ்ப்படிந்தனர்; உறுதுணையாயிருந்தனர். மனைவி வீட்டினைக் கவனித்து வந்தாள். பெண்கள் கற்புடன் வாழ்ந்தனர். அச்சம், மடம, நாணம், பயிர்ப்புப் போன்ற பண்பு நலன்கள் பெண்களிடையே நிலவிய போதிலும் சுதந்திரமும் காணப்பட்டது. பெருங்குடியில் பிறந்த பெண்களுக்குச் சொத்துரிமையும் சொத்தினை விற்கும் உரிமையும் இருந்தன.

பெண்களில் சிலர் கோயில்களில் தேவரடியார்களாகப் பணி புரிந்தனர். சில பெண்கள் அடிமை வேலையும் செய்து வந்தனர். பஞ்ச காலங்களில் பெண்கள் சிலர் தம்மை விற்று அடிமையாக்கிக் கொண்டு கோயில் பணியியில் ஈடுபட்டனர். அடிமைகளுள் பல பிரிவுகள் இருந்தன.

உடன்கட்டையேறும் வழக்கம் சோழர் காலத்தில் அரிதாகக் காணப்பட்டது. பொதுவாக அரசகுலப் பெண்களே உடன்கட்டை ஏறினர். பொது மக்கள் உடன்கட்டையேறும் வழக்கம் அங் கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்பட்டது. உடன்கட்டை யேறுதல் பொது மக்களால் பெரிதும் மதிப்பளிக்கப்பட்டது. தானா கவே உடன் கட்டை யேறினாள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கணவனையிழந்த கைம்பெண்கள் மலர், குங்குமம், தாலி ஆகியவற்றை அணிந்துக் கொள்ளாமல் கைம்மை நோன்பினை மேற்கோண்டனர்; மொட்டையடித்துக் கொண்டனர். கணவனையிழந்த கைம்பெண் ஒருத்தி, தான் உயிர் வாழ்ந்தால் தன் சக்களத்தியருக்கு அடிமை வேலை செய்ய வேண்டியிருக்குமாதலால், தானே விருப்பப்பட்டு உடன்கட்டை யேறுவதாகவும், தன்னை ஊரார் தடுத்தல் கூடாதென்றும், எனவே, சுற்றியுள்ளோர் தன்னைக் கயிற்றால் கட்டித் தீயில் தள்ளிவிட வேண்டு மென்றும் உடன்கட்டையேறிய ஒருத்தி கேட்டுக் கொண்டதாகக் கல்வெட்டுச் செய்தி யொன்று கூறுகிறது. பெண்கள் உடன்கட்டையேற வேண்டுமென்ற

கட்டாயமில்லை; விரும்பிய பெண்கள் உடன்கட்டையேறத் தடையேது மில்லை என்பது அறியத்தக்கது.

பெண்கள் பலர் மன்னனது அரண்மனையில் பணியாற்றினர். அரண்மனை நீராட்டு அறையிலும், மடைப் பள்ளியிலும் (சமையலறை) அவர்கள் பணி புரிந்தனர். இவ்விதம் அரண்மனை ஊழியத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள் பொதுவாகப் 'பெண்டாட்டிகள்' என அழைக்கப் பெற்றதாகக் கல்வெட்டுச் சான்று பகர்கிறது. எடுத்துக்காட்டாக, முதலாம் ராஜேந்திரனின் சமையல்காரி ஒருத்தி, 'திருவமுதிடும் பெண்டாட்டி' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளமை கல்வெட்டுச் செய்தியால் அறியலாம். ஆனால், இக்காலத்திலோ, 'பெண்டாட்டி' எனும் சொல் மனைவியைக் குறிக்கின்றது. அக்காலத்தில் மனைவியைக் குறிக்க 'அகமுடையாள், 'மணவாட்டி' எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டனவாகவும், மன்னனின் மனைவி 'அரசியார்' 'தேவியார்' எனும் பெயர்களால் குறிக்கப்பெற்றதாகவும் கல்வெட்டுச் சான்று பகர்கின்றது.

அக்காலத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மன்னரும் செல்வரும் பல மனைவியரை மணந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. பொதுவாகக் குடிமக்கள் ஒருவருக்கு மேற்பட்ட மனைவியரை மணந்துக் கொள்ள வில்லை. ஒருவன், ஒருத்தி என்ற நியதி பெரும்பாலான முறையில் பின்பற்றப்பட்டது. இருப்பினும் ஆடவர் சிலர் ஒருவருக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருந்தனர் என்பது கல்வெட்டுச் சான்றுகளால் புலனாகின்றது. இவ்வழக்கம் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலந்தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்து என்பதனை,

'பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவைத்

தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும்'

என்ற தொல்காப்பியரின் சூத்திரத்தா லறியலாம். ஒருவன்,

ஒருத்தியுடன் கூடி வாழும் இல்லற வாழ்வே அக்காலத்தில் சான்றோரால் மதிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். அரசியரும், பெண்களும் இறையன்பு மிக்கவர்களாக வாழ்ந்தனர். செம்பியன் மாதேவியார், குந்தவைப் பிராட்டியார் போன்ற அரசிகள் அறக்கட்டளைகள் புரிந்தனர்.

சிறு சேமிப்பு

தற்காலத்தைப் போல் சோழர் காலத்திலும் சிறுசேமிப்புச் (Small Savings) செய்யும் வழக்கமிருந்தது. முதலாம் ராஜராஜன் காலத்தில் மகளிரும், குழுந்தைகளும் சிறு சேமிப்புச் செய்ததாகக் கல்வெட்டுணர்த்துகின்றது. இதற்கு மண் உண்டியல் பயன்படுத்தப்பட்டது. (உண்டியல்...கலயம்)

வலங்கை இடங்கைப் பிரிவுகள்

சோழர் காலத்தில் குலப் பாகுபாடுகள் நிலவியபோதிலும் அனைவரும் அமைதியுடனும், ஒற்றுமையுடனும், மதக்காழ்ப்பு இன்றியும் வாழ்ந்தனர். அக்காலை மேல் வகுப்பினர், கீழ் வகுப்பினர் என்ற பிரிவுகளும் இருந்தன என்பதில் ஐயமில்லை. சோழர் காலக் கல்வெட்டுகளைக் கொண்டு வலங்கை, இடங்கை என இரு குலப்பிரிவுகள் அக்காலத்தில் இருந்தனவாக அறிகிறோம்.

வலங்கைப் பிரிவில் தொணூற்றெட்டுக் குலங்களும் இருந்தனவாக 'வலங்கை.. இடங்கைப் புராணம்' என்னும் சுவடியால் அறிய முடிகின்றது. இக்குலங்களுள் பெரும்பான்மையானவை கலப்புக் குலங்களாகும். இச்செய்தியால், சோழர்காலத்தில் வலங்கை, இடங்கைக் குலத்தினர் வாழ்ந்து வந்தனர் என்பது உறுதி ஆகிறது. வலங்கையினர் வீரர்களாகத் திகழ்ந்து நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை 'வலங்கைப் பழம் படைக ளிலார்', 'பெருந்தனத்து வலங்கைப் படைகள்', 'அழகிய

கோழத் தெறிந்த வலங்கை வேலைக்காரப் படைகள்' எனும் பெயருடைய படைகள் சோழ மன்னரிடம் இருந்தனவாகக் கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துவதாலறியலாம். இடங்கையினர் பெரும்பாலும் வாணிகர்களாகவும், தொழி லாளர்களாகவும் வாழ்ந்து வந்திருக்க வேண்டுமென்பதனை ஊகிக்க இடமுண்டு. இவர்களில் சிலர் படைகளிலும் பணியாற் றியிருத்தல் கூடும். இவர்களைப் பற்றி நாம் தெளிவாக அறிந்துக் கொள்ளத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

வலங்கையினர், இடங்கையினர் ஆகிய இருவரிடையே சில சமயங்களில் பூசல்கள் நிகழ்ந்து வந்தன என்பதனைக் கல்வெட்டுச் செய்தியாலறியலாம்.

சில சமயங்களில் இவர்கள் தங்கள் பூசல்களை மறந்து, தமக்குள் ஒன்றுபட்டுப் பிராமணர்களையும், வேளாளர்களையும் எதிர்த்துப் போராடினர் என்பது புலனாகிறது. ஆடுதுறை வட்டத்தில் (தஞ்சை மாவட்டம்) காணியாட்சி கொண்டாடிய பார்ப்பனர், வேளாளர்க்நீ கெதிராக வலங்கை இடங்கைப் பிரிவினர் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனரென்ற செய்தியால் இதனை நாமறியலாம்.

வலங்கை, இடங்கைப் பிரிவினரைப் போன்று 'இரதகாரர்' என்ற ஒரு குலத்தினரும் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் 'அணுலோமர்கள்' எனும் பெயரால் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றனர். உயர்ந்த குலத்தைச் சார்ந்த தந்தைக்கும், தாழ்ந்த குலத்தைச் சார்ந்த தாயுக்கும் பிறந்த குழந்தைகள் அணுலோமர் என அழைக்கப் பெறுவர்.

பறையர்

இக்குலத்தினர் ஏனைய குலத்தினரைப் போன்று முழுச் சொத்துரிமை பெற்று அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தனித் தனிச் சேரிகளில் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கென்று இடுகாடு (சுடுகாடு) தனியாக

ஒதுக்கப்பட்டிருந்தது.

சோழர் காலத்தில் பறையர்கள் தீண்டத்தகாதவர் என்றோ, இழிகுலத்தவர் என்றோ, கருதப்பெறவில்லை. 'புல்லு பறிக்கிற பறையனும்', 'ஆவுரித்துத் தின்னும் புலையனும்' தாழ்ந்தவர்களாகக் கருதப்பெற்றனர்.

பறையர்களுள் ஊர்ப் பறையர் என்ற ஒரு பிரிவு அக்காலத்தில் இருந்தது. அவர்கள் திருக்கோயில்களுக்குத் தானங்கள் பல அளித்தனர் என்ற செய்தி, கல்வெட்டுகளால் தெரிய வருகின்றது.

முதலாம் ராஜராஜன் காலத்தில், ஊர்ப் பறையன் மண்டை சோமநாதன் ஏழிசை மோகப் படைச்சான் என்பான் திருக்கோயிலில் சத்தி விளக்கு ஒன்று ஏற்றத் தானம் அளித்துள்ளதாலும், பறையடியான் என்பான் திருக்கழுக்குன்றம் கோயிலில் விளக்கொன்று எரிக்கத் தானம் செய்துள்ளதாலும் அறியலாம். இதனைப் போன்று இவர்கள் திருக்கோயில்களுக்குத் தானங்கள் அளித்த செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

எனவே, இவர்கள் இறைபற்றுக் கொண்டு இறைவருக்குத் தானஞ் செய்துள்ளனரென்பது புலனாகின்றது. சோழர் காலத்தில் பல்வேறுபட்ட குலங்களும், இனங்களும் ஒன்றோடொன்று கலந்ததனால் எண்ணற்ற குலங்கள் தோன்றலாயின.

சமயம்

சமயம் மக்களின் வாழ்விற்கு இன்றியமையாதது என்று பண்டு மக்கள் கருதினர். சமயம் மக்களின் ஆன்மீக வாழ்வினைச் செம்மைப்படுத்தியது. ராஜேந்திரனது ஆட்சிக்காலத்தில் சைவ சமயம் தழைத்தோங்கியது. அரசாங்க ஆதரவினைப் பெற்ற சைவம் பெருமளவில் பரவியது. நாடெங்கும் சிவாலயங்கள் கட்டப்பெற்றன. வழிபாடுகள்

செவ்வனே முறையாக நடத்தப் பெற்றன. சைவ சமயம் தழைத்தோங்கிய அதே சமயத்தில் வைணவமும் வலிமை பெற்றது. சத்தான கருத்துடைய புத்த சமயமும், கொல்லாமையின் எல்லையினைக் கண்ட சமண சமயமும் கடையின்றி வளர்ந்தன. நாட்டு மக்கள் அனைவருக்கும் வழிபாட்டுரிமை வழங்கப்பெற்றது. ராஜேந்திரன் சமயப் பொறையினைப் பின்பற்றியதால் புறச் சமயங்களும் வளர்ச்சி பெறும் நல்வாய்ப்பினைப் பெற்றன. சைவத்தின் அறுவகைப் பிரிவினுள் ஒன்றான காளாமுகச் சைவமும் வேர்விட்டுத் துளிர்த்தது. சமயமும் வாழக்கையுடன் பிரித்தறிய முடியாத அளவில் பின்னிப் பிணைந்தும், இணைந்தும், குழைந்தும் காணப்பட்டது.

திருக்கோயில்

ராஜேந்திரனது காலத்தில் கோயில்கள் பல கட்டப்பெற்றன. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற முதுமொழியினைப் பொன்னெனப் போற்றிய நம் முன்னோர் திருக்கோயில்களுக்குச் சென்று, வழிபட்டு மன அமைதியும், மகிழ்ச்சியும் பெற்றனர். அக்காலக் கோயில் ஒரு சமுதாய மன்றமாகக் காணப்பட்டது. கலை மன்றங்கள் பலவும் இணையும் இடமாகவும் திருக்கோயில் விளங்கிற்று.

கோயிலில் தளச்சேரிப் பெண்டுகள் என்போர் நடனக் கலையை வளர்த்து வந்தனர். மன்னன் இவர்களுக்கு வீடும், நிலமும் அளித்து, ஆதரித்து வந்தான். கோயிலில் திருப்பணிகளும், நாள் வழிபாடகளும் செவ்வனே நிகழ்வுறும் பொருட்டு வேதியர்கள், ஓதுவார்கள், வாத்தியக்காரர்கள், திருமெழுகிடுவார், மெய்க்காவலர் ஆகியோர் நியமிக்கப்பெற்றனர்.

இவர்களைக் கண்காணிக்க 'ஸ்ரீ காரியம் பார்ப்பார்' என்னும் அதிகாரி நியமிக்கப்பட்டார். ராஜேந்திரனது காலத்தில் 'தேவாரநாயகம்' என்பார் நியமிக்கப்பட்டு ஓதுவார்கள்

கண்காணிக்கப்பட்டனர்.கோயிலில் இசை, நடனம், நாடகம் ஆகியவை நிகழ்த்தப் பெற்றன; மேலும், வேதம், கல்வி, ஆகியவை பயிற்றுவிக்கப்படும் இடமாகவும் கோயில் விளங்கியது. இவ்விதமாகக் கோயில் மக்கள் வாழ்வில் பெரும்பங்கு வகித்தது; மக்கள் வாழ்வின் நடு நாயகமாகவும் விளங்கியது.

திருக்கோயில்களுக்கு மன்னரும், அரசியாரும், வணிகரும், பிறரும் அறக்கொடைகள் அளித்தனர். இதனால், கோயில் என்றென்றும் தனது பணியினைத் தடையேதுமின்றிச் செய்து வந்தது; சோழர் காலச் சமுதாயத்தின் உயிர் நாடியாய்த் திகழ்ந்தது.

அக்காலத்தில் கோயில் பல்கலைக் கழகமாகவே திகழ்ந்தது; இங்கு மார்கழித் திங்கள் தோறும் திருவெம்பாவை ஓதப்பட்டது. இதனைப் போன்று திருப்பள்ளியெழுச்சி, திருவாய்மொழி போன்ற வைணவத் திருப்பாடல்களும் முறையாகப் பாராயணம் செய்யப் பட்டன. தேவாரத் திருப்பதிகங்களை ஓதும் ஓதுவார்கள், 'திருப்பாட்டு ஓதும் மகேசுரர்' சிறப்பிக்கப் பெற்றனர். சில திருக்கோயில்களில் ஓதுவார்களும் பிராமணர்களும் சேர்ந்து தேவாரம் ஓதினர் என்பதனைக் கல்வெட்டுச் செய்தி உணர்த்து கின்றது.

தேவரடியார்களும், நட்டுவனார்களும் மன்னனால் தானங்கள் வழங்கப்பெற்றனர். 'பாணர்கள்' என்போர் திருக்கோயில்களில் பாடி இசை மனம் கமழச் செய்தனர். திருவிழாக் காலங்களில், சில கோயில்களில், சில கோயில்களில் தேவரடியார்கள் நாடகங்கள் நடத்தினர். சில கோயில்களில் திருவாதிரையின்போது திருவெம் பாவை ஓதப்பட்டு வந்தது.

கோயில்களிலும், மடங்களிலும் கூத்துகள் நிகழ்ந்தன; அவற்றுக் கான அரங்கங்கள் (நாடக சாலை) ஆங்கு அமைக்கப்பெற்றிருந்தன. இக்கூத்துகள் சிலவற்றுள் ஆணும் பெண்ணும் இணைந்து கூத்து நடித்தனர். இவர்கள் கூத்தாடிப்

பிழைத்தலின் கூத்தப் பெருமக்கள் என அழைக்கப்பெற்றனர். தில்லை நடராஜனும் கூத்தாடிக் கொண் டிருத்தலின், 'கூத்தபிரான்,' 'கூத்தரசன்' என அழைக்கப்பெறுதலை ஈண்டு நாம் நினைவில் கொள்ளலாம். அக்காலத்து மக்கள் கூத்துக் கண்டு மகிழ்வதில் பேரார்வம் கொண்டிருந்தனர்.

சோழர் காலத்தில் தெருக்கூத்து, சாக்கைக்கூத்து, சாந்திக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழக்கூத்து போன்ற கூத்தின் வகைகள் பல நிகழ்த்தப்பெற்றன. இவற்றுள் 'தெருக்கூத்துத்' தற்காலத்திலும் கிராமங்களில் நிகழ்த்தப் பெறுகின்றன. இக்கூத்துகள் நிகழுங்கால் பக்க வாத்தியங்களும் இசைக்கப்பெறும்.

இவைபோன்ற கூத்துகளை நிகழ்த்தி, இசையையும் வளர்த்து, நாட்டின் கலை வர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தேவரடியார்கள் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். மன்னரும், கோயில் நிர்வாகத்தினரும் அவர்களது பணி குறித்துப் பராட்டி ஊக்குவித்தனர். இறைபற்றும், கலைப்பற்றும் கொண்டிருந்த இவர்கள் செல்வச் சீமாட்டிகளாகவும் வாழ்ந்தனர்.

மடங்கள்

மடங்களும் சோழர் காலத்து மக்களுக்கு நற்பணி புரிந்து வந்தன. பெரும்பற்றப்புலியூர், கீழையூர், திருவானைக்கா, திருவிடைமருதூர், திருவாவடுதுறை போன்ற பல மடங்கள் சோணாட்டில் ஆங்காங்கு நிறுவப் பெற்றிருந்தன. மன்னரும் இவற்றின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தனர். இம்மடங்கள் சமயப் பணியுடன், மக்களுக்கு உணவிடுதல், வழிப்போக்கருக்கு உப்பு, விளக்கெண்ணெய், தண்ணீர் ஆகியன வழங்குவதுடன் மருத்துவப் பணியும், கல்விப் பணியும் ஆற்றி வந்தன. மேலை நாட்டுக் கிறித்தவ மடங்களைப் போன்று இவைகள் சமயப் பணியை நன்காற்றின.

கடவுள்

தமிழகத்தின்கண் 'மும்மூர்த்திகள்' என அழைக்கப்பெறும் சிவன், திருமால், பிரமன் ஆகியோர் வணங்கப் பெற்றனர். இருப்பினும் சிவன் முழுமுதற் கடவுளாகவும் ஆக்கல், அளித்தல், (காத்தல்), அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் மேற்கொண்டிருப்பவனாகவும் கருதப்பட்டான்.

சிவனே நடம் புரியும் இடம் தில்லையாகும். தில்லைக் கூத்தன் சோழமன்னரின் குலதெய்வமாகும். நடராஜப் பெருமான் ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல் ஆகிய ஐந்து வகைப்பட்ட தொழில்களை ஆற்றி வருவதாகக் கருதப்படுகிறது. சோழப் பெருமன்னர்கள் ஏராளமான நடராஜர் படிமங்களைச் சமைத்தனர்; வழிபட்டனர். இவற்றுள் திருவாலங்காட்டு நடராஜரும், தில்லை நடராஜரும் குறிப்பிடத்தக்கவராவர். ராஜேந்திரன் தனது கங்கை வெற்றியின் நினைவாகக் கூத்தபிரானது முடியில் கங்கையைச் சூட்டினான் என்பர் அறிஞர். முருன், விநாயகர், காளி, பிடாரி, துர்க்கை, சப்த மாதர்கள், கலைமகள், திருமகள், புத்தர், அருகன் ஆகிய கடவுளர்களும் சோணாட்டினரால் வணங்கப்பட்டனர். சூரியனுக்குத் தனிக் கோயில்கள் எழுப்பப்பட்டு மக்களால் வணங்கப்பட்டன. சோணாடெங்கும் நவக்கிரக வழிபாடு மேற் கொள்ளப்பட்டது. பைரவன், பைரவியும் வணங்கப்பட்டனர். சோணாட்டின் சைவ சமயம் தழைத்தோங்கியமையின் சைவ நாயன்மார் நால்வரின் படிமங்கள் வைக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டன.

விழாக்கள்

தமிழகத்தின் கண் விழாவிற்குத் குறைவேயில்லை. மாதம் தவறினாலும் விழா தவறுவதில்லை. சோணாட்டின்கண் திருக்கோயில்கள் அதிக அளவில் கட்டப்பட்டிருத்தலின் விழக்களும் பல்கிப்பெருகின.

சோழப் பெருமன்னர்கள் பிறந்த நட்சத்திரங்களில் சிறப்பான விழாக்கள் எடுக்கப்பட்டன. முதலாம் ராஜராஜன் பிறந்த சதயநாளில் திங்கள் தோறும் விழா நடைபெற நிவந்தங்கள் பல விடப்பட்டன. எனவேதான், 'சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்' என்று கலிங்கத்துப் பரணி புகழ்கின்றது. முதல் ராஜேந்திரன் பிறந்த திருவாதிரை நாளிலும் சிறப்பான விழாக்கள் கொண்டாடப்பட்டன.

சிவன் கோயில்களில் சிவராத்திரி, சித்திரை விஷு, தைப்பூசம், உத்ராயணம், ஐப்பசி விஷு, சங்கராந்தி, கார்த்திகைத் திருநாள் ஆகிய நாள்களில் திருவிழாச் சிறப்பாக நடைபெற்றது. மாசிமகம் சோணாடடில் கொண்டாடப்பட்ட பெருவிழாவாகும். முதலாம் பராந்தகன் காலத்தில் திருக்காளத்தியில் இந்திரவிழாச் சிறப்பான முறையில் எடுக்கப்பட்டது. சிதம்பரத்தில் நடைபெறும் ஆனித் திருமஞ்சனவிழா நாளில் சட்டிச் சோறு ஆயிரம் அளிக்க ஏற்பாடுகள் செய்ய, முதலாம் ராஜேந்திரன் தானமளித்துள்ளதால், இவ்விழவின் சிறப்பை நாமறியலாம். தில்லையில் நடராஜருக்கு விழக்கள் சிறப்பாக நிகழ்ந்தன. வைணவக் கோயில்களில் உரியடி விழாவும், ஆடித் திருப்பூர நோன்பும், சங்கராந்தியும் எடுக்கப்பட்டன.

மன்னரின் போர் வெற்றி குறித்தும், பட்டம் சூட்டப் பெறுவது குறித்தும் ஆடம்பரமான விழாக்கள் எடுக்கப்பட்டன.

கல்வி

சோழர் காலத்தில் நாடெங்கிலும் கல்விச் சாலைகள் நிறுவப்பட்டு, முறையான கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. தமிழ்மொழியேயன்றி, வடமொழியும், மறைநூலும், வியாகரணமும், சாத்திரங்களும், மீமாம்சையும் கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டன.

ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் மறைநூல் விடுதிக் கல்லூரிகள் திரிபுவனை, எண்ணாயிரம், திருவொற்றியூர்,

வேப்பத்தூர் ஆகிய இடங்களில் நற்பணியாற்றின. மாணவர்கள் தகுதி அடிப்படையிலேயே சேர்ந்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு உணவும், உறையுளும் இலவசமாகக் கிடைத்தன. இவர்கள் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றனர். இவற்றுக்கான செலவும், பேராசிரியர்களுக்கு ஊதியமும் வேந்தனளித்த நிலத்திலிருந்து வழங்கப்பெற்றன. சோணாட்டின் கல்வி நிலை, உன்னதமான நிலையில் இருந்த தென்பதை ராஜேந்திரனது கல்வெட்டுச் சான்றால் அறியலாம். ராஜேந்திரனது காலத்தில் மக்களிடையே வடமொழி ஆர்வம் பெருகியது. கல்வெட்டுகள் எழுதப்படும் இடமாகவும் கோயில் அமைந்திருந்தது. 'கல்வி' பற்றிய விரிவான செய்திகளை 'அரசியல்' பகுதியில் காண்க.

நீதி

ராஜேந்திரன் அறமுறை பிறழாது நாட்டை ஆண்டமையின் நீதி நிலைநாட்டப்பட்டது. குற்றம் புரிந்தோர் நீதி மன்றங்களால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை அளிக்கப்பெற்றனர். எதிர்பாராத விதமாகவும், தற்செயலாகவும் விளைந்த குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படாமல், நந்தா விளக்கிடுதல் போன்ற எளிமையான தண்டனையே அளிக்கப்பட்டது. சில குற்றங்கள் புரிந்தோரை அவர்களது குற்றத்திற்கேற்ற முறையில் கழுதை மீதேற்றல், நாடு கடத்தல், தொழுவிடல், உரிமைப் பொருள்களைக் கவர்தல், கழுவாய் செய்து சேர்த்தல் போன்ற தண்டனைகள் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. ஊராட்சி மன்ற உறுப்பினரே நீதி விசாரணைகளையும் நடத்தினர். இவர்கள் சம்வத்சரவாரியர் என அழைக்கப்பெற்றனர். நீதித் துறையில் மன்னனது தீர்பே இறுதியானது.

குற்றம் புரிந்தோரின் பெயர்கள் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப்பெறும். இவர்கள் ஊராட்சித் தேர்தலுக்குப் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார்கள். குடவோலை முறையில் தேர்ந் தெடுக்கப்பெற்ற ஊராட்சி உறுப்பினர், ஊர் நிர்வாகத்தினைக்

கவனிப்பர். இவர்கள் பல வாரியங்களாகப் பிரிந்து வெவ்வேறு துறையினைக் கவனிப்பார். சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் சில குறிப்பட்ட தகுதிகள் படைத்தவராய் இருத்தல் வேண்டு என்பதும், எந்தக் காரிய நிறைவேற்றுக் கழகத்திலாவது உறுப்பினராக இருந்து கணக்குக்காட்டாதிருந்தோரும், எத்தகைய கையூட்டுப் (லஞ்சம்) பெற்றோரும் தகுதியற்றவராகக் கருதப் பட்டனர் என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். சோழப் பெரு மன்னர்கள் தம் குடிமக்களுக்கும் ஆட்சித் துறையில் பயிற்சி அளித்தனர் என்பதனால் தற்காலத்தில் உள்ள தல சுய ஆட்சிக்கு இது முன்னோடியாய் அமைந்தது எனலாம். சோழர் காலத்தில் நிலவரி, கண்ணாலக் காணம், நீர்க்கூலி, தரகு, ஓடக்கூலி, தறியிறை, இடைப்பாட்டம், உல்கு, நாடு கவல் போன்ற பல வரி களை மக்கள் செலுத்தினர். நிலவரியினைத் தானியமாகவோ, காசாகவோ செலுத்த மக்கள் அனுமதிக்கப்பட்டனர். நிலவரி கொடாதார் நிலங்கள் ஊர்ச்சபையாரால் பறிமுதல் செய்யப் பட்டன.

மருத்துவ சாலை, ஆதுல சாலை

தமிழகத்தின்கண் பண்டைக் காலந்தொட்டே மருத்துவக் கலை சிறப்புப் பெற்றிருந்தது. ஆய கலைகள் அறுபத்து நான்கனுள் மருத்துவக் கலையும் ஒன்றாகும். மனிதனது நல் வாழ்விற்கு மருந்துவம் இன்றியமையாதது என்பது யாவரும் அறிந்த உண்மை.

தமிழ்நாட்டு இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் மருத்துவர் களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மருத்துவர், அறவோன், எனவும் 'மருத்தன்' எனவும் 'வைத்தியன்' எனவும் 'சல்லியைக் கிரியை செய்வான்' எனவும் அழைக்கப் பெறுகின்றனர். நற்றிணை என்னும் நூல் மருத்துவனை 'அறவோன்' எனக் குறிப்பிடுவது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும். சங்க காலத்திலேயே மருத்துவர்கள் பலர் சிறந்து விளங்கினர்

என்பதனை 'மருத்துவர் தாமோதரனார்', 'மருத்துவர் நல்லச்சுதனார்' ஆகிய சான்றோர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்ததால் அறிகிறோம்.

சோழர்காலத்தில் மருத்துவ மனைகள் இருந்ததாகக் கல்வெட்டு களாலும், இலக்கியங்களாலும் அறியலாம். இம்மருத்துவமனைகளில் இருவகையான மருத்துவர்கள் பணியாற்றினர். இவருள் கை நாடி பார்த்துப் பொதுப்பிணி நீக்கும் மருத்துவர் ஒரு சாரார் (Physician) ; மற்றவர் அறுவைச் சிகிச்சை நடத்தும் மருத்துவர் (Surgeon) ஆவர். இவர்களைச் 'சல்லியக கிரியை பண்ணுவான் (Surgeon)' எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இவர்களுக்குப் பணி மகளிர் (Nurses) துணை புரிந்தனர். சோழர் காலக் கல்வெட்டுகள், 'சவர்ணன் அரையன் சந்திரசேகரன்', 'கோதண்டராம அசுவத்தாம பட்டன்', 'மங்களாதி ராஜன் சீராளன்' போன்ற மருத்துவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் மருத்துவக் கல்லூரிகள் நடைபெற்றனவாகவும் கல்வெட்டுச் சான்று பகர்கிறது.

ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும் நாடெங்கும் மருத்துவ மனைகள் நிறுவப் பெற்றிருந்தன என்பதனைக் கல்வெட்டுச் சான்றுகளாலறியலாம்.

ராஜேந்திரனது மூன்றாமாண்டுப் பண்டார வாடைக் கல்வெட்டொன்று, இவனது காலத்தில் பராந்தகன் குந்தவையால் நிறுவப்பட்ட மருத்துவசாலை ஒன்று தஞ்சையில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இம் மருத்துவ மனையின் நிர்வாகத்திற்காக இராஜ நாராயணச் சதுர்வேதி மங்கலப் பெருங்குறிச் சபையினர் ஒன்பது மாநிலத்தினை எழுபது காசுகளுக்கு விற்று, இறையிலிட்டுத் தந்தனர். இம்மருத்துவமனையின் கண், 'சரவணன் அரையன் மதுராந்தகன், என்பான் மருத்துவனாகப் பணி புரிந்தான் என்ற செய்தியும் ஈண்டுக் குறிக்கப் பெற்றுள்ளது. கோயில்

வருமானத்தின் ஒருபகுதி மருத்துவசாலை பராமரிப்பிற்காகச் செலவிடபட்ட என்பது கல்வெட்டா லறியப்படுகிறது. பண்டார வாடையில் காணப்படும் ராஜேந்திரன் காலத்திய (28 ஆம் ஆண்டுக்) கல்வெட்டொன்று, தஞ்சையில் சுந்தரசோழ விண்ணகர் ஆதுல சாலை (மருத்துவசாலை) மக்களின் பிணியைத் தீர்த்ததாகவும் சவர்ணன் அரையன் மதுராந்தகனுக்கு வைத்திய போகமாக நிலமளிக்கப்பட்டதாகவும் குறிக்கின்றது. திருவாமா த்தூரின் கண்ணுள்ள ராஜேந்திரனின் பதினெட்டாமாண்டு, தொண்ணூற்று மூன்றாம் நாளின் கல்வெட்டொன்று அவ்வூரின் மருத்துவத்துறையாருக்கு நிலத்தான மளிக்கப்பட்ட செய்தியினைக் கூறுகின்றது.

ஊர் மருத்துவர்களும் நிலத்தானம் பெற்றதாகக் கல்வெட்டுச் சான்றுகள் குறிப்பிடுவதனால் சோழர் காலத்தில் ஊர்கள்தோறும் மருத்துவர்கள் நற்பணி புரிந்து, மக்களின் பிணியகற்றி நலமுடன் வாழ, வழி வகுத்தனர் என்பது புலனாகும். மன்னன், மருத்துவ மனையின் பராமரிப்புக்கும், மருத்துவர்களுக்கும் பொருளு தவியளித்து, மருத்துவக் கலையைப் பேணிப்புரந்தான். போரில் காயம்பட்ட வீரர்களும், பிணியாளர்களும் மருத்துவ உதவி பெற்றனர்.

சவரத்தொழிலை மேற்கொண்டிருந்த அம்பட்டர் மருத்துவத் தொழிலையும் தமது குலத்தொழிலாகக் கொண்டு மக்களுக்கு நற்பணி புரிந்தனர். எனவே, பணடைக்காலம் முதல் இன்று வரை இவர்கள் 'மருத்துவர்' என்றே அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் கத்தியைக் கையாளுவதில் தேர்ச்சி மிகப் பெற்றிருந்தமையின் சிறு அறுவைச் சிகிச்சை செய்வதில் வல்லுநராயிருந்தனர். அம்பட்டரில் ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்கள் பிள்ளைப்பேற்றுத் துறையில் சிறந்து விளங்கினர்; இன்றும் கிராமங்களில் இவர்கள் மருத்துவச்சியாக இருந்து பிள்ளைப் பேற்றினைக் கவனித்து வருகின்றனர். எனவேதான்,

பண்டாரகர்மா. இராசமாணிக்கர் அவர்களும் பிள்ளைப் பேற்றுத் துறையில் இவர்கள் ஈடுபட்டிருந்ததைத் தமது நூலில் குறித்துள்ளார். இவர்கள் பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

அக்காலத்தில் பெரும்பான்மையாகப் பச்சிலை, மூலிகைகள், பூக்கள், மரப்பட்டைகள், வேர்கள், கொட்டைகள், கடைச் சரக்குகள் போன்றவை மருந்துக்குப் பயன்படுத்தப்பட்டன. இவை களைப் பாதுகாப்பாக வைத்திருக்க தனியறையும் மருத்து வமனையிலிருந்தது.

எனவே, அக்காலை மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப் பட்டன என்பது புலனாகும். இதுகாறும் கூறியவற்றால், ராஜேந் திரனது காலத்தில் மக்கள் நிலை சங்க காலத்தைப் போன்று நன்னிலையிலிருந்ததென்பது உறுதி. பார்ப்பனர், வணிகர், அதிகாரிகள், அமைச்சர் ஆகியோர் உயர்நிலை பெற்றனர் என்பதும், வேளாண்மைத் தொழில் தலையாயதாகப் போற்றப்பட்ட போதிலும் மற்றப் பல்வகைத் தொழில்களும் முன்னேறின என்பதும், வாணிகம், உழவு சிறந்திருந்தமையின் மக்கள் எல்லா வசதிகளும் பெற்று வாழ்ந்ததுடன் கலையார்வம் கொண்டிருந்தனர் என்பதும் புலனாகும். மன்னன் மக்களைக் காத்தோம்பினான். நாட்டில் முடியாட்சி நிலவிய போதிலும் ஊர்ச்சபைகள் உள்ளூர்ப் பெருமக்களாலேயே நிர்வகிக்கப்பெற்று அரசாங்க அதிகாரிக ளாலும், மன்னனாலும் மேற்பார்வை செய்யப்பட்டன என்பதை அறியலாம். மக்களிடையே பொருளாதார அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் ஏற்றத்தாழ்வு காணப்பட்டன என்பதும், தமிழ் மொழியுடன் வடமொழியும் மன்னனால் ஆதரிக்கப்பட்டன என்பதும், கோயில் சமுதாயத்தின் மன்றமாகப், பொழுது போக்கிற்கிடமாக, முக்கியமான இடத்தைப் பெற்றதோடு கோயிலைச் சுற்றியே சமுதாயம் சுழன்றதென்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். எனவேதான், நம் முன்னோர், 'கோயிலில்லாத ஊரில் குடியிருக்க

வேண்டா' என்று மிகப் பொருத்தமாகக் கூறிப் போந்தனர்.

ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடு இக்கோமானது ஆட்சிக் காலத்தில் மக்கள் நிலையினைக் கீழ்க்கண்டவாறு படம் பிடித்துக் காட்டுகிறது. '(மதுராந்தகன்) அரசன் பூமியை ஆளும் போது மக்கள் அறவழியில் கருத்துள்ளவர்களாகவும், தம் கடமைகளில் ஊன்றியவர்களாகவும், துன்பங்களைந்தவர்களாகவும், நிலைத்த செல்வம், விழா இவைகள் நிறைந்தவர்களாகவும், மிக்க மகிழ்ச்சி யுள்ளவர்களாகவும், உண்மையைப் பற்றுபவர்களாகவும், நல்வாழ்க்கை உடையவர்களாகவும் இருந்தனர். காலத்தில் மழை பொழிந்தது. ஆறுகள் நன்னீரோடு பெருகின. எல்லாப் பக்கங்களிலும் நாடு (பூமி) பல்வேறு பயிர் வகைகளால் அழகு செய்யப் பெற்றிருந்தது.'

கரந்தைச் செப்பேடு செப்பும் மக்கள் வாழ்க்கை நிலையினைச் சான்றாகக் கொள்ளுதல் சாலப் பொருத்த முடையது. இத்துணைச் சிறப்புடைய சமுதாயம் உயர்ந்தோங்கி நன்னிலை பெற்றிருந்தது என்பது உறுதி. எனவே, ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லா நலமும் வளமும் பெற்றுக் குறைவின்றி வாழ்ந்தனர் என்பதும் சமுதாய நிலை மேம்பட்டிருந்தது என்பதும் போதரும்.

16

நாட்டுச் செய்திகளும் வழக்குகளும் பிறவும்

நம் சோழர் பெருமானது ஆட்சிக் காலத்தில் வெளியிடப் பெற்ற கரந்தைச் செப்பேடு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். தமிழகத்தின் கண் இதுவரை கிடைக்கப்பெற்ற செப்பேடுகளுள் இது அதிக வரிகளையும் அதிக தகடுகளையும் கொண்டதாகும். ஐம்பது தகடுகளையும் இரண்டாயிரத்து ஐந்நூறு வரிகளையும் கொண்டதாகும். இச்செப்பேட்டின் மூலம் நம் ராஜேந்திரன் ஆயிரத்து எழுபத்து மூன்று பேருக்குக் கொடை யளித்ததாக அறிகிறோம்.

கரந்தைச் செப்பேடு

இவற்றை நாம் உற்று நோக்குங்கால் 'மன்னன் வழங்கிய கொடையினைச் செப்பேட்டில் எழுதி யெழுதி நாட்டில் செம்புத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது' எனக் கவிஞர்கள் நம் சோழ வேந்தனைப் போற்றி யிருத்தல் உயர்வு நவிற்சியே யாயினும், இதில் ஓரளவு உண்மை உண்டு என்பதனை யாரும் மறுக்க முடியாது.

நாட்டில் செம்புத் தட்டுப்பாடு ஏற்பட்டமையின் முன்பு எழுதப் பெற்ற செப்பேடுகள் உருக்கப்பெற்று மறுமுறை பயன்படுத் தப்பட்டது. சில சமயங்களில் முன்பு எழுதப்பெற்ற செப்பேடுகள் சுத்தியால் தட்டப் பெற்றுச் சீர் செய்யப் பெற்று, மீண்டும்

எழுதுதற்கெனப் பயன்படுத்தப் பட்டது. கரந்தைச் செப்பேடு சமஸ்கிருதத்தில் ஒரு பகுதியும், தமிழில் ஒரு பகுதியுமாக எழுதப் பெற்றுள்ளது.

இச்செப்பேடுகள், ஐந்து அடி, ஒன்றரை அங்குலம் நீள முடைய வளையத்தில் கோக்கப் பெற்றுள்ளன. இவ்வளையம் தாரா என்னும் கலப்பு உலோகத்தால் வார்க்கப்பெற்றது. இவ்வளையத்தின் முகப்பில் ஓர் அழகிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இதில் சோழரின் இலச்சினையான புலி வலப்புறப் பார்வையோடு பெருமிதமாக நடுவண் அமர்ந்துள்ளது. அதன் முன்புறம் பாண்டியரின் இலச்சினையாகிய இரட்டை மீன் புலிக்குச் சம நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவைகட் கருகில் வில் வடிவம், முழவு, அரச விருக்கை, பன்றி, சுவத்திகம், ஐந்து இதழ் கொண்ட மலர் போன்றவையும் இடம் பெற்றுள்ளன. இவற்றைச் சுற்றிலும் கீழ்க் கண்ட கிரந்த எழுத்துகளாலான சுலோகம் காணப்படுகின்றது.

'ஏதத் ராஜன்ய மகுட ஸிரேனி ரத்னேஷீ ஸாஸநம்

ஏதத் ராஜேந்திர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண'

இதன் பொருள், 'பரகேசரி வருமனான ராஜேந்திர சோழ னுடைய இச்சாசனம், மன்னர்களுடைய முடிவரிசைகளிலுள்ள இரத்தினங்களில் செலுத்தப்பட்டது' என்பதாகும்.

இவ்விலச்சினை நம் வேந்தனது எட்டாம் ஆட்சி யாண்டளவில் வெளியிடப் பெற்ற தென்பதனை இவனது அறச் செயல்கள் பற்றிக் கூறும் செப்பேட்டுத் (தமிழ்) தொகுதியின் தொடக்கத்தில், 'நமக்கு யாண்டு எட்டாவது, நாள் நூற்றேழில்' எனும் தொடரா லறியலாம். ராஜேந்திர சோழப் பிரமாதி ராஜன் எனும் பெயருடைய மண்டபம் ஒன்று தில்லையில் இருந்ததாக இச்செப்பேடு குறிக்கின்றது.

ராஜகேசரி, பரகேசரி

சோழர் குடியில் ராஜகேசரி, பரகேசரி என்னும் பெயருடைய

இருவர் தோன்றி ஆட்சி புரிந்தனர் என்பதனை நம் வேந்தனது கரந்தைச் செப்பேடு கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகின்றது.

'பகைவர்களாகிற யானைகட்கு அரியேற்றினை ஒத்த ராஜகேசரி என்ற வேந்தன் அவனுக்குப் (சோழனுக்கு) புதல்வ னாகத் தோன்றினான். அவனுக்குப் பின், பகைப் படையை முறியடிப்பதிலேயே நோக்கங் கொண்டவனும், வலி படைத்த வனுமாகிய பரகேசரி என்னும் வேந்தன் தோன்றினான்'.

இச்செய்தியினைப் புலவர் செயங் கொண்டார் தமது 'கலிங்கத்துப் பரணியில்' கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'சராதி ராஜன் முதலாகவரு சோழன் முனநாள்

சோழ மண்டல மமைத்தபிற கேழுலகையும்

இராஜ கேசரி புரந்து பரகே சரிகளாம்

இருவ ராணை புலியானையென நின்றவிதுவும்'

செயலில் கால தாமதம்

முதலாம் ராஜேந்திரன் பழையனூர் எனும் கிராமத்தினைத் தேவதானமாக அளிக்கத் தனது ஆறாவது ஆட்சி யாண்டின் எண்பத் தெட்டாவது நாளில் ஆணை பிறப்பிக்க, ஆறாம் ஆட்சி யாண்டின் தொண்ணூறாவது நாளில் பதிவு செய்யப்பட்டு, ஏழாம் ஆட்சி யாண்டின் நூற்று ஐம்பத் தைந்தாவது நாளில்தான் செயல் படுத்தப்பட்டது என்பதனை ராஜேந்திரனது திருவாலங் காட்டுச் செப்பேட்டால் அறியலாகும்.

இச்செய்தி சூடாமணி விகாரத்திற்கு முதலாம் ராஜராஜன் ஆனை மங்கலம் எனும் கிராமத்தினைப் பள்ளிச் சந்தமாக அளிக்கத் தனது இருபத்தொன்றாம் ஆட்சியாண்டின் தொண் ணூற்று இரண்டாம் நாளில் ஆணையிட்டு, அதே ஆட்சி யாண்டின் தொண்ணூற்று ஆறாம் நாளில் பதிவு செய்யப்பட்டு, இருபத்து மூன்றாம் ஆட்சி யாண்டின் நூற்றுப்பதின் மூன்றாம் நாள் செயல் படுத்தப் பட்டது என்பதுடன் ஒப்பிட்டு மகிழத் தக்க

தாகும்.

திருமேனி, பிரதிமம்

திருக்கோயில்களில் எழுந்தருளுவித்த கடவுள் படிமம் திருமேனி யெனவும், மக்கள் படிவம் பிரதிமம் எனவும் வழங்கப் பெறுகின்றன. இவற்றினை 'எழுந்தருளுவித்த பிச்சத் தேவர் திருமேனி ஒன்று', 'நம்பி ஆரூரனார் பிரதிமம் ஒன்று' எனக் குறிக்கப் பெற்றிருத்தலின் நன்கு அறியலாம். இவ்விதம் எழுந்தருளுவித்த (பிரதிட்டை செய் வித்துள்ள) திருமேனிகளுக்காக விளைநிலங்கள், திருப்பரிகலங்கள், திருச்சின்னங்கள், திருவாபரணங்கள், உப்பு முதல் கற்பூரம் வரைக்கும் வழிபாட்டிற்கு வேண்டிய எல்லாப் பண்டங்களும் அறக்கொடை செய்வோரால் அளிக்கப்படுமென்ற செய்தியினைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

நம் ராஜேந்திரன் தன்னைச் சீராட்டிப் பாராட்டிப் பேரன் புடன் வளர்தது, நன்னெறியில் ஈடுபடுத்திய தவமணியும், சிவ ஞானச் செல்வியுமான செம்பியம்மாள் தேவிக்குத் தனது எட்டாம் ஆட்சியாண்டில் படிமம் ஒன்று எடுத்து, அதனைச் செம்பியன் மாதேவி என்னும் ஊரின் கண்ணுள்ள திருக்கோயிலில் எழுந்தருளுவித்து, அதன் நாள் வழிபாட்டிற்குத் தேவையான நிவந்தங்கள் அளித்துள்ளமையை ஈண்டு எடுத்துக் காட்டாகக் காட்டலாம். இவன் தன் பெற்றோர்களுக்கும் படிமம் எடுத்து நிவந்தங்கள் அளித்துள்ளான். சோழர் காலத்தில் சில அஃறிணைப் பொருளை உயர்திணைப் பெயரிட்டு அழைத்தல் வழக்கமாயிருந்தது.

புனிதமாகக் கருதப்படும் பொருள்களுக்கே இவ்விதம் உயர்திணைப் பெயரிடல் என்பது கல்வெட்டுகளால் புலனாகின்றது. எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் திருவாசல்களைக் கேரளாந்தகன், ராஜராஜன், அணுக்கன் எனும் பெயர்களாலும், பெரும் பண்டா ரத்தைத் தஞ்சை விடங்கன் எனவும், மரக்காலை ஆட வல்லான்

உலகளந்தான் எனவும், நிறைகல்லைத் தக்கணமேடு விடங்கன் எனவும், திருவாரூரிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தைத் 'தேவாசிரியன்' எனும் 'திருக்காவணம்' எனவும், கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுள்ள மாளிகை ஒன்று 'முடி கொண்ட சோழன் திரு மாளிகை' எனவும், தில்லையம் பதியில் உள்ள மண்டபம் ஒன்று 'ராஜேந்திர சோழப் பிரமாதி ராஜன் மண்டபம்' எனவும் உயர்திணைப் பெயரால் அழைக்கப் பெற்றமையைக் கூறலாம்.

பெரும்பாலும் இறைவனது பெயரையும் வேந்தனது பெயரையும் அஃறிணைப் பொருள்களுக் கிடுதல் பண்டு வழக்கா யிருந்த தென்பதையும் இதனால் அறியலாகும்.

அணிகலன்கள்

சோழர் காலத்தில் கண்ட நாண், புல்லிகைக் கண்ட நாண், பாச மாலை, பதக்கம், அரதன வளையல், அரதனக் கடகம், பவழக் கடகம், திருக்கைக் காறை, திருப்பட்டிகை, வாகுவலயம், மாணிக் கத்தின் தாலி, மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, நவரத்தின மோதிரம், அரதன மோதிரம், சோனகச் சிடுக்கின் கூடு, பிருஷ்ட கண்டிகை, ஸ்ரீசந்தம் போன்ற மணி பதித்த அணி கலன்கள் முதலியன பெருஞ்செல்வர்களால் பெரிதும் விரும்பியணியப் பெற்றன. திருமுடி, வீரபட்டம், உதரபந்தனம், இராஜாவர்த்தம் வயிரசாயலம், மூன்றாக அடுத்து விளக்கின கண்டத்துடர், புறத்துடர், ஏகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி, திரள் மணி வடம், தாலி மணிவடம், பொன்னாணிற் கோத்த மாணிக் கத்தின் திரு, பொன்னின் பட்டைக் காறை, திருக்களாவம், திருமகரம், திருக்குதம்பை, தோடு, வடுகவாலி, கொப்பு, பட்டை மேற் குண்டு வைத்து விளக்கின வளையல், கைக்கடகம், திருக்கால்வடம், திருவடிக்காறை, திருக்கால் மோதிரம் போன்ற பல்வகைப்பட்ட பொன்னணிகலன்களும் மக்களால் அணியப்பட்டன.

பொன்னாலான அணிகலனே யன்றி, முத்தின் சூடகம்,

முத்தின் சிடுக்கு, முத்து மாத்திரை போன்ற முத்தாலான அணிகலன்களும் பலப்பல இருந்தமை கல்வெட்டுச் சான்றுகளாலறியலாம்.

தோடு, மூக்குத்தி, சிலம்பு, கொளுசு போன்ற அணிகலன்களுக்குப் பயன்படும் 'சுரை'க்கு 'நிலையாணி' எனவும், 'திருகாணிக்கு' 'ஒடாணி' எனவும் அக்காலத்தில் பெயர்கள் வழங்கின.

சோனகச் சிடுக்கு

அக்கால மக்கள் மேற்கூறிய அரதனக் கலங்களில் ஒன்றான 'சோனகச் சிடுக்கின் கூடு' என்பதனை அணிந்திருந்ததாக இராஜராஜேச்சரத்துள்ள சாசனங்களா லறியலாம். இவண் 'சோனக' எனக் குறிக்கப் பெற்றிருத்தலைக் கொண்டு, இது கிரேக்கர் அல்லது அராபியரைக் குறிக்கின்றது என்பதனை அறியலாகும். சோழர் காலத்தில் அராபியரையும், கிரேக்கரையும் 'சோனகர்' எனும் பொதுப் பெயரால் அழைத்தனர் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் வரலாற்றில் காணப் பெறுகின்றன. எனவே, சொனகச் சிடுகினைக் கொண்டு தென்னிந்தியாவில் பதினோராம் நூற்றாண்டளவில் சோனகர் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது உய்த்துணரப் படுகின்றது.

பிற ஊரார் கடைத் தெருவில் பண்டம் விற்றற்கு அங்காடிக் கூலி வெளி ஊர்க்காரர் தம்மூர்க் கடைத் தெருவில் பண்டங்கள் விற்றால் அங்காடிக் கூலி செலுத்தல் வேண்டும். இக்கூலியினை நிருணயம் செய்து வசூலிப்போர் பெருமக்களாவர். இச்செய்தியினைச் 'சோற்றூர்க் கூற்றத்துப் பிரமதேயம் நாலூர் பட்டப் பெரு மக்க ளுள்ளிட்ட பெருங்குறிப் பெருமக்களேம் எங்களூர் திருமயானத்து ஸ்ரீமூலஸ்தானத்துத் தேவர்க்கு நாங்கள் விற்றுக் கொடுத்த எங்களூர்க் கடைத்தெருவில் அங்காடிக் கூலியாவது பிறவூர் நின்று நெல்லும் அரிசியும் மற்றும் கிடந்து விற்பனகுவாலால் நாழி கொள்ளப் பெறுவதாகவும், நிறுப்பன நிறையால் ஒரு பலம்

கொள்ளப் பெறுவதாகவும், வெற்றிலைக் கூடையால் ஒரே பற்றும், பாக்குக்கூடையால் இரண்டு பாக்கும் கொள்ளப் பெறுவதாகவும்' என்பனவற்றால் அறியலாகும்.

குறித்த இடத்தில் குறித்த பொருள் விற்க ஏற்பாடு

இன்னின்ன பொருள் இன்னின்ன இடத்தில்தான் விற்கப்பெறுதல் வேண்டு மென்பதும், அந்தப் பொருள் அதற்குக் குறித்த இடத்தில் விற்கப் பெறாமல் வேறு இடத்தில் விற்கப் பெற்றால் தண்டம் செலுத்த வேண்டு மென்பதும் சோழர் காலத்தில் வழக்கமாக இருந்தன. இத்தண்டம் மகா சபையாரால் விதிக்கப்பட்ட தென்பதும் அறியப்படுகின்றது. இதனை 'ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்து இவ்வாட்டை தன்ம வாரியப் பெருமக்கள் உள்ளிட்ட மகாசபையோம் ... பணித்த எழுத்து ... இவ்வூரில் வெற்றிலை விற்பார் பிடாரி கோவிலன்றி விற்றாரை ஏரி வாரியப் பெருமக்களே ஏரிக்கு முதலாகக் கழஞ்சு பொன் தண்டறு கொள்ளப் பெறுவாராகவும் இப்பரிசு பணித்தோம் மகாசபையோம்' என்ற சாசனப் பகுதியால் அறியலாகும்.

காணிக் கடன் செலுத்தல்

சோழர்களின் காலத்து விளையும் நெல்லில் ஆறில் ஒரு பகுதியினைக் காணிக் கடனாகச் செலுத்துவ துண்டு. வேந்தர் சில காலத்துக் காணிக்கடன் செலுத்தப்ட வேண்டிய அளவு மாறுபடுவது முண்டு. ராஜராஜன், ராஜேந்திரன் ஆட்சிக் காலங்களில் 1/6 பங்கு காணிக் கடனாக நிருணயிக்கப் பட்டதாக அறிகிறோம். இக் காணிக் கடன் நெல்லாகவோ (தானியமாகவோ), பொன்னாகவோ, காசாகவோ செலுத்தப் படலாம் என்ற செய்தியினைக் கல்வெட்டுச் சான்றா லறியலாம். இதனை 'இறை கட்டின நிலத்தால் காணிக் கடன் ராஜகேசரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக் காலால் அளக்கக் கடவ நெல்லும் இடக் கடவ பொன்னுங் காசும் பேசிக் கல்லில் வெட்டின' என்று சாசனப் பகுதி குறிக்கின்றது.

காணிக்கடன் செலுத்தாதோர் நிலத்தைப் பறிமுதல் செய்தல்

ஈராண்டு கழித்து மூன்றாமாண்டு தொடங்கியும் இறை செலுத்தாதார் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஊர்ப்பொதுவாகக் கொண்டு விற்கப்பட்டது. இவ்வழக்கம் சோழர் காலத்தில் வழக்கிலிருந்ததனைக் கீழ்க்காணும் ராஜராஜனின் இருபத்து நான்காம் ஆண்டு திருவாய் மலர்ந்தருளின ஆணையாலறிய லாகும்.

ஈராண்டு நிரம்பி மூவாண்டு தத்தங் காணியான நிலங்களுக்கு அவ்வவ்வூர்களிலாரோடும் ஊரிடு பரிப்பாடு இறை இறாது போனார் காணி, உடையாரைத் தவிர, ஊர் நிலமாய் அவ்வவ்வூர்களிலாரே விற்றுக் கொள்ளப் பெறுவார்களாகவும்'

இறை கொடாதாரைத் தொழுவிலிடல்

இறை கொடுக்கத் தவறினோரை மரத் தொழுவிலிட்டும், நீரினும் வெயிலினும் நிறுத்தியும் துன்புறுத்தல் சோழர் காலத்தில் வழக்கமா யிருந்தது. இவ்விதம் கடுமையான தண்டனைகள் விதக்கப் பட்டதால் மக்கள் அச்சமுற்று இறை செலுத்தினர். இறை கொடாதார்க்கு வழங்கப்பட்ட தண்டனையைத் 'தூதரோடும் காவலோடும் அதிகாரம் செய்வாரிடைக்கேய்செல்லக் காட்ட நாங்களும் அதிகாரஞ் செய்வார் மரத்தொழுவிலே இருக்கச் சொல்ல' எனவும்

'இக்காணி விற்றுக் காசு வைக்க வென்று இப்படையிலாரும் எங்களை நீரிலும், வெயிலிலும் இட்டுப் பல வேதனைக்கு மாற்றாது' எனவும் குறிக்கப் பெற்றுள்ள சாசனப் பகுதியா லறியலாம்.

அரச ஆணை பிறந்த காலமும் இடமும் குறித்தல்

அரச ஆணைகளைக் கல்லில் வெட்டுங்கால் இன்னின்ன ஆணை இன்னின்ன இடத்தில் இன்னின்ன சமயத்தில், இன்னின்ன அதிகாரிகளின் முன்னிலையில் பிறப்பிக்கப் பட்ட தென்பதனைத் தெளிவாகக் கூறுதல் அக்கால வழக்க மாகும்.

அறக்கட்டளையா யிருக்கும் இத்தானம், இன்னின்னார்க்கு வழங்கப்படுகிற தென்பதும் குறிக்கப்படும். இதனை நம் ராஜேந்திரனின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டில் வெளியிடப்பெற்ற கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில் கல்வெட்டால் இனிதறிய லாகும்.

'நாம் முடிகொண்ட சோழ புரத்து நம் வீட்டின் உள்ளால் நீராடுமிடத்து நாம் தானஞ் செய்யா விருந்து.'

சயங் கொண்ட சோழ மண்டலத்துப் புலிவல நாட்டு நாட்டார்க்கும் பிரமதேயக் கிழவர்க்கும் தேவஸ்தானப் பள்ளியைச் சந்த, கணிமுற்றூட்டு, வெட்டப்பெற்றுப் பழவரச் சாலாபோகம் உள்ளிட்ட ஊர்களிலார்க்கும் நகரங்களில் லார்க்கும் தெரியப்படுத்த வேண்டு மென்றும்' மன்னன் அறிவிக்கிறான்.

இவ்வாணை பிறப்பிக்கப்பட்டபோது கீழ்க்கண்ட அதிகாரிகள் உடனிருந்தனர் என்பதும் தெளிவாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

ஓலை எழுதும் மகிபால குலகாலன்.

ஓலை நாயகன்

1. உத்தம சோழப் பல்லவ ராயன்

2. முடிகொண்ட சோழ விழுப்பரையன்

3. விக்கிரம சோழச் சோழிய வரையன்

4. ராஜராஜ பிரம்ம ராயன்

ஒப்பிட்டுப் புகுந்த அதிகாரி சனநாதனான ராஜேந்திர சோழப் பிரமாதி ராஜன்.

உடன் கூட்டத்துக் கருமம் ஆராய்பவர்கள்

1. உதய திவாகரன் தியான ராஜராஜ மூவேந்த வேளான்

2. சூற்றியான சோழ வேளான்

நடுவிருக்கம்

1. சதாசிவப் பட்ட சோமயாசி

2. பரமசேசுவர பட்டர்

கருமர் ஆராய்பவர் மாணிக்கன் எடுத்த பாதமான சோழ மூவேந்த வேளான்.

புரவு வரித்திணைக் களத்துக் கண்காணி

1. பெரும்பேற்கிழான பட்டன் வாசுதேவன்

2. சீகண்டன் சேந்தன்

புரவு வரித்திணைக் களம்

1. பொன்னன் கொண்டயன்

2. சிறுகுடையாந் அடிகள் திருமணி

3. ஆலங்குளவன் ஆதித்தன்

4. சூலபாணி அருமொழி

வரிப்பொத்தகம் கிழான் அரங்கன் வீதிவிடங்கன்

முகவெட்டி

1. சங்கர நந்தி பட்டன்

2. ஐயாறன் தேவர்கண்டன்

3. நெற்குன்றங்கிழான் காமன் சந்திர சேகரன்

4. வேளான் பெருமான்

வரிப்பொத்தக் கணக்குச் சானகிராமன் கேசவன்

வரியிலி

1. சூரன் ஐயாறன்

2. சூற்றி பட்டாலகன்

கீழ்முகவெட்டி

1. பட்டன் மாசறுசோதி

2. நாராயண பட்டன்

கண்காணி பொற்காடன் மதுராந்தகனான ராஜராஜ மார்த் தாண்ட முவேந்த வேளான்.

அரசனது ஆணை பதிவு செய்யப்படுதல்

நம் ராஜேந்திரனது கரந்தைச் செப்பேடு, மன்னனது ஆணை எவ்விதம் எழுதப் பெறுகின்ற தென்பதையும், அதில் ஈடுபடும் அதிகாரிகள் யாவர்? என்பதையும் தெளிவுபடக் கூறுகின்றது. கீழ்க்கண்ட கரந்தைச் செப்பேட்டுப் பகுதியினை இங்கு நாம் எடுத்துக் காட்டலாம்.

'இப்படி வரியிலிட்டுக் கொள்க வென்று நாம் சொல்ல நம் ஓலை எழுதும் சயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் முடிகொண்ட சோழன் எழுத்தினாலும் நம் ஓலை நாகயன் உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரை சூருடையான் ஈராயிரவன் பல்லவயனான உத்தம சோழப் பல்லவரையனும், அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டு உத்தம சோழ நல்லூருடையான், பாளூர் அம்பலத்தாடியான முடி கொண்ட சோழ விழுப்பரையனும், அப்பினாலும் புக்க நம் தீட்டின் படியே வரியிலிட்டுக் கொள்க வென்று நம் கரும மாராயும் உய்யக் கொண்டார் வள நாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நராக்கண் மாராயன் சன நாதபனான ராஜேந்திர சோழ பிரமாதி ராஜனும், உய்யக் கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாட்டுக் காஞ்சி வாயில் உடையான் உதைய திவாகரன் தில்லை யாளியான ராஜராஜ மூவேந்த வேளானும், அரு மொழி தேவ வளநாட்டு இங்கணாட்டு இளையான் குடியான் ராஜாதித்தன் கூத்தாடியான விழுப்பரையனும் நடுவிருக்கும்'

சாம்பிராணி

இக்காலை திருக்கோயில்களிலும், இல்லங்களிலும் நறும்புகையிடப் பயன்படுவது சாம்பிராணி யாகும்.

இக்காலத்துப் பெரு வழக்கிலிருக்கும் சாம்பிராணி நம் ராஜேந்திரன் காலத்தில் பயன்படுத்தப் பட்டதாக அறிவதற்குப் போதிய சான்றுகள் இன்றளவும் கிடைக்கப் பெறாமையின், அக்காலை சாம்பிராணி பயன்படுத்தப் பெறவில்லை யென்பது உறுதியாகிறது. பின்னை அக்காலை நறும்புகையிட எதனைப் பயன்படுத்தினரெனின், குங்கிலியமெனும் பொருளைப் பயன்படுத்தினரெனக் கொள்க. ராஜேந்திரனது காலத்தில் சாம்பிராணிக்குப் பதிலாகக் குங்கிலியம் பயன்படுத்தப்பட்ட தென்பதனைத் தஞ்சை மாவட்டத்துக் கண்டியூரிலுள்ள ராஜேந்திரன் சாசனத்தா லறியலாம்.

கண்டியூருக்கு அண்மையிலுள்ள திருவையாற்றில் ஆட்கொண்டார் திருமுன்னர் குங்கிலியக்குழி இன்றும் காணப்படுதலின், பண்டைக் காலத்தில் திருக்கோயில்களில் திருப்புகையிடக் குங்கிலியமே பயன்படுத்தப் பட்ட தென்பதனை நாம் உறுதியாகக் கூறலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான குங்கிலியக் கலையர் சிவபெருமானைக் குங்கிலியத்தால் வழிபட்டமையின் அப்பெயர் பெற்றார் என்பதனை உணர்க.

'வெந்த குங்கிலியப் புகைவிம்மவே

கந்த நாறுங் கழிப்பாலையார்'

என்ற தேவாரப் பாடலாலும்

'கங்கை நீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுத லெம்பி ராற்குப் பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல' என்ற பெரிய புராணச் செய்யுளாலும்,

'ஆலய மெங்கும் காதியகுங் கிலியப்புகை'

என்ற சேக்கிழார் நாயனார் புராணத்தும் திருக்கோயில்களில் குங்கிலியப் புகையிடப் பட்டமை அறியப்படுவதனாலும் மேற்கூறிய செய்தி உறுதி பெறுகின்றது.

சீதாரி

திருக்கோயிலில் திருவமுது செய்விக்குங்கால் திருப்புகையோடு கற்பூரம் காட்டப்பட்ட செய்தி சாசனங்களால் அறியப்படுகின்றது. அக்காலை புகைக்குக் குங்கிலியத்தைப் பயன்படுத்தாது சீதாரியைப் பயன்படுத்தினர் என்பத சாசனங்களால் அறியப்படுகின்றது.

'பாதாதி கேசம் பழிப்பில்லாள் பாங்கமைந்த

சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள்'

என்று ஞானவுலாவில் கூறப்பட்டுள்ளமையின் இது நன்கு விளங்குகின்றது. இவண சீதாரியெனக் குறிக்கப் பெறுவது மணங்கமழ் சந்தனமே யாகும்.

இதனை முதலாம் ராஜராஜனின் முதற் பெருந்தேவியார் எடுப்பித்த ஒலோகமா தேவீச்சரத்துள்ள, 'திருமெய்ப் பூச்சுக்கும் சீதாரிக்குமாக நிசதம் சந்தனம் முப்பலம்' என்னும் சாசனப் பகுதியால் அறியலாம். அக்காலத்து மக்கள் நீராடிய பின்பு இப்புகை காட்டும் வழக்கு இருந்தது. சீதாரி என்பது சீதம் எனப்படுகின்ற குளிர்ச்சிக்குப் பகையாதலின் (அரி) இப்பெயர் பெற்றது.

மிளகாய்

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் மிளகாய் வழக்கில் இல்லை. இது நம் நாட்டில் அக்காலத்துப் பயிர் செய்யப்படுவதுமில்லை. மிளகாய் சிலி நாட்டினின்றும் நம் நாட்டிற்குப் பன்னூறு ஆண்டு கட்கு முன் கொண்டு வரப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை. பண்டு தொட்டு நம் நாட்டில் மிளகு மிகுதியாகப் பயிர் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மிளகு-காய் என்பதே பிற்காலத்தில் மிளகாய் என மரீஇ வழங்குவதாயிற்று.

தஞ்சை ராஜராஜேச்சுரத்து ஆலயத்திற்கு அளிக்கப் பெற்ற நிவந்தத்தைக் குறிக்கும் சாசனப் பகுதியில் மிளகாய் குறிக்கப்பெற வில்லை யாதலின், இஃது அக்கால வழக்கில்லை

என்பதனை அறியலாம். மிளகாய் தேவர்களின் உணவாகு மென்று புராணங்கள் கூறும்.

தேங்காய்

இன்று இந்துமதக் கோயில்களில் வழிபாடு புரிவோர் தேங்காய் உடைத்து வழிபாடு செய்தல் வழக்கமாக உள்ளது. ஆனால், பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் நம் தமிழகத்தில் இவ்வழக்கம் பின்பற்றப் பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்தில. எனவே, அக்காலை இறைவனுக்குத் தேங்காயுடைத்துப் படைத்ததாகத் தெரியவில்லை. இதனால், அக்காலத்தில் தமிழகத்தில் தேங்காய் கிடைக்கப் பெறவில்லை என நாம் எண்ணலாகாது.

ராஜராஜேச்சுரத்து வட சுவரில் காணப்பெறும் சாசனத்தில் 'தெங்குமரம் நின்ற நந்தவனம்' என்று குறிக்கப் பெற்றிருத்தலினாலும்,

ஆனைமங்கலச் செப்பேட்டில் 'இவ்வூராரிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாத தாகவும்', என்றும் 'காவு தெங்கிடப் பெறுவதாகவும்' என்றும் குறிக்கப் பெற்றிருத்தலின் அக்காலத்துத் தேங்காய் இருந்தமை புலப்படும். ஆனால், தேங்காய் கடவுள் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப் பட்டதாகக் கல்வெட்டில் குறிக்கப் பெறவில்லை யாதலின், இறைவனுக்குத் தேங்காய் உடைத்துப் படைத்தல் இல்லை யென்று நாம் எண்ண இடமுண்டு.

திருக்கோயிலில் வழங்கப்பெற்ற பரிபாஷைச் சொற்கள்

அக்காலத் திருக்கோயில்களில் வழங்கிய சம்பிரதாயச் சொற்கள் சில நமக்கு மகிழ்ச்சியினையும் வியப்பினையும் ஊட்டுகின்றன. அவை திருவமுது, திருமஞ்சனம், திருப்பாவாடை, திருப் பள்ளித்தாமம், திருப்பரிகலம், திருப்பரிச்சட்டம், திருவொற்றாடை போன்றனவாகும்.

திருவமுது

இறைவனுக்குப் படைக்கும் பொருள்கள் அமுதென அழைக் கப்பெறும். பழவரிசியாற் சமைத்த போனகம், கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது (வெற்றிலையமுது) ஆகியவை கொண்டு நாடோறும் மூன்று போதினும் திருவமுது செய்விக்கப்பட்டது.

திருவிழா நாளில் திருவமுது

திங்கள் தோறும் நடைபெறும் திருவிழாவின் பொழுது எழுந்தருளும் திருமேனிகட்குப் பழவரிசியால் அட்ட போனகமும், பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்கரை, கடுகு, நெய் போன்றவற்றால் செய்யப்பட்ட அப்பக் காய்க் கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட அட்ட புளிக்கறியமுதும், புளியிட்டுங் கறியமுதும், காய்க் கறியமுதும், பொரிக் கறியமுதும் பிறவும் அமுது செய்வித்தல் வழக்கமாகும்.

திருமஞ்சனம்

இறைவனது திருமேனிகளைத் தூய நீரால் நீராட்டுதல் திரு மஞ்சன மெனப்படும். ராஜராஜன் காலத்தில் பெருஞ்சண்பக மொட்டு, ஏலரிசி, இலாமச்சம் ஆகியவற்றைத் தண்ணீரில் ஊற வைத்து, அந்நீரால் திருமஞ்சனம் ஆட்டுதல் வழக்க மென்பதனை ராஜராஜேச்சுரத்தின் கண்ணுள்ள கீழ்க்கண்ட சாசனப் பகுதியா லறியலாம்.

'ஸ்ரீராஜராஜீச்வர முடையார் ஆடியருந் திருமஞ்சன நீரிலும் தண்ணீர் மீதிலுமிடப் பெருஞ்சண்பக மொட்டுக்கும் ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்'

திருப்பரிச்சட்டம்

சட்டம் என்பது ஆடையாகும். திருப்பரிச்சட்டம் என்பது இறைவனுக்கு அணிவிக்கப்படும் ஆடையாகும். இந்நாளில் இது திருப்பரிவட்டம் என அழைக்கப்பெறுகிறது.

திருவொற்றாடை

இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்வித்த பின்னர் இறைவன் திருமேனியிலுள்ள நீரை ஒற்றி எடுக்கப் பயன்படும் ஆடை திருவொற்றாடை எனப்படும். ஒற்றுதலின் ஒற்றாடை எனப் பெயர் பெற்றது.

திருப்பாவாடை

திருமுன் அமுது செய்வீக்கச் சோற்றினைப் பரப்பும் பொருட்டுத் தரையில் விரிக்கப்படும் ஆடை திருப்பாவாடை என அழைக்கப் பட்டது. இக்காலத்தும் இவ்வழக்கம் பின்பற்றப்படுகின்றது.

திருப்பள்ளித்தாமம்

தாமம் என்பது மாலையெனப் பொருள்படும். இவண் தாமம் என்பது இறைவனது பூசெய்க்குப் பயன்படும் மலரைக் குறிக்கின்றது. பூசெய் என்ற தூய தமிழ்ச்சொல் பூவினால் செய்யப்படும் வழிப்பாடு என பொருள்படும். 'திருப்பள்ளித் தாமம் பறித்துக் கொடுப்பார் இருவர்' என்று திருவையாறு, திருவேதிகுடி சாசனப் பகுதிகளாலும், 'சாத்தலாகுந் திருப்பள்ளித் தாமம் பலவும் தாங்கொய்து' எனவும், 'வண்டு மருவும் திருப்பள்ளித்தாமங் கொண்டுவரன் முறையே' எனவும், 'கொய்த தூநறும் பள்ளித் தாமம் குஞ்சிமேற் றுதையக் கொண்டார்' எனவும், 'சடைமேலணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார்' எனவும், 'சிவகாமி யாண்டார் கொய்து - பன்னகா பரணர் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம்' எனவும் திருத்தொண்டர் புராணத்தப் பல்வேறிடங்களில் பரந்து பேசப்படுவதனாலும், இதனை நாம் நன்கறிய லாகும்.

பெண்கள் அடிமை

பண்டைக் காலத்தில் இயற்கையின் ஊறுபாட்டால் கொடிய வறுமை வந்துற்ற காலங்களில் பெண்கள் தம்மை விற்றுக் கொண்டு அடிமையாகித் திருக்கோயில்களில் பணிபுரிவர். சிலர் மடங்களில் பணிபுரிவர். இவ்விதம் அடிமை புகுந்த

பெண்களனை வரும் பெரும்பாலும் கோயிலுக்கோ, மடத்துக்கோ, விற்கப்பட்டிருத்தலின் தெய்வ கைங்கரியங்களக்கே இவர்கள் பெரும்பாலும் அடிமை புகந்தனர் என்பதனை அறியலாம். நம் ராஜேந்திரனது காலத்தும் சிலர் இவ்விதம் அடிமை புகுந்தனர்.

தேவதாசிகள் மணம் புரிந்துகொள்ளுதல்

ஆலயத் தொண்டு புரியுந் தேவரடியாராகிய பெண்கள், பொதுமகளிர் என வழங்கப் பெற்றனர். இருப்பினும் இவர்களுள் சிலர் நம் ராஜேந்திரனது காலத்தில் திருமணம் செய்த கொண்டு நல்வாழ்வு நடாத்தியதாகவும் கல்வெட்டுச் செய்தியாலறியலாம்.

ஆண் மக்களின் நிருத்தம்

தேவரடியாரான பெண்கள் திருக்கோயில்களிலும், விழாக் காலங்களில் பொத இடங்களிலும் கூத்து நிகழ்த்தி வந்தனர். இவர்களுக்கு மன்னனால் மானியங்கள் வழங்கப் பெற்றன. தேவரடியார்களைப் போலவே ஆண்களும் சிலர் நாட்டியக்கலை (ஆடற்கலை) யில் நல்ல தேர்ச்சி பெற்றுத் தெய்வ சந்நிதிகளிலும் மன்னது அவையிலும் தங்களது கலைத்திறனைக் காட்டினர். இவ்விதம் ஆடலில் வல்ல கூத்தர்கள் நிருத்தப் பேரரையர், நிறுத்த மாராயன் போன்ற சிறப்புப் பெயர்களையும், நட்டுவநிலை, நட்டுவக் கணி என்ற உரிமை நிலங்களையும் மன்னனிடமிருந்து பெற்றனர். எனவே, அக்காலைப் பெண்கலைப் போலவே ஆண்களும் ஆடற்கலையில் வல்லுநராகத் திகழ்ந்தனர் என்பது போதரும். ஆடல் வல்லானாகிய சிவபெருமானும் நிருத்தகாரி எனப்பட்டான், இக்கூத்தர்களுள் சாக்கையர் என்பார் குறிப்பிடத்தக்க திறமை பெற்ற பிரிவினராவர். இவர்கள் சங்க கால முதற் கொண்டே ஆடற் கலையில் பேரும் புகழும் பெற்றவர் என்பது நெஞ்சையள் ளும் செஞ்சொற் காவியமாம் சிலப்பதிகாரத்தினாலும், சாசனங் களாலும் அறியப்படுகின்றது.

இவர்களனைவரும் வடமொழி, தென்மொழிகளில் நல்ல அறிவும், அலங்கார நூல் பயிற்சியும் பெற்றிருந்தனர். இக்கூத்தருள் ஒருவரே தமிழ்த் தண்டியாசிரியர் என்பதனை,

'மறைத்து நாடக நவிற்றும்

வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்.....தண்டி'

என்ற அவரது பாயிரத்தால் நன்கு அறியலாம்.

முன்னோரான மன்னர், தேவியரை நாட்டார் வழங்கிய முறை இறந்துபட்ட தன் தந்தை, பாட்டன், முன்னோன்-ஆகியவர்களைப் 'பெரியதேவர்' என்றழைப்பது அக்கால வழக்கு. நாட்டார் தம் மன்னனைத் 'தேவர்', 'பெருமாள்', 'நாயனார்' எனவும் மன்னன் தேவியை நம்பிராட்டியார் எனவும் பெரும்பாலும் வழங்குவர். அத்தேவியாரும், அரசகுலப் பெண்களும், ஆழ்வார், நாச்சியார் என்றும் வழங்கப் பெறுவர். ராஜேந்திரன் மகளான அம்மங்கை தேவி, 'அம்மங்கை ஆழ்வார்' என அழைக்கப்பட்டதனை ஈண்டு நாம் எடுததுக்காட்டாகக் கூறலாம்.

ராஜேந்திரன் திருவாதிரை நாளில் பிறந்த செய்தி

நம் வேந்தன் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளிற் பிறந்தவன் என்பதைக் கீழ்கண்ட திருவொற்றியூரிலுள்ள கல்வெட்டாலறியலாம். 'திருவொற்றியூருடைய மகாதேவர்க்கு உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் திருநாள் மார்கழித் திருவாதிரை ஞான்று நெய்யாடியருள வேண்டு(ம்) மிசத்துக்குத் திருவொற்றியூர் திருமயானமும் மடமுடைய சதுரானன பண்டிதன் தேவர் பண்டாரத்து வைத்த காசு நூற்றைம்பது.

திங்கள் விழா

நம் ராஜேந்திரன் பிறந்த திருவாதிரை நாளில் திங்கள் தோறும் விழா நடத்துவதற்கு நிலம் அளிக்கப்பட்டது. இச்செய்தியினைத் தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாசலத்திலுள்ள கல்வெட்டாலறியலாம். நம் வேந்தன் நலங்கருதித் திரு முதுகுன்ற முடையார் கோயிலில் இவ்விழாத் திங்கள் தோறும்

சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. ராஜராஜனது பிறந்த நாளாகிய திருச்சதயத் திருவிழாவும் திங்கள் தோறும் நடத்தப்பட்டதை ஈண்டு நாம் நினைவிற் கொள்வது நலம்.

முறையிடல்

மன்னனிடம் குறையோ, முறையோ, உரிமைகளோ பெறவிழைபவர் தங்களது வேண்டுகோளினை மன்னனது அதிகாரிகளுள் ஒருவரிடம் அறிவிக்க வேண்டும். அறிவித்தவற்றை விசாரித்து, மன்னமது ஆணை பெறுவது இன்றியமையாததாயின், அவ்வதிகாரியே மன்னனிடம் நேரில் விண்ணப்பஞ் செய்வர். அதனைச் செவிமடுத்த மன்னன் காரியத்திற் கேற்பத் தனியாகவோ, உடன் கூட்டத்தினருட்ன் கலந்தோ, முடிவு செய்து, தனது ஆணையிணை வரிக்குக் கூறு செய்வார் போன்ற அதிகாரிகளுக்கு வாய் மொழியால அருளிச் செய்வான். இவ்விதம் அருளிச் செய்தவை திருமந்திர வோலை யதிகாரியால் பட்டோலை கொள்ளப்பட்டு, உடன் கூட்டத்து அதிகாரிகளின் கையொப் பத்துடன் உரிய கீழதிகாரிக்க அனுப்பி வைக்கப்பெறும்.

இவ்விதமே யன்றி மன்னனுக்கு வேண்டியவர்கள் மன்னனிடமே நேரில் தங்களது குறை, முறைகளை விண்ணப்பித்து அவற்றிற்குரிய ஆணையைப் பெறுவதும், சொந்த' காரியமான வற்றை மன்னனே தனித்ச் சிந்ததித்துச் சிந்தித்து (பிறரோடு ஆலோகனை செய்யாமல்) ஆணை பிறப்பிப்பதும் உண்டு.

கல்வெட்டு

கல்வெட்டு மங்கல வாசகம், சாசனம் எழுதப்பட்ட காலம் சாசனச் செய்தி, கையெழுத்துகள், ஒம்படைக்கிளவி ஆகிய ஐந்து பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

மங்கல வாசகம் கல்வெட்டின் தொடக்கத்தில் பொறிக்கப் பட்டிருக்கும். பெரும்பான்மையான கல்வெட்டுகள் 'ஸ்வஸ்தி ஸ்ரீ'

எனும் சொல்லினைத் தொடக்கத்தில் கொண்டுள்ளன. மங்கள முண்டாகட்டும் என்பது இதன் பொருளாகும்.

முதலாம் ராஜராஜனின் ஆட்சிக் காலத்திலிருந்து சோழர் கல்வெட்டுகளில் மன்னனின் பெயரையும், ஆண்டையும் குறிக்குமுன்னர் மெய்க்கீர்த்தி, 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' என்னும் தொடக்கத்தினையோ, 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட' என்னும் தொடக்கத்தினையோ கொண்டுள்ளது.

கொடை அளித்தவனின் கையொப்பமும், அதைக் கொடைய ளித்தவன் சொல்லிக் கேட்டழுதிய ஊர்க்கணக்கன் கையொப்பமும், சில கல்வெட்டுகளில் அதைனைக் கல்லில் பொறித்த தச்சனின் கையொப்பமும், சாட்சிகளின் கையோப்பங்களும் காணப் படுகின்றன.

வடமொழிக் கல்வெட்டு

தமிழகத்தில் தமிழ்க் கல்வெட்டுகளுக்கு அடுத்து அதிகம் காணப்படுபவை வடமொழிக் கல்வெட்டுகளாகும். வடமொழிக் கல்வெட்டுகள் ராஜகீயம், 'சானபதம்' என இருவகைப் படுமென நீதிநூல்கள் குறிக்கின்றன. ராஜகீயம் அரசினுடையது; சானபாதம் என்பது மக்களுடையது.

மன்னனோ, அமைச்னோ, அதிகாரிகளோ வழங்கும் ஆணைகள் ராஜகீயம் என்றும், மக்கள் தமக்குள் செய்துகொள்ளும் உடன்பாடுகள், 'சானபதம்' என்று அழைக்கப்படும். ராஜகீயம் சாசனம், செயபத்திரம், ஆக்ஞாபத்திரம், பிரக்ஞாபனம் என்னும் நான்கு உட்பிரிவுகள் கொண்ட தாகும்.

நம் ராஜேந்திரனது கல்வெட்டும் ஒரு வடமொழிச் செய்யு ளுடன் தொடங்குகிறது.

ராஜத ராஜன்ய மகுடஸ்ரேணி

ரத்னே ஷீ சாசனம்!

ஏதத் ராஜேந்தித்ர சோளஸ்ய

பரகேசரி வர்மண!

ராஜராஜனுடைய கல்வெட்டுகளுள் பல கீழ்வரும் வட மொழிச்செய்யுளுடன் தொடங்கப் பெறுகின்றது.

ஏதத் விஸ்வ நிருப சிரேணீ

மௌலி மாலேப லாலிதம்!

சாசனம் ராஜராஜஸ்ய

ராஜகேசரி வர்மண!

தேவதானம்

தேவதானமாக அளிக்கப்பட்ட பழையனூர் கிராமத்திலிருந்து ஆண்டுதோறும் ஒரு நிலையான அளவு (Permanent assessment) பணம் மகாதேவ ஆலயத்திற்குச் செலுத்தப்பட வேண்டு மென்று ராஜேந்திரன் ஆணை பிறப்பித்ததாகத் திருவாலங்காட்டுச் செப்பேடு செப்புகின்றது.

வரி

ராஜேந்திரனது நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம் கீழ்க்கண்ட பொது வரிகள் திருவல்லம் கிராமத்தின்கண் குடியிருந்த மக்களிடம் வசூலிக்கப் பட்டனவாக அறிய லாகும். அவை கிணறு, குளம் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீருக்குரிய வரி, ஆட ம்பர வாசிகளின் தங்கத்திற்குரிய வரி, தங்கத்திற்குரிய உகப்பார் பொன் (Ugappar Pon) எனப்பட்ட வரி, திருமண நாள் போன்ற மங்கலமான நாட்களின்போது வசூலிக்கப்பட்ட சொற்பமான வரி முதலியன வாகும்.

கடனும் வட்டியும்

கி.பி. 1021 ஆம் ஆண்டில் வேம்பற்றூர் சபை, ஸ்ரீகுடித்திட்டை சிவன் கோயிலிடமிருந்து அறுபத்தைந்து காசுகள் கடனாகப் பெற்றுக்கொண்ட வரிகள் கோயில் நிலத்தினின்றும் வசூலித்தல் தவிர்க்கப்பட்டன. சித்தாய காசு, எண்ணெய்,

நெய்வரி, ஊரவை போட்ட வரிகள்.

பகைவர் நாட்டைச் சூறையாடலும் எரியூட்டலும்

போர்மேற் செல்லுங்கால, தாழ்ந்த பகைவர் எனின் அரவது நாட்டைச் சூறையாடலும், நகரை எரியூட்டிப் பாழ்படுத்தலும், குழந்தை முதல் யாவரையும் கொலை செய்தலும், திறை கொண்டு மன்னனைச் சிறையிடலும், மன்னனது முடியினை' கவர்தலும், விலையுயர்ந்த பொருள்களைக் கவர்ந்து வருதலும், படிமங்களைக் கவர்ந்து வருதலும் வழக்க மாயிருந்தது என்பதனை நம் ராஜேந்திரனது ஈழப் படையெழுச்சியினாலும், மேலைச் சாளுக்கியப் படையெழுச்சியாலும் அறியலாம். மான்யகேதம் நம் ராஜேந்திரனது படையால் தீக்கிரையாக்கப் பட்டதனை' கரந்தைச் செப்பேடு குறிக்கின்றது.

இலங்கை வரலாற்று நூலான 'மகாவமிசமும்' சோழ மன்னர் கல்வெட்டும் ராஜேந்திரனது படை, ஈழத்தின் பல பகுதிகளிலிருந்த புத்த விகாரைகளை அழித்தது என்பதைனைக் குறிக்கின்றது. மேமலைச் சாளுக்கிய மன்னனான சதயாசிரயனுடைய 'கோட்டூர் சாசனம்' ராஜேந்திரனின் படை வீரர்கள் சாளுக்கிய நாட்டினை மிருகத்தனமான முறையில் சூறையாடினர் எனவும், பார்ப்பனரைத் துன்புறுத்தினர் எனவும், பெண்களை மானபங்கம் செய்தனர் எனவும் குறிப்பிடுகின்றது.

கழுதை மீதேற்றல்

தீமையான காரியங்கள் புரிந்தாரைக் கழுதை மீதேற்றி ஊர்வலம் விடுதல், இழிகுலத்தவரின் கூட்டுறவு காரணமாகச் சாதியினின்று விலக்குண்டாரைக் கழுவாய் செய்து சேர்த்து' கொள்ளுதல் சோழர் கால மரபு. இவை நம் ராஜேந்திரனது ஆட்சி' காலத்திலும் வழக்கிலிருந்தது.

தானம்

ஒரு சில காசை ஒருவனிடம் கொடுத்துக் கொடுத்தவனின் நன்மைக்காகக் கொடை யளிக்கக் கூறும்போது, கொடுத்த

'முதல் கெடாது பொலி ஊட்டாகக் கொண்டு' வந்த பொலியில் கொடை அளிக்க வேண்டு மென்று கூறப்பெற்றிருக்கும். இவண் 'பொலி' என்பது வட்டி யாகும். அதனுடன் வட்டி விகிதமும் குறிக்கப் பெற்றிருக்கும். அவ்விதம் வழங்கப் பெற்ற கொடை சூரியன், சந்திரன் உள்ளளவும் நிலைபெற்றிருக்குமெனக் குறிக்கப் பெற்றிருக்கும். நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தும் பரிக்கால் பிச்சன் வடவாயில் என்பவனுக்காக வடவாயில் உலகன் என்பான் ஆடுகளைத் தானஞ் செய்துள்ளான் என்பதனைச் சித்தூர் மாவட்டத் திருத்தணிப் பிரிவிலுள்ள நேமலி என்ற ஊரிலுள்ள கல்வெட்டுக் கூறுகின்றது.

அறக்கொடை

நம் ராஜேந்திர சோழனது எட்டாம் ஆட்சி யாண்டினவாகத் துறையூரில் காணப்படும் இரு கல்வெட்டுகளில் 'திருக் கோயிலில் அதிகாலையில் வழிபாடு செய்விக்கவும், மற்ற நேரங்களில் மற்றவருக்கு வேதம் கற்பிக்கவும் ஒரு பார்ப்பனனுக்குப் பராமரிப்புச் செலவிற்காக நன்கொடை யளித்த செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

நம் ராஜேந்திரனது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ராஜராஜனின் துணைவியர்களான உடைய பிராட்டியார திரிபுவன மாதேவியார் பஞ்சன் மாதேவியார் ஆகியோர் திருவெண்காட்டுக் கோயிலுக்குக் கொடை யளித்துள்ளனர்.

நம் வேந்தன் அமலன் செய்யாவயர் (Amalan of Sayyavayar) என்பானுக்கு நிலம் அளித்துள்ளான். இந்நிலத்தினை அமலன் திருவெண்காட்டப் பிட்சாதன மூர்த்திக்கு நன்கொடையாக அளித்துள்ளதாக ராஜராஜனின் முப்பதாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

படியெடுத்தல்

தன் முன்னோரான மன்னரும் பிறரும் செய்த அறக்கொடை களைக் கோயில் முதலிய பொது விடங்களில் யாவரும் அறியக்

கற்களில் பொறித்தல் வழக்க மாகும். திருப்பணி புரிதற் பொருட்டு அக்கற்கள் பிரிக்கப் படுங்கால், அக்கல்வெட்டுகளைப் படியெடுத்துக் (பிரதி) கொண்டு, திருப்பணி முற்றுப் பொற்றகாலை உரிய இடங்களில் அவற்றை வரைந்து விடுதல் பண்டை வழக்கமாகும். இது 'கற்படி மாற்று' அல்லது 'படியெடுத்தல்' எனப் பொருள்படும். நம் வேந்தன் தனது பதினான்காவது ஆட்சி யாண்டின் (கி.பி. 1026) எழுபதாம் நாளில், திருமழபாடி வைத்தியனாத சாமிகள் ஆலயத் திருப்பணி முற்றுப் பெற்றபோது, பழைய கல்வெட்டுகளைப் படியெடுத்து வைத்திருந்த மீண்டும் எழுதச் செய்தான்.

சண்டேசுரர்

சிவன் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்ட போதெல்லாம் சண்டேசுரர் பெயராலேயே விற்கப்படுவது வழக்கம்.

ராஜ குரு

முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் முதலிய சோழ வேந்தர்க்கு ராஜ குருக்களாய் விளங்கியவர்கள் இலாடம், காசி, காசுமீரம் முதலிய வடநாடுகளிலிருந்து அவரால் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் கோளகி மடம், இலட்சாதயா மடம், பிட்சா மடம் முதலிய சைவ ஆதினங்களின் தலைவர்களாய் விளங்கியதுடன், அரசாங்கத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். நம் ராஜேந்திரன், கங்கைக் கரையிலிருந்து பல சைவர்கள அழைத்து வந்து காஞ்சியிலும், சோழ நாட்டின் பிற பகுதிகளிலும் குடியேற்றினான்.

தானம் அறிவித்தல்

மன்னன் தானஞ் செய்யுங்கால் அச்செய்தியினை நாட்டார்க்கும், நகரங்களிலுள்ளார்க்கும், பிரமதேயக் கிழவர்க்கும் மற்றும் பிறர்க்கும் தெரிவித்தல் வழக்க மாகும்.

நம் இராசேநதிரனின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டின் தாகக் கூழம்பந்தல் கங்கை கொண்ட சோளேச்சுரர் கோயிலில்

காணப்படுகின்ற கல்வெடடில், நம் வேந்தன் தானம் அளித்த செய்தி, ‘சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலிவல நாட்டு நாட்டார்க்கும், பிரமதேயக் கிழவர்க்கும், தேவத்தான, பளளிச் சந்த, கணி முற்றூட்டு, வெட்டப்பெற்றுப் பழவரச்சாலா போகம் உள்ளிட்ட ஊர்களில்லார்க்கும், நகரங்களில்லார்க்கும் தெரியப்படுத்த வேண்டும் என்பதனையும் மன்னன் கூறியுள்ளான் என்பதனைத் தெரிவிக்கின்றது.

பள்ளிப்படை

அரசனோ , இளவரசனோ இறந்துபட்டகாலை அவன் அடக்கம் செய்யப்பட்ட இடத்தின்மீது கோயில் கட்டுதல் அக்கால வழக்கமாகும். இதனைப் பள்ளிப்படை என்று முன்னோர் வழங்கினர். இதுபோன்ற பள்ளிப்படைகள் பிற்காலச் சோழர் காலத்திலும் அமைக்கப்பெற்றனவாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இவ்வழக்கம் நம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும் பின்பற்றப்பட்ட தென்பதனை இவன் இராமனாதன் கோயிலில் பஞ்சவன் மாதேவீஸ்வரம் எழுப்பியதா லறியலாம்.

ராஜேந்திரனது படிமம்

காலஹஸ்திக் கோயிலில் ராஜேந்திரனது படிமமும், சோழ மாதேவியின் படிமமும் வைக்கப்பட்டுள்ளன. இதனைப் போன்றே ராஜராஜனது படிமமும் உலோக மகாதேவியார் படிமமும் தஞ்சையில் காணப்படுகின்றன. எனவே, கோயிலில் அக்காலத்தில் மன்னர் உயிருடன் இருக்கும்போது மட்டுமன்றி, இறந்த பின்பும் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டன ரென்பதை யறியலாம்.

சிறப்புரிமை

சில வேந்தர்கள் காலத்துக் குறிப்பிட்ட சில பிரிவினருக்கு மட்டும் சில சிறப்புரிமைகள் அளிக்கப்படுதல் வழக்க மாகும். ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில் காஞ்சி மாநகரின்கண் வாழ்ந்து வந்த ஓவிகுலா சிற்பிகளுக்கு மட்டும் ராஜேந்திரனது

முக்கியமான செப்பேடுகளை வரையும் சிறப்புரிமை வழங்கப் பெற்றிருந்த செய்தி கல்வெட்டுச் சான்றுகளால் அறிய லாகும்.

ராஜேந்திரன் காலத்துக் கூலி

கி.பி. 1018 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தின் கண்ணுள்ள நட்டம் என்னும் ஊரில் விறகு வெட்டி ஒருவன் ஒருநாள் கூலியாக நான்கு நாழி நெல் பெற்றான். செங்கற்பட்டு மாவட்டம் திருமுக் கூடலில் பல்லக்குச் சமப்பவனுக்கு நான்கு நாழி நெல் நாள் கூலியாக அளிக்கப்பட்டதாகவும், அதே நாளில் அதே ஊரில் தோட்ட வேலை செய்பவனுக்குப் பத்து நாழி நெல் அளிக்கப் படடதாகவும் கல்வெட்டு இயம்புகின்றது.

ராஜேந்திரன் காலத்தில் விலைவாசி

நெல்விலை இடத்திற்கிடம் மாறுபட்டிருந்தது. செழிப்பான பகுதிகளில் நெல்விலை குறைவாகவும், செழிப்பற்ற பகுதிகளில் விலை அதிகமாகவும் இருந்தது. கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள விலை சராசரி விலை யாகும். கி.பி. 1012 இல் ஒரு பொன்னுக்கு ஏழு கலம் நெல் கொடுக்கப்பட்டது. இங்குப் பொன் என்பது கழஞ்சாகும். கி.பி. 1018 இல் செங்கற்பட்டு மாவட்டம், நட்டம் கிராமத் தில் ஒரு பொன்னுக்குப் பன்னிரண்டு கலம் நெல் கொடுக்கப்பட்டது. கி.பி. 1014 இல் வட ஆர்க்காடு மாவட்டத்தின்கண் உள்ள செங்குன்றம் என்னும் ஊரில் ஒரு பொற்காசுக்கு ஒன்பது ஆடுகள் கொடுக்கப்பட்டன.

காளகஸ்தியில் கி.பி. 1012 ஆம் ஆண்டு விற்கப்பட்ட நெய் விலை இன்றைய விலையில் 1/6 பாகம் அல்லது 1/4 பாக மாகும். அன்று ஒரு நாழி நெல்லுக்கு 1 1/2 நாழி தயிர் கொடுக்கப் பட்டது. ஒரு பொற் கழஞ்சுக்கு ஏழு கலம் நெல் வாங்கப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தின்கண் உள்ள நட்டம் என்னும் கிராமத்தில் மூன்று நாழி நெல்லுக்கு நாற்பத்தெட்டு வெற்றிலையும், பன்னிரண்டு பாக்கும் கொடுக்கப்பட்டன (கி.பி. 1018).

கி.பி.1018 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் திருப்பைஞ்ஞீலியில் ஒரு நாழி நல்ல தரமான பருப்பும் ஐந்து நாழி நெல்லும் சம மதிப்புடையவனாக விருந்தன. ஒரு பலம் நல்ல வெல்லம் இரண்டு நாழி நெல்லுக்குச் சமமாகும். கி.பி. 1016 இல் திருமுக்கூடலில் ஒரு நாழி எண்ணெய் நான்கு நாழி நெல்லுக்கு வாங்கப்பட்டது. ஒரு நாழி நெய் 1/3 கல நெல்லுக்கு வாங்கப்பட்டது. இரண்டு படி நெல்லுக்கு ஒரு படி தயிர் வழங்கப்பெற்றது. ஒரு படி பால் இரண்டு படி நெல்லுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு துறுணி நெல்லுக்கு ஒரு நாழி கிழங்குமாவு (Turmeric) வழங்கப்பட்டது.

மதுராந்தகன் மாடையின் மதிப்பு

ராஜேந்திரனது பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் திருவொற் றியூரில் ஒரு மதுராந்தகன் மாடை, இருநூற்றைம்பது கூலியாட்களைப் பெற்றது. ஒரு மதுராந்தகன் மாடை 1/8 வேலி நிலத்தினை வாங்கும் சக்தியுடையது.

மாணவர்க்கு உணவு

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மறைநூல் விடுதிக் கல்லூரியில் ஒரு மாணவனுக்கு 5/6 குறுணி நெல் உணவுக்காகச் செலவிடப்பட்டது.

இளநிலை மாணவனுக்கு (Junior Student) 3/4 குறுணி நெல்லும், முதுநிலை மாணவனுக்கு (Senior Student) 1 1/4 குறுணி நெல்லும் உணவிற்காகச் செலவிடப்பட்டன. திரிபுவனை வடமொழிக் கல்லூரியில் இளநிலை மாணவனுக்கு 3/4 குறுணி நெல்லும், முதுநிலை மாணவனுக்கு ஒரு குறுணி நெல்லும் வழங்கப்பட்டன. இதனைக் கொண்டு எண்ணாயிரம் கல்லூரி முதுநிலை மாணாக்கர் அதிக உணவுண்டனர் என்பது புலனாகும். எண்ணா யிரம் கல்லூரியில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கட்குப் பொற் பூ வழங்கப்பட்ட தென்பதனைக் கல்வெட்டுச் செய்தியா லறியலாம்.

பாசனம்

ராஜேந்திரனின் கரந்தைச் செப்பேட்டினைக் கொண்டு சிங்களாந் தகன் வாய்க்கால், செய்யா நல்லூர் வாய்க்கால், புள்வேளூர் வாய்க்கால், செய்யாநல்லூர் வாய்க்கால், சுந்தர சோழ வாய்க்கால், வெண்ணில் நீரோடுகால், ராஜேந்திரன் வாய்க்கால், துளார் பாயும் வாய்க்கால், வெண்ணியாறு, திரிபுவன மாதேவிப் பேரேரி, கருணைக்காலான மும்முடிச் சோழப் பேராறு, சோழகங்கம் போன்ற வாய்க்கால்களும் பாய்ந்து சோழ நாட்டைச் செழிப் பாக்கியதை யறியலாம்.

மான்ய கேத வெற்றி

மேலைச் சாளுக்கியரின் தலைநகரான மான்ய கேதத்தை வென்று தன்னடிப்படுத்த முதலாம் ராஜராஜன் கங்கணம் கட்டியிருந்தான். ஆனால், மான்ய கேதத்தை வெல்லும்முன் இறந்துபட்டான். 'மான்ய கேடத்தை நான் பிடிக்காத வரையில் கிரிகர விகாரம் (மலை போன்றுயர்ந்த அடுக்கு மாளிகை) செய்வதில்லை' என்ற தன் தந்தையின் சூளுரையினை ராஜேந்திரன் நிறைவேற்றியதைக் கீழ்க்கண்ட கரந்தைச் செப்பேட்டுப் பகுதியா லறியலாம். 'மான்ய கேதத்தை வீரனான மதுராந்தக தேவன் தண்டத்தினால் எரிந்து, அவர்களுடைய அழுக்கற்ற புகாக் குவியல்களுடன், பல பொருள்களையும் ஊர்திகளையும், தனது தலைநகரில் இருந்துகொண்டே பறித்துக் கொண்டான்'.

கங்கை வெற்றி

ராஜேந்திரன் கங்கைகொண்ட நிகழ்ச்சியினைக் கரந்ததைச் செப்பேடு, கீழ்க்கண்ட வரிகளால் விளக்குகின்றது.

'எல்லா அரசர்கட்கும் மவிளக்குப் போன்றவனும் நற்குணங்கள் நிறைந்தவனுமான அவன் (ராஜேந்திரன்) கங்கையைக் கொண்டு வருவதற்காகத் தவம் பூண்டு உடல் மெலிந்த பகீரதனுடைய கதையைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே, அதன்

கரையிலுள்ள அரசர்களாலேயே கங்கை நீரைத் தன் நாட்டுக்கு அழைத்து வந்து விட்டான்.'

கடார வெற்றி

ராஜேந்திரன் மேலைச் சாளுக்கிய மன்னனான தைலபனையும், கடார நாட்டு வேந்தனையும் வென்ற நிகழ்ச்சியினைக் கரந்தைச் செப்பேடு கீழ்க்கண்ட வரிகளால் வியந்து போற்றுகின்றது.

'ராஜேந்திரனுடைய பராக்கிரமமான தீயானது தைல பனுடைய சந்ததியை எரித்துவிட்டது என்னும் செய்தி வியக்கத் தக்க தன்று. ஏனெனில், கடலைக் கடந்து கடாரத்தை நன்றாக எறிந்து விட்டான் என்கிற மற்றொரு அற்புதத்தினால்.'

வியப்பான செய்தி

கங்கை கொண்டான் அமைந்த கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் பன்னிரண்டு முழுமையான கல்வெட்டுகளும் சில முற்றுப்பெறாத கல்வெட்டுகளும் காணப்பெறுகின்றன. இவற்றுள் ராஜேந்திரனது காலத்தது ஒன்றும் காணப்பட வில்லை என்பது வியப்பிற்குரியது; ஆய்வுக்குரியது. இதுபற்றிய காரணத்தை ஆய்வாளர் பணிக்கு விடுதலே நலம்.

ராஜேந்திர சோழன் அரசு கட்டிலேறிய ஆண்டு

'மதுராந்தகன் என்னும் இவ்வரசன்
தான் பட்டத்துக்கு வந்த ஆண்டில்,
ஆயிரத்துடன் எண்பதும் கூடின
எட்டாவது ஆண்டினை அடைந்தவனாய்
நாளும் விழாக்கள் நிறைந்த தனது
நாட்டில் நிலைத்த செல்வம் படைத்த
பல ஆசிரமங்களை அந்தணசிரேஷ்
டர்களுக்கு அன்புடன் கொடுத்தான்'

ராஜேந்திரனது கரந்தைச் செப்பேட்டின் மன்னர் மரபு புகழ்ச்சியுரையின் (பிரஸஸ்தி) கண் இவன் பிரமதேய தானம் செய்த நிகழ்ச்சியும், ஆண்டும் இவ்வாறு குறிக்கப் பெறுகின்றன.

ராஜேந்திரனது ஆட்சியாண்டு ஆயிரத்து எண்பதில் தொடங்குவதாகவும், இவன் தனது எட்டாமாண்டு பிரமதேயதானம் செய்யதாகவும் (1080 + 8 = 1088) இச்செப்பேட்டினால் அறியலாம்.

ராஜேந்திரன் கி.பி. 1012 இல் ஆட்சிக்கு வந்தான் என்பது வரலாற்றறிஞர்களின் ஆய்ந்த முடிபும், ஏன்? ஒருமித்த முடிபும் ஆகும்.

இச்செப்பேட்டில் குறிக்கப்பெறும் ஆண்டினை விக்கிரம ஆண்டுக்குக் கணக்கிடுவோமானால் இவன் கி.பி. 1024 இல் அரசு கட்டிலேறினா னெனவும் கி.பி. 1032 இல் பிரம தேயத்தானம் செய்தான் எனவும் விளங்குகின்றன. தமிழகத்தின் கண் வழக்கிலிருந்த சாலிவாகன ஆண்டும், கலியுக ஆண்டும் இங்குப் பொருத்த முடையனவாக இல்லை.

இச்செப்பேட்டின் துணைகொண்டு இவன் ஆட்சிக்கு வந்த காலத்தினைக் கி.பி. 1024 என்று நிரணயிப்போமானால் விசயாலயன் கால முதற்கொண்டு வரும் பேராதிக்கச் சோழர்களின் காலம் முழுவதும் மாற்றப்பட வேண்டிய தொரு சூழ்நிலை உருவாகிறது. இதுபற்றிய காலக் கணிப்பை ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்கு வைத்தலே நன்று.

ராஜேந்திரனின் ஆட்சியில் ஏற்பட்ட கலகம்

ராஜேந்திரனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லா வளமும் பெற்று அமைதியாக வாழ்ந்த போதிலும் ஆங்காங்குச் சில கலகங்களும் தோன்றின. இதனை இவனது ஏழாமாண்டின் கீழையூர்க் (தஞ்சை மாவட்டம்) கல்வெட்டா லறியலாம்.

இவனது ஆட்சிக் காலத்தில் ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரில் ஒரு 'துரிதம்' (கலகம்) தோன்றியது.

அக்கிராமத்தில் கொலை, கொள்ளை, குழப்பம், அமைதி யின்மை யேற்பட்டதால் அவ்வூர் மக்களனைவரும் வெளியூர் சென்று குடியேறினர். இதனால், சட்டமும், அமைதியும் கெட்டுக் குழப்பமும் கொந்தளிப்பும் அரசோச்சின.

சம்சத்சர வாரியக் கூட்டம்

நத்தம் கல்வெட்டினைக் கொண்டு சம்சத்சர வாரியார் ராஜேந்திர சோழன் கட்டச் சாலையில் கூடினர் என்பதும், அக் கூட்டத்தில் கஞ்சாரன் ஐயன் சூரியன் என்னும் வகை செய்கின்ற கோட்டதிகாரியும் கலந்து கொண்டான் என்பதும் புலனாகின்றன.

நடு கல்

பண்டைத் தமிழகத்தின்கண் போர் வீரர்கள் போர்க் களத்தில் இறந்துபட்டால் அவர்களத நினைவாகக் கல் எடுத்து அதனை நட்டு வழிபடுதல் மரபாக இருந்தது. அதனை நடுகல் என்றும் வீரக்கல் என்றும் வழங்குவர். முதலாம் ராஜேந்திரனது ஆட்சிக் காலத்திலும் போர்க்களத்தின் கண் மாண்டு விட்ட வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபட்டனர். இதனை ஈரோடு மாவட்டம் கொடுமுடிக்கு அருகில் உள்ள மங்கலம் நொய்யல் ஆற்றங்கரைத் தோட்டத்தில் 'ஊராளி வேட்டுவன் அழகன் காளி அவன் இதில் பட்டான்' எனும் சொற்கள் பொறிக்கப்பட்ட நடுகல் காணப்படுதலால் அறியலாம்.

இதோ அக்கல்வெட்டு:

'ஸ்வஸ்தி ஸ்ரீ பூர்வதேசமும் கங்கையும்

கடாரமும் கொண்ட ஸ்ரீராஜேந்திர

சோழர்க்குச் செல்லாநின்ற யாண்டு

... ஊராளி வேட்டுவன் அழகன்

காளி அவன் இதில் பட்டான்'

இது போன்று இவனது காலத்திய நடுகற்கள் பல இன்று

காணப்படுகின்றன.

இறந்துபட்ட வீரன் ஒரு கையில் வாளும், மறு கையில் கேடயமும் தாங்கியப் போர்க் களத்தில் வீராவேசத்துடன் போர் புரியும் காட்சியும், அவனருகில் விளக்கு, சிமிழ் போன்ற பொருள்கள் வைக்கப்பட்டுள்ளமையும் போன்று கல்லில் செதுக்கி, அதன் பக்கத்தில் இன்ன போரில் இன்ன மன்னன் காலத்தின்கண் மாண்டு விட்ட வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபட்டனர். இதனைக் கோவை மாவட்டம் கொடுமுடிக் கருகில் வடிவுள்ளதில் வீர மரணம் எய்தினான் என்ற குறிப்புகளும் செதுக்கப்பட்டிருக்கும். இதனைப் போன்ற நடுகற்கள் செங்கம் பகுதியிலும், தருமபுரிப் பகுதியிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இறைவனுக்குக் கள் படைத்தல்

ராஜேந்திரன் தனது கங்கை வெற்றியின் விளைவாகக் கோலாரில் 'யோகேஸ்வரா' வுக்கும் 'யோகினி'க்கும் கோயில் எடுப்பித்து மத்யமபானம் (கள்) படைக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தான் என்பதனைக் கோலார் கோயில் கல்வெட்டாலறியலாம். கலிங்கத்துப் பரணியில் குறிக்கப் பெற்றுள்ள பைரவி வணக்கம் இதனைப் பின்பற்றியதா யிருத்தல் வேண்டும்.

கோத்திரப் பிரிவுகள்

சோழர் காலத்தில் பார்ப்பனருள் பல கோத்திரப் பிரிவுகள் இருந்தன. இதனை 'இவ்வூர் விஸ்வாமித்ரகோத்திரத்துத் திருவஸ்தம்ப சீத்திரத்துக் கொடுங்கை அதிராச்சரன் ஸ்ரீவத்ஸ கங்கபட்டன்'

'இந்நாட்டு முடிச் சோணாட்டு ஜநநாம சதுர்வேதி மங்கலத்து ஆத்ரேய ஹோத்திரத்து வைசானஸ ஸுத்திரத்துக் கேசவன் திருவரங்க பட்டன்' 'இவ்வூர் லோஹிதஹோத்திரத்துக் காத்யாயன சூத்திரத்துப் புலிப்புரத்து மஹாஸேனன் ஸ்ரீமாதவ

கிரமவித்தன்' என்னும் கரந்தைச் செப்பேட்டுப் பகுதிகளால் அறியலாம்.

நகரங்கள் உருவாக்கம்

அரியலூர் மாவட்டம் தீயனூருக்கு அருகேயுள்ள நாகமங்கலம் என்ற ஊரைத் தன் அரசியான வானவன்மாதேவியின் பெயரால் வானவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற பிரமதேயமாக உருவாக்கினான்.

இதனைப் போன்று செட்டித் திருக்கோணம், பெரிய திருக்கோணம் ஆகிய இரண்டு ஊர்களையும் மதுராந்தகபுரம் எனும் பெயரில் மாபெரும் வணிக நகராக உருவாக்கினான். அரியலூருக்கு அருகில் ஓடும் மருதையாறு ராஜேந்திர சோழனின் பெயரால் 'ராஜேந்திரசிங்கப் பேராறு' என அழைக்கப்பட்டது. இதில் இராஜேந்திர சோழன் கலிங்கு' என்ற தடுப்பணைக்கட்டு தச்சாரியன் சந்திரசேகரன் மேற்றளியான் சோழேந்திரசிங்கப் பெருந்தச்சன் என்பானால் கட்டப்பட்டது.

கரந்தைச் செப்பேட்டில் தானம் பெற்ற 1084 வைணவ அந்தணர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

ராஜேந்திரன் தன் தாயின் பெயரால் 'திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தை' ஏற்படுத்தி 51 ஊர்களை ஒரே ஊராக ஆக்கினான்.

1080 வைணவ அந்தணர்களுக்கு 1020-ல் நில தானம் செய்துள்ளான்.

ராஜராஜப் பெருமன்னன் நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு தேவாரத் தொகுப்பைச் செய்தது போன்று, ராஜேந்திரன் நாதமுனிகள் தொடர்பால் வைணவ இலக்கியங்களாகிய 'திவ்ய பிரபந்தத்தை'த் தொகுத்தான் என்பதனை ஏ.வி.சுப்ரமணிய ஐயர் சான்று காட்டி நிறுவியுள்ளார். (தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி பக்.177-178).

மதுராந்தகபுரம்: அரியலூர் மாவட்டத்திலுள்ள செட்டித்திருக்

கோணம் எனும் ஊர் ராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் 'மதுராந்தகபுரம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. இது ஒரு பெரிய வணிக நகராகவும் திகழ்ந்தது.

17

மதிப்பீடு

பு கழ்படைத்த இந்தியப் பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்றாகும். இப்பேரரசு தமிழகத்தின் கண் பன்னெடுங்காலம் நிலையான புகழுடன் விளங்கியதோடு, இந்தியா முழுமையிலும் தன் புலிக் கொடியினைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்தது. சோழர்களின் ஏகாதிபத்தியப் பேரரசினை நிறுவித் தமிழகத்தில் மட்டும் அன்றித் தக்காணத்திலும், கடல் கடந்த நாடுகளிலும் தன் வீரத்தினையும் வெற்றியினையும் நிலைநிறுத்திப் புகழ்க்கொடி உயர்த்தியவன் முதலாம் ராஜராஜ சோழனாவான்.

திறனும், திண்மையும் வாய்க்கப்பெற்ற இம் மாமன்னனின் மகனாகத் தோன்றிய ராஜேந்திரனும் தந்தையினும் மேம்பட்ட பெருவீரனாகவும், ஆட்சியாளனாகவும், நாடு பிடிப்பாளனாகவும் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் மட்டுமன்றி இந்திய வரலாற்றிலும் சிறப்பானதொரு இடத்தினைப் பெறுகிறான்.

தன் தந்தையிடமிருந்து பரந்துபட்ட, புகழ்மிக்கதொரு பேரரசினைப் பெற்ற ராஜேந்திரன், அதனைப் பேணிக்காத்ததோடு, மேலும் மேலும் பல வெற்றிகள் பெற்றுச் சோழப் பேரரசினை விரிவுப்படுத்தும் பணியில் பெருவெற்றி பெற்றான். ராஜராஜன் ஆட்சிக் காலத்திலேயே சோழப் பேரரசின் ஏகாதிபத்தியம் வெளிநாடுகளில் நிறுவப்பட்ட போதிலும், ராஜேந்திரனது ஆட்சிக் காலத்தில்தான் சோழரது ஏகாதிபத்தியம் திக் கெட்டிலும் நிலைநாட்டப்பட்டது.

ராஜராஜனின் ஆட்சிக் காலத்திலேயே ராஜேந்திரன் படைத் தலைமையேற்று வெற்றிகள் பல படைத்தவனாதலின், தான் அரச பதவியேற்கு முன்பே போர்ப் பயிற்சியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தான் என்பதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சோழப் பேரரசின் பகைவர்களான சேர, பாண்டியரையும், மேலைச் சாளுக்கியரையும் வென்றடிமைப்படுத்திய ராஜேந்திரன் மாபெரும் வீரன் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மாபெரும் வீரனாம் கரிகாலனது கால் வழியினான இவனும், தனது ஆற்றல் மிகு முன்னோனைப் போன்று வடநாடு நோக்கிப் படையெடுத்துப் பீகார், வங்காள நாட்டு வேந்தர்களை வென்று, கங்கை நீரினைக் கொணர்ந்து, செயற்கறிய செயல் புரிந்ததால் இவனை வியத்தகு வெற்றி வீரன் என்று வரலாறு சிறப்பிக்கின்றது. தமிழகம் முழுவதிலும் தனிப்புகழ் கொண்டு தக்காணத்திலும் தனது பெருவீரத்தினை நிலை நாட்டி, அதற்கப்பால் வடநாட்டிலும் தனது பெருவீரத்தினை நிலை நிறுத்திய இவன் தமிழகப் பெருவேந்தர்களுள் நிலையானதொரு தலையாய இடத்தைப் பெறுகிறான்.

தரைப்படை கொண்டு தன்னிகரற்ற வெற்றிகள் பல பெற்ற ராஜேந்திரன், தனது கப்பற் படையினைச் செப்பம் செய்து, ஈழ நாட்டின் மீது படையெடுத்து, ஈழநாடு முழுவதையும் தன்னாட்சியுடன் இணைத்துக் கொண்ட நிகழ்ச்சி இவனது கடல் கடந்த வெற்றிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அலைகடல் நடுவுள் பல கலம் செலுத்திக் கடார நாட்டின் மீது இராணுவத் தாக்குதல் நடத்திப் பெருவெற்றி பெற்றுத் தனது கடல் கடந்த பேரரசினை விரிவுப்படுத்த முனைந்த ராஜேந்திரன், இந்திய வரலாற்றில் எவரும் செய்யாத சிறப்பான செயல் செய்த செயல் வீரனாகும் என்பது வரலாறு காட்டும் பேருண்மையாகும். இந்திய வரலாற்றிலேயே கடல் கடந்த பேரரசினை நிறுவுவதில் நாட்டம் கொண்டு, பெருவெற்றி

பெற்றவன் ராஜேந்திரனே யாவன் என்பது பெருமைக்குரியதொன்றாகும். இதனால், இவன் தலைசிறந்த கடலாண்ட காவலன் என்பதும் அறியத்தக்கதாகும்

காவிரி நாடனான இவன் கங்கை நாடனான மகிபாலனையும், சாளுக்கியச் சிங்கமாம் சய சிங்கனையும், சிங்கள வேந்தனாம் ஐந்தாம் மகிந்தனையும், கடாரத்துக் காவலனாம் விசயோத்துங்க வருமனையும் வென்றடக்கியமையின் வீரத்தின் இருப்பிடமாய், வெற்றியின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து, சோழ ஏகாதிபத்தியத்தைப் பாரெங்கும் பரப்பிய பெருமைக்குரியவனாவன் என்பது பெறப்படுகின்றது.

வட இந்திய மன்னர்கள் தென்னாட்டில் வெற்றித் திருவுலா (திக்விசயம்) நிகழ்த்துவதே வழக்கம் என்ற மரபினை மாற்றித் தமிழ் நாட்டானும் வடநாட்டில் வெற்றித்திருவுலா நடத்த முடியுமென்ற பேருண்மையைச் செயல்படுத்தி' காட்டிய பெருவீரன் ராஜேந்திரன், தமிழரின் மானங்காத்த மாவீரன் ஆவன் என்பது உறுதி.

மலாயா நாட்டைச் சுற்றிலும் சுமத்திரா நாட்டைச் சுற்றிலுமுள்ள நாடுகளை வென்று, ஆங்குச் சோழர்தம் புலிக்கொடியினைப் பட்டொளி வீசிப் பறக்க விட்டுத் தமிழர்தம் புகழினை நிலை நாட்டிவிட்டு வந்த இவன், தன் தந்தையினும் சிறந்த வெற்றியாளன் என்பதும், ஏகாதிபத்தியவாதி என்பதும் நாடறிந்த உண்மையாகும். கடல் கடந்த வெற்றிகளின் மூலம் புகழ்க்கடலின் கரைகண்ட காவலனாம் ராஜேந்திரன் தனது வலிமையினால் இங்கிலாந்து நாட்டினைப் போன்று கடலாதிக்கத்தில் முதன்மை பெற்று விளங்கினான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவனது ஏகாதிபத்தியச் சிறப்பினைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே, காம்போச நாட்டுக் காவலனாம் சூரியவர்மன், ராஜேந்தரனின் நட்பை நாடினான். இவன் சீன நாட்டிற்குத் தூதுக் குழுவினை அனுப்பிச் சீனாவுடன் நட்புறவு கொண்டிருந்தான்.

எனவே, இவன் வாளாண்மையினாலும், தோளாண்மையினாலும் மட்டுமன்றித் தனது அன்பினாலும் கடல் கடந்த நாடுகளுடன் நல்லுறவு கொண்டு, சோழப் பேரரசின் புகழினையும், பெருமையினையும், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருக்கினான் என்பது புலனாகும்.

மாபெரும் வீரனாகவும், அமைதியைப் பேணுபவனாகவும் திகழ்ந்த ராஜேந்திரன், நாட்டு மக்கள் நலங்கருதி நாடாண்ட நல்லாட்சியாளனாகவும் தமிழக வரலாற்றில் சிறப்பிக்கப்படுகிறான். வாழையடி வாழையென வழிவழி நிலவி வந்த சோழர் ஆட்சி முறையினைப் பொன்னே போல் போற்றி, ஏற்றமிக்க மாற்றங்களையும் செய்த நல்லாட்சி யாளனாகவும் இவன் திகழ்கிறான்.

வீரனாகவும், ஆட்சியாளனாகவும் சிறந்து விளங்கிய இவன், பல்கலைகளையும் பேணிக் காக்கும் கலைக் காவலனாகவும் புகழ் பெற்றுள்ளான். கங்கைகொண்ட சோழ புரத்தில் (திருச்சி மாவட்டம்) கம்பீரமாகத் தோற்றமளிக்கும் கங்கை கொண்ட சோளேச்சரமும் அதனுள் காட்சி தரும் சிற்பங்களும் இவனது கலை ஆர்வத்தினைப் பறைசாற்றிக் கொண்டுள்ளன. ராஜேந்திரனது ஆட்சிக் காலம் சிற்பக் கலையின் உச்ச நிலையைக் கண்ணுற்ற காலமெனக் கூறுதல் பொருத்தமே.

கட்டிடக்கலை, உலோக வார்ப்புக்கலை, இசைக்கலை போன்ற கலைகளைப் பேணிக் காப்போனாகவும் இவன் அறிஞர்களால் போற்றப் பெறுகிறான்.

பொன்னிக் கரை கண்டு, வளம் பல கண்ட பூபதியாம் கரிகால் பெருவளத்தானின் கால்வழியினான இவனும் நாட்டின் வளம் பெருக்க, உணவில்லாமையைப் போக்க, எண்ணிறந்த நீர்ப் பாசனத் திட்டங்களைத் தீட்டினான். கங்கை கொண்ட சோழபுரத்தில் நீல நெடுங்கடலோ! செய் கடலோ!! எனக் கண்டோர் வியக்கும் வண்ணம் அமைக்கப்பெற்ற 'சோழ கங்கம்' எனும் பேரேரி இவனது அற்புதப் படைப்பாகும்.

இந்தியாவிலேயே இதுவரை இதனைப் போன்ற பிரமாண்டமான ஏரி வெட்டப்படவில்லை என்பதனால் இவன் மக்களின் நல்வாழ்வில் எத்துணை நாட்டம் கொண்டு, வறுமையையும், வெறுமையையும் நாட்டைவிட்டு ஒட்டும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான் என்பது புலப்படும். இவனது காலத்தில் வளமையும், செழுமையும் சிறந்து பொங்கின.

கலையார்வம் கொண்டு கங்கை கொண்ட சோளேச்சரத்தையும், மதுரையம்பதியின் கண் எழில்மிக்க மாளிகையையும் எடுப்பித்த, கலைப்பித்தனாம் ராஜேந்திரன், இலக்கிய ஆர்வமும் கொண்டிருந்தான் என்பது போற்றுதற்குரியதாகும். வடநாடுப் போச மன்னனைப் போன்றும், ஹர்ஷ மன்னனைப் போன்றும் கற்றறிந்த மேதைகளைப் போற்றுபவனாகவும், தானே இலக்கியத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டவனாகவும், சிறந்து விளங்கியவனாதலின் 'பண்டித சோழன்' எனவும் சிறப்பிக்கப்படுகிறான்.

உயர்நிலைக் கல்விக்கெனப் பல வடமொழி வேதக் கல்லூரிகளை நிறுவி மாணவர்களுக்கு இலவச உணவும், கல்வியும் அளித்த ராஜேந்திரன் பண்டைய மன்னர்களுள் தலைசிறந்த கல்வியாளனாகவும் விளங்குகிறான். இவனது ஆட்சிக் காலமும் வடமொழி வளர்ச்சியின் பொற்காலமாகத் திகழ்ந்தது எனக் கூறுதல் பொருத்த முடையதே.

கல்வி வளர்ச்சிக்கும், பார்ப்பனர்களுக்கும், திருக்கோயில்களுக்கும் வறியவருக்கும் வரையாது வாரி வாரி வழங்கிய வள்ளலாகத் திகழும் இவன் சிறந்த கொடையாளன் எனவும் புகழ் பெற்றுள்ளான். ஏறத்தாழ இவன் ஆயிரத்து எழுபத்து மூன்று பேருக்குக் கொடையளித்துள்ளான் என்று கரந்தைச் செப்பேடும் புகழ்வதால் இவன் பாரியைப் போன்ற கொடை வள்ளலாகவும் மதிக்கப் பெறுகிறான் என்பது

போற்றுதற்குரியதாகும்.

இம்மன்னன் நன்கொடையளித்த செய்தியினைச் செப்பேட்டில் எழுதி வைத்ததால் நாட்டில் செம்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது என்று புலவர்கள் இவனைப் புகழ்ந்துள்ளதால் இவனது கொடைச் சிறப்பு நன்கு விளங்கும்.

மாபெரும் நாடு பிடிப்பாளனாகப் போற்றப்பெறும் ராஜேந்திரன் ஆன்மீக வாழ்விலும் ஆர்வம் மிகக் கொண்டிருந்தான் என்பது குறிப்பிடக் தக்கதாகும். சிவநேயச் செல்வனாக விளங்கிய இவன், ஈசன் கழல் ஏத்தும் செல்வமே செல்வமென உணர்ந்து, சிவாலயங்கள் பல எழுப்பிச் சைவ சமய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிச் சைவ சமய வரலாற்றிலும் அழியாப் புகழினைப் பெறுகிறான்.

வடநாட்டின் கங்கைப் பகுதியிலிருந்து சைவ சமய ஆச்சாரியார்களை அழைத்து வந்து, தமிழகத்தில் குடியேற்றிப் பல்வேறிடங்களில் நிலவிவந்த சைவ சமயத்தினை ஒன்றுபடுத்திய பெருமை இவனையே சாரும். இதன் விளைவாகவே 'சைவ சித்தாந்தம்' தமிழகத்தில் தோன்றியிருக்கக்கூடுமென அறிஞர் பலர் எண்ணுகின்றனர்.

இவ்விதம் ஒல்லும் வகையெல்லாம் சைவ சமயத்திற்குத் தொண்டு செய்து, சமய வாழ்வு நடத்திய ராஜேந்திரனைப் புத்தமதம் தழைத்தோங்க அருந்தொண்டாற்றிய மாமன்னன் அசோகனுடனும், கிறித்தவ சமயத்தின் வளர்ச்சிக்கு அயர்ச்சியின்றிப் பாடுபட்ட கான்ஸ்டன்டைனுடனும் ஒப்பிடுதல் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இந்திய மண்ணில் பிறந்து இந்தியாவில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் அனைவரும் பெரும்பாலும் சமயப் பொறை கொண்டவர்களாகவே காணப்படுன்றனர். இதனை இந்திய மண்ணுக்குரிய பெருமையெனக் கூறுதலும் மிகையாகாது. ராஜேந்திரனும் சிவநேயச் செல்வனாக விளங்கிய போதிலும் பிற

சமயங்களையும் போற்றினான்; நல்லாதரவு தந்தான்.

சமரச மதக் கொள்கையென்னும் பரந்த கொள்கையைப் பின்பற்றிய இவன் மாமன்னன் அசோகனுக்கும், மொகலாயப் பெருமன்னன் அக்பருக்கும், பாரசீகப் பெருமன்னன் சைரசுக்கும் ஒப்பு நோக்கத்தக்கவனாக வரலாற்றில் புகழ் பெற்றுள்ளான். வைணவ ஆலயங்களுக்கும், புத்த விகாரைகளுக்கும் இவன் நல்லாதரவு நல்கினான் என்பதும் ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

தனது கங்கைப் படையெழுச்சியின் பயனாக வங்க மாநிலத்தில் தமிழர் நாகரீகத்தையும், கடாரப் படையெழுச்சியின் விளைவாகக் கடல் கடந்த நாடுகளில் தமிழர் பண்பாட்டினையும், மதத்தினையும், கலைகளையும் பரவச் செய்த ராஜேந்திரன் தமிழ்நாட்டிற்கும் பிற நாட்டிற்கும் இடையே பண்பாட்டுப் பாலம் அமைத்த பண்பாடு மிக்கவன் என்பது குறிப்பிடத்தக்கவனாவான். இதனால், தமிழர் நாகரீகமும், பண்பாடும் கடல் கடந்த நாடுகளிலும் பரவ வாய்ப்பேற்பட்டது.

பேராசிரியர் திரு. என்.சுப்பிரமணியன் அவர்கள் 'ராஜேந்திரனது கங்கைப் படையெழுச்சி இருவழிப் பண்பாட்டுப் போக்கில் முடிந்ததெனக் கூறலாம் என்றும்' வங்கச் சைவ மரபு தமிழ் நாட்டில் புகுந்தது, இவற்றுள் ஒன்றாகுமென்றும், இதன் பயனாகத் தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தம் தோன்றியிருக்கக் கூடுமென்றும், கருத்துத் தெரிவிக்கு அளவிற்கு இவன் பண்பாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பணி புரிந்தான் என்பது புலனாகும்.

ஏறத்தாழ நூற்று எழுபத்தைந்தாண்டு காலமாக (விசயாலய சோழன் கி.பி. 850 ராஜேந்திரனது புதிய தலைநகர் நிறுவப்பட்டது கி.பி. 1024) விசயாலய சோழர் குடியின் தலைநகராய்த் திகழ்ந்த தஞ்சையினை விடுத்துத் தஞ்சையை விடப் பேரரசின் நடுப்பகுதியில் அமைந்துள்ள கங்கை கொண்ட சோழபுரத்திற்குத் தனது தலைநகரினை மாற்றிய ராஜேந்திரன்

நுண்ணிய அரசியல் திறன் மிக்கவன் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

முகமது பின் துக்ளக் தனது தலைநகரினைத் தில்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு மாற்றித் தோல்வி கண்டான். ஆனால், இக்காவலனமைத்த புதிய தலைநகரோ, ஏறத்தாழ இருநூற்று முப்பத்து மூன்றாண்டு காலம் (சோழப் பேரரசு அழியும் வரை) சோழப் பெருமன்னர்களின் தலைநகராகத் தொடர்ந்து புகழ் பெற்றிருந்தது, ராஜேந்திரனுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். இதனால், இவனது உய்த்துணரும் திறனை நாம் நன்கறியலாம்.

இவன் தன் மைந்தனாகிய ராஜாதிராஜனைத் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே (கி.பி. 1018) இளங்கோ வாக்கி ஆட்சிப்பொறுப்பில் ஈடுபடுத்தித்தனக்குதவியாக வைத்துக் கொண்டமை, இவன் அரசியலில் நுண்மாண் நுழைபுலம் மிக்கோன் என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. பாண்டிய நாட்டினை வெற்றி கொண்டு ஆங்குத் தன் மகனை அரசப் பிரதிநிதியாக (Viceroy) நியமித்து, அவனுக்குச் சாடவர்மன் சுந்தர சோழ பாண்டியன் எனப் பெயரிட்டுச் சேரநாட்டு ஆட்சிப் பொறுப்பினையும் அவனிடம் ஒப்படைத்துச் சோழர் வரலாற்றில் புதுமையான புதுநெறி காட்டிய புகழ் மிக்கோனாகவும் இக்கோமான் விளங்குகிறான். இச்செயலால் இவன் தன் பின்னோருக்கு வழிகாட்டியாகவும், கலங்கரை விளக்கமாகவும் அமைந்துள்ளான்.

திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் பல செய்த இவன், திருக்கோயிலமைப்பு வரலாற்றிலும், பிரதான கோயிலுக் கருகில் அம்மனுக்குத் தனிக்கோயில் அமைக்கும் புதுமையைப் புகுத்தித் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெறுகிறான். கங்கை கொண்ட சோளேச்சரத்திலுள்ள திருக்காமக்கோட்டம் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

கலைத்துறையில் புதுமையைக் கூட்டிய இவனது புதுமைக்

கொள்கையும் பிற்காலத்தில் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. இவன் சீன நாட்டுடனும், காபோச நாட்டுடனும் கொண்ட நல்லுறவு இவனது பின்னோர்களாலும் பின்பற்றப்பட்டதால், இவன் சோழர் வரலாற்றில் தனது கூர்ந்த மதியால் பல புதுமையைப் புகுத்திய புரட்சியாளன் என்பதையும் அறியலாம்.

வலிமைமிக்க மேலைச் சாளுக்கியரை வெல்லும் பொருட்டுத் தன் மகளாகிய அம்மங்கா தேவியைக் கீழைச்சாளுக்கிய ராஜராஜ நரேந்திரனுக்கு மணம் செய்வித்துத் தன் துணை வலிமையைப் பெருக்கித் தன் தந்தையின் அடிச்சுவட்டில் பீடுநடை போட்டவண்ணம் நம் ராஜேந்திரனே யாவான்.

ஒரு சிறந்த மன்னனுக்குத் தேவையான அத்துணை உயர் பண்புகளும் வாய்க்கப்பெற்றுச் சோழர்குல மாமணியாய்த் திகழ்ந்த ராஜேந்திரன், சோழப் பெருமன்னனும் தன் தந்தையுமான முதலம் ராஜராஜ சோழனுக்கு இணையான, ஏன்? மேம்பட்ட புகழினையும் பெற்றத் தமிழகத்தின் தலைசிறந்த மன்னனாய்த் திகழ்கிறான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மன்னன் என்ற முறையிலே தன் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் புகழ்பெற்ற இவன், தன் தந்தைக்குப் பெருமை தேடித்தரத் தக்க வகையில் ஈடு இணையற்ற சாதனைகள் பல புரிந்துள்ளான்.

தந்தை போற்றும் தனயனாக விளங்கிய இவன் தன் மனைவிகளுக் கேற்ற அன்பு மணாளனாகவும், தன் மக்களை நல்வழிப்படுத்தி, நல்லாட்சியாளர்களாகவும், பெருவீரர்களாகவும் உருவாக்கிவிட்ட ஒப்பற்ற தந்தையாகவும் சிறப்பிக்கப்படுகிறான். எனவே, இவன் மகன் என்ற முறையிலும், மணாளன் என்ற முறையிலும், தந்தை என்ற முறையிலும், வீரன் என்ற முறையிலும், மன்னன் என்ற முறையிலும், ஆட்சியாளன் என்ற முறையிலும், பக்தன் என்ற முறையிலும் தன் கடமைகளைக் குறைவறச் செய்து முடித்தவன் என்பதனை அறியலாம்.

செங்கோல் முறையினைச் செம்மையாகச் செலுத்திய இம்

மாமன்னன் பல வேந்தர்களுடன் ஒப்புமை கூறத் தக்க சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டவனாவான்.

ஒவ்வொரு மன்னனும் தனக்கெனச் சில தனித் தன்மைகளைப் பெற்றிருந்த போதிலும், பல அம்சங்களில் வேறுசில மன்னர்களுடன் ஒப்புமை கூறத்தக்க தகுதி படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதனைப் போன்றே ராஜேந்தரனும் சில தனித்த ஒப்புயர்வற்ற பண்புகளைப் பெற்றிருந்தான்; பிறருடன் ஒப்புமை கூறத்தக்க சிறப்பான பண்புகளையும் கொண்டு விளங்கினான். எனவே, இவனை ஈண்டு வேறு சில மன்னருடன் ஒப்பு நோக்கிச் சீர்தூக்கிப் பார்ப்போம்.

ஹர்ஷன்

வடநாட்டு மாவீரனும், பெருவேந்தனுமான ஹர்ஷனும், தென்னாட்டு மாவீரனும், மா மன்னனுமான ராஜேந்திரனும் சில அம்சங்களில் வேறுபாடு கொண்டுள்ள போதிலும் சில அம்சங்களில் ஒற்றுமை கொண்டுள்ளனர். இவ்விருவரிடையே காணப்பெறும் ஒப்புமையான பண்புகள் பற்றி ஈண்டுச் சிறிதாய்வோம்.

கி.மு. 606 முதல் கி.மு. 647 முடிய வடநாட்டின் பெரு வேந்தனாக மிக்க புகழுடன் ஆட்சி புரிந்தவன் ஹர்ஷன். இவன் வடநாடு முழுமையும் வென்று, வடநாட்டில் தனக்கு நிகர் ஒருவருமில்லையென வெற்றிக் கொடி நாட்டிய மாவீரனாவான். இவன் சிறந்த வெற்றியாளனாகவும் திகழ்ந்தவன்; இடைவிடாது போர் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவன். ராஜேந்திர சோழனும் தென்னிந்தியாவில் வெற்றிக் கொடி நாட்டி, வட இந்தியாவிலும் வெற்றிக் கொடியேற்றிய மாவீரனாவான். சென்றவிடமெல்லாம் வெற்றி ஒன்றனையே கண்ட மாபெரும் வெற்றியாளனாவான். எனவே, வீரத்திலும் (ஹர்ஷன் இரண்டாம் புலிகேசியிடம் தோல்வி பெற்ற போதிலும்) இருபெரு மன்னர்களும் புகழ்பெற்று விளங்கினர்.

ஹர்ஷன் புத்த சமயத்தினை ஆதரித்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டான்; இரண்டாம் அசோகன் எனவும் அழைக்கப்பட்டான்; புத்தமத வரலாற்றிலும் சிறப்பிடம் சிறப்பான இடத்தினை பெறுகிறான். ராஜேந்திரனும் சிவஞானச் செல்வனாக விளங்கியதுடன் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும்பணியாற் றியுள்ளான். வங்க நாட்டினின்றும் சைவ சமயாச்சாரியார் களையழைத்து வந்து சைவ சமயம் தழைக்கத்தக்க பணி புரிந்துள்ளான். எனவே, இருவரும் சீரிய முறையில் சமயத்தொண்டு புரிந்தனர் என்பது தெளிவு.

ஹர்ஷன் தனது ஆட்சிக்காலத்தில் சமயப்பணி ஆற்றியதோடு கலைப் பணியும் ஆற்றியுள்ளான். அவனது காலத்தில் அழகிய, கலைச் சிறப்புமிக்க புத்தர் படிமங்கள் வார்க்கப்பெற்றன. புத்த விகாரைகள் அமைக்கவும் ஆதரவு நல்கினான். ராஜேந்திரனும் சமயப் பணியுடன் கலைப்பணியும் புரிந்தான். நுண்ணிய வேலைப்பாடு மிக்க நடராஜர் படிமங்கள் பல வார்க்கப்பெற்றன. திருக்கோயில்கள் கட்டப்பட்டன. எனவே, இருவரும் கலையார்வம் கொண்டு கலைப்பணியாற்றினர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி ஆகும்.

ஹர்ஷன் சிறந்த கொடையாளனாகவும் வரலாற்றில் சிறப்பிக்கப் படுகிறான். புத்த மாநாடு கூட்டிப் புத்தமத சந்நியாசிகளுக்கும், பார்ப்பனர்களுக்கும், சமணத் துறவிகளுக்கும் பொருளை அள்ளிக் கொடுத்தான்; வரையாது வழங்கும் வள்ளல் எனவும் போற்றப்படுகிறான். இவன் கொடை பெரும்பாலும் சமயம் தழுவிய கொடையாகு என்பதை யாவருமறிவர்.

ராஜேந்திரனும் கொடையளிப்பதில் வல்லவனாக விளங்கினான். கல்விப்பணிகளுக்கும், வள்ளலெனப் பெயர் பெற்றான். இவன் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்குக் கொடையளித்ததாக இவனது கரந்தைச் செப்பேடு செப்புகிறது. எனவே, இவ்விரு வேந்தர்களும் கொடை வள்ளல்களாகத்

திகழ்ந்தனர் என அறியலாம்.

புத்த மதத்தினைப் போற்றி வளர்த்து, அதன் வளர்ச்சிக்குப் பெருந்துணைபுரிந்த ஹர்ஷன், புறச்சமயத்தார் அனைவருக்கும் வழிபாட்டுரிமை அளித்துச் சமயப்பொறை கொண்டு சிப்புற்றான். ராஜேந்திரனும் சிவமணியாகத் திகழ்ந்த போதிலும், சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய போதிலும் பல்வகை சமயத்தாரையும் ஆதரித்து அவர்கள் சமயங்களுக்கும் ஆக்கம் தந்து, சமயத் துறையில் சமரசக் கொள்கையைப் பின்பற்றினான். 'எம்மதமும் சம்மதம்' என்னும் பொன்னான கொள்கையினை' கண்ணாக' கருதிய இவ்விருவரும் சமயக் காழ்ப்பில்லாதவராவர் என்பது போற்றத்தக்கதாகும்.

பகைவர்களைப் போர்க்களத்தில் வென்று, நல்லாட்சி புரிந்து அமைதிப் பணியும் மேற்கொண்ட ஹர்ஷன் அன்னிய நாட்டினருடன் நல்லுறவு கொள்ளவும் நாட்டம் கொண்டான். எனவே, சீன நாட்டினக்குத் தூதுக் குழு வொன்றனை அனுப்பி வைத்துச் சீனப் பேரரசரிடம் நட்புறவு வைத்துக் கொண்டான் பண்பு மிக்க ஹர்ஷன். சோழர்குல விளக்கான ராஜேந்திரனும் அண்டை நாட்டுடன் நட்புக் கொண்டதோடு நில்லாது, சீன நாட்டுடன் நட்பு' கொள்ளும் தணியா வேட்கைகொண்டு சீனப் பெருமன்னனுக்குத் தூதுக் குழுவினை அனுப்பி வைத்தான்.

இதனால், சீன-சோழ நல்லுறவு நீடித்தது. இன்று நாம் சீனாவுடன் நட்புறவு கொள்ளவில்லை என்றாலும், அன்றே ஹர்ஷனும், ராஜேந்திரனும் சீன நாட்டுடன் நல்லுறவு கொண்டிருந்தனர் என்பது பெருமைக்குரியதொன்றாகும்.

மா மன்னனாகிய ஹர்ஷன், கல்வி கேள்விகளிற் சிறந்த அறிஞர் பெருமக்களை நன்கு ஆதரித்துப் போற்றிப் பாதுகாத்தான். இதனால், வடமொழி இலக்கியம் பெரிதும் வளர்ச்சி பெற்றது. அறிஞர்களைப் பேணிக்காத்த ஹர்ஷன் தானே வட மொழியில் சிறந்த புலமையும் பெற்றிருந்தான் என்பது பொன் மலர் நாற்றம் பெற்றது போன்றதாகும்.

கன்னித் தமிழனாகிய ராஜேந்திரனும் ஆன்ற விந்தடங்கிய சான்றோரையும், அறிஞர் பெருமக்களையும் பேணிப் பாதுகாத்தான். அதனுடன் நில்லாது தானும் தமிழ் மொழியிலும், வட மொழியிலும் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தான்; 'பண்டிதசோழன்' எனும் சிறப்புப் பெயராலும் சிறப்பிக்கப்படுகிறான்.

நாடாண்ட காவலர்களான இவர்கள் அறிஞர்களாகவும் கல்விமான்களாகவும், கற்றோரைப் போற்றும் பெற்றியுடையோராகவும் வரலாற்றில் புகழ் பெற்றுள்ளமை எண்ணியெண்ணி மகிழத்தக்கதாகும். ராஜேந்திரனது காலத்தில் வடமொழி இலக்கியங்கள் வளர்ச்சிபெற்று வடமொழி சிறப்பிடம் பெற்றமையும் ஈண்டு அறியத்தக்கதாகும்.

மாபெரும் வீரனாகவும், வெற்றியாளனாகவும் திகழ்ந்த ஹர்ஷன் மாமன்னன் போற்றுதற்குரிய ஆட்சியாளனாகவும் (Administrator) விளங்கினான்; நாட்டு மக்களின் நலனே தன்னலனெனக் கொண்டு நல்லாட்சி முறையினை நிறுவி நற்புகழ் பெற்றான்; நாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று மக்கள் நிலையினைப் பார்வையிட்டான்; அவர்களின் குறைகளைக் களைந்தான். வீரமும். வெற்றியும் தன்னிரு கண்களாகக் கொண்ட ராஜேந்திரனும் சிறந்த ஆட்சியாளனாக விளங்கினான்; நாட்டில் நல்லாட்சி முறையினை நிறுவி, நாட்டை வலம் வந்து, நல்வினைப் போக்கினான். மக்கள் நலன் கருதி ஓயாதுழைத்து நல்லாட்சியாளன் என்னும் புகழினை இவனும் கொண்டான். இவ்விருவரும் நல்லாட்சியாளர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தென்னாட்டு மா மன்னனும் ராஜேந்திரனும், வடநாட்டுப் பெருமன்னனும் ஹர்ஷனும் தமக்குள் பல அம்சங்களில் ஒப்புமையான நற்பண்புகளைப் பெற்றிருத்தலின் இருவரையும் ஒப்புமைபடுத்திக் கூறுதல் பொருத்தமே. பல செயல்களில் ராஜேந்திரசோழன் வடநாட்டு ஹர்ஷனை ஒத்திருப்பதால்

இவனைத் 'தென்னாட்டின் ஹர்ஷன்' எனக் கூறுதல் சாலப் பொருத்தமாகும். இவர்களுக்கிடையே சில தனித் திறமைகளும், வேறுபாடுகளும் உள்ளன என்பதனையும் நாம் இங்கு உணர வேண்டும்.

உலக வரலாற்றின் பொன்னேடுகளை நாம் புரட்டிப் பார்க்கின்ற காலை ராஜேந்திரனையொத்த வீரமும், வெற்றியும், ஏகாதிபத்தியக் கொள்கையும், ஆட்சித்திறனும் கொண்ட மன்னர்கள் பலர் இருப்பதை யாவரும் உணர்வர். இவ்வியக்கத்தகு வேந்தர்களுள் பாரசீகப் பெருமன்னாம் சைரஸ் ஒருவனாகும். பாரசீக வரலாற்றின் அணியெனத்திகழும் மகா சைரசும் ராஜேந்திரசோழனும் ஒப்புமை நோக்கத்தக்க சிறப்பினைப் பெற்றவராவர்.

மகாசைரசு பாரசீக நாட்டின் அகமேனிய வம்சத்தின் புகழ் பூத்த மாமன்னராவார். இவர் வியக்கத்தக்க வீரமும், பெறற்கரிய வெற்றிகளும், நல்லாட்சித் திறனும், சமயப் பொறையுணர்வும் மிக்கவராவர். சோழப் பெருமன்னனாம் ராஜேந்திரனும் மகாசைரசைப் போன்று வீரமும், வெற்றியும், நல்லாட்சித் திறனும், சமயப்பொறை யுணர்வும் கொண்ட ஆற்றல் மறவர் ஆதலின், ராஜேந்திரனை இந்தியாவின் மகா சைரஸ் எனக் கூறலாம். வீர வாழ்வு வாழ்ந்த இவ்விரு மன்னர்களும் செயற்கரிய செயல் செய்த வீரராவர் என்பதைனை வரலாறு என்றென்றும் உணர்த்திக் கொண்டேயிருக்கு என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கடல் கடந்த வெற்றிகளிலும் மகா சைரஸ் மன்னனும் ராஜேந்திரசோழனும் சிறந்து விளங்கினர் என்பது ஈண்டு உணரத்தக்கதாகும்.

சோழப்பெருநாட்டின் சீர்மிகு மன்னனாகத் திகழ்ந்து, நாற்றிசையும் புகழ் பரப்பிய முதலாம் ராஜராஜனின் வளமான ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட அவன் மகனான முதலாம் ராஜேந்திர சோழனின் ஆட்சிச் சிறப்பினை, மகேந்திர வருமப்பல்லவனின்

ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட அவனது கீர்த்திமிகு மைந்தனாம் முதலாம் நரசிம்மவர்மப் பல்லவனின் சீர்மிகு ஆட்சியுடனும், முதலாம் சந்திர குப்தரின் ஆட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட சமுத்திரகுப்தரின் மேன்மை மிக்க ஆட்சியுடனும், கிரேக்க நாட்டு பிளிப்பு (Philip) மன்னனின் ஆட்சிக்குப் பின்பு ஏற்பட்ட மாவீரன் அலெக்சாந்தரின் சீரிய ஆட்சியுடனும் ஒப்பிட்டு மகிழலாம்.

நரசிம்மவர்மனும், சமுத்திர குப்தனும், அலெக்சாந்தரும் தம் தந்தையினும் மேம்பட்ட வெற்றியாளர்களாகவும், புகழ்பூத்த மன்னர்களாகவும் விளங்கியதைப் போன்று, ராஜேந்திரனும் தன் தந்தையினும் மேம்பட்ட வீரனாகவும், மன்னனாகவும் விளங்கினான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவனது காலத்தில்தான் சோழப் பேரரசின் புகழும், பரப்பளவும் உச்ச நிலையில் இருந்தன என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இவனது ஆட்சிக்காலத்தில் சோழப் பெருநாட்டின் ஆட்சி, சென்னை மாநிலம், மைசூர் மாநிலம், ஒரிசா மாநிலத்தின் தென்பகுதி, நைசாம் அரசின் பெரும்பகுதி, இலங்கை, மலேயா, சுமத்திரா ஆகிய நாடுகளில் பரவியதோடு இவனது மேலாண்மை கிழக்கிந்தியத் தீவுகளிலும் நிலை நாட்டப் பெற்றிருந்தது.

தமிழக வரலாற்றில் மட்டுமன்றி இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலும், ஏன்? உலக வரலாற்றிலும் கூட ராஜேந்திர சோழனைப் போன்ற கடல் கடந்த வெற்றிகள் பெற்ற மன்னன் ஒருவனும் இல்லை என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். ராஜேந்திரனைப் பெற்றெடுத்ததால் புகழ் பெற்றது இவ்வுலகு. இவ்வுலக மாவீரனைப் பற்றிய தெளிவான, விரிவான வரலாறு அறியப்படாமை வருந்துதற்குரியதாகும். இச்சீர்மிகு வேந்தனைப் பற்றி மேலும் பல விவரங்கள் (செய்திகள்) கிடைக்கப் பெறாமை பெருங்குறையேயாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து, இந்து மன்னர்களைப் பற்றிய தெளிவான வீர வரலாறுகள் கிடைக்கப்பெறவில்லை.

இவர்களுள் சிவாஜி, கிருட்டினதேவராயர் போன்ற இந்து மன்னர்கள் காலத்தில், வருகைபுரிந்த வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளைக் கொண்டு ஓரளவு இவர்களது வரலாறு குறிக்கப் பெறுகிறது. ஆனால், அந்தோ! ராஜராஜன், ராஜேந்திரன் போன்றோர் காலத்தில் எந்தப் பயணியும் வருகை தந்து விரிவான குறிப்புகள் எழுதவில்லை.

'ராஜேந்திரன் ஆட்சியின் இறுதிக் காலம் விஜயாலய சோழ வரலாற்றில் சிறந்த காலகட்டம். பேரரசு பெரிதும் பரந்திருந்தது. போர்ப் படையும் தன் பெருமையில் கொடுமுடியில் நின்றது' என்று வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாஸ்திரி குறிப்பிட்டிருப்பது முதலாம் ராஜேந்திர சோழனின் சீர் மிகு ஆட்சிக்கு ஒரு நற்சான்றிதழ்.

கலை வளர்ச்சியைப் பொறுத்தவரை மேல் நாட்டுக் கலை வல்லுனரான ஃபெர்குசன், 'சோழர் காலக் கலைஞர்கள் அரக்கர் போல் செயலைச் செய்யத் தொடங்கி பொற்கொல்லர்போல் நுண்ணிய செயலாக முடிக்கும் திறன் பெற்றவர்கள்' என்று புகழாரம் சூட்டியிருப்பது ராஜேந்திரன் காலத்துக் கலைஞர்களுக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

இதுகாறும் கூறியவற்றான் ராஜேந்திரன் தன் தந்தையின் அடியொற்றி ஆற்றலும், ஆண்மையும் துணையெனக் கொண்டு, சாதனை பல புரிந்து, சோழப் பெருமன்னர்களுள் தலைசிறந்த வீரனாகத் திகழ்ந்தான். இந்தியா முழுமையும் புகழ்கொடி நாட்டிக் கங்கை கொண்டான் எனச் சிறப்பிக்கப்பட்டுக் கடல் கடந்த நாடுகள் பலவற்றினை வென்று, 'கடாரம் கொண்டான்' எனும் சிறப்புப் பெயர் பெற்றான். இந்தியாவின் ஈடு இணையற்ற கடலாண்ட காவலனாகப் போற்றப்பட்டுச் சிவஞானச் செல்வனாக விளங்கியதோடு, சமரச சமயச் செல்வனாகவும் போற்றப்பட்டு, அறிவியல் மேம்பட்ட 'பண்டித சோழனாகத் திகழ்ந்தான். கங்கை கொண்ட சோழ புரத்தினையும், கங்கை கொண்ட சோளேச்சுரத்தையும்

அமைத்து' கலைக்காவலனாய் விளங்கி, நல்லாட்சிபுரிந்த சீர்மிகு ஆட்சியாளனாகவும், அரசியல் துறையில் புதுநெறி காட்டிய கலங்கரை விளக்கமாகவும் விளங்கிச் சோழர் குடியின் பெருமையினையும் புலிக்கொடியினையும் இந்தியாவில் மட்டுமன்றிக் கடல் கடந்த நாடுகள் பலவற்றிலும் ஓங்கிப் பறக்கவிட்ட மாமன்னன் முதலாம் ராஜேந்திர சோழன். தனது ஆட்சியினால் தமிழக வரலாற்றில் தங்க காலத்தினை நிறுவிப் புகழ்படைத்தான்-பெரும்புகழ் படைத்தான் என்பதனை வரலாறு என்றென்றும் சுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கும்; கடலலைகளும் இக்காவலனின் பெரும் புகழினை ஓயாது ஒழியாது முழங்கிக் கொண்டே இருக்கும். சோழர் குடிச்செம்மல் வாழ்க! இந்தியாவின் கடலாண்ட காவலன் வாழ்க!

மரபுப் பட்டியல் – 1

சோழர் குடி வழிப் பட்டியல்


பேராதிக்கச் சோழர் (விஜயாலயன் - முதலாம் ராஜேந்திரன்)
(கி.பி. 850 - 1044)
பரகேசரி விஜயாலயன் (கி.பி. 850 - 871)
ராஜகேசரி முதலாம் ஆதித்தன் (கி.பி. 871 - 907)
பரகேசரி முதலாம் பராந்தகன் (கி.பி. 907 - 955)
ராஜாதித்தன் (ராஜகேசரி) (பட்டத்து இளவரசன்)
அரிகுலகேசரி
ராஜகேசரி கண்டராதித்தன் (கி.பி. 949-950-957)
பரகேசரி அரிஞ்சயன் (கி.பி. 956-957)
பரகேசரி மதுராந்தக உத்தம சோழன் (கி.பி. 973 - 985)
ராஜகேசரி சுந்தர சோழன் இரண்டாம் பராந்தகன் (கி.பி. 956 - 973)
பரகேசரி இரண்டாம் ஆதித்த கரிகாலன் (பட்டத்து இளவரசன்) (கி.பி. 956 - 969)
குந்தவை
ராஜகேசரி முதலாம் ராஜராஜன் (அருண்மொழி) (கி.பி. 985 - 1014)
மதுராந்தகக் கண்டராதித்தன்
பரகேசரி முதலாம் ராஜேந்திரன் (கி.பி. 1012 - 1044)

மரபுப் பட்டியல் – 2

(கி.பி. 985 - 1071)

ராஜகேசரி முதலாம் ராஜராஜன்

(கி.பி. 985 - 1014)



மரபுப் பட்டியல் – 3


முதலாம் ராஜேந்திர சோழன் (பரகேசரி)
(கி.பி. 1012 - 1044)
ராஜகேசரி முதலாம் ராஜாதிராஜன் (கி.பி. 1018 -1054) கொப்பப் போரில் மாண்டான்
பரகேசரி இரண்டாம் ராஜேந்திரன் (கி.பி. 1052 -1064) கொப்பத்தில் முடி புனைந்தான்
ராஜகேசரி வீர ராஜேந்திரன் (கி.பி. 1063 - 1070)
அம்மங்கா தேவி (மகள்)

Printed Books

விகடன்
பிரசுரம்

கஜினி கன்னோசியின்மீது படையெடுத்தான். கூர்ச்சரப் பிராதிகார மன்னனான ராஜ்யபாலன் கஜினியின் வருகையைக் கேள்விப்பட்டவுடன் தன் தலைநகரைவிட்டு ஓட்டம் பிடித்தான். கஜினி, தலைநகரில் நுழைந்தபோது வேந்தனைக் காணவில்லை. கஜினியின் படை வீரர்கள் தலைநகரைத் தரைமட்டமாக்கினர். அளவிறந்த பொருட்களை அவன் கொள்ளையடித்துக்கொண்டு சென்றான்.

கோழைத்தனமாக நடந்துகொண்ட ராஜ்யபாலனைப் பழிவாங்க அண்டை அரசுகள் தீர்மானித்தன. காஞ்சார நகரைத் தலைநகராகக் கொண்ட சாந்தல மன்னன், வித்தியாதரன் ஒரு கூட்டுப் படைக்குத் தலைமை வகித்தான். ராஜ்யபாலன் கொல்லப்பட்டு, அவன் மகன் திரிலோசனபால் மன்னனாக்கப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட கஜினி கடும் சினம்கொண்டு, வித்தியாதரன் மீது போர் தொடுத்து, காஞ்சார நகரத்தை முற்றுகையிட்டான்.

பரமார மன்னனான போஜராஜனும், சேதி நாட்டுக் கலஞ்சூரி மன்னனான காங்கேய விக்கிரமாதித்தனும், வித்தியாதரனுக்குத் துணை நின்று முகம்மது கஜினியை எதிர்த்துப்போரிட்டனர். இராஜேந்திரனுடைய பெரும் படையும் இந்தக் கூட்டுப் படைக்கு உதவி புரிந்திருக்கக் கூடும்.

இந்தப் பெரும் படைத் தாக்குதலை முகம்மது கஜினியால் சமாளிக்க முடியவில்லை; வித்தியாதரனைத் தண்டிக்க இயலவில்லை. கடும் எதிர்ப்பால் முகம்மது கஜினி கங்கைக் கரை நோக்கித் தன் படையைச் செலுத்தாமல் கூர்ச்சர நாட்டின்மீது படையெடுத்து சோமநாதபுரக் கோயிலைக் கொள்ளையடித்தான். முகம்மது கஜினி திரும்பிச் சென்ற அதே சமயத்தில்தான் இராஜேந்திரனின் படைகளும் கங்கை நோக்கிச் சென்றன.

ISBN 978-81-8476-539-7
9 788184 765397

RAJENDRA CHOZHAN

₹ 160

(1st Edition)